தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு – 158

திருப்பெருந்துறைப் புராணம்

(குறிப்புரையுடன்)



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல் நிலையம்
1976

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு — 158

சுந்தரலிங்க முனிவர் இயற்றிய

திருப்பெருந்துறைப் புராணம்

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்

பேராசிரியர் புலவர் ச. பாலசுந்தரம்

துணை முதல்வர்

கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.



தஞ்சை சரசுவதி மகால் நிருவாகக் கமிட்டியினருக்காகக்

கௌரவ காரியதரிசி

வித்துவான் அ. வடிவேலன்

அவர்களால் வெளியிடப்பட்டது

கி. பி. 1976

விலை ரூ. 25-00

ஜெமினி அச்சகம் கும்பகோணம்
(போன்: 835)

வெளியிடுவோர் உரை

சமய நெறியிலும் கடவுட் கொள்கையிலும் தனிச்சிறப்பு வாய்ந்த தொன்மையான மரபினையும் பண்பாட்டினையும் கொண்டிலங்கும் இப் பாரதநாட்டில் தென்மொழியிலும் வடமொழியிலும் மிகப் பழங் காலந்தொட்டுத் தோன்றி வளர்ந்து திகழும் கலைகளும் நூல்களும் இறை நெறிகளைத் தழுவியே படைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் வேதாகமங்களின் தத்துவ நுண்மைகளைப் பருப் பொருளாக்கி விளக்குவன புராணங்களாகும். இப் புராணங்களுள் ஒரு கூறே தல புராணங்களாகும். தல புராணங்கள் அவ்வத் தலங்களில் அருட்டிரு மேனிகொண்டு இலங்கும் மூர்த்திகளையும் தீர்த்தங்களையும் தருக்களையும் அடிப்படையாகக்கொண்டு அறம் பொருளின்பம் வீடு என்னும் ஆண்மைப் பேறுகளை ஒல்லும் வகையால் விரித்துரைப்பனவாகும்.

இத்தகு தல புராணங்களுள் ஒன்றுக விளங்கும் இத் திருப்பெருந்துறைப் புராணம் இஞ்ஞான்று எமது மகால் நூலக வாயிலாக அச்சாகி வெளிவருகிறது. இப்புராணத்தை இயற்றியவர் திருவாவடுதுறை ஆதீன மடத்தைச் சார்ந்த சுந்தரலிங்க முனிவர் என்பது இந்நூறபாயிரத்தால் விளங்குகிறது. தலங்களுட் சிறந்த இச் சிவபுர மாண்பை விரித்துரைத்தற்குரிய தவஞான ஒழுக்கங் களும் கல்வி கேள்விகளும் நல்வினையால் வாய்க்கப்பெற்றவர் இம் முனிவர் என்பதை இந்நூலால் ஓரளவு அறிந்துகொள்ளலாம்.

பல மொழிகளில் பல்வேறு துறைகளில் அமைந்த அரியபெரிய சுவடி நூல்களைக் கண்மணிபோற் காத்து இதுகாறும் வெளி வராதவற்றை அச்சிட்டு வழங்கும் பொறுப்பினைச் சமய சமுதாயக் கல்விப் பணியாக ஏற்றுச் செயலாற்றி வரும் உலகப்புகழ் வாய்ந்த எமது மகால் நூலகத்திற் பாதுகாப்போடு இருந்த இப்புராணத்தைச் சிறந்த முறையில் வெளியிடக் கருதிச் செவ்வியமுறையில் ஆய்ந்து

படி எடுத்து அச்சிடும் பொறுப்பினை முன்னர் இம்மகால் வெளியீடாக வந்த தனிப் பாடற்றிரட்டு நூல்களை நன்முறையில் பதிப்பித்துத் தந்த தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரித் துணை முதல்வர் பேராசிரியர் பாவலரேறு திரு. ச. பாலசுந்தரம் அவர்களிடம் ஒப்பிததோம். அவர்களும் இப் பொறுப்பினை ஏற்று, மூல பாடங்களை ஆராய்ந்து அமைத்துப் பொருள் தொடர்பு அறிதற்குரிய தலைப்புகளையும் அருஞ்சொறகளுக்குக குறிப்புரையும் எழுதிச் சேர்த்துப் புராண நுணமையைத் தெரிவிக்கும் அரியதொரு முன்னுரையையும் வரைந்து நன்முறையில் பதிப்பித்துள்ளமையைப் பாராட்டிப் பயிலுவோர் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

இந்நூல் செம்மையோடு வெளிவரத் தக்க முறையில் செயலாற்றிய நூலக அலுவலர்கட்கும், இதனை அழகிய முறையில் காலத்தோடு அச்சிட்டுத் தந்த குடந்தை ஜெமினி அச்சக உரிமையாளர் – மேலாளர்களுக்கும் எங்கள் அன்புசான்ற நன்றியுரியவாகும்.

இத்தகைய பணிகளுக்கு ஆக்கமளித்துப் பேணிவரும் நமது தமிழக அரசை நன்றியோடு போற்றி மகிழ்கின்றேம்.

தஞ்சாவூர்
13—8—1976

அ. வடிவேலன்,
கௌரவ காரியதரிசி,
சரசுவதி மகால் நூல் நிலையம்.

சிவ சிவ

பதிப்புரை

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி யேசரு நிகீனந்திட்
டென்னுடை யெம்பிரா னென்றென்
றருந்தவா நிகீனத்தே யாதரித் தழைத்தால்
அலகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதரா யென்றரு ளாயே. – திருவாசகம்

தண்ணீர் தமிழகத்திற்குத் தண்பாண்டி நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்றாகவைத்து இப்புராண ஆசிரியர் உவந்துரைக்கும் திருப்பெருந்துறையென்னுமித்தலம் தஞ்சைமாவட்டம் அறந்தாங்கி வட்டத்திற் கீழைக் கடலோரத்தில் அமைந்துள்ளதொரு சைவத் திருத்தலமாகும். இக்காலை இதனை ஆவுடையார்கோயில் என வழங்கி வருகிறார்கள். மிகமிகத் தொன்மைக் காலத்தில் இஃதொரு துறைமுகமாக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. திருவாதவூரடிகளோப் பாண்டியன் குதிரைகள் வாங்கி வரப் பணித்தபோது கடல் கடந்த அயல் நாட்டிலிருந்து அனேக கலங்களில் குதிரைகள் வந்து இறங்கியுள்ளதாக வணிகர்கள் கூறியதாக இப்புராண நிகழ்ச்சி சித்திரிக்கப்பட்டுள்ளமையாலும் நில அமைப்பு முதலியவற்றாலும் இக்கருத்து வலியுடையதாகிறது.

புராணங்களில் இத்தலத்திற்குப் பெருந்துறை எனப் பெயரமைந்த காரணத்தை விளக்குங்கால், இதன்கண் அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள் உள்ளமையாலும், ஒருகாலத்தில் பாண்டியனுடைய அமைச்சன் இத்தல அந்தணர்களுக்குச் சொந்தமான விளைநிலங்களோப் பேராசையினால் வலிந்து கவர்ந்து கொண்டகாலை இறைவன் அவ்வந்தணர் தலைவராகச் சென்று அவை எங்களுக்குரியவை எனக் கூறிச் சான்று காட்டும்போது,

"அவ்வூரி னெல்லியினில் அறுபது பாகத்தளவு
செவ்விய மண்கீழ்ந் தெடுக்கில் செழுப்புனல் உண்டாகும்"
– பாடல் 1396

என்று கூறப் பணியாளர்கள் அவ்வாறே தோண்டுப்போது

"வெட்டிய, மண்கொட்டு வழியே குமுளிகொண்டு
குதித்தெழுந் ததுநீர் தொட்டவிட மெங்கணும் – பாடல் 1404

கண்டதனாலும் என்ப. இத்தலத்திற்குச் சிவபுர முதலிய ஒன்பது சிறப்புப் பெயர்களும் பரையோகவனம் முதலிய வேறு பிற பெயர்களும் காரணத்தோடு அமைந்துள்ளன.

இத்தலம் கிரேதாயுகத்திற்றோன்றிப் பிரமனால் பூசிக்கப் பெற்றுப் பின் பிரமன் யாகசூன்ய த்திற் றோன்றிய ரூட்சாயணர் முதலிய முனிவர்களால் பூசனை பெற்று யுகந்தொறும் திகழ்வதாக யுகம் நான்கினும் பூசிப்போர் நாமத்திரைய முரைத்த சருக்கத் தினும் பிற இடங்களினும் கூறப்படுகிறது. இத்தல மூர்த்தி ஆன்ம நாயகர்; அம்மை சிவயோகநாயகி; தலவிருட்சம் குருந்தம்; தீர்த்தம் அக்கினி தீர்த்தம் முதலாய அறுபத்தாறு கோடி தீர்த்தம். இவற்றுள் இருபது தீர்த்தங்களின் வரலாறு விரித்துக் கூறப் பட்டுள்ளது. இத்தல மூர்த்திக்குப் பதினாறு நாமங்கள் சிறப்புடையவனவாகக் கூறப்படுகின்றன. அவையன்றியும் வேறு பல திருநாமங்கள் ஆங்காங்கே கூறப்படுகின்றன. இத்தலச் சிறப்பை ஆருதாரத் தத்துவங்களோடு ஒப்பிட்டு விளக்குகிறார் இப்புராண ஆசிரியர். இத்தல புராணத்தைப் பாடிய பெருமகனார் பெயர் சுந்தரலிங்க முனிவர் (சுந்தர முனிவரென்றும் வழங்கப் படுகிறது) என்பது "திருவளரும் பெருந்துறை மான்மியத்தை," என்று தொடங்கும் சிறப்புப் பாயிரச் செய்யுளால் புலனாகின்றது. அப்பாயிரத்தால் இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த திருச்சிற்றம்பலத் தம்பிரானடிகளின் மாணவர் என்றும் அவர்பால் ஞானோபதேசம் பெற்றவர் என்பதும் வடமொழி தென்மொழி நூல்களை நன்கு பயின்றவர் என்பதும் அறியக்கிடக்கின்றன.

இப்புராணம் கடவுள் வாழ்த்து முதலாக ஐம்பத்தெட்டு சருக்கங்களையுடையதாக ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத் தெட்டுச் செய்யுளைக் கொண்டுள்ளது. இச் செய்யுட்டொகை செம்மையாகக் கிடைத்த பாடலின் தொகை. மூலச் சுவடி முகப்பு

அட்டவணையில் பத்தாவதாகத் தேவிக்கு நாரதர் சிவபுர மகிமை யுரைத்த சருக்கமெனத் தொண்ணூற்று நான்கு பாடல் கொண்ட ஒரு சருக்கம் குறிக்கப்பெற்றுள்ளது. அது முற்றிலும் காணப் பெறவில்லை. அண்டகோசச் சருக்கத்தில் இருபத்தெட்டு பாடல்களே காணப்படுகின்றன. எஞ்சிய பகுதிகள் இல்லை. மற்றைய சருக்கங்கள் சிலவற்றுள் இடையே சில பாக்கள் விடுபட்டுள. எனவே சிதையாத அளவில் இந்நூல் இரண்டாயிரம் பாடல்களுக்குமேல் கொண்டிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.

இத்தல மாண்பினை நைமிசாரணியத்தில் வதியும் முனிவர்கள் வேண்டச் சூத முனிவர் சொல்லியதாகப் புராண வரலாற்றில் இவ் வாசிரியர் கூறுகின்றார். இவ்வாசிரியர் சமய நூல்களிலும் தத்துவ நூல்களிலும் நல்ல பயிற்சியுடையாரென்பதும் செய்யுள் செய்வதற்கேற்பச் சொல்வளத்தைப்பெற நிகண்டுகளை நன்கு பயின்றவர் என்பதும் இவர் பாக்களால் புலனாகின்றன; எனினும் யாப்பமைதியும் சொல்லிலக்கண மரபும் சிற்சில இடங்களில் குறையுற்றுள்ளன. வடமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்யும்போது பல சொற்களை மிகுதியும் சிதைத்துச் செய்துள்ளார். செய்யுள் முடிபுகளும் தொடர்மொழியமைதியும் சில இடங்களில் செம்மையாக அமையவில்லை. இக் குறைகளை நோக்கி இந்நூல் பெரிதும் வழங்கப்பெறுது அரிதாயிற்றென்று கருதவேண்டியுளது. இவர் பயின்று ஞானோபதேசம் பெற்ற திருவாவடுதுறையில் பின்னர் அத்தானப் புலவராயிருந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அவ் ஆதீனத் தலைவராக இருந்த அருட்டிரு சுப்பிரமணிய தேசிகரின் கட்டளையால் ஒரு திருப்பெருந்துறைப் புராணம் இயற்றியுள்ளார். இதனைப் பெரும்புலவர் உ. வே. சாமிநாதையரவர்கள் கி. பி. 1892ஆம் ஆண்டிற் பதிப்பித்துள்ளார்கள். இந்நூல் சொற்சுவை பொருட்சுவை கனிந்து யாண்டும் வாதவூரடிகளின் சிறப்பையும் சைவ சமய மாண்பையும் விளக்கிச் செல்லுகிறது. இந்நூல் புதிய பெருந்துறைப் புராணம் என வழங்கப்பெறுகிறது.

சுந்தரலிங்க முனிவர் இயற்றி இந்தப் புராணம் பழைய திருப்பெருந்துறைப் புராணம் எனச் சுட்டப்படுகிறது. இந்நூல்

இதுவரை அச்சாகவில்லை. பழஞ்சுவடிகளைப் போற்றிக் காத்து அச்சாகாத நூல்களை அச்சிட்டு வழங்குவதில் நமது பாரத நாட்டில் தலைசிறந்து விளங்குவதும் வடமொழி தென்மொழிகளில் அமைந்துள்ள மருத்துவம் சோதிடம் சிற்பம் வியாகரணம் இலக்கியம் புராணம் கலைநூல்கள் ஆயவற்றுள் நூற்றுக் கணக்கான ஓலைச் சுவடிகளைக் கொண்டதும் மராட்டிய மரபில் தோன்றித் தமிழரசராய் விளங்கிய மாமன்னர் சரபோசியரசர் அவர்களால் விரிவுசெய்து போற்றி வளர்க்கப்பெற்று அரசு மாறினும் தன் பரிசுமாறாது திகழ்வதுமான தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய வாயிலாக இப்பொழுது அச்சாகி வெளி வருகிறது.

இச்சுவடி படியெடுப்போரால் விளையும் பிழைகளுக்கு இலக்காகிப் பாடல்களின் சீரமைப்பும் சந்திகளும் சிதைந்து காணப்படுகிறது. ஒப்புநோக்க வேறு சுவடியும் இல்லை, இதனைக் கையெழுத்துப் பிரதி செய்தவரும் வஞ்சனையின்றிச் சுவடியில் உள்ளவாறே செய்திருந்தமை போற்றத்தக்கது. எனினும் ஒற்றுள்ள எழுத்துக்களை உயிர்மெய்யாகவும் உயிர்மெய் எழுத்துக்களை ஒற்றாகவும் சிற்சில இடங்களில் மாற்றியும் பகர மகர ஞகர நகரம் போன்ற எழுத்துக்களை ஒன்றை ஒன்றாகவும் திரித்து எழுதியிருந்ததை ஓரளவு காணமுடிந்தது. எதுகை மோனை முதலிய யாப்பமைதியையும் சீர் அமைதியையும் சந்தத்தையும் கருவியாகக்கொண்டு பல இடங்களில் உண்மையான பாடத்தைக் கண்டுகொள்ள முடிந்தது. இவ்வளவைக்கும் தப்பி நின்ற இடங்களை உள்ளவாறே அமைக்க நேர்ந்தது. சில இடங்களில் பொருளமைதி நல்ல பாடத்தைத் தெரிந்து கொள்ளத் துணைபுரிந்தது. ஒவ்வொரு பாடலையும் என் சிற்றறிவுக் கெட்டிய வரையில் நன்கு ஆராய்ந்து செப்பஞ் செய்துகொண்டு பின்னர் அச்சிடக் கொடுத்தேன்.

உரையின்றி மூலபாடம் மட்டுமே பதிப்பிக்க வேண்டியிருந்ததனால் படிப்போர் பொருள் தொடர்பைத் தெரிந்துகொள்ளத் துணைபுரியும் வகையில் ஆங்காங்கே சிறுசிறு தலைப்பினையும், விளக்கத்தினையும் அடைப்புக் குறிக்குள் அமைக்கலானேன்.

பாக்களின் வகை சந்தம் இவற்றையும் குறிக்கலானேன். மேலும் சில திரிசொற்களுக்கும் வடசொற்களுக்கும் பொருள் எழுதி யமைத்து இன்றியமையாத இடங்களில் முடிபுகளைச் சுட்டி விளக்கி அடிக்குறிப்பில் சேர்த்தேன். எனினும் ஆசிரியர் கருத்து விளங்கிக்கொள்ள இயலாத இடங்களும் ஆங்காங்கே உள. என்னுடைய சோர்வாலும், ஐயத்தினாலும் நேர்ந்த பிழைகளும் இருத்தல் கூடும். அச்சுப்பிழைகளைத் திருத்திக்கொள்ள இறுதியில் பிழை திருத்த அட்டவணை ஒன்றும் சேர்த்துள்ளேன். முறைப்படி செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசையும், சருக்கங்களின் அகர வரிசையும் இறுதியில் சேர்த்துள்ளேன். தலபுராணங்களின் சிறப்பினை உணர இயலாமல் ஏதோ கட்டுக்கதைகள் என்ற எண்ணம் ஓரளவு படித்தவர்களிடையேயும் பரவியிருக்கும் வருந்தத்தக்க நிலை சிறிதாவது மாறத் துணைபுரியும் என்னும் கருத்தால் தலபுராணங்களின் உட்கிடக்கையையும் உண்மை யையும் அறிவியற் கண்ணோட்டத்துடன் கருக்கமான அளவில் விளக்கி ஒரு முகவுரையும், சருக்கங்களின் வரலாறுகளைச் சுருக்கமாக அறிந்து கொள்ளும் வகையில் சருக்கங்களின் பொருட் சுருக்கங்களையும் எழுதி அமைத்து இந்நூலைப் பதிப்பித்துள்ளேன்.

இப்புராணத்தைச் சிறந்த முறையில் பதிப்பிக்கவேண்டு மென்று கருதிப் பெரும் புலமையாளரும் தமிழ்த் தொண்டே செயலாகக் கொண்டவரும் மேற்கொண்ட செயலைப் பொறுப் போடும் நேர்மையோடும் புரிந்து சான்றோர்களால் போற்றப் பெறுபவரும் கைம்மாறு கருதாது கல்வி கேள்வித் தொண்டுகளுக்குத் துணைபுரிபவருமான இம்மகாவின் மதிப்பியற் செயலாளர் வித்துவான், **அ. வடிவேலனார்** அவர்கள் யான் முன்னர் இம் மகாலுக்காகப் பதிப்பித்துக்கொடுத்த தனிப் பாடற்றிரட்டுக்களின் பதிப்பருமையையும் தொடர்பையும் எண்ணி என்னை அழைத்து இப்பொறுப்பினை ஏற்குமாறு கட்டளையிட்டார்கள்போலும். என் சிறுமை முதலியவற்றை யானறிவேனெனினும் இறைவன் திருவுள்ளம் என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்த எண்ணுகிறது போலும் என உணர்ந்து ஏற்றுக்கொண்டு இத்திருப்பெருந்துறை யுறை செல்வனருளால் ஒருவாறு நிறைவு செய்துள்ளேன்.

இந்நூல் நல்ல முறையில் அச்சாவதற்கேற்ற முறைகளை அவ்வப்போது கூறி ஊக்கமளித்துத் துணைபுரிந்த இம்மகால் மதிப்பியற் செயலாளர் அவர்களுக்கு என் பணிவார்ந்த நன்றி என்றும் உரியது. அவ்வப்போது சுவடிகளை ஒப்புநோக்க உதவிய இம்மகால் தமிழ்ப் பண்டிதர் வித்துவான் **வீ. சொக்கலிங்கம்** அவர்களுக்கும் காலத்தோடு அச்சேற அச்சுப்படிகளைச் சரிபார்க்கத் தந்தும் அச்சகத்திற்கு அனுப்பியும் உதவிய நூல் நிலையத் துணைக் காப்பாளர் திரு. **சீராளன்,** பி. ஏ. அவர்களுக்கும் சிறந்தமுறையில் செம்மையாக அச்சிட்டளித்த **குடந்தை ஜெமினி அச்சகத்தார்** அவர்களுக்கும் என் அன்புகலந்த நன்றி.

என்னையும் இத்தகைய நற்பணிகளில் ஈடுபடுத்தி அருள் புரியும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிப் போற்றி வணங்குகிறேன்.

அன்பன்,

ச. பாலசுந்தரம்.

சிவ சிவ

முன்னுரை

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலும்மற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரை னைப்பலர்
நிற்க விங்கெனை யேற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(ஆளுடைய அடிகள்)

உயிர்கள் யாவும் இன்பமொன்றையே குறிக்கோளாகக் கொண்டியங்கும் இயல்பினவாகும். அகப்புறக் கரணங்களால் பகுத்தறிந்து அறிவு பூர்வமாக இம்மையினும் மறுமையினும் இன்புற்று இறைநிலை எய்த விழைவது மக்களுயிர்களுக்கு வாய்ந்த சிறப்பியல்பாகும். உணர்த்த உணரும் ஆன்ம தத்துவங்களை இறைவனின் அருட்சக்தியால் பெற்றிருக்கும் மக்களுயிர் முக்குற்றங்களினின்றும் விடுபட்டு வீடுபற்றி இன்புற இறைவன் வேத முதலாய வாக்குகளைப் படைத்துள்ளான். படைத்ததோடு மட்டுமன்றி ஆசாரியனைய் உருத்தாங்கி வந்து ஆன்மாக்களைப் பக்குவப்படுத்திப் பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆனந்தத்தழுத்தி ஐக்கியப்படுத்திக் கொள்ளுகிறான். அதனால் இறைவனை ஆன்மநாதன் – ஆவுடையான் என்றுகூறி மெய்யறி வாளர்கள் போற்றித் துதித்துப் பேறுபெறுகின்றனர்.

ஆகமமாகி நின்று அண்ணிப்பவனுகிய இறைவன் தானே ஆசாரியனுக எழுந்தருளி ஆட்கொள்வதன்றியும் தன்னருள் பெற்ற மெய்ஞ்ஞானியர் வாயிலாகவும் மக்களை ஆட்கொள்ளுகிறான். வேதமாயும் கீதமாயும் ஓசையாயும் ஒலியாயும் விளங்கும் இம்

முழுமுதற்பொருள் அருளாளர் தம் உணர்விற்கலந்து வேதாகமப் பொருள்களை அவர்தம் வாய்மொழியாக வெளிப்படுத்துகிறது. வேத வடிவாய இறைவனை நான்முகன் நால்வேதமாக வெளிப் படுத்த வியாச முனிவன் அவற்றை மக்களுணர்ந்துய்யுமாறு முறைப்படுத்த அருந்தவத்துப்பெருஞானியர் அவற்றை ஆகமங் களாகவும், சாத்திரங்களாகவும், தோத்திரங்களாகவும், மந்திரங் களாகவும், தந்திரங்களாகவும், புராணங்களாகவும், இதிகாசங் களாகவும், திருமுறைகளாகவும், பிரபந்தங்களாகவும் வெளிப் படுத்துவாராயினர். நற்பியாரூரர்க்கும் சேக்கிழாருக்கும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்து அவர்தம் திருவாய் வழியாகத் தன்னை விளக்கிற்றும் மாண்பினைச் சமயச் சான்றோர் நன்குணர்ந்துள்ளனர். அருளுடைய பிள்ளையாரும் தன்னை என்னைப் பாடுவித்துக்கொண்டவன் எனப் பகருகின்றார். மற்றைய நாயன்மார் ஆழ்வார்கள் வாக்குகளாலும் இவ்வுண்மை நன்கு புலனாகின்றது.

ஆணவ முதலிய மலங்களால் மறைப்புண்டு யான் எனது என்று மாயையால் மயங்கிச் சுழலும் மக்களுயிர்கள் அறிந் துணர்ந்து உய்யும் பொருட்டு அரிதும் பெரிதுமாய் நுண்மையோ டமைந்து திகழும் வேதாகம மந்திர உண்மைகளை எளிதாக்கி விளங்கத் தருவதற்கு எண்ணிய பேரருளாளர்கள் அவற்றைப் பருப்பொருளாக்கிப் புராண இதிகாசங்களாகவும்; தேவார திருவாசக திருவாய்மொழிகளாகவும் அருளிச் செய்துள்ளனர்.

அதனாற்றான் புராண இதிகாசங்கள் கதை வடிவிலும் வரலாற்று வடிவிலும் அமைந்து ஆங்காங்கே சாத்திர நுட்பங் களையும் தத்துவக் கூறுபாடுகளையும் மெய்ஞ்ஞான மந்திரங்களையும் அமைத்து விளக்குவனவாயின. இவ்வுண்மை உணராதொழியின் புராண இதிகாசங்கள் அறிவிற்கொவ்வாக் கட்டுக்கதைகளாகவும் மூட நம்பிக்கையை வளர்க்கும் கற்பனைகளாகவும் தோற்ற மளிக்கும்.

சரியை முதலிய நான்கு நெறிகளிலும் இல்லறம் முதலாய நான்கு நிலைகளிலும் அமைந்தொழுகும் மாந்தர்கள் தம் அறிவுநிலை உணர்வுநிலைக்கேற்ப வெளிப்படையாகவும் நுட்பமாகவும் அறிவுறுத்த எழுந்த புராணங்கள் அவரவர் பக்குவத்திற்கேற்பப் பொருளைக் காட்டிப் பயனளித்து விளங்குகின்றன. நான்மறைகள்

தவிரப் பிறநூல்கள் எவ்வகையிலாயினும் ஒரு வரையறைக்கு உட்பட்டு நிற்க வேண்டுமென்னும் கருத்தால் அருட்சான்றோர்கள் ஒரு மரபினை வகுத்து அவ்வழியே மெய்ப்பொருளை விளக்குவாராயினர்.

அவ்வகையில் புராணங்களுக்கும் ஓர் இலக்கண மரபு வரையறை காணப்படுகின்றது. அஃதாவது கயிலையில் ஞான ஒளியாக விளங்கும் செம்பொருளாகிய சிவபெருமான் மெய்ஞ்ஞான தத்துவங்களைத் தன்னின் ஒருகூறுகிய உமையவளுக்கும் தன்னுடைய அறிவுக்கூறுக விளங்கும் நந்தி தேவருக்கும் திருவாய் மலர்ந்தருளினான் என்றும் – நந்தி தேவர் தன்னைச் சார்ந்துள்ள சநற்குமாரர் முதலாய முனிவர்களுக்கு அவற்றைத் திருவாய்மலர்ந்தருளினரென்றும், சநற்குமார முனிவர் தன் மாணாக்கருக்கும், அவர், அவர்தம் மாணாக்கருக்கும் அருள எல்லாப் புராணங்களும் தோன்றி விளங்குகின்றன என்பதாம்.

இம்முறையால் வைதிகச் சமயச் சார்பில் தலைமை பெற்று விளங்குவன பதினெட்டுப் புராணங்களாகும். இப்புராண மரபு வடமொழிக்கும் தென்மொழிக்கும் பொதுவாயினும் இவற்றுள் அமைந்துள்ள புராணங்களின் அமைப்பு வெளிப்பாட்டு முறையில் சிறு சிறு வேற்றுமைகள் உள. வடமொழியுள் பெரும்பாலும் தெய்வங்களைப் பற்றிய வரலாறுகளே மிகுந்து காணப்படும். காவியச்சுவை முதலிய ஓரளவே காணப்படும். தென்மொழியில் தெய்வீக வரலாறுகளையும், அருளாளர்களின் வரலாறுகளையும் புராண அமைப்பில் கூறுங்கால் வருணனைப் பகுதிகளும் காவியச் சுவைகளும் சிறந்து தோன்றுகின்றன. திருத்தொண்டர்புராணம் திருவாதவூரர் புராணம் முதலியவை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

• இனி வரலாறுகளையேயன்றி இயல் இசை நாடக இலக்கண இலக்கியங்களையும் புராணம் என்னும் தலைப்பில் தமிழறிஞர்கள் செய்திருந்தனர் என்பதைத் தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் "நான்மறை" என்னும் பகுதிக்கு விளக்கங்கூறுங்கால் "பூத புராணம்" என்றொரு நூலைச் சுட்டுவதாலும், பூத புராணம் இயற்றமிழ் இலக்கணத்தை விரித்துக்கூறும் நூல் என அறிஞர்கள் கருதுவதாலும் தெரியலாம்.

இஃதிவ்வாறுகப் பெரியபுராணம் போன்ற ஒரு சிலவற்றைத் தவிர பிற புராணங்கள் யாவும் பெரும்பாலும் வடமொழி மூலக் குறிப்புகளைக் கொண்டும் மொழிபெயர்த்தும் செய்யப்பெற்றன வாகவே காணப்படுகின்றன. தமிழ்மொழியில் உள்ள புராணங் களுள் பெரும்பாலன தலபுராணங்களேயாகும். இத் தலபுராணங் களுக்கும் மூலம் வடமொழியில் உள்ள காந்தபுராணமென்றும் அதனுள் அமைந்துள்ள சூதசம்கிதையில் எல்லாத் தலங்களைப் பற்றியும் கூறியுள்ளதாகவும் அதனை மூலமாகக்கொண்டே தாம் புராணம் இயற்றுவதாகவும் பெரும்பாலான புராண ஆசிரியர்கள் மொழிந்துள்ளனர்.

இனித் தலபுராணங்களின் நோக்கத்தை மரபு முறையில் ஆராயின் அவை தெய்வ நம்பிக்கையையும் சமய நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு சரியை கிரியை ஆய இவ்விரு நெறிகளை வற்புறுத்தும் முறையில் திருக்கோயில் வழிபாடு, பூசனை, விழா, நோன்பு முதலியவற்றை விளக்கி இவற்றால் பெறும் பயனை மிகுதிப்படுத்திக் கூறுவதையும் இத்தலத்தில் வந்து வழிபட்டோர் தாம செய்த பாவங்கள் யாவற்றினின்றும் நீங்கி எண்ணியவற்றையெல்லாம் எளிதில் எய்தினர் என்று கூறுவதையும், இவ்வாறு வந்து வழிபட்டோரில் பெரிய பெரிய தேவர்கள், முனிவர்கள், அரசர்கள் யாவரும் உளர் என்று கூறுவதையும் காணலாம். ஆனால் அறிவியல் நெறியோடு நோக்கினால் தலபுராணங்கள் இம்மைவாழ்வு இனிதாக அமைய எளிய வழியைக் காட்டி மறுமைப் பயனையும் சுட்டி நிற்பதை அறியலாம்.

திருத்தலங்கள் அல்லது திருப்பதிகள் என்று போற்றப் பெறும் இறைவன் அர்ச்சனாமூர்த்தியாய் எழுந்தருளி விளங்கும் தலங்கள் நானிலங்களிலும் திகழ்கின்றன. மலைகள், கடற் கரைகள், சோலையும் காவும் சூழ்ந்த இடங்கள், பேராற்றங் கரைகள் ஆய இடங்களில் அவை விளங்குவதைக் காணலாம். இத்தலங்களை நடுவாக வைத்தே ஊர்களும் நகரங்களும் வளர்ந்து பெருகியுள்ளமையை வரலாற்றால் அறியலாம். அடர்ந்த காடு உயர்ந்த மலைகளில் திருத்தலங்கள் அமைந்திருக்குமாயின் அவற்றைச் சார்ந்து சிறிது சேய்மையில் நகரங்கள் பெருகி அமைந்திருக்கும்.

தலபுராணங்களில் சிறப்பாக வற்புறுத்தப்பெறும் பொருள்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆய நான்குமாம். விருட்சத்தைத் தலத்துள் அடக்கி மூன்றாக கூறுதல் பெருவழக்காக உள்ளது இதனை,

"மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்னும் தாயுமானவர் வாக்கால் இனிதுணரலாம். இதனால் ஒவ்வொரு தலத்திலும் சிறப்புடைய நீர்நிலைகள், பயனுள்ள நன் மரங்கள் ஒன்றோ பலவோ அமைந்திருக்கும் என்பதும் தலந் தொறும் உள்ள மூர்த்திகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையவாக இருக்குமென்பதும் தெளிவாகும். மூர்த்திச் சிறப்பினை அங்குவந்து வழிபட்டோர் எய்திய பேறுகளாலும் தீர்த்தச்சிறப்பினை அதனுள் மூழ்கி வழிபட்டோரை விட்டு நீங்கிய தீவினைகளாலும் தலவிருட்சத்தின் சிறப்பினை அந்நிழலில் வதிந்தும் அதன் இலை காய் கனி முதலியவற்றை உண்டும் வழிபட்டோரிடத்து நின்றும் நீங்கிய பிணிகளாலும் விளக்கி நிற்பதைக் காணலாம். அஃதாவது இத்தலத்தில் வந்து இன்னின்ன காலங்களில் இவ்விவ் முறையால் வழிபடுவோர்க்கு உடம்பு பற்றியும் உணர்வு பற்றியும் உள்ளம் பற்றியும் தீராமல் நிற்கும் பிணிகளும் மாசுகளும் நீங்கி எழிலும் இன்பமும் புகழும் பொருளும் ஓங்கி இம்மையில் வளமான வாழ்வும் மறுமையில் சிறப்பான பதவியும் கிட்டும் என்று பல்வேறு வரலாறுகள் வாயிலாகத் தலபுராணங்கள் வற்புறுத்துதலைக் காணலாம்.

அறிவும் அமைதியும் எழிலும் இன்பமும் புகழும் பொருளும் எங்கே எங்கே என்று தேடி அலையாதார் இவ்வுலகில் உளரோ? ஒரிருவர் இருப்பினும் அவர்கள் இம்மைப் பயனைச் சிறிதென்று வெறுத்து மறுமைப்பயனை நாடி நிற்பவராகவே இருப்பர். இவ் இருபயனும் தல வழிபாட்டால் கிட்டுமென்னும் வகையில்தான் எல்லாப் புராணங்களும் அமைந்துள்ளன. இருமைப் பயனையும் தலவழிபாடு தருமா என்பதனை அறிவியல் நோக்கில் பார்த்தால் தருமென்னும் முடிவிற்கே வர நேரும். அறிவியல் நோக்கு என்று கூறும்போது காரண காரியங்களைக் காட்சி கருத்து அனுமானம் ஆகமம் என்னும் நான்கு அளவைகளானும் ஆய்ந்து காணுதல் வேண்டும். காட்சியளவை மட்டுமே நோக்குவார்க்கு இவ்வுண்மை காணுதற்கும் காட்டுதற்கும் இயலாமற்போகும்.

பிரபஞ்சமாகிய இவ்வுலகம் பஞ்சபூதங்களால் பஞ்சதன் மாத்திரைகளால் அமைந்து விளங்குகின்றமை அறிவியலார் யாவர்க்கும் உடன்பாடேயாகும். இவ்வுலகிற்றோன்றி வாழ்ந்து மறையும் ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈறாக யாவும் இப்பஞ்ச பூதப் பரிணமங்களே என்பதிலும் ஐயமில்லை. எனினும் உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் வடிவாலும் உணர்வாலும் வேறுபட்டுத் திகழ்கின்றன. ஏனெனில் இப்பூதங்களின் கலப்பு அளவைகளின் ஏற்றத்தாழ்வு எனலாம். பூதக்கூறுகளின் அளவைகட்கு ஏற்பவே தன்மாத்திரைகளும் அவற்றுக்குள் அடங்கிய ஏனைய தத்துவப்பொருள்களும் அமைந்து விளங்கும் இதனாலேயே உயிர்களை ஓரறிவு முதலாக ஆறறிவு ஈறாக ஒருவாறு பகுத்துணர்த்துகின்றார்கள் அறிவியலார். ஒவ்வொரு பொருள்களின் தன்மைகளையும் அமைப்புக்களையும் பௌதீக இயலின்படி பிரித்தறிந்து உணர்த்துகிறார்கள். ஒரு பொருளின் இயல்பை மாற்ற வேண்டுமென்றாலும் தன்னியல்பால் மாறியதனைச் செம்மைப்படுத்த வேண்டுமென்றாலும் அவ்வவற்றில் எந்த எந்த பூதக் கூறுகளைக் குறைக்கவேண்டும் அல்லது கூட்ட வேண்டும் அல்லது சேர்க்கவேண்டுமென்று அறிந்து அவ்வாறே செய்து மாற்றியும் செம்மைப்படுத்தியும் அமைத்துவிடுகின்றனர் அறிவியலார். ஒரு பொருள் தண்மையாக இருந்தால் வெப்பத்தைச் சேர்த்தும், வெப்பமாக இருந்தால் தண்மையைச் சேர்த்தும் சமப்படுத்துவதைக் கல்வி முதலாய எத்தகைய அறிவும் பெறாதவர்கள் கூட அறிந்துள்ளமையை யாவரும் அறிவர்.

நலமாக இயங்கிக்கொண்டிருக்கும் ஒருவருக்குத் திடீரென நோய் வந்துவிட்டது. அவர் மருத்துவரிடம் சென்று காட்டுகிறார். மருத்துவர் ஆராய்ந்து பார்த்து ஏதோ மருந்து கொடுக்கிறார். மருந்துண்ணும்போது கடைப்பிடிக்க வேண்டிய உணவு முதலிய முறைகளையும் கூறுகிறார். மருத்துவர் அறிவுறுத்தியபடி நோயுற்றவர் தவறாமற் கடைப்பிடித்துச் சின்னாளில் நோய்நீங்கி முன்போல நலமுறுகிறார். நோய் வந்ததற்குக் காரணம் என்ன? நீங்கியதற்குக் காரணம் என்ன? நோயுற்றவர் உணர்வுக்கும் உடம்புக்கும் வேண்டிய பொருளின் குறைவு அல்லது வேண்டாத பொருளின் உறவுகள்தாம் நோய்க்குக் காரணம். இதனை நன்கு கண்ட மருத்துவர் அக்குறை தவிர்க்க மருந்தும் அறிவுரையும் தர அவற்றை நோயாளார் மேற்கொண்டு ஒழுகினமை நோய்

நீக்கத்திற்குக் காரணம். இவ்வெடுத்துக்காட்டினால் ஒரளவு தல புராணங்கள் வற்புறுத்தும் மூர்த்தி தலந் தீர்த்தங்களின் சிறப்பும், அவற்றை வழிபடுதலினால் எய்தும் பயனும் புலனாகும்.

கண்கூடாகக் காணும் இவ்வுலகில் நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐந்தும் தனித்தனியாக இல்லை ஒன்றோடொன்று கலந்து நிற்கின்றன. பொதுவாக நோக்கும்போது தனித்தனியாக உள்ளதுபோல் காணப்படும். நிலத்தில் நீருண்டு. நிலத்திற்குள் காற்றும் வெருப்பும் கலந்துள்ளன. இன்றேல் பல்வேறுபட்ட கனிப்பொருள்களும் மரஞ்செடி கொடிகளின் விளைவுகளும் உண்டாகமாட்டா. நீரில் நிலக்கூறும் நெருப்புக்கூறும் காற்றுக் கூறும் கலந்துள்ளன. இன்றேல் நிறம் சுவை மீன் முதலாய பொருள்களின் தோற்றங்கள் உண்டாகமாட்டா. இக்கலப்புக்கள் உலகமெங்கும் ஒரே அளவையில் இல்லாமல் மாறுபட்டுள்ளன. அதனாற்றான் ஓரிடத்தில் தோண்டினால் நன்னீரும் பிறிதோரிடத்தில் உவர்நீரும் பிறிதோரிடத்தில் எண்ணெயும் இவ்வாறே இடந் தொறும் பல்வேறு பொருள்களும் கிடைக்கின்றன. ஓரிடத்தில் விளைகின்ற புல்பூண்டு மரஞ்செடிகொடிகள் பிறிதோரிடத்தில் விளைவதில்லை. ஓரிடத்தில் பல்கிவாழும் பறவையினம் விலங்கினம் புழுப்பூச்சிகளின் இனங்கள் பிறிதோரிடத்தில் வாழ்வதில்லை. இவ்வாறே மக்களின் வடிவம் நிறம் அறிவு உணர்வு முதலியவைகளும் அவ்வந்நிலவமைப்பு தட்பவெட்பம் காற்று முதலாய சூழ் நிலைகளால் திகழ்வதைக் காணுகின்றோம்.

இம்மாற்றங்கள் ஒன்றற்கொன்று மிகமிகச் சேய்மையான பகுதிகளிலும் நிகழலாம். மிகமிக அண்மைப் பகுதிகளிலும் நிகழலாம். ஓரிடத்தில் அகழும்போது உவர்நீராக இருக்கும். அதற்கு அடுத்த சில அடி தூரத்தில் நன்னீர் ஊற்றுத் திகழும். இவ்வாறே ஏனையவும் நிகழ்வதைக் காணுகின்றோம். ஒருசில உடல் நோய்க்கும் உள நோய்க்கும் மருத்துவர்கள் மருந்து தராமல் இடமாற்றம் செய்யவும் – சூழ்நிலை மாற்றம் செய்யவும் கூறுகிறார்கள். அவையே மருந்தாக நோய்நீக்கம் செய்வதையும் அறிகிறோம். இனி உடல்நோய் நீங்கவும் வளம்பெறவும் மக்கள் குற்றாலம் முதலிய இடங்களுக்குச் சென்று அருவியில் நீராடுதலும் அலைகடலில் மூழ்கலும் சுனைபடிந்தாடலும் செய்வதைக் காண்கிறோம். இவை யாவும் அறிவியலுக்கொத்தவை என யாவரும் ஒப்புவர்.

ஆ

இனி உடம்பெடுத்த ஒவ்வொரு உயிரும் இவ்அண்டத்தின் சிறுகூறே என்பதனால் அண்டத்திற்குள்ளவை யாவும் பிண்டத் திற்குண்டு என்பதில் ஐயமில்லை. பிண்டமாக உடம்பெடுத் துலவும் மக்களும் பூதங்களின் பரிணமமேயாவர். மக்கள் என்று பேசும்பொழுது மகக்களின் பருவுடம்பே நம் கருத்தில் தோன்று கின்றதெனினும் மகக்கள் ஒவ்வொருவரும் காரணம், நுண்மை, பருமை என்னும் மூன்றுடம்புகளோடு கூடியே வாழ்கின்றனர் அஃதாவது உணர்வு உள்ளம் உடல் என்னும் மூன்றாலும் வாழ்கின்றனர். இவை மூன்றும் பிரிக்கமுடியாதவாறு ஒன்று பட்டே பருவுடல் மூலம் இயங்கும். இவற்றுள் ஒன்றற்கு ஏற்படும் இன்பதுன்பங்கள் மற்றவற்றிற்கும் ஏற்படும். இவற்றைப் பிரித்து அவ்வவற்றால் இன்பதுன்பப் பயன்கோடல் யோகியர்க்கும் ஞானியர்க்குமே இயலும். இங்கிலை பகுத்தறிவுக்குப் புலப்படினும் (விஞ்ஞான) அறிவியலுக்கு அப்பாற்பட்டதாகும். இங்கிலை கைவந்தவர்க்கு மட்டுமே மறுமைநிலை பற்றிய தெளிவு ஏற்படும். மற்றையோருக்கு இம்மைப் பயன் ஓரளவே புலப்படும்.

ஞான யோகங்களால் முதிர்ந்த அருளாளர்கள் உணர்வுடம் பாகிய நுண்ணுடம்பைத் தியானமந்திரங்களாற் செம்மைப்படுத்தி வினைப்பயனாக வரும் இன்ப துன்பங்களைத் தாமரையிலைமேல் நீர்போல நின்று துய்த்து இம்மையில் மகிழ்வும் மறுமையில் ஆனந்தமும் அடைகின்றனர். தவ யோகங்களால் முதிர்ச்சி பெற்ற சித்தர்கள் மூலிகை, பாஷாண மருந்துகளால் பருவுடம்பை யும் பிராணயாமம் ஆதனம் முதலியவற்றால் நுண்ணுடம்பையும் செம்மைப்படுத்தி வினைப்பயனாக வரும் துன்பங்களை மாற்றி இம்மையில் பேரின்பமும் மறுமையில் பேரானந்தமும் உறுகின்றனர்.

பொறிகளை வாயிலாக உடைய உடம்பே யாவும் என்று கருதி மனவி மக்கள் சுற்றம் மாடு மனை எனச் சுழலும் சாமானிய மக்கள் உலகியல் உணர்த்தும் நூலறிவுடையராய்ப் பழ வினைகளோடு பிறப்பெடுத்த பின்னர்ச் செய்துகொள்ளும் சஞ்சித வினைகளுக்கும் ஆகாமியமாகிய எதிர்பாராத வினைகளுக்கும் ஆட்பட்டுச் சுழன்று இன்ப துன்பங்களை அனுபவித்து இடர்ப் படுகின்றனர். அவ்வப்பொழுது மெய்யுணர்ந்த சான்றோர்களின் காட்சியாலும் அவர்தம் அருளுரையாலும் அன்னவர்தம் நூல் களாலும் கார்காலத்து மின்னலைப்போல் மெய்யுணர்வின் சாயல்

தோன்றப்பெற்று இறைவுணர்வுடையராய் செயல்படுகின்றனர். இவ்வகையான மக்கள் படிப்படியாக மெய்ம்மையுணர்ந்து பற்று நீங்கிப் பேரின்பம் அடைய வேண்டுமென்றே பேரருட்பிழம்பாகிய இறைவன் ஆங்காங்கே தோன்றிப் பக்குவமுடையார்க்கு அருளுபதேசம் செய்து அவ்வடியார்கள் வாயிலாகப் பற்பல திருவிளையாடல்களை நிகழ்த்துகிறான்.

அவ்வாறு சீவன் முத்தி பெற்றுச் சாதாரண மானிடர்களைப் போல மக்களிடையே வாழும் ஒழுக்கத்து நீத்த பெரியார்களுக்கு முக்கால உணர்வும் பொருட்டன்மைகளும் அவற்றின் பயன் பற்றிய அறிவும் இயல்பாகவே வாய்த்துள்ளன. அவற்றால் அவர்கள் இவ்வுலக மக்கள் உய்யும்பொருட்டுப் பல்வேறு வழிகளை வகுத்துத் தாங்களும் அவ்வழியில் ஒழுகிக் காட்டுவராயினர். அவ் வழிகளில் ஒரு பிரிவே திருத்தல வழிபாடு.

மெய்யறிவுசான்ற அவ் அருளாளர்கள் மக்களின் மூன்றுடம்பு களும் செம்மை பெறுதற்கு ஏதுவாக மூர்த்திகளை விருட்சத்தின் கீழ் அமைத்துத் தீர்த்தத் தடங்களை உண்டாக்கி அவற்றின் சிறப்புக்களை புனைந்துரைவகையால் பரப்பியுள்ளனர். இயற்கை யான மலைகள் பேராறுகள் கடற்கரை இவற்றைச் சார்ந்தே தலங்களைத் தோற்றுவித்துள்ளனர். ஏன் கதிரவன் முதலான கோள்களின் ஒளியும் கணக்கற்ற விண்மீன்களின் ஒளியும் இடையறாது தன்மீது படிய அந்தரத்தே விரைந்து சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகத்தைச் சுற்றிப் பல்வேறு வாயு மண்டலங்கள் சூழ்ந்திருக்கின்றன. இம் மண் உலகம் ஒரே கோளமாயினும் அதன்கண் அமைந்திருக்கும் மலை கடல் யாறு காடு வனம் மணற்பரப்பு முதலியவற்றால் இடந்தொறும் இடந் தொறும் அதன் தன்மை வேறுபடும் மாறுபடும். அதற்குள்ளே அமைந்திருக்கும் பொருள்களாலும் வேறுபடும். இவ்வேறுபாடு ஆங்காங்குத் தோன்றி விளங்கும் உயிர்களிடத்தும் காணப்பெறும். இவ் இயற்கைச் சூழலால் வரும் நன்மை தீமைகளை அவ்வவ் விடத்துத் தோன்றியுள்ள உயிர்கள் அனுபவித்தே தீரவேண்டும். எனினும் அறிவுத் திண்மையாலும் ஆய்வு உணர்வினாலும் இவற்றின் தீமைகள் சாராமல் நீக்கி அவற்றை நலம்தரும் முறை யிலும் பயன்படுத்திக்கொள்ளலாம். அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளும் ஒரு சீரிய முறைதான் இந்தத் திருத்தல வழிபாடு.

உலகியலறிவும் மெய்ப்பொருளறிவும் இல்லாத சாமானிய மக்களுக்கும் உலகியற் பொருள் நூலறிவு மட்டுமே பயின்ற அறிவுடை மக்களுக்கும் புலப்படாத பூத பரிணாம உண்மைகள் மெய்யறிவாளராகிய ஞானியர்களுக்கு எளிதாகப் புலப்படும். இத்தகு புலம்வென்ற காட்சியராகிய அருளாளர்கள் உடற் பிணியையும் உள நோயையும் போக்கும் சூழல்வாய்ந்த நிலங்களையும் நீர்நிலைகளையும் பயன் மரக்காடுகளையும் அறிந்து தேர்ந்து இறைவன் பேரால் அவ்விடங்களை வெளிப்படுத்தியுள்ளனர். நிலம் நீர் மரம் என்னும் மூன்றிலும் சிறப்புடைய இடங்களும் இரண்டினில் சிறப்புடைய இடங்களும் ஒன்றில் மட்டும் சிறப்புடைய இடங்களும் உண்டு. ஒன்றில் மட்டும் சிறப்புடையதாயின் ஏனை இரண்டையும் இரண்டாற் சிறப்புடையதாயின் ஏனை ஒன்றையும் செயற்கையாக அமைத்து அவற்றிற்குத் தங்கள் தவஞான ஆற்றலினால் சிறப்பெய்துவித்து அவ்வவ் இடத்திற்கு ஏற்ப மூர்த்திகளை எழுந்தருளச்செய்து மக்கள் கடைத்தேறும்படிச் செய்துள்ளனர்.

தலங்களாக விளங்குபவை மண்வகை தட்ப வெப்பச் சார்பினால் அங்குச் சென்றவர்களின் பருவுடலின் பஞ்சபூதக் கூறுகளையும் வாத பித்த சிலேஷ்மங்களையும் மாறுபடுத்தும். தல விருட்சங்களின் காற்றும் நிழலும் இலை தழை காய் கனிகளும் தீர்த்தங்களின் நீரும் பருவுடம்பின் நோய்களையும் பிணிகளையும் பற்றி மாறுபடுத்தும். மூர்த்தி வழிபாடு நுண்ணுடம்பின் உளர்வுகளை மாறுபடுத்தும். இவ்வாறு தூல சூக்கும காரண உடம்பு மூன்றும் செம்மையுறுதலினால் ஆன்றோர்கள் தல யாத்திரையினையும் வழிபாட்டினையும் சமயச் சார்பாக வைத்து வற்புறுத்துவராயினர்.

இற்றைக்கும் நோய்நீக்கத்திற்காகவும் மன அமைதிக்காகவும் உடற் செழிப்பிற்காகவும் மக்கள் ஊர்தொறும் நாடுதொறும் சுற்றுலாச் செல்வதையும் சுற்றுலாச் செல்வோருக்கு அவ்வந் நாடுகள் தக்க இடம் உணவு முதலிய வாய்ப்புக்களைச் சிறந்த முறையில் அமைத்துத் தருவதையும் காண்கிறோம். ஆனால் இச் சுற்றுலாக்களால் மக்கள் தாம் எண்ணிய பயனை அடைகின்றார்களா என ஆராயின் நற்பயன் ஓரளவும் பிறபயன் பேரளவுமாக இருப்பதை உணரலாம். ஏனெனில் இச்சுற்றுலா யாத்திரை

செல்வோர் பருவுடம்பின் வளம் ஒன்றையே கருதுவதனலும், இடம் முதலாயவை பெரும்பாலும் செயற்கையாக இருப்பதனலும் புலனின்பம் பெறுதற்காக மேற்கொள்ளும் பொருள்கள் காம வெகுளி மயக்கங்களைப் பெருக்குபவையாக உள்ளமையாலும் அதனுள்ளும் அரசியல் முதலான உலகியல் மார்ச்சரியங்களும் போலிகளும் ஊடாடுவதாலும் எனலாம்.

நம்நாட்டுப் பண்டைய அருளாளர்களால் அமைக்கப்பெற்ற சுற்றுலா இடங்களாகிய இத்தெய்வீகத் தலங்கள் மக்களைத் தெய்வமாக்கி இம்மை வாழ்வும் மறுமைப் பயனும் தரத்தக்க சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. இத்திருத்தலங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு தனிச் சிறப்பியல்களை உடையனவாகும். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பயன் மிகுதியாகவும் பிறபயன்கள் பொதுவாகவும் இருக்கும். இன்னின்ன காலங்களில் இன்னின்ன பொழுதுகளில் இன்னின்ன பொருள்களைக் கொண்டு இன்னின்ன ரோடு இன்னின்னவாறு வழிபடவேண்டும் என அமைத்திருப்பதன் நோக்கமும் அவ்வச் சிறப்பு நோக்கியேயாம். அகஞ்ஞான மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய் தொடங்க வேண்டுமென்கிறார் தாயுமானவ அடிகள். ஆழ்வார்களும், நாயன்மார்களும், சங்கரர் இராமானுசர் போன்ற அருளாளர்களும் தலந்தொறும் சென்று வழிபட்டு வழிகாட்டியுள்ளனர்.

இனித் தீர்த்தங்களும் தலங்களும் விருட்சங்களும் மருத்துவப் பயனுடையவை என்பது காட்சியளவையாலும் அறிவியலுக்குப் பொருந்தும்; மூர்த்தி விசேடம் என்பது கற்பனை என்று கருதும் பகுத்தறிவாளர்களும் உண்டு. தீர்த்தமும் விருட்சமும் அவ்வப் பயன்களை மிக்குத்தருவது அத்தலத்து மூர்த்தி விசேடத்திலேயாமென்பதைக் கருதலளவையாலும் ஆகம அளவையானும் உணர்தல் வேண்டும். பருவுடம்பு செம்மையுற்றால் நுண்ணுடம்பு அதன்வழிச் செம்மையுறும் என்பது கருதலளவையால் உறுதி பெறும். அதுமட்டுமன்று, தலங்களைத் தேர்ந்தெடுத்த பேரருளாளர்கள் வாளா ஒரு வடிவத்தை மூர்த்தியாக அமைக்கவில்லை. தங்களுடைய தவ ஆற்றலை மந்திர வலிமைகொண்டு மூர்த்திகளாக எழுந்தருளச் செய்துள்ளனர். எந்தெந்த பெருமக்கள் மூர்த்திகளை நிறுவினரோ அவர்களின் மந்திர வலிமைக்கேற்பவே அவ்வத் தலங்கள் சிறப்புறும். இதனை விளக்கின் பெருகும். முற்றிலும் விளக்கவும் இயலாது. அவரவர் அனுபவத்தால் உணரவேண்டிய

சிறப்புடையது இது. எத்துணையோ திருமால் தலங்கள் இருப்பினும் திருவரங்கத்திற்கும், திருப்பதிக்கும் உள்ள சிறப்பு மற்ற வற்றிற்கு இல்லாதிருப்பதையும், எத்துணையோ முருகனுடைய தலங்களிருப்பினும் பழனி, திருச்செந்தூர் முதலியவற்றிற்குள்ள பெருமை மற்றவற்றுக்கு இல்லாதிருப்பதையும், இவ்வாறே பிற மூர்த்திகளுக்கும் சிற்சில தலங்களில் உள்ள பெருமை பிறவற்றிற்கு இல்லாதிருப்பதையும் எண்ணிப்பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும்.

ஒரு தலத்தின் பெருமை அதனை நிறுவிய ஞானியர்களாலும் தொடர்ந்து நிகழும் பூசனை முதலிய நியமங்களாலும் சென்று வழிபட்டு ஏத்தும் அருளாளர்களாலும் சிறப்பொடு பூசனை புரிந்து பணியாற்றும் அன்புடையோராலுமே நாடோறும் பெருகித் திகழும். இவற்றுள் எதுகுறைவுபடினும் அவ்வளவிற்கு அதன் சிறப்புக்குறையும் என்பதையும் ஓர்தல் வேண்டும். அதனால் சமய நம்பிக்கையும் பக்தி உணர்வும் உடைய மக்கள் யாவரும் திருத்தல யாத்திரையையும் வழிபாட்டையும் முறைப்படி மேற்கொண்டு ஒழுகவேண்டும். இவ்வொழுக்கம் ஒவ்வொருவருக்கும் இருமைப் பயன்களையும் அளிப்பதோடு உலகையும் செழிப்பிக்கும் என்பதில் ஐயமில்லை. இதனைத் தேவார ஆசிரியர்கள் தலங்கள்தொறும் சென்று வழிபட்டமையையும் அவ்வத் தலங்களிலும் இறைவன் அவர்கட்குக் காட்சிகொடுத்து அவ்வவர்தம் வேண்டுகோளை ஏற்று அருள் செய்தமையையும், இன்ன தலத்திற்கு வந்து வழிபடுக என அவர்களை இறைவன் பணித்தருள் செய்தமையையும் கூறும் அவர்தம் வரலாறுகளால் உணரலாம். உலகத்தில் உள்ள பிற சமயங்களும் தல யாத்திரைச் சிறப்பையும் தலச் சிறப்பையும் வற்புறுத்துவதை ஈண்டு அறிதல் தகும்.

இந்தத் திருப்பெருந்துறைப் புராணத்திலும் இறைவன் மாணிக்கவாசக சுவாமிக்குத் தலங்கள்தொறும் காட்சிகொடுத் தருளிய வரலாற்றினை ஒரு சருக்கமாகக் கூறியுள்ளார் இப்புராண ஆசிரியர். இனி இத் திருப்பெருந்துறைப் புராணத்தின் கண்ணும் இவ்வுண்மைகள் பொருந்தித் திகழும் சிறப்பையும் அமைப்பையும் சுருக்கமாகக் காண்போம்.

சருக்கங்களின் பொருட் சுருக்கம்

1. கடவுள் வாழ்த்து :

இத்தலத்து விநாயகக் கடவுளாகிய வெயிலுவந்த கணபதியைக் காப்புக் கடவுளாக முதற்கண் வணங்கிப் பின்னர் இத்தலத்தின் மூலப்பொருளாக விளங்கும் குருந்தொளிநாதரையும் (குருந்த மரம்) பின் முறையே குருந்தப்பெருமான் ஆத்துமநாதர் சிவயோகநாயகி யாயவரையும் வணங்கிப் புராண மரபுப்படி விநாயகர் முதலானோரை வணங்கி வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது. அருச்சனை புரியும் வேதியர்க்கும் சந்தான குரவர்களுக்கும் திருவாவடுதுறை ஆதீன முதல்வர் நமசிவாய தேசிகர்க்கும் வாழ்த்துக் கூறியிருப்பது சிறப்புக்கூறெனலாம். அவையடக்கம் சிறப்பாக உளது.

2. நாட்டுச் சிறப்பு :

இத்தலம் பாண்டிநாட்டது என்னும் முறையில் பாண்டி நாட்டின் வளம் வெள்ளாற்று நீர்வளம் நிலவளம் மருதநில மக்களின் வாழ்க்கை முதலாக அவர்கள் நீர்பாய்ச்சி வித்தி அறுவடை செய்து தக்கார்க்குத் தானமிட்டு அரசிறை நல்குதல் வரை இனிய உவமை உருவகங்களால் விளக்கப் பெற்றுள்ளது. நகரச்சிறப்புக் கூறுங்கால் ஒழித்துக் காட்டணி தற்குறிப் பேற்றவணி முதலாய நயங்களோடு மதுரை திருப்பூவணம் முதலிய பாண்டிநாட்டுத் திருத்தலங்கள் பதினைகையும் அவற்றின் வரலாற்றுக் குறிப்போடு கூறி விளக்குகிறது.

3. நைமிசாரணியச் சிறப்பு :

நைமிசவனத்தைக் கடல், விநாயகக்கடவுள், சிவபெருமான், உமாதேவி, முருகக்கடவுள், வெள்ளிமலை, கற்பகத்தரு, சிந்தாமணி இவற்றோடு சிலேடையணி முறையால் ஒப்பிட்டுப் பேசி அங்கே மாதவர்கள் வேத விதிப்படி வாழும் சிறப்பை நயமாகப் புலப்படுத்துகிறது.

4. புராண வரலாறு :

நைமிசாரணியத்தில் வாழும் முனிவர்களின் கல்வி கேள்வி களாலாய ஞானச் சிறப்பையும் ஒழுக்கத்தையும் தவமுதலாய ஒழுகலாற்றையும் அருட்பண்பாடுகளையும் விளக்கிச் சிறந்த முனிவர் களின் பெயர்களைச் சுட்டி வேள்வி முதலாய அவர்தம் பணிகளையும் விளக்கி அங்குச் சூத முனிவர் வருதலையும் அவர்தம் பெருமையை யும் முனிவர்கள் அவரை வரவேற்றுப் பூசித்துத் திருப்பெருந்துறை மான்மியத்தைக் கூறியருள வேண்டுதலையும் அவர் பரவசமுற்றுப் பெருந்துறையின் மாண்பினைச் சொல்லவல்லார் யார் எனினும் அறிந்தவாறு திரேதாயுகத்தில் யாக்கிய வல்கியர் மிதிலை மன்னன் சனகருக்குக் கூறியபடி கூறுவேன் எனத் தொடங்கிச் சனகன் பிரமஞானம் பெற்ற மாதவரைக்கொண்டு ஞானோபதேசம் பெற எண்ணி ஓரிலக்கம் பசுக்களை அலங்கரித்துப் பிரமஞானிகள் யாவ ராயினும் இவற்றைக் கொள்க என அறிவித்ததையும் யாரும் கொள்ளாத நிலையில் யாக்கிய வல்கியர் வந்து அவற்றைக் கைக் கொண்டு தன் சீடர்களுக்கு அளித்துச் சனகன் விரும்பிய வண்ணம் பிரமஞானத்தின் பெருமை அருமைகளைக் கூறித் கிரேதாயுகத்தில் தவமியமாமுனிவர் புரூரவாவரசனுக்கு உரைத்ததனைக் கூறுவேன் எனத்தொடங்கி மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றிலும் சிறந்த தலத்தைப்பற்றிப் புரூரவன் வினவத் தவமியர் உளங்கனிந்து கயிலாசத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் உவமையவள் வேண்ட பிரமஞான ரகசியத்தைக் கூற அதனை உள்ளவாறுணர்ந்தபடி கூறுவேன் என அவர் கூறத்தொடங்குவதாக அமைந்துள்ளது.

5. கைலாசச் சிறப்பு :

கைலாயத்தின் ஒப்பற்ற தெய்வீக வளமும் வழிபாடியற்ற வரும் திருமால் பிரமன் இந்திரன் முதலாய தேவர்களைக் கையில் பிரம்பு கொண்டு நந்தியம்பெருமான் ஒழுங்குபடுத்தும் காட்சியும் அரம்பை முதலிய தேவமாதர் நடம்புரியும் அழகும் முனிவரர் யோகியர் சூழ்ந்து திகழும் மாட்சியும் ஆண்டுச் சிவபெருமான் உமாதேவியுடன் அரியணையில் வீற்றிருக்கும் சிறப்பும் விரித்துக் கூறப்படுகிறது.

6. தேவிக்கு சுவாமி சிவபுர மகிமையுரைத்த சருக்கம்

கயிலாயத்தில் இறைவன் தியானத்தில் இருத்தலைக்கண்ட உமாதேவி யாவற்றிற்கும் மூலமாய்ப் பரம்பொருளாக விளங்கு

இறைவா! நீர் யாரை எண்ணித் தியானம் புரிகின்றீர் உம்மினும் மேலோருண்டோ என வினவத் தான் நிற்குணமாயும் சகுண மாயும் விளங்கும் நிலைமையை விளக்கிச் சகுணமாகி இப்பொழு திருக்கும் யான் நிற்குணமாக விளங்கும் சோதியாகிய என்னையே தியானிக்கின்றேன் என்றுகூறிப் பொருள்தொறும் ஆன்மாவாக இருக்கிறேன் யான் நிற்குணமாகிய அது பரமான்மாவாகத் திகழும். யான் கயிலைவாசி அது மகா கயிலைவாசி. அது திகழு மிடம் ஆதி கயிலாயம். இந்த ஆதி கயிலாயத்திற்கு ஒத்த தலம் எவ்வுலகிலுமில்லை. இத்தலத்தில் குருந்துருவாய் விளங்கும் அதுவே துவாதசாந்தத்தலமாகும். அங்கே அறுபத்தாறு கோடி தீர்த்தங்களை உண்டாக்கி வைத்தருளல் பெருந்துறை என்றும் அதற்குப் பெயராம். அங்கு வாழும் உயிர்கள் யாவும் சிவமேயாம். அங்கு ஆத்துமநாதனுகிய யாமே குருந்துருவாயும் இச்சையால் குருவாகி மும்மூர்த்திகட்கும் உபதேசஞ் செய்தும் அம்பரத்தில் நாடகம் நடித்தும் ஆலவாயதனில் அறுபத்துநான்கு திருவிளை யாடல்கள் புரிந்தும் பரமானந்தமயமாய் அளவிடப்படாதாகி அணுவிணுக்கணுவாகியும் விளங்குகிறோம் என்று கூறி அத் தலத்தில் உறைவோர் வழிபடுவோர் எய்தும் பயனையும் கூறி விளக்க, உமாதேவி இச்சிவபுரத்தின் மகிமை யாவும் உணர்த்த வேண்ட உணர்த்தினன் இறைவன். அதனை நந்திதேவன் அறிந்தான். பின் நந்தி சநற்குமாரருக்கு இறைவன் கட்டளையால் அதனை உணர்த்த பின்னர் பரமனுடைய சொல்லால் நாரதன் சநற்குமரரிடம் அதனைக் கேட்டுணர்ந்தான். அதன்பின் இமய வெற்பில் இறைவனை மணக்க வேண்டித் தவம் செய்த பார்வதி தேவிக்கு இறைவன் கட்டளையால் நாரதர் சிவபுர மகிமையை உரைத்தார். அவர் உரைத்தாங்கு யான் உனக்கு அறிவிப்பேன் எனத் தவமியர் புரூரவாவுக்குக் கூறத் தொடங்குகிறார்.

7. புரூரவாவுக்குத் தவமியர் ஆத்துமநாதர் மகிமை யுரைத்த சருக்கம்:

புரூரவச் சக்கரவர்த்தி முதற்கண் ஆத்துமநாதர் என்னும் சொற்பொருளை விளக்க வேண்டுமெனத் தவமியரை வேண்ட அவர் ஆத்மாவின் இலக்கணத்தைக் கூறி அவ்வாத்மாவுக்கு நாதராய் விளங்குதலால் ஆத்துமநாதர் என விளக்கிப் பின் காலத்தின் அளவு கூறத்தொடங்கிக் கண்ணிமைக்குங் கால முதலாகக் காட்டம் கலை கணம் முகூர்த்தம் பகல் தினம் பக்கம்

மாதம் ஆண்டு முதலியவற்றின் அளவுகூறி மக்கள் வருடம் ஒன்று தேவர்க்கு ஒருநாள் என்றும் கிரேதாயுகம் முதலியவற்றின் கால அளவு இவ்வளவென்றும் மனு முதலாகிய தேவர்களுக்கும் இந்திரன் பிரம்மா திருமால் ஆயவர்க்கும் அகவையளவு கூறி அண்ட உலகம் அழியுங் காலமும் தோன்றும் காலமும் கூறி உலகத் தோற்றத்தின் வரலாறும் பூதாதிகளாகிய தத்துவங்களின் தோற்ற வரலாறும் ஒன்றுமுதல் ஒன்பது சிருட்டிகளின் பொருட் கூறுபாடும், நால்வகை யோனி பேதங்களும் அவற்றின் பிறப்பு முறையும் உணவு முதலியவையும் கூறுகிறார். புரூரவன் ஆத்தும நாதர் என்னும் பதப்பொருளின் ஆழுத்தை எண்ணி மகிழ்ந்து முனிவரை வணங்கிப் போற்றுகின்றான்.

8. அண்டகோசச் சருக்கம்

புரூரவன் தவமியரை வணங்கி இவ்வண்டத்தின் அளவை கூறியருள்க என வேண்டக் கதிர்எழுதுகள் அணு, கசாக்கிரம் இலாக்கை, யூகை, துவரை, நெல். எனப் படிப்படியாக பருப், பொருளின் நீளம் முதலிய அளவைசொல்கூறத் தொடங்கி அங்குல முதலாக யோசனை வரையும் கூறிப் பின் அண்டத்து அளவும் மேருவின் அளவும் அண்ட கடாகத்தின் அளவும் காலாக்கினி யுருத்திரர் பற்றியும் உருத்திரர் அயுதப் பற்றியும் கமட புவனம் பற்றியும் நரகம் முதலியவற்றின் பரப்பளவு, எல்லை பற்றியும் கூர்மாண்டர் இருக்குமிடமும் அவர்பால் தோன்றிய தேவ கணங்கள் பற்றியும் அவர்கள் வாழும் உலகம் அவுணர்கள் உலகம் முதலியவற்றின் அளவும் பிறவும் தவமியர் கூறுகின்றார். மேலும் குலவரைகள் - ஏழுதீவுகள் - பிரம்மா திருமால் இவர்தம் உலகம் பற்றிய அளவும் பிறவும் கூறுகின்றார். இச்சருக்கும் முழுதும் கிடைக்கவில்லை. 28 பாடல்களே உள. இதிற் கூறப்பெறும் பல செய்திகளைத் தெளிவாக அறிய இயலவில்லை.

9. பிரம்மாவுக்கு உபதேசித்த சருக்கம்:

இசனுள் தேவர்கள் இந்திரன் பிரமன் மால் முதலாய தேவர் களுக்கு வாழ்நாள் அளவு கூறப்படுகிறது. பிரமன் தோற்றமும் அவனுக்கு ஆத்மநாதர் காட்சிகொடுத்து உபதேசம் புரிதலும் பிரமனுக்குச் சிருட்டித் தொழிலைக் கற்பித்து அதற்கு அவனைத் தலைமையாக்கி யருள்புரிதலும் கூறப்படுகிறது.

10. குருந்தமூலச் சருக்கம்:

இறைவன் குருந்தமரமாக விளங்குதலும் அதன் சிறப்பை ஆகாயவாணி பிரமனுக்குக் கூறுதலும் குருந்தீசரை பிரமன் அட்டகங்கூறி வணங்கி வழிபடுதலும் இறைவன் காட்சி தந்து அருள்புரிதலும் பிரமன் வைதிக தீர்த்தமுண்டாக்கிக் கங்கை முதலிய தீர்த்தங்களினும் இது சிறந்தது என விளக்குதலும், வாயுதேவன் அதில் மூழ்கிப் பேறு பெற்றமையும் பிரமன் யாவற்றையும் படைக்கும் செயலையும், குருந்தீசரை வழிபட்டு வருதலும், குருந்தினை வழிபடுவோர் எய்தும் பயனையும் விரித்துக் கூறுகிறது.

11. அக்கினி தீர்த்தச் சருக்கம்:

குருந்தீசர் இருபிடத்திற்குத் தென்மேற்கில் அமைந்துள்ள இத்தீர்த்தம் எல்லாப் பாவங்களையும் பிணிகளையும் போக்கவல்ல தென்றும் இதன்கண் தன் கணவனைச் சகக்கிழத்தி காரணமாக நஞ்சிட்டுக்கொன்ற கனகை என்பாள் பிரமகத்திப் பாவத்தால் பிசாசாகித் திரிந்து துன்புற்று இத்தீர்த்தத் தடத்தின் பாங்கோர் மரநிழலில் வந்திருந்தகாலை நீர்க்காகம் ஒன்று இத்தீர்த்தத்தில் படிந்துவந்து அம்மரக்கிளையில் அமர்ந்து உதறிய சிறகின் நீர் தெளிக்கப்பெற்றுப் பாபம் நீங்கிச் சுவர்க்கமுற்றாள் என்றும் நாரதர் தேவிக்குக் கூறுகிறார்.

12. தேவிக்கு நாரதர் வனபுரகேத்திர நாமமுரைத்த சருக்கம்:

பரமசிவம் குருந்து ரூபமாக இருந்தருள் புரிதலால் இந்தலம் குருந்தவனம் என்றும் இறைவன் தெக்கணமூர்த்தியாயமர்ந்து உபதேசித்தலாலே சிவயோகவனம், சித்தியோகவனம் என்றும் அகத்தியனால் சன்னவனம் என்றும் இவ்வாறே ஆதிகயிலாயம், சதுர்வேதபுரம், சிவபுரம் என்னும் பெயர்களும் காரணங்களோடு அமைந்துளவென்றும் மற்றும் சிவகேத்திரம், பவுத்திரமாணிக்கம், பெருந்துறை என்னும் பெயர்களும் இவ்வாறே அமைந்துள வென்றும் இந்நாமத்திரயங்களைக் கூறி வழிபடுவோர் எய்தும் பயன்களையும் விவரித்து நாரதர் தேவிக்குக் கூறுவதாக அமைந்துளது. இறைவன் திருநாமங்கள் அறமேசர், பரமசாமி

திரிமூர்த்தி, குருஞானதரன், புரேசர், சன்னவனேசர், குந்தாரணிய நாதர், பரையோகவனேசர், சிவகேத்திரநாதர், மகாதேவர், சிவபுரேசர், விப்பிரநாயகர், சத்தநாதர், பெருந்துறைக்கோ, முந்நூற்றொருவர், அசுவநாதர், புவனதேசிகர் எனப் பதினெறு திருநாமங்களை எண்ணித் துதிப்பவர் எய்தும் பலன்களும் இத் தலத்திற்றருப்பணிகள் செய்தால் பிதிரர்கள் எய்தும் பலன் களும் கூறப்பட்டுள்ளன.

13. விஷ்ணுவுக்கு உபதேசித்த சருக்கம்:

இத்தலத்திற்கு வந்து திருமால் குருந்தீசரை நோக்கித் தவமியற்ற இறைவன் காட்சி கொடுத்து ஆறெழுத்து மந்திரத்தை உபதேசித்தருளி எல்லாப் புவனங்களையும் காக்கும் தொழிலையும் அருளுகின்றான். திருமால் தன் பெயரால் நாராயண தீர்த்தம் உண்டாக்கி வைத்து வைகுந்தம் செல்லுகிறார்.

14. நாராயண தீர்த்தச் சருக்கம்:

இந்தத் தீர்த்தத்தின் பெருமையை தேவி வினவ நாரதன் கூறுகிறான். சிவநாமத்தை வெறுத்தும் சிவனடியார்களை இழித்தும் பேசி வாழ்ந்த ஒரு வயிணவன் புலச்சேரியில் நாயாகப் பிறந்து பிறந்து துன்புற்று ஒருநாள் ஒரு பெரும் பன்றி துரத்த அஞ்சியோடி இத் தீர்த்தத் தடத்தில் வீழ்ந்து அந் நீரைப் பருகிய மாத்திரத்தில் முன்னைக் கொடுவினைப் பாவங்கள் நீங்கப்பெற்றான். சிவகணங்கள் வந்து அழைத்துச் சென்றார்கள். அவன் இறைவனருள் பெற்றான்.

15. உருத்திரருக்கு உபதேசித்த சருக்கம்:

உருத்திரர் நூற்றெட்டு உருத்திர கணங்களோடு வரும் வருணனைகளும் உருத்திரர் இறைவனை வழிபடுதலும் இதனுள் விரித்துக் கூறப்படுகிறது. இறைவன் உருத்திரருக்குப் பஞ்சாக்கர மந்திரத்தை உபதேசித்து, சங்காரத் தொழிலையும் அளித்து நானே நீயாக விளங்குவாய் எனக் கூறுகிறார். உருத்திரன் தன் பெயரால் ஒரு தீர்த்தத் தடம் உண்டாக்கி இதில் மூழ்கினவருக்கு எல்லா நலனும் அருள வேண்டுகிறான்.

16. சிவதீர்த்தச் சருக்கம்:

இத் தீர்த்தத்தின் பெருமையை, வில்வாரணியத் தலத்தில் விருபாக்கன் என்பான் சிவயோகியாய் தவ ஒழுக்கத்தால் சிறந்து விளங்குவதைக் கண்டு அந்த நாட்டு அரசன் இராட்டிர வர்த்தனன் நில முதலாயவற்றை அக் கோயிலுக்கு வழங்கிப் பூசனை முதலிய சிறப்பாக நடைபெறத் தல விசாரணைப் பொறுப்பை அவ்விருபாக்கனிடம் வேண்டியளித்தான். அவன் சிவப் பணியை நெறியோடாற்றி வருங்கால் அக்கோயில் அதிகாரிகள் ஐவர் வஞ்சனை மொழிகளால் விருபாக்கன் உள்ளத்தை மாற்றிச் சிவபூசனைக்குரிய பொருள்களைத் துய்க்கும் வண்ணம் செய்து விடுகின்றனர். வயோதிகத்தால் உடன்பட்ட விருபாக்கன் அவ்வாறே நாச்சுவைக்காகச் சில பொருள்களை உண்டு சின்னாள் வாழ்ந்து இறந்தபின் எமபடர்கள் அவனைப் பிடித்து நாவில் ஆணியடித்தும் வயிற்றிற் குத்தியும் மல முதலாயவற்றை உண்ணச் செய்தும் நரகிலிட்டுத் துன்புறுத்திப் பின் சேரி நாயாகப் பிறக்கச் செய்கிறார்கள். தனக்கு வஞ்சனை கூறிய் ஐவரும் இவனுக்கு நாய்க் குட்டிகளாகப் பிறந்து துன்புறுகிறார்கள். இப்படிப் பல பிறப்புக்கள் நாயாகப் பிறந்து பின்னர் புலையனைப் பிறக்கிறான். தொழுநோய்பற்றித் துன்புறுத்த முன்னர் செய்த சிவயோகப் பயனால் குருந்தவனம் வந்தடைகிறான். வெப்பத்தாலும் பசியாலும் மயங்கி நொந்து சிவதீர்த்தத்தில் வந்து வீழ்ந்து பாவங்கள் நீங்கப் பெற்றுச் சிவபதம் அடைந்ததாக நாரதர் தேவிக்குக் கூறுகிறார் என இச்சருக்கத்தில் முனிவர் விளக்குகிறார்.

17. சிவத் துரோகச் சருக்கம்:

சூத முனிவர் இச் சருக்கத்தில் விமலலிங்க தரிசனப் பெருமையையும் மகேசுரநாமம், சிவநாமம், அரநாமம், சம்புநாமம் இவற்றின் சிறப்பையும், பெருமையையும், உருத்திராக்கம் திருநீறு இவற்றின் சீர்மையையும் சிவனடியார்களின் மாட்சியையும் விளக்கிப் பாவங்கள் இவை என்றும் அவற்றுள் தலையாய பாவங்கள் இவை என்றும் சிவபுண்ணியங்களால் சிவத்துரோகம் நீங்காது என்றும் இதற்கு விருபாக்கன் வரலாறே சான்று மென்றும் எவ்வாற்றானும் சிவத் துரோகம் கூடாதென்றும் விளக்குகிறார்.

18. தேவிக்கு நாரதர் தவநிலை கூறி மீண்ட சருக்கம்:

இச் சருக்கத்தில் பத்மாசூரன் இறைவனை நோக்கிக் கடுந் தவம் புரிந்து பெருவரங்களைப் பெற்றுத் தேவர்களுக்கு இடுக்கண் புரிய தேவர்கள் கலங்கிச் சிவபிரானிடம் முறையிட அவர் எமக்கொரு குமாரன் பிறப்பான் அவனே சூரனை வென்று நும்துயர் தீர்ப்பான் என அருள அதுவரை குருந்தவனத்தில் சென்றுறைவோம் எனத் தேவர் சென்று சிவபுரத்தில் தங்கு கிறார்கள் என்றும் நாரதன் இமயத்திற்குச் சென்று தேவியைத் தாம் வேண்டிக்கொண்ட செய்தியைக் கூறத் தேவர்கள் மகிழ்வ தாகவும் கூறப்பட்டுள.

19. தவசுக்குத் தேவி சிவபுரத்துக்கு எழுந்தருளிய சருக்கம்:

உமாதேவி தன் பெற்றோர் இமவான், மேனை இவர்களிடம் தான் தவம்புரியக் குருந்தவனம் செல்ல வேண்டுமெனக் கூறி விடைபெற்று வந்து இறைவனை வணங்கி நாமாவளியாற் போற்ற இறைவன் தவம்புரியக் கட்டளை இடுகிறான். வெயிலுவந்த கணபதியைக் காவலாக வைத்துத் தேவி யோகபீடத்து அமர்ந்து தவமியற்றுகிறாள். வீரபத்திரரும் உடன் தவம் புரிகிறார்.

20. காமதகனச் சருக்கம்:

தேவர்கள் யாவரும் வந்து தேவியை வழிப்பட்டுப் பின் தம்முள் சிந்திக்கின்றனர். இறைவனும் தேவியும் இவ்வாறு யோகநிலையில் இருப்பின் குமாரன் அவதாரம் எவ்வாறு நிகழும்? என்றெண்ணி மன்மதனைக் கொண்டு சிவபெருமானின் யோகத்தைக் கலைக்க வேண்டுமென்று முடிவுசெய்து மாரவேளிடம் தம் கருத்தைக் கூற அவன் அஞ்சி மறுத்துப் பின் தேவர்கள் சாபத்தினும் இறைவனால் அழிவது நலமெனக் கருதி உடன் பட்டுத் தன் மலர்க்கணைகளை இறைவன்மேல் விட இறைவன் நெற்றி நோக்கால் எரிந்துவிடுகிறான். அது கண்டஞ்சிய தேவர்கள் திருமாலுடன் கயிலை சென்று நந்திதேவர் வாயிலாக இறைவனைக் கண்டு வணங்கி முறையிடுகின்றனர். இறைவன் அஞ்சற்க என அபயமருளுகின்றான்.

21. தேவிக்கு சுவாமி காட்சி கொடுத்த சருக்கம் :

சிவபெருமான் திருப்பெருந்துறைக்கு நந்தியின் மீது ஆரோகணித்துச் செல்லும் வருணனையும், தேவி வணங்கி வரவேற்றலும், தன் விருப்பங் கூறலும், வரங்கேட்டலும் இறைவன் அவ்வாறே அருள் செய்து மேலும் பல வரங்களையளித்துச் சிவயோக நாயகி என்னும் திருநாமத்தைச் சூட்டி இமயத்திற்கு அழைத்துச் சென்று திருமணம் செய்துக்கொண்டு மீண்டு குருந்தவனத்தில் வந்து அமர்ந்திருக்கும் செய்தியும் இச் சருக்கத்திற் கூறப்படுகின்றன.

22. கலியாணம்-குமார அவதாரம் சூரசங்காரச் சருக்கம்:

புரூரவன் தவுமியரைத் திருமண வரலாற்றை விரித்தோதும்படி வேண்ட அவர் திருமண விழா அமைப்பினையும் திருமால் முதலான தேவர்கள் வந்து நிறைந்திருந்த காட்சியினையும் அதனல் வடக்குத் தாழ்ந்து தெற்கு உயர்ந்தமையால் அகத்தியரைத் தெற்கே சென்ற நிலத்தைச் சமபடுத்துமாறு இறைவன் கட்டளையிட்டமையும், திருமணக் காட்சியைக் கணவனேடிருந்து காண வேண்டுமென்ற இரதிக்கு அவள் கணவனகிய மன்மதனை அவளுக்குத் தோன்றுமாறு அருள் செய்தமையும், தேவர்கள் இறைவனிடம் குமார தேவரை யவதரிக்கச் செய்ய வேண்டுமென வேண்ட இறைவன் இறைவியோடு தேவ வருடம் நூறுக மகிழ்ந்திருக்கக் கண்டு தேவர்கள் அஞ்சி விரைந்து குமரனைத் தருமாறு வேண்ட தன்வயிற் றுதிப்ப தன்முன் தேவர்கள் இவ்வாறு வேண்டியதனல் தேவி தேவர்களுக்கு மக்கட்பேறின்றுக எனச் சபித்தமையும் பின் இறைவனுடைய வீரியத்தைப் பூமிதேவி தரிப்ப ஆற்றுளாய் நடுங்க இறைவன் அவ்வக்கினிப்பிழம்பை சிறுவடிவாக்க அதனை யறியாது இந்திரன் மிதித்தலால் அஃது ஆறு பொறியாக அவற்றை அக்கினி தேவனும் வாயுவும் தாங்கிச் சென்று கங்கையில் விட ஆங்கீகார் சரவணப் பொய்கையிற் சார்ந்து குமாரதேவர் அவதரித்தமையும் என்றும், பின்னர் இறைவனும் இறைவியும் அவ்வழி வருங்கால் ஆறு சிறு குழவிகளாய் விளையாடும் அவர்களை இறைவி அணைத்தெடுக்க ஆறுமுகத்தோடு ஒருருவாய் ஆன குமாரதேவருக்குப் பாலூட்டிப் பின் இம் முருக வேளுக்குத் துணையாகத் தன் காற்சிலம்பினின்றும் ஒன்பதுலக்கம்

வீரர்களைத் தோற்றுவிக்க அவர்களும் உடன் வளர்ந்து இறைவன் கட்டளையை ஏற்று வீரவாகு தேவர் முதலானோருடன் சென்று கிரௌஞ்சத்தையும் தாருகன் முதலியோரையும் அழித்துச் செந்திலில் வீற்றிருக்குங்கால் வியாழன் சூரபதுமன் முதலியோர் வரலாறுகளைக் கூறக் கேட்டுப் பின் சூரனைச் சார்ந்தவர்களை வென்றழித்துச் சூரனைய மாவினை இருபிளவாக்கிச் சேவலும் மயிலுமாகக் கொண்டருளியதையும் தேவர்களைச் சிறை மீட்டதை யும் விரித்துக் கூறுகிறது இச் சருக்கம்.

23. தேவதீர்த்தச் சருக்கம்:

சூரபதுமனுக்கஞ்சித் தேவர்கள் சிவபுரத்தில் வதிந்தபோது உண்டாக்கிய இத் தீர்த்தச் சிறப்பினை தவுமியர் புரூரவாவுக்கு விளக்கத் தொடங்கிப் பலபடியாக இத் தீர்த்தத்தில் மூழ்குவோருறும் பலன்களை விரித்துரைத்து இத் தீர்த்தத்தில் மூழ்கியதால் வான்மீகி எல்லாக் கலைஞானங்களையும் ஓதாதுணர்ந்தான் என்றும் பிரமன் வான்மீகியைத் தேடிவந்து இராம காதையை எழுத வேண்ட அவன் அக் காவியத்தைச் செய்தருளினன் என்றும் இத் தீர்த்தம் அறிவு ஞானம் முதலிய அளவற்பேற்றைத் தரவல்லதென்றும் விரித்துக் கூறுகிறார்.

24. இருடிகள் தீர்த்தச் சருக்கம்:

இத்தலத்தின் வாயுமூலையில் அமைந்துள்ள இத் தீர்த்தம் பாவங்களைப் போக்கிச் சிவஞானமடையச் செய்யுமென்றும் விராட தேசத்தில் சடகோபன் என்னும் வைணவன் ஒருவன் தன் கல்விச் செருக்கால் சிவனடியார்களை மதியாதவனாய் வாழ்ந்தான். மக்கட்பேறு மிகுதியினால் வறுமையுற்று அவ்வூரார் உதவிபுரியாத காரணத்தால் அயலூர் செல்பவன் ஒரு காட்டுவழியே செல்லுங்கால் பசி மிகுதியால் அருகே விளைந்திருந்த ஒரு கொல்லையில் எள் விளைந்திருப்பது கண்டு அதனை வயிறடையத் தின்றதனால் வயிற்றுப் போக்குண்டாகி இறந்தான். சிவ நிந்தை முதலிய பாவத்தால் ஓர் எருமையாகப் பிறந்து எட்கொல்லைக் குரியவனிடம் உழவுமாடாக உழைத்து வருந்தி கிழட்டுத் தன்மை யால் அவன் அடித்து விரட்டக் காட்டில் திரியும்போது ஒரு வேடன் அதனைக் கொன்று அதன் தலையைத் திருட்டிப் பரிகாரமாக ஒரு மரக்கிளையில் தொங்கவிட்டான். அத்தலை

அழுகி ஒரு நாயால் இழுத்துச் செல்லப்பெற்று இருடி தீர்த்தத்தில் வீழ்ந்தது. அக்கணமே அவன் பாவமெல்லாம் நீங்கிச் சிவகதி யுற்றான் என்று தவுமியர் கூறுகிறார்.

25. அசுர தீர்த்தச் சருக்கம்:

இரணியன் இரணியாக்கன் என்னும் இரு அசுரர்கள் கடுந் தவமியற்றிப் பெருவரம் பெற்றனர். திருமால் வராகமாகவும் நரசிங்கமாகவுந்தோன்றி இவர்களை அழித்தார். இவர்தம் மரபில் தோன்றிய மாவலி என்பான் பெருந் தவமியற்றி மூவுலகிற்கும் தலைவனானன். தேவர்கள் இவன் ஆற்றலுக்கஞ்சி இவனுக்கு அடிமை பூண்டுழந்தனர். தேவர்களின் துயர் பொறுத அதிதி தன் மக்களுடைய துயரைத் துடைக்கத் திருமாலை வேண்டத் திருமால் வாமனனாக அவளிடம் தோன்றி மாவலி வேள்விச் சாலையில் செய்யுந் தானத்தின்போது தனக்கு மூன்றடி மண் வேண்டுமென்று கேட்டுச் சுகிரனின் தடையை அகற்றிப்பெற்று மாவலியைப் பாதாளத்தில் ஒரு காலடியால் அழுத்துகிறார். அவனுக்கு இறவாவரமும் தருகிறார். இம்மாவலியால் உண்டாக்கப் பெற்ற தீர்த்தமே அசுரதீர்த்தம். இதில் மூழ்கினோர் எல்லாப் பேறுகளும் எய்துவர் என்றுகூறி விசுவேசன் என்னும் அந்தணன் தன் மரபுப்படி வாழ்ந்தனன், அவனுக்கு இரு புதல்வர்கள், மூத்தவன் விரூபாக்கன்; இளையவன் சிவன், இவரிருவரும் தம் தந்தை இறந்தபின் வேண்டிய கருமங்களைச் செய்து வைதிக நெறி வழுவாமல் வாழ்ந்தனர். ஒரு பிதிர் சிரார்த்தத்தின்போது இளையவன் மூத்தவன் வீட்டுக் கொல்லையில் காய்த்திருந்த பாகற் காயினைப் பறித்து வேதியர்களுக்கு உணவுடன் அளித்த பாவத் தால் குரங்காகப்பிறந்து துன்புற்றுழந்து ஒரு கால அசுர தீர்தத நீரைப் பருகிய பாவம் நீங்கித் தேவவுருப் பெற்றான் என்று கூறுகிறது இச் சருக்கம். இதனுள் மாவலியின் வரலாறு விரித்துக் கூறப்பட்டுள்ளது.

26. மானவ தீர்த்தச் சருக்கம்:

மனுச் சக்கரவர்த்தி சிவபுர மகிமையுணர்ந்து வந்து அக்கினி தீர்த்தத்தில் மூழ்கிக் குருந்தீசரை வணங்கி தீர்த்த ஆண்டோர் முண்டாக்கி ஒரு மாமரத்தின் அடியில் தவம புரியலானன் இறைவன் காட்சி கொடுத்துப் பல வரங்களை நல்கி அவன்

உண்டாக்கிய தீர்த்தத்திற்கு எல்லாச் சிறப்பும் உண்டாக அருள் செய்தான். சவுபரி என்னும் முனிவன் ஒரு நீர் நிலையருகில் தவம் புரியுங்கால் தன் குஞ்சுகளோடு மகிழ்ந்து திரிந்த ஒரு மீனைப் பார்த்துத் தானும் இவ்வாறு திகழ வேண்டுமென்று கருதித் துருவாசரிடம் வழி கேட்க அவர் மானவ தீர்த்தத்தில் படிந்தாடினால் உன் விருப்பம் நிறைவேறும் என்ன – அவ்வாறே அதில் படிந்து மாந்தா என்னும் மன்னவன் பெற்ற அறுபது மகளிரை மணந்து மக்களைப் பெற்று மட்டற்ற மகிழ்ச்சியோடு வாழ்ந்தானென்று இச் சருக்கம் கூறுகிறது. இதனுள் சவுபரி முனிவன் வரலாறு விரித்துக் கூறப்படுகிறது.

27. வாயு தீர்த்தச் சருக்கம்:

பிரமன் முதற் சிருட்டியின்போது வாயுதேவனைப் படைக்க அவன் தன்பணி யாதென வினவ, பிரமன் அவனைச் சிவபுரம் சென்று வழிபடுக என அவன் திருப்பெருந்துறை வந்து தீர்த்த முண்டாக்கித் தவம் புரிகின்றான். இறைவன் காட்சி கொடுத்துப் பல வரங்களை யருள்கின்றான். இத் தீர்த்தத்தின் சிறப்பைக் காஞ்சி நகரில் வாழ்ந்த மாடன் என்னும் ஒரு வணிகன் பெரும் லோபி பேராசையால் தீயவழியில் பொருளீட்டினான், அதனை அறிந்த அவ்வூர் அரசன் அவன் பொருள்களைக் கவர்ந்துகொண்டு நாடு கடத்த அவன் அயலூர் சென்று வறுமையால் வருந்தித் தொழு நோயுற்றுத் துன்பமடைந்தான். முன் செய்த நல்வினையால் கம்பை நதியில் மூழ்கிப் பின் சிவபுரம் சென்று வாயு தீர்த்தத்தில் மூழ்கித் தொழுநோய் நீங்கி இவை புற்றான் எனினும் வரலாற்றால் உரைக்கின்றார் தவமியர். முன்னை நல்வினைப் பயன் யாதென்று புருரவன் வினவ அவ்வணிகன் இராகவன் காலதையை விரித்துரை செய்யும் அந்தணனுக்கு விருப்பமில்லாமலே ஊர் ஒப்புரவுக்காக ஐந்து வராகனளித்த செயலே அது என விளக்குகிறார் முனிவர்.

28. கந்திருவ தீர்த்தச் சருக்கம்:

ஆ ஆ – ஊ ஊ என்னும் கந்தருவரிருவர் இத் தலத்தில் வந்து ஓர் தீர்த்தத் தடம் உண்டாக்கித் தவம் புரிகின்றனர். இறைவன் அவர்களுக்குக் காட்சி கொடுத்து வரமளிக்கிறான். தீர்த்தம் புகழ்பெற அருளுகின்றான். இத் தீர்த்தத்தில் மூழ்கிச் சிலாத முனிவன் மகன் நந்திதேவர் சிவஞானம் நிறைந்தவராய் இறைவனை

தோக்கித் தவம் புரிந்து அவன் காட்சித் தரக்கண்டு பேரானந்த முற்றுத் துதிக்க இறைவன் நந்திதேவருக்குக் கைலயில் கணங்களுக்குத் தலைமை தாங்கும் பதவி முதலியவற்றை அருளிய மாண்பை விரித்துக் கூறுகிறது இச் சருக்கம்.

21. இந்திர தீர்த்தச் சருக்கம்:

முக்கரணங்களாலும் உண்டாய பாவங்களெல்லாம் இந்திர தீர்த்தமாடின் தீருமென்று முனிவர் கூறத் தேவ தீர்த்த மொன்றிருக்கவும இங்கு உண்டாவதற்குக் காரணம் யாதென மன்னன் வினவுகின்றான். பிரமன் மூவுலகினும் இல்லாத பேரழகோடு ஒரு கன்னியைப் படைக்கிறான், அவள் பெயர் அகலிகை. இந்திரன் பிரமனைக் காணவந்தவன் இவள் அழகில் மயங்கித் தனக்கு மணம் செய்து தரும்படிப் பிரமனைக் கேட்கிறான். பிரமன் இவனுக்குக் கொடுக்க மனமின்றி மறைத்துக் கூற, மனமுடைந்து செல்லுகிறான் இந்திரன். பின் அகலிகையைக் கௌதமருக்கு மணம் செய்து தருகிறான் பிரமன். இதனையறிந்த இந்திரன் அகலிகையை வஞ்சனையால் நுகர எண்ணி அவ்வாறே கௌதமர் உருவில் அவளைக் கூடுகிறான். கௌதமன் அறிந்து இருவரையும் சபிக்கிறான். தேவமாதர்களும் கற்பு நிலை தவறுக எனச் சபிக்கிறான். அகலிகை அஞ்சிச் சாப நீக்கம் வேண்டராகவன் பாதம் தீண்டப்பெற்று நல்லுருவடைவாய் என அருளுகிறான். இந்திரன் தன் மேனி வேறுபாடு கண்டு நாணி இந்திர உலகம் செல்லாமல் மேருவின் பாங்கோர் தடாகத்தில் தாமரை நாளத்துள் மறைந்துறைகிறான். தேவர்கள் தம் வேந்தனைக் காணமல் அல்லற்படுதல் கண்டு வியாழன் தன் ஞானத்தால் இந்திரனுக்கு உற்றதுணர்ந்து அவன் இருப்பிடம் சென்றழைத்து இடித்துரை கூறிச் சிவபுரம் சென்று வழிபட்டுய்க என வழி கூறுகிறான். இந்திரன் திருப்பெருந்துறை வந்து இறைவனை வழிபட்டுத்தவமியற்ற அதற்குவந்து இறைவன் தோன்றி முனிவன் சாபத்தை நீக்க முடியாது; எனினும் உன் மேனியில் உள்ள பெண் குறிகள் யாவும் கண்ணைக் காட்சியளிக்குமாறு செய்வேன் இனி உன்பதி சென்று நன்முறையில் ஆள்க என இறைவன் அருள்புரிகிறான். இதனுள் அகலிகையின் தோற்றப் பொலிவும் இந்திரனுடைய விரக தாபமும் விரித்துக் கூறப்படுகின்றன.

30. பராச தீர்த்தச் சுருக்கம்:

ஞான யோகங்களாற் சிறந்ததொரு மகன் பிறக்க வேண்டு மென்று கருதிக் குருந்தீசரை வழிபட்டுப் பராசர முனிவர் ஒரு தீர்த்தத் தடமுண்டாக்குகிறார். இறைவன் குரு வடிவாய் வந்து காட்சிகொடுத்து வியாச முனிவனை மகவாக அருள் செய்கிறான். பராசரன் யமுனைக் கரையில் மச்சகந்தியைக் கண்டு அவளைப் பரிமளகந்தியாக்கி அவள் மூலம் வியாசனைப் பெறுகிறான். வியாசன பிறந்தவுடனேயே பெற்றோரை வணங்கித் தவம் புரியக் குருந்தவனம் செல்லுகிறான். இத் தீர்த்தம் எல்லா நலங்களையும் அருளவல்லதாகும் எனக் கூறுகிறார்.

31. சூரிய, சந்திரர் தீர்த்தச் சுருக்கம்:

சூரியனும், சந்திரனும் குருந்தீசனை வழிபட்டுத் தீர்த்த முண்டாக்கித தவமியற்ற இறைவன் தோன்றி அவர்களுக்கு வேண்டிய வரங்களை நல்கி ஒவ்வொருவரையும் தன் மேனியில் ஒரு கூறாக விளங்குவீர் எனக் கூறியருளுகிறான். இத் தீர்த்தங்கள் பல சிறப்புக்களையுடைய என்றுதவுமியர் கூறுகிறார்.

32. சரசுவதி, இலக்குமி தீர்த்தச் சுருக்கம்:

அக்கினி தீர்த்தத்திற்கு வடபுறத்தில் இலக்குமி ஒரு தடமுண்டாக்கி இறைவனை வழிபட அவளைச் செல்வத்திற்குத் தலைவியாகவும் திருமால மனைவியாகவும் அருளுகிறான் இறைவன். இத தடத்தில் மூழ்கிப்பேர் எல்லாச் செல்வங்களையும் பெறுவர். அக்கினி தீர்த்தத்தின் தென்பால் ஒரு தடமுண்டாக்கிச் சரசுவதி வழிபட அவளைப் பிரமனுக்கு மனைவியாகவும் சொல்வின் தலைவி யாகவும் திகழ இறைவன் அருள்கிறான். இத்தடத்தில் மூழ்கினவர் மூகராயிருப்பினும் எல்லாக் கலைஞானங்களையும் கைவரப்பெறுவர், தீவினையகலும என்கிறார் முனிவர்.

33. பாண்டவ கௌதம தீர்த்தச் சுருக்கம்:

துரியோதனனால் நாடு கவரப்பெற்றுக் காளைகிய பாண்டவர்கள் குருந்தவனத்தில் வந்து தங்கித் தீர்த்தத் தட முண்டாக்கி வழிபட்டு இறைவனருளால் துரியனை வென்று நாடு பெற்று அரசாண்ட செய்தியைச் சுருக்கமாகக் கூறுகிறார்;

கௌதம முனிவர் அகலியையைப் பிரிந்த துன்பத்தால் வருந்தி இறைவனை வேண்டித் தவமியற்றுகிறார். இறைவன் இராமபிரான் திருவடி தீண்டப்பெற்றுக் கல்லுரு நீங்கிய அகலிகையை அளிக்கிறான். இவரால் உண்டாக்கப்பெற்ற தீர்த்தம் இது. இவ்விரு தீர்த்தங்களில் மூழ்கினோர் பாவமெலாம் நீங்கி விரும்பியதை அடைவார்கள் என்கிறது இச்சருக்கம்.

34. பத்ர தீர்த்தச் சருக்கம் :

தவ வொழுக்கங்களால் நிறைந்த முனிவர்கள் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களோடு இறைவனைத் தரிசிக்க வீரூப்பங் கொண்டு குருந்தவனம் அடைந்து வணங்கித் திருநடனக் காட்சி வேண்டித் தீர்த்தத் தடமுண்டாக்கித் துதித்துத் தவமியற்றுகின்றார்கள். இறைவன் காட்சிதரக்கண்டு பேரானந்தமுற்று ஆடிப்பாடி மகிழ்கின்றனர். (இவர்களின் துதிப்பாடல்கள் சிறப்புடையன) திருநடனக் காட்சி வேண்டிய முனிவர்களிடம் இத்தடத்தில் திருநடனக் காட்சி கூடாது சிதம்பரத்திற்கு வந்து காணுக என இறைவன் அருள அவ்வாறே யாவரும் தில்லைவனம் சென்று கூடத் தேவர்களும் அக்காட்சியைக் காணத் திரளுகின்றனர். இறைவன் ஆனந்தத் தாண்டவம் புரிகிறான். யாவரும் பரவசமுறுகின்றனர். பின்னர் இறைவன் திருக்குருந்தில் சென்று சேர்கிறான். இத்தீர்த்தத்தில் மூழ்கினோர் எண்ணற்ற பேறுகளடைவர் என்கிறார் முனிவர். இச் சருக்கத்தில் துதிப் பாடல்களும், நடனக் காட்சியின் வருணனையும் சுவைமிக்கன.

35. தலவிசேடச் சருக்கம் :

அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் தத்துவம் ஒன்றே எனச் சுட்டி இத்தலமே யாவற்றுக்கும் மூலமென்றும் இதனுள் மூலாதார முதல் ஆக்கினையிறுக உள்ள ஆறுதாரங்களையும் அவற்றிற் குரிய தேவர்களையும் அவற்றின் உறைப்பையும் அக்கரங்களையும் விளக்கி ஊர்த்த மூலம் மத்திம மூலம் அதோ மூலம் என்னும் மூலதத்துவங்களைப் புலப்படுத்தி இறைவனின் வியக்த அவ்வியக்த குணங்களிவை என்றும் விரிவாகக் கூறுகிறது இச்சருக்கம்.

36. இரகசியச் சருக்கம் :

இத்தலமான்மியத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் சவுனகாதி முனிவர்கள் சூதரிடம் இத்தலம் தத்துவகாரியமானதெனில்

வாதவூரடிகள் வந்து பூசனை முதலாய புரிந்து வழிப்பட்டேத்தினர் என்பது எவ்வாறு பொருந்துமென வினவி, ஆதிசற்பத்தில் பிரமன் வழிபாடியற்ற ஆத்மநாயகர் குருந்தவடிவாகி நின்ற காலமுதல் அவ்வாறே இருக்க தேவர்களும் முனிவர்களும் வழிபட்டுப் பேறுபெற்றனர். திருவாதவூருக்கு இறைவன் குருவடிவாய்த் தோன்றி ஆலயம் எழுப்பி வழிபடக் கட்டளையிட்டான், திருவாதவூர் இறைவன் படிவத்தை எவ்வாறு அமைப்பதெனக் குருந்தவன முனிவர்களைக்கேட்க அவர்கள் சக்தி பிம்பத்தையே பிரதிட்டை செய்யுமாறு கூற அவ்வாறே செய்து பின் சிதம்பரமடைந்தார் எனச் சூத முனிவர் கூறினர். இதனுள் பிரமத்தைப் பிரதிட்டை செய்யக்கூடாது சத்தியே பிரமத்தை வெளிப்படுத்தும் என்னும் தத்துவம் விளக்கப்படுகிறது

37. யோகபீடச் சருக்கம்:

சிற்சத்தியே ஐந்தொழிலும் இயற்றும்; அச்சத்தியை ஈண்டு யோகாம்பிகையாக உருவவழக் கொன்றுமின்றி யோகபீடமாய் விளங்குகின்றதென்றும் பிரமன் யோகபீடத்தின் கண் பதுமராகச் சோதிவிரியும் பாதுகையைப் பிரதிட்டை செய்தான் சதாசிவமும் நாரணனுமாமென்று வேதங் கூறுவதன் நுணுக்கம் திருமால் சத்தியின் கூறேயாதலின் என்றும் அதனிற்றான் திருவடிக்குப் பாதபூசையே மிக ஏற்றமென்று கூறுவார்கள் என்றும், இப் பாதுகையை அபிடேகித்த தீர்த்தம் இருவினைகளையும் மாற்றி முத்தி தரவல்லதென்றும் கூறிப் பொன்னம்பலமாகிய சிதம்பரத்தின் பெருமையையும் தத்துவத்தையும் விளக்கித் திருவாதவூரும் பெருந்துறைச்சிவனும் உள்ள தொடர்பையும் இதன் கிரமமாக கூறுகிறார் முனிவர். மேலும் இராமன் பதினொன்றாண்டுகள் காட்டில் வதிந்தும் குருந்தவனம் வாராமைக்குக் காரணம் யாதென முனிவர்கள் கேட்க இராமபிரான் சிவபெருமானின் கூறேயாதலின் இருவருக்கும் பேதமில்லை எனச் சூதர் மொழிந்து இம்மூன்று சருக்கங்களையும் சிந்தித்தோர் கேட்போர் எய்தும் பயன்களையும் கூறுகிறார்.

38. பத்தர் மகிமைச் சருக்கம்:

கிரேதாயுகத்தில் காடெறும் பிரமன் வந்து அருச்சனை புரிதல் ஒவ்வாதென்று கருதி இறைவனை வேண்டி யாகஞ் செய்து அவ் வேமகுண்டத்தில் சூட்சாயணரை உண்டாக்கி அவருக்கு

அக்கினிவேசர் எனப் பெயரிட்டு வேதாகமங்களைக் கற்பித்துப் பெருந்துறையீசற்குப் பூசனை வழிபாடியற்றிவரக் கட்டளையிடுகிறான். சூட்சாயணர் இறைவனைப் போற்றித் துதிக்கின்றார். இத்துதியில் இறைவன் அண்ணாமலையாக விளங்கியதையும், திரிபுரமெரித்த வீரத்தையும், ஆலமுண்டருளிய கருணையினையும், சண்டேசருக்கு அருளிய சிறப்பையும், மார்க்கண்டேயருக்கு அருளிய மாண்பையும் சிறுத்தொண்டருக்கருளிய சீர்த்தியையும், சந்திரனுக்கு அருளிய சால்பையும் ஒவ்வொரு பாடலால் விளக்கும் நயம் மகிழத்தக்கது. இறைவன் திருநடத்தையும் பரத்துவத்தையும் போற்றிச் சிவயோக நாயகியையும் போற்றி முறைப்படி பூசனை வழிபாடு செய்துவருகிறார் சூட்சாயணர். பின் பொருகால் பிரமன் வந்து சூட்சாயணருக்குத் துணையாக உருத்திராக்ஷ தீக்ஷை செய்து அத்திரி முதலான பதினெருவரைத் தோற்றுவிக்கிறான். அவர்களுக்குக் காயத்திரி முதலாயவற்றை உபதேசிக்கிறான். சூட்சாயணர் ஆக்கினேய வேகியமெனும் இரண்டு உபவேதங்களைச் செய்துகொடுக்கிறார். கலியுகம் தோன்றியதும் அவர்களை இல்லறமேற்குமாறு வற்புறுத்திப் பிரமன் யாவருக்கும் மனம் செய்துவைக்கிறான். சூட்சாயணர் கலாவதி இருவருக்கும் இரு மைந்தர்கள் தோன்றுகின்றனர். இவர்கள் பரம்பரை காலந்தோறும் பெருகிவர யாவரும் இறைவன் பூசனையை முறையாகச் செய்துவருங்காலத்தில் புலினர் குல மன்னன் ஒருவன் கொடுங்கோலனாய் இவர்களுரைத்தீங்கு செய்ய இவ்வந்தணர்களுள் சிலர் வடநாடுபோகித் தங்கினர். சிலர் இடைப்பொறுத்துக் கொண்டிருந்து இறை பணிபுரிந்து வருவாராயினர் என்று இந்தப் பத்தர்களில் வரலாற்றைக் கூறுகிறது இச்சருக்கம். திருப்பெருந்துறை இறைவனுக்கு அபிஷேகோதகம் கைலாசத்தியமாகப் படைக்கப்படுதலின் காரணத்தை இச்சருக்கத்தில் காணலாம்.

39. யுகம் நான்கிலும் பூசிப்போர் மரபும், நாமத்திரைய மகிமையும் கூறிய சருக்கம்.

இச்சருக்கம் சன்னவனமாகிய திருப்பெருந்துறை கிரேதா யுகத்தில் பொன் மயமாகவும் தருக்கள் நவமணிமயமாகவும் விளங்கும். தேவர்களும் இருடிகளும் அந்தணர்களும் பூசனை புரிவதற்குரியவராவர். திரேதாயுகத்தில் இவ்வனம் வெள்ளிமயமாகவும் தருக்கள் பொன் வெள்ளி மணிமயமாகவும் திகழும். தேவர்கள் மறைந்திருந்து அருச்சனை புரிவார்கள். மன்னர்கள்

பூசிப்பார்கள். துவாபரா யுகத்தில் மலர் நிரைந்த நிலமாகவும் தருக்கள் சோலைகளாகவும் விளங்கும். தேவர்கள் மறைந்து வந்து அருச்சிப்பார்கள். மேல் மூவருணத்தாரும் பூசிக்கலாம். கலியுகத்தில் மண்வடிவாக விளங்கும். யாவரும் பூசித்தற்குரியார் எனினும் கலியுகத்தில் மார்கழி யுதயகாலமும் பூரணாகாலமும் பிரதோட காலங்களும் சிறப்புடையவாம் என்றுகூறி மதுரையில் சித்திரைத் திங்களும், வாணிநதியில் வைகாசியும், குருக்ஷேத்திரத்தில் ஆனியும், சேதுகண்டியிவற்றில் ஆவணியும், கோதாவிரி நருமதையில் புரட்டாசியும், காவிரியில் ஐப்பசியும், யமுனையில் கார்த்திகையும், சிதம்பரத்தில் மார்கழியும், கங்கையில் கையும், பிரயாகையில் மாசியும், பற்குணநதியில் பங்குனியும் சிறப்பாக வழிபடுதற்குரியவாகும் என்றும், சிவபுரத்திற்கு மார்கழி மாதம் மிகச் சிறப்புடையதென்றும், சோமவாரம் கூடின் மிகமிகச் சிறப்பென்றும், உதயகாலம், ஆதிரைநாள் இவ்வாறே சிறப்புடையவை என்றும் கூறி இத்தலத்திற் செய்யும் அறம் ஒன்று ஒரு கோடியாகப் பலன்தரும் என்றும் இத்தலத்தில் மஞ்சரி என்பவள் வழிபட்டுப் பேறடைந்தாள் என்றும் விளக்குகிறது.

40. மஞ்சரிச் சருக்கம்:

ஆதித்தபுரமென்னும் வளஞ்சான்றதொரு நகரத்தில் வேத வேள்வி முதலியவற்றை முறையாக ஓதி ஒழுகிவரும் அந்தணர் மரபில் தோன்றி ஒழுக்க சீலனாய் வாழ்ந்த எல்லையாசி என்னும் பார்பனனுடைய மனைவி அருந்ததியே என மங்கையர் போற்றும் மாண்புடையாள் விசாலாட்சி என்பவள். இவ் இருவரும் மகப்பேறு வாய்க்கப்பெறுமையின் எல்லையாசி கடுந்தவம் புரிந்து சுவர்க்கம் எய்தினன். விசாலாட்சி பெருந்துன்புற்று வருந்திக் கைம்மை பூண்டு இறைவன் பணி புரிந்து கடும் விரதம் பூண்டு வாழ்ந்தாள். குருந்தீசரையும் சிவயோக நாயகியையும் திருவாதிரை தோறும் சிவபுரம் சென்று வழிபட்டு வந்தாள். அவ் வூரில் வாழ்ந்த நந்திவர்மன் என்பான் மனைவி மஞ்சரி என்பாள் காமவேட்கையால் தீநெறியொழுகத் தலைப்பட, கணவன் பிரிந்தான். மேலும் அவள் பொருந்தா ஒழுக்கத்தால் தொழு நோயுற்றுத் துன்புறுவாளானாள். நல்வினைப்பயனால் ஒருநாள் விசாலாட்சியைக்கண்டு தன்குறைகூறி வருந்த அவள் குருந்தீசரின்

பெருமையையும் அத்தலச் சிறப்பையும் கூறித் திருநீறளித்துக் குருந்தின் மிருத்தியை கொடுத்துண்ணச் செய்து இறைவன் திருநாமத்தைச் செபிக்குமாறு கூறினள்.

மஞ்சரி அவ்வாறே ஒழுகினள். இறுதி வந்த காலை எம தூதர்கள் வந்து அவளைத் துன்புறுத்திப் பற்றி இழுத்துக் கொண்டு செல்ல முற்பட்டபோது சிவகணங்கள் தோன்றி எமபடர்களை அஞ்சியோடும்படித் தாக்கிச் சிவபுரத்திற்கு அழைத்துச் சென்றனர். யமதூதர்கள் யமனிடம் முறையிட இயமன் சிவபெருமானிடத்தில் சென்று முறையிடுவோமென்று புறப்படும்போது கருணைக்கள் வந்து மஞ்சரியின் வரலாற்றைக் கூறி அந்திம காலத்தில் அவள் மேற்கொண்ட சிவபுண்ணியத்தை விளக்கினர். உண்மையறிந்த காலன் சிவனடியார்க்குத் தீங்கு செய்ததை எண்ணி அஞ்சி இறைவனிடம் பொறுத்தருளும்படி வேண்டிக்கொண்டு தன் படைகளை நிறுத்தி குருந்தவனத்தில் உள்ள எந்த உயிர்களிடமும் அணுக வேண்டாமெனக் கட்டளையிடுகிறான். ஆங்குள்ள சிறு மணலும் சிவலிங்கமாம் எனச் செப்புகிறான். இச்சருக்கத்தில் யாவுடைய படைகளும் நந்தி கணத்தவரும் செய்யும் போர் வருணிக்கப்பெறுகிறது. பெருந்துறையின் மகிமை விளக்கப்படுகிறது.

41. கேத்திர மகிமைச் சருக்கம்:

இக் கேத்திரத்தை கண்டோரும் வழிபட்டோரும் எய்தும் சிறப்பிற் குளவில்லை. இதற்கு ஒரு சுரோச எல்லைக்குள் மரித்த உயிர்கள் இறைவனைடைக்கியமாகும். இங்குச் சேர்ந்த எலும்பும் சிவலிங்கமாகும் எனப் புரூரவாவுக்குத் தமியர் கூறி, ஓர் அந்தணன் பாண்டியனிடம் துலாபார தானம் பெற்று வந்தவன் அதற்குரிய பரிகாரங்களை இயற்றுமையின் புலியாற் கொல்லப்பட்டு இறந்து பிரமராட்சதனாகமாறித் துன்புற்றான். அவன் மைந்தன் மாடகன் என்பான் வேள்வி முதலிய செய்தும் தன் தந்தையின் துயரம் மாறுமையின் அவன் எலும்பைக் கங்கையிலிட்டால் உய்வுறும் எனக் கருதி எடுத்துச் சென்றான். வழியில் வெள்ளாற்றில் நீராடுவதற்காக அவ் எலும்பைக் கரையில் வைத்துவிட்டு நீராடி வந்து காணும்போது அது சிவலிங்க வடிவமாக இருந்தமைக் கண்டு வியப்புற்று நிற்கும்போது தந்தை பிரமராட்சத வடிவு நீங்கித் தேவ விமானத்தில் செல்வது கண்டு

விம்மிதமுற்றான். விமானத்திற் செல்லும் தந்தை இத்தல மகிமை இதுவென்று கூறி மகனை வாழ்த்திச் சென்றான் என்னும் வரலாற்றையும் விளக்குகிறார் இச்சருக்கத்தில்.

42. வெள்ளாற்றுச் சருக்கம் :

புரூரவன் வெள்ளாற்று மகிமையை வினவுகிறான். செங்கோன்மையும் சிவநெறியும் வழாக சுவேதகேது என்னும் பாண்டியன் நாட்டு வளங்காணப் புறப்பட்டுச் சுற்றி வரும்போது சோழ நாட்டுப் பொன்னி நதியைப்போல் பாண்டி நாட்டில் நதி வளமில்லாக் குறையை எண்ணி அதனைப் பெறுத் தன் நாட்டுக் காவலை அமைச்சனிடம் ஒப்புவித்துத் தான் இமயம் சென்று கடுந் தவம் புரிகிறான். பிரமன் வெளிப்பட்டுப் பாண்டியன் விருப்பத்தை யுணர்ந்து ஒரு கடத்தினின்றும் தெய்வ நதி யொன்றைப் பெண்ணுருவில் வரவழைத்து அதற்குச் சுவேத நதி எனப் பெயரிட்டுப் பாண்டி நாட்டை வளப்படுத்துக என ஏவுகிறான். பாண்டியன் அந் நதிமகளைச் சைய மலையில் வைத்துத் தவமியற்றுகிறான். பிரமன் தோன்றி அதனைப் பொன்னி நதியோடிணைத்து எல்லாச் சிறப்பையும் அளித்து இரு கூறுகப் பிரிந்து ஒரு கூறு சிவபுரத்தினைச் சூழ்ந்தும் மற்றொரு கூறு சித்தாபரத்தினைச் சூழ்ந்தும் வளம் செய்யுமாறு பணிக்கிறான். அந்நதி அவ்வாறே பெருகி வெள்ளாறு என்னும் தமிழ் நாமத்தோடு பல வளங்களையும் புரிந்தருள்கிறது என்றும் இந் நதிக்கரையில் சிவவிங்கப் பிரதிட்டை செய்வோரும் தவமியற்றுவோரும் சில்லை முதலிய தருக்களை வைத்து வளர்ப் போரும் எய்துப் பேறு இவை என்றும் தவமியர் கூறுவதாக அமைந்துளது இச் சருக்கம்.

43. புரூரவச் சருக்கம் :

யாக்கியவல்கியர் சனகனுக்குக் கூறிய இவ் வரலாறுகளைத் தவமியர் புரூரவாவுக்குக் கூறியதாகச் சூதமுனிவர் விளக்கி வருபவர். மேலும் தொடர்ந்து புரூரவன் தவமியரை ஆரியணையில் வைத்துப் போற்றித் துதித்து வழிபாடு செய்ய அவர் மகிழ்ந் தருளித் தன் ஆசிரமம் சென்றடைகிறார். பின்னர்ப் புரூரவன் சிவபுரம் சென்று வழிபடப் பேரவாவுற்றுத் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டுக் கங்கை முதலிய புண்ணிய நதிகளாடித் தலங்களை

வழிபட்டுச் சிவபுரம் வந்தடைகிறான். அக்கினி தீர்த்தத்தில் மூழ்கிக் குருந்தீசரையும் யோகாம்பிகையையும் வழிபட்டுப் பரவசமடைந்து போற்றித் துதித்து ரோமச முனிவரைக் குருந்தீசரின் மகிமையைக் கூற வேண்டி அவர் விளக்கக் கேட்டுப் பேரானந்தமுறுகிறான். பின்னர் ரோமசர் இத் தல அந்தணர்களின் வரலாற்றையும் வேடர் தலைவன் கொடுமைக்கஞ்சிச் சிலர் வடநாடு சென்றமையும் கூறக் கேட்டு வருந்தி உத்தர வேதியிலிருக்கும் அவர்களை அழைத்துவரத் தன் பரிவாரங்களை அனுப்பி அழைத்துவரச் செய்து யாவருக்கும் நிலம் முதலிய மான்யங்கள் அளித்து வணங்கிப் போற்றுகிறான். அந்தணர்கள் மகிழ்ந்து வாழ்த்துகிறார்கள் பின் மார்கழித் திருவாதிரையளவும் அங்குத் தங்கியிருந்து ஆன்மநாதரை வழிபட்டுப் பின் திருப்புனவாயில், சேது, ஆலவாய் முதலிய தலங்களை வழிப்பட்டுத் தன் நகரடைந்தான் என்கிறார். இச் சருக்கத்தில் புரூரவனைத் திங்கள் மரபில் வந்த இளன் என்று குறிப்பிடுகிறார் முனிவர்.

44. இளன் சருக்கம்:

முனிவர்கள் புரூரவனை இளன் என்று சுட்டிய காரணத்தையும் வரலாற்றையும் சூத முனிவரிடம் வினவ அவர், கிரேதாயுகத்தில் கந்தமன் என்னும் பேரரசன் மகனாக இளன் தோன்றிச் சிறப்பாக இந்நாட்டையாண்டனன்; ஒருகால் அவன் பரிவாரங்களோடு வனவேட்டையாடச் சென்று ஒரு மானைத் துரத்திக்கொண்டு அடர்ந்த காட்டுக்குள் நுழைந்தான். அக் காட்டுக்குள் இறைவன் உமையோடு தனித்திருந்து விளையாடுகின்றனர். யாரேனும் இக்கானில் நுழையின் அவர் பெண்ணுருவாவர் என இறைவன் விதித்திருந்ததறியாமற் புகுந்த இளனும் அவன் சேனைகளும் பெண்ணுருவெய்தினார்கள். தன்னிலை கண்டு வருந்திய இளன் ஆண்டு உமையம்மையைக் கண்டு அடிபணிந்து வேண்ட, உமையவள் ஒரு பாதிவரம் கொடுக்க இறைவனிடம் வேண்ட இறைவன் ஒரு திங்கள் ஆணுருவும், ஒரு திங்கள் பெண்ணுருவுமாகச் சில காலம் இருந்து பின் முன்னிலையடைவாய் என அருளுகிறான். இவ்வாறு பெண்ணுருவில் இளன் இருந்தபோது வியாழன் மகவியுடன் விதிவசத்தாற் கூடிய சந்திரனுக்குப் பிறந்த புதன் சிவபுரத்திற்சென்று வழிபட்டுக் கிரகபதம் பெற்றுச் சிவபெருமான் அருள்பெற அங்குத் தவப்புரிந்து வருபவன் கண்டு காதல்கொள்ள இருவரும் கூடி மகிழ்கின்றனர். மறு திங்களில் ஆண் வடிவமுற்ற

இளன் ஒன்றும் புரியாதவனாய்ப் புதுமை வினவ அவன் நிகழ்ந்த வற்றைக் கூறித் தன்னோடு தவம் புரியப் பணிக்கிறான். இவ்வாறு உறைந்து பத்தாம் திங்களில் ஒரு ஆண் மகவை ஈன்று வளர்க்கிறான். துருவாச முனிவரிடம் இளனுடைய சாப நீக்கத்துக்கு வழிகேட்கின்றனர். அவர் அசுவமேதயாகஞ் செய்யச் சொல்ல அவ்வாறே செய்து இறைவனை வழிபட, இறைவன் இளனுடைய சாபத்தை நீக்கி அவன் மைந்தனுக்குப் புரூரவன் எனப் பெயரிட்டு நல்வரங்களை அருளுகிறான். பின் இளன் புரூரவனுக்கு அரசளித்துத் தான் தவமியற்றி மேலுலகடைந்தான் என இச்சருக்கத்தில் விளக்குகிறார்.

45. அகத்தியச் சருக்கம்.

இறைவன் திருமணத்தின்போது நிலத்தைச் சமப்படுத்தத் தென்னாடு நோக்கி வந்த அகத்தியர் வரும் வழியில் விந்தமலையின் செருக்கினையடக்கி விண்டக அடவியில் வந்து தவம் புரிகிறார். பிரமன் தோன்றி நால்வகை ஆசிரமத்துள் இல்லறமே சிறந்த தெனக்கூறி உலோபா முத்திரையை மணந்து கொள்ள அருள் கிறான். அவ்வாறே அகத்தியர் உலோபா முத்திரையை மணந்து பல தலங்களையும் வழிபட்டு இறுதியில் நந்தவனம் வந்தடைகிறார். வெள்ளாற்றில் நீராடி இறைவனையும் யோகாம்பிகையையும் போற்றித் துதிக்கிறார். அத்தல அந்தணர்கள் வரலாற்றையும் இளன் அளித்த நிலத்தைப் பாண்டியன் அமைச்சன் கவர்ந்து கொண்டு துன்புறுத்துகிற நிலையையும் கேட்டு வருந்தற்க இறை வனே வந்து வழக்கிட்டு உமது துன்பத்தைப் போக்குவான் என்று கூறி ஓலைச்சாசனம் ஒன்றளித்துதவுகிறார். பின் தன் பெயரால் ஒரு தடாகம் அமைத்தருளி முனிவர்களிடம் விடை பெற்று மதுரை செல்லுகிறார் என்பது இச்சருக்க வரலாறு.

46. வழக்குரைத்த சருக்கம்.

மதுரைப்பாண்டியன் இளஞ்ஞெயிருந்த காலை உடன் துணை யாக இருந்த கவுமாரன் என்னும் அமைச்சன் பொருளாசையால் திருப்பெருந்துறை அந்தணர்களுடைய வீடு நிலங்களைத் தன் முன்னோருடையவை என்று கூறிக் கல்லமைத்துக் கவர்ந்து கொண்டான். அரசனுக்கு உண்மை தெரியாமலிருந்தது. கவு மாரனுக்கஞ்சி வேதியர்கள் பொன்னி நாடேகி வாழ்கின்றனர்.

இறையவன் கிழவேதியராக உருத்தாங்கி அவ்வந்தணர்களிடம் வந்து உம்முடைய நிலங்களை பாண்டியனிடம் வழக்காடி மீட்டுத் தருகிறேன் எனக்கும் ஒரு பங்கு தருதல் வேண்டுமென்று கூறி யழைக்க முதற்கண் அவர்கள் ஐயுற்றுப்பின் தேறிப் பின்தொடர் கின்றனர். கிழ வேதியராகிய இறைவன் பாண்டியன் அரண்மனை வாயிலில் சென்று அபயக்குரல் எழுப்பி அரசனிடம் செல்ல அவன் இவர் தோற்றப் பொலிவுகண்டு வியப்புமிதமுற்று வழக்கை உசாவ, கிழவேதியர் சாசன ஓலை முதலியவற்றைக் காட்டுகிறார். அரசன் கவுமாரனை அழைத்து உசாவ அவனும் கல் முதலிய சான்றுகளைக் கூற அவையோர் அனுபவச்சான்று கேட்கின்றனர். சிவவேதியர் உடனே சிவபுரத்தின் எல்லையில் அறுபது பாகத் தளவு செவ்விய மண் கீழ்ந்தெடுக்கின் செழும்புனல் உண்டாகு மென்று கூறி அவ்வாறே காட்டி நிலங்களைப்பெற்று வேதியர் களுக்கு அளிக்கிறார். இச்சருக்கத்தில்தான் திருப்பெருந்துறை என்னும் பெயர்க்காரணம் விளங்குகிறது. மேலும் இச்சருக் கத்தில் இறைவன் சிவ வேதியராக எழுந்தருளும் காட்சியும் உருவ வருணனையும், வழக்காடும் முறையும் அரசனிடம் திருப் பெருந்துறைச் சிறப்பெடுத்தியம்பும் முறையும் சுவையாக அமைந் துள்ளன.

47. ஒதுவித்த சருக்கம்.

சிவபுரத்து வேதியர்கள் முந்நூற்றுவரும் வழக்காடி வென்று தம் நிலபுலன்களை மீட்டுத்தந்த சிவவேதியரைப் போற்றிப் பணிந்து முந்நூற்றின்மேல் ஒரு பங்கைப்பெருக்கி அவருக்களிக்க முன் வருகின்றனர். யான துறவியாதலின் வேண்டா என மறுத்து எல்லோரையும் சுற்றமாக ஏற்றுக்கொண்டு அவ்வந்தணர் களின் மக்களுக்கு வேதாகமங்களையும் மந்திரங்களையும் கற்பிக்கத் தொடங்கிப் பலகலைகளையும் கற்பித்துச் சரியையாதிகளைப் பயின் றருளிப் பின்னர் குருந்தடைச் சென்று மறைகிறார். அந்தணர்கள் யாவரும் கண்டு மகிழ்ந்து வியந்து குருந்தீசரே நம் துயர்துடைக்க வந்தருளினர் என்னும் உண்மையுணர்ந்து போற்றித் துதிக்கின்றனர்.

48. மாணிக்கவாசக சுவாமிகள் திருவவதாரச் சருக்கம்.

பாண்டி நாட்டின் தென்பால் வாதவூரில் வாழ்ந்த ஆமாத்தியர் குலத்துதித்த தவ ஒழுக்கஞ்சான்ற ஓர் அந்தணரும் அவர் தம்

மனிவியாரும் புரிந்த நோன்பால் மெய்ஞ்ஞானக் கொண்டலார்க் அவதாரம் செய்கிறார் வாதவூரர். பிள்ளைப் பருவ விளையாடல் களால் பெற்றோரையும் மற்றோரையும் மகிழ்வித்து உபநயன முதலிய குல முறைகளை ஏற்றுக் கல்விகேளில் சிறந்து மெய்ஞ் ஞான வேட்கையுடையராய்ச் சான்றோர்கள் மகிழ்ந்தேத்தத் திகழ் கிறார். இவருடைய பண்பு நலன் கல்வி ஞானம் தவ ஒழுக்கம் முதலியவற்றை அறிஞர்களால் அறிந்த பாண்டிய மன்னன் தன் அவைக்களைத்து எல்லாச் சிறப்புக்களையும் செய்து முதலமைச்ச ராக இருந்து துணைபுரிய வேண்டுகிறான். அவ்வாறே அமர்ந்து இறைவன் திருப்பணி நாட்டு நலம் முதலியவற்றைப் பேணிச் செயலாற்றி வருகிறார். அரசன் இவருக்குத் தென்னவன் பிரம ராயன் என்னும் பட்டமளித்து அரசச் சின்னங்கள் அளித்துப் போற்றுகிறான். அக்காலை கீழைக்கடற்கரையில் அயல்நாட்டுப் பரிகள் வந்தறங்கியுள்ளமையை வணிகர்களால் அறிந்து வாத வூரரையழைத்து அரசுக்கு வேண்டிய பரிகளை வாங்கி வந்தருளுமாறு வேண்டுகிறான்—வாதவூரர் தன் பரிவாரங்களோடு வேண்டிய பொன்னும் பொருளும் எடுத்துக்கொண்டு செல்லுகிறார். திருப்பெருந்துறை எல்லை சென்றவுடன் சிவிகையினின்றும் இறங்கிக் கூப்பியகையினராய்ச் சென்று ஒரு சிறந்த மண்ட பத்தில் பொற்குவைகளோடும் உற்ற பணியாளர்களோடும் தங்கு கிறார். இச்சருக்கத்தில், பாண்டிநாட்டு வளமும் வாதவூர் சிறப்பும் ஆமாத்தியர் குலப்பெருமையும் நன்கு வருணிக்கப்படு கினறன. வாதவூரரின் பிள்ளைப்பருவம் பிள்ளைத்தமிழ் இலக்கிய முறைப்படி சுருக்கமாக வருணிக்கப்படுகிறது. அரசன் இவரை வரவேற்றுப் போற்றும் பகுதிகள் நயமுடையவை. வாதவூரர் குதிரைகள் வாங்கச் செல்லும் காட்சியும் உடன் செல்லும் படை களின் சிறப்பும் பல்வேறு வாச்சியங்களின் முழக்கங்களும் காப்பிய நெறிப்படி வருணிக்கப்படுகின்றன. வாதவூரரின் பக்தி யுள்ளதை இடையிடையே புலப்படுத்தும் ஆசிரியரின் திறம் போற்றத்தக்கது.

49. உபதேசச் சருக்கம்:

அமைச்சராக வந்து எழுந்தருளியிருக்கும் வாதவூரரைச் சிவபுரத்து வேதியர்கள் வந்து கண்டுகொள்ளுகின்றனர். வாதவூரர் இறைவன் பூசனை முதல் யாவும் செம்மையாக நிகழ் கின்றனவா என வினவிக் குருந்தீசரின் மகிமையைக் கூறியருள

வேண்டுகிறார். அவர்கள் குருந்திறைவன் வரலாற்றையும் தீர்த்தங்களின் பெருமையையும் அந்தணர்களின் வரலாற்றையும் கூறக்கேட்டுப் பேரானந்தமுறுகிறார். மறுநாள் வைகறையில் எழுந்து தன் பரிவாரங்களோடு இறைவனை வழிபடச் செல்பவர் திருப்பெருந்துறையில் உள்ள ஒவ்வொரு பொருளும் இறை வடிவாய்த் திகழக்கண்டு மகிழ்கிறார். ஆங்கே ஓர் குருந்த மரத்தின் கீழ் மாணிக்கர்கள் பணிபுரிய இறைவன் தக்கணமூர்த்தியாக வீற்றிருக்கும் தோற்றத்தைக் கண்டு மெய்ச்சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் வழிய தலையின்மேற் கூப்பிய கையராய்ச் சென்று வணங்கித் தன்னை ஆட்கொள்ள வேண்டுகிறார். குருநாதன் கண்ணால் நோக்கி அவ்வாறே செய்வேன் எனத் திருவாய் மலர்ந்தருளி அருகிருத்தி தீக்கை தந்து எம்மைப் பூசித்து ஈண்டுறைக எனப் பணிக்கிறான். வாதவூரர் எல்லையற்ற களிப்பு மீதூரக் குருந்தமூலத்தைப் பன்முறையால் அணிசெய்து வழிபடுகிறார். பின்னர் இறைவன் கண்ணாலும், பரிசத்தாலும், வாக்காலும், அருளுபதேசம் செய்து சிவகணராக ஆக்கி அபிடேக தீக்கையளித்து ஆட்கொள்ளுகிறான். பின்னர்த் தத்துவ உருவ மளித்து எத்திசையுயிர்க்கும் அருட்குருவாயிருந்து அருள்புரிக, நான்ற நம்பதத்தை விதிவழி பூசை செய்க எனக் கட்டளை யிடுகிறான். அவ்வாறே வாதவூரர் புரிந்துவர இறைவன் வாதவூரருக்கு ஞானபோதக ஏடளித்துச் சாத்திர தீக்கையும் செய்து பதிபசு பாசப்பொருள்களை விளக்கிச் சாயுச்சியமுத்தி பெறும் நிலையை அறிவித்துத் தாசமார்க்க முதலிய நால்வகை மார்க்கத்தையும் புலப்படுத்தியருளுகிறான். வாதவூரர் பேரானந்த முற்று இனிய மொழிகளால் இறைவனைப் போற்றித் துதிக்க அம்மொழிகள் யாவும் மாணிக்கமபோல் ஒளிர்தல் வேண்டி மகிழ்ந்த இறைவன் மாணிக்கவாசகம் இவை எனப் பாராட்டி யருளுகிறான். மாணிக்கவாசகரை, இத் திருப்பெருந்துறையில் ஆலயமமைத்துப் பணிபுரியக் கூறி மறைகிறான். இறைவன் மறைந்தமைக்கு ஆற்றதவராய்ப் புலம்பிதைகிறார் வாதவூரர். இவர் கலக்கங்கண்ட அவ்வூர் வாழ் மறையவர் இறைவன் குருவடிவாய்க் குருந்தத்தில் உறைகின்ற மாண்பை விளக்கியும் தேறுதலராய் இனி யாதுசெய்வேன் என அலமறுகிறார். அவ்வந்தணர்கள் இறைவனுக்கு ஆலயம் எழுப்பும் முறையைக் கூற அவ்வண்ணம் தக்கவர்களை அழைத்து ஆலயத் திருப்பணிபுரியத் தொடங்கி முறைப்படி ஆலயத்தை எழுப்பி இறைவனைப் பிரதிட்டைசெய்து

அந்தணர் முந்நூற்றுவருக்கும் மனை முதலியவை அமைத்துக் கொடுத்து மிக எளிய கோலத்தோடிறைபணி புரிந்துவருகிறார். பரிகள் வாங்க உடன் வந்த பரிவாரங்கள் வாதவூரர் செயல்களைக் கண்டு அஞ்சி வினவுகின்றனர். அதற்கவர் வாளாவிருத்தல் கண்டு சில அமைச்சர்கள் அரசனிடம் சென்று நிகழ்ந்ததைக் கூற அரசன் வெகுண்டு வாதவூரரை அழைத்துவரப் பணிக்கிறான். தூதர்கள் வாதவூரரிடம் சென்றழைக்க அவர் இறைவனிடம் சென்று வேண்டிநிற்க இறைவன் குருவடிவாய் இருந்து வாதவூரரை "நீ அமைச்சர் கோலத்துடன் மதுரை சென்று மன்னனிடம் ஆவணி மூலத்தன்று குதிரைகள் வருமென்று கூறி இம்மணியைக்கொடு" என்று பணிக்கிறான். வாதவூரர் அவ்வாறே கூடல்மாநகர் வந்து அரசனிடத்து மொழிய அவனும் மகிழ்வுறுகின்றான். வாதவூரர் ஆலவாயண்ணலைச் சென்று வழிபட்டுக் குதிரைகள் வரும் நாளை எதிர்நோக்கியிருக்கிறார். சுற்றத்தார் ஐயுற்று வாதவூரரை வினவுகின்றனர். அவர் வாளாவிருக்கிறார். இப்புராணத்துள் இதுவே பெரிய சருக்கம். இதனுள் பெருந்துறையின வளமும் வருணனையும், இறைவன் தக்கணமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் காட்சியும் மாணிக்கர் பணிபுரியும் திறனும், அவர்கள் ஆனந்தக் கூத்திட்டு மகிழ்தல் வருணனையும் வாதவூரரின் வேண்டுகோளும். வாதவூரர் குருந்த மூலத்தை அணிசெய்து மகிழும் சிறப்பும், தீக்கைகளின் வருணனை விளக்கமும் முப்பொருள் உண்மை விளக்கமும், கேவல, சகல, சுத்த நிலைகளின் விளக்கமும், நால்வகை மார்க்கங்களின் விளக்கமும், மாணிக்கவாசகரின் துதிமொழிகளும் இறைவனைக் காணுது அவர் புலம்பும் நிலையும், ஆலய அமைப்பும், பரிவாரங்களின மனநிலையும் மிகத் தெளிவாகவும் சுவையாகவும் கூறப்படுகின்றன.

50. குதிரையிட்ட சருக்கம்:

வாதவூரர் மொழிந்தவண்ணம் ஆவணிமூல நாளன்று குதிரைகளை எதிர்பார்த்திருக்கும் அரசன் குதிரைகள் வரவில்லை என ஒற்றர்களால் ஆய்ந்தறிந்து வெகுண்டு பொன்னையெல்லாம் திருப்பித்தர வற்புறுத்துகின்றனன். காவலர்கள் வாதவூரரை வருந்துகின்றனர். இறைவன் குருந்தவனத்தில் உள்ள நரிகளை எல்லாம் பரிகளாக மாற்றிப் பூதகணங்களைக் குதிரைச் சேவகர்களாக நிபமித்து வேதங்களைத் தனக்குப் பரிமாவாக்கித் தான்

சேவகர் தலைவனைய் அலங்கரித்துக்கொண்டு நரியாய பரிகள் புடைசூழ ஆலவாய் நோக்கி வருகிறான். அரசனுடைய தூதர்கள் பரிகள் வரும் சிறப்பை அரசனிடம் சென்று கூற அவன் மகிழ்ந்து வாதவூரரையழைத்துத் தன் செயலைப் பொறுத்தருளக்கூறி வேண்டும் சிறப்புக்களைச் செய்கிறான். யாவரும் பரிகள் வரும் குணதிசையை நோக்கியிருக்கின்றனர் வேதாமாவூர்ந்து முன்னே வரும் தலைவனைக்கண்டு யாவரும் இனம்புரியாத மகிழ்வும் வியப்பும் அடைகின்றனர். ஆத்மநாதரே இவர் என வாதவூரர் தெளிவடைகின்றார். பாண்டியன் இவர் ஆலவாய் அண்ணலோ என வியந்து கைகூப்பி நிற்கிறான். அருகே வந்து அரசன் முகமன் கூறி வரவேற்றுத் தன் பட்டாடையை மகிழ்வோடளிக்கிறான். இறைவன் அதனை மாக்கோலால் ஏந்தி வேதமாவின் மீது இடுகிறான். அரசனுடைய உள்ளமறிந்த வாதவூரர் இஃது அவர் நாட்டு வழக்கம் தவறில்லை என அமைதி கூறுகிறார். அரசன் மகிழ்கிறான். இறைவன் குதிரைகளின் சிறப்பையும் தோற்றத்தையும் கதிகளையும் காண்க எனக் கூறி இயக்கிக்காட்ட அரசன் முதல் யாவரும் பேருவகையடைகின்றனர். மன்னன் வியந்து பாராட்டுகிறான். அரசன் குறிப்பறிந்த வாதவூரர் குதிரைச்சேவகனைய இறைவனிடம் குதிரைகளை எல்லாம் கயிறு மாறிக் கொடுத்து ஒப்படைக்க வேண்டுகிறார். இறைவன் பரி இலக்கணம் வல்லாரோடு உசாவிப் பெற்றுக்கொள்க எனக் கூறி பரிகளின் தோற்றங்களையும் யுகந்தொறும் அவற்றின் நிலையையும் கூறி இனமும் சாதியும் பற்றி விளக்கிப் பரிகளின் அளவும் நிறமும் குணமும் பற்றிய இலக்கணங்களை விரித்துக்கூற, பாண்டியன் யாவற்றையும் கேட்டுக் களிகூர்ந்து கயிறு மாறித் தரச்சொல்லி வேண்டுகிறான். வேதமா ஒன்றுதவிர ஏனைய பரிகளையெல்லாம் கயிறு மாறிக் கொடுத்து ஒப்புவிக்கிறானிறைவன். அரசன் அவற்றை அரண்மனைக் குதிரைப் பந்தியிடத்தில் கொண்டுசேர்க்க ஆணையிட்டுத் தன் இருப்பிடம் செல்லுகிறான்.

இச்சருக்கத்தில் திருவிளையாடற் புராணங்களிலும் ஏனைய காப்பிய புராணங்களிலும் கூறப்பெறுத பரியிலக்கணச் செய்திகள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. [சுவடியில் சொற்கள் சிதைந்தும் பிறழ்ந்தும் உள்ளன. கைப்பிரதி செய்தோரும் அப்படியே செய்துள்ளனர் அரிதின் முயன்றும் பல இடங்கள் தெளிவாக உணர முடியாமல் உள்ளன. இயன்றவரை சொல்லுருவங்களைச் செம்மை செய்து பிறநூல்களோடு ஒப்பிட்டு

எண்ணி இப்பகுதியைப் பதிப்பித்துள்ளேன்] முதற்கண் பரி களின் நிலை இவ்வாறிருந்ததென்றும் கலியுகத்தில் கருவுற்றுப் பிறக்கும் முறையும் நிலையும் இவ்வாறென்றும் இன்னின்ன காலத்திற் பிறந்த குதிரைகளின் குணங்கள் இவ்விவ்வாறிருக்கு மென்றும் சுக்கில சுரோணித அளவைகளால் குணநிலை இவ்வாறு மென்றும், கருவிடை வளரும் கணக்கும், பிறந்தது முதல் வளரும் உறுப்புக்களின் முறையும், பல்முளைக்கும் கால அளவும், சுழிகளின் அமைப்பும் அவற்றுல் விளையும் நன்மை தீமைகளும் உடலமைப்பும் நிற அமைப்பும் பற்றி அமையும் பெயர் வேறுபாடுகளும் உறுப்புக் களின் அளவைகள் பற்றிய இலக்கணமும் கூறி இவ்விலக்கணங் களால் விளங்கும் பரிகளின் நால்வருணப் பகுப்பும், குதிரைகளின் ரேகைகளும் அவைபற்றிய சிறப்பும் இவை என்றும் நடைக்குற்றம் நாற்றம், ஒலிபற்றிய குற்றங்கள் இவையென்றும் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

51. பரி நரியான சருக்கம்:

மாணிக்கவாசகருக்கு அருள் நோக்களித்து மீண்ட இறைவன் அற்றை இரவே பரிகளை எல்லாம் நரிகளாக எண்ணினன். குதிரைப் பந்தியில் கலந்து பிணிக்கப்பட்டிருந்த பரிகள் நரிகளாகிக் கட்டுக்களை அறுத்துக்கொண்டு குதிரைகளையும், ஒட்டகங்களையும் கடித்துக் குதறி உண்டபின்னும் பசியடங்காவாய்த் தெருக்களில் புகுந்து மக்களுக்கும் இடர்விளைத்து மனைகளிற் புகுந்து பண்டங்களை எல்லாம் பாழாக்கி எங்கும் திரிந்தன. மக்கள் அஞ்சி நடுங்கி ஆலவாயண்ணலே என அபயக் குரலெழுப்புவ தறிந்த மன்னன் வெகுண்டு வீரர்களை ஏவினன். அவர்கள் கருவி கொண்டு அடர்த்துத் துரத்த இறைவன் அவைகளைக் கானகம் ஏக எண்ணினன். அவை அவ்வாறே சேர்ந்தன; என்று இச் சருக்கங் கூறுகின்றது. இதனுள் நரிகளின் செயல்கள் விரித்துக் கூறப்படுகின்றன.

52. பிட்டுக்கு மண் சுமந்த சருக்கம்:

பாண்டியன் அவையோரை யழைத்து வாதவூரர் நம்மிடம் வஞ்சனை புரிந்ததோடன்றித் பெருந்தீங்குகள் நடக்கக் காரண மாகவும் இருந்தார் என்று கூறி வெகுண்டான். சான்றோர்கள்

இங்ஙனம் இறைவன் திருவிளையாடலே என்று கூறவும் சிவனிடணியாதவனுய் ஏவலர்களை வாதவூரரிடம் பொன்னைத் திரும்பப் பெற அனுப்புகிறான். அவர் இறைவன் செயலை எண்ணிக் கலங்குகிறார். ஏவலர்கள் அவரை வருத்துகின்றனர். இறைவன் வையையில் வெள்ளம் பெருகச் செய்கிறான். வெள்ளங் கரை கடந்து நகரில் பரவுகிறது கண்டு மக்கள் அஞ்சித் திகைக்கின்றனர். பாண்டியன் சான்றோர்களை அழைத்து வினவுகிறான். அவர்கள் இவ் வெள்ளத்தை வாதவூரரால்தான் கட்டுப்படுத்த முடியும். அவர் செய்த இறைபணியின் பெருமையறியாமல் வாட்டமுறச் செய்தமையால் இறைவனுல் விளைந்ததே இந் நிலை என விளக்குகின்றனர். அரசனும் உளந்தெளிந்து வாதவூரரை அழைத்து வேண்டிக்கொள்ளுகிறான். வாதவூரர் வையைக் கரையை உயர்த்தக் குடி வீதம் பங்கிட்டு அடைக்குமாறு தெரிவிக்கிறார். மக்கள் அவ்வாறே முனைகின்றனர். கூடன் மாநகரில் மக்களும் சுற்றமுமின்றி இறைவனே துணையாகப் பிட்டு வாணிகஞ் செய்து வாழும் வந்தியென்னும் வயது முதிர்ந்த மூதாட்டி தன் பங்கை அடைக்கக் கூலியாள் கிட்டாமல் வருந்தி ஆலவாயண்ணலை வழிபட்டு வேண்டுகிறாள். இறைவன் மண் வெட்டும் கூலியாளாய் உருத்தாங்கிவந்து அம் முதியாள் அன்புடனளிக்கும் உதிர்ந்த பிட்டினையே கூலியாக ஏற்று வையையில் அவள் பங்கையடைக்க வந்து கொம்மாளமிட்டுக் கூத்தாடி விளையாடுகிறான். பாண்டியன் அடைப்பட்ட கரையினைக் காணவந்து வந்தியின் ஆளாக வந்தவன் தன் கடமை செய்யாமலிருப்பது கண்டு பிரம்பாலடிக்கிறான். அவ்வடி தேவர்கள் மூவர்கள் முதல் உயிருள்ள பொருள் அனைத்து முதுகிலும் படுகிறது. அரசனும் மற்றவரும் அதிர்ச்சியுற்று நோக்கும்பொழுது வந்தி தேவ விமானத்தில் கயிலாயம் செல்லுவதைக் காணுகின்றனர். அப்பொழுது இறைவன் ஆகாய வாணியாய் வாதவூருக்காக யாம் இத் திருவிளையாடலைப் புரிந்தோம் எனக் கூறி மறைகிறான். பாண்டியன் விம்மிதமுற்று அஞ்சி அழுது இறைவனை வணங்குகிறான். வாதவூரர் இறைவனின் எளிவந்த பேரருளை எண்ணி உளங்கசிந்து துதிக்கிறார். பாண்டியன் வாதவூரரிடம் பொறுத்தாள வேண்டுகிறான். வாதவூரர் அமைதி கூறி நாடாளப் பணித்துத் துறவு பூண்டு திருச்சிற்றம்பலம் நாடிச் செல்லுகிறார். இச் சருக்கத்தில் வந்தியின் வரலாறும் கூலியாளாய் வந்த இறைவன் திருவிளையாடலும், திருவிளையாடற் புராணக் கதைகளினின்றும் சிறிது வேறுபட்டுளது. சுவையான வருணனைகளை இதில் காணலாம்.

53. மாணிக்கவாசக சுவாமிக்குத் தலங்கள்தோறும் காட்சி கொடுத்த சருக்கம்:

மாணிக்கவாசகர் பொருட்டுக் குதிரைச் சேவகனாய் வந்தும் மண் சுமந்தும் பிரம்படி பட்டும் திருவிளையாடல் புரிந்த இறைவன் பெருந்துறையிற் குருந்திடஞ் சேர்ந்தான். வாதவூரர் துறவு பூண்டு ஆலவாயண்ணலை வழிபட்டு மகிழ்ந்து பின் சிவபுரம் சென்று சேர்ந்து தேசிக வடிவில் தன்னை ஆட்கொண்ட மூர்த்தியைக் காணவிரும்பிக் கிட்டாதவராய்ப் பெரிதும் மனங் கசிந்து புலம்புகின்றார். இறைவன் காட்சி தந்து சுவானுபவ ஞானத்தை விளக்கியருளித் தலங்கள்தொறும் சென்று வழிபட்டு இன்புறுக எனப் பணிக்கின்றான். சின்னாள் திருப்பெருந்துறையில் தங்கியிருந்து பின்னர் இறைவன் பணித்தாங்கு முதற்கண் தில்லைச் சிற்றம்பலஞ் சென்று ஆனந்த நடனக் காட்சிக் கண்டு மகிழ்ந்து சிவபுராணத்தைப் பாடியருள்கிறார். மீண்டும் பெருந் துறை வந்து திருச்சதகம் முதலியவற்றைப் பாடியருளி திருவுத்தர கோசமங்கைக்குச் சென்று நீத்தல் விண்ணப்பம் முதலியவை பாடியருள்கிறார். மயேந்திர முதலிய தலங்களில் திகழும் இறைவனின் திருவிளையாடல்களை ஞானக்கண்ணுற் கண்டு மணி வாசகமாகப் பாடியருளி மீண்டுஞ் சிதம்பரஞ் சென்று முக்தித்திருப்பதிகம் அடைக்கலப்பத்து முதலிய பாடி அங்கு உறைவாராயினர் என்பது இச்சருக்கச் சுருக்கம்.

54. புத்தரைவாதின் வென்ற சருக்கம்:

எக்காலும் எங்கும் சிவ சிதம்பரம் என்னும் மந்திர மொழியையே பேசித் திரிவதனால் சிவ சிதம்பர முனிவர் எனப் பெயர் கொண்ட சிவனடியார் ஒருகால் ஈழ நாடு செல்கிறார். அங்கு அவரை எதிர்ப்பட்ட சாக்கியர் சிதம்பரம் சென்று எமது சமயத்தை நிலைநாட்டுவோம் என்று சூளுரைத்து ஈழத்தரசனிடம் கூற அவன் தன் மகளைப்பெண்ணின் குறை தில்லையில் தீருமாயின் அச்சமயத்தை மேற்கொள்வேன் இன்றேல் நம் சமயத்தை அங்கு நிலைநாட்டுவேன் என்று கூறிப் பரிவாரங்களோடு புறப்பட்டுத் தில்லை சேர்கிறான். உடன் வந்த சாக்கியர் தில்லை வாழ்தணரைச் சமய வாது புரிய அழைக்கின்றனர் அவர்கள் இறைவனிடம் முறையிட இறைவன் மாணிக்கவாசகரைக் கொண்டு அவரை வெல்க எனக் கனவில்தோன்றி அருளுகிறான். மாணிக்கவாசகர்

உடன்பட்டுச் சிவபெருமானின் பரத்துவத்தையும் சைவசமயத்தின் மேன்மையையும் ஊமைப்பெண்ணுகிய அரசன் மகளே விளக்குவாள் எனக் கூறித் தான் விஞவ, அவ் விஞவிற்கெல்லாம் அவள் விடை கூறுகிறுள். விதண்டையிட்ட சாக்கியர் ஊமையாகின்றனர். அரசன் வேண்டுகோளால் யாவருக்கும் திருநீறளித்து அவர் தம் ஊமைத் தன்மையைப் போக்கியருளுகிறுர். இச் சருக்கத்தில் திருச்சாழல் பதிகம் முழுவதையும் விஞ விடையமைப்பில் சுவைபடப் பாடியுள்ளார் இவ்வாசிரியர். அப்பகுதிக்கு ஒரு விளக்கவுரையாக அமைந்துள்ளது இச் சருக்கம்.

55. மாணிக்கவாசக சுவாமி ஐக்கியச் சருக்கம்:

புத்தரை வாதில் வென்று அவர்களைச் சைவராக்கியபின் தில்லையில் தன் ஆசிரமத்தில் தங்கியிருக்கும் மாணிக்கவாசகரிடத்துக் கூத்தப்பிரான் முதிர்ந்து பழுத்த அந்தண முனிவராகி வருகிறுர். அவரைக் கண்டு மாணிக்கவாசகர் பணிந்து போற்றி வந்த காரணம் வினவ, கிழவேதியர் மதுரையில் இறைவன் உமக்காகப் புரிந்த திருவிளையாடல்களைக் கேள்வியுற்று உம்மைக் காண வந்தேன். மேலும் நீவிர் மொழிந்த மாணிக்கவாசகங்களாய திருவாசகப் பாக்களை எல்லாம் எழுதிக்கொண்டு நாடொறும் ஓதிச் சிவானந்தமுறும் வேட்கையாலும் உமைக் காண வந்தேன்; செப்பியருள வேண்டும்; திருக்கோவையையும் செப்ப வேண்டுமென்கிறுர். மாணிக்கவாசகர் உளமுருகி அவ்வாறே அருள இறைவன் தன் கைகளாலேயே எழுதி அப் புத்தகத்தை சிற்சபையின் படியில் வைத்து மறைகிறுர். அந்தணர்கள் அச்சுவடியைக் கண்டு "இவை அழகிய சிற்றம்பலவர் எழுத்து" என்றிருந்த கையொப்பத்தைக் கண்டு வியந்து போற்றி அதனை ஏந்திச் சென்று வாதவூரடிகளிடம் அப் பாக்களின் பொருளை விளக்க வேண்டுகின்றனர். மாணிக்கவாசகர் இறைவன் திருவுளமறிந்து பேரானந்தமுற்று யாத்திரைப் பத்து பதிகத்தைப் பாடிச் சிற்றம்பலத்தை வணங்கி இத் திருவாசகத்திற்குப் பொருள் ஆனந்தக்கூத்தனே எனச் சுட்டி யுணர்த்தி ஆனி மக நாளில் இறைவனடிரண்டறக் கலந்தார். இது கண்ட தில்லை மூவாயிரவரும் அதிசயித்துப் போற்றித் துதித்து வழிபடுவராயினர்.

56. திருவாசகச் சிறப்பு:

இச் சருக்கத்தில் முறையே சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் திருச்

சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருவம்மானை முதலாகத் திருப்படையாட்சி அச்சோப்பதிகம் வரையாவற்றையும் கூட்டி ஒவ்வொரு பதிகத்தின் செம்பொருள் இதுவென்று அறியத் தத்துவ நோக்கோடு விளக்கியமைத்துள்ளார் இவ்வாசிரியர். திருவாசகத்தின் சுருக்கமே இச் சருக்கத்தில் அமைந்துள்ளது. மேலும் திருக்கோவையாரின் பொருளமைதியையும் அது சிற்றின்ப இலக்கியச் சுவையமைப்போடு கூடிய பேரின்ப ஆகமமாம் என்றும் விளக்கப்படுகிறது.

57. பலசுருதிச் சருக்கம் :

இச் சருக்கத்தில் திருப்பெருந்துறை சென்று அக்கினித் தீர்த்தம் முதலியவற்றில் மூழ்கித் திருக்குருந்தீசரையும் சிவயோக நாயகியையும் வழிபடுவோர், போற்றிப் பூசனை புரிவோர். புகழ் பேசிக் களிப்போர்கள் எய்தும் இம்மைப் பயனும் மறுமைப் பயனும் பற்றி விளக்கி மார்கழித் திருவாதிரையிலும், ஆனி உத்தரத்திலும், மாசிச் சிவராத்திரியிலும், திங்கட்கிழமை, சனிக் கிழமை கார்த்திகை நாளிலும், அந்தி சந்திப் பொழுதுகளிலும், வழிபடுவோர் எய்தும் சிறந்த பயன்களையும், வில்வார்ச்சனை புரிவோர், நெய் விளக்கிடுவோர், திருப்பணி புரிவோர், மடப்புறம் பேணுவோர், நந்தவனம், வாவி, குளம் அமைத்துச் செப்பனிடுவோர், வாகனங்கள் செய்து வைப்போர் அடையும் பயன்களையும் விளக்கி, எவ்வகையாலும் பெருந்துறைத் தேசிகர்க்குத் தூரோகம் புரிதல் கூடாதென்றும், அறியாது குறை செய்யின் அபராதம் முதலிய பிராயச்சித்தங்கள் செய்து உய்யவேண்டும் என்றும், அறிவுறுத்தி இத்தலபுராணச் சிறப்பினையும், இதனை ஓதும் முறையினையும், சொல்லும் முறையினையும், கேட்கும் முறையினையும், அவ்வாறு ஓதுவோர், சொல்வோர், கேட்போர் எய்தும் பயன்களையும், அழகாகவும், சுருக்கமாகவும், கூறுகிறார் இவ்வாசிரியர். இறுதியாகக் குருந்திறைவனையும் முந்நூற்றந்தணர்களையும் உலகையும் பொன்னி நாடாளும் அரசனையும் வாழ்த்தி இத் தலத்துப் பூசனை முறைகளைத் தாங்கிப் பணி புரிந்துவரும் அருணசல மாமுனிவரையும் இறையருளால் வாழ்க என வாழ்த்தி முடிக்கிறார்.

பொருளடக்கம்

		பக்கம்
1	வெளியிடுவோர் உரை	... iii
2	பதிப்புரை	... v
3	முகவுரை	... xi
4	சருக்கங்களின் பொருட் சுருக்கம்	... xxiii
5	கடவுள் வாழ்த்து	... 1
6	அவையடக்கம்	... 7
7	திருநாட்டுச் சிறப்பு	... 9
8	நைமிசாரணியச் சிறப்பு	... 19
9	புராண வரலாறு	... 24
10	கைலாசச் சிறப்பு	... 38
11	தேவிக்கு சுவாமி சிவபுர மகிமையுரைத்த சருக்கம்	... 41
12	புரூரவாவுக்குத் தவுமியர் ஆத்துமநாதர் மகிமையுரைத்த சருக்கம்	.. 51
13	அண்டகோசச் சருக்கம்	... 61
14	பிரம்மாவுக்கு உபதேசித்த சருக்கம்	... 71
15	குருந்தமூலச் சருக்கம்	... 80
16	அக்கினி தீர்த்தச் சருக்கம்	... 90
17	தேவிக்கு நாரதர் வனபுரகேந்திரநாமமுரைத்த சருக்கம்	... 96
18	விஷ்ணுவுக்கு உபதேசித்த சருக்கம்	... 102
19	நாராயண தீர்த்தச் சருக்கம்	... 106
20	உருத்திரருக்கு உபதேசித்த சருக்கம்	... 109
21	சிவதீர்த்தச் சருக்கம்	... 117
22	சிவத்துரோகச் சருக்கம்	... 128
23	தேவிக்கு நாரதர் தவநிலை கூறி மீண்ட சருக்கம்	... 137
24	தவசுக்குத் தேவி சிவபுரத்துக் கெழுந்தருளிய சருக்கம்	... 142
25	காமதகனச் சருக்கம்	... 148
26	தேவிக்கு சுவாமி காட்சிகொடுத்த சருக்கம்	... 158
27	கலியாணம்-குமாரர் அவதாரம்-சூரசங்காரச் சருக்கம்	... 167
28	தேவதீர்த்தச் சருக்கம்	... 187
29	இருடிகள் தீர்த்தச் சருக்கம்	... 193
30	அசுர தீர்த்தச் சருக்கம்	... 202
31	மானவ தீர்த்தச் சருக்கம்	... 221
32	வாயு தீர்த்தச் சருக்கம்	... 232
33	கந்திருவ தீர்த்தச் சருக்கம்	... 246

34	இந்திர தீர்த்தச் சருக்கம்	...	253
35	பராச தீர்த்தச் சருக்கம்	...	274
36	சூரிய, சந்திர தீர்த்தச் சருக்கம்	...	282
37	சரசுவதி, இலக்குமி தீர்த்தச் சருக்கம்	...	288
38	பாண்டவ கௌதம தீர்த்தச் சருக்கம்	...	290
39	பதத தீர்த்தச் சருக்கம்	...	295
40	தலவிசேடச் சருக்கம்	...	309
41	இரகசியச் சருக்கம்	...	317
42	யோகபீடச் சருக்கம்	...	321
43	பத்தர் மகிமைச் சருக்கம்	...	328
44	யுகநான்கினும் பூசிப்போர் - நாமத்திரைய மகிமையுரைத்த சருக்கம்	...	345
45	மஞ்சரிச் சருக்கம்	...	354
46	கேத்திர மகிமைச் சருக்கம்	...	377
47	வெள்ளாற்றுச் சருககம்	...	385
48	புரூரவச் சருக்கம்	...	399
49	இளன் சருக்கம்	...	410
50	அகத்தியச் சருக்கம்	...	419
51	வழக்குரைத்த சருக்கம்	...	425
52	ஓதுவித்த சருக்கம்	...	442
53	மாணிக்கவாசகசுவாமி திருவவதாரச் சருக்கம்	...	450
54	உபதேசச் சருக்கம்	...	468
55	குதிரையிட்ட சருக்கம்	...	505
56	பரி நரியான சருக்கம்	...	538
57	பிட்டுக்கு மண் சுமந்த சருக்கம்	...	542
58	மாணிக்கவாசக சுவாமிக்குத் தலங்கள்தோறும் காட்சிகொடுத்த சருக்கம்	...	557
59	புத்தரை வாதின் வென்ற சருக்கம்	...	568
60	மாணிக்கவாசக சுவாமி ஐக்கியச் சருக்கம்	...	580
61	திருவாசகச் சிறப்புரைத்த சருக்கம்	...	587
62	பலசுருதிச் சருக்கம்	...	596
63	செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	...	603
64	சருக்கங்களின் அகரவரிசை	...	631
65	பிழை திருத்தம்	...	633

குறிப்பு : மூலச்சுவடி அட்டவணையில் அண்டகோசச் சருக்கத்தின் பின் தேவிக்கு நாரதர் சிவபுர மகிமையுரைத்த சருக்கமென்னும் தொண்ணூற்றுநான்கு பாடல்களைக் கொண்டதாக ஒரு சருக்கம் குறிக்கப்பெற்றுள்ளது இப்பகுதிகள் முழுதும காணப் பெறவில்லை.

ஆன்மநாதர் துணை

திருப்பெருந்துறைப் புராணம்

கடவுள் வாழ்த்து

வெயிலுவந்த கணபதி வணக்கம்

[அறுசீர் ஆசிரியவிருத்தம்]

1 பொன்வரைமேற் ருழருவி போலமத
தாரைதிகழ் பொருவில் வேழம்
மின்னுமிளந் திங்களெனக் கிம்புரிதாங்
கொருகோட்டு வள்ளல் முன்னுள்
கன்னியிமா சலியருச்சித் தேத்தவரங்
கொள்ளவரு கடவுள் யார்க்கும்
முன்னவனும் வெயிலுவந்த கணபதிமுண்
டகமலர்த்தாள் முடிமேற் கொள்வாம். 1

குருந்தொளிநாதர் வணக்கம்

2 திருவளர்சிற் பரவெளியாய்க் கண்டிதமாய்
நிரஞ்சனமாய்த் தெளிவாய் ஒன்ருய்க்
கருவளர்பல் லுயிர்க்குயிராய் சச்சிதா
னந்தவருட் கடலாய் இன்பாய்

---

1 வெயிலுவந்த கணபதி என்பது இத்தலத்து விநாயகரின் சிறப்புப் பெயர். கிம்புரி – கொம்பிலமைக்கும் பூண். இமாசலை – பார்வதி. முண்டகம் – தாமரை.

அருவளர்பூ ரணமாய நிற்குணமாய்
மறைமுடிவாய் அளவி லாதாய்

மருவளர்பூங் குருந்துருவாய் வயங்கியபே
ரொளியினையாம் வணங்கல் செய்வாம். 2

குருந்தப்பெருமான் வணக்கம்

3 அழுந்திமிகும் பாதலத்துக் கப்பாலும்
புகுவேர்ஓங் கார மாக

எழுந்திருத்தூர் பணிகவடு நாதவிந்து
வாக,அறம் இலக ளாகச்

செழுங்கொழுந்து மறையாக ஆகமங்கள்
மலராகத் திகழும் வாசந்

தொழுங்கருணைப் பரையாகச் சிவமதுவைத்
தருங்குருந்தைத் துதித்து வாழ்வாம். 3

ஆத்துமநாதர் வணக்கம்

4 சீர்பூத்த பரங்கருணைத் தேசிகனைப்
பெருந்துறைச்சிற் பரனைக் கொன்றைத்

தார்பூத்த சடைமவுலிப் பூரணனைக்
குருந்துறைசங் கரனை நீலக்

கார்பூத்த கந்தரச்சுந் தரஆத்ம
நாதனைக்கண் குளிரக் கண்டிங்

கேர்பூத்த கமலமலர்ப் பதஞ்சிரத்தும்
உளத்தினும்வைத் திறைஞ்சி வாழ்வாம். 4

---

2 குருந்தமரம் இத்தலத்து விருட்சமாதலின் இறைவன் இத்திருவடிவில் வீளங்குவதாக வைத்து வணங்குகிறார். கண்டிதம் – நிறைவு. நிரஞ்சனம் – இருளற்ற ஒளி.

3 தூர் – வேர். பணிகவடு – பருத்தகிளைகள். பரை – பராசக்தி.

4 கந்தரம் – கழுத்து.

சிவயோகநாயகியம்மை வணக்கம்

5 கவினுர்பொற் சிலம்படியும் திகழுடைச்சிற்
றிடையுமலர்க் கரங்கள் நான்கும்
நவமாமங் கலவணியும் களபமணி
முலைகளும்வெண் ணகைச்செவ் வாயும்
சுவியாநன் மணித்தோடும் கருணைபொழி
விழியுமலர்க் குழலு மாகச்
சிவயோக நாயகிதன் திருவுருவை
உளத்தமைத்துச் சிந்தை செய்வாம். 5

சொக்கவிநாயகர் வணக்கம்

6 சென்னியிற்றண் பிறைமுடித்த களிற்றுமுகத்
தெழிலும்,விழிச் சீரும், நேர்மை
மன்னுமொரு கோட்டழகும் இருசெவியு
மசைகவினும் மதுரம் யாவும்
துன்னியமோ தகமுணத்த தொந்திவயிற்
றிடைச்சுலவும் துதிக்கை மாண்பும்
நன்னிலந்தந் தொளிரவரு சொக்கவிநா
யகன்றிருத்தாள் நயத்தல் செய்வாம். 6

ஆறுமுகப்பெருமான் வணக்கம்

7 மாறுபடா விருவர்முலை மதவரைகள்
உழுதபுய வரையீ ராறும்
சீறியெழு சூர்பிளவ தாகவயில்
ஏவுமொளி சிறந்த கையும்

---

5 சிவயோகநாயகி – இத்தலத்துத் தேவியின் பெயர். களபம் – மணச்சாந்து.

6 மோதகம் – கொழுக்கட்டை. நன்னிலம் – முத்திவீடு.

மீறுமெழில் அருள்பொழிபன் னிருவிழியும்
இலகமயில் மீது தோன்றும்
ஆறுமுகக் குமரகுரு பரமுருகன்
இருசரண மகத்துள் வைப்பாம். 7

நந்திதேவர் வணக்கம்

8 பிரமனரி முதலமரர் மகுடமணி
சிதறநெடும் பிரம்பிற் ருக்கி
அருகிலொழுங் குறநிறுவி யங்கணனற்
றிருவருள்பெற் றவர்க ளுய்யக்
கருணைமலர் நோக்களித்துச் சிவசமுகத்
தெழில்புகழ்ந்து கவினர் இன்பத்
திருவளர்தண் கயிலைமலை காவல்புரி
நந்திபதஞ் சிரமேற் கொள்வாம். 8

வீரபத்திரக் கடவுள் வணக்கம்

[கலிவிருத்தம்]

9 கோரபத் திரையொடுங் குறுகிக் குல்லையங்
தாரபத் திரமெனும் தக்க ஞெடவண்
சேரபத் திரையெலாம் சிதைத்துப் பின்,னருள்
வீரபத் திரன்சரண் விரும்பிப் போற்றுவாம். 9

திருஞானசம்பந்தர் வணக்கம்

10 ஞானவா ரமுதுமை நல்க வுண்டவாய்க்
கானமோ டாடியோர் கையை நீட்டிநின்
றேனமா லறியொணு விருபொற் பாதனை
வானமேற் காட்டுசொன் மணியை ஏத்துவாம். 10

---

7 சூர் – சூரபன்மன். அயில் – வேல். மீறுமொழில் – மேலோங்கும் அழகு.

8 அங்கணன் – நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான். சமுகம் – சன்னிதி.

9 பத்திரை – வீரபத்திரருடன் தக்கயாகத்தை அழிக்கச்சென்ற சக்தி.

10 ஏனமால் – திருமால்கொண்டவராக வடிவம். ஏனம் – பன்றி. மால் – திருமால். சொன்மணி–தேவாரம் பாடியதைச் சுட்டும் சிறப்புப்பெயர்.

திருநாவுக்கரசர் வணக்கம்

11 சொற்பெருஞ் சொற்றுணைப் பதிகம் ஓதிவன்
கற்புணை யாக்கருங் கடலை நீந்திய
அற்புரு வாகுநா வரசை யாமுறு
முற்பவக் கடல்கடந் துய்யப் போற்றுவாம். 11

சுந்தரமூர்த்திகள் வணக்கம்

12 உந்துநீர்க் கயமுனுள் உண்ட பிள்ளையைச்
சிந்துநீர்த் தடக்கரை யதனிற் றிண்கராந்
தந்திடச் சிவன்புகழ் தழையப் பாடிய
சுந்தரப் புலவர்தாள் துதித்து வாழ்த்துவாம். 12

மாணிக்கவாசகர் வணக்கம்

13 முத்திநன் முதற்பொரு ளாகு முன்னவர்
கொத்தலர் குருந்தினிற் குருவின் ரூபமாய்
வைத்தெதிர் தன்வய மாக்கும் வாதவூர்
அத்தர்தாள் தொழுதுளத் தவல மாற்றுவாம். 13

அறுபத்துமூவர் வணக்கம்

14 தில்லைவா ழந்தண ராதிய ராய்ச்,சொலற்
கெல்லையி லாப்பணி யியற்றிப் போய்ப்,பிறப்
பல்லல்தீர்த் துயுமறு பத்து மூவர்தாள்
சொல்லிவெம் பவவினைத் துயரைப் போக்குவாம். 14

---

11 யாம் உறும் உற்பவக்கடல் என்றும், முற்பவக்கடலென்றும் கொள்ள நின்றது.

12 கயம் – குளம் – சிந்துநீர்த் தடக்கரை – நீர்வற்றிய குளக்கரை. கரா – முதலை.

13 அத்தர் – தலைவர் (தந்தை)

அருச்சனைபுரி வேதியர் வணக்கம்

15 இதமருள் குருந்துறை இறைக்கெங் ஙாளினும்
அதிகநற் பணியுமர்ச் சனைபு மேபுரி
முதன்மைகொள் மகிமைமுன் னுற்ற வேதியர்
பதமலர் சிரமுறப் பணிந்து போற்றுவாம். 15

சந்தானகுரவர்கள் வணக்கம்

16 சாற்றுமெய் கண்டசந் ததிநற் றேசிகர்
ஏற்றமார் திருவடி யிறைஞ்சு வாமறி
வாற்றல்சேர் தருமலி யார்ந்த நற்குரு
மாற்றுயர் பொன்னடி மலரும் போற்றுவாம். 16

பஞ்சாக்கர தேசிகர் வணக்கம்

17 வெண்ணெய்நல் லூர்த்திரு மெய்கண் டானருட்
கண்ணினுள் மணியெனத் துறைசை காவல்கொண்
டெண்ணிலா வுயிர்க்கரு ளீயும்பஞ் சாக்கரப்
புண்ணிய முதற்குரு பதங்கள் போற்றுவாம். 17

தற்சிறப்புப் பாயிரம்

[அறுசீர் ஆசிரியவிருத்தம்]

18 திருவளரும் பெருந்துறைமான் மியத்தையருஞ்
செந்தமிழாற் றிசைகள் போற்ற
அருளுதவு துறைசையின்வாழ் திருச்சிற்றம்
பலகுருவி னடிமை மேலாய்

---

15 மகிமை – சிறப்பு.

16 மெய்கண்டசந்ததி – சிவஞானபோதமருளிய மெய்கண்டதேசிகரின் பரம்பரை : உமாபதிசிவம் – அருணந்திசிவம் – மறைஞானசம்பந்தர்.

17 பஞ்சாக்கர தேசிகர் : திருவாவடுதுறை ஆதீன முதல்வராகிய நமசிவாயதேசிகர்.

மருவியஞா னப்பொருள்சேர் கல்வியின்றன்
எல்லியுணர் மதுர வாக்கி
இருநிலத்தோர்க் கமுதெனச் சுந்தரலிங்க
முனிவரன்ரு னியம்பி னனே. 1

அவையடக்கம்

[கலிவிருத்தம்]

19 திருப்பெருந் துறைச்சிவக் கடலிற் றெவ்ளமு
துருக்கமோ டுலகுய உண்டு வாதவூர்
மருத்திகழ் முகில்பெயவ் வாசகத் தேனிலென்
கருத்திலோர் துளியுறக் கலந்த மெய்ம்மையால் 1

20 அளவிலாச் சிவகதி அடைந்து ளோர்கள்செய்
துளபல அறந்திரண் டுதவுறப் பெற்றெனத்
தெளிமலர்க் குருந்துவாழ் சீர்திருப் பெருந்துறை
வளர்புகழ் சொலும்நசை வளர்ந்த தாதலால். 2

21 ஓதரும் சிற்றெறும் பொன்று பாற்கடல்
கோதறு சுவையெலாம் குடிக்க எண்ணிய
பேதமை யொப்பயான் பேச வுன்னினேன்
தீதறு நூற்றிறந் தெரிந்து ளோர்கள்முன். 3

[அறுசீர் விருத்தம்]

22 கொல்லியிற்புற் கறித்தறியாச் சிறியமுயற்
குட்டிதுள்ளிக் குதித்து வானில்
செல்லுமதிக் குள்ளிருக்கும் முயற்பாலுண்
டிடத்தாவும் செய்கை யொக்கும்

---

18 ஆசிரியர் தம்மைப் படர்க்கையில் வைத்துப் பாயிரம் கூறுகிறார் இப் பாயிரத்தால் இந்நூலாசிரியர் சுந்தரலிங்கமுனிவர் என்பது புலனும்.

19 மரு - மணம் (சிவமணம்) தேனில் ஒருதுளி என் கருத்திற் கலந்த மெய்ம்மையால் எனக் கூட்டுக.

பல்லுயிருக் குயிராகும் ஆத்துமாநா
யகரருளின் பரிசு தேர்ந்து

சொல்லுதற்கு நாணமுறு திவ்வுலகில்
யான்றுணிந்த துணிவு தானே. 4

23 நறுமலரோ டுறுநாரும், புண்ணியமா
நதிசேரும் மாசும், பாலோ

டுறுநீரும் ஒளிமணியைப் பொதிதருமைத்
துகிலுமென உவமை யில்லா

மறுவறுநற் சிவன்புகழே மருவியபெற்
றிமையதனல் வளங்கொள் பாரில்

பிரியமுற எவர்களுங்கைக் கொள்வரலாற்
சொல்வெளிவைப் பேசா ரன்றே. 5

மங்கல வாழ்த்து

24 தெய்வமறை யவர்வாழ்க! வானவர்கள்
உளமகிழ்ந்து சிறந்து பொங்க!

மெய்வகையைந் துதவுபசுக் குலம்பெருக!
மழைபொழிக! விளைவு மல்க!

பொய்வகையெ லாமகல்க! புவிபுரக்கும்
அரசர்திருப் பொலிக! நாதன்

சைவநெறி மிகவளர்க! அஞ்செழுத்தும்
வெண்ணீறும் தழைக! மாதோ. 6

அவையடக்கம் முற்றும்.

---

22 கறித்தறியா – மென்றுதின்ன அறியாத – மதியின் களங்கத்தை மூயல் எனல் புராணமரபு. பரிசு – மெய்த்தன்மை.

23 மைத்துகில் – அழுக்குத்துணி. சொல்வெளிவு – பாடலின் வெண்மை.

24 ஐந்து – பஞ்சகவ்வியம். பொங்க, பெருக, மல்க என்பன வியங்கோள் வினைமுற்றுய் நின்றன.

திருநாட்டுச் சிறப்பு

[கலித்துறை]

25 ஆதி நாயகன் அருட்குரு நாயகன் மலயச்
சோதி நாயகன் சுந்தர பாண்டிய னெகிக்
காத லாற்கயற் கண்ணியை மணந்துகாப் பதற்கு
மாத வஞ்செய்த பாண்டிநாட் டெழில்சில வகுப்பாம். 1

[முகிற்குலம் கடலிடைப் புகுந்து நீருண்டெழுங் காட்சி]

26 பாக மேவிய முகிற்குழாம் விண்ணிடைப் பரந்தே
யோக நாயகிக் கருணைநோக் கெனவெண்மை
யுருக்கொண்
டேகி மைக்கட லுதகமுண் டெழுந்தவள் விழியிற்
போக மீந்தமர்க் கருமணிச் செவ்விபோற் பொலிந்தே. 2

[சூலுற்ற முகிற்குழாம் மின்னி இடித்து வினங்குதல்]

27 வரையி டத்தினும் வனத்தினும் நாட்டினும் மலிநீர்த்
திரையி டத்தினும் சிவநக ரிடத்தினும் சிவக்கோன்
விரைமி குந்தசெஞ் சடிலநன் னிறமென மின்னிக்
குரைக ழற்பதச் சிலம்பொலி போல்வினிற் குமுறி. 3

[மழை பொழிதலும் வெள்ளம் பெருகுதலும்]

28 அருள்சு மந்தகண் ணடியவர்க் கவாசுமந் தளிக்கும்
கருணை போல்மழைத் தாரைகள் கான்றிடக் கதித்தே
வரமி குந்தநற் றண்டமிழ்க் குறுமுனி மருவும்
பெருமை சேர்பொதி யத்தொடுங் கெழுவெளப்
பெருக்கம். 4

---

25 நாட்டுச் சிறப்பாவது பாண்டிநாட்டின் வளமையும் சீர்மையுமாம். காக்கப்படுவதற்குத் தவஞ்செய்த பாண்டிநாடென்க.

26 பாகம் – பல சிறு பிரிவு. மைக்கடல் – கருங்கடல். உதகம் – நீர். போகம் – அருளின்பம். அமர் – விருப்பம்.

27 மலிநீர்த்திரை – கடல். சிவநகர் – திருக்கோயில். சடிலம் – சடை. குரைகழல் – ஆரவாரிக்கும் கழல்.

28 கண் அளிக்கும் கருணை எனக் கூட்டுக.

[பொருணைமுதல் வெள்ளாறு மற்றும் பேராறுகளில் வெள்ளம் பரவுதல்]

29 சிந்து பூந்துறைப் பொருணையாற் றினுந்திறன் மதுரை
இந்து சேகரன் சமயமே பொருளென வெதிரே(டு)
உந்து மாறுகாட் டியவைகை யாற்றினும், உமைகொள்
சுந்த ரப்பெருந் துறையினைச் சூழ்வெளாற் றிடத்தும். 5

[ஆறுகளில் வெள்ளம் ஒழுகிச் செல்லுந் திறன்]

30 மற்றுண் டாகிய நதியினும் பெருந்துறை மருவும்
கொற்ற வன்சடைக் கங்கையா யிரமுகங் கொண்டு
பற்று மன்பொடு பாரினிற் படர்ந்திடும் பரிசின்
உற்று மாதவ ருளத்துறு மொழுக்கநேர்ந் தொழுகி. 6

[ஏரி முதலாய நீர்நிலைகளில் வெள்ளம் தேங்குதலும் உழவர் மகிழ்வும்]

31 தாவி லாதபே ரேரியிற் குளங்களிற் றடநீள்
வாவி யிற்பல கால்களிற் செய்யினில் மலிந்து
மேவும் அற்புதங் கண்டுழ வோரினம் மிகுந்தாங்
காவி போற்றெருகும் நீர்தமக் கமைவன வமைத்தே. 7

[மக்கள் புதுநீர்ப் பெருக்கத்திற்குப் பூசனைபுரிந்து போற்றுதல்]

32 மிகும்பு னற்சமூத் திரம்புக விடுத்தயன் றனையும்
சுகம்பெ றத்தரும் துர்க்கைமா தரியையும் நிதமும்
தருந்தி றத்தினிற் றலங்கள்காத் தமர்வரா தலின்முன்
புகழ்ந்து பூசனைச் சிறப்புகள் புரிந்துவந் தித்தே. 8

[உழவர் உழுதலும் நாற்றுக் குவித்தலும்]

33 ஆடல் பாடலோ டணைந்துநன் மருதத்தி னகன்று
நீடு றுஞ்செயிற் கரும்பகட் டேர்பல நிறுவி

---

29 இந்து – சந்திரன்.

30 பரிசின் – தன்மையைப்போல்.

31 தா – குற்றம். கால் – வாய்க்கால். ஆவி – உயிர்.

32 வந்தித்து – வணங்கி வழிபட்டு.

நாடு மன்புடன் உழுதுசே ருக்கிநன் றெற்றுக்
கோடு போற்குவித் திடவெழி லுழத்தியர் குழுமி. 9

[உழத்தியர் நாற்றுப்பறித்தல்]

34 எண்டி சைக்குநென் றெற்றுநெற்றியில...த் திறைஞ்சி
முண்ட கக்கரங் குவித்துநீள் குரவையின் மூழ்கி
மண்டு நீர்செல னக்குழாம் நிறைதல்போல் மகிழ்ந்தே
பண்ட ரும்மிசைப் பாட்டொடு நாற்றுகள் பறிப்பார். 10

[நாற்று நடுதல் வருணனை]

35 கொந்த ளகுக்குழல் சரிந்திட மதிமுகங் குறுவேர்
உந்தி டக்கர வளைகுலுங் கிடஇடை ஒசியப்
பந்து போற்றிரள் முலைகணின் றசைந்திடப் பரந்தூர்
நந்தி றற்பதம் இடறிட நிரைகொடு நடுவார். 11

[இதுமுதல் ஐந்து செய்யுள்வரை உழவர்பெருமக்களின் பல்வேறு காதற் களிப்பு விளையாட்டு நிகழ்ச்சிகளைக் காப்பிய வருணனை மரபிற்கேற்பக் கூறுகிறார் ஆசிரியர்.]

36 உறைப்பொ டுஞ்சிலர் ஒருவர்கை நாற்றினை யொருவர்
பறித்து நாட்டுவர் சிலமளர் பணிலமுத் தெடுத்தங்
கிறைத்து நுங்கள்பற் கிதுவொக்குமென்வவர் இதழான்
மறைத்த பற்குறு நகைதரக் கண்டுளம் மகிழ்வார். 12

---

33 அகன்று நீடுறுஞ்செய் – அகன்று நீண்ட வயல்கள். கருத்தின் செய் எனக் கூட்டுக. கோடு – குவடு – கோபுரம்.

34 குரவை – குரவைக்கூத்து. நீர்செல் அன்னக்குழாம் தொகுத்தல் விகாரம்.

35 அளகம் – கொண்டை. வேர் – வியர்வை. பரந்தூர்நந்து – பரந்து ஊர்ந்து செல்லும் நத்தைகள்.

36 உறைப்பு – மிடுக்கு. பணிலம் – சங்கு.

[மள்ளர்கள் தத்தங் காதலியருடன் கள்ளுண்டு மகிழ்தல்]

37 கள்ளி னீச்சில மள்ளர்கள் காதலுற் றவர்பால்
அள்ளி யள்ளியீந் தவர்கள்வாய் வழியொழு கமுதை
உள்ளு றக்கையின் வாங்கியுண் டுளவெறி மிகுந்து
துள்ளி முன்புகின் றுடிவா மினக்கெனத் தொழுவார். 13

38 வெறிம ருவுணும் மயக்கினுற் சிலமளர் விரைந்து
நறிய நாற்றுமுன் நடுஞ்சில உழத்தியர் நயனக்
குறியை நீரினிற் குளித்திடுங் கயலென வலையை
எறிவர் பின்புகண் வலையின்வீழ்ந் தவ்வலை யிழப்பர். 14

39 ஒசிய நுண்ணிடை முலைக்கனம் பொறுதென ஒடி
நசையி னேடுபோய்த் தாங்குவர் சிலர்நறும் புனலுள்
அசையுங் கால்களே வராலெனப் பிடிக்கவம் மடவார்
விசையி னலுதைத் திடவுதைப் பட்டுளம் வியப்பார். 15

40 புருவ வில்லினில் இருவிழிக் கணைகளைப் பூட்டி
உருவ எய்வரிவ் வுழத்தியர் எனமனத் துன்னி
அருகி லங்கவர் கைக்கிசைந் திசைந்திட வணியாய்
மருவு நாற்றினைக் குவிப்பர் சிலமள்ளர் மகிழ்ந்தே. 16

[நெற்பயிர் வளர்ந்து தழைத்திடும் காட்சி]

41 இந்த வாறுழத் தியர்நடு நாற்றெலா மிசைந்து
பந்த மேவிய பாண்டிநன் னாட்டுள பழனத்
தந்த மின்றியார் வயல்தொறும் வேர்கள்சென் றழுந்திச்
சந்த்ர சேகரர் கருணைபோல் தழைத்துயர்ந் திடலும். 17

---

37 வெறி – மயக்கம்.

38 வெறி – மணம். நறிய – வளமான. நயனக்குறி – கண் வடிவு.

39 ஒசிய – வளைய. நசை – விருப்பம்.

40 உருவ – உட்புகுந்துசெல்ல. உன்னி – நினைத்து.

41 பழனம் – வயல்.

[கரை பறித்திடலும் கதிரின் செழிப்பும்]

42 பதம றிந்துழ வோர்சொல வுழத்தியர் பயிர்கள்
இதமு ணர்ந்துமேல் வளர்ந்திடக் கரைகளெங் திடலும்
சதுர்மி கும்பயிர் கன்னலோ வலதுநெற் ருலே
இதுவெ னும்படி வளர்ந்துசூற் பொதிசுமந் திளகி. 18

[செந்நெற் கதிர்கள் முற்றி விளங்குதல்]

43 அரன்ப தம்பணி யன்பர்தம் சிந்தைபோ லலர்ந்து
வரம்பெ றுந்திரு வாசகம் விளம்புமா தவர்பால்
விரும்பு நற்சிவ போகமுள் விழைவது போலப்
புரங்கள் சூழ்பழ னந்தொறும் விளைந்தன புதுநெல் 19

[நெற்கதிர் அறுத்தலும் சூட்டடித்தலும்]

44 கூன்கு யத்தினுற் றடிந்துநெற் சூடுகள் குவித்து
நான்கு திக்கினும் வாழ்தரு பாண்டிநன் னாட்டார்
தேன்கொள் மும்மதக் கரிகள்போற் பகடுகள் செறித்து
வான்க ணைற்பெருஞ் சூட்டடித் துதறிவை கழித்தே. 20

[நெல்லைக் குவித்தலும் பகுத்தலும்]

45 மீட்டு நெற்கரைத் தூற்றிநன் னவமணி வெற்பும்
தீட்டு பொற்சிக ரியும்வெள்ளிக் குன்றும்போற் றிரட்டி
ஆட்டிற் றம்படை மன்னருக் காறிலொன் றளித்துத்
தேட்ட மாயொரு நான்கையும் தருமத்திற் செலுத்தி. 21

---

42 நெற்பயிர்கள் கரும்புபோல் செழித்துள என்பது கருத்து.

44 கூன்குயம் - வளைந்த அரிவாள். தடிந்து - அறுத்து. வை - வைக்கோல்.

45 பொற்சிகரி - பொன்மலை. ஆட்டின் - வெற்றியினால் - தேட்டம் - ஊதியம். ஆறிலொருகூறு அரசனுக்குக் கடமைசெலுத்தி எஞ்சிய ஐந்தனுள் தனக்கொரு பகுதியை வைத்துக்கொண்டு ஏனைய நான்கையும் தருமத்திற் செலுத்தினர் என்றது.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்ற
ஐம்புலத் தாறோம்பல் தலை

என்னும் குறட்பாவின் கருத்தை ஒட்டியென்க.

[இதுமுதலாக இந்நாட்டுக் குடிவளம் இரண்டு செய்யுட்களாற் கூறுகின்றார் தமக்குரிய பங்குகொண்டு குடிமக்கள் துய்த்துவாழ்தல்]

46 ஒருபங் குள்ளது கொண்டுதன் கிருகத்தை ஓம்பிப்
பெருவ ளத்தொடுஞ் சிவப்பணி விடைகளீப் பெருக்கி
மருவு நால்வகை வருணரும் மன்னிவாழ் வகையாப்
பொருவி லாவளந் துய்த்துவித் தமருவர் புகழின். 22

[வேறு]

[கலிவிருத்தம்]

[இந்நாட்டு மக்கள் வாழ்வாங்கு வாழும் சிறப்பு]

47 அண்டர்பிரான் பூசனையும் அபிடேக விழாச்சிறப்பும்
தொண்டர்கள்பூ சையுமறையோர் தொகுதிகள்போ சனப்பெருக்கும்
கொண்டலெனப் புலவர்கொளக் கொடுப்பதுவு மிரவலருக்
குண்டிமுதற் கேட்டபொருள் உதவுவதும் மிகுமெங்கும். 23

[இதுமுதலாக நகர் வளம் சுட்டி நாட்டு வளம் கூறப்படுகிறது. பல்வேறு அறங்கள் செய்து வாழ்கின்ற முறைகள் கல்விக்கூடங்கள்பற்றிய சிறப்பு]

48 மல்கியசெல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்
செல்வர்களும் குளம்வாவி திகழ்கூப நீர்ப்பந்தர்
பல்குநிழற் றேம்பொழில்கள் பரிமளநந் தவனங்கள்
கல்விபயில் பள்ளிகளும் காணினிறைந் திடுமெங்கும். 24

[மறைபயில் கூடங்கள் மடங்கள் கலையரங்குகள் – சிறப்பு]

49 வேதவொலி மிகுமெங்கும் மிகுமகச்சா லைகளெங்கும்
போதவுரை மிகுமெங்கும் புண்ணியர்கள் மடமெங்கும்
கீதவொலி மிகுமெங்கும் கிளர்சுபமங் கலமெங்கும்
சாதியொழுக் கந்தவறாத் தன்மையர்கள் குடியெங்கும். 25

---

46 கிருகம் – மனை. (இல்லறம்)

48 கூபம் – கிணறு.

49 மகச்சாலை = யாகசாலை.

[மக்களின் மாண்புமிக்க மகிழ்ச்சிவாழ்க்கை]

50 அரிவையர்வாழ்த் தொலியெங்கும் ஆடவர்செய் மணமெங்கும்
பரிகரிதேர் சிவிகையின்மேற் பவனிவரு பவரெங்கும்
பொருவில்புவி வளமுமகீ வளமும்புண ரியின்வளமும்
மருவுமணி நிதிமுதலாம் வளந்திகழா வணமெங்கும் .26

[சோலைகள் பூங்காக்களின் வளம்]

51 மல்லிகைநன் முல்லையிரு வாச்சிவலம் புரியலரி
மெல்லிதழ்க்கூ விளங்கொழுந்து மீறுபன்னீர் மந்தாரை
நல்லமலர்க் கொங்குபுனை நறுமலர்ச்சண் பகமுதலாம்
எல்லையிலாச் சுகந்தவனம், இசைந்துமணந் தருமெங்கும். 27

[நகரைச் சூழ்ந்து விளங்கும் பொழில் வளம்]

52 பனசஞ்சூ தந்தெங்கு பைங்கமுகு பலவகுளம்
இனமிகுமா தவிவாழை இருப்பைசந்தா னந்துருக்கம்
கனமிகுபா டலஞ்செருந்தி கமழ்குருந்தால் வேய்முதலாம்
வனமிகுதண் பொழில்புடைசூழ் வளநகர மெழிலெங்கும் 28

[நீர்நிலைகளின் வளமும் சிறப்பும்]

53 பங்கயஞ்செங் கழுநீர்பைங் குவளைமுதற் பலநீர்ப்பூத்
தங்குமடு வுறுமனம்நீ ராடுமட வார்தமைக்கண்
டெங்களுக்குங் கிளைப்போலும் எழினடைதந் தருளுமென
அங்கவர்கள் சிலம்பொலிபோல் அரற்றியிடுமிடமெங்கும். 29

[மக்களின் வேனிற்காலச் சிறப்பு வாழ்க்கை வருணனை]

54 துன்னுபனிக் காலமன்பர் தோய்ந்தகளிப் பான்மடவார்
இன்னிசையாற் பாடுகுரல் கேட்டவெழிற் குயிலினங்கள்
மின்னுமிள வேனில்வந்த தாகுமென மதிமருண்டே
அன்னமின்னர் போற்கூவி யரற்றியிடும்இடமெங்கும். 30

---

50 மணி - சிந்தாமணி நவமணிகளுமாம். ஆவணம் - கடைவீதி.
58 மடுவுறுமனம் - நீர்நிலைகளில் வாழும் அன்னப்பறவைகள். அரற்றியிடும் - ஆரவாரஞ்செய்யும்.

55 நந்தவன மலரெடுக்கும் நாரியர்கள் மழலைமொழிச்
சுந்தரமங் குளபசிய சுகஞ்சூழ்ந்து கேட்டுருகிப்
பந்தமுறத் தாங்கள்பெறு பார்ப்பினங்கட் கோதவவை
வந்தனகூ வக்கேளா மகிழ்ந்திருக்கு மிடமெங்கும். 31

[இந்நாடு இந்திரன் நாட்டையொக்கும் என்பது]

56 கற்பகமின் னுர்கள்மனை தொறுமிருக்குங் கணக்காலும்
பொற்புறுநல் லமுதையவர் புகல்மொழிதந் திடலாலும்
நற்பொனிட்ட மாப்பாண்டி நாடுறுத லானுமிம்ப
ரிற்பெருநாட் டினையுவமை யெனலா மற்றெவ்வாதே. 32

[நகரத்தின் வளமும் சிறப்பும்]

57 பாலுந்தண் ணீருமெனும் பயமல்லாற் பயமில்லைச்
சாலிவயற் பங்கமலாற் பங்கமிலைத் தருக்கள்வடு
சோலையிற்காட் டுவதல்லாற் சொலும்புருடர் மனத்தில்லை
நீலமயிற் பெயரலதந் நிலத்திலிலைப் பிணிமுகமே. 33

58 இல்லெனுஞ்சொல் மனைக்கலதங் கிருப்பவர்நா விடத்தில்லைக்
கொல்லெனுஞ்சொல் லசைச்சொலலாற் கூறுபவர்
மொழியுளிலை
புல்லுமின்ன ரிடையலது பொய்யெங்குங் கண்டதிலைச்
சொல்லுமருங் களங்கமதிக் கலதவர்செய்
தொழிற்கிலையால். 34

---

55 சுந்தரம் – அழகினிமை, சுகம் – கிளி. பார்ப்பு – குஞ்சு.

56 இம்பர் – தேவர்.

57 பயம் – நீர், அச்சம். பங்கம் – சேறு, குறைபாடு. வடு – பிஞ்சு, குற்றம். பிணிமுகம் – மயில், நோயால் வாடிய முகம். இப்பாடல் ஒழித்துக்காட்டணி.

58 இல் – வீடு, இல்லை எனும் எதிர்மறைச்சொல். கொல் – கொல்லுதல் என்னும் வினை, அசையிடைச்சொல். பொய் – காணுதுமொழிதல். இதுவும் ஒழித்துக்காட்டணி.

[இது முதல் தேவாரம் பெற்ற சிவ திருத்தலங்களை அவற்றின் சிறப்புக்கள் தோன்றக் கூறுகிறார்]

59 அறுபத்து நான்குதிரு விளையாடல் அரன்புரியும்
மறுவற்ற **மதுரையும்** பொன் னனையாள்முத் தியவரதர்
உறுமிக்க பூவணமும் உக்கிரபாண்டியும் வேளைப்
பெறுமுக்கண் ணையகர்வாழ் பெரிய**திருப் பரங்கிரியும்.** 35

60 திருஞான சம்பந்தர் எழுதியிட்ட திருப்பதிகம்
மருவுவைகைப் புனலிலெதிர் ஏறியிட வரவழைத்துப்
பொருளிதுவே எனக்காட்டும் புனிதருறு **மேடகமும்**
பெருசூபிர ளயத்தையுள்வாங் கிய**சுழியற் பெருநகரும்.** 36

61 குறுமுனிகை யாலரியைக் குறுகுகுறு கெனவழுத்தி
மறுவறுநற் சிவமாக்கி வைத்த**குற்ரு லப்பதியும்**
பெருமழுதிற் கலருநெல்லைப் பெய்யுமழை நனைக்காமல்
உறுதியன்பர்க் காய்க்காத்த தொரு**நெல்வே**
லிப்பதியும். 37

---

59 **அரன்** – மதுரைச் சொக்கநாதப் பெருமான். பொன்னனையாள் என்னும் தேவரடியாள் இறைவன் திருவுருவைப் பொன்னால் செய்து அதன் அழகில் மெய்மறந்து காதலுற்று இரு கன்னங்களையும் அழுந்தப் பற்றி முத்தியிட்டு மகிழ்ந்தாள். அவள் பற்றிய வடுவோடு இறைவன் திருப்பூவணத்தில் விளங்குகிறான் என்னும் அத்தல வரலாற்றுச் செய்தியையே "பொன்னனையாள் முத்தியவரதர்" என்கிறார். **ஆதர்** – அன்புடையவர்.

60 திருஞானசம்பந்தர் சமணரோடிட்ட புனல் வாதத்தில் தேவாரம் எழுதிய ஏடு வையையில் எதிரேறிச் சென்றதனை எடுத்த தலம் ஆதலின் ஏடகம் என இத்தலப்பெயர் விளங்குவதனைச் சுட்டியுள்ளார். திருச்சுழியல் என்னுமித்தலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தை இறைவன் போக்கியருளியதாக இத்தல வரலாறு கூறுகின்றது.

61 திருக்குற்ரூலம் முன் வைணவர்கள் தலமாக இருக்க அங்குச்சென்ற அகத்தியரை அத்தலத்து வைணவர்கள் கோயிலுட் புக ஒட்டாது தடுக்கத் தமிழ்முனிவர் திருமண் சாத்திக்கொண்டு வைணவர் வேடத்தில் உட்புகுந்து நெடியோன் உருவத்தைக் கையால் அழுத்திச் சிவலிங்கவடிவமாக்கினர் என்பது இத்தலவரலாறு. சிவனடியார்கள் உலரவைத்த நெல்லை மழை நனைக்காமல் இறைவன் தடுத்துறுத்தினர் என்பது இத்தலவரலாறு.

62 வன்றொண்டர்க் கெதிர்போய்நின் றெமைப்பாட வாவென்று
மின்றிகழ்பூச் செண்டடறுகை விடலீயுரு வாயழைத்த
கன்றுருமான் மழுவேந்தும் காஞைதிருக் காஞையும்நற்
பொன்றிகழ்செஞ் சடையர்வயி ரவர்க்கருள்செய்
புத்தூரும். 38

63 அறம்பருத்திக் கிறைக்குமூ ரதிலிருப்ப தாகாதென்
றுறும்பரன்வை கைக்குவடக் குறுமாப்ப னூருமிகு
மறுவறுநற் பூதபவு டிகவந்த மானலிங்கக்
குறிகொ டரனருள்செய் திருந்ததிருக் கொடுங்குன்றும். 39

64 பழம்பதிநா யகர்வாழும் புனவாயிற் பதியும்நலம்
வழங்குதிரு ரெகுராமர் வானரசே னைகளொடுபோய்
முழங்குகுரல் தசமுகரா வணன்முடிபத் தறுத்தபழி
அழிந்திடநற் சிவலிங்கார்ச் சனைபுரிரா மீச்சரமும். 40

65 கோட்டுமலர்த் தருக்குலத்தைக் குமைப்பதுகண்
டொருமுனிவன்
ஆட்டுமுகத் தோடுதந்தி யாகமுமா குகவென்று
வாட்டமுற விடுஞ்சாபம் வாருணிக்கு மாற்றியருள்
நாட்டுமன மேவுதிரு வாடானை நகருமென. 41

---

62 திருக்காஞை - திருக்காளப்பேர் என்னும் தலம் இப்பொழுது காஞையார் கோவில் என வழங்கப்பெறுகிறது. சுந்தரமூர்த்திகள் இத்தலத்திற்குச் செல்லாமல் இதனைக் கடந்து சென்றபோது இறைவன் மாலையணிந்து கையில் செண்டேந்தி அழகிய காளைப்பருவத்தோடு காட்சி கொடுத்து இத்தலத்திற்கு அழைத்ததாக இத்தலவரலாறு கூறுகின்றது.

63 ஆப்பனூர் - பாண்டியன் பொருட்டு அவன் குதிரை கட்டிய ஆப்பினின்றும் இறைவன் காட்சிகொடுத்த தலம்.

64 பலராமர், பரசுராமரின் வேறுதற்கு ரெகுராமர் என்கிறார்.

65 மலர்தரும் மரங்களை அழித்தமையால், துருவாசமுனிவர் அழித்த முனிவரை ஆட்டுத் தலையும் யானை உடலும்பெற சாபமிட்டார். அச்சாபம் நீக்கியதலம் இதுவாதலால் ஆடு + ஆனை = ஆடானை என வழங்குவதாக இத்தலவரலாறு கூறப்படுகிறது.

66 தேவாரத் திருப்பதிகம் சேர்ந்ததலம் பதினென்காம்
ஓவாவிப் பதிகளல தூற்றிடுநற் றலம்வெகுவாம்
பூவார்திண் புயவேந்தாம் புகழ்வழுதி நாட்டுவளம்
நாவான தாயிரம்கொண் டிடினுரவின் றிடலரிதே. 42

67 ஆதலினற் சுருக்கியுரைத் தனமினியத் திருநாட்டிற்
பூதநா யகன்,கருணைப் புனிதநா யகனரிய
வேதநா யகன்,பொருவில் விமலநா யகனுத்ம
நாதநா யகனமர்ந்த பெரும்துறையி னலம்பகர்வாம். 43

திருநாட்டுச் சிறப்பு முற்றும்.

நைமிசாரணியச் சிறப்பு

[அறுசீர்ச் சந்தவிருத்தம்]

[கடலுக்கும் வேதத்திற்கும் நைமிசாரணியத்திற்கும் சிலேடை]

[நைமிசம் வேதநெடுங்கடலே ஒக்குமென்பது]

68 சூதரி ருந்தபெ ருந்துறை யின்கதை
சொற்றிட வன்பருள்சேர்
மாதவ ரின்பவி ருப்பொடு கேட்டும
கிழ்ந்துவி ஞவிடமாம்
ஓதும ரும்பல வாறு மடுத்தலி
னுதலே மேவுதலால்
வேதநெ டுங்கட லாமெனு நைமிச
மேன்மைசொல் வாம்சிறிதே. 1

---

66 தேவாரம் பெற்ற தலத்துள் சிறந்த இப்பதினென்கும் பிற தலங்களும் இப் பாண்டிநாட்டில் உளவாதலின் அதன் பெருமை கூறுதற்கரிது என்கிறார்.

67 திருப்பெருந்துறை பாண்டியநாட்டைச் சேர்ந்ததென்பது இந் நூலாசிரியர் கருத்தாகும்.

68 முனிவர்கள் நைமிசாரணியத்திலிருக்கும் சூதமுனிவரிடம் பெருந் துறையின் சிறப்பைக்கேட்டு மகிழ்கிறார்கள் - பல ஆறு மடுத்தலின் ஆறு - நதி - நெறி ஓதலே மேவுதலால், ஓதும் அலே மேவுதலால் - இசை ஆரவாரம், நீர் அலைகள் - முறையே வேதம் - நைமிசம் - கடலுக்குக் கொள்க.

[விநாயகருக்கும் நைமிசத்திற்கும் சிலேடை]

69 மெய்யடி யார்கள்க ணத்திர ளால்விசூ
வீட்டுத லாலுயர்பால்
அய்யம கற்றிவி ளங்குத லாலர
ஞரின ருள்பெறலால்
துய்யநல் வேழமு கத்துள தாற்கடந்
துன்னிய மாண்பதனுற்
பொய்யக லத்தர லாற்கய மாமுகன்
போன்றது நைமிசமே. 2

[சிவபெருமானுக்கும் நைமிசத்திற்கும் சிலேடை]

70 விரவிய வேணிவி ளங்குத லால்தினம்
மேவிய நன்மதியால்
பரசொடு மான்கைத ரித்திட லால்பரி
சுத்தமி ருந்திடலால்
உரிமைகொள் காளகண் டப்பொலி வாலுறு
வோர்குழு வானிலையால்
புரையகல் நீற்றொளி வெண்மையி னலரன்
போல்வது நைமிசமே. 3

[உமாதேவிக்கும் நைமிசத்திற்கும் சிலேடை]

71 அறங்கள் பெருக்குத லாலரன் றன்னிட
மாகிய மர்ந்திடலால்
மறங்கட விர்த்திட லாலச லந்தர
வந்தத னல்லியீ யாற்

---

69 வேழமுகம் – யானை முகம் – வேழக்கரும்பு, கடம் – மதநீர், காடு என விநாயகருக்கும் நைமிசத்திற்கும் சிலேடை கொள்க.

70 வேணி – சடை, மரங்களின் வேர்கள். மதி – சந்திரன், அறிவு. பரசு – ஆயுதம், மரம்; பரிசுத்தம் – தூய்மை – இலக்கணமமைந்த குதிரைகள். களாகண்டம் – இறைவன் மிடற்றுநீலம், மேகங்கள் – நீறு – திருநீறு – வேள்விச்சாம்பல்.

பிறங்கிய வுற்பவ மாற்றுத லாலுயர்
பேறுகொ டுத்தவினல்
புறங்கல வாவருள் தோன்றுத லாலுமை
போன்றது நைமிசமே. 4

[முருகனுக்கும் நைமிசத்திற்கும் சிலேடை]

72 பன்னிரு கையுள தாகலிற் சத்தியி
ரித்திட லிற்பொருவில்
வன்னக லாபம யிற்செறி வீற்சொலு
மாறுத லீப்பொலிவிற்
றுன்னிய சூரடு வாய்மையின் வானவர்
சுற்றுத லிற்பரஞர்
உன்னிய கண்ணினு தித்தலின் வேடனை
ஒத்தது நைமிசமே. 5

[வெள்ளியங்கிரிக்கும் நைமிசத்திற்கும் சிலேடை]

73 அருந்தவர் தந்தொகை யாலும்வி னங்கொளி
யாலுநற் கண்ணருவி
விரிந்திட லாலுழ யர்ந்தநல் வின்னவர்
மேவுத லானுநிசந்
தருந்திரு வாலும ரன்பரை யோடமர்
தன்மையி னலுநலம்
பொருந்தினர் சேர்வென லாகும்வெ ளிக்கிரி
போல்வது நைமிசமே. 6

---

71 அரன் உமையின் உடம்பில் ஒரு கூறாக இருத்தல், நைமிசத்தில் விளங்கல். அசலந்தரவந்தது – உமை மலையரசன் மகளாதலும் – நைமிசம் மலைச் சாரலில் இருப்பதும், உற்பவம் ஆற்றுதல், உற்பவம் மாற்றுதல் எனக்கொள்க.

72 ஆறுதலைப் பொலிவு – ஆறுமுகம், உச்சியிலிருந்து நதிகள் பெருகி வருதல். சூர் – சூரபன்மா – மலைத்தெய்வங்கள். வேள் – செவ்வேள் முருகன்.

73 வெளிக்கிரி – வெள்ளியங்கிரி.

[கற்பகத்தருவையும் சிந்தாமணியையும் ஒக்கும் என்பது]

74 வானவ ரெவரையும் ஒப்புமை சொல் லினும்
மன்னிய சீர்கொடெய்வக்
கானன மெவ்வுல கெவ்வித மாயினுங்
காணுமெ ளுளும்வனந்
தானதில் வாழ்தரு மாதவர் பெற்றசிந்
தாமணி போலிலகும்
மேனிலை யுற்றவ ருக்குத விப்பல
மேன்மைத ரித்துளதே. 7

[பூவுலகில் இதனை நிகர்த்ததொரு இடமில்லை என்பது]

75 தவமுனி வரர்குழு வான்,மகி மைபுகழ்
தழைமொழி பெருகுதலால்
அவணவண் மருவிய கிளிசெறி பூவைகள்
அவைகளு மவரெனவே
சிவனருள் வளமென வரதமு மொழிதரு
செயலெனி லதைநிகரோ
புவனியி லுளதுகொல் மகிமைகொ டெழுமொலி
புணரியின் மிகுமறையே. 8

[ஒன்றற்கொன்று பிறவிப் பகையாய உயிர்கள் ஈங்குப் பகையின்றி நட்போடு திகழும் என்பதும், எல்லாப் பருவங்களிலும் ஒரறிவுயிர் தத்தம் வளங்களைத் தந்து விளங்கும் என்பதும் இப்பாட்டுள் விளக்கப்பெறுகின்றன]

76 கடகரி யரியொரு துறையுணு மடமயில்
கடுவர வொடுகுலவும்
அடுபுலி யதுபறழ் பசுமுலை யுணுமுற
வலதுறு பகையெவையும்

---

74 மேனிலையுற்றவர் – மாதவர்.

75 வேதமந்திர மொழிகளை ஆண்டுறையும் கிளிகளும் பூவைகளும் மொழிந்திடும் சிறப்புடையது.

விடுமுனி வரர்கடம் விழிபடு நலமதில்
விரவிடு தருவெவையும்
படுகனி மலர்தளிர் முதலவெங் நாளினும்
பருவமுன் னுதுதவும். 9

[மாதவர்தம் சிறுவர்கள் வினையாட்டும் வேள்வியாக விளங்கும் என்பது]

77 மாதவர் சிறுவர்கள் செங்குவ னோக்களல்
மாவிலை சுருவையெனத்
தாதவிழ் மலர்மது நெய்யென வதிகிளி
தருமொழி மந்திரமா
ஏதமி லாமறை நன்மக மாற்றியி
னங்களொ டாடுமிடம்
போதந லந்தரு மவ்வள மேன்மைபொ
ருந்தவி ளங்கியிடும். 10

[இதன் சிறப்பு முற்றும் புகலவரிதென்பது]

78 முனிவரர் வாழ்பர்ன சாலைக ளொடுமறை
மொழிசிறு வோர்பயிலும்
தனிநலி டங்களோ யாகம்வ ளர்த்திடு
சாலைக ளோநியதி
கனிவினு டன்புரி வேதிகை யோவருள்
காணுவர் யோகிடமோ
நனியிது வென்றுணர் வரியவந் நைமிச
நலமெவர் புகலவலார். 11

[நைமிசாரணியச் சிறப்பு முற்றும்]

---

76 கடகரி – மதயானை. பறழ் – குட்டி. பருவமுன்னது – பருவகாலங்களை நினையாமல் எப்பொழுதும் உதவும்.

77 கனல் – வேள்வித்தீ. சுருவை – அகப்பை. கிளிமொழியே வேதமந்திரம் மகம் – வேள்வி. போதம் – ஞானம்.

78 வேதிகை – மேடை.

புராண வரலாறு

[அறுசீர்ச் சந்த விருத்தம்]

[இது முதல் ஐந்து செய்யுள்களில் நைமிசாரணியத்தில் திகழும் முனிவர்களின் பண்புசெயல் முதலாகிய சிறப்புக்கள் கூறுகிறார்]

79 அரியதொர் நைமிச மதனி லிருந்துநல்
லரியத வம்புரிவோர்
மனமொடு மெய்வச னஞ்சிவ மன்றிம
தித்தொரு புன்னிலையைக்
கனவிலு முன்னில ராய்க்கருத் தொன்றிக
லேச்சிறு வெண்மதியைப்
புனைசடி லத்தரை மனமலர் வைத்திடு
புண்ணியம் நண்ணினர்கள் 1

[முனிவர்களின் கல்வி கேள்வி ஞானச்சிறப்பு]

80 சுருதிய மங்கமும் உபநிட தப்பொருள்
துகளறு மந்திரமும்
இருளகல் தந்திர கலைகளும் ஆகம
மேயுப தேசகலைப்
பொருளு முணர்ந்துளத் தெளிவு பிறந்துயர்
புனிதந லந்தரவே
உருகுமெய் யன்பொடு சிவனை யுணர்ந்திடும்
யோகமி குந்தவர்கள் 2

[அவர்தம் திருமேனியழகும் பொலிவும்]

81 கண்டிகை சென்னியு மங்கள மார்பிரு
கைகளினும் புனைவோர்
குண்டிகை தண்டுபெ றுங்கையர் நீறுகு
லாவிய மேனியர்நீள்

---

79 உன்னிலராய் - கருதாதவராய். சடிலம் - சடாமுடி.

80 தந்திரம் - நூல்.

மண்டல வேணியி லங்குசி ரத்தினர்
மார்பின்வெண் ணூலர்திரி

புண்டர நீணுத லார்மிளிர் காவிபொ
ருந்திய நீளுடையார் 3

[அகஒழுக்கமும் பண்பாடும்]

82 காமமு டன்சின மோகம் விடுத்திடு
காரணர் பொய்யுரையா

வாய்மை பகர்ந்திடு நாவினர் நன்னெறி
மன்னிய சிந்தையர்நற்

ருமரை மீதுறு நீரென வேவிகீன
சார்வறு பூரணர்தண்

சோமக லாவமு தாகிய பார்வைது
லங்கிய நீள்விழியார். 4

[அருளுள்ளமும் சிறப்பும்]

83 பார்மிசை யுந்திய செந்துமி குந்துப
யந்துவ ருத்தமுரு

தேருற வென்றுந டந்திடு செய்கையர்
எல்வுயி ருந்தமுயிர்ச்

சார்வென வெண்ணி யிரங்குத யாவினர்
தண்ணளி யேவடிவாய்ச்

சீருற வெங்கும் விளங்குத வம்பெறு
தெய்வநன் மாமுனிவர். 5

---

81 திரிபுண்டரம் – மூக்கோடாக இடும் நெற்றிப் பூச்சு.

82 சோமகலாவமுது – தண்ணிய நிலவொளி.

83 செந்து – சீவராசிகள். பயந்து – அஞ்சி. தயா – கருணை.

[இது முதல் இரண்டு செய்யுள்களில் முனிவர்கள் சிலரின் பெயர்களைக் கூறுகிறார்.

84 பண்புமி குந்தப ராசரர் குறுமுனி
கற்கர் பரத்துவசர்

விண்புக முந்துரு வாசர்வ சிட்டர்வன்
மீகர் மிகும்பிருகு

மண்புகழ் கண்ணுவர் அத்திரி சத்திய
வாகுத தீசிசுகர்

எண்பெறு கின்றபோ தாயன ரேர்மிகு
வாமதே வர் 6

85 காசிபர் நாரதர் முற்கலர் மிக்கமார்க்
கண்டர்வ சுக்கபிலர்

தேசுமி குஞ்சம தக்கினி யங்கிரர்
திகழ்சவு னகர்கரணர்

மாசில்ச மாலியர் முதலிய நற்றவ
மாதவ ராகுமுனி

ஈசுரர் எண்ணிலர் பன்னிருவருடமி
யற்றுவ தாகுமகம் 7

[முனிவர்கள் வேள்விச்சாலையமைத்து யாகம்செய்து வாழ்ந்து வருதல்]

86 சயமுறு நைமிசம் அதனுள் வளர்ந்திடல்
தக்கதென் றுன்னிமனுப்

பயில்செப மந்திர கிரியை மிகுந்துப
யின்றிடு சாலைசமைத்

தியல்புறு கற்புடை மாதரு மைந்தரு
மெழில்மிகு சீடர்களும்

உயர்பணி செய்திட ஓமம் வளர்த்துமு
டிந்திடு நாள்வர, முன் 8

---

86 மனு - மனுநூல். உயர்பணி - மேலான பணி (பிறவியறுக்கும் பணி

[சூதமுனிவரின் தோற்றப் பொலிவு]

87 செந்துகி லாடை யசைந்திட நீறணி
தேசுசி றந்தொளிரக்
கந்தர மார்பிரு செங்கையின் மீதணி
கண்டிகை யேர்பொலியச்
சுந்தர வார்சடி லம்பவ ளக்கொடி
சூழ்வது போன்மிளிரச்
சந்திர விம்பமு கத்துறு பார்வைகள்
தண்ணரு ளேபொழிய 9

[சூத முனிவர் வருகையும் முனிவர்கள் மகிழ்ச்சியும்]

88 பாதச ரோருகம் மேதினி மீதுப
திந்து சிவந்திடவே
போதமி குந்தபு ராணர சங்கள்பொ
ழிந்திடு நாவுடைய
சூதர்வ ரத்தனி யங்குள மாதவர்
சூழ்ந்தெதிர் கொண்டுமிகு
காதலொ டுந்தொழ வேயவர் வந்தனை
கண்டும கிழ்ந்துமுனி 10

[முனிவர்கள் சூதமுனிவரை வரவேற்றுப் பூசித்தல்]

89 சங்கமி ருந்தது போதனர் அன்புத
ழைத்திடு மாறுதித்
தங்கவர் தம்பன சாலையி லாசன
மீதின மர்ந்திடலும்
இங்கிவண் நீர்வர நற்றவ மெண்ணிலி
யற்றினமென முகமன்
புங்கவர் சொல்லிய ருக்கிய பாத்திய
பூசையு வந்துதவி 11

---

87 செந்துகிலாடை – காவியுடை. தேசு – ஒளி. ஏர் – அழகு.

88 சரோருகம் – தாமரை மலர்.

89 சங்கம் – கூட்டம் (திரள்). அருக்கியம் – பூசனைத் தலைமை.

[சூத முனிவருக்கு உணவு படைத்து ஆரணியத்தைச் சுற்றிக் காண்பித்தலும் முனிவர்கள் வேண்டுகோளும்]

90 சந்தன மாலியொ டச்சதை யீந்துச
மைத்துள போனகமும்
கந்தமூ லாதிப லங்களு முண்டுக
ளித்திடவே நுகர்வித்
தந்தமி லாவுப சாரமு ரைத்துபின்
யாகமி யற்றிடமும்
பந்தமி லாதுத வங்கள்த ளித்துமி
பன்னுமி டம்பலவும் 12

91 மற்றுள காவண முமுயர் சூதர்ம
கிழ்ந்திடு மாறறிவித்
துற்றவன் வேறுமோர் வேதபா ராயணம்
ஓதிடு பள்ளியினிற்
பொற்றவி சீந்தமர் வித்தவ ரும்பல
பொற்புறு மாசனராய்ச்
சுற்றியி ருந்துப ராணமு ரைக்கிவை
சொல்லுதல் மேயினரால். 13

[வேறு]

[ஏழுசீர்ச் சந்த விருத்தம்]

[இது முதல் இரண்டு பாடல்களில் திருப்பெருந்துறை மான்மியத்தை விளம்புமாறு முனிவர்கள் சூதரை வேண்டுதல்]

92 அய்ய நின்ற னருளி னல்மு வாறெ னும்பு ராணமும்
செய்ய கேள்வி பெற்ற கஞ்சி றந்த னப்பன் மூன்றதாம்
மையில் காந்த மார்ச னற்கு மார சங்கி தைதனில்
தையல் பாகர் கேத்தி ரப்பிர சங்க மாம தற்குளே. 14

---

91 காவணம் – சோலை. தவிசு – இருக்கை (ஆசனம்)

92 கேத்திரம் – சேத்திரம் (இறைவன் எழுந்திருளியிருக்கும் தலம்) பிரசங்கம் – விளங்கித் தோன்றுதல்.

93 நீதி சேர்தி ருப்பெ ருந்து றைப்பெ ரும்மை நீமுனம்
ஓதல் கேட்டு மெம்ம னம்மு ணர்ந்த தில்லை போலுமால்
ஏத மற்ற வத்த லத்தின் இயல்பு கேட்க வினமெமக்
காத ரப்பெ ருக்க முற்ற தருள வேண்டு மென்றனர். 15

[சூதமுனிவர் சொல்லத் தொடங்குதல்]

94 அரிய மாத வத்தி னோர்சொல் வதுத னேச்செ விக்கொளா
உரிய சூத னோது வானு லப்பி லாத வைம்புலக்
கரிசு தீர்ந லம்நி றுத்து கருணை மெய்த்த வத்திர்காள்
தெரிவி லாத துளது கொல்சி றந்த வுங்கள் சிந்தையில். 16

95 கீவிர் சொற்ற அவ்வி யல்நி னைக்கு முன்னக் காதையாம்
தாவி லாத வலியெ டுத்த மிழ்த்த நெஞ்சு தளர்வகன்
ரூவ தாதி கைலை யென்னு மமுத சாக ரத்துளே
ஏவ லாமென் னுணர்வு மூழ்கிற் றென்று சொல்லி
யனுபவம். 17

96 அத்த லத்தின் மேன்மை முக்க ணையன் ஓத லன்றியே
ஒத்து ரைக்க வல்லர் யாவர் ஓது கென்ன உரைசெய்தீர்
அத்த கைக்கு ளென்ற னுல றிந்த வாறு கூறுகேள்
உத்த மத்த வத்திர் காளு வந்து கேண்மி னென்றனன். 18

[சொல்லத் தொடங்கிய சூத முனிவரின் பரவசநிலை]

97 சொலத்தொ டங்கு முன்க ணீர்து ளிர்க்க மெய்சி லிர்த்திடும்
இலக்க ணங்க ளோடு ளத்தி யம்ப வேண்டு வனநினைந்
தலக்க ணீக்கு காதை யாகு மமுதை நுங்கள் செவிகளே
துலக்க முற்ற வாய்க ளாகத் துய்ம்மி னென்று
சொற்றனன். 19

---

93 ஆதரம் – அன்பு. ஏதம் – பிழை, குறை.

94 உலப்பு – அழிவு. கரிசு – குற்றம்.

95 தா – குற்றம் – சாகரம் – கடல்.

96 முக்கணையன் – சிவபெருமான்.

97 அலக்கண் – துன்பம்.

[இத்தல வரலாறு பிரமானந்தந் தரும் ரசாயனமாம் என்பது]

98 இந்த மார சாய னத்தி னுக்கு மூல மாம்பொருள்
குந்த மாகு மறையி னீறு குலவு சார மாஞ்சரக்
கந்த வாத்ம நாத ராட லனிவி யாச வயித்தியன்
அந்தில் சேர்த்த தாம்பி ரம்மா னந்த மார சாயனம். 20

99 பிரிவி லாத மும்ம லப்பி ணிகள் தீர்க்க வல்லவர்
அரிய தாம்ர சாய னத்தை யறிவி னலுட் கொண்டுநீர்
உரிய வின்ப முற்றி னீடு முற்பவக்க டல்லெனும்
கரிசு நீக்கு புனைய தாமக் காதை மாண்பு கேண்மினே. 21

[இத்தலச் சிறப்பு கிரேதா யுகத்தில் யாக்கிய வல்கியர் சனகருக்குக் கூறியதாக விளம்புதல்]

100 ஞான சனக ருக்கு முன்ன லங்கொள் யாக்ய வக்கியர்
மோன ரகசி யம்மெ னம்மொ ழிந்த தந்த முறையதாம்
ஆன தன்மை யதுவி ரித்து ரைத்து நன்மை மல்குவ
தான கால முன்கி ரேத தாயு கத்தின் மிதிலையில். 22

[இது முதல் மிதிலை மன்னன் இப்புராண வரலாறு கேட்ட முறையினை விளக்குகிறார்]

101 மாத வக்கு ழாங்க ளும்நன் மகுட மன்னர் கணமுமெப்
போதி னும்நெ ருங்க நீடு புனித ராச யோகியாய்
சாத கர்க்கு ணர்த்து ஞான சனக ராசன் அரியணை
மீதி ருந்து வையம் யாவும் மேவி யாளும் நாளினில். 23

[பிரமஞானம் பெற்ற மாதவரைக் கண்டு ஞானம்பெற விரும்பிய சனகன் உத்தேச தானமியற்ற முற்படல்]

102 பிரம நிட்டை யுடைய ரோடு பேசி மாசி லருள்பெறற்
குரிய ரன்ன ரிவண் வரற்கு பாயம் யாவ தென்ன வோர்ந்
தரிய தாகு மோரி லக்க மாவி னைமுன் கொணருவித்
தெரிப சும்பொன் லை வைக்கெ லாம ருப்பு நெற்றி கண். 24

---

98 ரசாயனம் – மேலான மருந்து. சரக்கு – மருந்துக்குரிய பொருள்கள்.

99 உற்பவக்கடல் – பிறவிக்கடல்.

102 உபாயம் – எய்தும் நெறி.

[ஓரிலக்கம் பசுக்களை அலங்கரித்து வெளியே நிறுத்தல்]

103 காதி னோடு முதுகு நீண்ட களமி லங்கு காளினும்
மீது லாவு மணிகள் பட்டம் வெண்டை யங்கள் குச்சுமுன்
ஆதி யாய பணிக ளால லங்க ரித்தவ் வாவெலாந்
தீதி லாவ ரண்பு தஞ்செ றித்து வந்து கூறுவான். 25

[பிரமஞானமுற்றவர் யாவராயினும் இவற்றைக் கொள்ள அறிவித்தல்]

104 யாவ ரேனு மமல ஞான வறிவு பெற்ற தூயர்கள்
மேவி வந்து கொள்க விந்த வீமல வாவின் நிரையெனை
ஓவி லாத வன்பி னுவுத் தேச தான நல்கியே
மாவ லான்ப னுளன் னேர்கள் வருதல் பார்த்து
வைகினன். 26

[தவமுனிவர்கள் பலர் விரும்பாமையும் அவர்தம் நிலையும்]

105 சிலமெய்ஞ் ஞான முனிவர் தாமிச் செய்கை
யுன்னி யோதுவார்
அலகில் தீமை பசுவை யேற்றல் அதுவும் ராச திரவியம்
இலகு சின்ம யப்ப ரத்தை யெவர்சொல் வாரு ணர்ந்தெனை
விலகி னிவ்வ ாற தாய்வி ருப்பி லாம லாக்களை 27

[சனகனுக்கு அருள்புரிய யாக்ய வல்கியர் வருதலும் பசுக்களைத் தன் சீடர்கள் கொள்ளப் பணித்தலும்]

106 சனக ராச னெண்ண முந்த வத்தின் மிக்க மெய்யர்கள்
நினைவு முன்னி யாக்கிய வக்கியர் நெஞ்ச கங்க ளித்துவந்
தனைய தாகு மாவ னைத்து மருகு மேவு சீடரை
வினைய மின்றி நீவிர் கொண்மின் மேவி யென்ன
ஓதவே. 28

---

104 அமலஞானம் - பிரம நிட்டையால் வரும் ஞானம்.

105 ராசதிரவியம் - அரசனுடைய செல்வம். சின்மயப்பரம் - ஞான வடிவாகத் திகழும் பரம்பொருள்.

[சீடர் அவ்வாறே செய்ய மன்னன் அறிதல்]

107 சீட ராகு மனைவ ருஞ்சி றந்த சிந்தை யுடையராய்
கூடி யாவ னைத்தை யுங்கொ ணர்ந்து பர்ண சாலையில்
ஓடி டாது கட்டி வந்து துறவர் கோமுன் னண்ணினர்
வீடி லாத செய்கை தன்னை வேந்தர் கோவு
ணர்ந்துடன். 29

[மன்னன் மகிழ்ச்சியும் யாக்யவல்கியரை எதிர்கொள்ளலும்]

108 அளவி லாம கிழ்ச்சி கூர அரிய வாய முப்பொருட்
டெளிவு தங்கும் யாக்ய வக்ய தேசி கப்பி ரான்முனங்
களியி னேடி றைஞ்சி நின்று கருணை மேவு காட்சியிங்
கெளிதி லெய்த வெளிய னேனி யற்று நன்மை
யென்கொலோ 30

[மன்னன் தன் வேட்கையை அம்முனிவரிடம் கூறி வேண்டல்]

109 அரிய நின்ம லப் பொருள தாம்ப ரப்பி ரம்மமே
உரிய விந்த வடிவி னேடிங் குற்ற தென்ன வோர்ந்தருட்
பெரியை என்ம னைக்குள் வந்து பிட்சை கொண்டெ
னக்குளந்
தெருளு மாறு ணர்த்த வின்று திருவுளஞ் செய்
கென்றனன். 31

[முனிவர் மகிழ்ந்து பாராட்டிக் கூறுதல்]

110 அன்ன தாகவென்று ராச னைப்பு கழ்ந்து முனிவர் கோன்
உன்ன தாய மதிக்கு லத்து ளுற்ற மன்ன ருக்குளே
நின்னை யொத்து ளோர்கள் யார்நி ராம யப்ப ரம்பொருள்
தன்னில் வைத்த சிந்தை யாய்முன் சார்தி யென்ன
நிருபனும். 32

---

110 நிருபன் – மன்னன் (சனகன்)

[முனிவரை ஆசனத்திருத்தி அரசன் பூசித்தல்]

111 மங்க லப்பெ ருக்கொ டொத்த மாமு னிவ்வ ணைக்கொடு
பொங்கு சீர்கொள் மனைய கத்தொர் புதிய மண்ட பத்தினில்
சிங்க வாச னத்தி னிற்சி றந்தெ ழுந்தி ருக்கவைத்
தங்கு வேண்டு வனபு ரிந்த ருச்ச னைசெய் தேத்தியே. 33

[பூசனை ஏற்று முனிவர் உவந்துரைத்தல்]

112 புதுவி ருந்த ளித்து நின்று போற்றி யின்சொல் லோதியே
கதிவ ழங்கு நற்பொ ருள்க டாவ லுற்ற னன்முனி
அதிக நெஞ்ச முவகை பூப்ப வரச சீட னைநீ
மதித யங்க வரினை மக்கிம் மாண்பின் மிக்க துண்டரோ. 34

[பிரமஞான மேன்மையை முனிவர் சுட்டிக்கூறத் தொடங்குதல்]

113 அரச கேட்டி பரம ஞான நிடுத லெளிதி லெய்துமோ
கரும நெறிக ளாற்செ லற்க டாது மேன்மை யாமதற்
குரிய சாத னங்க ளாக உற்ற வாறு கூறுதும்
பரிவி னோடு நீகொ ளென்று பகர்தல் மேயி னனரோ. 35

[கேட்கும் முறைபற்றி முனிவர் கூறுதல்]

114 ஆசி லாத குரவன் முன்னர் ஆக, வேண்டு மன்னவன்
தேசு சேர்க டைக்கண் வைத்தல் சேர்வு வேண்டும், நின்மொழி
மாசி லாவன் னென்மு கத்தில் வாய்தல் வேண்டு மப்பொருள்
ஏசி லாது ளத்தி ருத்தி எண்ண வேண்டு மென்றுமே. 36

---

112 கடாவலுற்றனன் – விளவலுற்றனன்.

114 குரவன் – யாக்கியவல்கியர்.

[யோக நிலையிலிருந்து கேட்டுணர வேண்டுமெனல்]

115 சகமு தன்மை சிவம தென்று தானறிதல் வேண்டும்பின்
அகில மும்பி ரமமென் றறிந்து கொண்டு குருவருள்
தகுமொ ழியி லாச னந்த னில்லி ருந்தட் டாங்கமாம்
பகுதி சேரும் யோகி னற்செல் பவனனுள்ள டக்கியே. 37

116 தூன நிகர்த்த தான மூலா தார மேவு குண்டலி
யினை யெழுப்பி வட்ட மாக இலகு மாடு தாரத்தின்
தொனி சிறந்த வழி திறந்து துவாத சாந்தந் தன்னிலே
நனைகொ ளாயி ரந்த னங்கொள் நளின மேவு
மிறையுடன். 38

[பிரமஞானமுறுதலும் உற்றவர் பிறப்பும்]

117 செய்ய குண்ட லிப்பரை செலுத்தி யன்பு செய்துழி
உய்யு மாறின் னமுத மூறும் ஓங்கதற் குறும் பெயர்
அய்யர் கொள் பரப்பி ரமானந்த ரசம தென்பரத்
துய்ய போக மாந்தி மேலர்கள் சுத்த ஞான
முடையரே. 39

[பிரமஞானம் பற்றிய வினாக்கட்கு கூறத் தொடங்குதல்]

118 அரிய பிரம ஞான வுண்மை யறியுமா றனேக முண்
டுரிய வாகு மாங்க வைக்கு மோய வர்த்து துஞ்சில
கரையில் வேத நெறிக ளாற்க லந்து ணர்ந்து கண்டதை
விரவல் பாலில் நெய்யினை விரும்பு மாறு போலுமால். 40

119 சுசுரப் பிரசா தத்தால் எய்த வேண்டு மல்வழி
ஆசி லாது நைத்தும் வெண்ணெ யதனில்
நெய்கொ ளாறுபோல்
தேசு சேர தேதெனிற் செனிப்ப தாமெண் பத்துநான்
கோசை சேரி லக்க பேத முறுமு வற்று ளூற்பவம். 41

---

115 பவனன் – காற்று (பிராணன்)

119 ஆசு – குற்றம். ஓசை – எண்

120 அரிய தாம தற்கு ருஞ்சொ லங்க பேத மின்றியே
உருவ மெய்த லரித தற்குள் உத்தமக் குலந்தனில்
மருவு றச்செனித்தல் மிக்க வரம தாகு மதனிலும்
பெரிது வேத முழுது ணர்ந்து பெருமை சேர்த
லரியதாம். 42

[பிரமஞானம் பெறுதற்கரியது என விளம்புதலும் தவுமியர் புரூரவாவுக்கு அருளிய வரலாற்றையும் கூறல்]

121 கரும சீல ஞதல் ஞானி கருது தற்கு மரியதாம்
பெருக வுங்கி டைப்ப தன்று பிரம ஞானி யாகுதல்
மருவு மந்த ஞான மெய்து மாறு முன்பு தவுமியர்
புரூர வாவி னுக்கு ரைத்த புரையி லாத நெறியினை. 43

122 நேய மோடு சனக கேள் நிகழ்த்து தும்மு னந்திரே
தாயு கந்த னிற்பு ரூர வாவ றம்பெ ருக்கியே
தாயெ னப்பல் லுயிரெ லாந் தாங்கி மண்பு ரக்குநாள்
மாய நீங்கு தமிய யோகி வரவு முன்பு கண்டனன். 44

[புரூரவா தவுமியரை வரவேற்று உபசரித்தல்]

123 கண்டு வந்தெ முந்து முன்பு கைகு வித்தி றைஞ்சியே
எண்ட ராத வுவகை யோடி ருக்கை யீந்த ருக்கியம்
மண்டு தூப தீப நன்ம லர்க ளிட்ட ருச்சியா
உண்டி யாதி தந்து நின்று வந்து பசரித்தபின். 45

[புரூரவா தவுமியரிடம் தன் விருப்பங் கூறல்]

124 மாம றைப்பொ ருட்டி றத்தின் வல்ல ஞான தேசிகர்
நீமு னம்மெ மக்க ளித்த நிகரில் வேத மாகமம்
ஏம மார்பு ராண நீதி யினிதி ருந்து மனுநெறி
சேம மாரும் வருண மாசிரமம் நற்ற லம்புனல். 46

[ஆயிரத்தெட்டு சிவத்தலங்களில் சிலவற்றின் பெருமையருளியதை முன் உணர்ந்துளேன் எனல்]

125 வேத நுட்ப மியா வையும் விளங்க வுற்று ணர்ந்தனன்
ஏத நீங்கு மாயிரத் தொரெட் டினுஞ் சிவத்தலத்
தோத வின்னம் யாவையும் உரைத் திருந்த அவைதனில்
மாது பாகர் கேந்தி ரத்தின் மாண்பு மிக்க தவைசில. 47

126 மூர்த்தி மேன்மை சிலவனங்கள் முதன்மை யுள்ள சிலபுனல்
தீர்த்த மேன்மை சிலபுரித்தி றங்கள் நன்மை யுளசில
சீர்த்தி மேவு பத்தர் செய்கை கெழுவு நற்ற லஞ்சில
ஏற்கு மிந்த வாறி னுன்கி ரண்டு சேர்ந்த துளசில. 48

[எல்லாச் சிறப்பும் வாய்ந்த தலம்பற்றிக் கேட்டல்]

127 இன்ன வாறு நலமு மொத்தி ருக்கு நற்ற லம்முனுஞ்
சொன்ன துண்ட தனின் நன்மை சொற்றல்
வேண்டு மென்றனன்
அன்ன தாக வென்று மன்ன னேடை ருந்த வத்தர்கோன்
உன்னு நேச மன்னு மெய்யு ளத்த னாகி
யோதுவான். 49

[தருமியர் சொல்லத் தொடங்குதல்]

128 வெள்ளியம் பொருப்பி னுறும் வீற்றி ருக்கு முக்கணெம்
வள்ளல் மாது மைகளிக்க மறுவில் ஞான ரகசியம்
பிள்ளை வெண்மதிச் சடைப் பிரான வன்ற னருளினுல்
உள்ள வாறு ணர்ந்தனம் உரைக்கு தும்முன்
னக்கதை. 50

---

126 ஆறு :- மூர்த்தி, வனம், புனல், தீர்த்தம், புரி, அடியார் செயல்.

128 பிள்ளைவெண்மதி - பிறைச் சந்திரன்.

129 வேத மாக மங்களின் விளம்ப ரங்கள் யாவையுந்
நீதி லாது செய்ப லங்கள் சித்த சுத்தி முத்தியும்
ஈது ணர்ந்த வர்க்கெளிதி னெய்து மன்ன தகையதை
நீதி யோடு கேண்மி னென்ன நிருப னன்பி
னுரைதுவான். 51

130 கருணை மேரு வென்னவேயென் கண்முன் வந்த நற்றவக்
குருசி லென்முன் வெள்ளியங் குவட்டின் மேவு நம்பனை
மரும லர்க்க ணிமைய வல்லி மற்றெ வன்வி னையினுள்
அருள்செய் யென்ன வதனை யுண்மை யாய
மாத வன்சொல்வான். 52

[புராண வரலாறு முற்றும்.]



---

129 விளம்பரம் – விளக்கம்.

கைலாசச் சிறப்பு

[அறுசீர் விருத்தம்]

131 பொன்னின்மால் வரைபழுத்தல் போலிமயப்
பாங்கர்வெள்ளிப் பொருப்ப தன்கண்
மன்னிவளர் தருக்களெலாம் கற்பகமெங்
கெங்கும்நவ மணிக்கு வாலம்
துன்னியநீ ரோடையெலாம் பொற்கமலம்
பூத்திதொளிரும் தோற்ற மெங்கும்
பன்னரிய பரிமளங்கொண் டிளந்தென்றல்
புகுந்துலவும் பரிசு தோன்ற. 1

132 மலையடியின் புறங்களெலாம் குறட்பூதப்
படைகுழுமி மகிழ்வி ஞடும்
தலைசிறந்த களிற்றினங்கள் பிளிற்றெவிபுள்
ளொலியரு தருநல் லோசை
அலைகடலேழ் முழக்கெலுமா முழக்கமெலாம்
மறைமுழக்க மடக்கிக் காட்டும்
விலையகன்முத் தாரமென வெள்ளருவி
யெம்மருங்கும் மிளிரு மன்றே. 2

133 சுற்றுமணி மாமதிளும் சூழ்மணிக்கோ
புரம்பலவும் துன்றி யோங்கும்
மற்றவற்றின் முதற்றிருவா யிலிற்சுருகை
பிரம்புகரம் வயங்கத் தாங்கி
முற்றுணர்ந்த சீரியனாய் முக்கணிறை
வன்றனருள் முதன்மை பூண்டு
வெற்றிகொள்பற் பலகணங்கள் சுற்றவருள்
நந்தியுமா விறலி னேங்கும். 3

---

131 பொருப்பு – மலை. குவால் – குவியல். திருவலகு – குப்பைகளைத் திரட்டும் கருவி.

134 மாலயனிந் திரன்முதல்வா னவரெண்ணி
லாதனர்போய் வாயிற் றங்கும்

காலமிடை தெரிந்துபுகு நெருக்கின்முடி
களின்மணிகள் கலந்து சிந்திப்

பாலெவையுங் குவிதலினைற் றிருவலகான்
மெய்யடியார் பரிந்து கூட்டிக்

கோலமணிக் கூடையிற்கொண் டடிவாரந்
தனிற்சொரியும் கொள்கைத் தாகும். 4

135 அரம்பைதிலோத் தமைமுதலா மகளிர்புரி
நடனத்தின் அழகும், பாடற்

சுரஞ்சதிக்கொத் திடியதிர்ச்சி போன்முழங்குந்
துந்துபிகள் தொனிக்கும் மாண்பும்

நரம்பிசையா ழொலியினெடு தும்புருநா
ரதர்மிடற்றின் நாதப் பண்பும்

பெருங்கருந்தே னளியினங்கள் முரலொலியும்
எஞ்ஞான்றும் பிரியா தோங்கும். 5

136 கற்பகப்பூ மழையுமன்பர் விழியருவி
பொழிமழையும் கவின்கொ டானிற்

பொற்புறவார்ந் தொழுகியசெந் தேன்மழையும்
நிதிக்கோமான் பொழியும் மிக்க

அற்புதமா நிதிமழையும் கருங்கோண்முப்
பருவங்கண் டளிக்கும் துய்ய

பொற்புறுநீர் மழைபோல வெஞ்ஞான்றும்
ஒழியாது பொழியு மன்றே. 6

---

135 தேன் – வண்டு. அளி – வண்டு.

136 நிதிக்கோமான் – குபேரன்.

137 முனிவரர்தம் பெருங்குழுவோ வமரர்கடம்
பெருந்தொகையோ, முயங்கும் வெற்றித்
தனிமையகல் கணத்தொகையோ வவர்க்கிறைவ
ராந்தலைவர் தங்க ளெண்ணே
இனிமைதருஞ் சரியையரோ கிரியையரோ
யோகியரோ எழில்கொள் ஞானங்
கனிதருசிந் தையர்கணமோ மிகுதியென
வுணர்ந்துசொலக் கடவ தன்றே. 7

138 சாலோக முற்றவரோ சாமீபம்
பெற்றவரோ சாரூ பத்தின்
பாலுளரோ யானெனதற் றகம்புறமுஞ்
சிவமயமாய்ப் பரமா னந்தச்
சீலவனு பவமுடைய முத்திநிலைச்
செல்வர்கடந் திரளோ மிக்கென்
றேலவுணர்ந் தோதவரி தித்தகைவெண்
சோதிவரை யினில்நாப் பண்கண். 8

139 இலகுநவ மணிமயத்த வாகியமந்
திரமான்கொண் டிருக்கு மந்த
நிலைமைபெறு மாலயத்து ளரியணையின்
புறத்திமைய நிமலை யோடும்
கலையமுத மதியொடர வணிசடைக்கண்
ணுதலெவர்க்குங் காட்சி தந்து
குலவியமெய் யடியரினம் போற்றல்செய
வீற்றிருக்கும் கொள்கைத் தாகும். 9

[கைலாசச் சிறப்பு முற்றும்.]

தேவிக்குச் சுவாமி
சிவபுர மகிமையுரைத்த சருக்கம்

[அறுசீர் விருத்தம்]

[உமாதேவி இறைவனை நோக்கி விளவுதல்]

140 அத்தகை வெள்ளிக் குன்றத்
தமர்ந்தருள் கருணை முக்கண்
வித்தகன் மனத்தி யானம்
விளங்கவீற் றிருத்தல் நோக்கி
முத்தவெண் முறுவற் செவ்வாய்
மொய்குழ லுமையாள் மிக்க
பத்தியின் வணங்கி நின்று
பரிவுடன் பகர்த லுற்றாள். 1

141 அளவிலா வண்ட கோடி
யவைக்கெலாம் முதன்மை பூண்ட
களமலி கண்டத் தெண்டோள்
கருணையங் கடலே! மிக்க
வளமலி முகுந்த னதி
வானவ ரெவரும் போற்றற்
குளபெருந் தகைமை யாரை
யுன்னினை? மேலோ ருண்டோ? 2

[இறைவன் விடை கூறுதல்]

142 உரைத்தி,யென் றிரந்து வேண்ட
ஒதுதும் உமையே கேளிவ்
வருத்தமிந் நாளின் காறு
மறைந்திலம் வெளியில் நீயும்

---

140 முக்கண்வித்தகன் – சிவபெருமான். முறுவல் – பல்.

141 களமலிகண்டம் – நீலகண்டம். முகுந்தன் – திருமால்.

விருப்பமுற் றிருநா ளேனும்
வினவின தில்லே வேதக்
கருத்தினுந் தோன்று தொன்று
கழறிலுண் டதுவும் நாமாம். 3

143 நம்மையே நாமு பாசிக்
கின்றனம் நறும்பூங் கோதாய்!
செம்மையா மதனே நாமும்
செப்புதும் பரிந்து கேணீ!
மெய்ம்மைநிற் குணஞ்ச குணம்
எனவிரண் டவையுள் முன்னம்
விம்முநிற் குணந்தா னென்றும்
மிளிர்பரஞ் சோதி யாயும் 4

144 பிரிவில்கே வலம தாயும்
பிரகிரு திக்கு மேலாய்
விரிவுற விருக்கும் அந்த
வியத்தகு பொருளே யாகும்
மருவுறத் தியானித் தேத்தி
வழிபடும் பொருட்டாய் நாமென்
றுருவுகொள் சகுண மாகி
யுற்றதென் றறிக மாதோ. 5

145 அந்தநிற் குணம்நம் மாலா
ராதிக்கப் படும தற்குஞ்
சிந்தைசெய் நமக்கும் பேதச்
செய்கையின் றெமது தோற்றம்

---

142 அருத்தம் – பொருள். அறைந்திலம் – கூறுதிருந்தேன். வெளியில் – வெளிப்படையாக. கழறில் – சொல்லின்.

143 உபாசிக்கின்றமை – போற்றித்துதிக்கின்றமை. பரிந்து – அன்புற்று. நிற்குணம் – குணமில்லாமை. சகுணம் – குணத்தோடுகூடியுள்ளமை.

144 கேவலம் – கைவல்யத்தோடுகூடியது. பிரகிருதி – மூலமாயை.

வந்ததற் கதுவே மூலம்
வளருமைந் தொழிலுண் டாக்கி

விந்தைகொள் சகமே லாத்மா
விற்செறித் ததனிற் சேர்வோம். 6

146 உலகெலாஞ் சிருட்டித் தாக்கி
யொடுங்குதற் கேது வாய்,நின்

மலமதாய் மனத்துக் கெட்டா
மாண்பதாம், அதுகேள் மின்னே!

இலகிய ஆத்மா வாம்நாம்
இயம்பது பரமான் மாவாம்

அலகில்நாம் கயிலை வாசி
யதுமகா கயிலை வாசி. 7

147 அதிகநம் கயிலை மூலம்
ஆமகா கயிலை மேலாய்

வதிதரும் அதனுக் கொப்பு
வசுந்தரை தனிலொன் றுண்டு

கதிதரு மதுதா னதி
கயிலையாம் எந்த ஞான்றும்

பொருவில்நிற் குணம தாம்மெய்ப்
பொருளதின் வதிவ தாகும். 8

148 கயிலைமுன் னுளதா லாதி
கயிலையென் றதற்குப் பேராம்

மயிலியல்! அதற்கொப் பாக
மற்றொரு தலமு மில்லை

---

145 ஐந்தொழில் – படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல்.

146 நின்மலம் – மலமில்லாமை.

147 வசுந்தரை – பூமி.

பயில்தரும் நமக்கு வாசம்
பண்ணுதற் குரிய தாயவ்
வயின்அவ னியில நேக
மாத்தல மவையி னுள்ள 9

149 சிவகனை யெவையுங் குந்தத்
திருத்தரு வுருவ மாக
அவிர்தர விளங்குந் தோடோர்
ஆயிரம் நளின மேவும்
தவர்தொழு துவாத சாந்தத்
தானமே குந்த மென்னும்
கவிரிலா மொழியா லந்தக்
கடிநக ரினுக்கெஞ் ஞான்றும். 10

150 தங்கிடு துவாத சாந்தத்
தலமெனும் பெயரவ் வூரின்
வந்துதோன் றுயிர்கள் யாவும்
வயங்குறும் நமக்கொப் பாகி
அந்தமில் சீவன் முத்த
ராவர்மற் றையத லங்கள்
எந்தமக் கினிய வாமித்
தலத்தினை யொவ்வா மின்னே. 11

151 அத்தல மதனில் வாழ்வார்
அனைவரும் சிவமே யந்த
மெய்த்தல மதனின் மேலாம்
மிளிர்பரப் பிரம மேதஞ்
சித்தமார் தருமா லீலை
செய்துசா னித்திய மாகிப்
பத்தர்கள் துதிக்க வாசம்
பண்ணுமுள் மகிழ்வி னோடும். 12

---

149 குந்தம் – திருக்குருந்தமரம். தோடு – இலை, இதழ். நளினம் – தாமரை தவர் – தவசியர். துவாதசாந்தம் – உச்சிக்குமேல் பனிரண்டங்குலத்தில் உள்ளதில்லை. கவிர் – பிளவு.

151 சானித்தியம் – முற்பட்டிருத்தல்.

152 கேடிலாப் புவனத் தென்றும்
கெழுமிய வறுபத் தாறு
கோடிதீர்த் தமுமவ் வூரிற்
குலவிட வழைத்து வைத்த
பீடினை லதற்கு நாமம்
பெருந்துறை யதுவு மன்றி
நாடிலங் குளநீர் யாவும்
நலங்கொள்வா னதிக்கொப் பாகும். 13

153 அன்னமா தலத்தில் நாளும்
அமர்ந்தருள் பிரமம் பூவின்
மன்னிவா முயிர்க ளெல்லாம்
வாழுமா றுளத்த டைத்துத்
தன்னதோ ரிச்சை தன்னில்
தயங்கருட் குருவாய்த் தோன்றிப்
பன்னுமும் மூர்த்தி கட்கும்
பரிவினே டுபதே சித்தும். 14

154 ஞானவம் பரமா மன்றி
நாடகம் நடித்தும் பத்தர்
ஆனவர் தமக்கு முத்தி
யருளியும் ஆல வாயில்
தேனிகர் அறுபான் நான்கு
திருவிளை யாடல் மற்றைத்
தானங்கள் தனிலும் லீலை
தகுவசெய் துறையுங் குந்தம். 15

155 சுருதிகள் இடைவி டாமல்
துதித்திடும் பொருளா யன்பர்
பரவுமா யிரம்வெண் டோட்டுப்
பதுமமீ துறைவ தாய்மெய்

---

152 புவனம் - உலகம். பீடு - பெருமை.

மருவிய பரமா னந்த
மயமதாய் உயர்மூ வர்க்கும்

அரியதோ ற்றத்திற் கேது
வாய்வளர் சோதி யாகி 16

156 அளவிடப் படாத தாகி
அணுவினுக் கணுவாய் மிக்க

வளமலி மகத்துக் கெல்லாம்
மகத்ததாய் எமக்குத் தேவாய்

களிகொளப் புரத்தின் கண்ணெக்
காலமும் வசிக்கும் முத்தி

எளிதின்நல் காத்மநாதர்
எனுந்திருப் பெயரி னேடும். 17

157 அப்பொருட் டியானஞ் சொல்வேம்
அகத்திருக் கமல நாப்பண்

துப்புறு கின்ற தீபச்
சோதியாய் ஏக மாகி

வைப்பெனும் வேத சார
மாய்ப்பிர ணவமாய் மேலாய்த்

தப்பிலா அளவைக் கெட்டா
தாய்,அன்பர்க் கெளிய தாகி 18

158 மற்றைய தலங்கள் தோறும்
வசிப்பதாய் யாவ ரேனும்

அற்பொடு தியானிக் கின்றோர்
அவர்களே முத்தர் அந்தச்

---

155 அம்பரம் – ஆகாயம்.

156 பதுமம் – தாமரை.

157 மகத் – பெரியது.

158 நாப்பண் – நடு. துப்பு – வலிமை. அளவை – அளவைநூலறிவு.

சிற்குணங் குருந்தூர் மேன்மை,
சிரவணம் பயிற்சி செய்வோர்
பற்றொடு மவ்வூர் தேடிப்
பார்ப்பவர் வாசஞ் செய்வோர். 19

159 ஓதுமெய்ப் பொருளெந் நாளும்
உறைந்திடு மதன்கண் ஞான
சாதகத் தறிந்தோர் யாரும்
தனிப்பெரும் முத்தி சேர்வர்
நீதிசேர் அத்த லத்தின்
நேர்மையார் அறிய வல்லார்
மாதுகேள்! அவ்வி றைக்கு
வனங்குந்த வனம தாமே. 20

160 புரஞ்சிவ புரமாம் கேத்திரம்
புகல்சிவ கேத்திர மாகும்
திரங்கொளிம் மூன்றுங் காணிற்
சிந்திக்கில் அவர்கள் தம்பால்
உரங்கொள்தீ வினைக ளெல்லாம்
ஒருவிநன் முத்தி சேர்வார்
வரந்தரு வன, புரங்,கேத்
திரமிம்மூ வகையொன் றுக்கே 21

[சிவபுரத்தினை முக்கரணங்களாலும் வழிபடுவோர் அடையும் பயன் கூறுகிறார்.

161 மூன்றுபே ருண்டூ ரெட்டு
முதன்மைசேர் நாமம் அவ்வூர்
ஒன்றிவா ழிறைக்குண் டாகும்
இயம்பிய விவற்றை நெஞ்சில்

---

159 அற்பு – அன்பு. சிரவணம் – கேட்டல்.

160 மாது – உமாதேவி.

161 கேத்திரம் – தெய்வத்தலம். ஒருவி – நீங்கி.

ஊன்றியே நினைத்தல் ஏத்தல்
உவந்தவண் வசித்தல், மேன்மை

தோன்றிடக் கேட்டல், குந்தந்
தொழுதுகண் டிறைஞ்சி வாழ்த்தல் 22

162 தீர்த்தங்கள் தம்மில் மூழ்கல்
திருப்பணி புரிதல் அன்பிற்

காத்திருந் தலர்தூய்ப் போற்றல்
கைங்கரி யங்கள் செய்தல்

ஏத்துறு தியானஞ் செய்தல்
இயம்புபத் தினில்ஒன் றேனும்

வாய்த்திடி னெண்ண மெல்லாம்
வாய்த்திடப் பெறுவரன்றே. 23

163 வளமலி சிவபு ரத்தில்
வதியுமோ ருருவா யன்பர்

உளமகிழ் வெகுவி தங்கொள்
உருவமாய் மறைகட் கீரூய்

அளவில்தத் துவம தாகும்
அத்துமகா யகரே துய்ய

தவளவாள் நகையாய் எம்மாற்
சாவிக்கும் பொருளென் ரேர்வாய். 24

[உமை சிவபுரத்தின் மேன்மையை விளம்ப வேண்டுதலும் இறைவன் அருள்தலும்]

164 இவையெலா மெம்மை யாளும்
இமயநல் லணங்கு கேளா

நவைகள்தீர் மனத்த ளாகி
ஞானவா ரமுது பின்னும்

---

163 எண்ணம் – விருப்பம்.

164 தவளம் – வெண்மை. வாள் – ஒளி.

புவனநா யகமே யந்தப்
புரந்தனி லுள்ள மேன்மை

அவையெலா முணர்த்தி! என்ன
அருள்செய்தான் அமல மூர்த்தி. 25

166 அண்ணலவ் விறைவிக் கங்கண்
அருளிய மெய்சேர் உண்மைத்

திண்மையார் பொருள்க ளெல்லாம்
தெருண்டனன் நந்தி மிக்க

புண்ணிய சனக்கு மாரப்
புனிதமா முனிவன் ஞான

எண்ணமோ டிமைய மெய்தி
இருந்தவ மியற்ற முன்னுள் 26

167 அம்முனி தவத்தால் நந்தி
ஆனனந் தெரிந்தோம் மண்ணில்

இம்முனி வனுக்கு நாம்முன்
இயம்புமுற் கயிலை மேன்மை

செம்மையோ டுரைத்தி யென்னச்
செப்ப,வம் முனிவன் கேளா

மெய்ம்மைசேர் வுற்ரு னந்த
மேன்மையை யோர்கா லத்தில் 27

168 நாமகள் கணவன் சொல்லால்
நாரதர் வணங்கிக் கேட்பச்

சேமமார் சனக்கு மாரத்
திருமுனி யுரைத்தான் பின்னும்

---

165 கலை – குறைபாடு.

166 தெருண்டனன் – தெளிந்தனன். இருந்தவம் – பெருந்தவம்.

167 ஆனனம் – முகம்.

ஏமமார் இமைய வெற்பில்
இறைமணம் புணர்க்க வேண்டித்
தாமமார் கூந்தற் றேவி
தனித்தவம் புரியுங் காலை 28

169 வேதன்மால் முதலாயுள்ள
விண்ணவ ரெவருங் கூடிப்
போதகா ரதனீ சென்றிப்
புவனங்கள் விருத்தி யாகச்
சீதமா ரிமைய வெற்பிற்
றேவிநோற் றிடுகின் ருளுக்
காதிநற் கயிலை மேன்மை
யறைந்திவண் வருதி யென்ருர். 29

170 அன்னது செய்வல் யானென்
றம்பிகை பாற்சென் றந்த
நன்மைசேர் தவத்தின் மாண்பே
நவின்றனன்; அரசர் ஏறே
முன்னம்நாம் அறிந்த அந்த
முறைமையே பகர்து மென்ருன்,
என்னையாள் முனிவர் கோவே
இயம்பென விறைஞ்சச், சொன்னன். 30

[சுவாமி தேவிக்குச் சிவபுர மகிமையுரைத்த சருக்கம் முற்றும்.]

---

168 தாமம் – மாலை.

169 வேதன் – பிரமன். போதம் – ஞானம். சீதம் – குளிர்ச்சி.

170 அரசன் இறைஞ்ச முனிவன் சொன்னன்.

புரூரவாவுக்குத் தவுமியர்
ஆத்துமநாதர் மகிமையுரைத்த சருக்கம்

[புரூரவா ஆத்மநாதர் என்னும் சொற்பொருளை விளக்கவேண்டு மெனத் தவுமியரை வேண்டுதல்]

171 ஏற்றமாம் ஆத்ம நாதர்
இயல்பெலாம் புரூர வாவே

சாற்றுதுங் கேட்டி யென்னத்
தவுமியர்த் தொழுது வேந்தன்

ஆற்றல்சேர் ஆத்ம நாதர்
ஆமிரு மொழிக்குந் தோன்றப்

போற்றல்சால் பொருளீ தென்னப்
புகலுதி குரவ! என்றான். 1

[தவுமியர் கூறத் தொடங்குதல்]

172 அருள்முனி பகர்வான் முன்சொல்
ஆத்மாவி னிலக்க ணந்தான்

சுருதியி னிருந்த வாறு
சொல்லுதும் அண்ட கோடி

கருவுத ரத்த ராகி
வளர்விராட் டென்று பேராய்ப்

பொருவகல் விபுவாய் மேலாம்
பொருளதாய்ப் புருட ராகி 2

---

171 இருமொழி :- ஆத்ம - நாதர் - என்னும் இரண்டு சொற்கள்.

172 விராட் - பரப்பிரமம். விபு - நித்தியமான பரிபூரணம். புருடன் - புருடதத்துவம், சீவான்மா.

173 இருப்பவ ரவரே ஆத்மா
இயம்பிய வவர்க்கு நாதர்
கிருத்தியம் ஐந்துந் தோன்றற்
கேதுவா யகண்ட மாகி
விருப்பில்சூக் குமமாய்த் தோன்ரு
விமலகே வலமாய் ஒன்ருய்
மருத்திகழ் பரமா னந்த
மயமதாய் முதலீ றின்ருய் 3

174 சோதியாய்ப் பிரம மாகித்
தோன்றுமெய்ப் பொருள தாகும்
ஆதலால் ஆத்ம நாதர்
ஆயினர் அவரை வேதம்
கீதிலாப் பொருளென் றேதோத்
திரஞ்செய்யு முலகை யெல்லாஞ்
சாதல்செய் தொடுக்குங் காலக்
தம்மிடை யொடுக்கிக் கொண்டே 4

175 சிவபுர மதனில் வாசஞ்
செய்வரச் செய்கை யாலும்
அவர்பெயர் ஆத்ம நாதர்
ஆமவர் தம்மாற் போக்கும்
புவனநீள் காலத் தெல்லை
புகலரி தெனினும், வையம்
தவறிலா தளிக்குங் கோவே
சாற்றுதும் சிறிது கேண்மோ. 5

[தவுமியர் காலத்தின் அளவைகளைக் கூறுதல்]

176 கண்ணிமை யளவீ ரொன்பான்
காட்டமக் காட்டம் முப்பான்
நண்ணிடிற் கலையாம் அந்த
நற்கலே ஆறைந் தானல்

---

173 கிருத்தியம் - செயல் (ஐந்தொழில்) மரு - மணம்.

175 புவனம் - அண்டம். புகலரிது - சொல்லுதற்கரிது.

திண்ணமார் கணமாம் ஓதல்
செயுங்கணம் மூந்நான் காகில்
எண்ணுமோர் முகூர்த்த மென்ன
வியம்புவர் உணர்வின் மிக்கோர். 6

177 ஓதிய முகூர்த்தம் மூவைந்
தொருபகல் பகலி ரண்டேல்
தீதறு தினமரம் அந்தத்
தினம்பதி னேந்து பக்கம்
கோதக விரண்டு பக்கம்
கூடுதல் மாதம் அந்த
மாதம்பன் னிரண்டு கூடல்
வருடமென் றோது வாரே. 7

[யுகங்களின் கால அளவு கூறுதல்]

178 பகருமவ் வருடம் ஒன்று
பண்ணவர் தமக்கோர் நாளாம்
அகமிலா அந்நாள் மூந்நூற்
றறுபது வருட மன்னேர்க்
கிகலிலவ் வருடம் நாலா
யிரத்தெண்ணு றுகுங் கிருத
யுகமுவா யிரத்த றுநூ
றுந்திரே தாயு கந்தான். 8

---

176 கண்ணிமை - நொடியளவு. காட்டம் (காஷ்டை) லவம் எட்டுக் கொண்ட ஒருகால அளவு. கலை - (எட்டு விநாடி) முப்பது காட்டம் கொண்ட கால அளவு. ஒரு பாகையில் அறுபதில் ஒன்று. கணம் - முப்பது கலை கொண்டது. (நான்கு நிமி) முகூர்த்தம் - (முகூர்த்தம்) பன்னிரண்டு கணம் கொண்டது. (இங்கு நாழிகையளவு)

177 பகல் - ஒருநாள் பொழுதின் அரைப்பகுதி. தினம் - நாள். பக்கம் - பட்சம்.

178 பண்ணவர் - தேவர். அகமிலா - (அஃகமில்லா) சுருங்காத. இகல் - மாறுபாடு.

179 இன்றுவா பரமி ரண்டா
யிரத்தொரு நானூ றுகும்

அன்றியுங் கலியு கத்துக்
காயிரத் திருநூ றுக

வென்றிகொள் பன்னி ரண்டா
யிரமெனும் வருடங் கூடி

ஒன்றிய வெண்.....சதுர்
யுகமென லாகு மன்றே. 9

[மனுமுதலாகத் தேவர்களின் கால அளவு கூறுதல்]

180 சதுர்யுகம் எழுப தாகச்
சாற்றுமோர் மனுவின் காலம்

அதிகவம் மனுக்க ளீரேழ்
ஆம்வரை யுகநா லுஞ்சேர்ந்

திதமுறு தொகைதா மோரா
யிரமதா மனுக்க ளந்தி

விதமுறும் ஈரா றுக்கும்
விளம்பிய இருப தோடே 10

181 ஒதுமிச் சதுர மென்னும்
யுகமோ ராயிரமும் வேள்வி

நாதனுக் கோதுங் காலம்
நணுகிய கற்ப மாகும்

போதுறை பவருக் கந்தப்
புரந்தரன் கற்ப மோர்நாட்

பாதியா மோர்நா ளாதல்
பகர்தொகை பின்னும் சேர. 11

---

179 இன்றுவாபரம் – இனிய துவாபரயுகம் 12000 வருடம். ஒரு சதுர்யுகம் என்பது.

180 அந்தி – முடிவுறுங்காலம்.

181 வேள்வி நாதன் – இந்திரன். ஓராயிரஞ் சதுர்யுகம் ஒருகற்பமாகும் என்பது. போதுறைபவர் – நான்முகனுகிய பிரமன். இந்திரகற்பம் இரண்டாயிரம் கொண்டது பிரமனுக்கு ஒருநாள்.

182 இயற்சதுர் யுகமி ரண்டா
யிரமென லாகும் அந்நாள்
அயற்சியில் லாது முந்நூற்
றறுபதோர் வருட மாகும்
வியக்குமவ் வருடம் நூறு
விதியுயி ரிறக்குங் கற்பம்
முயக்குமக் கற்பங் கோடி
முகுந்தனுக் கோர் நாட்பா தி. 12

183 ஓரிரு கோடி சுற்பம்
உறிலவற் கொரு நாளாகும்
ஆருயங் நாள்கள் முந்நூற்
றறுபதோர் வருட மந்தச்
சீருறு வருடம் நூறு
செல்லரி கற்ப மாகும்
ஏருறும் அரிகள் கோடி
இறந்திடின் நகைக்கும் எந்தை. 13

[அண்ட உலகம் அழியுங்காலமும் தோற்றமும்]

184 அப்பொழு திந்த அண்டத்
தாருல கழியும் முற்றும்
தப்பற வழியுங் காலஞ்
சாற்றிடி லுரைக்கெட் டாவால்
அப்பிர மாணம் வல்ல
அண்டங்கள் எவையும் கால
வைப்பது நிகழின் எந்தை
யாலவை மாயு மன்றே. 14

---

182 விதி – பிரமன். இறக்கும் கற்பம் – முடிவுறுங்காலம். பிரமனுடைய ஆயுட்காலம் முகுந்தனுக்கு அரைநாள். முகுந்தன் – திருமால்.

183 செல் – செல்லின். அரி – திருமால் அரிகள் – அரிகற்பங்கள். அரிகற்பங் கோடியாலல் இறைவன் (சிவபெருமான்) சிரிக்கும்.

184 இறைவன் சிரித்தால் அண்டத்தில் உள்ள உலகம் யாவும் அழிவுறும். தப்பற – குறைவற உரைக்கெட்டா – சொல்லுதற்கியலா. இப் பிரமாணத்திற்கு அப்பால் உள்ள அண்டங்கள் எவையானாலும் அவையவைக்குரிய காலவைப்பு முற்றுங்கால் அவையும் இறைவனால் அழிவுறும் என்பது.

185 செவ்விதா யுலகம் பின்னும்
சிருட்டிசெய் வகைதான் தம்பால்
எவ்வமில் பரையாஞ் சத்தி
யிடத்தினி லிச்சை தோன்ற
அவ்வியற் சத்தி தன்பா
லரும்பியவ் வியத்தந் தோன்ற
வவ்வியாங் கதனிற் றத்து
வங்கள்தோன் றிடவ வைக்கண் 15

186 பூதாதி தோன்ற அந்தப்
பூதத்திற் சத்த மாகி
யாதார மாகத் தோன்ற
ஐவகை யாகும் பூத
மீதாய கணங்கள் தம்மில்
மிளிர்தரும் அண்ட முண்டாம்
ஏதாலுண் டாகு மண்டத்
திரணிய கருப்ப ருண்டாம். 16

187 மொழிதரு மவரி டத்தில்
மூக்குணங் களுமுண் டாகும்
அழிவில்முக் குணமுள் ளோராய்
அருளுமும் மூர்த்தி யாகி
அழிவகல் சிருட்டி யாதிக்
கிவர்களோ டைவ ராயும்
வழிபடு முருவ னேகம்
ஆகியும் ஏக ராயும் 17

---

185 சிருட்டி – படைத்தல். பரை – பராசக்தி. இச்சை – இச்சாசக்தி. அவ்வியத்தம் – பிரகிருதித்துவம். தத்துவம் – சிவதத்துவம் முதலாக அகங்காரதத்துவம் ஈறுகவுள்ள மெய்ம்மைகள்.

186 சத்தம் – நாததத்துவம். பூதமுதலாய ஐவகைக் கணங்கள் – தன்மாத்திரைகள் போலும். இரணியகர்ப்பர் – பிரமாக்கள்.

187 முக்குணம் – இராசசம், தாமசம், சாத்வீகம். மும்மூர்த்தி – பிரமன், விஷ்ணு, ருத்திரன். பஞ்சமூர்த்திகள் – மேல் மூவரோடும் மகேசுவரன், சதாசிவன் இவர்கள். ஏகராயும் – பரமசிவமாகியும்.

188 இருந்தள விலாத லீலை
ஏன்றுசெய் பவரே யென்றுங்
குருந்துறை யாத்ம நாதர்
குலவிய சிருட்டி மார்க்கம்
அரும்புமுட் கரணத் தோற்ற
மதுமுதற் சிருட்டி யாகு
பொருந்திரண் டெனுஞ்சி ருட்டி
புகறன்மாத் திரைய தாமே. 18

189 இந்திரி யங்கள் தோற்றம்
இயம்புமுன் றெனுஞ்சி ருட்டி
யந்திநான் காஞ்சி ருட்டி
யாகுந்தா வரங்கள் தோற்றம்
புந்தியின் மிருக மாதி
புகலுமைந் தாஞ்சி ருட்டி
சிந்தைகொள் தேவ ராதி
சிருட்டியும் ஆற தாமே. 19

190 இயம்பிய மனுடர் தோற்றம்
ஏழெனும் சிருட்டி யாகும்
உயர்ந்துகாண் பவுதி கந்தான்
ஒரெட்டாஞ் சிருட்டி யென்ப
முயங்குமொன் பான்சி ருட்டி
மொழிசிசு வாதி தோற்றஞ்
சயந்தரும் அரச! இங்குச்
சாற்றுமித் தோற்றம் யாவும் 20

---

188 ஏன்று - மேற்கொண்டு. உட்கரணம் - எண்ணம் (மனம்). புகறன் மாத்திரை - சொல்லளவு (வாக்கு) சிருட்டி - படைப்பு.

191 நால்வகைத் தாகும் யோனி
நவிலேழு வகையாந் தோற்றம்
பால்படு முயிர்கள் தாமெண்
பத்துநான் கிலக்க பேதத்
தால்வளர் அண்ட முற்றும்
ஆர்ந்திடு மென்ன, மன்னன்
சால்புள விவைகட் கெல்லாம்
தகுமுண வுரைத்தி என்ரூன். 21

192 உரைக்குமிவ் வருக்க முண்ணும்
உணவுசந் திரிகை மூன்றும்
அருத்திகோ டிரண முண்ணல்
ஐந்துமாங் கிடவுண் கல்லாண்
விருத்திகொ ளிலையுண் அப்பூண்
விளம்பிடி லொன்ப தாகும்
பருத்திடு மண்காய் காட்டம்
பவனனூண் ஐந்த தாகும். 22

193 அன்னமூண் எண்ப தாகும்
அமுதமூண் பதினென் றென்பர்
இன்னவா றிருத்தி யாமாத்
மாவினுக் கெண்ணென் றில்லோச்
சொன்னவில் வருக்க வாத்மா
துன்னுமண் டங்க ளுக்கும்
பன்னிடத் தொகையின் ரூகும்
பலபல கோடி யண்டம். 23

---

191 நால்வகை – பை, மூட்டை, நிலம், வியர்வை. ஏழுவகை – ஊர்வன, தாவரம், தேவர், நீர் வாழ்வன, பறப்பன, மக்கள், விலங்கு. உணவு – புசிப்பு.

192 இவ்வருக்கம் – முன்சொன்ன ஏழுவகைகள். சந்திரிகை – நிலாவின் கதிர்கள். மாங்கிடம் – ஊண். அப்பு – நீர். காட்டம் – பட்டமரம். பவனன் – காற்று.

193 அன்னம் – சோறு. எண்ணென்றில்லை – கருதத்தக்கதொன்றுமில்லை. பன்னிட – சொல்லத்தக்க.

194 இவ்வகை யளவி லண்டத்
தெய்துபல் லுயிர்கட் கெல்லாம்
அவ்விய மில்லான் நாதன்
ஆகையால் அரச ரேறே
எவ்வமி லாத்ம நாதர்
என்று சொற் றிடலுமாகும்
செவ்விதின் உணர்க வென்று
செப்பினன் முனிவர் கோமான். 24

195 அரசனும் ஆத்ம நாதர்க்
கருத்தமித் தன்மை யென்னும்
குரவனை வணங்கி நெஞ்சம்
குளிர்தர அடியேற் கிந்த
உரையெவர் பகர வல்லார்
உற்றனன் பெருமை யென்னப்
பரசினன் அளவி லாத
பண்ணவ னுவப்ப நின்று. 25

196 இம்முறை சவுன காதி
யிருடிகட் கியம்பிச் சூதன்
செம்மைகொள் அனேகஞ் சென்மத்
தினிற்புரி யறமுண் டாகில்
அம்மவிச் சரிதந் தன்னில்
அகமது செலுத்தல் கூடும்
பொய்மைசே ருளத்தோர்க் கென்றும்
புலப்படா வாகு மன்றே. 26

---

194 செவ்விதின் - திறமாக.

195 குரவனை – ஆசானுகிய முனிவனை. பரசினன் – வாழ்த்தி வணங்கினன்.

196 சவுனகாதி – சவுனகர் முதலான முனிவர்கள்.

[ஆத்துமநாதர் மகிமையுரைக்கும் இச்சருக்கத்தின் சிறப்புக் கூறுதல்]

197 களங்கமி லாத வாதி
கயிலைமான் மியத்தை முற்றும்
உளங்கொள விரும்பிக் கேட்க
உரந்தமக் கிலரா லுலும்
விளங்குமிச் சருக்க மேலும்
விருப்பொடு கேட்க வேண்டும்
துளங்கமில் பிரம ஞானந்
தோன்றிடு மென்ரு னன்றே. 27

[புரூரவாவுக்குத் தவுமியர் ஆத்மநாத மகிமை உரைத்த சருக்கம் முற்றும்.]



197 உரம் – நெஞ்சம் (மனவிருப்பம்). இச்சருக்கம் – ஆத்மநாதர் மகிமை உரைத்த சருக்கம். துளங்கம் – கலக்கம்.

அண்டகோசச் சருக்கம்

198 தவவரு ளுருவாந் துய்ய
தவுமியர் கழலிற் பின்னும்
புவனமாள் இறைமை பூண்ட
புரூரவா வணங்கிச் சொல்வான்
உவமையில் பெரியோய் நீசொற்
றுறுபல வண்ட மென்னும்
அவையுளிவ் வண்டத் தெல்லே
அருளென, முனிவன் கூறும். 1

199 கதிரெழு மணுமூ வேழு
கசாக்கிரம் ஒரெட் டாகும்
அதுவெனி லிலாக்கை யவ்வி
லாக்கைநான் கென்னில் யூகை
யெதிருறும் யூகை எட்டே
யியவை, யவ் வியவை மூன்று
வதியள வதுதா னேரங்
குலவள வாகு மன்றே. 2

200 மொழியுமங் குலம் நாலாறு
முளமது நான்கு கூடித்
தழுவிலோர் தனுவா மந்தத்
தனுவிரண் டெனிலோர் தண்டம்
இழிவிலத் தண்ட மீரா
யிரங்கு ரோசங்கு ரோசம்
ஒழிவற நான்கு சேரில்
யோசனை யாகு மன்றே. 3

---

198 கழல் – பாதங்கள். ஆன் இறைமை – ஆட்சிபுரியும் தலைமை. முனிவன் தவுமியர்.

199 கசாக்கிரம் – மயிர்நுனி. இலாக்கை – ஈர் (சிறுபேன்) யூகை – பேன். இயவை – துவரை, நெல்.

200 அங்குலம் – விரல். முளம் – முழம். தனு – வில். தண்டம் – கோல்.

201 நுவலும்யோ சனையின் எல்லை
நூறுகோ டியதா மிந்தத்
தவலரு ..... மண்டத்
தகலமுள் யாவு மாமற்
றவையெனும் அண்டங் கட்கும்
அளவையிவ் வாற தாகும்
புவனமேல் ஐம்பான் கோடி
பொருந்துகீ ழினுமவ் வெண்ணே. 4

202 திண்ணிய மேரு வெட்டுத்
திசைதொறும் ஐம்பான் கோடி
அண்ணிய கடாகத் தெல்லை,
அண்டத்தின் கனமோர் கோடி
எண்ணதின் மேலாங் காலாக்
கினியுருத் திரர்.....
விண்ணெழு முயர்ச்சி கோடி
மீதழல் ஈரைங் கோடி. 5

203 மண்டதின் தூம வெல்லை
மதிக்கிலங் கோடி யாகும்
தண்டலி லதற்குட் சீயத்
தவிசுயர் பொருபால் நூரும்
அண்டரு மதன்பரப்பி
ராயிரம் அழலின் மேனி
ஒண்டிறல் செறியுங் காய
உருத்திரர் அயுத மாமே. 6

---

201 புவனம் - உலகம். ஐம்பான் - ஐம்பது.

202 அண்ணிய - மேல்நெருங்கியுள்ள. கடாகம் - அண்டகடாகம். அழல் - நெருப்பு.

203 தூமம் - புகைமண்டலம். தண்டல் - தவிர்தல் (நீங்குதல்) சீயத்தவிசு - சிங்காசனம். அயுதம் - பதினாயிரம் கொண்டதொரு எண்ணுப்பெயர்.

204 அவிரும்வாள் பலகை கொல்வில்
அங்கைதாங் கவர்ச்சூழ்ந் தன்னோர்க்
குவமைசால் பதின்மர் வாழ்வர்
உறுமவர் ஏவ லாற்றிப்
பவமக லொருபான் கோடி
பரிசனர் வதிவ ரன்னோர்
கமலநேர் கழல்கள் வாழ்த்திக்
கமடமாம் புவனம் வைகும் 7

205 சொன்னவப் புவன மீக்கண்
டுடக்குறு கிலேய வாகி
நன்மையி னரகம் வைகும்
நான்கெழு கோடி மீக்கொள்
உன்னித மவைக்கு முப்பான்
ஒன்றெழு கோடி மேலும்
பன்னிரண் டிலக்க மாகும்
பரப்பள வண்டத் தெல்லே 8

206 ஓதிய நரகத் தப்பால்
ஒன்றெழு நூறி லக்கம்
மீதுநற் புவன மொன்று
விளங்குறுங் கீழ்பால் மிக்க
சோதிசேர் கனக ரூபம்
துலங்கதின் மேற்பா கத்தில்
ஏதமில் கனக பீடத்
திருப்பர்கூர் மாண்ட ரென்போர். 9

---

204 கமடம் – ஆமை.

205 துடக்கு – குற்றம்.

206 கனகம் – பொன். கூர்மாண்டார் – ஒரு முனிவர் (கூச்மாண்டர்)
உருத்து – வெகுண்டு.

207 பருத்த ..... கா
பகர்மழுக் கரத்தர் ஈற்றின்
உருத்தெழு மனல்போல் மெய்யர்
உலவிய விழியர் அன்னோர்
கருத்தினுக் கியைந்து சூழும்
கணங்களுக் கெண்ணிலா வால்
விரிக்குமிப் புவன மீதில்
வெளிதரு மிலக்க மொன்பான். 10

208 பகர்ந்திடு மதன்மேல் ஓரேழ்
பாதலம் ஒவ்வொன் றிற்கும்
தகுந்தொகை இலக்க மொன்பான்
சாரவோர் அறுபான் மூன்றுய்
மிகுந்திடு மிலக்க மந்த
விறற்பில மோரே ழுக்கும்
அகந்தரு மகற்சி வெவ்வே
றயுதமோ ரிலக்க மாமே. 11

209 சாற்றிடு மவைமுப் பாகந்
தான்பெறும் அவுணர் கீழ்ப்பால்
ஏற்றுவாழ்ந் திடுவர் நாப்பண்
இருப்பர்க ளரகர், மேற்பால்
போற்றுறும் அசுரர் சேர்வர்
புகலிதன் மீதோ ரொன்பான்
ஆற்றல்சே ரிலக்க மீதி
லாடகர் இருப்ப ரன்றே. 12

---

208 பிலம் – குகை.

209 அவுணர் – அசுரர். ஆடகர் – ஒரு தெய்வச்சாதியார்.

210 அதன்மிசை வெளிலேர் கோடி
யைந்துநான் கிலக்க மாகும்
இதமுறு (மத)ன்மேற் பாந்தள்
எண்களி ரூடு சேடன்
நிதமுற ஏந்து பூவின்
நீட்சியு மிலக்க மொன்பான்
அதிபர்,சொல் பிலங்கட் கெல்லாம்
ஆடக ராவ ரன்றே. 13

211 அண்டமாங் கடமு தற்சேர்
அவனியீ ருகக் கோடி
கொண்டிடு மைம்பால் மேலாய்க்
குலவுபார் விரிவு மேவும்
தண்டலில் பொருளுங் கேள்நீ
சாற்றுதும் லவணம் பாலோ
டெண்டிகழ் தயிர்நெய் கன்னல்
இன்மது நீரேழ் சிந்தே. 14

212 நலமலி சம்பு சாகம்
நறுங்குசை கிரவுஞ் சத்தோ
டிலவுகோ மேத கம்புட்
கரமிவை ஏழாந் தீவைப்
பலனுற முறையிற் சூழும்
பகரதற் கப்பா லேமத்
தலமதைச் சூழ்ந்து நிற்கும்
சக்கர வாளக் குன்றம். 15

---

210 வெளில் – ஆகாயம்.

211 அவனி – உலகம்.

212 ஏமத்தலம் – பாதுகாப்பான தலம். (எமனுடைய தலமுமாம்)

213 புகலதற் கப்பா லாகும்
புறக்கட லதனுக் கப்பால்
தகுதியில் இருள்சேர் ஞாலம்
சாற்றதற் கப்பாற் கூறும்
தொகையிலாப் பொருள்கள் யாவும்
சூழ்தரும் அண்ட பத்தி
பகர்முதற் கடலுந் தீவின்
பரப்புமோ ரிலக்க மாகும். 16

214 சாகர மேனைத் தீவும்
சாற்றதற் கிரட் டிரட்டி
யாகவீ ரைந்து கோடி
யைம்பத்து நான்கி லக்கம்
போகபூ மியைநேர் சொன்ன
பூதலம் பத்துக் கோடி
மோகமா யதைச் சூழ்நேமி
முதுவரை யயுத மாமே. 17

215 பருமைகொள் புறத்து நேமி
பத்தெனுங் கோடி மேலும்
இருபதோ டிலக்கம் ஏழாம்
இருள்நில மிரண்டு கோடி
ஒருபதொன் பானி லக்கத்
தோடுநான் கயுத மாகும்
கருதரும் அண்ட பத்திக்
கனமொரு கோடி யாமே. 18

---

214 நேமிமுதுவரை – பழையதான சக்கரவாளகிரி.

215 நேமி – சக்கரம்.

216 குலவரை பாதி யைம்பான்
கோடியாம் அகலம் யாஞ்சேர்
அலவிய லாற்ரு லெட்டுத்
திசைதொறு மெதிர்ந்து நோக்கின்
உலவதி சைக்கந் தந்தத்
திசைகளி னளவு நேராய்
ஒவ்வுமோ ரொன்று கோடி
யோசனை என்னு மெண்ணே. 19

217 அந்தண னுகுங் கஞ்சத்
தண்ணல்தன் வலது மொய்ம்பால்
வந்தசா யம்பு வீன்ற
மைந்தனும் விராத னே.....
னிந்தமா நிலத்தின் எல்லே
எவையுமோர் குடைக்கீழ் வைத்தான்
அந்தமா நிருபன் மைந்தர்
அங்கிதீ ரன்மே தாதி. 20

218 சோர்விலா வபிட்டி னேடு
சோதிட்டு தறுதி மான்சீர்
சாருமவ் வியனே துய்ய
சவனனே டெழுவ ரன்னேர்
பார்கெழு தீவோ ரேழு
பங்கு கொண்டரசு செய்தார்
ஆர்வநீள் சம்புத் தீவாள்
அங்கிதீ ரன்கு மாரர். 21

219 பரவுபுகழ்ப் பாரதன்கிம் புருடன் மாலோன்
பத்திராச தானனிளா விரதன்மிக்க
இரமியனே டரிகேது கனகப் பேரோன்
எழிற்குமா ரோன்பதின்ம ரிவர்க ளாள

---

217 கஞ்சத்தண்ணல் - பிரமன்.

உரமுளநா வற்றீவை யவர்கள் பேரால்
ஒன்பதுகண் டமதாக்கி உதவினனற்
றிருவளர்சம் புத்தீவின் நடுவில் நிற்கும்
செம்பொன்வரை செங்கமலப் பொகுட்டுப்போலாம். 22

220 நலமருவு மதற்குப்பூ மேலெண் பத்து
நான்கெனுமா யிரம்புவிக்கீழ் நண்ணிநிற்றல்
பலவுரைசேர் பதினொரு யிரமாஞ் சென்னி
பரப்புமுப்பா னேடிரண்டாயிர மாகும்
இலகுபரா ரையினெல்லை யதனிற்பாதி
எழிற்றிருமே கலைமூன்று மதனுள்மேலாய்க்
குலவியமே கலையிற்பல் சிகரம்மல்கும்
கோகனகன் வாழுமனே வதிநாப்பண்ணும். 23

221 மனைவதிக்கு மேற்றிசையின் முராரி வாழும்
வைகுந்தம் வடகீழ்வெண் டிங்கள் வேணி
யனதியமர் சேர்வதியெண் டிக்குமிந்தி
ராதிபரெண் மருமமரும் தேய மாகும்
முனகுமதின் கீழ்பால்மந் திரமாம் வெண்மை
மொழிகந்த மாதனம்போன் றதன்றென் பாலாம்
இனதவிபு லங்குடக்கு நீலமர்ந்தா
டிமப்போது நிறஞ்சுபாசு பம்வடக்கே. 24

222 குணப்பாலா தியநாற்றி சையின் வைகும்
குன்றமேற் கடம்புசம்பு போதி யாலும்
நணுகிநிற்கும் தென்றிசைசேர் சம்பு வெல்லை
நண்ணுமிரண் டாயிரம்யோ சனைய தாகும்

---

219 நாவற்றீவு – நாவலந்தீவு, சம்புத்தீவு.

220 பலவுரை – பல்புகழ். இலகுபார் – விளங்குகின்ற உலகம். கோகனகன் – பிரமன்.

221 முராரி – திருமால். திங்கள் வேணியன் – உருத்திரன். நீல் – நிலம்.

அணுகுமற்ற முத்தருவு மிதனிற் பாதி
அருணந்தி கீழ்த்திசையி லசிமேற் றிக்கில்
உணவமிர்தா மாவனந்தென் றிக்கி லோதும்
உத்தரத்தின் மாமடுவே ரொழியா வன்றே, 25

223 உய்யானஞ் சயித்திரதங் கிழக்கின் வைகும்
ஒழுங்குளகந் தவனந்தென் றிக்கிலோங்கும்
மொய்யாரு மவைப்பிரசங் குடக்கின் வைகும்
மொழிவடக்கி னருந்திருத்தாக் கியமுற் றேங்கும்
எய்யாது பொழியுந்தேன் நாவல் தென்பால்
இருந்திடுகா ரண.....ற்பா ரதன்றன் கண்ட
மெய்யாகு நாவலந்தீ வெனப்பேர் பெற்று
விளங்கியதத் தருப்பொழிதே னுரைய் மேவி, 26

224 மேருவினைப் புடைசூழ்ந்து வடபாற் சேரும்
விளங்கியநற் சாம்புநதப் பெயரி னேடும்
வாரியெடுத் தருந்தினர்கள் உடலம் பொன்னாய்
வழங்கயுத மேல்மூவா யிரம்யாண் டெல்லை
சேரவிருந் திடுவர்நாற் றிசையின் வெற்பின்
திண்பரப்பு மேல்கீழ்மே ருவினிற் பாதி
சாருமதன் கீழ்பால்மா லியவான் மேல்பாற்
சாற்றரிய கந்தமா தனமாங் குன்றம். 27

225 அரியதென்பால் நிசிதமுடன் ஏம கூடம்
அடருமிமம் வடபானி லஞ்சு வேதம்
உரியசிருங் கம்இருநான் கடுக்கல் நீலம்
ஒளிதிகழ்பொன் மணிகனகம் பணிநீல் வெண்மை

---

222 குணப்பால் – கீழ்த்திசை.

223 உய்யானம் முதலியவை வனத்தின் பெயர்கள். பிரசம் – தேன்.

குருமதிகாந் தத்தினிறம் நிசித மேம
கூடமிமை யங்குணக்கு மேலீச் சிந்தோ
டொருவுதலி லாதுதலைக் கூடி யோங்கும்
உத்தரமுக் குன்றுமவைக் கொக்குமன்றே. 28

226 இயம்பியவிவ் வெண்கிரியும் வானிலீரா
யிரமெனும்யோ சனையுயரம் எய்திநிற்கும்
வயங்குகந்த மாதனமாலியவா னென்னும்
... ...
... ...
... ...

[இச்சருக்கத்தின் எஞ்சிய பகுதிகளுக்குரிய **ஏடுகள் (ஏழு** ஏடுகள்) மூலச்சுவடியில் இல்லை.]



225 அவைக்கு – அவற்றிற்கு.

226. எண்கிரி – எட்டு மலைகள். அவை ஏமகூட முதலியவை.

பிரமாவுக்கு உபதேசித்த சருக்கம்

227 திருவள ராத்ம நாதர்
திசைமுகத் தவற்குத் தீக்கை
அருளிய முறையை முன்னே
அறைகுவன் சகமெ லாபெய்
தருகிறு தம்கிறு
தகமென விரண்டுங் கூடிக்
கருதுகி றுதாகிறு
தகமென லாகும் மூன்றில். 1

[இதுமுதலாகத் தேவர்களுக்குக் கால அளவு கூறுகிறது]

228 உரைக்கிலம் முன்ச கத்ரஞ்
சதுர்யுகம் பகல யற்குச்
சுருக்கிலா விரவு மந்தத்
தொகையென லாகு மீரா
யிரத்தொகை யொரு நாளப்போ
தேய்ந்திடு பிரள யத்தால்
மரித்திடு முலகி னுக்கு
வளர்கிறு தம்மென் றுகும். 2

229 மலரவன் பகலி னீரேழ்
மனைக்கள்மாண் டாலுண் டாகும்
அலைதரும் பிரள யத்தால்
அழிந்திடு முலகி னுக்குத்

---

227 அண்டகோசச் சருக்கத்தின் இறுதி சிதைந்து விட்டமையின் பிரமாவுக்கு உபதேசித்த சருக்கத்திற்கும் அதற்கும் இயைபு புலப்படவில்லை. திசைமுகத்தவன் – பிரமன். தீக்கை – தீட்சை. சகம் – உலகம். கிறுதம், கிறுதகம், கிறுதா கிறுதகம் இம்மூன்றும் ஒருவகை கால அளவுப் பெயர்கள் போலும்.

228 சகத்திரம் – சகசிரம் (ஆயிரம்). அயன் – பிரமன்.

தலைமைசேர் கிறுதா கிறு
தகமெனும் பெயர தாகும்
சொலுமவை இரண்டி னலும்
துன்பமுற் றழிந்தி டாமல் 3

230 புகுமகா பிரள யத்திற்
பொன்றுல கினுக்கு நாமம்
...கிறு தகமென் ருகும்
அரியமுத் தொழிற்கும் நாதர்
தகுதிகொ ளாத்ம பேதந்
தமைச்சொலக் காலந் தன்னிற்
தொகையிலா தொடுக்கி நான்கு
சுருதிநற் புரத்தின் மேவி 4

231 இன்பமா ராத்ம நாதர்
எனும்பெய ரோடும் வாழ்வார்
பின்புல குண்டாம் காலப்
பிரான்றனை ஓலக முற்றும்
மன்பெறு புனலின் நாரா
யணவுரு வாய தன்கண்
பொன்பிறங் கிதழ்சேர் கஞ்சப்
போதுற வதன்பால், மின்னே ! 5

[பிரமனின் தோற்றமும் அவன் திகைப்பும்]

232 சிருட்டியின் பொருட்டப் பூவிற்
றிசைமுகன் ரோன்றி மூல
மருட்டினுல் யாரு ரிங்கே
வந்ததெவ் விடமே லேதின்

---

229 மலரவன் – பிரமன். மனுக்கள் – சிருட்டியின் தொடக்கத்தில் பூமி பரிபாலனம் செய்யத் தெய்வத்தாற் படைக்கப்பட்டவர்கள். இவர்கள் பதினல்வர் என்ப. இவர்களே மனிதர்களின் தோற்றத்திற்கு மூலமாவர் என்ப.

230 முத்தொழில் – படைத்தல் காத்தல் அழித்தல். சுருதி – வேதம்.

231 கஞ்சப்போது – தர்மரை மலர்.

பொருட்டுவந் தனன்யா னென்று
புந்தியின் மலிவி னெண்ணி
யருட்டிற முடைய வேதன்
அம்புயம் விட்டு நீங்கி 6

233 தன்னொளி யலது வேறு
தங்கிட மொன்றுங் காணு
துன்னியோர் மூன்று திக்கும்
உற்றுளந் தெளிவி லாமல்
மன்னுதென் றிசையை நோக்கி
வரும்பொழு தளக்கர் மேல்பால்
மின்னொளி யனந்த கோடி
மிளிர்வது போலோர் சோதி 7

234 கண்டனன் வறியன் பெற்ற
கனகமொத் ததன்மே லாசை
கொண்டுட னோடி வந்து
கூடினன் அதனைக் காணன்
எண்டரா விதனத் தோடவ்
வேதுவி னுளம்பொ ருமற்
றொண்டைவிட் டழுது நெஞ்சுந்
துடிக்கநின் றிரங்க லுற்றான். 8

[பிரமனுக்கு ஆத்மநாதர் காட்சிதரல்]

235 அரும்பெறற் குழவி யாற்ற
தழுகுர லன்னை கேட்கின்
பொருந்திடாள் உளமத் தன்மை
போற்பொரு தாத்ம நாதர்

---

282 திசைமுகன் – பிரமன். மூலமருட்டினால் – மூலமாயையால். புந்தி – அறிவு. மலிவு – மயக்கம். வேதன் – பிரமன். அம்புயம் – தாமரை.

283 அளக்கர் – கடல். மிளிர்தல் – விட்டுவிளங்குதல்.

284 கனகம் – பொன் (புதையல்). விதனம் – விசனம் (வருத்தம்).

திருந்திய சகள ராய்நற்
றேசிக வடிவங் கொண்டு
மருங்கொரு யோகி போல
வந்தெடுத் தணைத்து நோக்கி 9

236 கண்ணினீர் துடைத்தை யாநீ
கரைந்தழ இனிவேண் டாமென்
றுண்ணிகழ் விருப்பாற் கைகொண்
டுடம்பெலாம் நீவி யுன்றன்
எண்ணமென் அழுவா னென்வேண்
டியதுரை யுனக்காய் நாமும்
நண்ணின மென்ரூன் முக்கண்
நாயகன், அயன்சொல் கின்ரூன். 10

[பிரமன் இறைவனை விளதல்]

237 வந்தெனை எடுத்துத் தேற்றும்
வள்ளல்நீ யார்? நான் ரூன்யார்?
முந்துனக் கிடந்தான் ஏது?
மொழியுமென் னிடந்தா னெங்கே?
நந்திலாச் சோதி யொன்று
நான்கண்ட தெங்கே? யாவும்
சிந்தையுற் றறியு மாறு
செப்பென அண்ணல் கூறும். 11

[இறைவன் கூறுதல்]

238 அருமருந் தன்ன மைந்தா
அணையுநா மாத்மா வாம்நீ
உரிமைகொ ளாத்ம பூவாம்
உயர்முதற் கயிலை யாகும்

---

235 சகளராய் - வடிவத்திருமேனி தாங்கியவராய். தேசிகன் - குருநாதன்
236 அயன் - பிரமன்.
237 நந்திலா - குறைவில்லா. அண்ணல் - சிவபெருமான்.

மருவியா மதனி னுளும்
வைகுவம் நீகாண் சோதி
திருவுள நாமாம் மீயுஞ்
சிருட்டியின் றேவ னுகும். 12

[பிரமன் இறைவனிடம் உபதேசம்பெறக் கூறுதல்]

239 சிவபிரா னருளி னுலிச்
செயலெலாம் மொழிந்த பின்னர்த்
தவறிலா துபதே சிக்கத்
தாணிஞ்ஙந் தபிடே கிக்கப்
புவனியி னெற்றி நாட்டம்
பொருந்திட விழிக்க வந்த
தவனிபே தித்துப் பாதா
ளத்தினி லுறையுங் கங்கை. 13

240 அக்கர வழியாய் மேல்வந்
தார்த்தெழுந் ததுபா லக்கண்
உக்கிரத் தெழலால் நாமம்
உதகவன் நீர்த்த மாயிற்
றெக்கரி சினையு மாற்றும்
என்னலங் கருமுண் டாக்கும்
புக்குழும் கினருக் கெண்ணில்
பொருகிரிச் சரப்பே றுண்டாம். 14

---

288 நீகாண் சோதி – நீகண்ட பேரொளி. சிருட்டி – படைத்தல் தொழில்

289 அபிடேகிக்க – புண்ணிய நீரில் நீராட்ட எண்ணி.

240 அக்கரவழி – மந்திர ஆற்றலினுலே. பாலக்கண் – நெற்றிக்கண். உக்கிரம் – வெப்பம். உதகவன் நீர்த்தம் – அக்கினிதீர்த்தம். (உதகவன் – அக்கினி) கரிசு – குற்றம், பாவம்.

[இறைவன் உபதேசித்தல்]

241 அன்னநீ ராட்டிச் சாத
காதியும் புரிந்து மேலோய்
மன்னுநற் றீக்கை யாதி
மந்திர முப தேசித்துத்
துன்னும்வாக் கணங்கு முன்னந்
தோகையர் தமையும் நாளும்
பின்னமி லாது வந்து
பெட்புடன் மருவி நிற்க 15

[இறைவன் அருள்புரிதல்]

242 நண்ணுவித் தரிய கேள்வி
நான்மறை முழுதுந் தோன்றக்
கண்ணருள் புரிந்து வையம்
கண்டிடுந் தொழிலுங் காட்டி
எண்ணிகழ் பதும நாமம்
ஏதுவிற் றரித்து மிக்க
புண்ணியன் கரந்தான் மிக்க
புண்டரீ கத்தன் காண. 16

[இத்தலத்திற்குப் பிரமதேசம் முதலிய பெயர் உண்டாய காரணம் கூறல்]

243 பிரமமந் திரம்வே தற்குப்
பெட்புட னருள லாலே
விரவிய பிரம தேசம்
எனும்பெயர் அதற்கு, நான்கு

---

241 சாதகம் – காரியசித்தி. வாக்கணங்கு – நாமகள்.

242 நண்ணுவித்து – அடையும்படிச் செய்து. கண்ணருள் – பேரருள். வையம் கண்டிடுந் தொழில் – உலகைப் படைக்கும் தொழில் பதுமநாமம் – மலரவன் என்னும் பெயர். தரித்து – கொடுத்து. கரந்தான் – மறைந்தான். புண்டரிகத்தான் – பிரமன்.

சுருதியும் அயனுக் கங்குத்
தோற்றுவித் திடலால் நாளும்
பொருவகல் நான்கு வேத
புரமெனும் பெய ரதாமே. 17

244 அரனிதம் வசிக்கும் தானம்
ஆதலிற் சிவபு ரப்பேர்
மருவிய வதிற்செ பாதி
வளருமொன் றனந்த மாக
பிரமன்பின் சிறிது காலம்
பேணிநற் றவஞ்செய் தங்கண்
விரவின ஞத்ம நாதர்
விரும்பிமுன் போல வந்தார், 18

245 கஞ்சன்முன் வந்து தோன்றுங்
கடவுளை வணங்கிச் சூழ்வந்
தஞ்சலி சிரத்தின் மேற்கொண்
டன்பொடு பரவி ஏற்ற
வெஞ்சுட ரெம்பால் நீவேண்
டியதுரை யென்ருன், வேறு
தஞ்சமி லேற்கு நீதந்
தருள்வதே வேண்டு மென்ருன். 19

[இறைவன் பிரமாவுக்குச் சிருட்டித்தொழில் அருளல்]

246 என்றவே தாவுக் காயுள்
எண்குண மாதி மற்றும்
ஒன்றுபு புரிந்து முன்னர்
உரைத்திடுஞ் சிருட்டி தன்னை

---

244 செபாதி – செபம் முதலிய தெய்வ வழிபாட்டுச் செயல்கள். முன் போல வந்தார் – ஆத்மநாதர் பிரமனுக்கு மீண்டும் காட்சிதந்தருள வந்தார்.

245 தஞ்சமிலேற்கு – உன்னையன்றி வேறு புகலிடமில்லாத எனக்கு.

மன்றலங் கமல / யாஞ் சொல்
மறைவழி யியற்றி நாளும்
தன்றிரு வேங்கா தோங்கும்
சத்திய வுலகின் வாழ்தி. 20

247 சேயவென் றருளிச் செய்து
தேவர்கோன் மறைந்து போகத்
தாயினைப் பிரிந்த கன்றிற்
றவித்தயன் மனம்பொ ருமற்
றூயகண் களினீர் சோரத்
தொழுதகை தலைமே லாக
நேயமேற் கொண்டு நெஞ்சம்
நெகிழ்ச்சியிற் றுதிக்க லுற்றான். 21

[பிரமன் இறைவனைப் போற்றித் துதித்தல்]

248 ஆதியும் நடுவும் ஈறும்
அளவுமற் றகன்ற ஞானச்
சோதியாய் உணர்வுக் கெட்டாத்
தூயநின் மலமே! என்பால்
ஆதர வருளை நல்க
அருட்டிரு மேனி தாங்கும்
நாதனே பரமா னந்த
நம்பனே போற்றி போற்றி. 22

249 பூரண மயமா யார்க்கும்
புலப்படாப் பொருளாய் வேறு
காரண மில்லா தாகுங்
கருணையங் கடலே யிந்தத்

---

246 வேதா – பிரமன். எண்குணம் – இறைவற்குரிய எட்டுக்குணங்கள். சத்தியவுலகு – பிரமாவின் உலகம் (இதுவும் இறைவனருளியதே)

248 நின்மலமே – ஆணவ முதலிய மும்மலங்களில்லாதவனே. நம்பன் – விரும்பத்தக்கவன், மேலானவன். போற்றி – வணக்கம்.

தாரணி தன்னி லென்முன்
சற்குரு வடிவாய்த் தோன்றி
யாரண முரைத்த வின்ப
அண்ணலே போற்றி போற்றி. 23

250 திருமுகத் தழகு போற்றி
திகழும்புன் முறுவல் போற்றி
மருமலர் நயனம் போற்றி
வயங்கொளி நெற்றி போற்றி
பொருவினூல் மார்பம் போற்றி
புண்ணியக் கரங்கள் போற்றி
அருள்புரிந் தெனையாட் கொள்ளும்
அடிமலர்க் கமலம் போற்றி. 24

251 மனந்திகைப் பதனை மாற்றி
வரும்அழல் நீரின் ஆட்டி
நினைப்புற உபதேசித்து
நெடுமறை முதல யாவும்
எனைக்குறித் தருளி யின்பத்
திருத்திய ஞான வாழ்வே
உனைப்பிரிந் தாற்ற கில்லேன்
உற்றிடென் றிரத்தல் செய்தான். 25

[பிரமாவுக்கு உபதேசித்த சருக்கம் முற்றும்]

---

249 பூரணம் – முழுமை. ஆரணம் – வேதம்.
250 மருமலர் நயனம் – தாமரை மலர்போன்ற திருக்கண்கள்,
251 திகைப்பு – மயக்கம். அழல்நீர் – அக்கினி தீர்த்தம்.

குருந்தமூலச் சருக்கம்

[இறைவன் பிரமன் முதலியோர்க்கு அருள்புரியக் குருந்தமரீ வடிவமாகத் திகழ்தல்]

252 அண்ணலாம் ஆத்ம நாதர்
அயன்துதி கேளா நெஞ்சம்
உண்ணெகிழ்ந் திரக்க மெய்தி
உயிர்க்கெலாம் பெத்த முத்தி
கண்ணிடும் பொருட்டுத் தாமோர்
நற்குருந் துருவ மாகி
விண்ணுற வளர்ந்து நின்றார்
வேதகான் முகவன் காண. 1

[குருந்த மரத்தின் உறுப்புகளின் தெய்வத்தன்மை விளக்கம்]

253 முக்கவர் மூவ ராகும்
முழுவதுங் கனகச் சோதி
தக்கவை யாக மங்கள்
சாயையாம் மிருதி யாவும்
தொக்கினர் குணங்க ளோயன்
சொலும்நிழல் பிறப்பை மாற்று
விக்கும்நன் னேய ஞானம்
மேவுநித் திலப்பூ வாமால். 2

254 அறமாதி பலம தாகும்
ஆரண மதன்றேன் சார
நறியவா சனையாம் உண்மை
ஞானிகள் புட்க ளாகும்

---

252 பெத்தமுத்தி – இறைவன் தன்னெடு ஒடுக்கிக்கொள்ளும் மேலான பேறு. குருந்துரு – குருந்தமர வடிவு.

253 கவர் – கிளை. மூவர் – மும்மூர்த்திகள். தக்கவை – தகுங்கவை (சிறுகிளைகள்) மிருதி – ஸ்மிருதி. நித்திலப்பூ – முத்துக்கள் போன்ற மலர்கள்.

விறன்மினிந் திரனீ லங்,கோ
மேதக மதனே டேமுந்
நிறமுமூ வர்கள் மிக்க
நிருமிக மாகும் மூலம் 3

255 பானுவிந் தனேக கோடி
பரப்பொளி போன்ற சோதி
யானதாய்க் குருந்து ரூபம்
ஆனதை வேதன் காணூஉ
ஞானவா னந்த ரூப
நற்பர வசத்த னாகி
வானுயர் தாரு வந்த
வகைநினைந் தெண்ணங் கொண்டான். 4

[குருந்தத்தின் நிலையை ஆகாயவாணி பிரமனுக்குக் கூறுதல்]

256 ஆயிடைக் காய வாணி
ஆத்மநா யகரே, கஞ்சத்
தூயனும் நீயும் யாரும்
தொழுதுயும் பொருட்ட தாக
மேயினர் குருந்த மாக
எனுமுரை கேளா, என்றன்
நாயனே இந்த ரூபம்
நண்ணினன் என்று வேதன் 5

257 இனிமைசே ருளத்த னாகி
இறைஞ்சிமெய்ப் பிரம மீதென் (று)
உனியருச் சிக்க வேண்டும்
உபகர ணத்தி னூடும்

---

254 பலம் – பழம். ஆரணமதன்றேன் – வேதங்கள் அம்மலர் நிறைதேனும். விறல் – வெற்றி. மின் – மின்னுகின்ற. மூன்றிறமும் பிரமன் முதலிய மும்மூர்த்திகள் என்றபடி.

255 பானு, இந்து – சூரிய, சந்திரர்கள். காணூஉ – கண்டு. தாரு – மரம்.

256 காயவாணி – ஆகாயவாணி. யாரும் – மற்றையவரும். கேளா – கேட்டு. நாயன் – தலைவன்.

புனிதனின் னியமத் தோடும்
பூசனை புரிந்து நின்று
கனிதரு மனத்த னாகிக்
கையினைச் சிரமேற் கொண்டு

[பிரமன் பரவசமாதல்]

258 ஒருபொரு ளுணர்வு மில்லா
ஊமர்போல் திரிந்தே னுக்குக்
கருணையின் மிகுதி யாலே
காட்சிதந் தாண்டுப் பின்னும்
பெருமைசேர் குருந்து மாகிப்
பிறங்கினை யருள்மாண் பென்னென்
றருள்நிறை தருகுந் தேச
அட்டகம் புகல லுற்றான். 7

[எழுசீர் ஆசிரியச் சந்தவிருத்தம்]

[இதுமுதல் எடுப்பு பாடல்கள் அட்டகமாகப் போற்றித் துதித்தல்]

259 சத்து ரூபவ ரூப நிற்குண
தற்ப ரச்சுகா தீதமும்
சித்து ரூபக துரிய முற்றிய
சிற்பரச் சிவ யோகமும்
நித்த மாகிய வின்ப சாகர
நின்ம லப்பத முத்தியும்
எத்தி சைப்பொரு ளும்வி ளக்குகுந்
தேச நீயென லாகுமால். 8

---

257 உனி – உன்னி (நினைந்து) தொகுத்தல் விகாரம்.

258 பிறங்கினை – விளங்கினை. அட்டகம் – எட்டு (எட்டுமுறை துதித்துப் போற்றும் மந்திரம்)

259 சத்து – அறிவு. நிற்குண – குணமற்ற. தற்பரம் – இறைவன். சித்துரூபம் – ஞானவடிவாகிய இறைவரு. சிற்பரம் – பிரமம்.

260 வண்மை சேர்ஒளி யாகும் நிட்கள
மாய சத்தர்கள் பேதமும்
உண்மை சேர்தரு சகள நிட்கள
யுத்தி யுத்தர்தம் மேன்மையும்
அண்மை சேர்சக ளத்த ராம்பிற
வனந்த பேதம தானதும்
எண்மை தீரரு ளால்வி ளங்குகுந்
தேச நீயென லாகுமால். 9

261 ஆர ணஞ்சொலு மீச பேதம
தானதும் மவர்க்கு ணேர்மையும்
கூரி ணங்கயில் கொண்ட ருத்திர
கோடி யீசர்கள் நேர்மையும்
நார ணன்கொளு கூர்மை யும்புகழ்
நான்மு கன்பெறு சீர்மையும்
ஏரி ணங்கரு ளேப ரப்புகுந்
தேச நீயென லாகுமால். 10

262 மாக முற்றுயர் இந்தி ரன்பெறு
வாழ்வும் வானவர் வாழ்க்கையும்
பாக முற்றவெண் டிக்கை யும்பரி
பாலர் பெற்றநல் லீட்டமும்
மோக மற்றவ னேக சித்தர்கள்
முனிவர் பெற்றுள சித்தியு
மேக முற்றுயர் வாயி லங்குகுந்
தேச நீயென லாகுமால். 11

263 சோர்ந்தி டாவெழில் கொண்ட சந்திர
சூரி யர்க்குள சோதியும்
சார்ந்த சேய்புதன் வியாழம் வெள்ளி
சனிக்கி ணங்கிய தகைமையும்

---

260 நிட்களம் – வடிவின்மை. எண்மை – எளிமை.
261 அயில் – (முத்தலைச்) சூலம். ஏர் – எழுச்சி, அழகு.
262 மாகம் – (விசும்பு) தேவலோகம்.

சேர்ந்த ஏழ்முகில் தன்மை யும்பல
தேசு டுக்களின் நீர்மையும்
ஈர்ந்த ழைச்செறி வோடு யர்ந்தகுந்
தேச நீயென லாகுமால். 12

264 வழிவ ரும்புவி தாங்கு பன்னக
மன்ன வர்க்குறு வன்மையும்
வழுவி லேழ்புவி யேழ்ச முத்திரம்
மலைகள் எண்கய நிலைகளும்
ஒழிவி லாதுபல் கோடி யண்டமும்
ஓங்கு தாபர மாவதும்
எழில்கொள் முற்கயி லாச மேவுகுந்
தேச நீயென லாகுமால் 13

265 படிக்கு மாகமம் வேத சாத்திரம்
பலக லைப்பொரு ளாவதும்
முடிக்கு நற்சரி தாதி யாற்பெறும்
முத்தி யின்ப முதிர்ச்சியும்
கடக்கொ ணைப்பவ சாக ரக்கரை
காணு தற்குறு தெப்பமும்
எடுக்கு மாக்கரு ணைக்க ரத்தகுந்
தேச நீயென லாகுமால் 14

266 அரிய தாயபஞ் சாக்க ரப்பொருள்
ஆகி யெங்கு மிருப்பதும்
உரிய தாகிய பிரம மந்திர
உறுதி யுந்திகழ் பிரணவம்

---

263 எழில் - அழகு. சேய் - செவ்வாய். தேசு - ஒளி. உடு - விண்மீன். ஈர்ந்தழை - குளிர்ச்சிபொருந்திய இலைகள்.

264 பன்னகம் - பாம்பு. எண்கயம் - எண்தடாகங்கள். தாபரம் - தாவரம்

265 சாகரம் - கடல்.

மருவு நேர்மையும் ஏழு கோடி
மனுக்க ளுங்கர ணங்களும்
அரிய மும்மல முந்து ரத்துகுந்
தேச நீயென லாகுமால் 15

[பிரமன் இன்பசாகரத் தாழ்ந்து மகிழ்தல்]

267 இன்ன நற்றுதி யட்ட கம்புகழ்ந்
தேத்தி வீழ்ந்திறைஞ் சிக்கரம்
சென்னி யிற்றிகழ் கம்பி தத்தொடு
திசை முகப்பிர மன்மகிழ்ந்
துன்னி யற்புத மோடு சூழ்ந்தரு
குற்ற ருச்சனை கோலியே
நன்ன லக்குரி யின்ப சாகரம்
நண்ணி நின்றனன் முன்னரே 16

[அறுசீர் ஆசிரிய விருத்தம்]
[பிரமன் வைதிக தீர்த்தத்தடமுண்டாக்குதல்]

268 திருக்குருந் திறைவர் துய்ய
திருவரு ளேற்று மீண்டு
விருப்புடன் அழல்நீர் மேற்கோர்
விரைமலர்த் தடமுண் டாக்கித்
தரிப்பதிவ் விடம தாகத்
தானவ னிருந்து நோற்று
மருக்கமழ் மலரால் நாளும்
வந்தனை புரிந்து வந்தான் 17

[கங்கை முதலான தீர்த்தங்களினும் இது சிறந்தது எனல்]

269 வரந்திக ழுயனற் செய்த
மலர்த்தட மகிமை போல்,வான்
இருந்திடு கங்கை யாதி
எவைக்குமின் றும்அ யற்குத்

---

267 துதியட்டகம் – எட்டுத் துதிப்பாடல்கள். கம்பிதம் – நடுக்கம்.
268 தரிப்பது – தங்குவது. தானவன் – பிரமன். மரு – மணம்.

தரங்கநீ ரதன்பால் மிக்க
சதுர்மறை தோன்ற லாலே
திரங்குல வதற்குப் பேர்வை
திகப்புனல் என்பர் தக்கோர் 18

[வைதீகதீர்த்தத்தின் பெருமை]

270 அத்தட மதனில் மூழ்கின்
அறிவிலா மூட ரேனும்
வித்தையுண் டாகும் நெஞ்சம்
விரும்பிய தளிக்கும் யாவும்
சித்தியா மதன்றன் மேன்மை
திருக்குருந் திறைவ ரன்றி
முத்தன நகையாய்! யார்க்கும்
மொழிந்திடக் கடவ தின்ரும் 19

[வைதீகதீர்த்தத்தில் மூழ்கி வாயுதேவன் சிறப்புற்றது]

271 கருவின்வே தனையை முற்றும்
கலைந்திடு மதன்பா லெய்தி
ஒருதரம் மூழ்கின் அன்னோர்க்
குரைதொன் றில்லை முன்னம்
மருவியோர் மூன்று வைகல்
வாதரா ரணன்சென் ருடிப்
பெருகுகல் வரங்கள் யாவும்
பெற்றுமேம் பாடு முற்ருன் 20

---

269 தரங்கநீர் – அலையெழுந்து விளங்கும் அத்தடம். திரம் – (ஸ்திரம்) நிலைபேறு.

270 வித்தை – கலைஞானம் முத்தன்னகை என்றது உமாதேவியை.

271 கருவின்வேதனை – பிறவித் துன்பம். மூன்றுவைகல் – மூன்று நாள். வாதராரணன் – காற்றுக்கடவுள்.

[பிரமன் எல்லாவற்றையும் படைத்தல்]

272 இம்முறை யதன்சீர் குந்தத்
திறையினை யருச்சித் தேத்திச்
செம்மைகொள் தவஞ்சில் காலம்
செய்தவண் இருந்து கஞ்சன்
அம்முத லருளி னாலே
அகிலமும் உதவப் பெற்றான்
விம்முமத் தோற்றம் யாவும்
விரித்திடிற் பல்கு மன்றே 21

[திருமால் முதலாக யாவரும் முன்புபோலத் தோன்றல்]

273 நாரணன் முதலாத் தேவர்
நளினமின் முதலாம் பெண்கள்
தாரணி மனுக்க ளாதி
சகலமும் முன்பு போல
ஆரணன் மனத்தில் எண்ணம்
ஆகுமுன் னருளி னாலே
பூரண மாகத் தோன்றப்
புரிந்துபின் குருந்தை யேத்தி 22

[பிரமன் சத்தியவுலகமர்ந்து வந்து வந்து குருந்தொளிராதரை வணங்கிச் செல்லுதல்]

274 சத்திய வுலக மெய்தித்
தானவண் வைகி நாளும்
பத்தியாற் குருந்தை வந்து
பண்ணுவன் பூசை மற்ற

---

272 முதல் – மூலப்பொருளாகிய இறைவன். அகிலமும் – எல்லாமும். விம்மும் – பெருகும்.

273 நளினமின் – தாமரைச் செல்வி (திருமகள், கலைமகள்). ஆரணன் – பிரமன்.

கந்தனு தியரும் நாளும்
நண்ணிவந் தருச்சித் தேத்திச்
சித்தமார் தவத்தி னோடும்
சேர்ந்தவண் வசித்து வாழ்வார் 23

[குருந்தம் எல்லோர்க்கும் அருள்செய்து விளங்கல்]

275 அவரவர் எண்ணம் யாவும்
அளித்துநின் றேங்கு குந்தம்
உவமையில தன்கண் மூலத்
துறுமருந் தையுட் கொள்ளிற்
பகைமிருத் தொடுவி யாதி
பகைபவம் அவிச்சை மற்றக்
கவலோக ளெவையும் நீங்கும்
கருதிய வெல்லா மெய்தும் 24

276 திருக்குருந் ததற்கு நாலு
திக்கும்யோ சனையின் பாதித்
தரைக்குள்வாழ் உயிர்கட் கென்றுஞ்
சாதிபே தங்கள் இல்லை
உருத்திர வடிவாங் குந்தம்
ஓதிய முதலி னோர்தம்
அருச்சனை தாங்கி வேத
மாதிகட் கரிய தாகி 25

---

274 நத்தன் – (சங்கினையுடையவன் என்னும் காரணத்தால்) திருமால்.

275 மிருத்து – மண் (திருநீறு), மிருத்து – மரணம். அவிச்சை – அறியாமை.

276 குருந்த மரத்தைச் சுற்றி நான்கு திசையிலும் அரையோசனை எல்லைக்குள் பூமியில் வாழும் உயிர்களுக்குள் ஏற்றத் தாழ்வு சாதி முதலிய வேறுபாடுகள் இல்லை என்றபடி.

[குருந்தத்தின் சிறப்பு முற்றும் சொலற்கரிதெனல்]

277 இருந்திடு குருந்தம் சீரி
னிற்சிறி துரைத்தேன் தெய்வ
மருந்தினு மினிய தீஞ்சொல்
மரகத மயிலே யென்றான்
திருந்திழை முனிகூற் றெல்லாம்
திருவுளத் தடைந்து நம்பர்
தருந்தழல் மடுவின் மேன்மை
சாற்றென, இசைக்க லுற்றான் 26

[குருந்தமூலச் சருக்கம் முற்றும்]



277 தெய்வ மருந்து – அமிழ்தம். முனி – நாரதன். தழல்மடு – அக்கினி தீர்த்தம்.

அக்கினி தீர்த்தச் சருக்கம்

[அழல்நீர் இருக்குமிடம்]

278 இரங்கிசை யாழின் நேராம்
இன்சொலா ரமுதே மிக்க
வரந்தரும் அழல்நீர் மேன்மை
வகுப்பதற் கரிய தாகும்
திரங்குல வுலகின் மிக்க
தீர்த்தமற் றெவைக்கு மேலாம்
கரந்திடாக் குருந்தின் தென்மேற்
காமதன் சீர னேகம் 1

[அக்கினி தீர்த்தத்தில் மூழ்கினோர் எய்தும் பயன்கள்]

279 சிரவலி குட்டங் சூன்மம்
சேர்ந்தகா மாலை கண்ணேய்
கரிசுறு பாண்டு சூலை
காசப்வெப் பாதி யாக
மருவிய நோய்கள் யாவும்
வயங்கதில் ஒருவிந் தேனும்
விரவிடக் கிடக்கிற் றீரும்
விளம்பிய வவையு மின்றி 2

280 தரித்திடு மலடு பேய்வே
தாளமோ நுமை யக்கு
பரித்திடும் குருடுன் மத்தம்
பயமிருத் திவையும் நீங்கும்

---

278 திரங்குலகு – சுழலும் உலகம்.

279 சிரவலி – தலைநோய். கரிசுறு – குற்றமுறும். வெப்பு – அம்மை நோய். ஒருஇந்து – ஒரு திங்கள் (இந்து – சந்திரன்).

மரித்திடு துன்பும் மாதா
வயிற்றிடைத் தோற்றுந் துன்பும்
பிரித்திடும், அழியா வீடும்
பெறுவதற் குரிய னைக்கும் 3

281 அப்புனல் படிந்து குந்த
மாம்பொருள் வணங்கப் பெற்றால்
ஒப்பில்மா பாவி யாஞ
லும்முடன் முத்த னவான்
குப்பமா ரறுபத் தாறு
கோடிதீர்த் தங்கட் கெல்லாம்
வைப்பெனு மூல மாகி
வருமதிற் கதையொன் றுண்டால் 4

[அக்கினி தீர்த்த விசேடத்தால் பேறுபெற்ற கனகை என்பவள் வரலாறு]

282 அன்னை கே ளதுவுஞ் சொல்வேன்
அணிகெழு வித்தர்ப்ப தேசம்
தன்னிற்காம் பீலி யென்றோர்
தலிநக ரதன்றன் பாங்கர்ப்
பன்னுநான் மறையோர் வாசம்
பயில்மனை யொழுங்கின் மேனி
மன்னுமோ ரவயின் வத்தன்
வருவிசு வம்ப ரன்பேர் 5

283 கற்றுணர்ந் தொழுக்க முற்றுங்
காஞ்சன விருப்பின் மிக்க
பற்றினல் விவசா யங்கள்
பண்ணியிட் டினன்பொன் சால

---

280 உன்மத்தம் – சித்தபேதம், மருள். பயமிருத்தியு – யமவேதனை. அக்கு – கண்.

281 முத்தன் – முக்தியுடையவன். குப்பம் – கூட்டம். (தொகுதி) வைப்பு – செல்வம், சேமம்.

282 அன்னை – உபாதேவி, பாங்கர் – பக்கம். அவயின் – அவ்விடத்தில். வத்தன் – வணிகன்.

மற்றவன் மனைவி நாமம்
கனகையாம் வந்தி மைந்தர்ப்
பெற்றில ளாத லாளோர்
பெண்ணினை மன்றல் செய்தான் 6

284 அவள்பெயர் கமலை யந்த
அணங்குட னவனின் புற்றுக்
கவலை யற்றிருந்தா னீதைக்
கண்டனள் கனகை யென்பாள்
இவளொரு குழவி யின்றால்
இருநிதி முழுதுங் கொள்வாள்
தவறிதற் கிழைப்பே னென்று
தன்கண வனுக்குப், பாவி 7

285 சோற்றினில் விடத்தை யிட்டுத்
துஞ்சிடப் புரிந்தா ளந்தச்
சீற்றமார் பிரம கத்தி
திருவிலி யவளைப் பற்றிக்
காற்றெறி பூளை போலக்
கலக்கிட வூர்கள் தோறும்
ஆற்றிலா தரற்றிப் பன்னாள்
அலைந்தொரு நாளோர் கானில் 8

286 சேர்த்தவ ணுலவுங் காலைத்
திண்மருப் பேன மொன்று
வார்ந்திரு பிளவ தாக்க
மாண்டனள் உடன்பே யாகிச்

---

288 காஞ்சன விருப்பம் – பொன்னைசை. விவசாயம் – முயற்சிப்பாடு. சால – மிகுதியாக. வந்தி – மலடி. மன்றல் – திருமணம்.

284 இருநிதி – தன்கணவன் ஈட்டிய பெருஞ்செல்வம். தவறு – வஞ்சனை

285 துஞ்சிடப்புரிந்தாள் – இறக்கச் செய்தாள். பிரமகத்தி – அந்தண ஞதலின் பிரமகத்திப்பாவம். திருவிலி – பெண்மாண்பு அற்றவள். பூளை – பூனைப்பூ.

சோர்ந்தெழுந் தலறி யெங்கும்
சுழன்றுதன் பசிதீர் தற்கு
நேர்ந்ததா யொன்று மின்றி
நீள்வன மெங்கும் பன்னாள் 9

287 நிறைபிரா ணிகளுக் கெல்லாம்
நெடுந்துயர்க் கிடம தாகி
உறைதன்மே வினள்நீர்க் காகம்
ஒன்றனற் புனலி னுள்வீழ்ந்
தறலிற னிறைய வுண்டின்
பார்ந்தொரு மரத்தின் மேல்வந்
திறகினை யுலர்த்தப் பேயாய்
இருந்திடுங் கனகை யென்பாள் 10

288 பூருவ பலத்தால் வந்து
புகுத, வம் மரத்தின் மூலத்
தோரம்நீர்க் காக மாகம்
உதறிடத் திவலை யொன்று
நேருற வதன்மேல் வீழ
நீங்கின துடன்ப சாசம்
சீரகல் வடிவம் வந்து
சேர்ந்துள தணங்கு ரூபம் 10

---

286 திண்மருப்பேனம் – வலிய கொம்புகளையுடைய **காட்டுப்பன்றி.** பிளவதாக்க – இவளை இரு பிளவாகக் கிழித்துப்போட.

287 பிராணி – விலங்குகள். அனற்புனல் – **அக்கினி தீர்த்தம்.** அறல் – நீர். இற – இரும்மீன்கள் (இரு என்பது செய்யுளாகலின் **இறல்** என நின்றது).

288 பூருவபலம் – முன்செய்த புண்ணியம். மூலம் – **அடிமரம்.** மாகம் – ஆகாயம். திவலை – நீர்த்துளி. அதன்மேல் – **(கனகையாகிய)** பேயின்மேல். சீரகல் – சிறப்பு விளங்கும். அணங்கு – **தெய்வப்பெண்.**

289 பாயொளி விமானங் கொண்டு
பண்ணவர் வந்தன் ஞான
நீயிதின் வாவென் றேத்தி
நெருங்குபல் சிறப்பி னோடு
போயினர் துறக்கந் தன்னிற்
புகுந்தவர் வரிவை யங்குச்
சேயபல் காலம் வைகிச்
சேர்ந்தனள் கயிலை தன்னில். 12

290 அவ்வழற் புனலின் மூழ்கி
அரும்பதம் பெற்று ளோருங்
கிவ்வள வென்று கூறில்
எண்ணினுக் கடங்கா தம்மா
செவ்விய புனலின் மேன்மை
சேருமவ் வனத்தி னுக்கும்
எவ்வமில் புரத்துக் குங்கேத்
திரத்துக்கும் மூன்று பேராம் 13

291 சூந்தவா ணருக்கி ரெட்டாம்
கோதிலா நாமம் சொல்லும்
இந்தமா மகிமை போல
எண்ணிலாப் பெருமை யுற்ற
தந்தநற் றலத்தின் மேன்மை
யாகுமா ரமுதே என்ரூன்
சந்தமா முனிவன் என்று
சாற்றினன் தவத்தின் வேந்தன் 14

---

289 பண்ணவர் – தேவர். அவ்வரிவை – அந்தக் கனகை.

290 இவ்வளவு – கணக்கிட்டுச் சொல்லும் எல்லே. கேத்திரம் – கூேத்திரம். மூன்றுபேர் – மூன்று திருப்பெயர்கள்.

291 சூந்தவாணர் – குருந்தின்கண் வாழும் இறைவன். கோதிலா – குற்றமில்லாத. நாமம் – பெயர். அமுதே என்றது உமாதேவியை. தவத்தின் வேந்தன் – (ஈண்டு) சூதமாமுனிவன். சந்தமா முனிவன் – நாரதன்.

292 என்றுகை மிசத்தின் மேவும்
இருடிகட் கியம்பச் சூதன்
ஒன்றிய மனத்தி னோடவ்
வுறுவர்கள் எவரும் கேளா
நன்றுநன் றரிய கேள்வி
நண்ணின மென்ரு ரென்று
வென்றிகொ ளிறைக்கு யோகி
விளம்பினன் பின்னும் சொல்வான் 15

[அக்கினி தீர்த்தச் சருக்கம் முற்றும்]



292 இருடி – முனிவாகள்.

தேவிக்கு நாரதர்
வனபுர கேத்திர நாமமுரைத்த சருக்கம்

293 கனமருவு மலர்க்குழலாள் இமயமீன்ற
கன்னிகைநா ரதமுனியைக் கனிவின் நோக்கி
வனபுரகேத் திரநாமம் மும்மூன் ருகும்
மருவுமிறை திருநாமம் பதினெ றென்ருய்
நீனைதொறுமற் புதமவைதாம் விரிதற் கேது
நீயுரை யென்றனள், வணங்கி நின்றுமிக்க
இனிமைதரு நரம்பிசையாழ் முனிவன் றேவிக்
கிம்முறைமை என்றுவிரித் தியம்பு கின்ருன் 1

[நாரதர் வனபுரத்தலச்சிறப்பு கூறத் தொடங்குதல்]

294 அரும்பொருளாம் பரசிவமே குருந்து ரூபம்
ஆகிவழி படுபவர்கட் கருள்த லாலே
குருந்தவனந் தெக்கணை மூர்த்த மாகிக்
கோகனகன் முதலினர்க்குக் கோதில் ஞானந்
திருந்தவுப தேசித்தங் கமர்த லாலே
சிவலோக வனம்யோக சித்தி யானம்
பொருந்துதவ சித்திசிவ சித்தி யாவும்
புகுமுனமுண் டாதலினற் பொருந்தும் பேரே 2

295 முன்னொருகா லத்திலயன் குருந்தை வந்து
முறைமையினிற் பூசிக்க வருங்கா லோர்நாள்
அன்னவனத் தின்பெருமை யெவருங் காணல்
ஆராமை மீக்கொள்ள அன்பின் நோக்கிச்

---

293 கன்னிகை – உமாதேவி. நரம்பிசை யாழ் முனிவன் – நாரதன்.

294 கோகனகன் – பிரமன். யானம் – உய்யானம் என்னும் பொருள் பட நின்றது.

சன்னவனம் என்றனனிவ் வனத்தின் நாமம்
தானுமிம் மூன்றினையும் தகுதி சேர்ந்த
நன்னியமத் தோடுரைக்கப் பெற்றுல் தீரா
நடலையெலாந் தீர்ந்துமுத்த னவை னன்றே 3

296 அத்தகைமை யெனக்கேட்ட சவுன காதி
அருந்தவர்கள் சூதர்ஆ னனத்தை நோக்கி
எத்தகையவ் வனமிகுந்த தயனென் கண்டான்
ஏதுவெவன் சன்னவன, மென்ன நீசொல்
உத்தமமார் குரவனென வன்ன தன்மை
உரைக்குவனென் றருட்சூதன் ஓது கின்றான்
முத்திதரும் திருக்குருந்த முண்டா மன்றே
மூதிரதற்கோர் யோசனை யெண்டிக்கு
மொய்த்து 4

297 கற்பகா தியதருவுண் டாயிற் றந்தக்
கடிமரத்தின் சிறிதுநவ மணியின் சோதி
நற்றருக்கள் சிறிதிரணி யத்தின் ரூபம்
நறுந்தருக்கள் சிறிதுவெள்ளி மயம தாகும்
அற்புதவித் துருமநிறம் சிறிது கோண
வதிற்றவழ வுயர்ந்துவா னளவி நிற்கும்
பொற்புறுவெண் டரளத்தின் கொத்துப் போன்ற
பூங்கொத்தும் பழக்குலையும் பொலிவ தாகும் 5

298 வலங்கொளில வங்கமிள கேலங் காம
வல்லியுடன் நாகவல்லி முதல தாகித்
துலங்கியநற் கொடிகளினிற் பின்னப் பட்டுச்
சூரியகாந் தியும்படராச் சூழ லாகி
நலங்கொளெவ ரும்புகுதா விடமாய் வைகும்
நறும்பொழிலா மதன்கணுறை புட்க ளாதி
விலங்குமுத லாயினவும் ஒன்றுக் கொன்று
விரோதமின்றி எந்நாளும் மேவு மன்றே 6

---

295 ஆராமை – நிறையாமை. நடலை – துன்பம்.
296 ஆனனம் – முகம். குரவன் – ஆசிரியன்.
297 இரணியம் – பொன். வித்துருமம் – பவளம். தரளம் – முத்து.

299 மதுகரங்க ளோசைபுட்கள் தொனிக ளாதி
மல்குமிக மலர்க்கமல மாம்ப லாதி
புதுமலர்வா வியினிறைதல், வானின் மீனம்
போல்விளங்கும் நீலங்கள் பொலிந்து தோன்றல்
துதிபெறுநீர் மேகங்கள் வானு லாவு
தோற்றம்போல்; கனிதருநன் மலரின் தேறல்
நதியெனவாம் மகரந்தம் நிறைவ தாகும்
நளிர்குளிர்கள் வனமேதி சொரியும் பால்கள் 7

300 நிறைதலினல் பாற்சேரும் விளங்கு மந்த
நீள்வனம்பூங் கொடிகள்கூ டார மாக
நறியமல ரின்படலம் திரைக ளாக
நறுஞ்சோதித் தருக்கள்பல தீப மாக
எறிகதிரா டக்குவைமேல் மணிக ளோங்கும்
ஏற்றத்தாழ் வேசோபா னங்க ளாக
உறைநெடுவேய் அநிலவியக் கத்தி னலே
உரசுமிசை வேய்ங்குழலின் ஒலியாய் விம்ம 8

301 கூவியபுள் ளொளிகள்வாத் தியங்க ளாகக்
குலைக்கமுகின் பாளைநிறை கவரி யாக
தாவகலும் முனிவர்பரி சனங்க ளாகத்
தானிருந்தி ராசாங்க மாகத் தோன்றும்
பூவலர்தேங் காவதனை வலைச மேவும்
புத்தேள்காண் பொழுதொருயோ சனையின் காறும்
தேவுருவாங் குருந்தினுக்கெண் டிக்கும் வானோர்
திரளுமுனி கணங்களுமாய்ச் செறிந்து மொய்த்து 9

302 பூசிப்போ ருந்தொழுவோ ருந்தி யானம்
புரிபவரும் மறையாக மம்பு ராணம்
வாசிப்போ ரும்மவையின் பயன்சொல் வோரும்
மாறுது சிவானுபவம் மருவு வோரும்

---

299 மதுகரம் - வண்டு. பலாதி – பலவகையான, பழங்களுமாம். வாவி – தடாகம். மீனம் – விண்மீன். மேதி – எருமை.
300 சோபானம் - படிக்கட்டு. அநிலம் – காற்று. உரசும் – உராயும்.
301 கவரி – வெண்சாமரை. தா – குற்றம். புத்தேள் – தேவர்கள்.

நேசிப்போ ரும்வேண்டும் சித்தி பெற்று
நீங்குவோ ரும்புதிதாய் நேர்ந்து மேன்மை
யாசிப்போ ரும்மாகித் தோன்ற லாலே
அம்மவிது சன்னவன மாகு மென்ரூன் 10

303 இந்தவன நாமமூன் றினையும் யாரா
கினுமியம்பப் பெறின்நலங்க ளெல்லா மெய்தும்
அந்தஙிலை தருமுத்திக் கருக ராகு
வாரென்ரூன் சூதமுனி, அம்மை கேட்பச்
சந்தவிசை முனிபுகல்வான் புரத்தின் நாமம்
தான்மூன்றிற் கயிலைமுனர்ச் சார்ந்து நீல
கந்தரனர் உறைதலினல் என்று மாதி
கயிலாச மெனுநாமம் அதனுக் காமால் 11

304 சதுமறையும் அவணீங்கா துறை லாலே
சதுர்வேத புரமெனும்பேர் சருவ முந்தீர்ந்
துதிரடலை யாங்கால மார்க்கும் வாசி
உறுவதனற் சிவபுரப்பேர் ஓதும் மூன்றும்
துதியவரெங் கிருந்தேனும் புகலப் பெற்ரூல்
தொலையாத பவமகன்று சுத்த ராகி
விதுமவுலி புரம்புகுவர் அம்மை யிம்மை
வேண்டுவதெல் லாம்பெறுவர் மெய்மை யாமே. 12

305 அங்கயற்கண் ணழுதேகேத் திரத்தின் பேர்மூன்
ரூமென்ப தாத்துமநா யகர்முன் ஞளில்
துங்கமுறு வேதியராய் வந்தவ் வூர்வாழ்
தொன்மறைவே தியர்நிலத்தைக் கவரா நின்ற

---

302 சன்னவனம் என்பதற்குப் பெயர்க்காரணம் கூறிற்று.

303 அருகராகுவார் – தகவுடையராகுவார். சந்த விசைமுனி – நாரதன். நீலகந்தனர் – நீலகண்டராகிய சிவபெருமான்.

304 சருவம் – எல்லாம். அடலை – சாம்பல். துதி – வழிபாடு.

சங்கையிலாக் குறும்பரைநிக் கிரகஞ் செய்து
தமதுநில மாகச்சா தித்த லாலே
பொங்குசிவ கேத்திரமென் றேர்ப்பே ரவ்வூர்ப்
பூசுரர்கள் செய்கியமப் பொலிவி னலே 13

306 பவுத்திரமா ணிக்கமென் றேர்பெயரதாகும்
பாதாள பரியந்தம் நீரில் பூமி
அவத்தர்களாங் குறும்பர்கொளந் நிலந்தங் காணி
ஆக்குவிக்கும் பொருட்டறுபத்தாறு கோடி
செவிப்பயன்செய் தீர்த்தமெலாம் அழைத்துக் காட்டுஞ்
செய்கையினற் பெருந்துறையென் றேருபே
ராகும்
தவத்தரசர் புகுமுத்திக் கதுநன் மார்க்கந்
தானை லானுமப்பேர் சாற்ற லாகும் 14

307 இவ்வகையாங் கேத்திரநா மங்கள் மூன்றும்
இயம்பில் உதயாதியினில் யாவ ரேனும்
கவ்வைகொடா பத்திரைய வலைகள் மோதுங்
கடுந்துயராக் குப்மெய்சா கரத்தி லாழார்
எவ்வமில்சீ ராத்துமநா யகர்க்ரு ஞான
மேவடிவா யினுஞ்சகள மெய்தி நின்ற
அவ்வகையாற் காரியநா மங்க ளீரெட்
டாயுளவா யினவவையும் அறைகின் றேன்யான் 15

308 செம்மைதரும் அறமேசர் பரம சாமி
திரிமூர்த்தி குருஞான தரன்பு ரேசர்
பம்முசன்ன வனேசர் குந்தா ரணியநாதர்
பரையோக வனேசர்சிவ கேத்திர நாதர்

---

805 துங்கம் – மேன்மை. சங்கை – நாணம்.

806 பரியந்தம் – அளவு. அவத்தர் – வீணர்கள்.

807 உதயாதி – வைகறைப்போது. எவ்வம் – துன்பம். சகளம் – உருவத்திருமேனி.

மெய்ம்மையருள் மகாதேவர் சிவபு ரேசர்
விப்பிரநா யகர்சத்த நாதர் பெருந்துறைக்கோ
பொய்ம்மையில்முந் நூற்றொருவர் அசுவ நாதர்
புவனதே சிகரெனவாம் புகலும் நாமம் 16

309 சோடசமா யுரைத்திடுமிந் நாமந் தன்னைத்
துதிப்பவர்பன் நாள்தேடும் பாவம் பஞ்சின்
ஊடெழுமக் கினியெனவந் நாமச் செந்நீ
யுருத்தவையை ஒழிக்குமலம் உதவும் ஆயுள்
நீடியசந் ததிதருமிந் நாமந் தோன்றும்
நிமித்தமெலாம் உணருதிநே ரிழையே என்றுங்
தேடருமத் தலத்துதித்த கிருமி கீடச்
செந்துவுமீ சுரவடிவாய்த் திகழ்வ தாகும் 17

310 அத்தலத்திற் பிதிர்தருப்ப ணுதி செய்தால்
அவர்பிதிர்கள் கற்பவரை திருப்தி பெற்று
முத்தரா குவரெவைக்கும் முதன்மை யாகும்
முதுமறையா கமமுணர வரிய தாகும்
சித்தநெகிழ் வுறவயன்மா லாதி யோராற்
சேவிக்கப் படுவதென்றும் சிதைவ தன்றும்
இத்தனைமை போல்மகிமை எண்ணி லாத
இயம்பஅனந் தனுக்குமரி தென்ரு னன்றே 18

[தேவிக்கு நாரதர் வனபுர கேத்திர நாமமுரைத்த சருக்கம் முற்றும்]

---

308 புகலும் – சொல்லும்.

309 சோடசம் – பதினாறு. நிமித்தம் – காரணம். கிருமி – சிறுபூச்சி. கீடம் – புழு. செந்து – பிற உயிரினங்கள்.

310 சிதைவது – அறிவது. அனந்தன் – ஆதிசேடன்.

விஷ்ணுவுக்கு உபதேசித்த சருக்கம்

[எழுசீர் விருத்தம்]

311 நாத கீதவிசை முனிவ நீயிவண்
நவின்ற யாவையு மறிந்தனன்
சீத தாமரைமி ளைனுக்குப
தேச மெய்திய திறத்தையும்
ஓது கென்னநய மாக நாரதனு
வப்பி னன்னெயிரு தாள்பணிந்
தாத ரத்தொடுகை அஞ்சலிச் சிரச
ளுகி நின்றதனெ யோதுவான் 1

[திருமால் இறைவனருள்பெறத் தவமியற்றல்]

312 செங்கண் மாயன்மறை மொழிக ளாலுமுயர்
திசைமு கத்தனுரை யாலும்வாழ்
வெங்கு மாகிநிறை பூரணப் பொருளி
ருந்துவாழ் தருபெ ருந்துறைத்
துங்க நற்றலம தென்ற கங்களிது
ளும்ப வோர்ந்தருள்பெ ரும்பொருட்
டங்க ணெய்திவளர் குந்த மூலமெனும்
அண்ணல் தன்றிருமு னெய்தியே 2

313 வந்த ளுதிகளி யற்றி யன்பொடு
வழுத்தி நின்றுவட திக்கிலோர்
சந்த மாரரச தன்கண் முக்கணிறை
தாள்நினைந்து தவ முற்றனன்

---

311 இசைமுனிவன் – நாரதன். தாமரைமினுள் – திருமகள். அஞ்சலிச் சிரசன் – தலைமேற் குவித்து வணங்கியகையினன்.

312 திருமுன் – சன்னிதி.

அந்த மின்றிவெகு நாளி ரங்கியருள்
ஆத்ம நாதர்குரு வடிவமாய்
இந்தி ரைக்குரிய கணவ னற்றவமி
யற்றுகின்ற வுழி யெய்தினர் 3

[இறைவன் காட்சிதரக் கண்டு களித்துப் போற்றல்]

314 கண்டெ முந்தரியென் ஐயன் வந்தனனி
கரிலு மைக்கிறைவன் வந்தனன்
எண்ட ராதபல வண்ட கோடிகள்
எவற்றி னுக்குமுதல் வந்தனன்
துண்ட வெண்பிறையன் வந்த னன்னெமது
தோல்றல் வந்தனன் விளங்கருட்
கொண்டல் வந்தனன் எனப்ப ணிந்துகளி
கூர நின்றுதுதி செய்குவான் 4

315 அருவ மாயுருவ முபய மாயுலகம்
யாவு மாகிநிறை பூரண
கருணை மேருவெடு ராந்த காகொடிய
காள முண்டகனி வாயினெய்
பருகு மெய்யடிய ரமுத மேமறைப
ரிந்து தேடியு மறிந்திடா
நிரும லாவளர்தி ருப்பெ ருந்துறை
நிராம யாவருள்ப ராபரா 5

316 செஞ்ச டாடவியின் வெண்க ரோடிகைசி
ரித்த வெண்டலைய லீப்புனல்
பிஞ்சு வெண்மதிபை நாக மாலைபுனை
பிஞ்ஞ காகவி மழுக்கரா

---

313 அரசு – அரசமரம். முக்கணிறை – சிவபெருமான். இந்திரைக்குரிய கணவன் – ஈண்டு திருமாலைக் குறித்தது.

314 துண்டம் – கீற்று.

315 உபயம் – இரண்டு. புராந்தகன் – சிவன் (திரிபுரத்தை எரித்தவன்) காளம் – விடம் (ஆலகால விடம்) நிராமயம் – பிணியின்மை.

கஞ்சம் நேருபய பாதனே நினைக
ருத்தி னர்க்கருள் சுரந்தவா
அஞ்ச லென்ற ருள்திருப்பெ ருந்துறையெம்
அய்ய னேகருணை மெய்யனே 6

[இறைவன் ஆறெழுத் துண்மைகூறி யருளல்]

317 என்று நற்றுதிகள் எண்ணி லாதன
இயம்பு மாலையெதிர் நோக்கியே
உன்று திக்குளம்நெ கிழ்ந்தம் யாமென
உவந்து கண்ணருள் பொழிந்து,வா
நன்று னக்கருள வென்றி ருத்திநலம்
நல்குமக் கரமோ ராறதாம்
வென்றி மந்திரமு ரைத்த னன்கரிய
விண்டு நற்செவியி லன்புடன் 7

[திருமாலுக்குக் காக்கும் தொழில் இறைவனருளல்]

318 ஞான தேசிகவு ருக்கொ டின்புடன்
நவின்ற வுண்மையுப தேச,மால்
தான றிந்துமல வலிதொ லைந்தருள்
தனைக்க லந்துசிவ மயமதாய்
மோன முற்றுமகிழ் வெய்தி வந்தனை
முதிர்ந்த வன்பொடு செயப்பினை
யான நன்கருணை நோக்கி னலுல
களிக்கு மச்செயல் கொடுத்துடன் 8

---

316 சடாடவி – சடைக்காடு. கரோடிகை – தலைமாலை. நவி – மழுவாள். கஞ்சம் – தாமரை.

317 உன்றுதிக்கு – உன்துதிக்கு (வழிபாட்டிற்கு), கண்ணருள் – பேரருள். விண்டு – திருமால்.

318 மலவலி – மும்மலத்துன்பம்.

319 அளவில் வல்லபமி யற்று மாயையும்
அளித்து நாமென விருத்திநீ
யுளம கிழ்ந்துனது பதியின் மேவுகென
வோதி நாதன்மறை வுற்றனன்
வளமு குந்தனும்வை குந்த மேவியருள்
வழிபு ரந்தவணி ருந்தனன்
துளப மால்தவமி யற்று போழ்தருகு
தொட்ட தோர்கயம துண்டரோ 9

[நாராயண தீர்த்தம் உண்டாக்கித் திருமால் வைகுந்தம் செல்லுதல்]

320 என்று மாதவமி லங்கு நாரதன்
இயம்ப வெற்பரையன் ஈன்றருள்
மன்றல் சேரளக வல்லி நன்றென
மகிழ்ச்சி கூர்ந்திவை நவிற்றுவாள்
வென்றி சேர்தருமு குந்த லோர்கயம்
விருப்பி னேற்றின னெனச் சொனாய்
நன்றி சேர்தரும தன்றன் மேன்மையென்
நவிற்றெ னப்பரிவி னோதுவான் 10

[விஷ்ணுவுக்கு உபதேசித்த சருக்கம் முற்றும்]



---

319 முகுந்தன் – திருமால். கயம் – தீர்த்தத்தடாகம்.
320 வெற்பறையன் – இமவான்.

நாராயண தீர்த்தச் சருக்கம்

321 அன்னே கேளற லதற்கு நாமமது
நார ணப்புனல் தாமதிற்
றுன்னி யாடினவ ருக்கு ஞானநெறி
தோன்றும் வானினதி தன்னிலும்
நன்ன லத்தகை சேர்வர் மாலுருவம்
நண்ணு வார்புனல தன்கரை
தன்னில் மைப்புயல் நிறத்தன் மேவியருள்
தந்து வைகுவ னுயிர்க்கெலாம். 1

[நாராயண தீர்த்தப் பெருமை கூறல்]

322 அந்த நீர்பருகி ஞாளி யின்னுருவம்
ஆன நாயகனுட னுய்ந்தனன்
எந்த வாறெதனில் அன்னே கேள்முனம்
இயம்பு கின்றகலி யின்கணே
சிந்தை கூருமணி முத்த மாநதிகொள்
தீர வாசமதி லோர்நகர்
நந்து சீரெழில்க ளேகொள் பாகவத
நாம மப்புரிய தன்கணே. 2

[ஒரு வைணவன் வரலாறு கூறுதல்]

323 வாழ்ப வன்கொடிய வயிணவன் சிவனே
வந்தியான் அறைவன் நிந்தையே
தாழ்வி தென்றறிவி லாதரன்ற மர்கள்
தங்க ளுக்கும்வசை பேசுவான்

---

321 அறல் - தீர்த்தம். நாரணப்புனல் - நாராயண தீர்த்தம். வானினதி - ஆகாயகங்கை. மாலுருவம் - திருமால் வடிவம். மைப்புயல் நிறத்தன் - திருமால்.

322 ஞாளி - நரசிம்மம். கலி - கலியுகம்.

கேழ்வி யின்றியறி யாத மூடவணி
கக்குலத் தன்மிகு கேட்டினன்
வீழ்ம னத்தனடர் காச ரோகவல
வியாதி கொண்டதின் மரித்தனன் 3

324 மரித்த காலியம தூதர் சக்கரம்வில்
வாள்க ணிச்சியெறி வேல்முதல்
தரித்த கையினர்க ளாகி வந்துவலு
தறுகணன் கொடிய பாவியென்
றுருத்து வைதுயிர் துடிக்க மோதியொழி
யாது கும்பிபல வீழ்த்தியே
வருத்தி னர்பினுயர் தண்ட காரணிய
வைப்பி லேகொலி மலிந்திடும் 4

325 புலியர் சேரிதனில் ஞமலி யாகவரு
புன்மை யானபவ மெய்தியே
உலைவு கொண்டுழலும் பொழுதி லோர்தினமவ்
வூரின் வாழ்புலிய ஞெருவனல்
வலியம் வீசிவன வேட்டை யாடிமெய்
வருந்தி வந்திடுமவ் வளவிலோர்
தலைமை பெற்றகரு மாவ டர்ந்தருகு
சார்ந்து பாய்ந்திட வெகுண்டுநாய் 5

326 தெக்க ணத்திசையில் ஓடிவந்து வளர்
சீதரன் புரியு மடுவினிற்
புக்கு மூழ்கியற லுண்டி டும்பொழுது
போன தவ்வுருவ மாதலால்

---

323 வந்தியான் – வணங்கிவாழ்த்தான். அறைவன் – பேசுவான். அரன்றமர்கள் – சிவனடியார்கள். வசை – தீமொழி. வலவியாதி – கொடிய நோய்.

324 வலுதறுகணன் – வலியதறுகண்மையுடையவன். உருத்து – வெகுண்டு. கும்பி – நரகம்.

325 ஞமலி – நாய். உலைவு – துன்பம். கருமா – கரிய விலங்கு (ஏனம்).

அக்க ணஞ்சிவக ணங்கள் மானமோ
டகீணந்து வந்ததனி லேற்றியே
முக்க ணெந்தைபுரி தனிலி ருத்தியிட
முற்றுமெய்க் கருணை பெற்றதே. 6

327 இன்ன மாநலம தொப்ப வப்புனலின்
எண்ணி லார்கள்கதி யுற்றனர்
அன்னம் நேரும்நடை மின்னி கர்க்குமிடை
அங்க யற்கணமு தாம்மொழி
வன்ன மேகலையன் னேயெனச் சொலி
வழுத்த வாய்மையது வாகும்நீ
சொன்ன தாலுளம் மகிழ்ந்தெ னென்றுவளர்
தோகை போலுமிய லாள்சொல்வாள் 7

[நாராயண தீர்த்தச் சருக்கம் முற்றும்]



326 சீதரன் – திருமால். மடு – நாராயண தீர்த்தம். அறல் – தீர்த்தநீர். மானம் – விமானம் (முதற்குறை) புரி – கைலை.

உருத்திரருக்கு உபதேசித்த சருக்கம்

[தரவு கொச்சகக்கலிக்கப்பா]

[உருத்திரருக்கு இறைவன் அஞ்செழுத்துண்மை கூறியருளிய மேன்மையை உமை நாரதனைக் கூறக்கேட்டல்]

328 நாரதனீ விரித்துரைத்த நற்சரிதம் யாவுமெனக்
காரமுதா முருத்திரர்தாம் அஞ்செழுத்தி னுபதேசம்
பேரருளா லிறையருளப் பெற்றமுறை புகலுகெனக்
காரமர்பூங் குழலுமையாள் கழற,முனி
வரன்புகல்வான் 1

329 திருமலியுங் குருந்தவனச் சிவபெருமான்
திருவுருக்கொண்
டுரியவுப தேசமனு அரியயனுக் கருள்புரியும்
பெருமலனு மப்புரியின் பெருமையுமோர்ந்
தெழில்நுதற்கண்
எரிவிழியும் பிறைமுடியும் இலங்குமுருத் திரரணைவார். 2

[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

[உருத்திர மூர்த்தி நூற்றெண் உருத்திரகணங்களோடு குருந்தவனம் நோக்கிப் புறப்படல்]

330 சங்கார காலமரி யயன்வா மூருஞ்
தருநாடுந் திக்குப்பா லகர்தஞ் சார்வும்
பொங்கோத வுததிகளும் வரைகள் யாவும்
புவிமுதலாம் உலகெவையும் பொடியதாக்கி

---

328 கார்அமர் - மேகம்போன்ற. முனிவரன் - நாரதன்.

329 மலு - மந்திரம். எரிவிழி - நெருப்புக்கண்.

மங்காவெண் பலியணியும் கோலநீல
மணிவரைவெண் படாம்போர்த்து வருவதேய்ப்பப்
பொங்கார்வத் தொடுமெழுந்தார் குருந்தூர்நோக்கிப்
பொலிநூற்றெட் டுருத்திரரும் புடையிற்சூழ

[உருத்திரமூர்த்தியின் தோற்றப்பொலிவு]

331 செஞ்சூடா மகுடமுடி யொளிர நாக
செங்கரகங் கணமசையத்திண் டோள்மார்பிற்
பஞ்சவடி வீரசன்ன மாமையோடு
பன்றியின்கொம் பென்புசிரப் பணிகுலாவ
மிஞ்சுசெங்கை தொறுஞ்சூலம் துறட்டி பாசம்
வேல்மழுவாள் நேமிதடிவிளங்கித் தோன்றக்
கஞ்சமல ரடிச்சிலம்பு புலம்ப முக்கண்
கதிர்மூன்றின் வடிவாயகாட்சி தோன்ற 4

[பூதகணங்களின் தோற்ற வருணகீன]

332 நெடுங்கமுத்தும் குறுந்தாளும் பருத்த கையும்
நீண்முகமும் பிறையெயிறும் போழ்ந்தவாயும்
ஒடுங்குமயிர்ச் சிறுதலையும் குழிந்த கண்ணும்
உயர்மார்பும் பெருந்தொதொந்தி
வயிறுந்தோன்றக்
கொடுங்கொலைச் சூலங்கபால முங்கைக் கொண்டு
குழையசைய வுடையசையக் குதித்துத்துள்ளி
இடிமுழக்கம் போற்பாடி யாடி முன்பின்
எண்ணிறந்த குறட்பூதப் படைக ளெய்த 5

---

330 பொங்கோதவுததி – அலை பொங்கி ஒலிக்கும் கடல். வெண்பலி – திருநீறு.

331 பஞ்சவடி – பூணூல். பணி – அணிகலன். நேமி – சக்கரம். கஞ்சமலர் – தாமரை மலர்.

332 பிறையெயிறு – பிறைச்சந்திரன் போன்ற பற்கள். குழை – காதணி.

[பல்வகை வாத்தியம் முழக்கிச் செல்லுதல் வருணனை]

333 துந்துபிகா ளம்பூரி மணிசே கண்டி
துடிமுரசு பம்பைசின்னம் துகூடர்பேரி
வந்தமுரு கியவீணை யாழ்மற் றுள்ள
வாத்தியங்கள் மிகமுழங்க வரிசைமேவும்
சுந்தரவெள் விடைக்கொடியும் பெருகு வீரத்
துவசமும்விண் மறையவெங்கும் சூழ்ந்து மொய்ப்பக்
கொந்தலர்பூம் பொழில்புடைசூழ் சிவபு ரத்திற்
குறுகியருள் சுரந்தநிறை குணத்தராகி 6

[உருத்திரன் இறைவனைப் போற்றி வழிபடல்]

334 வந்துமகிழ் வுடனழல்நீர் படிய வின்று
வாய்த்ததெனக் குடைந்தாடி வாழ்வுற் றேனென்
றந்தமிலாப் பேருவகை பொங்க வெண்ணீ
றக்கவட மணிந்துதவ வடிவந் தாங்கிக்
குந்தமு லத்திறையைச் சென்று தாழ்ந்து
குவித்தகரத் தொடுங்கருணைக் குன்றமேயென்
சிந்தைமயல் மாற்றியருள் புரியு மாறு
திருவுளஞ்செய் தருளுகெனச் சிறந்து வாழ்த்தி 7

335 வேண்டுதல்கொண் டவ்விறைக்குத் திரத்தின் பாங்கர்
விரவுநறு மனமகிழ்ச்சி மேவி யங்கு
நீண்டபெரும் புனற்றடமொன் றமைத்துப் பாங்கர்
நியமமொடு விதித்தவா சனத்தின் மேவித்
தூண்டருஞ்சோ தியினுடனே கலக்க நெஞ்சந்
சுத்தமவு னத்தினுடன் யோகத் தன்பு
மூண்டிடச்செய் திருந்தனன்பல் விதங்கொள் அண்ட
முகட்டிலிருந் தரசுபுரி முதன்மைப் புத்தேள் 8

---

888 அந்தம் - அழகு. பேரி - ஒருவகை தோற்கருவி. அந்தமுருகியவே அழகுமிக்க. துவசம் - கொடி.

884 குடைந்து - மூழ்கி. அக்கவடம் - உருத்திராக்கமாலை.

885 உத்திரத்தின்பாங்கர் - வடக்குப்புறத்தில். முதன்மைப்புத்தேள் - சிவபெருமான்.

336 சதுர்வேத புரமேவும் ஆத்ம நாதர்
தவம்பன்னு னியற்றுமுருத் திரர்மே லன்பு
முதிரவித யத்திரங்கி யவர்முன் பெய்தி
முளுமனக் கருத்தெண்ணம் முடிப்பான் வேண்டிக்
கதிமிகுவெள் விடையேறி உமையோர் பாகங்
கலந்திலகச் செஞ்சடைமேற் கலிவெண் டிங்கள்
நதியரவு தலைமாலை கொன்றை தும்பை
நகுதலைகூ விளமணிந்த நலமுந் தோன்ற 9

337 திருநயன முகக்கருணை யொழுகச் செவ்வாய்ச்
சிறுமுறுவ லொளிரவளைச் செவித்தோடாட
வரியரவும் புரிநூலும் இதழித் தாரும்
மணிகளும்பொற் பணிகளுந்தோள்
மார்பில் மின்னக்
கரியவிடத் திருநீல கண்டத் திட்ட
கதிர்மணிமுத் திலக,மலர்க் கரங்கள் நான்கும்
பொரிமறிமான் மழுவபய வரதங் தாங்கப்
புண்டரிகத் தோலரைமேற் பொலிந்துதோன்ற 10

338 வேதவொலி மிழற்றுபரி புரம்பொற் ருள்மேல்
வீழ்ந்தரற்ற வரியயன்மால் விண்ணோர் போற்றப்
போதமிகும் இருடிகள்விஞ் சையர்கள் யாழோர்
பொற்புருரா ரதர்முதலோர் புகழ்ந்து வாழ்த்தச்
சீதமதி குடைகவிப்பக் கதிர்க ளெங்கும்
சிறந்தமணி விளக்கெடுப்பத் திசைகள் காப்போர்
சோதிமணி யடைப்பைமுதல் வரிசை தாங்கிச்
சூழமலர் மாரிசுர தருக்கள் தூற்ற 11

---

336 இதயத்திரங்கி – உளங்கனிந்து. கதி – உயர்நடை. நகுதலை – மண்டை ஓடு.

337 இதழித்தார் – கொன்றைமாலை. கரியவிடம் – ஆலகால விடம். பொரிமறிமான் – புள்ளிகளையுடைய மான்கன்று. புண்டரிகம் – வெண்தாமரை. புலி.

338 பரிபுரம் – சிலம்பு. அரி – இந்திரன். விஞ்சையர் – வித்தியாதரர். புரு – கிம்புரு. அடைப்பை – காளாஞ்சி. சுரதருக்கள் – கற்பக மாதிமரங்கள்.

339 கணநாதர் தொண்டர்பலர் இருகை கூப்பிக்
கலந்தொலிக்கும் அரவொலியேழ் கடலின் விம்ம
மணநாறுஞ் சிறுதென்றல் அசைந்து லாவ
வளர்முகில்வி தானமிட மகிழ்ந்து நந்தி
குணமார்கட் டியங்கூறப் பெரிய பண்டிக்
குஞ்சரக்கன் றுடனிசைய குமர வேளும்
இணையாய்மூ டிகமயில்மேல் ஏறிமுன் போந்
திடவெளிவான் வழியாக எய்தி வந்தே 12

340 மகிழடியிற் றவஞ்செயுருத் திரார்மு னியர்
மனவாக்கெட் டாதபொருள் தோன்றலோடும்
தகவுறுகண் மலர்குளிரக் கண்டெ ழுந்து
தரைமீது வீழ்ந்திறைஞ்சித் தழைத்தவன்பு
மிகவளரக் குதித்தாடி யிருகண் மாரி
மிகப்பெருகப் புளகமுடன் மீதுவோங்க
முகிழுறுசெங் கரமுடிமேற் றங்காநிற்ப
முன்னின்று தோத்திரங்கள் மொழிவ தானார் 13

[ஏழுசீர் விருத்தம்]

341 பரமா கணங்கள் முதல்வா புரங்கொல்
பகைவா புயங்க மணியும்
வரதா சிவந்த வுருவா துலங்கும்
மழுமா னிலங்கு கரவா
சிரமாலை கொன்றை மதிநீள் கரந்தை
செழுநீர் பொருந்து சடையா
அரனே குருந்த வனநாத வுன்றன்
அடிசேரும் அன்பு புரியே! 14

---

339 அரவொலி – ஹரஹரவென்னும் ஒலி. விதானம் – பந்தற்சீலை. நந்தி – நந்திதேவர். பண்டி – வயிறு. குஞ்சரக்கன்று – விநாயகர் மூடிகம் (மோஷிகம்) – எலி. வெளிவான் – ஆகாயம்.

340 மகிழ் – மகிழ மரம். முகிழுறுசெங்கரம் – குவித்த கைகள்.

341 புயங்கம் – பாம்பு. கரவா – கையை உடையவனே. மதி – பிறைச் சந்திரன். செழுநீர் – கங்கை.

342 இமையோர்கள் அஞ்ச வரும்வேலை நஞ்சை
இடர்தீர வுண்ட முதல்வா
சமன்மாள வன்ரே ருதையோடு கின்ற
சரணர விந்த முடையாய்
உமைமாதி ணங்கு கணவா மெய்தந்தி
உரிமூடு கின்ற பகவா
அமலா குருந்த வளராத வுன்றன்
அடிசேரு மன்பு புரியே! 15

343 தொழுவார்கள் தங்கன் பவநோய் கலைந்து
சுகமீயு மின்ப மலையே
தழல்போ லிலங்கு திருமேனி கொண்ட
தருவே அகண்ட குருவே
பழகார ணங்கள் மிகுமாக மங்கள்
பலநூல் பகர்ந்த கனிவா
அழகார் குருந்த வனராத வுன்றன்
அடிசேரு மன்பு புரியே! 16

344 பதிவா யனந்தம் உயிர்தோன்ற நின்ற
பதியேமெய் யன்பர் பெறுநீள்
கதியே யயன்கம் உகிரால் அரிந்து
கரமீது கொண்ட மணியே
துதிசேர்பொன் மன்றில் முயன்மீது நின்று
சுகராட கஞ்செய் கருணை
அதிபா குருந்த வனராத வுன்றன்
அடிசேரு மன்பு புரியே! 17

---

342 சமன் – யமன். சரணர விந்தம் – பாத தாமரை. இணங்கும் – ஒருருவாய் ஒன்றியிருக்கும். தந்தி – யானை (கயாமுக அசுரன்) உரி – தோல்.

343 பழகு ஆரணங்கள் – பயிலும் வேதங்கள். கனிவா – அன்புடையவனே.

344 பதிவாய் – நிலையாய். அயன்கம் – பிரமாவின் தலை. உகிர் – நகம். அரிந்து – கிள்ளி. முயல் – முயலகன். அதிபா – தலைவனே.

[தரவு கொச்சகக் கலிப்பா]

345 என்றுபல வாந்துதிசொற் றேயிறைஞ்சல் கண்டிறைவன்
வன்றிறல்சே ருந்தவள மால்விடைமின் றிழிந்தருளித்
தன்றுணைக்கை யாலெடுத்துத் தண்ணளிசெய் தோங்கருளால்
உன்றனிவ ரவின்படியா முபதேசஞ் செய்துமென 18

346 ஞானகுரு வடிவாக நாயகன்றெக் கணமுகமா
ஊனமற விருந்தருளி உருத்திரரீ ஈதிர்முகமாய்
மோனமுற விருக்கவென மொழிந்துமலர்ச் செங்கையினீ
வானுலவு மவன்முடிமேல் வைத்தருட்கண் ணருள்பரப்பி 19

347 பலகலிநற் பொருளாம்பஞ் சாக்கரமந் திரமதனீ
உலகுதெளி வுறும்பொருட்டா யுபதேசஞ் செய்தருளி
அலர்கமல முகக்கருணை யளித்திறவாப் பேரின்ப
நலமுதவி யுலகெவைக்கும் நாயகமென் றருள்கொடுத்தே 20

348 நாமேநீ யாகுமுனீ நாடினருக் கருள்தொழிலும்
சாமாறின் ரூயனீத்தும் சங்கரிக்கும் தன்மையுநெஞ்
சேமாக்கும் ஈசான திக்காளு மிறையியல்பும்
ஆமாம்உன் பாலதென அன்பொடுசொற் ரூனமலன் 21

349 நீலமணி கண்டவருத் திரனிமலன் ஓதுதல்கேட்
டாலின்முனங் குருந்தமரும் ஐயாநீ யிவ்வுழிநின்
கோலமலி யருளுருவம் கொளல்வேண்டும் இப்புனலும்
சாலவுள பவப்பனிக்கோர் தபனமெனச் செய்தருளே. 22

---

345. தவளமால்விடை – வெண்மையான பெரிய காளை.
346 தெக்கணமுகமா – தென்முகமாக. ஊனமற – குறைவில்லாமல்.
347 பஞ்சாக்கரம் – அஞ்செழுத்து (சிவாயநம)
348 சங்கரித்தல் – அழித்தல். ஏமாக்கும் – இன்புறும். அமலன் இறைவன்.
349 ஆலின்முனம் – ஆலமரத்திற்கு முன்னுள்ள. தபனம் – வெருப்பு.

350 அப்படியா குகவெனச்சொற் றண்ணல்மகிழ் மூலமதின்
வைப்பெனவோர் சிவலிங்க மாய்க்கயிலை யீசரெனும்
செப்பரிய நாமமுடன் திருவுருக்கொண் டாரவரை
மெய்ப்பரிவாற் கண்டவர்கள் வீட்டின்ப மெய்துவரால். 23

351 அருளுருவாம் அவ்விலிங்க மதனீயுருத் திரன்கண்டு
பெருவிருப்பாற் பூசித்துப் பேரருள்பெற் றகமகிழத்
திருவளர்தன் புரமதனிற் சேர்ந்தீரும் தொழிலியற்றி
மருவியநற் கணங்கடொழ வைகினன்முன்
னேனருளால் 24

352 கயிலாய ஈசரெனும் கருணைதரு சிவலிக்கத் (து)
அயலார்உத் தரதிசையில் அழகியநற் சிவகங்கை
பெயராலோ டையதாகிப் பிறங்குமதன் றென்கரையில்
மயல்தீர்நற் றவம்பூசை மகமாதி யொன்றனந்தம் 25

353 என்றனன்நா ரதமுனிவன் இமயமயில் கேட்டுருகி
நன்றுதரும் நின்மொழியி னல்மகிழ்வுற் றேன்சிவநீர்
ஒன்றுளதென் றுயதன்சீர் உள்ளதெலாம் ஓதுகெனத்
துன்றுமிசை யாழ்முனிவன் சொல்லுவனென்
றோதுவனால் 26

[உருத்திரருக்கு உபதேசித்த சருக்கம் முற்றும்]

---

350 வைப்பு – சேமநிதி.

351 ஈருந்தொழில் – அழித்தல் தொழில்.

352 உத்தரதிசை – வடதிசை. ஓடை – தீர்த்தம். ஒன்றனந்தம் – ஒன்று பலவாகப்பெருகும் என்றபடி.

353 இமயமயில் – உமையம்மை. சிவநீர் – சிவதீர்த்தம்.

சிவதீர்த்தச் சருக்கம்

[சிவதீர்த்தமென்னும் பெயர்க்குக் காரணம்]

354 உலகமெல்லாம் ஈன்றருள்சிற் றுதரவருட் கோமளமாம்
கலவமர்ந்த வனமயிலே கருதரிய வருத்திரன்செய்
நலமதனற் சிவதீர்த்த நாமமதற் காயினதெப்
பலமுமுத வதன்மகிமை பகரவெனக் கரிதாமால் 1

[அதன் பெருமைக்கு அளவின்று எனல்]

355 சாற்றுபுன லெவற்றினுக்கும் தானதிக மாயுரைக்கும்
ஏற்றமுள தாமதன்பா லேய்புனல்வீழ்ந் தொன்றேனும்
மேற்றிகழப் பெறிலொழியா வெந்துயரந் தீர்ந்ததுசேர்
பேற்றினுக்கிவ் வளவெனுமெண் பேசவெவர்க்
கும்மரிதே 2

[நாரதர் விருபாக்கன் வரலாறு கூறத் தொடங்குதல்]

356 முன்னுளோர் பஞ்சமன்மெய் முற்றும்வியா திக்கிடமாய்
என்னும்மேல் என்றிரங்கி யேதிரிந்தந் நீர்பருகி
மன்னுமுன் அவன்மீனுல் மாண்டனனப் புனலுணலால்
பொன்னுடர் போற்றுகதி புக்கனனென் றுன்முனிவன் 3

---

354 சிற்றுதரம் – சிறியவயிறு. கலவமர்ந்த – தோகைபொருந்திய. வனம் – அழகு. நாமம் – பெயர். பலம் – பயன்.

355 ஏய்புனல் – பொருந்தியநீர். மேற்றிகழப்பெறில் – உடம்பில் கொள்ளப்பெறின். எண் – எண்ணிக்கை.

356 வியாதி – தொழுநோய். பொன்னுடர் – தேவர்கள்.

[உமை விருபாக்கன் வரலாற்றை விளைவுதல்]

357 தவம்புரியும் பரை,முனிவ! சாற்றியவப் பஞ்சமன்யார்
அவன்புரியும் விருத்திகளென், அக்கொடிய நீசனுக்கு
நிவந்தகதிக் கேதுவெவன் நிகழ்ந்தவைநீ யுரைத்தியெனச்
சிவந்தகறை வேல்விழியாய், செப்புவனென் ரோதுவனுல் 4

[விருபாக்கன் வரலாறு]

358 செம்மைதரு சவுராட்ட தேயம்யமு னைதீரத்
தெம்மலீவு மாற்றிடும்வில் வாரணிய மெனுந்தலமேய்
விம்மியவத் தலத்துறைவார் வில்வவன நாதரெனும்
கைம்மழுவர் ஏயுவதக் கா,மனுகா லங்கலியில் 5

359 உரிமைகொள்நா லாம்வருணத் தொருபெருமா
தவமுடையன்
அரியசிவ யோகிவிரு பாக்கனெனும் பெயருடையான்
விரிதருகா மாதியெலாம் விட்டருளா சாரம்நிறை
தருநியமம் பொறைகுணநற் சாந்தமொழுக்
குணர்வுடையோன் 6

360 அய்யமேற் றுண்பதலால் ஆசையில னென்றினிலும்
உய்யுநெறி யேகருதும் உத்தமன்வில் வாரணியத்
தய்யனவந் திக்கவணந் தன்பொடுசெய் யாள்மடுத்தோய்ந்
தெய்தினனவ் வில்வவனத் தீசர்திருச் சன்னிதிமுன் 7

---

357 பரை – உமாதேவி. விருத்தி – தொழில். நிவந்த – மேன்மையமைந்த. கறை – குருதி தோய்தலால் வந்த நிறம்.

358 சவுராட்ட தேயம் – சவுராஷ்டர தேசம். மலீவு – குற்றம். விம்மிய – உயர்ந்த. ஏய்வது – விளங்குவது. கா – வனம். கலியில் – கலிகாலத்தில்.

359 காமாதி – காமம் முதலிய ஐங்குற்றங்கள். ஆசாரம் – ஒழுக்கம்.

360 ஐயம் – பிட்சை. வந்திக்க – வழிபட. செய்யாள்மடு – இலக்குமி தீர்த்தம்.

361 கண்டிறைஞ்சி ஞனமல காரணனே மெய்ப்புளகங்
கொண்டனன்கண் டானந்தக் கூத்தாடிச் சூழ்ந்துதுதித்
தண்டர்பிரா னேயெனே நீ யாளாய்க்கொண்
டருள்கவெனத்
தண்டளிர்வில் வாதிகளாற் ரூனருச்சித் தன்றுமுதல் 8

362 திருவலகு திருவிளக்குத் திருப்பள்ளித் தாமமுதல்
உரியதிருப் பணிகள்பல ஒன்றேனுங் குன்ருமல்
பரிவொடுசெய் தேற்றருந்தும் பான்மையனுய்
வைகினனப்
புரிதனிற்சின் ஞல்வதியும் போதந்த நாட்டரசன் 9

363 தகைமைபெறு ராட்டிரவர்த் தனனென்னும்
பெயருடையான்
நலமருவு மத்தலத்து நண்ணியிறைஞ் சிப்பரனுக்
கலகில்பல திரவியங்கொண் டபிடேகம் பலவியற்றி
நிலமுதல்வேண் டுவதெவி நெஞ்சமலி சிந்தையனுய் 10

364 மெய்ப்பரிவாற் பணிபுரியும் விருபாக்க மாமுனிவன்
தப்பில்செயல் அவரவர்கள் தாமுரைப்பக் கேட்டரசன்
அப்பெரியோன் றன்முன்சென் றடிதொழுது நின்பெருமை
இப்புவனத் தோருணர்தற் கெய்தாதென் றுபசரித்தே 11

[இராட்டிர வர்த்தனன் விருபாக்கனிடம் கோயிலைப் பேணும்
பொறுப்பை யளித்தல்]

[ஏழுசீர் விருத்தம்]

365 அடிகள்நீர் வில்வா ரணியமா மிந்த
அற்புதத் தலவிசா ரஜீனயாய்ப்
பொடியணி யுரக மார்பர்தம் பணியைப்
போற்றிட வேண்டுமென் றிரப்ப

---

361 மெய்ப்புளகம் – மெய்ம்மயிர் பொடித்தல். வில்வாதி – வில்வம் முதலிய இதழ்களால்.

362 ஏற்றருந்தும் – யாசித்துண்ணும். வதியும்போது – வாழுங்காலத்தில்.

363 இராட்டிரவர்த்தனன் அரசன் பெயர்.

364 பரிவால் – அன்பால். உணர்தற்கெய்தாது – அறிய இயலாது.

முடிகெழு மரசே அன்னதே யாக
என்றனன் முனிபுர வலனும்
கடிகொளா லயத்தின் முதன்மையை யவர்தம்
கைகொடுத் தகன்றன னிப்பால் 12

[விருபாக்கன் சிவப்பணியை நெறியோடாற்றல்]

366 ஆசைசற் றிலனுய்ச் சிலவர விருப்ப
ஞகியவ் வரசனீ பொருளால்
மாசிலா வரன்சீர் வளத்தினைப் பெருக்கி
மதியர வணிவில்வா ரணியர்க்
கேசலி லறுகாற் பூசனை யித்ய
திருவிழா மாதவுற் சவங்கள்
தேசுசேர் தீபம் ஆடையா பரணந்
திருப்பணி யாவையும் புரிந்தான். 13

367 இம்முறை பலநாள் இயற்றியம் முனிவன்
எய்தினன் வார்த்திக மதனிற்
செம்மைசே ரய்யம் முன்புபோ லேற்கும்
திறமில னுயினன் அதுகண்
டெம்முரை கேட்க வேண்டுமென் றக்கோ
யிலினதி காரிமா ரைவர்
தம்மனை களிலட் டுடன்பலி கொணர்ந்தத்
தவமுனி மடத்தினிற் கொடுப்பர். 14

---

365 தலவிசாரணை – கோயிலைப்பேணும் அதிகாரம். பொடி – திருநீறு. உரகம் – பாம்பு. முதன்மை – தலைமை.

366 ஈபொருளால் – அளித்த செல்வத்தால். ஏசலில் – குறைவின்றி. தேசு – ஒளி. திருப்பணி – தெய்வப்பணி.

367 வார்த்திகம் – கிழத்தன்மை. தம்மனைகளில் அட்டுடன் பலி கொணர்ந்து – தங்கள் வீட்டில் உணவு சமைத்து உணவாகக் கொணர்ந்து.

[விருப்பாக்கினை வஞ்சக அதிகாரிகள் சிவத்துரோகம் செய்ய வழிகாட்டல்]

368 அவர்தரும் பலியுண் டிடவுடன் பட்டுண்
டருந்தவன் பினுஞ்சில காலம்

உவமையி லரன்றன் பணிபுரி காலவ்
வுறுவன்முன் பலிதரு மைந்து

கவடமை யுளத்த ராயணங் தினிமேற்
கருத்தினுக் கிசைவன வுடற்காம்

சிவனது பொருளில் வேண்டுவ கொணரச்
செப்பி,யுண் டருள்கென வுரைத்தார். 15

[சிவப்பொருளைத் துய்க்க விருபாக்கன் உடன்படுதல்]

369 விருத்தனு கையால் வாய்க்கிதம் வேண்டும்
விருப்புள னகியவ் வசடர்

உரைத்தசொல் உளங்கொண் டவ்வரற் கபிடே
கத்தினுக் குறுவன தினந்தின்

றிரைப்பெழு முடலந் தணைப்பரிந் தோம்பி
யிருந்துசின் னாட்கொடு நோயால்

மரித்தனன் சிவசொத் தினையயின் றுடலம்
வளர்த்திடு கொடியனென் றுருத்தே. 16

[விருப்பாக்கினை எமபடர்கள் கொண்டுசெல்லுதல்]

370 அந்தகன் றமர்கள் காலபா சஞ்சூ
லாயுத முதற்படை யினராய்

விந்தைசேர் விழிகள் அனற்பொறி கால
வெடிக்குரல் மடித்தவா யினராய்

---

368 அரன் – சிவபிரான். கவடமையுளத்தர் – வஞ்சனைபொருந்திய நெஞ்சினர். உடற்காம் – உடம்புக்கேற்ற.

369 இதம் – சுவை. அசடர் – அறிவிலிகள். இரைப்பு – மூச்சு. மரித்தனன் – இறந்தான். அயின்று – உண்டு. உருத்து – வெகுண்டு.

வந்துசூழ்ந் தன்னேன் துடித்தல மரக்கை
வன்படைக் கலங்களாற் ருக்கி
நிந்தைகொள் பாசத் தாற்பிணித் தலற
நெறிகளிற் பலவிடர்ப் படுத்தி. 17

[விருபாக்கன் யமபடர்களால் துன்புறுதல்]

371 வெங்குரு முனங்கொண் டுய்த்திடச், சினந்து
விரைவிலிக் கொடியனீக் கொடுபோய்
எங்குமி லாத்தண் டனைபல வியற்றி
இழிரவு ராதிபல் நரகில்
நுங்கிட வமிழ்த்தி யுழக்குவீ ரெனலும்
நுவலரும் மறலிதன் படர்கள்
பொங்கிய சினமீக் கொண்டவற் கொடுபோய்
புதியசெம் புருக்கிவாய்ப் பெய்தும் 18

372 நாவினீ யறுத்தும் ஊசியை அணரில்
நாட்டியும் அழல்வயிற் றெரித்தும்
ஆவலால் மலமூன் றின்னென வடித்தும்
அறுத்தறுத் துடலினீக் கிழித்தும்
பாவிக ளெவரும் அதுவரை நலியாப்
பலவிட ரவரிடப் படுத்திக்
காவல னீனை யாற்கொடுந் துயரக்
கடுநர காதியிற் செறித்தார். 19

---

370 அந்தகன் – யமன். தடித்தலமர – துடிதுடித்துக் கழன்று புரள. நெறிகளில் – அழைத்துச் செல்லும் வழிகளில்.

371 வெங்குரு – சீற்றமிக்க யமபடர்களின் தலைவன். இழிரவுரவாதி – இழிந்த ரவுரவம் முதலிய நரகங்கள்.

372 அணரில் – வாயலகுகளில் – வயிற்றில் தீயை மூட்டியும்.

[விருபாக்கன் சேரிநாயாகப் பிறத்தல்]

373 அளவிலாக் கற்ப காலமத் துயரில்
அழுந்தியவ் வனுபவந் தொலைந்து
வளவர்சோ ணாட்டி லிற்கிளி யூரின்
மருங்குறை சேரிநா யாகி
உளமலி தாகம் பசிமலப் புசிப்புண்
டுற்றெவர் காணினுங் கற்றுண்
டுளவெடுத் தெறிய வலைந்தன னிவனுக்
குறுதியாய்ச் சிவனின்மா லியத்தை. 20

[தீநெறி காட்டிய அதிகாரிகள் ஐவர் நிலை]

374 தினச்சொலிப் பணித்த கொடியரை வருமாய்ந்
தியமனூர் புகுந்திட ருழந்த
பினர்ப்புலைச் சேரி யினிற்பெண் ணாகிப்
பிறந்திடு மவர்க்குறு சிசுவாய்
முனைத்தொடர் பதனு லுதித்தன ரந்த
முடுவலிப் பறழுடன் பசியால்
மனத்துய ருடனங் குழிதரு காலை
மறவர்கண் டெறிந்ததைத் துரத்த. 21

[நாய்ப் பிறப்பெடுத்து அவர்கள் உழலுதல்]

375 குட்டியோர் புறமும் தாயொரு புறமும்
குலைந்துலைந் தோடின சிசுக்கள்
விட்டகன் றோடுங் தாயினைக் சுாணும்
விதிய லதாய்த்திரிந் திறந்து

---

373 சேரி - புலைச்சேரி - கல்துண்டுகளால் எறிய. சிவனின் மாலியம்- சிவசொத்தாகிய அபிடேகப் பொருள்கள்.

374 ஐவர் - மூற்கூறிய கோயிலதிகாரிகள் ஐவர்.

374 பெணணாகி - பெண் நாயாகப் பிறந்து. சிசுவாய் - நாய்க்குட்டிகளாய். முடுவலி - நாய். பறழ் - குட்டி. உழிதரல் - அலைந்து திரிதல்.

நட்டமா யினவத் தாயெனும் நாயும்
நாள்சில வுழன்றுயி ரிறந்த
தொட்டியே பின்னும் நாய்ப்பவம் பலவாய்
உறுசிசுத் தாயுமா யுதித்தார் 22

376 சிவனபி டேகத் திரவியம் புசித்தோர்
தீமைய துறினுமெத் தீய
பவமெடுத் திடினும் தொலைந்திடா வதனற்
பற்பல நாயுரு வெடுத்துக்
கவலையுற் றிடுங்கால் ஈற்றிலோர் நாயின்
கடும்பவ மெடுத்துழல் காலத்
திவறல்வெம் பசியால் ஒருபுலைக் குறுவீ
டேறிவீழ்ந் தெடுத்ததூ னயில 23

[விருபாக்கன் நாய்ப்பிறப்பினின்றும் புலையனாய்ப் பிறத்தல்]

377 அம்மனைப் புலையன் கண்டுவெங் கதைகொண்
டடர்ந்துவந் தடித்திடத் தலையின்
வெம்மையுற் றுற்று தூளாயிட் டலறி
வீழ்ந்துயி ரிறந்தது பின்பு
செம்மைகொள் தெய்வக் கதியினற் புலையர்
சேரியில் நீசனாய் உதித்துக்
கம்மிய தொழுநோய் மெய்வியா பிக்கக்
கால்கரங் களுமிகக் குறைந்தே 24
[அவன் தொழுநோயால் துன்புற்றுத் திரிதல்]

378 உடம்பெலாம் புழுத்து வடியவு னிவ்வா
ருதுங்கியன் னைன்றிரி வதுகண்
டிடந்தரா தெவருங் கண்முனங் காணை
திழிந்துநிந் தித்திட வதனல்

---

375 நட்டமாயின – அழிந்தன. பவம் – பிறப்பு.

376 ஒருபுலைக் குறுவீடேறி – ஒருபுலையனின் குடிசைக்குள் சென்று. எடுத்ததூனயில் – உண்பதற்கோர் புலால் துணியை எடுத்து,

377 கதை – தடி. அந்நாய் பின்னர் ஒரு புலையனாய்ப்பிறந்தது. கம்மிய – பற்றிய.

மடம்படு முணர்வும் இழந்துமெய் வருந்த
வனந்தொறும் புகுந்துபல் காலம்
விடந்தலைக் கொண்டோன் போற்றிரிந் துழல்கால்
விரும்புமுற் புண்ணிய பலத்தால் 25

[பூர்வபுண்ணியத்தால் அவன் குருந்தவன மடைதல்]

379 விளங்கருட் குருந்த வனத்திடை யடைந்தான்
மீனருற் றிங்களக் காலம்
களங்கமி லிரவி கிரணமெய் வருத்தக்
கடும்பசி தாக மீதூர
உளங்கனிந் திரங்கி நீர்நசை யாலிங்
கூதகமுண் டோவெனத் திரிந்தவ்
வளங்கவர் வனங்கள் எங்கணுந் தேடி
வந்துகண் டனன்சிவப் புனலை 26

[அவன் சிவதீர்த்தத்தில் மயங்கி விழுதல்]

380 முண்டகங் கழுநீ ருற்பல மாதி
மொய்த்தறல் தெளிவுள தாகி
வண்டுகள் முரலப் புதுமணம் வீச
மந்தமா ருதம்புகுந் துலவும்
தண்டுறைப் புனலைக் கண்டனன் ஓடித்
தாகசோ பங்களைந் திடுமா
றுண்டன னுடலம் பரவச மாகி
உடனதில் மூர்ச்சையாய் விழுந்தான் 27

[விருபாக்கன் நல்லுருப் பெறுதல்]

381 முனமிவன் ஞமலிப் பவமெடுத் துழல்கால்
முரணுறு பறழ்களாய் வருந்தீ
விணையரை வரும்வன் முதலையா யந்த
விரைமடு வினிற்கிடந் தனர்வந்

---

378 நிந்தித்திட – பழிகூற. முற்புண்ணியம் – முன்செய்த சிவ புண்ணியம்.
379 மீனருற்றிங்கள் – பங்குனித்திங்கள். இரவி – சூரியன். உதகம் – நீர்.
380 முண்டகம் – தாமரை. உற்பலம் – நீலோற்பல மலர். அறல் – நீர்.
தாகசோபம் – நீர் வேட்கையால் வந்த துன்பம். மூர்ச்சை – மயக்கம்.

துனியெடுத் தருந்த விறந்தன னுடனவ்
வுயிர்சிவப் புனலுணு நலத்தாற்
கனமலி பாவ சேடமா மனைத்தும்
கழன்றுதிவ் வியவுரு வடைந்தான். 28

[தேவர்கள் அவனை விமானத்திற் கொண்டு செல்லுதலும் அவன் இறைவனைக் கண்டு வணங்குதலும்]

382 நவமணி யொளிவிட் டெறித்திடும் விமானம்
நற்சிவ கணங்கள்கொண் டணைந்தே
உவமையி லவனை அதுதனி லேற்றி
உபயசா மரமுதல் வரிசை
தவறிலா தெடுப்ப வெள்ளியங் கிரியிற்
றனுமுன் கொண்டுபோய் விடுப்ப
அவனுமெம் மையன் பாததா மரையில்
அன்பொடு வணங்கிவீழ்ந் தெழுந்தான் 29

[விருபாக்கன் சிவபதமடைதல்]

383 வணங்கிநின் றேத்தும் மாசிலா தானை
மழவிடை யண்ணல்பார்த் தருளிக்
குணம்பெறு நீபன் னுள்கடுந் துயரம்
கூர்ந்தனை யோவென வருள்செய்
திணங்கரும் முருவம் எய்திவாழ்ந் திருவீற்
றிடையுத வுறுங்கதி யென்றான்
அணங்கொரு பாக னருளிய முறையே
அடைந்தனன் உயர்சிவ பதத்தில் 30

---

381 சுமலி – நாய். விரை – மணம். உனியெடுத்து – உன்னி (கருதி) அள்ளி. பாவசேடம் – பாவக்குறைபாடு. திவ்ய – மேலான.

382 உபயசாமரம் – இரட்டைகவரி.

383 கூர்ந்தனையோ – மிக எய்தினையோ. இணங்க – பொருந்த. ஈற்றிடை – முடிவின்தன்.

[சிவதீர்த்தத்தின் பெருமை இயம்பெற் கரிதெனல்]

384 ஒருமைசேர் மனத்தோ டப்புனல் படிந்தோர்க்
குறுபயன் யாவரே மொழிவார்
மருமலர்க் குழலாய் என்றனன் இமய
வல்லிகேட் டுளங்கனிந் தனளென்
றருள்புரி தவுமி புரூரவா வினுக்கன்
றருளிய முறைமையைச் சனகர்க்
கிருளகல் முனியாக் கியவகி யுரைத்தா
னெனவருட் சூதனே தினனால் 31

[சிவதீர்த்தச் சருக்கம் முற்றும்]



---

384 மருமலர் – மணம்பொருந்திய மலர். யாக்கியவகி – யாக்ய வல்கியர். தவுமி புரூரவாக்குக் கூறியதை முறையே சூதன் கூறினன்.

சிவத் துரோகச் சருக்கம்

[அறுசீர் ஆசிரியச் சந்த விருத்தம்]

[விருபாக்கன் வரலாறு கேட்ட முனிவர்கள் உளந்தெளிதல்]

385 இன்ன தாஞ்சி வத்து ரோக
மென்றசூத ரைப்புகழ்ந்
துன்னு நற்க தித்த வத்தர்
ஓதுவார்கள் அண்ணல்நீ
சொன்ன விக்ச ரித்தி ரந்து
லங்கயாம்நி னைத்திடில்
மன்னு சித்ர தீப மொத்த
மனமிகத்து ளங்குமால் 1

[சூத முனிவர் விமலலிங்க தரிசனப் பெருமை கூறுதல்]

386 இதுசொ லத்தகா,மு னம்இ
யம்பு நூல்வி ரோதமா
மதிப டைத்த வன்பருக்கும்
மற்றி டுக்க ணிலையெனும்
விதிநி சத்ததாம லாமல்
விமல லிங்க தரிசனம்
உதயமுற்று ளோர்கள் சேர்வர்
உம்ப ரென்று முச்சியில் 2

387 அருமை யோடு காணி லேய்வர்
அசுவ மேத பலமலிற்
பரிவி லேடு காணின் முத்தி
பலித மாகும் என்றுநெஞ்

---

385 சித்ரதீபம் – அணையாவிளக்கு. துளங்கும் – தெளிவடையும்.

386 அன்பருக்கும் – அன்பர்களானாலும். இடுக்கண் நிலை – துன்பம் உறுதி. உதயமுற்றுளோர் – உதயகாலத்திற் கண்டு வழிபட்டவர்கள். உம்பர் – மேலுலகம். உச்சியில் – உச்சிக்காலத்தில்.

சுருக வேபிர தோட கால
முண்மை யோடு பரவினல்
மருவு கால மூன்றி னும்வ
ணங்கு பேற தென்னவும் 3

[மகேச நாமச்சிறப்புக் கூறுதல்]

388 திருந்த நாவி னேர்த ரம்ம
கேச வென்று செப்புவோர்
ஒருங்கு கோடி பிரம கத்தி
யொழிவ ரோது பிறர்மனை
விரும்பல் கோடி நீங்கும் வன்மை
மேவு கூற்று பாதியும்
பொருந்தி டாது;மங்க லங்கள்
புணரு மென்று மன்பொடு 4

[சிவநாமச் சிறப்புக்கூறுதல்]

389 சிவாவென் றோர்த ரஞ்சொ லிற்
செறிப வங்கள் திரளெலாம்
ஒவாது விண்டு செலுமி ரண்டு
தரமு ரைக்கி லுண்மையாய்
அவாவ கன்று தூய நெஞ்ச
னவன் மூன்று தரமெனிற்
பவாரி நண்ப னவன் மேற்ப
லங்க ணக்கின் றென்னவும் 5

---

387 பலம் – பயன். அலிற் (அல்லிற்) – இரவுக்காலத்தில். பலிவிக்கும் – சித்திக்கும். பிரதோடகாலம் – சந்தியாகாலம். பேறு – பாக்கியம்.

388 ஓர்தரம் – ஒருமுறை. பிரமகத்தி – பிரமகத்திதோடம். கூற்றுபாதி – யமனுடைய துன்பம். புணரும் – வந்துசேரும்.

389 ஒவாது – ஒவ்வாது – பொருந்தாது. விண்டு – வேறுபட்டு. பவாரி – பாவத்தைப் போக்குவபன் (சிவன்).

[அர நாமப் பெருமை கூறல்]

390 ஒருத ரம்அ ராவெ னவ்
உரைத்தி டிற்ப வமெலாம்
மருவி டாது போம தைம
றுத்தொ ருதரஞ்சொலிற்
பெருக நன்மை யெய்த லாகும்
பின்னு மோர்த ரஞ்சொலிற்
கரிய கண்ட னவன் மேற்க
ழற்கி லெண்ணி லென்னவும் 6

[சம்பு நாமப் பெருமை கூறல்]

391 சம்பு நாமம் நாவி லோர்
தரமு ரைத்து ளோர்களே
நம்ப ராம வர்க்குரூத
நன்மை வேரொன் றின்மையால்
உம்ப ருந்து தித்திறைஞ்ச
வுற்று வாழ்வ ரென்னவும்
எம்பி ரான்றி ருக்கணென்
றியம்பு மக்க மணியினே 7

[உருத்திராக்கப் பெருமைகூறல்]

392 ஒன்று பூணில் அவதி தீரும்
உபய மெய்த ரித்திடிற்
றுன்று பாவ நீங்கு மூன்று
சூட மேணி சுத்தமாம்

---

390 அரா – ஹர ஹரா எனும் மந்திரம். மருவிடாது – பொருந்தாது. மறுத்து – மீண்டும் (இருமுறை என்பது பொருள்). கரிய கண்டன் – சிவன். கழற்கில் – சொன்னால் (கழறினல் என்பது கருத்து).

391 நம்பர் – தேவர். உம்பர் – தேவர். அக்கமணி – உருத்திராக்கம்.

சென்று நான்க ணிந்திடிற்
சிரேட்ட னுவ னீனந்தெனிற்
பொன்ற லென்னு மச்ச மின்று
பூணி லாறு தேவனும் 8

393 பரிவி னேழ்த ரிக்கின் வச்ர
பாணி யாவ னெட்டெனின்
உரிமை கொள்சா லோக மெய்தும்
ஒன்பதிற் சாமீ பமாம்
திரிவிலாதீ ரைந்து பூணின்
சேர்வர் சாரூ பம்பனென்
றரிய வாகு மணியை மெய்
அணிந்தி டிற்சா யுச்சியம் 9

394 இதற்கு மேற்ப லன்சிவன்
இயம்ப வேண்டும் என்றுமோ
தனைத்த ரித்து லோரைநோக்கி
றற்றெ ரிந்து ளோர்க்குமே
உதித்த நாள்மு தற்செய் பாவம்
ஒற்க மூன்று தாபமும்
மதித்தி ராம லேகு மென்றும்
மற்றவர்க்கு நட்பி னோர் 10

[திருநீற்றுப் பெருமை கூறல்]

395 ஈறிலாத பெரிய வின்பம்
எய்து வார்கள்; என்றும்வெண்
நீறு பூசு வோன்ற னல்மெய்
நிமல மூப்பு வனமும்

---

392 பூணில் – அணிந்தால். உபயம் – இரண்டு. சிரேட்டன் – மேலானவன். பொன்றல் – இறத்தல்.

393 தரிக்கின் – அணிந்தால். வச்ரபாணி · இந்திரன்.

394 ஒதனைத்தரித்து – ஒதுகின்ற அதனைப் பூண்டு. ஒற்க மூன்றுதாமமும் – நிலைதளரச் செய்யும் ஆணவ முதலிய மூக்குற்றங்கள்.

ஏறு மென்று மன்னர்
றிலங்க மெய்த ரித்திடிற்
கூறும் ரோகம் அச்சம் இன்னல்
கூற்ற மில்லை என்னவும் 11

[சிவனடியார் பெருமைகூறுதல்]

396 விளங்கு பத்தர் மன்விஞ்சை
விண்ம ஞகச் செய்வர்கள்
களங்கி யாத பஞ்சை மாறு
காண்பர் மேருவஞ்சு வதாய்த்
துளங்க ஞுவும் மேரு வாகத்
தோற்று விப்பர் கடலையும்
உளங்கை யாச மிப்பர் மாவெற்
பூழிக் காலும் பேதிப்பார் 12

397 அரிய யன்ற ஞானத்திரண
மாய்ம திப்பர் சீறிஞற்
றிரிபு வனமுந் தகிப்பர்
சிவஞா யொப்பர் கருஞ்ணையே
புரிவரவரை யொப்பு ளோர்கள்
புவன மூன்றி னும்மிலைத்
தெரியி னும்ப ரும்ப யந்து
செய்வ ரேவல் என்றுநூல் 13

398 சாற்று கின்ற யாவையும்
சரத மாகு மேயெமக்
காற்றல் சான்றநீ மகிழ்வொ
டருள் தலும்மந் நீர்மையே

---

395 ஈறிலாத – அழியாத. ரோகம் – நோய்கள். கூற்றம் – இறப்பு.

396 ஆதபன் – சூரியன். மேரு – மேருமலை. ஆசமிப்பர் – உண்ணுவர். பேதிப்பர் – வேறுபடுத்துவர்.

397 திரணம் – தூசு. சீறினல் – வெகுண்டால்.

ஏற்ற மாம்இவைக் கெலாம்
இதுவி ரோத மாதலாற்
ரேற்ற மாமிச் சங்கையாந்
துயர்க்க டலில் ஆழ்ந்தனம் 14

399 பொருந்து மாறு வசனமென்
புணையி னிலைமைக் கரை
வருந்தி டாம லேற்றி வாழ
வைக்க வேண்டு மென்றனர்
திருந்து சூத னுங்கள் சங்கை
செவ்வி தாயி னுமறம்
ஒருங் கறங்கள் சூக்குமங்கள்
உண்டு கேண்மி னேதுதும் 15

[பாவங்களின் நிலைகூறுதல்]

400 ஏது செய்தி டினுமுயிர்க்
கீறி ழைத்தல் தீதறம்
கோதில் கோவதைக் கொடுமை
கூரிரை ததனிலும்
தீததாஞ்சி சுக்கொலை
செயத்தகா ததனிலும்
மாதர்தங் கொலைகள் தீது
மற்றதி னும்மே தியர் 16

401 தமைத்த டிதல் தீததின்
தனிமகம் முடித்தவற்
குமைத்த லாகுமூர்மிடை
கோது காம மாதியாய்

---

398 சரதம் – உண்மை. சங்கை – ஐயப்பாடு.

399 பொருந்துமாறு – ஐயந்தெளிந்து அமைதிகொள்ளும் வண்ணம். சூக்குமம் – நுண்மை.

400 கோவதை – பசுக்கொலை புரிதல்.

அமைத்தல் தீத ரன்றெரி
சனஞ் சிவார்ச் சனீபுரிந்
துமைக்கு நாதன்நாம மோதல்
ஓங்க ருட்ப ணிவிடை 17

[சிவபுண்ணியங்கள் இவை எனலும் அவற்றால் சிவத்துரோகம் நீங்காதெனலும்]

402 சிவபுராண சிரவ ணங்கள்
சேவை செய்த லன்பரை
தவள நீறுபூசல் மேனி
தாங்கல் அக்க மணியினை;
இவைக ளாலும் நூல்களால்
இயம்பு சாந்தி யாலும்நின்
றவியும் வேரொன் றாலுநீங்கி
டாது பொய்ம்மை யதனிலும் 18

403 பரம னன்பர் பொருளைவௌவல்
பாவ மிச்ச மவர்கள்பாற்
புரியி னிந்தை யதிகமான
புன்மை தீர்ந்திடா சிவ
திரவி யத்தை மனதுவாக்குச்
செய்கை யென்று மூன்றினுற்
கருதல் கேட்டல் பரிசமாதல்
கனவி னுஞ்செயத் தகா 19

404 இன்ப மாரும் ஈசரபி
டேகதிர வியந்தனைத்
தின்ப மென்ற பகரித்தல்
செய்யினும் நினைக்கினும்

---

401 தடிதல் – கொல்லுதல். தனிமகம் – பெரிய யாகம் (வேள்வி). இரண்டாமடி சிதைந்துளது. மூன்றாமடி முதல் சிவபுண்ணியங்கள் கூறுகிறார்.

402 சிரவணம் – கேட்டல். தவளநீறு – வெண்ணீறு.

403 வௌவல் – பறிததுக்கொள்ளுதல். மிச்சம் – மிகை குற்றம். பரிசமாதல் – மெய்யால் தீண்டுதல்.

கன்றி மெய்யும் நூறுகோடி
கற்ப காலம் ரவரவஞ்
சென்றழுந்தி னலு மன்ன
தீமை தீர்வ தின்றரோ. 20

405 எந்தமா நலஞ்செய் தாலும்
ஏகு மாறி லப்பவம்
தந்தி வீந்து ரித்தவர்
தமக் கபிடே கத்தினல்
வந்து நேரும்உளம கிழ்ச்சி
மற்ற தொன்றி னல்வரா
தந்தநற் றிரவி யத்தை
அபக ரித்த பாவிகள் 20

406 அருஞ்சி வத்து ரோகராய்
அதோ ததிக்கண் ஆழ்குவார்
திருந்த வீசர் புண்ணி யங்கள்
செய்து நாளும் அன்பராய்
இருந்து லோர்க ளெனினுமபி
டேக திரவி யந்தினிற்
பொருந்து புண்ணி யங்கள் யாவும்
போய், வருந்து வார்களே 22

407 எரிநி கர்த்த தாகுமபி
டேக நற்றி ரவியம்
பரிவி லாமல் அபகரித்த
பதகர் தம்மை யீசனும்

---

404 தின்பம் – அனுபவிப்போம். கன்றி – துன்புற்று. ரவரவம் – நரகம்.
405 தந்தி – யானை (கயாமுக அசுரன்). வீந்து – வேறுபடக்கிழித்து.
406 அதோகதி – ஒரு நரகம்.

விரைவி னந்த வன்மைதீர்க்க
வேண்டு மென்ன எண்ணினும்
அரிய கற்பம் நூறுகோடி
யாயினுந் தொலைந் திடா 23

408 இன்ன வாறு சூசகம்
இருப்ப தாலறத்திர் காள்!
பன்னு மந்த முனிவிரு
பாக்க னல்லறம் பல
என்ன வாற்றி னலுமபி
டேக நற்றிர வியம்
தன்னை யுண்ட தன்மையன்று
தந்த தாம் அதோகதி 24

409 அதனை ஐவ ருரைவிரும்பி
அப கரித்த தாலுமிம்
முதிய னெண்ணில் புண்ணியஞ்செய்
முனிவ னுதலா னுமவ்
விதியி னெய்து மனுபவத்தை
விட்ட ரன்றன் வாவியாற்
கதியி னெய்தி னனறத்திர்
காள், தெரித்தி ரென்றனன் 25

410 தவறில் சூதவிருடி சொல்லெ
தார்த்த மென்று முனிவரர்
சிவபி ரான்வி ரோதமொத்த
தீமை யில்லை யாதலால்
எவர்கள் உய்குவா ருலகில்
என்றி ரங்கு நெஞ்சராய்
உவமை வேறிலாத ஐய!
உண்மை நின்சொ லென்றனர். 26

[சிவத் துரோகச் சருக்கம் முற்றும்]

---

407 எரி – நெருப்பு. பரிவு – அன்பு. பதகர் – பாதகர் (பாவிகள்) வன்மை – பாவம்.

408 சூசகம் – நூல் உளவு. அறத்திர்காள் – முனிவர்களே.

409 அரன்றன்வாவி – சிவதீர்த்தம். தெரித்திர் – தெரிந்துகொண்டீர்.

410 எதார்த்தம் – உண்மை.

தேவிக்கு நாரதர்
தவநிலை கூறி மீண்ட சருக்கம்

[கலி விருத்தம்]

411 மன்னனிம வான்மகள் மலர்ச்சரண் வணங்கிப்
பின்னுமிசை யாழ்நன்முனி பேசலு றுகின்ருன்
தன்னிகரில் பேரொளிய தாகுமிறை தானே
இன்னவகை குந்தமென வேயருள்பு ரிந்தே. 1

[நாரதன் சூரன் வரலாறு கூறல்]

412 சிவபுரம திற்றிகழ்செய் கின்றனன தன்கண்
உவணவிறை யாதியிமை யோர்கள்பல ருற்றே
தவமுயலு கின்றனர்கள் தானதைவி ரிக்கின்
அவமிகும ரக்கரிறை யாகுமொரு சூரன். 2

[சூரன் தவமியற்றிப் பேறுபெறல்]

413 தாதவிழ் கடுக்கையணி சங்கரனை யுன்னி
மாதவ மகிழ்ந்துபல வைகல்களி யற்றி
வேதையகல் வச்ரமணி மேனியுடை யோனுய்
ஆதரவொ டாயிரத்தெட் டண்டபதி யானன். 3

---

411 இமவான் மகள் - பார்வதி (உமை) மலர்ச்சரண் – மலர்போன்ற பாதங்கள்.

412 உவணவிறை (உவணம் – கருடன்) திருமால்.

413 கடுக்கை – கொன்றைமலர். வச்ரமணி – வைரம். அண்டபதி – அரசன்

[சூரன் தேவர்களுக்கு இடுக்கண் புரிதல்]

414 கொக்கிற கணிந்தகுழ கற்கவிகொ டேனென்
றக்கிரம மாகமக மாற்றிநல மற்ற
தக்கனெடு கூடியரன் றன்னைமறந் திட்ட
துக்கமவி தீவினைசு ரர்க்குறுத லாலே 4

415 அரியயன்மு தற்புலவர் யாவரையும் வென்று
தருவுலகி னன்பழுதில் தன்வசமெ னச்செய்
திரியுவெனவ் விண்ணவ ரிடம்பலக வர்ந்தே
வெருவிட வடர்த்தனனவ் வெந்திற லரக்கன் 5

[தேவர்களின் கலக்கம்]

416 என்செயுவம் இனிப்புகுவ தெவ்விடம தென்னைப்
புன்கணுறு புங்கவர்பு லம்புடனெ துங்கும்
நன்புற மெவற்றினுமன் னைடலே செய்யுந்
துன்பமிக லால்மயல்து டங்குமனத் தோராய் 6

[தேவர்கள் சிவபிரானிடம் முறையிடச் செல்லுதல்]

417 வெண்கயிலை புக்கெவரும் வெண்பிறை முடித்தோன்
தண்கருணை பெற்றவ்விடர் தள்ளுதலை யுன்னி
நண்பொடு புகுந்துவெகு நாள்தவ மியற்ற
ஒண்புவன நாயகனு வந்தெதிர்அ ணைந்தான். 7

---

414 கொக்கிறகணிந்த குழகன் – சிவன். அவி – வேள்வியில் தரும் அவிசுப்பொருள். அக்கிரமம் – முறையற்றது. மகம் – யாகம்.

415 தருஉலகு – தேவலோகம். சுரர் – தேவர். புலவர் – தேவர்.

416 புங்கவர் – தேவர். நடலை – துன்பம். மயல் – கலக்கம்.

417 தள்ளுதலை – போக்குதலை.

[தேவர்கள் முறையீடு]

418 வந்தருளும் அண்ணல்முனம் மால்முதல வாய
அந்தமகல் வானவர் அடித்தளிரி னிறைஞ்சி
வெந்திறல்கொள் சூரனில்மெ லிந்திடர் வுழந்தோம்
எந்தையவ ஞற்றிடரின் இப்பொறைகே ளோமால் 8

419 யாங்கள்புரி தீவினைய வைக்குவிடர் போதும்
தாங்கியெமை யாண்டருள்செய் தண்கருணை யாலென்
றேங்கிவளர் காதலுடன் ஓதினர்ம கிழ்ந்தே
ஆங்கவர் தமக்கரன் அஞ்சற்கரம மைத்தே. 9

[இறைவன் தேவர்களை அமைதியுறச் செய்தல்]

420 அரந்தைதரு வல்லசுர ரல்மிகமெ லிந்தீர்
இரங்கலிர் பயந்தினி யெமக்கொருகு மாரன்
உரங்கொடு பிறப்பனவன் ஓதுமவ்வ ரக்கன்
வரங்களை யழித்துமது வாழ்பதியின் வைப்பன் 10

421 அதுவரையும் நீவிரவன் றன்முனம் நிலாமல்
வதியுமென வோதிவட வாலடியில் உற்றுன்
புதியவருள் பெற்றவர்கள் பொற்கழல் பணிந்தே
பதியிலுறை வம்,பரமர் பாலர்வரு காறும். 11

[தேவர்கள் குருந்தவன மடைந்து இருத்தல்]

422 என்றுளம் நினைந்தசுரர் எய்தவரி தாமென்
றன்றமரர் ஆதிகயி லாசபுர மதனிற்
சென்றனர்கள் கண்டுதெரி சித்தனர்கு ருந்தை
ஒன்றிய களிப்பினொடு றைந்தனர தன்கண் 12

---

419 அஞ்சற்கரம் அமைத்து – அபயக்கைகாட்டி.
420 அரந்தை – துன்பம். வாழ்பதி – அவரவர்க்குரிய உலகம்.
421 உறைவம் – தங்கியிருப்போம். பாலர் – குமாரன்,

423 அத்தல மகத்துவம தாலசுரர் கோமான்
மொய்த்தடர வஞ்சிவர முன்னுகில னனென்
வித்தகவின் ணேர்மனதில் வேதையில ராகிப்
பத்தியொடு குந்தழல் பற்றினரி ருந்தார் 13

[நாரதன் உமாதேவியை வேண்டுதல்]

424 கயிலேவட வாவினுறை கண்ணுதலு னர்ந்தே
அயில்வீழி மடந்தையுனை யன்பொடும ணந்தே
உயுநெறி யெமக்கருள வோர்குழவி தன்னைத்
தயவுட னளித்தசுரர் தம்மையடர் வித்தே 14

425 வன்றிறல்கொள் வாழ்விலமை வைத்திட நினைக்க
என்றுதிரு வுள்ளமதிரங் கவரு மோவென்
ரென்றியமெய் யன்புறையு ளத்தினர்க ளாகி
வென்றிதரு நற்றவம் விருப்பொடு புரிந்தே 15

426 வருந்தியுறை கின்றனர்கள் மாதரசி நீயும்
பெருந்துறை யெனும்பெயர்பெ றுந்தலம திற்சென்
றிருந்தவமி யற்றியல கிட்டபல மாகும்
குருந்தினை வணங்கிலுட ன் கூடும்நினை வெல்லாம் 16

427 மழலைதரு வாயிலுரை வந்தவடி தற்றுங்
குழவியை மகிழ்ச்சியொடு கொள்ளுமனை போலக்
கழுமலுடை யென்மொழி கனங்குழைய ணங்கே
பழுதலவை னக்கொளுதல் பண்பதுவு மாமே 17

428 அப்பொடு குளிர்ச்சிதெறு மங்கியொடு வெம்மை
யொப்பநிறை பூரணமொ டொன்றிமகிழ் வுற்றே
எப்புவன முந்தனிவி யற்றியுயிர் தோறும்
தப்பறவி ருந்தமை தமக்கருளு மன்னே 18

---

428 மொய்த்தடர – நெருங்கித்துன்புறுத்த. முன்னுகிலனன் – நினையாதவனுயினன். வேதை – துன்பம்.

427 கழுமல் – குறைபாடு.

428 அப்பு – நீர். அங்கி – நெருப்பு.

429 உன்னலுரை செய்கையினி லொன்றுதுணை யன்றி
இன்மைநிச மாதலினி யம்பியது நீயே
யென்னதெரி யாததுகொல் என்னவரி தாகும்
அன்னையுன தின்னருள் அறிந்திடவல் லார்யார் 19

430 என்றுபல புன்மொழி யியம்பிவிடை பெற்றுத்
துன்றுமிசை யாழ்முனி தொகும்பலவா சூழும்
நன்றிகொ ளையன்சபையி னண்ணியிம யத்திற்
சென்றுபரை முன்புபுகல் செய்கையை விரித்தான் 20

[நாரதன் தேவியை வேண்டியதைக் கேட்டுத் தேவர்கள் மகிழ்தல்]

431 நாரதன் உரைத்தமைவின் நாடர்செவி புக்க
ஆரமுத மொத்தினியெவ் வல்லலும கன்ரேரும்
சூரன்உர மற்றுயிர்து டித்துவிழும் நாளும்
நேருதல டுத்ததென நெஞ்சுகளி கொண்டார் 21

432 இவ்வகைய தாமியலி யம்புபவர் கேட்போர்
செவ்வியவ றம்பலசெய் தேசுடைய ராகி
நவ்விமழு வேந்துமர ரூர்உலக மெய்தி
எவ்வமில் மகிழ்ச்சிபல எய்திமிக வாழ்வார் 22

433 என்னவிறை யோடிவை யியம்பிமுனி பின்னுங்
கன்னியிம வான்மகள்க னங்குழைமி குஞ்சீர்
மன்னியபெ ருந்துறையில் வந்ததுவும் முக்கண்
முன்னவன் மணந்தமுறை யும்மொழிய கிற்பாம் 23

[தேவிக்கு நாரதர் தவநிலைகூறி மீண்ட சருக்கம் முற்றும்]

---

488 முக்கண்முன்னவன் - சிவபெருமான்.

தவசுக்குத் தேவி சிவபுரத்துக் கெழுந்தருளிய சருக்கம்

[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

[தேவி தன்கருத்தைப் பெற்றேருக் கியம்புதல்]

434 மதுர வின்னிசை கனிந்தொ ழுகியசெவ்
வாய்பெண் ணரமு தாமுலை மடந்தை
முதிரு மின்னிசை முனிசிவ புரச்சீர்
மொழிந்த யாவையும் திருவுளத் தடைத்தே
அதிக வன்பிலே டின்றுசென் றென்றன்
ஆத்ம நாதர்தம் அடிப்பணி வேனென்
றெதிரி லாள்மன தினினிஞ்ஞ் தெண்ணம்
இயம்பி னள்,பிதா வஞ்யிரு வருக்கும் 1

[தவத்திற்குக் கயிலையேசிறந்ததென இமவானும் மேனையும் கூறுதல்]

435 இமைய மன்னவன் மேனையோ டிறைவி
இயம்பல் கேட்டுளந் தனர்ந்துடல் பதறி
அமையை வென்றதோள் அமுதமே இவ்வா
றறைவ தெவ்வித மடுத்தமெய் வரங்கள்
தமைய லால்நிகர் வேறிலாக் கயிலைத்
தாணு வொல்லையிற் றருகுவ னதலால்
உமைமி னேமன தினிற்பிற விடங்கள்
உன்னல் தானடா தென்ன,வோ துவளால் 2

---

434 இன்னிசைமுனி – நாரதன். பிதா – இமவான். அஞ்ஞ – அன்ஞ. (மேஞ்) உமை தன் எண்ணத்தைப் பெற்றேருக்குக் கூறினள்.

435 இறைவி – உமாதேவி. அமமயை – மூங்கிலை. தாணு – இலிங்கம். (சிவன்) ஒல்லை – விரைவு. உன்னல் – கருதல். அடாது – பொருந்தாது.

[சிவபுரமே மிகச்சிறந்த தலமெனக்கூறி தேவி பெற்றேரிடம் விடை வேண்டல்]

436 மகிமை பற்பல நிறைசிவ யோக
வனம திற்புனை புவனமூன் றினுமின்
றகமகிழ்ச் சியினெரு தண்மதி யிற்சென்
ருற்று நோன்புறும் பேற்றினுக் கனவு
புகல வல்லவர் இலர்பரம் பொருளே
பூங்கு ருந்தனை முனிந்திருந் ததனற்
தகமை சேரதிற் சென்றுமீள் வதற்கே
தருவீர் நீர்விடை என்றனள் தையல் 3

[தேவி திருப்பெருந்துறை அடைதல்]

437 பரம காரணி திருவுளக் குறிப்பின்
படியி னிற்பதே பண்பென வுன்னிவெற்
பரையன் வேண்டிய வளமெலாம் நிறைவித்
தலகி லாப்பரி சனம்புடை சூழ்வித்
தெரிபசும் பொனின் மானமீ தேற்றி
இறைஞ்ச மேனியோ டவர்மனத் திசைவால்
விறைவின் வந்துசேர்ந் தனரூல கீன்ற
விமலி நற்றிருப் பெருந்துறை விரும்யி 4

[தேவி குருந்தப் பெருமானை வணங்கி வழிபடல்]

438 வந்த வெம்பெரு மாட்டியப் புரத்தின்
மகிமை யாவையுங் கண்டுகண் டுருகி
அந்த மில்லதோர் மகிழ்வுடன ழுல்நீர்
ஆடி விண்ணவர்க் காவிட மருந்தும்

---

436 சிவயோகவனம் – திருப்பெருந்துறை. நோன்பு – தவம். புகல – சொல்ல. பூங்குருந்து – பொலிவுடைய குருந்த விருட்சமாக. தையல் – தேவி.

437 பரமகாரணி – எல்லாவற்றிற்கும் மேலான காரணமாக இருப்பவன் எனத் தேவிக்குக் காரணப்பெயர். உன்னி – கருதி. பரிசனம் – பணிபுரிவோர். எரிபசும்பொன் – ஒளிவிடும்பொன். மானம் – விமானம் என்பதின் முதற்குறை.

எந்தை யேதிருக் குருந்தென வுருக்கொண்
டிருத்த லாலள விறந்தபே ருவகை
சிந்தை கூர்தர மலர்க்கர மிரண்டும்
சிரத்திற் ருங்கிமுன் சென்றன ளணங்கு 5

439 கண்டு வீழ்ந்துவந் தித்தலர் புரையுங்
கண்கள் தாரைகள் தரக்கரைந் துருகி
மண்டு மன்பினுற் பூசனை யியற்றி
வலம்வந் தண்ணல்தன் மகிமையி னலமும்
எண்டராப் பெருங் கருணையும் மனத்தில்
எண்ணி நண்ணினின் றிறைஞ்சினின் றெதிரே
தொண்டை யங்கனி வாய்மொழி தளும்பத்
துதிக்க லுற்றனள் தோகைபோ லியலாள் 6

[தேவி இறைவனைப்போற்றி நாமாவளி பாடுதல்]

440 பூர ணை! கரு ணைகரா! வமலா!
பொங்கு பேரொளி யே! தொகு மகில
கார ணை! நிரா தாரமே! யகண்டா
கார சற்சிதா னந்தமா மயமே!
ஆர ணை! சரா சரவுயி ரெவையும்
ஆகு வோய்! மயா னந்தரு மடலூர்த்
தார ணை! பெருந் துறையில்வாழ் குருந்தா!
தாணு வே! யருள் தரவுள மிரங்கே! 7

441 கோதி லாதநல் லமுதமே! யடியார்
கொண்ட கொள்கையே கொள்கையாக் குறிக்கும்
நீத மே! யருள் நிறைபரம் பொருளே!
நிருப லா! நிரா லம்பநிட் களமே!

---

488 அழல்நீர் – அக்கினிதீர்த்தம். ஆடி – மூழ்கி. விடம் – ஆலகாலம்.

489 வந்தித்து – பரவி. அலர்புரையும் – மலர்போன்ற. நலம் – சிறப்பு எண்டரா – எண்ணிஅளவுபடா. தோகை – மயில்.

440 அமலா – குற்றமற்றவனே. ஆரணை – வேதமயமானவனே. அடலூர் – திருவேறு. தாரணை – தரித்தவனே.

பேதம் நீங்கவைந் தொழிலையுந் திருமுன்
இயற்றி யேயுயிர்க் கிரங்குமேல் ஆத்ம
நாத னே! பிரிந் திருந்தினி யாற்றேன்
நான்பொ றேன்நலந் தரநினைந் தருளே. 8

[இறைவன் இத்தலத்தில் தவம்புரிகெனக் கட்டளை இடல்]

442 என்ற னேகநற் றுதிபுகன் றெவையும்
ஈன்ற கன்னியாம் இறைவியவ் விறைமுன்
நின்று தன்வச மற்றுள முருகும்
நிலைமை கண்டருட் குருந்தரன ருளால்
சென்ற தோர்மொழி விசும்பிடை, யணங்கே
சிறந்த விப்பதி தனிற்றவ மியற்றில்
உன்ற னர்வமெ லாமதில் வெகுவாய்
உறுமென் றேதுதல் கேட்டன ளுவந்தே. 9

[தவத்திற்கு ஊறுவராதிருக்கத் தேவி கணபதியைப் போற்றல்]

443 அனைய தாகவென் றெழுந்துவந் தழனீர்
ஆடி வெண்பொடி யணிந்துகண் மணிபூண்
டினைய செய்கையிற் றவறுவந் தடையா
திருக்க வேண்டுமென் றிபமுக விறையைத்
தனைய! யான்புரி யருச்சனை யுவந்து
தருக விவ்வர மெனப்பு கன்றிருத்தி
வினைய மில்வெயி லுவக்தக னேச
விளங்கு நாமந் தரித்தருச் சித்தே 10

---

441 கோது – சக்கை, குறை. நீதம் – நியதி. நிராலம்பம் – ஆதாரம் வேண்டாமை. நிட்களம் – உருவின்மை. நலந்தர – அருள

442 ஆர்வம் – விருப்பம். வெகுவாய் – மிகுதியாக. உறும் – கைகூடும்.

443 வெண்பொடி – திருநீறு. கண்மணி – உருத்திராக்கம். இபமுக இறை – யானைமுகக்கடவுள். தனைய – என்மகனே.

[தேவி தவம்புரிய பீடத்தமர்தல்]

444 உண்டி பற்பல வானிறைத் துதரம்
ஒளிகொள் தூபதீ பமுத லியவால்
மண்டு பூசனை யளித்திவ ணிருந்து
வரங்க டந்துயிர்க் கருள்கவென் றுரைத்துக்
கொண்ட தன்குறிப் பவரனு மதிமேற்
கொண்டு குந்தமூ லத்தின்மேற் பாலாய்
எண்ட ராப்பெருங் காதலாற் றவஞ்செய்
தெய்த யோகபீ டத்தினி லிருந்தாள். 11

[வீரபத்திரர் முதலானோர் தேவியுடன் தவம்புரிதல்]

445 விமல நாயகி பரிந்தருச் சித்த
வெயிலு வந்தவைங் கரன்திருத் தாளில்
அமையு மன்புசெய் தருச்சனை புரிவோர்க்
கரிய தொன்றிலை யரனருள் பெருகி
நிமல ராகுவ ரிமையம்விட் டெமையாள்
நிமலை நற்சிவ புரநினைந் தெழுங்கால்
தமைநி கர்த்தமா வீரபத் திரரும்
சகல லோகநா யகியுடன் சார்ந்தார். 12

[வீரபத்திரர் முதலானோர் காவலுடன் தேவி தவம்புரிதல்]

446 வந்த வீரரும் மலைமக ளுடனே
வந்து குந்தநா யகர்தமை வணங்கி
அந்த மில்லொளி யோகபீ டத்தின்
அணங்கு வீற்றிருப் பதற்கரு காக

---

444 உதரம் – வயிறு. அவரனுமதி – கணபதியின்உடன் பாடு. மேற்பாலாய் – மேற்குத்திசையில்.

445 பரிந்து – அன்புகொண்டு. நிமலராகுவர் – குற்றமற்றவராவர்.

கந்த மாமலர்க் குழலவள் பாது
காவ லாகமுன் னிருந்தன ரவரைச்
சிந்தை யன்பொடு கண்டுளோர்க் கொழியாத்
தீமை யாவையுந் தீர்ந்துறுந் தெளிவே. 13

[தேவி தவம்புரியும் காட்சி]

447 தருண மங்கலைச் சேடியர் ஏவல்
தாங்க யோகபீ டத்தினிற் றரித்துக்
கரண நான்கையும் ஒருவழி நிறுவிக்
கயிலை யங்கிரிக் கடவுளை நினைந்தே
தெருளு மோனம தாய்நிறு விகற்பத்
தியான சித்திர தீபமே போல
அருண லந்தரு பசுங்கிளி யிருந்தாள்
அரச மேலிமை யோர்செயல் புகல்வாம். 14

[தவசுக்குத் தேவி சிவபுரத்துக் கெழுந்தருளிய சருக்கம் முற்றும்]



---

446 கந்தம் – நறுமணம். அவரை ... தெளிவே – வீரபத்திரரை வழிபடுவோர் எல்லாத் தீமையும் நீங்கித் தெளிவடைவார்.

447 தருணமங்கலை – கன்னிப்பருவத்தோடு விளங்கும் தேவி. கரணம் – மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

காம தகனச் சருக்கம்

[ஏழு சீர் சந்தவிருத்தம்]

[திருமால் முதலான தேவர்கள் யாவரும் வந்து தேவியை வழிபட்டு வேண்டுதல்]

448 செம்பொன் மாமலை வல்லி யுஞ்சிவ
புரமெ னும்பதி சேர்தலும்
உம்பர் தம்பதி மால யன்முத
லோரெ திர்ந்தடி தாழ்ந்துநின்
றெம்பெ ருந்துயர் தீர்த்த ருட்புணை
யாலெ மைக்கரை யேற்றுகென்
றம்பி கைக்குள மகிழ வோதினின்
ரூத ரித்தன ரன்பிலுல் 1

[அயனுதி தேவர்களின் சிந்தனை]

449 சூழ்ந்து நின்றிவை சொல்லி வாழ்த்திய
சுரர்க ளுக்கருள் நல்கியே
போழ்ந்த மாவகி ரன்ன கண்ணிபொ
ருந்தும் யோகம துற்றனள்
தாழ்ந்த சிந்தைய ராய்வ ருந்தய
னுதி விண்ணவர் தாமெலாம்
வாழ்ந்து யுந்திற மெவ்வ ணம்மினி
வருவ தென்றெணி யோதுவார் 2

---

448 உம்பர்தம்பதி – தேவருலகம். மால் – திருமால். அயன் – பிரமன்.

449 சுரர் – தேவர். போழ்ந்தமாவகிர் – பிளந்த மா வடுவின்பகுதி. தாழ்ந்த சிந்தை – கிளர்ச்சி யில்லாத உள்ளம். வணம் – வண்ணம். எணி – எண்ணி (இரண்டும் இடைக்குறை)

450 சிவபி ரான்வட கயிலை ஆலடி
சேர்ந்து யோகம துற்றனன்
புவன நாயகி சிவபு ரப்பதி
போந்து யோகம துற்றனள்
இவர்கள் தன்மையி தாகி லெப்படி
யெய்து வன்றிறல் வேள்,மகக்
கவதி தீர்வகை யெவ்வி தம்மரன்
அமலை மோகித ஞயினுல் 3

451 விரைவின் வந்தருள் தரும ருந்தவம்
விடும்நன் மங்கலை மன்றலும்
முரச திர்ந்திட முடியும் வந்திடும்
முருக னுந்திறல் சூரனும்
கரையில் தங்கிலை யொடுகெ டும்மவக்
கவலை விண்டுட ஞமெலாம்
புரையில் நம்பதி யெய்தி யேபல
புதிய போகம ருந்தலாம் 4

[மன்மதனைக் கொண்டு இறைவன் யோகத்தைக் கலைக்க முடிவு செய்தல்]

452 விரக காரணன் மதன னுகையால்
வெள்ளி வெற்பர்முன் னேவுவோம்
மரும லர்க்கணை தொடவெ னத்துணி
மனதி னுலெணி யமரர்தாம்

---

450 வடகயிலை ஆலடி – கயிலையின் வடக்கே ஆலவிருட்சத்தின் அடியில். வேள் – மன்மதன். அவதி – தூயரம். மோகிதன் – விருப்புடையவன்

451 மங்கலை – தேவி. மன்றல் – திருமணம். வந்திடும் முருகனும் – குமரக் கடவுளும் தோன்றுவான். கிலையொடு கெடும் – சுற்றத்தோடழிவான். அவக் கவலை – வீண்துயரம். விண்டு – வேறு பட்டு நீங்கி. போகம் – நலம்

குரும திக்குடை யண்ண லுத்தனி
கூவி வைத்துரை கூறுவார்
இருண்ம தக்கய ! வெம்மை வாழ்வில்
இருத்த லுன்கட னேதெனில் 5

[மன்மதனிடம் நிலைமையைக் கூறுதல்]

453 சூர லுல்நெடு நாள்மெ லிந்துயர்
சோதி வெண்கயி லைக்கிறை
யீர நாண்மல ரடியி னெய்தி
இயம்ப வவ்விறை நம்மிடை
நேரி லாவொரு குமரன் வந்துடன்
நீக்கும் நுந்துய ரென்றருட்
சீருலா வட வாலின் யோகுசி
றந்தி ருந்தனன் தேவியும் 6

454 இத்த லத்தினில் மேவி நற்றவ
மேயிய ற்றியி ருந்தனள்
சித்த சாயிவர் தங்கள் தன்மையீ
தென்னில் நாமுய்வ தெங்ஙனம் ?
முத்த வாணகை தன்னை வேட்டுமு
யங்க முன்னவன் றன்னுளம்
வைத்தி டத்தகு மாறிய ற்றிடின்
வாழ்வம் வேறிலை மார்க்கமே 7

---

452 விரகம் – காதல் வேட்கைப்பிணி. மருமலர் – மணம் பொருந்து மலர். கணை – அம்பு. தொட – செலுத்த. குருமதிக் குடை – ஒளிபொருந்திய சந்திரனுகிய குடை. அண்ணல் – ஈண்டு மன்மதன். இருள் மதக்கய – இருளாகிய யானையையுடையவனே !

453 ஈரம் – குளிர்ச்சி. யோகு – தவம்.

454 சித்தசாயி – மன்மதனே ! வாணகை – ஒளிபொருந்திய பற்களையுடைய தேவி. வேட்டு – விம்ருபி. தகுமாறு – தக்கதொருவழி.

[தேவர்கள் மன்மதனை இறைவன்மீது மலரம்புகளை ஏவத்தூண்டுதலும் மன்மதன் அஞ்சி மறுத்தலும்]

455 ஆத லால்வட வாலின் மேவிய
அண்ண லார்திரு முன்னர்நீ
போது தூவுதல் செய்ய வேண்டும்நின்
புடையின் யாவரும் வருதுமென்
ரோத வைங்கணை வேள்ப யந்தென்
லுரைத்திர் நம்மிலொ ருத்தனே
வேத நாயகன் விரக மால்கொள,
விளிவனிச் செயல் புரியிலே 8

[மறுத்துரை கூறிய மன்மதனை வற்புறுத்தி வேண்டுதல்]

456 என்ற லுவிது முற்று ரூதுபின்
னேது சொல்லினு மாமென,
மன்ற லந்துள வோன்மு னுகியவ்
வானு ளோர்பரிந் துய்யவே
ரொன்று மீதில்வ ராது யாமுளம்
உன்னு டன்வரு கின்றனம்
குன்ற வில்லிம னந்தி ருந்துதல்
கூடு மோவுனை யன்றியே 9

[தேவர்கள் சாபத்தினும் இறைவனால் அழிவது நலமென மன்மதன் எண்ணுதல்]

457 துக்க சாகரம் மூழ்கி யாமுனம்
துஞ்ச லின்றி வருந்துதல்
தக்க தாமென வெண்ணின் நீயுமென்
சாற்று வோமென மதனவேள்

---

455 போதுதூவுதல் – மலர்க்கணைகளைத் தொடுத்தல். புடை – பக்கம். விளிவன் – அழிந்து விடுவேன். விரகமால் – காமமயக்கம்.

456 முற்றுரூது – நிறைவேறாது. நுளவோன் – திருமால். யாமுளம் – நாங்களிருக்கின்றோம் (துணையாக என்ற பொருள்படும்). குன்ற வில்லி – சிவன்.

இக்க டுஞ்சொலின் நோன்சொல் கின்றனர்
இவர்கள் முன்னரவ் விறைமுனம்
புக்கு வீதல்நன் றென்றெ ணித்தொகு
புலவ ரோடிவை புகலுவான் 10

458 இவன்ற னைலிது தாழ்வு வந்ததென்
றெண்ண லீர்அன தாகவென்
றுவந்து நல்லுரை பேசி யேயவர்
ஒக்க வந்திட ஏகியே
நிவந்தெ ழுங்கயி லேப்பு றத்தயல்
நிற்கயா வரும் மன்மதன்
பவங்க டிந்திடு பரமன் முன்மலர்ப்
பாண மேவந டந்தனன் 11

[மதனன் மலரம்பினை இறைவன்முன் எய்தல்]

359 தென்ற லந்தனி யிரத மீதுறு
சின்னம் யாவும்நி ரப்பிட
வென்றி சேர்மல ரம்பு பைங்கழை
விற்க ரந்திக ழப்புகழ்
குன்றி டாதவன் மெள்ள வந்துகு
ளிர்ந்த சோலைகள் தொறுமுலாய்
மன்றலந்தரு கொன்றை யந்தொடை
வள்ளல் தன்முன் மலிந்தனன் 12

460 செஞ்ச டாடவி மகுட மும்பொடி
சேர்ந்தி லங்கிய நெற்றியும்
கஞ்ச நேர்திரு முகமு மன்பொடு
கருணை தாங்கிய விழிகளும்

---

457 துஞ்சலின்றி – உறக்கமின்றி. சாற்றுவோம் – சபிப்போம் என்பது குறிப்புப்பொருள். நோன் – வன்மை. தொகு – கூடியுள்ள.

458 தாழ்வு வந்தது – தடையாயிற்று. ஒக்க – கூட்டமாக. ஏவ – செலுத்த.

459 இரதம் – தேர் (மன்மதனுக்குத் தென்றலே தேர்). பைங்கழை – பசியகரும்பு. மன்றல் – நறுமணம், மலிந்தனன் – மாறுபட்டனன்.

அஞ்ச னந்தரு கண்ட முத்திகழ்
அங்கை முத்திரை ஞானமும்
மிஞ்சு பேரெழில் தோன்ற ஆலடி
வீற்றி ருந்திடல் கண்டனன் 13

461 கண்ட வேள்மன மஞ்சி மெய்யொடு
கைகள் சோர்ந்து நடுங்கிநின்
றண்ட ரேவலின் வந்தபோ தெயென்
ஆருயிர்க் கழி வுற்றது
முண்ட கம்முதல் ஏவி எண்ணம்
முடிப்ப தேதுணி வாமெனக்
கொண்டு பைங்கழை விற்குனித் தெதிர்
கொய்யும் நாண்மலர் எய்தனன் 14

[இறைவன் நோக்கால் மன்மதன் எரிந்தழிதல்]

462 போகி யாதலும் யோகி யாதலும்
புவன வேதுவென் றேர்ந்திடா
தேக மாகிய நன்மை யுந்தமில்
எண்ணி யேவின நிவனியம்
மாக வாணர்கள் என்று ளத்தின்ம
கித்த ழல்செய் நுதற்கணே
வேக மாக விழித்து நோக்கினன்
வின்ம தன்பொடி யாயினன் 15

[தேவர்கள் அஞ்சி ஓடி ஓரிடத்தில் கூடுதல்]

463 நெற்றி யம்பக முற்றெ ழுங்கண்
நிலவு நூரமம்வெள் ளிக்கிரி
முற்று மின்னெடு மேக ராசிகள்
மொய்த்தல் போலவி ளங்கல்கண்

---

460 சடாடவி – சடையாகிய காடு. பொடி – திருநீறு. கஞ்சம் – தாமரை. அஞ்சனம் – நீலம். முத்திரை – சின்முத்திரை.

461 அண்டர் – தேவர்கள். முண்டகம் – தாமரை மலரம்பு.

462 இறைவன் யோகியாதலும் போகியாதலும் உலக நன்மைக்கே என்பது முதலடியின் கருத்து. ஓர்ந்திடாது – (தேவர்கள்) ஆராய்ந் துணராமல். ஏகமாகிய நன்மை – தன்னலம். அழல்செய்நுதற்கண் – நெற்றிக்கண்.

டிற்ற தெம்முயிர் என்று விண்ணவர்
எண்டி சைக்கணு மோடியே
சுற்றி வந்தொரு பக்க மாய்மிகு
துக்க மோடவர் கூடினர்

[தேவர்கள் செய்வதறியாது திகைத்தல்]

464 என்செய் வோம்மத னேக்கெ டுத்தனம்
ஏவி யண்ணல்மு னிதலாற்
பொன்செய் மேனிய னேடு மாறுகொள்
புன்மை யோர்களு மாயினேம்
வன்பு கொண்டநாம் எங்கு னுய்குதும்
மார வேளென மாய்த்திடின்
துன்ப மின்றவை யுங்கி டைத்தில
சூழல் யாதென வுன்னினர். 17

[திருமால் இறைவனையே தஞ்சமடைவோமெனல்]

465 இன்ன வாறிமை யோர்கள் மாயனெ
டெண்ணி யென்செய்வ மென்னமால்
தன்னே நேர்கட லூடு செல்கலன்
தங்கு சம்புறை யுங்கொடிக்
குன்னின் வேறுள தோவதன்றியு
றுங்க தித்திற மொப்பிலா
வன்னி மேனியன் அன்றி யாமினி
வாழ்ந்தி டும்வகை யில்லையே. 18

466 தீமை பற்பல வாயி யற்றுதல்
சிறிய ராம்நமக் குத்தொழில்
ஏம வெற்புவின் நாத ருக்கவை
யேச கிப்பது வேதொழில்

---

463 தூமம் – நெருப்போடுகூடிய புகை. இற்றது – அழிந்தது.

464 மதனே – மன்மதனே. கெடுத்தோம் – அழித்துவிட்டோம். சூழல் – எண்ணுதல்.

465 மாயன் – திருமால் தன்னே நேர்கடல் – தன்நிறத்தை ஒத்த கடல் கலன் – கப்பல். சம்பு – மரம். வன்னி – நெருப்பு. கொடி – காக்கை.

நாமி னிச்சரண் நீயெ னச்சொலின்
நாமு ஞற்றிய தீமையைத்
தாமு ளத்தடை யாது நல்லருள்
தருவர் வாருமின் என்றனன் 19

[தேவர்கள் நந்திதேவர் வாயிலாக இறைவனிடம் செல்லுதல்]

467 தேற்ற மின்னண மால்சொ லத்திரள்
தேவர் யாவரும் ஐயனன்
மாற்ற மோதினீ யென்று வந்துடன்
மால்பின் வந்தருள் நந்தியைப்
போற்றி யெம்வர வண்ணல் முன்பு
புகன்றெ மக்கருள் செய்கெனச்
சாற்ற, நின்மினிர் என்று விண்ணவர்
சார்ந்த தோதினன் நந்தியே 20

[தேவர்கள் இறைவனை வணங்குதல்]

468 தருக வென்றனன் முக்க ணெம்மிறை
தாழ்ந்தெ ழுந்துவிண் ணவர்கடாம்
அருகு வந்துமை யெம்மை யாளுடை
அண்ணல் கூவினன் என்றனன்
விரியு மன்புடன் நந்தி தாளினில்
விழுந்தெ ழுந்தரி யாதி யோர்
பெருகு மச்சமொ டேகி ருயர்
பிஞ்ஞ கன்றிரு முன்னரே 21

[திருமால் இறைவனிடம் கூறுதல்]

469 கண்டு வீழ்ந்துவ ணங்கி நின்றெதிர்
கைக ளஞ்சலி கூப்பியே
அண்ட நாயக யாம்செய் குற்றமெ
லாம்பொ றுத்தெமை யாள்கவென்

---

466 ஏமவெற்பு – இமயமலை. சகிப்பது – பொறுப்பது. **உளுற்றிய** – செய்த.

467 நன்மாற்றம் – நலம் பயக்கும் சொற்கள். **நின்மினிர்** – **இருங்கள்.** சார்ந்தது – தேவர்கள் வந்ததும் கூறியதும்.

468 அரி – திருமால். கூவினன் – அழைத்தான்.

றெண்ட ராப்பரி வோடி யம்பினர்
என்ன வேண்டுமெ னக்கடு
வுண்டவன்றிரு வாய்ம லர்ந்தனன்
உவண வாகன னேதுவான் 22

470 தாரு கன்றுயர் கூறி னேமுனந்
தருதும் யாமொரு குமரனே
வீர னுமவ னலுமக் குறு
விதனம் நீக்குது மென்றனே
நேரி லாயிது காறு மவ்வருள்
நினைகி லாயெனி லென்செய்வோம்
சீரு லாவிய யோகம் நாள்பல
செய்தி ருந்தனை நீயுமே 23

471 தனையை யாய்மலை யரையர் பாலவ
தார மாகிய வன்னையும்
உனம ணஞ்செய்நி மித்த நற்சிவ
யோக வாரணி யத்தினில்
நினைய நற்றவ மாற்றி வைகினள்
நீவி ரிச்செயல் பூண்டிடில்
வினைகொ ளிச்சக மெவ்வி தத்தில்
விருத்தி யாகுமென் னையனே 24

472 மாது நின்மண வேட்கை யாற்றவ
மாற்றி வைகினள் நாள்பல
வாத லாற்சதுர் வேத நற்புர
மதனி லெம்மனை முன்புசார்ந்

---

469 உவணவாகனன் – கருடவாகனனாகிய திருமால்.

470 தாருகன் – அசுரன் பெயர். விதனம் – கவலை. நேரிலாய் – ஒப்பிலாதவனே.

471 தனையை – மகள். யோகவாரணியம் – யோகம் புரியும் வனம். சகம் – உலகம் (ஈண்டு உயிர்கள்மேல் நின்றது).

தோது நல்வர மீந்து வேட்டொழி
யாத துன்பம் விழைந்திடும்
தீது சேர்தரு சூர னைத்தெறு
செயம ளித்தெமை யாள்வரம் 25

[இறைவன் கவலை நீங்குகஎன அருளுதல்]

473 தருக வென்றனன் யாம் வருந்து
முமலிவ் வருள் தாவென
உருகு மன்பொடு வாழ்த்தி னிரிவர்
உற்ற துன்பினை நோக்கியே
கருணை நாயகன் அஞ்சல் நீவிர்நும்
கவலை நீக்குதும் என்றவன்
அருளி னன்திரு மால்மு னோர்களித்
தார்,பின் எய்திய தோதுவாம் 26

[காமதகனச் சருக்கம் முற்றும்]



---

472 மாது – உமாதேவி. சதுர்வேதநற்புறம் – திருப்பெருந்துறை. அனை – அன்னை. வேட்டு – திருமணம் செய்துகொண்டு. தெறுசெயம், கொன்று அழிக்கும் வெற்றி.

478 பின் எய்தியது – மேல் நிகழ்ந்த வரலாறு.

தேவிக்கு சுவாமி காட்சி கொடுத்த சருக்கம்

[ஆறுசீர் ஆசிரிய விருத்தம்]

[இறைவன் திருப்பெறுந்துறை செல்ல முனைதல்]

474 அரியதிருக் கயிலையினில் வீற்றிருந்து
விண்ணவருக் கருளுங் கோமான்
பரிவினெடு சிவபுரத்திற் கெழுந்தருளி
திருவுளப்பாங் காவ தாகி
விரியும்வட வாலினைவிட் டொருவியந்தப்
புரத்தணுகி விளங்கும் யோகத்
துரியதவ அங்கமெலா மொழித்துமணக்
கோலங்கொண் டுவந்தா னன்றே 1

[நந்தி விடையலங்கரித்து நிறுத்துதல்]

475 முன்னவன்றன் குறிப்புணர்ந்து கணநாதர்
எம்மருங்கும் மொய்த்தார் தங்கள்
பன்னரிய கணங்களொடு நந்திவிடை
யலங்கரித்துப் பரிவ தாக
மன்னியதன் றிருவாயில் தனில்நிறுத்தி
மலர்க்கையின்வேத் திரத்தோ டேகித்
தன்னிகரி லாற்றெழுது மறையெனும்பா
துகையமைத்துத் தந்தான், செய்கை 2

---

474 திருவுளப்பாங்கு – அருள்செய்தலே உணர்த்தும் ஒருமரபு மொழி. ஒருவி – நீங்கி. தவஅங்கம் – தவக்கோலம்.

475 முன்னவன் – சிவபெருமான். கணகாதர் – சிவகணங்கள். பன்னரிய – சொல்லுதற்கரிய. பரிவாக – அன்பாக. வேத்திரம் – பிரம்பு.

[இறைவன் இடபத்தின்மேல் எழுந்தருளுதல்]

476 அவ்விடைமேற் ரூளுன்றி நந்திகரம்
பற்றியரு ளமல நாதன்
செவ்வியமெய் யன்பரொடு சேர்ந்தனன் கோ
புரவாயில் சென்று நேரே
சுவ்வுணுமால் விடைமுழங்கக் கொண்டுதண்டை
கண்டைபல குழறி யார்ப்பக்
கவ்வையிலா துற்றதுகண் டவ்விடைமேற்
கொண்டனன்என் கருணை வள்ளல் 3

[தேவர்களும் கணங்களும் மகிழ இறைவன் புறப்படல்]

477 அண்ணல்விடை மேற்கொளல்கண் டார்த்தெழுந்தார்
கணநாதன் மாரி யாரும்
எண்ணமின்றி முற்றியதென் றேமகிழ்ந்து
செங்கைமல ரிறைத்துச் சூழ
வண்ணமணிக் குடையெடுத்தேந் தினன்குண்டோ
தரன்,சங்கம் வாய்கள் தோறும்
நண்ணவமைத் தூதினனண் டமுங்குலுங்கப்
பானுகம்ப ஞகுந் நூயோன் 4

[இதுமுதல் தேவர்கள் சூழ்ந்து பல்வகைப் பணிபுரிந்துவரும் வருணனைகள்]

478 அடைப்பையெடுத் தணைதரவிந் திரன்விசிறி
எடுத்திடக்கா ளாகை வேந்தன்
தொடுத்தநவ மணிமாரி சொரிதரத்தும்
புரூவொடுநா ரதனும் வீணை

---

476 விடைமேல் தாள்ஊன்றி. சுவ்வுணுமால் – மண்ணுலகை உண்ட திருமால் (சு – பூமி) தண்டை, கண்டை முதலியன வாத்தியங்கள். கவ்வை – ஆரவாரம்.

477 எண்ணம் – குமாரதேவர் அவதரிக்க வேண்டுமென்ற விருப்பம். குண்டோதரன்குடைபிடித்தலும் – பானுகம்பன்சங்கம்முழங்கலும்மரபு

எடுத்திசையா ரமுதொழுக்கி யியங்கிடவெங்
கூற்றுடைவாள் எடுக்க நன்னீர்
மடுத்தகர கந்தாங்கி வந்திடமேற்
றிசைவருணன் மகிழ்ச்சி கூர 5

479 வாய்களொரு நான்காலும் மறையெடுத்து
முழக்கிவர மலரின் மேலோன்
காயனிரக் கரமலர்கட் காயாம்பூ
வண்ணனெமைக் காவென் றேத்தப்
பாய்விடைமுன் முனிகணங்கள் பற்பலதோத்
திரம்பகர்ந்து பரிவிற் செல்லச்
சேயகதிர் மதிவேந்தன் றெறுங்கனலி
கையின்விளக் கேந்திச் செல்ல 6

480 அருகிருபா லுங்கவரி கள்மிரட்ட
ஆஆவென் றெவரு மார்ப்ப
மருவிமுனஞ் சென்றிடமா காளர்முதற்
கணநாதர் மகிழ்ந்து நந்தி
திருமலர்க்கை வேத்திரத்தாற் செலவொதுக்கி
முன்செலமா தேவன் ஊரும்
நரைவிடைதென் றிசைநோக்கி நடந்ததுபல்
லியவோசை நரலே யேய்ப்ப 7

[இறைவன் ஆதிகயிலாயத்துள் புகுதலும் தேவி வணங்கி வரவேற்றலும்]

481 இன்னவகை யாற்கயிலைக் கிறையாதி
கயிலாசத் தெய்தி வெற்பின்
மன்னவன்கன் னிக்கெதிரே மழவிடைமேற்
காட்சிதர மறுவி லாத

---

478 அடைப்பை – தாம்பூலப்பெட்டகம். கால் – காற்று (வாயுதேவன்) அளகைவேந்தன் – குபேரன். கூற்று – யமன். நன்னீர் – வருணன் (மழைக்கடவுள்) கரகம் – நீர்குடம்.

479 மலரின் மேலோன் – பிரமன். காயம்பூ வண்ணன் – திருமால். பாய்விடை – விரைந்து செல்லும் ஏற்றார்தி. சேய – செம்மையுடைய தெறுங்கனலி – வெப்பமுடைய அக்கினித்தேவன்.

480 இரட்ட – சுழல. ஆ! ஆ! – ஆனந்த வியப்புக் குறிப்பொலி. நரை – வெண்மை. விடை – இடபம். நரலே – கடல்.

மின்னிடையாள் கண்டெழுந்து மெய்ப்பரிவால்
அருவிதர விழிகள் நின்ற
வன்னிலைநீங் காதிறைஞ்சி யாதரித்தாள்
அஞ்சலிக்கை யமுதம் தாங்க 8

[பிரமன் தேவியிடம் கூறுதல்]

482 தன்றன்வச மற்றின்ப சாகரத்தில்
மூழ்கிநிற்குந் தைய லாள்தன்
முன்றுதிசெய் தயனமுதே முற்றியதுன்
எண்ணமெலாம் முன்னே னுன்னே
மன்றல்புரி வதற்காக வந்தனனுன்
றவப்பயனும் வள்ளல் தன்முன்
சென்றருகி லெழுந்தருளென் றுன்றேவி
கவிழ்ந்துமுகஞ் செப்ப லுற்றாள் 9

[தேவி தன் விருப்பத்தைக் கூறல்]

483 எக்குறையுந் தீர்ந்தெனவெள் ளேற்றிலுவந்
தெழுந்தருளி யென்முன் நிற்க
வக்கணமே யான்கேட்ப தாயுளது
வரமதனை யளித்தால் மேன்மை
மிக்கமரும் யோகபீ டத்தினையான்
விட்டருகில் மேவ லாமென்
றிக்குமொழி யாளிசைத்தா ளெம்மிறைவன்
குறுநகைபூத் தியம்பு கின்றான் 10

[தேவி வரங்கேட்டல்]

484 ஆரணங்கே நீபுகல்வ ததுவறிவோம்
கேட்பதெலா மளித்தும் ஒதென்
றேரிணங்கு செஞ்சடிலத் தெந்தைபுகன்
றனனெதிர்நின் றியம்ப வெண்ணி

---

481 ஆதிகயிலாயம் – திருப்பெருந்துறை. வெற்பின் மன்னவன் – இமவான். ஆதரித்தாள் – போற்றித்துதித்தாள்.

482 தன்றன்என்பதில் பின்னது சாரியை. அயன் – பிரமன். எண்ணம் – இறைவனை மணக்க வேண்டுமென்ற விருப்பம். மன்றல் – திருமணம்.

483 இக்கு – கரும்பு (கரும்பிலும் இனிய மொழி)

வாரிணங்கு முலையாள்பூ வதனியலாய்
இவ்விடமெப் படியோ மூல
காரணரா மமக்கெமக்கு மிப்பீடம்
நிதமிருப்பாய்க் கருதல் வேண்டும் 11

485 சிவரூப மெவற்றினுக்கும் திருக்குருந்தம்
மூலமெனத் திகழ்வ தேபோல்
அவம்மாற்றும் சத்திபே தங்களுக்கெல்
லாமூல மாக வேண்டும்
தவயோக பீடமெனத் தக்கதிது
மன்றலென்றன் தந்தை யில்லில்
நவமாக முடித்துடன்வந் திப்பதியின்
உடனிருக்க நல்க வேண்டும் 12

[இறைவன் தேவிக்கருள் செய்து மேலும் கூறுதல்]

486 என்றனள்வெற் பரையன்மகள் ஈந்தனமென்
ருனிறைவன் பின்னுஞ் சொல்வான்
வென்றிவியாக் கிரபாதன் பதஞ்சலியென்
றிருமுனிவர் மிக்கோ ரிங்குச்
சென்றிடுவ ரவர்பொருட்டுச் சிதம்பரத்தின்
நடேசனெனச் செல்வோம் நீயும்
மன்றல்முகிழ் சிவகாம வல்லியென
வருவையுனை மருவி நாளும் 13

487 கனசபை தனில்நடித்தெவ் வுயிர்களுக்கும்
எஞ்ஞான்றும் கருணை செய்வோம்
பினுமொருகா லிவணமர்விப் பிரர்முந்நூற்
ருருவரெனப் பெயர்கொண் டன்னோர்

---

484 புகல்வதனுள்ளென்பதனுள் அதுபகுதிப்பொருள். அளித்தும் – தருவேம். ஏரிணங்கு – அழகு தங்கும். சடிலம் – சடைமுடி. வார் – கச்சு. பூவதனியல் – அழகும் மணமும் ஒன்றியிருக்கும்நிலை.

485 அவம் – வீண்செயல். தந்தைவீட்டில் திருமணம் நிகழ்த்தவேண்டும் என்றபடி.

486 மிக்கோர் – தவஞானங்களாற் சிறந்தோர்.

தனிமைதவிர்த் துடனமரத் தருவோம்பின்
னெருகாலந் தன்னி லோவா
ரினிமைதரு வழுதிபொருட் டெழுந்தருள்வோம்
யாம்சுந்த ரேசர் என்றே 14

488 கயற்கண்ணி யெனவருவை நீயும்வெகு
விதலீலை கருதி யாற்றி
அயர்ப்பிலதா யிவணுறைவோம் அன்றியுமெய்
யடியர்பொருட் டாக வெங்கும்
நயப்புறும்லீ லைகள்புரிந்து குருந்தமிதில்
வந்துறைவோம் நாளும் நம்மை
வியப்பொடுசிந் திக்கவல்லோர் மலபாசம்
விட்டமல வீடு சேர்வார் 15

[உமையோடிறைவனைக் குருந்தடியிற்கண்டு வழிபடுவோர் எய்தும்பயன் முதலிய கூறுகின்றார்]

489 அபுத்தியினு லேனும்நாந் தங்குகுந்த
மூலங்காண் பராயி னன்னோர்
செபத்தினெடு குருதீக்கை முதலவிலா
மற்கதியிற் சேர்வர் யார்க்கும்
சுபுத்திதரும் நாம்வசிக்கும் தொல்லிடங்கள்
தனிலறம்பா வங்கள் சூழ்ந்தால்
உபத்திரமா மிரண்டும்வளர்ந் தோங்குமிதில்
அறம்வளரும் ஒழியும் பாவம் 16

---

487 கணகசபை – பொன்மன்றம். அன்னோர் தனிமை – முனிவர்களின் தனிமை. ஓவார் – (ஓவு–ஆர்) ஒவியம்போல நிறைந்த. வழுதி – பாண்டியன்.

488 கயற்கண்ணி – மினாட்சி. அயர்ப்பு – சோர்வு – அமலவீடு குற்றமற்ற மோட்ச வீடு.

489 அபுத்தி – நிஷவற்றநிலை. குந்தம் – குருந்தம். சுபுத்தி – உயர்ந்த ஞானம்.

490 பற்பலவுற் பவத்தறங்கள் பண்ணினர்க்கித்
தலவாசம் பலித மாகும்
கற்பனைய வெண்ணகையாய் நீகுருந்துக்
காட்டிடமுன் கண்ட நன்னீர்
அற்புடனை யிரஞ்சனனம் சுத்தமுடை
யோர்க்கன்றி யாடக் கிட்டா
துற்றதில்வா சமுமதிற்ரு னமுங்கிடைத்தாற்
பவமரணத் துன்ப மின்ரும். 17

[உமைக்குச் சிவயோகநாயகி என்னும் திருநாமம் வந்தகாரணம் கூறுதல்]

491 தவயோக பீடத்தி லினிதிருந்து
தவம்புரிந்த தன்மை யாலே
சிவயோக நாயகியென் றுனதுபெய
ரதைநினைதல் செப்பல் வல்லோர்க்
கெவராலு மடையாத பதவியைநீ
கொடுத்திடுக, எமக்காய் நீசெய்
பவமாற்றும் புனலதனக் காத்மதீர்த்
தமெனும்பெயர் பரிப்ப தாகும். 18

492 அரும்பாவி யோருமதி லாடினரேல்
சீவன்முத்த ராவர், நீநம்
மருங்கேவா வெனவுரைத்து மலர்த்திருநோக்
கருள்மலர மங்கை, யின்று
விரும்பாத வரங்களையு மிக்கடைந்தே
னென்றுமன விருப்பம் பொங்கப்
பெருங்காத லொடும்யோக பீடம்விட்டு
வந்துவணங் கினள்பெட் போடும் 19

---

490 உற்பவம் – பிறவி. பலிதமாகும் – கைகூடும். கற்பனைய வெண்ணகையாய் என்றது. கற்பின் தூய்மை போலும் வெண்மையான பற்களை உடையாய் என்றபடியாம். ஆட்டிட – அபிடேகம் செய்ய – கண்ட – உண்டாக்கிய அற்பு – அன்பு. ஆட – குளித்துமுழுக ஸ்நானம்என்னும் வடசொல் தானம் எனநின்றது. பவமரணத் துன்பம் – பிறப்பு இறப்புத் துயரங்கள்.

491 பரிப்பதாகும் – தங்குவதாகும்.

492 மங்கை – உமாதேவி. பெட்பு – விருப்பம்.

[இறைவன் இறைவியோடு இமயம் சென்று மணம் முடித்துக் கொண்டுவந்து குருந்தவனத்தமர்ந்தருள் செய்தல்]

493 வணங்கியெழு மலர்க்கொடியை மழவிடைமேற்
கொண்டிடவம் மருங்கு மொய்ப்ப
அணைந்திமயத் தெழுந்தருளி வதுவைவினை
முடித்து,விடற் கரிய தாய
பணங்கொளர வாபரணர் குருந்தவன
மெய்திமலைப் பாவை யோடும்
இணங்கிமகிழ்ந் திருந்தனர்வெந் துயரகற்றி
எவ்வுயிர்க்கும் எந்த ஞான்றும் 20

494 எனக்கேட்ட விருடிகள்கு தரைக்கேட்பர்
எவ்விடத்த தாத்ம தீர்த்தம்
மனக்காதல் கொளுமகிமை யதற்கெவன்கீ
சொல்லுகென, வகுப்பான் ஏறுஞ்
சினக்கேண்மை யில்லாதீர் தேவிகுருந்
திறைக்காட்டச் செய்த தாகும்
இனத்தாவின் பாலாக எழுந்ததுபா
தலமதினின் றிருந்து நோக்கால் 21

495 குந்தமூ லத்தினுக்குக் குணக்காகும்
அதிற்றுனங் கூடு மாகில்
அந்தமிலாச் சிவமயமே யாவர்செபந்
தியானமொடு சிரார்த்த மாதி

---

498 மருங்கு – பக்கம். வதுவைவினை – திருமணச்செயல். பணம் – படம் மலைப்பாவை – உமாதேவி.

494 இருடிகள் – முனிவர்கள். எவன் – என்ன, வகுப்பான் – (சூதன்) கூறுவான். இனத்தா (இனத்து + ஆ) காமதேனு.

புந்திமகிழ்ந் தாற்றிலவ ணென்றனந்தம்
தவம்யோகம் பொருவி லாத
மந்திரசித் தியுமுடனுண் டாமீசர்
திருவருளாய் மதிப்ப தாகும்

496 ஒருவருக்கு மதிற்ரூனம் பெறலரிதா
மொப்பிலதி லொருவிந் தேனும்
பருகிடிற்ரூன் மூகைவந்தி பைசாசம்
உன்மத்தம் பாறும் அந்த
மருவிருக்கும் புனற்பெருமை வாக்குமனத்
துக்கடங்கா தம்மாண் பிற்கும்
திருவிளக்கு மிச்சரிதம் செப்புமவர்
செவிக்கொளுவோர் சிவமே யாவர் 23

[தேவிக்கு சுவாமி எழுந்தருளிக் காட்சிகொடுத்த சருக்கம் முற்றும்]

★★★
★★
★

---

495 குணக்கு – கிழக்கு. தானம் – ஸ்நானம். ஒன்றனந்தம் – ஒன்றுபல (ஆகும்) பொருவிலாத – ஒப்பில்லாத. மதிப்பது என்பதில் அதுபகுதிப் பொருள்.

496 ஒருஇந்து – ஒரு திங்கள். பருகிடின் – உண்டால். மூகை – ஊமைத்தன்மை. வந்தி – மலட்டுத்தன்மை. பாறும் – நீங்கும். மரு – நறுமணம்.

கலியாணம் — குமார அவதாரம்
சூர சங்காரச் சருக்கம்

[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

[புரூரவா தவுமியரை இறைவன் திருமண வரலாறு முதலியவற்றைக் கூற வேண்டுதல்]

497 தவவேந்தே தவுமியமா தவமே யுன்றேன்
தண்ணிளியா லின்னமுத சாரம் போலும்
நவமாநன் னலந்துய்த்துந் தெவிட்ட கில்லெம்
நாதனிமை யத்தணங்கை வேட்ட வாறும்
அவதாரம் முருகவே ளான வாறும்
அசுரரிறைக் கெய்தியதும் அமரர் யாரும்
கவைதீர வவருலகத் தேய்ந்த வாறும்
கழறுதியென் றிளெளிசேர் கழற்கால் வேந்தன் 1

[தவுமியர் மண வரலாறு கூறுதல்]

498 அன்னதே யாகவென முனிவர் கோமான்
அறைகின்றன் ஆதிகயி லாசந் தன்னி
கன்னியென விருந்துதவம் புரிய,முன்னோன்
காட்சிகொடுத் தவள்தந்தை கருதும்இல்லின்
மின்னனைய வளவள்தனை வேட்டருள வேண்டி
வெள்ளிமலை செல்வதென விடையூர்ந் தண்ணல்
பண்ணரிய வரிசையுட னெவரும் போற்றப்
பனிமலையின் பாங்கணைத்தான் பணிலமார்ப்ப 2

---

497 தண்ணளி – கருணை. வேட்டவாறு – மணம் செய்து கொண்டமுறை அசுரரிறை – சூரபன்மன். கலவை – கவலை. கழறுதி – கூறுக. வேந்தன் – புரூரவன்.

498 வெள்ளிமலை – பனிமலை – இமயமலை. பணிலம் – சங்கு.

499 மதிமுடிச்செஞ் சடைப்பரமன் மணமேற் கொண்டு
வருஞ்செயலை மலையரசன் மனதி னேர்ந்து
புதியமணக் கோலவினை எண்ணி லாத
புதுக்கிமண மண்டபச்சீர் புவனத் தெங்கும்
இதுநிகரொப் பதுவிலையென் றெவரும் எண்ண
இயற்றிநவ மணிகளினல் எதிர்கொண் டேற்றின்
புதியபர மானந்த மென்னும் வெள்ளம்
பொங்கிவருந் தகைமையெனப் பொலிந்து
தோன்றும் 3

500 கடவுளர்தம் போரேற்றை மகள்தன் னோடு
கண்ணுற்கண் டளவிறந்த களிமீக் கொள்ள
வெடிமலர்தூய்த் தொழுதிரைஞ்சி யெழுந்து போற்றி
வேண்டுகொள விடையினினின் றிழிந்து தெய்வப்
பிடிநடைமா தொடுமணப்பூம் பந்த ரெய்திப்
பிறங்குமணி மண்டபத்திற் பெருகு நாதம்
இடிமுழக்க மெனவியங்க ளொலிப்பச் சங்கம்
ஏங்கவரி யாசனமீ திருந்தா னன்றே. 4

501 அண்ணலுடன் அகிலந்தகணு திபர்கள் மால்முன்
னுமமரர் தம்மையுப சரித்துப் போற்றி
வண்ணமணி யாசனமீந் திருத்துங் கோமுன்
மதிமுடிச்செஞ் சடையர்மணக் கோலங்காண் பான்
எண்ணளவைக் கிடமிலவாய்ப் புவன மோர்மூன்
றினிலுமுளோ ரும்பலநல் வரிசை யேந்தி
நண்ணினர்கண் ணுதலருளா லிமைய வேந்தன்
நல்விருந்தேற் றளவளாய் நயமீந் தானல். 5

---

499 ஏற்றின் மீது பொலிந்து தோன்றும் என்க.

500. களி – களிப்பு. வெடிமலர் – அலர்ந்தமலர். வேண்டுகொள – விருப்பங் கொள்ள. இயங்கள் – வாத்தியங்கள்.

501 மால் – திருமால். எண் – எள்ளு. நண்ணினர் – வந்துசேர்ந்தனர்.

[திருமணம் காணவந்த கூட்டத்தால் வடக்குத் தாழ்ந்து தெற்கு உயர்தல்]

502 இத்தகைய குழுக்கள்பல மொய்த்த லாலும்
எண்டிக்கும் யோசனூ றென்ன வன்னோர்
சித்தமொடு கையுறைகொண் டுய்க்கும் வெற்பின்
றிரளாலும் அதிபாரஞ் சேர்த லாலே
உத்தரப்பூப் பிரதேசம் தாழ்ந்து தென்பூ
உயர்ந்ததுகண் டனரெவரும் உள்ளத் தச்சம்
வைத்தனரச் செயலினைப்பூங் கொன்றை வேணி
வள்ளல்தெரிந் தெவரையுமஞ் சலிரென் றோதி. 6

[இறைவன் அகத்தியனையழைத்துக் கூறலும் அவன் மறுமொழியும்]

503 கும்பமுனி தனையழைத்திப் பூநே ராக்கும்
கொள்கையுனை யன்றியெவ ராலுங்கூடா
தும்பர்முத லனைவருமச் சுற்ற ருன்னை
ஒப்பவர்வே றின்மையினு லுவந்து நீதென்
வம்பணுகித் தென்மலையத் திருத்தி யென்று
வாய்மலர்ந்தான் தமிழ்முனிவன் வணங்கி யெந்தாய்
செம்பதும நின்னடிவல் லபமுண் டாயின்
திரணமுமோ ரீமரிதாஞ் செயலு முண்டோ. 7

504 அனைவருநின் மணக்கோலங் கண்டு வாழ
அடியனேன் கொடும்பாவி யாவ னேவென்
றினைய,முனி வனைத்தேற்றி யெமையொப் பாக
எண்ணுதலா லுனையுலகு விடுக்கண் ணீக்கி

---

502 கையுறை – பரிசுப்பொருள். வெற்பின் – மலைபோல (பரிசுப்பொருள் மிகுதிசுட்டியபடி) உத்தரம் – வடக்கு. தென்பூ – தென்னாடு. வேணி – சடை.

503 கும்பமுனி – அகத்தியன். பூநேர்ஒக்கும் – பூமிசமமாகும். அச்சுற்றார் – அச்சமுற்றுள்ளார்கள். வம்பு – திசை. தென்மலை – பொதிய மலை. திரணம் – துரும்பு. ஈம் – ஈயும் என்பதன் சுருக்கம்போலும் – இறைவன் அருள்பெற்றால் ஒரு துரும்பும் எல்லாச் செயல்களையும் செய்யும் என்பது கருத்து.

இனைவொடவ ணிருத்திமணக் கோல முன்றன்
நேர்காண யாந்தருது மென்ரு னண்ணல்
கனைகழற்ரு மரையிறைஞ்சி முனிவர் கோமான்
கடுவிடைகொண் டனைந்தான்றென் கால்வெற்
பின்பால் 8

505 வருநெறியிற் சிலவிடையூ றகற்றி யங்கு
வைகலும்மா தவன்வடக்குந் தெற்கு மொத்துச்
சரிபடலாற் பூமகனென் பாள்த ராசின்
தட்டினையொத் துச்சமமாய்த் தாங்கி நின்ரூள்
பரிவுளராய் எவருமண வினைமேற் கொண்டு
பங்கயத்தோ னரசனுமுன் பணிந்து போற்றி
அருகிருந்து மணச்சடங்காற் றிடப்பொற் பீடத்
தம்பிகையும் அண்ணலையும் அன்பால் நோக்கி. 9

[திருமணக் காட்சி]

506 மேனையுடன் மலையரச னருச்சித் தேத்தி
மிளிர்கரக நீரெடுத்தென் விரைபென் கூந்தற்
பானல்விழி யமுதினைவெண் கயிலை முக்கட்
பரம்பொருளுக் களித்தனைப் பகர்ந்து கையால்
தானவறல் சொரிந்தனன்மங் களநாண் அய்யன்
தரித்தணங்கின் பாணிபற்றச் சாலி நோக்கி
வானமுற எழுமழல்சூழ்ந் தோம முத்தீ
மணவாள னயிருந்தான் மலைமின் னேடு. 10

---

504 இனைய – வருந்த. தருதும் – காட்டுவோம். கடுவிடை – விரைவான உத்தரவு. கால் வெற்பு – தென்றல் (கமழும்) மலை, பொதியமலை

505 சிலவிடையூறு – விந்த மடக்கியது முதலிய அருஞ்செயல்கள். வைகலும் – தங்கியிருக்க. பரிவு – விருப்பம். பங்கயத்தோன் – பிரமன்.

506 கரகநீர் – குடநீர். விரை – நறுமணம். பானல் – நீலோற்பலமலர். தானவறல் – தாரைநீர். தரித்து – பூட்டி. பாணி – கை. சாலி – அருந்ததி. ஓமம் – ஹோமம்.

[இரதிதேவி இறைவனிடம் முறையிடல்]

507 பாயொளிசேர் மாமணிப்பொற் பீடத் தின்கண்
பைம்பொன்மலி வல்லிபடர் பவள வெற்பின்
தூயதிரு மணக்கோலம் கண்டோ ரெல்லாம்
தொழுதிறைஞ்சித் துதித்தாடிப் பாடி வாழ்ந்தார்
தாயொடுதந் தையுமாய்ப்பல் லுயிர்க்குங் காட்சி
தந்திருந்தார் முன்னிரதி தாழ்ந்தென் கேள்வன்
காயமிழந் தழியவர மகளிர் தம்மிற்
கைம்மையெனக் கோவிதித்தாய் கருணை
வாழ்வே. 11

[இறைவன் ரதிக்கு அருள்செய்தல்]

508 பூசிமுடித் துண்டுடுத்துத் தங்கள் சேள்வர்
பொன்னகலஞ் சேர்ந்துநலம் பொருந்து வோர்முன்
மாசுடையாள் கலன்கழிந்த மகளி ரென்ன
வாழேனென் றிருவிழிநீர் வார நைந்தாள்
நேசமுட னிரதியுரை யிறைவன் கேளா
நேரிழைநீ துயரலினி நெற்றி நாட்டம்
வீசழலால் வீய்ந்தவன்றன் கணவ னுன்பால்
மேவுவன்முன் போலுருவாய், மிகும்மற் றூர்பால் 12

509 அனங்கனு கித்தோன்றுன் கருப்பு விற்பூ
வைங்கணையாற் சகமவனு ணீக்குள் ளாக
மனங்கவர்வன் நீசுபமங் கலியென் றோதி
வரமளித்தான் அவளருளால் மகிழ்ந்து தாழ்ந்து
கனங்குழையா மிரதிமண வாளற் பெற்றுக்
களித்தனள்மற் றிவருமனக் கவலை தீர்ந்தார்
இனங்கள்மிகு கணங்கள்முத லமரர் யார்க்கும்
இமவான்மெய் வரிசைமிக வியற்றி னனால். 13

---

507 முன் இரதி – மணக்கோலத்தில் இருக்கும் இறைவன் முன்பாக வந்து ரதிதேவி. கேள்வன் – கணவன். காயம் – உடம்பு.

508 அகலம் – மார்பு. கலன் – மங்கலநாண். நெற்றிநாட்டம் – நுதல்விழி.

509 அனங்கன் – உடம்பில்லாதவன். சகம் – உலகம்.

[தேவர்கள் மகிழ்ந்துபோற்றி இறைவனைக் குமாரக்கடவுளை தோற்றுவித்தருள வேண்டுதல்]

510 அனைவரும்வெற் பரையவுன்ற னருளா லெண்ணம்
யாவையுமின் றெய்தினமென் றன்பா லோதித்
தனிநிகர்வெண் பிறைமுடியோன் அடியின் விண்ணோர்
தாமெல்லாம் வீழ்ந்திறைஞ்சித் தாணு வேநின்
புனிமணக்கோ லங்கண்டு வாழ்ந்தோம் தீராப்
புன்கணைவை யும்மகன்றேம் பொருவில் சூர்க்கோர்
தனியன்வரு மாறருள்செய் தருள்க வென்று
தாழ்ந்துவிடை கொண்டுபெருந் துறையிற்
சார்ந்தார் 14

511 மால்முதல்விண் ணவரெவரும் குருந்தை நாளும்
வந்தனைசெய் தடல்விறல்வேள் வருமா றுன்னிச்
சால்புடனங் கிருந்தனர்மற் றெவரு மய்யன்
தருமணக்கோ லங்கண்டு தாழ்ந்து போற்றிப்
பால்பெறுதம் முலகிடைச்சென் றனர்கள் பின்சில்
பருவமிமை யத்திடையெம் பரமன் றேவி
நூல்பொரு நுண்ணிடையிறுவெம் முலைநற் போகம்
நுகர்ந்திருந்தான் பல்லுயிரும் நுகர வின்பம் 15

[தேவர்களின் அச்சம்]

512 அதுகாலம் தேவர்கள்தம் வருடம் நூறுயிற்
றஞ்சினர்க ளிமையவரிப் புணர்ச்சி தன்னில்
எதுவருமோ வெப்பூதம் தோன்று மோவந்
தெதுதருகின் றதுவோவென் றிணைந்தெல் லோரும்

---

510 சூர் – சூரபதுமன். தனியன் – குமாரன்.

511 அடல்விறல் – போர்வெற்றி. பால் – பகுதி (வேறுபட்ட பல இடங்கள் என்றபடி) நூல்பொரு – நூல்போன்ற.

கதுமெனச்சென் றெம்மிறையே தேவி என்றும்
கன்னியென்றும் நீபிரமச் சாரியென்றும்
வதியுமுல கெவையுமுற வருள்வீர் இன்றே
வாழ்வெமக்காம் பொருட்டுளத்தில்
மதித்தா னெந்தாய். 16

[தேவி தேவர்களைச் சபித்தல்]

513 என்றிரந்து வேண்டுமிமை யோருக் கண்ணல்
ஈந்தனனஞ் சற்கரமாங் கீதுகண்ட
குன்றவரை யன்மகள்தான் மறைந்து நின்று
கொடுசினங்கொண் டென்வயிற்றோர் குமரன் றோன்று
தின்றிதுசெய் திடுமரர் எவர்க்கும் மைந்தர்
இலராக வென்றுசபித் திட்டா ளெய்யன்
வென்றிதரு மமரரைப்பார்த் தெம்பா லுண்டாம்
வீரியத்தை யார்தரிப்பார் என்றான் விண்ணோர் 17

514 பூமியலாற் றரிப்பவர்வே றில்லை யென்றார்
பொள்ளெனவிட் டானிறைவன் பொங்கி வெப்பார்
தூமவன லாய்ப்பரந்து சுடஆற் றாளாய்த்
துய்யநில மகள்வெருவித் தொகும்விண் ணோர்பால்
ஆமொவெனக் கித்துயரென் றரற்ற விண்ணோர்
அண்ணலிவர் தித்தெமக்கிவ் வளலோ தந்தாய்
சேமநிதி யெனக்கண்ண ராருளால் முன்னஞ்
சிறுகிவர அதைமிதித்தான் தேவர் கோமான் 18

515 மூவிருதீ யின்பொறியாய்க் குறுகி அண்ணல்
முன்புபுகுந் தனவிவையை முறையிற் றாங்கிப்
பாவகனும் அகிலலுங்கங் கையிற்கொண் டுய்த்தார்
பகீரதிபின் சரவணத்திற் படுக்கு மாங்கு

---

512 கதுமென – விரைவாக. வதியும் – தங்கியுள்ள. மதித்து ஆன் எந்தாய் என்க.

513 அஞ்சற்கரம் – அபயாஸ்தம். தரிப்பர் – தாங்குவார்.

514 வெப்பார் – வெம்மை நிறைந்த. தூம அனல் – புகைசூழ்ந்த நெருப்பு. வெருவி – அஞ்சி. அரற்ற – அழுதுபுலம்ப. வந்தித்து – வணங்கி. கண்ணர் – முக்கண்ணர். தேவர்கோமான் – இந்திரன்.

மேவிலுடன் அவதரிப்பான் குமரன் யாரும்
மேவியதைச் சூழ்மினென விளம்ப நாதன்
தேவர்களே வலினிலன் அழலுந் தாங்கிச்
சேர்த்தனரப் பொறிகளே வானயிதிற் றேம்பி 19

516 அரிமுதல்விண் ணவரெவரும் மகிழ்ச்சி கூர்ந்திவ்
வனற்பொறியே அசுரர்கள்தங் கிளையைத் தீய்க்கும்
பெருநெருப்பாம் என்றுமனந் தேறிச் சற்றும்
பெயராது சேர்ந்துவைவேற் பிள்ளை வைக
விரிமலர்வெண் டாமரைநற் றவிச தாக
வியன்புனலிற் ருளொன்ருல் மிகநே ராக்குஞ்
சரவணத்திற் புகுமனலின் றிரளைச் சுற்றிச்
சதுமறைநற் றுதிகள்சொலிச் சார்வுற் ருரால் 20

[குமாரக் கடவுள் அவதரித்தல்]

517 அப்புனலிற் புகும்பொறியோ ருறு வெவ்வே
ருங்குழவி யுருவுகொடங் கருளி னலே
செப்பமுற வொன்றினெடொன் ருடிப் பாடித்
திருவிளையாட் டயர்ந்தனவச் செயலை வானோர்
மெய்ப்பரிவிற் கண்டனர்கண் களிகூர்ந் தன்பின்
விரைமலர்தூய்த் தொழுதிறைஞ்சி விருப்பி னேத்தி
இம்புதல்வர்ப் போற்றுமினும் முலைப் பாலூட்டி
என்றலுமின் களைவிடுத்தார் எய்தி யன்னர் 21

[இறைவன் இறைவியோடு சரவணத்தின் பாங்கு வருதல்]

518 எடுத்தனைத்துத் தம்முலைப்பா லூட்டிப் போற்ற
இளநகைசெய் தாடல்புரிந் தெவர்க்குங் காட்சி
கொடுத்தவண்ணை கியநாள்வெற் பரசி யோடும்
கூறுவன்பொன் மலைவளைத்த கோமான், மின்னே

---

515 பாவகன் – அக்கினி. அநிலன் – வாயுதேவன். பகீரதி – கங்கை. சரவணம் – சரவணப்பொய்கை. வானதி – ஆகாயகங்கை.

516 அரி – திருமால். கிளை – சுற்றம். தவிசு – இருக்கை. சதுமறை – நான்வேதம்.

517 பொறி – நெருப்புப்பொறி. மின்கள் – கார்த்திகைப் பெண்டிர்.

விடுப்பரிய சிவபுரத்தின் முன்பு போல
மேவவுடன் வருகவென விடைமேற் கொண்டு
தடுப்பரிய கணங்கள்புடை தழுவி யேத்தச்
சரவணத்தின் பாங்காகச் சார்ந்தா னன்றே 22

[தேவி குழவிகளைத் தழுவி எடுத்தல்]

519 அத்தடத்தின் மேவிவிளை யாடல் செய்யு
மாறுசிறு வருந்தந்தை யன்னை யோடும்
சித்தமுவந் துறுவதுகண் டழுதா ரிங்குச்
சேய்களழு குரலெதுநீ செப்பு கென்ன
முத்தனவெண் ணகையாய்நின் புதல்வ ராகும்
முறையினிழிந் திதுக்கவென மொழிந்தா னென்றன்
புத்திரரோ வெனத்தேவி சென்றே ராறு
புதல்வரையும் தழுவியெடுத்த ணைத்துப் புல்ல 23

[தேவி எடுத்தணைத்தலால் ஆறுமுகத்துடன் ஒருவடிவாதல்]

520 அறுவருமோ ருருவாகி முகங்க ளாறுய்
அங்கைகமலர் பன்னிரண்ட தாகி யையன்
மறுவறுசெம் பவளமணி வாய்க டோறும்
மணிமுலைவைத் தமுதருந்தி மகிழ்ச்சி காட்ட
முறுகியெழு மாதரவாற் கனிவாய் தோறும்
முத்தமிட்டு மார்பொடணைத் துச்சி மோந்து
பிரியமுடன் தேவிகொடு விடைமேற் கொள்ளப்
பிஞ்ஞகனும் மகிழ்ந்துபெருந் துறைக்க ணுற்றான் 24

[தேவியின் சிலம்பினின்றும் முருகவேளுக்குத் துணையாக
ஒன்பதுலட்சம் வீரர்கள் தோன்றி வளர்தல்]

521 மன்றல்வளர் குருந்திடத்தும் யோக பீட
மதுதனிலும் ஆந்துமநா யகரென் னுஞ்சீர்
ஒன்றுசிவ யோகநா யகித்தாய் என்றும்
உவந்திருந்தார் சண்முகங்கொண் டுற்ற கோவும்

---

518 வெற்பரசி – பார்வதி. பொன்மலை – மாமேரு. கோமான் – சிவபெருமான். மேவ – பொருந்திவாழ. புடை – பக்கம். பாங்கு – வழி.

519 தடம் – சரவணம். புல்ல – தழுவிக்கொள்ள.

520 முறுகி – கனிந்து. கொடு – கொண்டு. விடை – இடபவாகனம்.

வென்றிவீரா யாடல்புரிந் தன்னே தாளாம்
மென்மலர்நூ புரமணியின் பேத மாகச்
சென்றுவரு மனுசரொன்பா னிலக்க ரோடும்
திகழ்மலர்ச்சோ லைகள்நதிகள் குன்றந் தெற்றி 25

522 இவைமுதலாம் பலவிடங்கள் தோறு மாடல்
இயற்றிமகிழ் வுடன்கயிலை யெய்தி நீங்கா
நவைதரும்வேள் வித்தகரின் மீதி லேறி
நடத்தியும்நான் முகற்புடைத்துஞ் சிறையி லிட்டுப்
புவனமெவை யும்படைத்துந் தந்தை வேண்டப்
பூவனைவிட் டும்பிரண வத்தின் உண்மை
சிவபெருமான் றனக்குரைத்தும் மற்றும் ஆடல்
செய்துதிருக் கந்தமாத னத்திற் சேர்ந்தார் 26

[அறுசீர் ஆசிரிய விருத்தம்]

523 அரியயன் முதலாந் தேவர்
அனைவரும் அரன்பா லெய்தி
முருகவேள் தன்னை யெங்கள்
முதல்வனு யாக்கித் துன்பம்
தருதிற லசுரர் வெள்ளம்
தனையறுத் தெம்மைக் காக்கக்
கருணைசெய் யென்று சூழ்ந்து
கைகுவித் திரந்தா ரன்றே 27

[இறைவன் குமரவேளுக்கு ஆணையருளல்]

524 திருவுள மிரங்கிச் சத்தி
தனைத்திரு வேலாய் வேலை
யருகுற வழைத்து நல்கி
அன்பொடு நோக்கி ஐய!

---

521 நூபுரம் – சிலம்பு. அனுசர் – பின்பிறந்தவர் (தம்பியர்).
வேள்வித்தகர் – யாகத்திற்குரிய ஆட்டுக்கடா. பூவன் – பிரமன்.

522 அரன் – சிவன்.

பெருவலி யசுரர் தம்மை
வேரொடும் பெயர்த்துப் போக்கி
மருமலர்த் தருநா டெல்லாம்
வழங்குதி யமரர்க் கென்றான் 28

[முருகன் வீரபாகு முதலியவரோடு சூரசங்காரஞ் செய்யப் புறப்படல்]

525 சம்மதித் தயில்வேற் கந்தர்
தாதைதாள் தொழுது தாயின்
செம்மலர்ப் பாதம் போற்றிச்
சிறப்பொடும் விடைபெற் றின்பந்
தம்மைநேர் வீர வாகு
வாதியாந் தம்பி மாரோ
டெம்மையாள் இலக்கம் வீரர்
யாவரும் புடையிற் சூழ 29

526 தென்றிசை தன்னை நோக்கித்
திகழ்மணித் தேர்மீ தேறி
நின்றிடும் பொழுது பூத
நெடும்படை வெள்ளம் பொங்கி
மின்றிகழ் வேல்வாள் நேமி
முதலிய படைக ளேந்தி
வன்றிறல் தலைவ ரோடும்
வந்துசூழ்ந் தார்ந்து மொய்த்தார் 30

527 தேவர்கள் முதலோர் தத்தம்
ஊர்திக ளேறிச் செய்ய
பூவலர் பாகம் பொத்திப்
புடைவளைந் துவகை யோடு

---

524 வேலாய் – வேலாயுதமாக. வேனை – வேலவனை. மருமலர்த்தரு – கற்பகமரங்கள்.
525 அயில் – கூர்மை. தாதை – சிவபிரான்.
526 நேமி – சக்கரம். தலைவர் – வீரவாகுமுதலியோர்.

நாவினற் றுதிப்பப் பஞ்ச
துந்துபி நாதம் ஆர்ப்ப
மேவுபல் விருதி னேடும்
விரைவுடன் வந்து சூழ்ந்து 31

[கிரவுஞ்சத்தையும் தாருகன் முதலியோரையும் அழித்தல்]

528 ஆரவா ரத்தோ டேகி
யமர்விகா யாடல் செய்து
கோரவாய் பிளந்து மாயைக்
கொடுமைசெய் கிரவுஞ் சத்தை
தாருகா சுரனா யன்னோன்
தமர்களைக் கணத்திற் கொன்று
சீருறு கடல்சூழ் இன்பச்
செந்திலம் பதியில் வந்தே 32

[முருகவேள் செந்திலில் எழுந்தருளியிருத்தல்]

529 படைவீடு செய்து விண்ணோர்
பணிகுரு வாம்வி யாழி
நெடியமந் திரியை நோக்கி
நீயெமக் கரசர் செய்கை
தடையறப் புகலென் றோதச்
சரவண பவனைப் போற்றிப்
புடையமர்ந் திருந்து சூரன்
போந்தவா றுரைக்க லுற்றான் 33

[வியாழன் சூரபதுமன் முதலியோர் வரலாறு கூறுதல்]

530 மாயையென் றிருபேர் கொண்டு
மயக்குமோ ரசுரி முன்னாள்
போயவள் ஒருவாம் மிக்க
புகர்தனைப் போற்றி நின்று

---

528 அமர் – போர். கிரவுஞ்சம் – கிரவுஞ்சமலை.

529 படைவீடு – பாசறை. தடை – ஐயம்.

சேயெனக் கண்ட மாளும்
திறமுடன் பெறுமா றுண்மை
நீயுரை எனலும் வெள்ளி
நிகர்ந்தவட் குபதே சிப்பான் 34

[மாயை காசிபனிடம் செல்லுதல்]

531 தவஞ்செய்கா சிபனி டத்திற்
சார்ந்தொரு கன்னி யாய்நின்
றுவந்துடன் மயங்கி யேங்கின்
றுனைவிரும் பிடம ருட்டி
யவன்றனைப் புணர்ந்தால் நீகேட்
டதுவரு மென்று சொல்லப்
பவந்தரு மதிக மோகப்
படிவொடு மாயை என்பாள் 35

[சூரபதுமன் சிங்கமுகன் கயமுகன் அசமுகி இவர்களின் பிறப்பு]

532 காசிப முனியை முற்சா
மத்தினிற் கலந்து கூடி
ஏசறு சூரன் றன்னை
யீன்றுபின் யாமம் முன்றில்
ஆசகல் சீயம் யானை
அசவுரு வாகிச் சேர்ந்து
பேசுமம் முகங்க ளோடு
பெண்ணைன் ருணிரண்டு பெற்றாள் 36

[சூரன் சிவனை நோக்கித் தவம்புரிதல்]

533 வேர்வையி லனேக கோடி
வெந்திற லசுரர் தோன்ற
ஏர்வளர் சூரன் அந்நாள்
எழிற்குல குருவின் சொல்லால்

---

530 புகர் - சுக்கிரகுரு. சேய் - மகன். வெள்ளி - சுக்கிரன்.
531 மருட்டி - மயக்கி. கேட்டது : அண்டங்களை எல்லாம் ஆளும் ஒரு மகனை. பவம் - பாவம். படிவம் - வடிவம்.
532 சீயம் - சிங்கம். அசவுரு - ஆட்டு வடிவம்.

சார்வுறு மேருச் சாயை
தன்னிலோர் யாகஞ் செய்து
போர்வையாக் கயத்தோல் கொண்டோன்
போந்தருள் செயாத தெண்ணி 37

[சிங்கமுகனுக்குச் சிவன் காட்சிதரல்]

534 மூவெரி தன்னில் வீழ்ந்து
முடிந்துநீ ருகக் கண்டு
கோளரி முகத்துத் தம்பி
கோளுடம் புறுப்பைக் கொய்து
நீளுமக் குண்டத் திட்டு
நிகேக்கும்போ தரன்முன் நின்று
கீளுரு வரங்கள் கேளென்
றுரைத்திடக் கேட்பான் சிங்கன். 38

[சிங்கமுகன் வரம் வேண்டுதல்]

535 அண்ணலும் சூர னுய்ந்திங்
கனலினின் றெழுந்து கேட்ட
வண்ணநல் வரங்க ளெல்லாம்
வழங்கிட வேண்டு மென்னக்
கண்ணுதல் அவன்சொல் வார்த்தை
கடந்திடா வாறு செய்யப்
பண்ணவர் வெருவச் சூர
பதுமனங் கெழுந்து கேட்பான். 39

[இறைவன் பதுமன் கேட்ட வரங்களை அருள்தல்]

536 ஆயிரத் தெட்டாம் அண்டத்
தரசனு யிருந்தாள் வேண்டும்
ஏயுமவ் வரசுக் குள்ளாய்
அங்கமு மியைய வேண்டும்

---

533 குலகுரு – சுக்கிராச்சாரி. போர்வையாக் கயத்தோல் கொண்டோன்– சிவபெருமான் (கயம் – யானை).

534 எரி – நெருப்பு. கீறு – சாம்பல். கோளரிமுகத்துத்தம்பி – சிங்கமுகாசுரன்.

535 பண்ணவர் – தேவர்கள். வெருவ – அஞ்ச.

நேயமோ டருள்செய் யென்று
நிமலனை வணங்கத் தந்தோம்
தோயும்நன் நெறிதப் பாமற்
சுகமொடு வாழ்ந்தி ரென்று 40

[சூரனின் ஆட்சி நிலை]

537 போயினன் கயிலை தன்னிற்
போனபின் சூர னந்த
ஆயிரத் தோரெட் டண்டத்
ததிபனாய் நெறிவிட் டும்பர்
சாயுமா றடர்ந்து பற்றிச்
சயந்தனைச் சிறையி லிட்டுப்
பாயும்நீர் சூழ்ம யேந்திர
பட்டினத் திருந்தா னன்னேன். 41

[தேவர்கள் குமரவேளிடம் வேண்டுதல்]

538 தம்பியாய் வந்த தாரு
காசுரன் றனக்கக் கஞ்சி
உம்பர்கள் யாரும் மிக்க
சிவபுரத் தொளித்து மேவி
நம்பனைப் பூசை யாற்றும்
நலத்தினு லிரங்கி நாதன்
இம்பரி லுன்னை யெங்கட்
குயிரென ஈயப் பெற்றோம். 42

539 தாருகன் றுயரந் தீர்ந்தோம்
சரவணத் துதித்த கோவே
சூரனை யினிமேல் வென்றெந்
துயரெலாந் தீர்ப்பாய் என்று

---

536 அங்கம் - படை குடி கூழ் முதலிய அரச அங்கங்கள்.

537 நெறிவிட்டு - அறநெறியைக் கைவிட்டு. உம்பர் - தேவர். சயந்தன் - இந்திரன் மகன்.

538 நம்பன் - சிவபிரான். இரங்கி - தண்ணளிசெய்து.

சீரொடுந் தேவ ராசன்
செப்பினன் செவ்வேள் கேளாப்
பாரிடர் தீர்க்கும் வீர
பாகுவை பார்த்துச் சொல்வான். 43

[குமரவேள் வீரவாகுவைத் தூதுவிடல்]

540 அசுரர்கோ வாகும் சூரன்
அமரிடந் தன்னிற் சென்று
சசிபுணர் மகவான் பெற்ற
சயந்தனைச் சிறைவிட் டிங்கே
யிசைவொடு மனுப்பென் றோர்சொல்
இயம்பவன் விடேனென் றனேல்
விசையமோ டிங்கு வாவென்
றனுப்பினன் ; வீர வாகு 44

[கலிவிருத்தம்]

[வீரவாகு கடல்கடந்து மயேந்திரபுரி சேறல்]

541 சண்மு கப்பிரான் தாள்தொழு தக்கணம்
உண்ம கிழ்ச்சியோ டோரிமைப் போழ்தினில்
மண்ம கட்குடை யாகிய வாரியைத்
தண்மை யுற்றவின் னோர்தொழத் தாண்டினன். 45

[வீரவாகு காவல் வீரர்களை அழித்தல்]

542 மாம யேந்திர மாநகர்க் கோபுரச்
சேம வாயிலிற் சேர்ந்த நிசாசரர்
தும மேவுகண் ணர்பலர் துஞ்சிட
நாம வேற்குமுன் னட்பலி யூட்டினன். 46

---

589 தேவராசன் – இந்திரன். பாரிடர் – உலகின் துன்பம்.

540 அமரிடம் – வாழுமிடம். சசி – இந்திராணி. மகவான் – இந்திரன். விசையம் – வெற்றி.

541 வாரி – கடல்.

542 சேமம் – காவல். நிசாசரர் – அசுரர். தூமமேவு கண்ணர் – புகையெழும் கண்களையுடைய அசுரர். நாம வேல் – அச்சம் பொருந்திய வேல்.

[மாடமாளிகைகளைக் காலால் அழித்தல்]

543 மறுகு தோறுமு லாவி மறித்திடும்
தறுக ணிர்பலர் பொன்றிடச் சாடியுட்
பருவ தங்களை யொத்தபன் மாளிகை
விறல்கொள் தாளின் மிதித்தழித் தப்புறம் 47

544 சென்று சூரன் இருக்குந் திரண்மணிக்
குன்று போலுயர் கோயிலி னுட்புகுந்
தொன்று பன்மணி யாசனத் தோகையோ
டன்ற வன்கொலு வருதலைக் கண்டனன். 48

[வீரவாகு சூரன்முன் மாயா ஆசனத்தில் அமர்ந்து கூறல்]

545 காணு முன்னர்க் கடிதிலோ ராசனம்
தாணு வின்மகன் ஏவலிற் சார்ந்திட
மாணு றும்வீர வாகதின் மீதிருந்
தேணி லாவவன் கேட்க வியம்புவான் 49

546 அறுமு கேசன் அனுப்பிய தூதன்யான்
உறுதி கூறிநீ உய்ந்திட வந்தனன்
சிறையி விட்டிடுந் தேவரை விட்டுவந்
திறைவர் தாள்தொழு தாலுய்வை யில்லையேல் 50

547 தாரு கன்னுட லூத்தறித் திட்டவேல்
சூர னுன்னுடல் தன்னையுந் துண்டுசெய்
தோரு முன்கிளை முற்றும றுத்திடும்
தேரு முன்கருத் தொன்கொல்நீ செப்பென. 51

---

543 மறுகு – வீதி. பொன்றிட – இறந்திட. சாடி – அழித்து.
544 ஓகை – உவகை. கொலு – அரசவை மண்டபம்.
545 தாணு – சிவபெருமான். மான் – மாண்பு. ஏண் – பெருமை.
547 ஓரும் – அசைமொழி. தேரும் – ஆராய்ந்த.

[சூரன் வெகுண்டுரைத்தல்]

548 வீர வாகு விளம்புசொற் கேட்டலும்
ஆர டாவிவன் அஞ்சுத லின்றிவந்
தோர டாமொழி சொல்லி யுலுக்கினன்
போரொ ணுமற் பிடிமினி ரென்றனன். 52

[தன்னைப் பிடிக்கவந்த அசுரர்களை வீரவாகு வெட்டிச் சாய்த்தல்]

549 சூரன் சொல்லுமுன் சுற்றினும் நின்றவர்
ஆர வாரித் தடர்ந்து பிடித்தலும்
பாரின் மீதவர் பட்டுவி ழும்படி
வீர வாள்கொடு வெட்டி யெறிந்தனன் 53

550 மைந்த ரிற்சிலர் தம்மையு மாய்த்தெதிர்
தந்தி ரப்படை யாவையும் சாய்த்துவந்
திந்து வைப்புனை வோன்மக னெய்திய
செந்தில் நற்பதி சேர்ந்துசெவ் வேள்முனம். 54

[வீரவாகு குமரவேளிடம் கூறுவது]

551 பாத பங்கயம் வீழ்ந்து பணிந்தெழுந்
தோது நன்றியொன் றேனுமில் சூரனுன்
போதந் தோய்மொழி கேட்டிலன் புங்கவர்
ஏதந் தீர வெழுந்தருள் என்றலும் 55

[முருகவேள் சூரனை வெல்லப் புறப்படல்]

552 மால யன்மக வான்முதற் றேவரும்
பால நீற்றொளிப் பாரிடச் சேனையும்
வேலு லாவுகை வீரரும் சூழ்ந்திட
ஓலம ருதகூ ரூர்போய்ச் சூழ்ந்ததில் 56

---

548 அடாமொழி – பொருந்தாதசொல். போரொணுமல் – போரிட்டுக் கொல்லாமல்.

550 இந்துவைப்புனைவோன் – பிறைச் சந்திரனை அணிந்தவன் (சிவன்).

551 போதந்தோய்மொழி – அறிவார்ந்த நன்மொழி. புங்கவர் – தேவர்கள். ஏதம் – துன்பம்.

552 பாலம் – நெற்றி. ஓலம் – ஆரவாரம். சூர் – சூரபன்மன்.

[சிங்கமுகனையும் பானுகோபனையும் அழித்தல்]

553 பந்தி பந்தியாய் வந்தமர் செய்திடும்
அந்த மில்லா வசுரர்கள் யாரையும்
சிந்த மோதிவன் சிங்க முகத்தனை
மைந்த னும்பானு கோபனை மாய்த்தனன். 57

[சூரனுடன் போரிடல்]

554 ஆறு நாள்மட் டளவகல் மாயையோ
டூறி லாவமர் செய்திழைத் தெய்த் தொளித்
தூறு நீர்க்கடற் குட்புகுந் துற்றெரு
மீறு மாமர மாயினன் வேலினல். 58

[சூரனுகிய மாவினை இருகூருகப் பிளந்து சேவலுமயிலுமாக
ஆக்கிக்கொள்ளுதல்]

555 துங்க மேவுமச் சூரெனும் மாவினைப்
பங்கி ரண்டு படவெறிந் தொன்றைநற்
செங்கை யிற்கொடிச் சேவலாத் தாங்கியொன்
றங்கு நன்மயி லாயிட வேறியே. 59

[தேவரைச் சிறைமீட்டருளல்]

556 மேவு தேவர் சிறையினை மீட்டுநற்
றேவர் சேனை பதியுமாய்ச் சேய்மகிழ்ந்
தாவ லோடும் பெருந்துறை யப்பர்தம்
பூவ டித்தலம் போற்றும் விருப்பொடும் 60

557 வந்து கண்டு வணங்கி மகிழ்ச்சியோ
டந்த மில்லா வருள்பெற் றிருந்துடன்
இந்தி ரன்முதல் யாவரும் நும்பதி
சிந்தை வேறின்றிச் சேர்மினிர் என்றலும் 61

---

558 பந்தி – வரிசை. சிந்த – அழிய. எய்த்து – இளைத்து.

554 மாயை – வஞ்சனை. மீறு – ஆற்றல்மிகுந்த.

555 துங்கம் – சிறப்பு. ஏறி – ஊர்தியாகக்கொண்டு ஏறி.

556 சேய் – முருகக்கடவுள். பூவடி – மலர்ப்பாதங்கள்.

[முருகப்பிரானே தேவர்கள் துதித்துப்போற்றுதல்]

558 கந்த நாயக போற்றி கடம்பணி
மைந்த சண்முக போற்றிவன் சூர்கிளை
சிந்த வேல்விடு சேவக போற்றியெம்
எந்தை போற்றியென் றேத்தி யிறைஞ்சியே. 62

559 விடைபெற் றும்பர்பின் மேயவர் முன்கொடுத்
திடர்முற் றுந்தவிர்த் தாள்குருந் தீசர்பொன்
னடியி னுக்கவர் தூய்த்தொழு தன்பொடுந்
தடையற் றேத்தியெம் மாற்றருந் தண்புனல் 63

560 மேன்மை சேர்வகை செய்யென விண்ணவர்
பான்மை சேரும் முனிவர ரும்பரி
வான்மொ ழிந்திட வள்ள லயன்முகந்
தான்றெ ரிந்தது தந்தனம் யாரையும் 64

561 தங்கள் தம்பதி யிற்புகச் சாற்றினைத்
துங்க வானவர் யாருந்தொ முதுடன்
பொங்கு தம்பதி புக்கனர் மன்னகேள்
இங்கி யம்பிய விச்சரி தந்தனை 65

[இச்சருக்கத்தை ஓதுவார் உறுபயன் கூறல்]

562 காதிற் கொள்பவர் காதலோ டோதுவார்
மீதுவ ராவினைப் பகை, சந்ததி
தீதி லாதநற் செல்வமு மேய்ந்துபின்
மாது பாகன் மலரடி சேர்குவார். 66

[கலியாணம் குமாரர் அவதாரம் சூர சங்காரச் சருக்கம் முற்றும்]

---

559 எம்மாற்றரும்புனல் – தேவர்கள் இறைவனை வழிபட உண்டாக்கிய தேவதீர்த்தம். வள்ளல் – குருந்தீசர்.

தேவதீர்த்தச் சருக்கம்

[ஏழுசீர் விருத்தம்]

[தேவதீர்த்தத்தின் மாண்பினைப் புரூரவன் கேட்கத் தவுமியர் கூறல்]

563 தீதிலா மறைநூற் றிறம்பல வுபதே
சித்ததே சிகசிகா மணியே
ஓதிய விமையோ ராலுள தாக்கும்
உதகமெவ் விடையதன் நலமென் ?
போதமுற் றுணர வருள்கென, முகமும்
புந்தியு மிகமலர்ந் தவனி
நாதநீ கேளென் றதன்வள முரைக்க
நற்றவர்க் கரசன்மே யினனால். 1

[தேவதீர்த்தப் பெயர்க்காரணம் கூறுகிறார்]

564 தேற்றமி லசுரர்க் கஞ்சிவிண் ணவர்கள்
திருப்பெருந் துறைநகர்ச் சேர்ந்து
நோற்றவ ணுறைகா லவர்கள்செய் ததனால்
நுவலுவர் தேவதீர்த் தமதென்
றேற்றுவர் கண்ணே டிமையவர் ஆம்பேர்
ஏல்வையின் மூழ்கினர்க் கிருநூல்
சாற்றுமா பாத கங்களோ டுறுபா
தகமதி பாதக மெவையும். 2

[இத்தீர்த்தத்தில் மூழ்கினோர் எய்தும் பயன்கள்]

565 தழல்முனர்ப் பஞ்சின் அழித்துன தருளும்
தந்திடென் றுரைத்திடக் கடற்பால்
மழவிலுக் களித்தோன் அருள்செயப் பெற்ற
மகிமையுற் றிடுமது குருந்துக்

---

563 உதகம் – தீர்த்தம். எவ்விடை – எவ்விடத்தில் உளது, அவனிநாத – பூமிக்கு அரசனே.

564 தேற்றம் – தெளிவு. உறைகால் – தங்கியிருந்த காலத்தில். ஏல்வையின் – தடாகத்தில். பாதகம் – பாவம்.

கெழில்வளர் தென்பால் கருநெலி நாப்பண்
இருள்வளர் பொழில்கள்சூழ்ந் திலங்கும்
தொழுபுன லதனை நினைந்திடிற் காணிற்
றுய்த்திடிற் றுயரெலா மொழியும். 3

566 சென்றதின் மூழ்கப் பெறினுடல் நூறு
சென்னனத்திற் புரிபவந் தீரும்
பொன்றிகழ் சுவர்க்க வாசிகள் மகிழ்வார்
புண்ணிய தினங்களிற் படிந்தால்
கொன்றைவே ணியன்றன் உருவமே யாவர்
கோதகல் பிதிர்க்கட னியற்றின்
நன்றவன் பிதிர்கள் வழிமுறை யொருநூ
றமலன்வா ழுலகுபெற் றமர்வார். 4

567 நரைதிரை மூப்பு நணுகிடா நானம்
நண்ணினோற் கப்புனற் பெருமை
உரையினுக் கடங்கா வதனிடை மூழ்கி
உறுவன்வான் மீகியென் றுரைப்போன்
பிரமன்வாய் மொழியால் இராகவன் சரிதம்
பேசினன் இறப்பிலா திருந்தான்
நிருபனே யெனுமத் தமிழியர்த் தொழுது
நிகழ்த்துமம் முனிவரன் யாவன் 5

[வான்மீகியின் வரலாறு கூறுதல்]

568 கஞ்சனவ விருடிக் கதைமொழி கெனச்சொல்
காரண மேதவை முழுதும்
எஞ்சிடா தருள்நீ செய்கென மகிழ்வுற்
றியம்புவ னம்முனி வரனும்

---

565 கடற்பால் - பாற்கடல். மழவு - அபிமன்யு முனிவர். அவித்தோன் - சிவன். கருநெலி - கருநெல்லி மரங்கள்.

566 கோது - குற்றம்.

567 நானம் - ஸ்நானம் (தலைமுழுகுதல்). உறுவன் - மிக்கவன். இராகவன் சரிதம் - இராமன் வரலாறு (இராமாயணம்).

அஞ்சுநீள் கானந் தனிற்றினஞ் சரிப்பன்
அருங்கலை நூன்மதி யறியான்
தஞ்சனுய்த் திரியும் காலைமுற் றவத்தால்
சார்ந்தனன் குந்தமா வனத்தில். 6

569 வந்தவான் மீகி தேவநீர் படிந்து
வளர்குருந் தீசரை வணங்க
அந்தநன் னலத்தால் பல்கலை யெவைக்கும்
ஆகர மிவனென வமைந்தான்
முந்துணர் வுதித்த துளத்தி லப்பொழுது
முகுந்தனே இராகவ னுக
அந்தமி லரசு புரிதருங் காலம்
அவன்சரி தஞ்சுர ருலகின் 7

[பிரமன் வான்மீகியைத் தேடி அடைதல்]

570 கிரந்தமோர் நூறு கோடிய தாகக்
கெழுமிய வவையுணர்ந் தலர்மேல்
வரன்றறை யினுமெப் பொழுதினும் விளங்க
வைக்கவேண் டிடுமதை யதனுக்
குரந்தரு புருட னியாவனிவ் வுலகில்
உளனென ஓர்ந்தெவ ரினுமிக்
கிருந்தவன் ஆவான் உறுவன்வான் மீகி
யென்றவன் றன்னிடை யெதிர்ந்தான். 8

[வான்மீகி பிரமனைக்கண்டு வணங்கி மகிழ்தல்]

571 பொன்னிறக் கடவுள் தன்முனந் தோன்றும்
பொலிவுகண் டெழுந்துவீழ்ந் திறைஞ்சித்
தன்வச மகலப் புளகமீ தெழநீர்த்
தாரைகள் விழிதர விருகை

---

568 கஞ்சன் – (தாமரை மலரில் உதித்த) பிரமன். சரிப்பான் – திரிவான் தஞ்சனுய் – மிக எளியனுய்.
569 ஆகரம் – கடல். முகுந்தன் – திருமால்.
570 அலர்மேல்வரன் – பிரமன். ஓர்ந்து – சிந்தித்து.

சென்னிமேற் ருங்கி மறைமுத லெனலாந்
திசைமுகத் தண்ணல்நிற் காண
என்னமா தவம்யான் இயற்றினன் முனமென்
றியம்பிவாய் குழறிநின் றிசைத்தே 9

572 குரவணைத் தனதா சிரமத்தி னகவை
கொண்டுசென் ருசனத் திருத்தி
உரியபூ சனைகள் பலவுநன் கியற்றி
உவப்புடன் நின்றுதோத் திரத்தாற்
பரவும்வான் மீகி யறிவுகண் டுவந்துன்
பாலொன்று கருதிவந் தனமென்
றருமறைக் கிழவன் மொழிந்தன னென்பால்
ஆவதென் அண்ணலே என்ருன். 10

[பிரமன் வான்மீகியிடம் இராமகாவியம் செய்யக் கூறுதல்]

573 தானவக் கூளையைக் கட்டறப் பைங்கூழ்
தனைவளர்த் திடக்கருங் கொண்டல்
போனிறத் தையன் தசரதன் றனக்குப்
புதல்வனென் றவதரித் திந்த
மானில மதனிற் புரிசெய லெவரும்
மதித்தறிந் திடப்பல பலநன்
ஞானலந் தெரியுன் வாக்கிணு லதனை
நுவலுதி காவிய முறையால். 11

[வான்மீகி அச்சத்தோடு வினவல்]

574 என்றலும் முனிவன் அனந்தரா யிரவர்
எண்ணருங் காலமோ திடினும்
துன்றிய புகழ்சேர் இராகவ சரிதம்
சொற்றிட முற்றுமா குவதோ

---

571 பொன்னிறக் கடவுள் – பிரமன். புளகம் – மயிர்ச்சிலிர்ப்பு.

572 அகவை – அகம். பரவும் – வழிபடும்.

573 தானவக்கூளை – அசுரர்களாகிய கூளைகளை. கட்டு – கூளைந்து அறப்பைங்கூழ் – தேவர்களாகிய பயிர்களை, கருங்கொண்டல்போல் – மேகம்போல். ஐயன் – திருமால்.

ஒன்றிய கேள்வி கல்வியி லெனையும்
ஓதுதி யதனையென் றுரைத்தல்
நன்றுன தேவல் மறுக்கவஞ் சுவனென்
னல்முடி வாகுமோ வென்றான். 12

[உன்னல்தான் முடியுமெனப் பிரமன் கூறுதல்]

575 ஆவதுன் றன்ன லன்றிமற் றொருவ
ராலரி தென்றருந் தவன்றன்
நாவினற் கலிமான் றனைமகிழ்ந் திருத்தி
நான்முகன் றன்னுல கடைந்தான்
பூவுல குடையோர் தவப்பய னெனலாம்
புனிதனு மிராகவன் செயலைக்
காவிய மாக்க நினைத்தன னுதித்த
கருத்தினிற் கதைவிரி வையும் 13

[வான்மீகி இராமகாவியம் செய்ததையும் அதை உணர்வோரெய்தும் பயனும் கூறுதல்]

576 மறைமுத லருளால் வாணிநா விருத்தும்
மகிமைசேர் தேவநீர் வளத்தால்
அறைதரும் தடையி லாக்கவித் துவமாம்
அமுதினுல் நிறைமுனி மேகம்
இறையிரா கவன்றன் சரிதையைப் பொழிந்த
தெவ்வுயிர் களுமிகத் தழைக்க
நிறைகதை யதுதேர்ந் துணருவோ ரெவரும்
நீந்துவர் சென்னவா ரிதியே. 14

---

574 அனந்தர் – ஆதிசேடர்கள். துன்றிய – நிறைந்த.

575 கலிமான் – நாமகள். புனிதன் – வான்மீகி.

576 மறைமுதல் – இறைவன். தேவநீர் – தேவதீர்த்தம். சென்னவாரிதி – பிறவிக்கடல்.

577 நினைத்தநல் வரங்கள் எய்துவர் பிதிர்கள்
நிறுத்துவர் சந்ததி விருத்தி
மனத்துய ரகன்று சாந்தமே யடைவர்
வானவர் தீர்த்தநன் மகிமை
அனைத்தையும் உரைத்தோம் அப்புனற் பெருமை
அறைந்துளோர் கேட்டுளோ ரவர்செய்
வினைக்கரி சகற்றிச் சிவபுரம் புகுவார்
வேண்டினுண் டாகும்விண் ணுலகே. 15

[தேவதீர்த்தச் சருக்கம் முற்றும்]



577 அறைந்துளோர் - கூறுபவர். கரிசு - குற்றம். விண்ணுலகு - வீடுபேறு.

இருடிகள் தீர்த்தச் சருக்கம்

[கலி விருத்தம் – சந்தம்]

[இருடி தீர்த்தம் அமைந்துள்ள இடம்]

578 இறைவர்க்கர சேகேளிரு
டிகள்தீர் தமென் றெருநீர்
குறைவற்றெழு குருந்திற்குவங்
கூழ்மூலியி லிலேயேழ்
அறமொய்த்தக ருப்பூரவ
ரம்பைப்புனம் நடுவே
நிறைபெற்றதண் ணளியோடது
நின்றேங்குவ தென்றும். 1

[இத்தீர்த்தத்தின் பெருமையும் இதில் மூழ்கிய ஓர் எருமை முத்தியடைந்த வரலாறும் கூறுதல்]

579 அந்நீரிடை மூழ்கிற்பெற
லாகுஞ்சிவ ஞானம்
முன்னைறு பவம்வெங்கதிர்
முன்னம்மிரு ளிற்போம்
எந்நாளினும் நலமேயுற
வேற்றும்முயர் கதியின்
வன்னசிரமம் நீங்கின்ன
வர்க்குந் தரும்வானம் 2

---

578 இறைவர்க்கரசே – அரசர்க்கரசனே. வங்கூழ் – காற்று (வாயு மூலியில் என்றபடி). அரம்பை – வாழை.

579 முன்னைறுபவம் – பழவினைகள். இருளிற்போம் – இருள்போதல் போலப்போகும். வன்னசிரமம் – வர்ணசிரம ஒழுக்கம். வானம் – வீடுபேறு.

580 அறிவற்றவன் மிருகாதியு
மதுதுய்த்திடி லறிவு
செறிவுற்றிடும் பிதிர்க்காரியம்
செய்தாலதன் கரையில்
உறமுற்புரி பவமற்றவர்
உயர்வானடை குவரால்
மறுவற்றுயர் மதிபெற்றதொர்
மயிடம் அதின்என்ன. 3

[புரூரவன் அந்த எருமையின் வரலாறுகூற வேண்டுதல்]

581 ஒருமேதிமு னென்செய்ததங்
குறுகாரண மேதத்
திருநீர்படி தருமோதுறு
செயல்யாதவை முழுதும்
அருணீயென முகமன்சொலி
யரசன்பகர் தலுமே
தருமாதவ னவையாவையும்
சாற்றப்புகு கின்றுன். 4

[முனிவன் எருமையின் வரலாறு கூறல்]

582 ஆசின்றெளிர் திருமாமக
ளகம்வைத்துறை கின்ற
வாசந்தரும் மரையாசனம்
அதுபோலும்வி ராட
தேசந்தனில் மறைவேதியர்
திரள்நாடொறு மருவி
நேசந்தரு மோரூர்தனில்
பெயர்மாணிந் தனமாம். 5

---

580 வன்மிருகாதியும் – வலிய விலங்குகளும். மதி – மதிப்பு (சிறப்பு) மயிடம் – எருமை.

581 மேதி – எருமை. திருநீர் – இருடிதீர்த்தம்.

582 ஆசின்றெளிர் – குற்றமற வீளங்கும். மரையாசனம் – தாமரை மலராகிய இருக்கை. மாணிந்தனம் – மாண்புடைய இந்தனம் என்னும் ஊர்.

583 அந்தப்பதி யின்வாழ்மறை
யவனேர்வயி ணவன்முன்
சந்தப்பல நூல்கற்றவன்
சடகோபன வன்பேர்
இந்தப்புவி யில்கல்வியி
லிணையாரெனக் கென்பான்
நிந்தைக்கெரு வித்தீக்குணன்
நீங்கான்மனத் தழுக்கும் 6

584 சிவபத்தரென் றுல்நிந்தனை
செய்யாதிருந் தறியான்
அவசத்தமொர் கணமாயினும்
அறையாமலி ரான்றன்
பவமுற்றிடு நியதித்தொழில்
பண்ணைனெரு நாளும்
உவமித்திட வொருபாவியும்
ஒவ்வாக்கொடி யோனே 7

585 கருமாவென மிதுசந்ததி
கனையீன்றனன் மிடியான்
ஒருவாமலி னந்தன்னினும்
ஊணுக்கிட மின்றிப்
பெருகார்வமொ டயலூரினும்
பேராதுழல் கிற்பான்
மருவாரிலர் கொடும்பாதகன்
தனகேவல்செய் வாரே 8

---

588 வயினவன் – திருமால் நெறியினன். கெருவி – கர்வமுடையவன்.
தீக்குணன் – தீய குணமுடையவன்.

584 அவசத்தம் – பொல்லாத பேச்சுக்கள். அறையாமல் – பேசாமல்.
பவம் – பிறப்பு. நியதி – தருமம். உவமமில்லாத பாவி என்றபடி.

585 கருமா – பன்றி. மிடியன் – வறுமையாளன். இனம் – சுற்றம்.

586 இவ்வூரர்கொ டார்சென்றினி
யெங்கேனுமி ரந்து
மைவாள்விழி வருவேனென
மனைவிக்குரை செய்தே
செவ்வேபல தேசங்களி
றந்தேசட கோபன்
வெவ்வேல்கவ ரியனுடுவி
ரும்பிப்படர் கின்ருன் 9

587 அருங்கானகம் நடுவேதனி
அவனேகிய காலைப்
பெருந்தாகமும் பசியும்மலர்
பெருமாமய லுற்றுப்
பொருந்தாநடை யினையினிப்
போக்கெங்கென வயர்வோ
டிருந்தோர்ந்தன னப்போதயல்
எட்கொல்லைகண் டனனே 10

588 திலதம்பலித் திருக்கின்றது
தின்ருற்பசி போமென்
றுலையும்மனந் தனிலுன்னியங்
குற்ருன்சிறு நடைகொண்
டிலகும்பல எட்டூர்பறித்
திடையாடைவி ரித்தே
தலைகீழுற வுதறித்திலந்
தனைவாரியெ டுத்தே 11

---

586 இறந்து – கடந்து. கவரியனுடு – பாண்டியநாடு. படர்கின்ருன் – சென்றனுந்தன்.

587 அளப்பெருமாமயல் – மிகும் பெரியதுன்பம். எட்கொல்லை – எள்ளுச் செடிகள் விளைந்துள்ள கொல்லை.

588 திலம் – எள்ளு. பலித்திருக்கின்றது – விளைந்துள்ளது. உலையும் – துன்புறும். உன்னி – நினைத்து. எட்டூர்பறித்து – எள்ளினைத் தூரோடு பறித்து.

589 தின்ரூன்வயி றடையப்பசி
தீரப்புனல் வேட்கைக்
கென்ரூன்செய என்றேயவன்
எங்குந்துரு வுங்கால்
ஒன்ரூவறற் கயமொன்றுகண்
டுண்டானுள மகிழத்
தன்ரூழ்வினை நினையானற
பகல்மேற்கடல் சார்ந்தான் 12

590 வழிவந்தவி னூப்பாலுமெய்
மயல்மீறுத லாலும்
கழியும்பக லாலூர்த்துணை
காணுதல னலும்
விழிகண்டுசெல் வழியுந்தெரி
விலனுகையி னலும்
பழிதங்கிய சடகோபனெட்
படப்பைக்கு ளிருந்தான் 13

[சடகோபன் பொருந்தா உண்டியால் இறத்தல்]

591 ஊணற்றுட லோட்டற்றதி
னுதகத்தினை டெண்சால்
காணந்தின விற்பேதிக
ணக்கற்றெழ நிசியில்
மாணற்றபுன் மறையோனெரு
வருமின்றிம யக்கால்
ஏணற்றுயிர் போனன்வனம்
எங்கும்புரள் வுற்றே 14

---

589 வயிறடைய – வயிறுநிரம்ப. துருவுங்கால் – ஆராயும்பொழுது. அறற்கயம் – நீருள்ள குளம். பகல் – சூரியன். எட்படப்பை – என் வினைத்துள்ள தோட்டம்.

591 ஓட்டற்றதினுதகம் – நீரோட்டமில்லாமல் தேங்கியிருந்த குளத்துநீர். எண்சால் – பெரிய அளவில். காணந்தினவின் – என்னைத் தின்றதனால். பேதி – வயிற்றுப்போக்கு. நிசி – இரவு. மாண் – மாண்பு (பெருமை) ஏண் – பெருமை (இங்கே காவல் என்னும் பொருளில் நின்றது.

[அவன் பேய்வடிவுற்றுத் திரிதலும் ஈசுகர்தியுள் துன்புறலும்]

592 தகனுதிக ளில்லாதத
னலும்தவ ருலும்
அகலாதுட னேபேய்வடி
வாகித்துயர் தீர
வெகுகாலமு லகந்தந்தகன்
மிகுதண்டனை பலபெற்
றிகலாகுபுன் னரகாதிக
ளெல்லாம்நுழை வுற்றே 15

[சடகோபன் மயிடமாகப் பிறந்து ஏரிமூத்தல்]

593 மாருதபுன் கண்ணேடொரு
மனுகாலமுள் ளளவும்
ஏருதுகிடந் தன்னியன்
எட்டின்ற பவத்தாற்
றேருதுகி டாவென்றுசெ
னித்தானவ னுந்தான்
வேருய்நினை யாதேவுழ
வேண்டிப்புகு கின்றான் 16

594 இதனுக்கினை யில்லென்றுள
மேமாந்தன னுழவில்
அதனைப்பிணித் துக்கோலின்
அதட்டிச்சகு னத்தில்

---

592 தகனுதி – ஈமச்சடங்கு முதலியவை. தவறு – பாவச்செயல். உலைந்து – வருந்தி. அந்தகன் – யமன். இகல் – வருத்தம்.

598 புன்கண் – பெருந்துயர். மனுகாலம் – அண்டகோசச் சருக்கத்தில் காண்க. எட்டின்றபவத்தால் – (பிறர்) எள்னைத் தின்ற பாவத்தால். கிடா – எருமை. செனித்தான் – பிறந்தான். அவன் என்றது ஏட்கொல்லிக்குரியவனை.

உதிரப்புனல் காலப்பணி
யுழுதானவன் வெகுநாள்
அதிதுக்கமொ டவனுக்கல
மதுவீர்த்துழைத் ததுவே 17

595 தன்காலமுள் ளளவும்மவன்
றனக்கேயல மீர்த்து
வன்கால்தளர் நடையோய்ந்துரு
மாறிக்கிழ டாகி
நன்காமிரை கொள்ளாமல்
நடக்கச்செய லற்று
வெண்கீழுற வுதைகாலொடு
வீழ்ந்தேயிறந் ததுவே 18

596 மறுவன்பவ மவனுக்கென
மயிடம்முன வினையால்
உறுகின்றமை யாலேயவன்
உழவாட்க ளடிக்கக்
கறையங்கமெ லாம்பீரிட
வேகண்புனல் காலத்
தெரிதுன்பம தாற்றுதுமை
திரிதந்திடு காலை 19

597 வனமத்தியி னதிமுற்பவ
மயிடத்தலை பெரிதாய்
கனமுற்றிடு வளைகொம்பொடு
கானத்துறை தரவே

---

594 ஏமாத்தனன் – (உழவன்) இன்புற்றனன். கோலின் அதட்டி – தார்க்கோலால் புடைத்து. கால – ஒழுக. பணி – பண்ணி. அலம் – கலப்பை. ஈர்த்து – இழுத்து.

595 வென் (வெரிந்) – முதுகு. உதைகாலொடு – கால்களை உதைத்துக் கொண்டு.

596 மறுவன்பவம் – பின்னும் உண்டாகிய வலிய பிறப்பு. கறை – குருதி. மை – எருமை.

சினமொய்த்தவன் குந்தாடவி
சேர்வேடுவ ரிருவன்
தனதிச்சையின் நேர்கண்டது
தன்னீக்கொடு போகி 20

598 எட்டித்தொடு கொம்பொன்றதி
லேற்றித்தின மெருவை
கொட்டிப்பயிர் தனதாய்வினை
கொல்லிப்புற மாட்டிற்
றிட்டிப்பரி காரம்மது
செயுமென்றதை நட்டு
மட்டற்றதன் மகிழ்வோடுதன்
மனைபோயின னன்றே 21

599 விழிகண்டவர் வெருவும்வகை
வெகுநாளவண் மேவும்
கழிவெண்டலை கொழுவுங்கழி
கட்டோடுமு றிந்தே
ஒழியும்படி கீழ்வீழ்ந்தவ
னுருள்கின்றதை யொருநாய்
இழிவென்றறி யாதேகவி
யிர்த்தெங்குமு ருட்டி. 22

[சடகோபன் எருமைப் பிறப்பு நீங்கிச் சிவபதம் அடைதல்]

600 கொடுபோகிய லீத்தேமுனி
குண்டந்தனில் வீழ்த்த
மடுநீரதன் மேற்பட்டிடு
மளவிற்கொடு வினைகள்

---

597 தலை பெரிதாயும் கொம்புகள் பருத்து வளைந்திருந்தமையாலும் இதனை ஒரு வேடன் கொண்டுசென்றன என்றபடி. குந்தாடனி – குருந்தவனம். தனதிச்சையின் நேர்க்கண்டதென்றது அந்த எருமையின் தலையை.

598 எட்டித்தொடு கொம்பு – கைக்கெட்டும்படியானதொரு மரக்கினை. திட்டிப்பரிகாரம் – திருஷ்டிப்பரிகாரம்.

599 கழிவெண்டலை – சதைப்பற்றுக் கழிந்த அந்த எருமையின் தலை. கொழுவுங்கழி – நட்டுவைத்த கொழுகொம்பு. கவி – (கவ்வி) வாயால்பற்றி.

விடவேயுட னெருமைத்தனு
விட்டுச்சிவ வறமே
லிடமாதவர் பெறுமாகதி
எய்தித்திகழ் வுற்றுன் 23

[இருடிதீர்த்தத்தின் பெருமை இயம்ப அரிதெனல்]

601 கவரிக்கழி தலைநாய்பலிற்
கடித்தீர்த்ததில் வீழ்த்த
அவன்பெற்றிடு பேறீதெனின்
அறிவோடதின் மூழ்குந்
தவருக்குறு நலமீதெனச்
சாற்றற்கெவி தன்றே
உவமித்திட வுறுவோர்புனற்
கொன்றுகினு மின்றே. 24

[இச் சருக்கத்தின் பயன் கூறல்]

602 இம்மாநல முறுகாதையை
இயம்பும்மவர் கேட்போர்
தம்மாலுள பவம்யாவையும்
தணந்தே நலமெல்லாம்
செம்மாந்துற வெய்திப்பல
செல்காலமி ருந்தே
கைம்மான்மழு வுடையாருல
கத்திற்புகு வாரே. 25

[இருடிகள் தீர்த்தச் சருக்கம் முற்றும்]

---

600 முனிகுண்டம் – இருடி தீர்த்தம். எருமைத்தனு – எருமை உடம்பு. மாகதி – பெரும்பதம்.

601 பலிற் – பல்லினால். பேறு – பாக்கியம். தவர் – முனிவர். உறுவோர் – இருடிகள். புனல் – தீர்த்தம்.

602 தணந்து – நீங்கி. கைம்மான் மழுவுடையார் – சிவபெருமான்.

அசுரதீர்த்தச் சருக்கம்

[ஏழுசீர் சந்த விருத்தம்]

[இரணியன் இரணியாக்கன் வரலாறு கூறத்தொடங்குதல்]

603 சீரு லாவுமுனி யரச னேடசுர
தீர்த்த பெருமையது செப்புவான்
ஏரு லாவருமவ் வேல்வை யப்பெயரின்
எய்து காரணம தேதெனில்
தாரு லாவுபுய வலியி னுலகு
தனைய டர்த்தவிற விரணியன்
காரு லாவுமன விரணி யாக்கன்றறு
கண்ணர் பற்பல வரக்கர்கள். 1

[அசுரரிருவரின் மறச்செயல்கள்]

604 இவர்கள் மாதவமி யற்றி மிக்கவரம்
எய்தி னர்கொடிய கடல்விடம்
புவன மீதிலிவர் உருவ மாகிவரு
புன்மை யாரெவரு நிகரிலார்
அவனி விண்முதல் உலகம் யாவையும்
அடர்த்தும் ஆக்கினை செலுத்தியும்
தவறி ழைத்தன அனேகம், வானவர்
தமைத் துரந்திடர்ப் படுத்தினர். 2

---

608 அரசனேடு – புரூரவா அரசனிடம், ஏல்வை – குளம். விறல் – வெற்றி. காருலாவுமனம் – கருமை (வஞ்சனை) பொருந்திய உள்ளம். தறுகண்ணர் – அச்சமில்லாதவர்.

604 ஆலகாலவிடம் உருவெடுத்து வந்தாற்போன்றவர் இவர்கள் என்பது கருத்து. அடர்த்தும் – துன்புறுத்தியும். ஆக்கினை – ஆட்சி. துரந்து – வெருட்டி.

[திருமால் இரணியன் இரணியாக்கரை அழித்தமை]

605 இன்ன வாறவர் இயற்று தீமையினை
எண்ணி வெங்கருட கேதனன்
சின்ன பின்னம்வ ராக வேகரச
சிங்க மாகிய வுருக்கொடு
துன்னி யட்டவரை விண்ணை நட்டிடாது
துடைத்து நீதியை நிறுத்தினன்
தன்னி னத்தர்பலர் அற்ற தன்மை...
..... மாவலி யறிந்தனன். 3

[மாவலி சிந்தித்தல்]

606 தங்கி லோக்கிட ரிழைத்த விண்ணவரை
தானெ றுத்துமிகை செற்றவர்
தங்கி லோக்குமக லாத வெந்துயர்கள்
தந்து விண்முத லெவற்றையும்
பொங்கு தன்குடை நிழற்கண் வைத்திடல்
பொருந்த வோர்ந்திவை வரும்வகை
எங்கு ஞற்றுவமெய் மாதவங் களென
எண்ணி மிக்கபதி யீதென 4

[மாவலி பெருந்துறையிற்றவமியற்றல்]

607 வந்து சன்னவன மதனில் முக்கணிறை
வடிவ மாகுமிது வரமெனும்
குந்த மூலமத னுக்கு நேர்நிருதி
குண்ட மொன்றவண மைத்தல்செய்

---

605 கருடகேதனன் – திருமால் (கேதனம் – கொடி). சின்னபின்னம் – உருமாற்றம். வராகம் – பன்றி அவதாரம். அட்டு – அழித்து. நட்டிடாது – நச்சிடாமல். மாவலி – மாபலிச் சக்கரவர்த்தி. இரணியனுடையபெயரன் – பிரகலாதன் மகன்.

606 மிகைசெற்று – உயர்வை அழித்து, ஞற்றுவம் – முயன்று செய்வோம். மிக்கபதி – உயர்ந்ததலம்.

திந்து வார்சடிலி தன்கீன நெஞ்சினு
ளிருத்தி வெங்கொடிய மாதவம்
உந்து மாவருட மீரைஞ் ஞூற்றினும்
உயர்ந்து சென்று வியற்றினன் 5

[இறைவன் மாவலியின்முன் வெளிப்படுதல்]

608 நிருதர் வெந்துயர் பொறுத்த ருந்தவம்
நெடும்பல் காலமதி யற்றவும்
எருது வாகன மதன்கண் மீறுகணம்
ஏத்தல் செய்துபுடை சூழ்வரப்
பருதி யாயிரவ னேக கோடியொளிர்
பான்மை யென்னவெளி வந்துநின்
றருள்த ரும்படிகு ருந்தவாணர் அசுர
ராசன் முன்னரி னஃணந்தனர். 6

[இறைவனைக்கண்டு மாவலி பேரானந்தமடைதல்]

609 இலங்கு வேணிமகு டஞ்ச ரிந்தசைய
வேயெ மூந்தருள்தல் கண்டடி
துலங்கு மாவலி விழுந்தி றைஞ்சிவிழி
சோர நீர்,சிரம திற்கரம்
விலங்கி லாதுபர வசம தாகவுடல்
விண்ணின் மால்விடையின் வந்தருள்
கலந்த நாதனெதிர் அளவி லாதமிகு
காதல் கூரமொழி வானரோ 7

---

607 சன்னவனம் – திருப்பெருந்துறை. குண்டம் – தீர்த்தம். இந்துவார் சடிலி – சந்திரனை உடைய நீண்ட சடையுடைய இறைவன். உந்தும் – வளரும்.

608 நிருதர் – அசுரர் (மாபலி). வெளிவந்து – குருந்தப்பெருமான் வெளிப்பட்டு.

609 வேணிமகுடம் – சடைமுடி. விலங்கிலாது – விலகாமல். காதல்கூர – அன்புமிக.

[மாவலி இறைவனைப் புகழ்ந்து போற்றுதல்]

610 அண்ட கோடிகளை வற்றி னுக்குமுத
லாய தூயகரு ணைகரர்
சண்டன் மார்புறஉ தைத்த மங்கள
சரோரு கங்,கொடிய கடல்விடம்
உண்டகண்ட! ஒளிர்துண்ட விந்துநுதல்
உமைம ணாள! சரு வேச!நல்
தொண்டர் நெஞ்சமலர் கோயில் கொண்டவர்கள்
துன்ப கற்றும்வளர் சோதியே 8

611 என்ற னேகதுதி சொற்றி றைஞ்சிமிக
எளிய னுகுமடி யேன்முனம்
நன்றி சேருனது காட்சி தந்தருள்
நண்ணு நின்கருணை யென்சொல்கேன்
கொன்றை வேணிமதி யைய வென்ன,வொளிர்
கோல மால்விடையின் மீதெதிர்
நின்ற நாயகனும் ஒன்றி நீபுரியும்
நேர்மை கண்டுளம் மகிழ்ந்தனம் 9

[இறைவன் உன் விருப்பம் யாதென, மாவலி வேண்டல்]

612 விளம்பு நின்னுள விருப்பம் யாதென
விழுந்தி றைஞ்சியெதி ரசுரர்கோன்
உளங்க லந்ததிக தீமை சேரெனையும்
ஒருவ னுகவுள மதினினைந்
தெழுந்து வந்தருளும் இதனின் மிக்கவரம்
என்கொ லரக்கனு முரைக்குவன்
களங்க மற்றுலகம் மூன்று மென்றனது
காவ லாணைவழி நிற்கவும் 10

---

610 முதலாய - மூலகாரணமாகிய. சண்டன் - இமயன். சரோருகம் - தாமரை (இங்கு இறைவனுடைய பாதங்களை உணர்த்திற்று). துண்டஇந்து - பிறைச்சந்திரன்.

611 துதி - தோத்திரம். சொற்றிறைஞ்சி - சொல்லி வணங்கி. நேர்மை - தவம்.

612 அசுரர்கோன் - மாபலி. உளங்கலந்து - மகிழ்ந்து. களங்கமற்று - தவறுமல். ஆணை - ஆட்சி.

613 இறந்தி டாவரமும் விண்ணில் வாழ்பவர்கள்
எவரு மென்வசம தாகவும்
புறந்த ராவெனது கிளைஞ ராமிவர்கள்
புகலு கின்றனவு மருள்புரிந்
தறந்த வாத்தடம் ஒன்று செய்தனமி
தாகுமிப் புனலின் மூழ்கினேர்
மறந்த விர்ந்துளம் விரும்பும் யாவும்
வரமன்னவும் தயவு செய்கென 11

[இறைவன் அவன் கேட்ட வரங்களோ அருளி மறைதல்]

614 அன்ன தாகவென வென்னை யாளுடைய
அண்ண லுங்கிருபை செய்துநீ
உன்னி ஓர்வருகு ரூர மாதவமு
வந்து செய்தமையின் மாவலி
என்னு நாமமுள தாக வென்றவனி
னங்க ளுக்கும்வர மீந்துதாம்
மன்னி வாழ்தருகுருந்தில் வந்துரு
மறைந்து வைகுதல் புரிந்தனன் 12

[அசுரர்களின் மகிழ்ச்சியும் விருப்பமும்]

615 சிவபி ரானுதவு தவம தோர்ந்தசுரர்
திரள்கள் எண்டிசையும் வெங்கயம்
கவன மாவிரத முடனெ ழுந்தமரர்
கணைகளைந் தெமர்கள் வளரவே
தவம னேகபரு வம்பு ரிந்துபெறு
தான வக்குரிசி லேயெனை
அவனி மீதிலவ னடியில் வீழ்ந்தெவரும்
அண்டமும் பிதிர வார்த்தனர் 13

---

618 புறந்தரா – காக்கப்படுகின்ற. அறந்தவாத்தடம் – அறம் கொடாத தோர் தீர்த்தத்தடம். மறந்தவிர்ந்து – பாவம் நீங்கி. வர – வரவும். மன்ன – நிலைபெறவும்.

614 இருபை – அருள். ஓர்வரு – எண்ணுதற்கரிய. குரூரமாதவம் – கடுமையான தவம்.

615 அமரர்களை கணைந்தி – தேவர்கள் கூட்டத்தை அழித்து. தானவக் குரிசில் – அசுரர் தலைவன்.

[மாவலி மூவுலகத்திற்கும் தலைவனாக விளங்குதல்]

616 வந்து வந்துதொழு கின்ற வர்க்குமுக
மன்ன முங்கியெழு சேணியோ
டிந்தி ரன்திசைவ லாளர் வானவர்கள்
எவரு மஞ்சிட வெதிர்ந்துபோர்
சிந்தி யோடும்வகை வென்று வாகைபுனை
செல்வ னெகியவர் திருவெலாம்
சொந்த மாகவுல கெவைக ளுக்குமொரு
தோன்றல் தானென விருந்தனன் 14

[இந்திரன் முதலிய தேவர்கள் அவனுக்கஞ்சி அவன் ஏவல் வழி நிற்றல்]

617 எதிர்க்க அஞ்சியக லிந்தி ராதிபர்கள்
எங்கி னிப்புகல்வே றிவனலால்
விதுக்கொ ழுந்துபுனை வேணி யண்ணல்தரும்
மிக்க நல்வரம தெய்தினன்
மதிக்கி லிங்கிவனை வெல்லு தற்கொருவர்
வருவ ரேலறிவன் மற்றிவற்
றுதித்து வாழ்தல்துணி வென்று வந்துகுறை
சொற்றி ரந்தனர்கள் அசுரனும் 15

618 நீவீர் முற்செய்வது கொடிய வெம்பழிநி
னைப்பி லாதவை யாத்திரோ
ஆவ தாகவென வற்பு றுத்தவர்
அஞ்சி யஞ்சியவ லேவலின்
மேவி வாயின்வெளி நின்று மங்குளவர்
விரும்பு நன்மொழி விளம்பியும்
தாவி லாதகொலு விற்பு குந்துமருள்
தந்தி டென்றுபல சாற்றியும் 16

---

616 சிந்தி – சிதறி. அவர்திரு – தேவர்கள் செல்வம். தோன்றல் – தலைவன்.

617 புகல் – புகலிடம். விது – சந்திரன். வேணி – சடை. துணிவு – தக்கது.

618 யாத்திரோ – செய்தீரோ. கொலு – அரசன் அத்தாணியில் வீற்றிருக்கும் நிலை.

[அதிதி தேவர்களின் துயர்கூவான் தவமியற்றல்]

619 நெடிது காலவன் அருளை யுன்னியயல்
நீங்க லின்றிமிக வெளியராய்
முடிவி லாததுயர் எய்தி னர்தனை
முன்னி யன்னையெனு மதிதியும்
விடியு மாறெனது மக்களுக்கு மருள்
வேண்டி யொன்றுசெய வல்லனென்
றெடிவி லாவருடம் நூறு கேசவனை
உன்னி நற்றவ மியற்றினள் 17

[திருமால் அதிதிக்குக் காட்சிதரல்]

620 சங்கு சக்கர முராரி யும்மதிதி
தவ மறிந்தெதிர வேயருட்
செங்கண் மால்பசிய கொண்டல் மேனியொளிர்
தேசு முண்டக மெனத்திகழ்
அங்கை செஞ்சரண வம்பகப்பொலிவும்
அருள்வழிந் தொழுகு வதனமும்
பொங்கி ரத்னமணி மகுட மும்விழி
பொருந்த நேசமொடு கண்டனள் 18

[அதிதி திருமாலிடம் தேவர் துயர்கூய வேண்டுதல்]

621 கண்டு வந்தெதிர் வணங்கி யன்பொடிரு
கைக ளஞ்சலிசி ரத்தளாய்
மண்டு கண்கள்பொழி தாரை யோடதிக
மதுர வாயின்மொழி குழறிட

---

619 கால் – காலம். அதிதி – காசிபரின் மனைவியும் தேவர்களின் தாயுமாகியவன். விடியுமாறு – துன்பம் நீங்கும் வழி. ஒடிவு – இடை முறிவு. கேசவன் – திருமால்.

620 முராரி – திருமால். எதிர – காட்சிதர. கொண்டல் – கார்முகில். தேசு – ஒளி. முண்டகம் – தாமரை. சரணம் – பாதம். அம்பகம் – கண்.

முண்ட காசனிம ணைகூத் துதிமன்
மொழிக ளிற்பரவி யேபசுங்
கொண்ட லேயுனது கிருபை யாலெனது
குறைத விர்த்தருள வேண்டுமால் 19

622 தேவர் தாயதிதி தானியம் புதல்
திருச்செவி வித்தலம தேற, மால்
ஆவ தேதுரைசெய் யன்கூ நீயென, வென்
அருமை மைந்தரெனு மனைவரும்
மாவலித் திறல்கொள் அசுர ரல்மெலிவ
தாயிழிந் துயர் பதங்களும்,
ஏவ லுக்குரிய பெயர்க ளாகியிட
ரேமி குந்தனர்கள் நாள்பல 20

[திருமாலைத் தன்வயிற்றில் மகனாகத் தோன்றியருள அதிதி வேண்ட அவ்வாறே முராரியருளுதல்]

623 அந்த மாவிதன மொன்றி னலுமெனக்
காறு கின்றதிலை ஐயனே
புந்தி கூரவென் வயிற்றின் நீயுமொரு
புதல்வ னாகுமவ தாரமாய்
வந்தென் மக்கள்துயர் மாற்ற வேண்டுமிவ்
வரம்வ ழங்கென விளங்கும், வை
குந்த நாதனும தற்கி யைந்ததிதி
குழவி யாயவத ரித்தனன் 21

---

621 முண்டகாசனி – இலக்குமி (தாமரையைப் பீடமாக உடையவள்).

622 இழிந்துயர்பதங்களும் – தம் பதவிகளை இழந்து தாழ்ந்து. இடர் – துன்பம்.

623 மாவிதனம் (விசனம்) – பெருந்துன்பம். ஆறுகின்றதிலை – நீங்கவில்லை.

[காசிபரும் அதிதியும் மகிழ அக்குழவி வளர்ந்து ஒளிர்தல்]

624 தந்தை காசிபரும் வந்து வந்ததிதி
தவம கத்துவம தால்வரும்
எந்தை தந்தையென்மூ தாதை யோவென
எடுத்தணைத் திவர்கள் மகிழ்தர
அந்த மின்றிவள ரொளித யங்கமன
மயலி னேதுமுரை யாமலே
முந்து மாகமபு ராண வேதகலை
முற்று மோர்ந்தமர் கின்றநாள் 22

[மாவலி வேள்வி செய்தலும்; இல்லையென்னது வழங்குதலும்]

625 மாவ லித்தறுக ணசுர னேர்மகம்
மதித்தி யற்றியவண் வருமவர்
ஆவ லுற்றுரைசெய் கின்ற யாவையும்
அளித்து லைகினன் அவன்கணம்
மேவல் பெற்றிட வுளங்கு றித்திடில்
விரும்பி நிற்பணிசெய் தொழுகுவம்
நாவ லத்திலுய ரண்ண லேயெனவின்
ணவர்கள் வந்துமொழி தந்தனர் 23

[இதுவே பருவமென எண்ணித் திருமால் குறளாக வருதல்]

626 இவர்கள் வாய்மொழியும் அவனி யற்கையையும்
இந்திரற் கிளைய கோவினன்
தவனை வென்றிவர்கள் தமையு யர்த்தவிது
வாகும் நற்பருவ மென்றெணி

---

624 மகத்துவம் – பெருமை. ஓ – வியப்பிடைச் சொல். அயலின் – புறத்தில்.

625 மகம் – வேள்வி. மதித்து – கருதி. அவன்கணம் – அவன் கூட்டத் தாராகிய அசுரர்கள். நாவலம் – நாவலந் தீவு.

உவண மூர்த்திசிறு மறைவ லாளனென
வுன்னு நற்பிரம சாரியாய்ப்
புவன மூன்றுமொரு குடையிலாள் அசுர
புரவ லன்கணணை வானரோ 24

[கலித்துறை]

[வாமனனுகிய திருமால் மாவலியினிடம் வருதல்]

627 அன்ன காலையி லசுரனும் அருமகம் முற்றி
மன்னு பேரர சியற்கொலு வாகவீற் றிருக்கத்
தன்னின் நேரிலா வழகெலாந் தயங்குபே ரொளிசேர்
பொன்னின் மாமணி மண்டப மாங்கொன்றிற் புகுந்து 25

[மாவலியின் ஒலக்கச் சிறப்பு]

628 அரிய தன்கீழ முதியர்நின் றருகுப சரிப்ப
விரியுந் தாணையங் காவல ரமைச்சர்தம் மிகுதி
உரிமை பெற்றவன் குறிப்பினின் ஒழுகிட விமையோர்
பரிவு பெற்றிடு முளத்தராய்ப் பணித்தன புரிய. 26

629 அரும்பு மென்முலை யரம்பையர் அசுரர்தம் மகளிர்க்
கரங்கள் வெள்வளை யார்த்திடக் கவரிநின் றிரட்ட
உரங்கள் யாவர்தம் காதினும் அமுதொழுக் குவபோல்
நரம்பின் மேற்கரந் தும்புரு நாரதர் நடத்த. 27

630 தேவ கீதமும் நாட்டிய விதங்களும் செறிய
நாவி னிலைவ ரும்புகழ்ந் தேத்திவிண் டாருப்
பூவின் மாமழை யரக்கர்தங் குழுவெலாம் பொழியத்
தாவி லாமுனி வரர்கணம் ஆசிகள் சாற்ற. 28

---

626 இந்திரற்கினையகோ – உபேந்திரன் (திருமாலுக்கொருபெயர்). உவணம் – கருடன். மூர்த்தி – திருமால். அணைவான் – நெருங்கினன்.

627 நேரிலா – ஒப்பிலா.

628 தாணை – சேனை. பரிவு – இரக்கம்.

630 விண்டாரு – கற்பகத்தரு முதலியவை. தா – குற்றம்.

631 வாத்தி யங்கட முழக்குமா திரமெலா மதிர
வேத்தி ரக்கர மாகதர் மிடைசனம் விலக
நேத்தி ரம்படு திசையெலாம் வெளிதர நிகீனத்த
மாத்திரம்பல வளமவண் வேண்டுவ மலிய. 29

632 பாந்தள் வேந்தனும் உரைப்பரும் பன்னகத் துடனே
காந்து பன்பணி யழுத்திய கடுந்திறல் மடங்கல்
ஏந்து மாசனத் தெழில்மிகு வெண்குடை நிழற்கீழ்
போந்து வீற்றிருந் தனன்திரி புவனமும் புரப்போன். 30

[மாவலி வரையாது கொடை வழங்குதல்]

633 வந்து வீற்றிருந் தருமறை யவர்முனி வரர்கள்
சிந்தை கூரியர் எவர்கள்வந் தேற்பினும் சிறப்பான்
முந்து மாமணிக் கலன்நிதி முதலிய தானம்
புந்தி யின்மகிழ் வுடன்சரங் கொண்டல்போற்
பொழிந்தான் 31

634 நிதிக ளீந்தனன் கோப்பல வீந்தனன் நிறைநீர்ப்
பதிக ளீந்தனன் புரவிக ளீந்தனன் பணியிற்
புதிய தீந்தனன் மதகரி யீந்தனன் பொன்ருத்
திதிக ளீந்தனன் இரதங்க ளீந்தனன் திரிய 32

635 விருப்பம் யாதென விளம்பிய தீந்தனன் விரும்பும்
பருப்பி னோடுநெய் சறிவிர வன்னமும் பகுத்தான்
தருக்கி லாதவிண் ணவர்க்கும்வேண் டுவபல தந்தான்
மருக்கு லாந்தருக் கலங்கொடு மின்னென வைத்தான். 33

---

631 மாதிரம் – திசைகள். வேத்திரம் – பிரம்பு. மாகதர் – நின்றேத்து வோர். மிடைசனம் – நெருங்கியுள்ள மக்கள். நேத்திரம் – கண்.

632 பாந்தள் வேந்தன் – நாகமன்னன். பன்னகம் – பாம்பு. மடங்கல் – சிங்கம்.

633 கலன் – அணிகலன். கருங்கொண்டல்போல் – கார்முகில்போல.

634 கோ – பசுக்கள். பதி – நாடு. புரவி – குதிரை. பணி – அணிகலன். திதி – (ஸ்திதி) பதவிகள். திரிய – மீண்டும்.

635 பகுத்தான் – வழங்கினன். மருக்குலாந்தரு – மணங்கமழும் தேவதருக்கள்.

[வாமனர் மாவலியை நேர்ப்படுதல்]

636 அந்த வேலியி லழகெலாந் திரண்டு சிந்துருவாய்
வந்த தாமென முஞ்சிநாண் கோவண மருங்கில்
உந்தி மத்தியிற் கட்டுடை தண்டுமுப் புரிநூல்
இந்து வின்முகம் நீற்றணி யிலங்கவர் தனன்மால். 34

[யாதுவேண்டுமென வாமனரை மாவலி வினவலும் அவர் காட்சியால் உளமகிழ்ந்துரைத்தலும்]

637 நிருதர் கோனிவன் வருமெழில் கண்டுளம் நெகிழ்ந்து
பரிவி லேடெழுந் தஞ்சலி கூப்பிநற் படிவத்
தரிய மாதவத் தையவந் தருளுக வென்றென்
றுரிய வாசனம் அளித்தத தினிருத்திநின் றுரைப்பான் 35

638 முன்னம் யான்புரி தவங்கொலோ என்குல முதியோர்
நன்ன யம்பெறச் செய்தநல் லறங்கொலோ நாளும்
மன்னி யோங்குமென் குடைநிழல் வாழ்பவர் வரங்கொல்
என்ன காரண மிருந்ததோ வடிகள்வந் தெய்த. 36

539 அய்ய யானுமோ ரருமகம் இயற்றிவந் தடைந்த
துய்ய மாதவர் மறையவர்க் காவன தொகுத்தேன்
உய்யு மாறெனக் குதவிதந் தருள்செய வுவந்தே
செய்ய தாமரைச் சீறடி சேப்புறச் சேர்ந்தாய் 37

[வாமனர் தன் மனக்கருத்தை நயமாகக் கூறல்]

640 தனக்கு நேரிலாத் தவக்கொழுந் தாகிய தலைவா!
நினக்கு வேண்டுவ தென்னென, வாமனன் நிகழ்த்தும்
சினக்கும் வேற்கர! நின்னறச் செய்யார் தெளிவார்
எனக்கு வேண்டுவ தொன்றது தருகுவா ரில்லை 38

---

636 சிந்துரு – குறள்வடிவு. இந்து – நிலா. நீற்றணி – திருநீற்றுப் பொலிவு.

639 உய்யுமாறு – மேன்மைகொள. சேப்புற – சிவப்புற.

640 வேற்கர – வேலேந்தியகையனே. வெண்ணெயுண்டருளிய மறையவன் என்றது கண்ணன் அவதாரத்தைக் கருதி. தெள்ளு – தெளிந்த.

641 உள்ளம் நல்லறத் தோங்கிய பெருநல முடைய
வள்ளல் நீதரற் குரியனென் றெண்ணிவந் தனமென்
றள்ளி வெண்ணீயுண் டருளிய மறையவ னுரையைத்
தெள்ளு சீலமோ டுரைக்குவன், அசுரர்கள் திலகன்

[யாது வேண்டினும் தருவேனென மாபலி கூறலும், வாமனர் மூன்றடி மண்வேண்டலும்]

642 அரிய தாயதொன் றில்லையென் பாலுனக் களிக்க
விரியு மாதவ! தருகுவன் உரையென விரும்பிப்
பிரிவி லாதிருந் தருந்தவம் செய்மனம் பெயரா
துரிய தாகமண் மூன்றடி கொடுத்தியென் றுரைத்தான் 40

643 தருகின் றேன்புவி மூன்றடி யென்செயச் சாற்றென்
றுருமு மன்புடன் மொழிந்திட வாமனன் ஒருவர்
மருவு தம்மிட மெனச்சொலா மாநிலத் திருந்து
பெருகு மாதவம் செய்திடும் விருப்பெனப் பேச 41

[மாபலி கொடை வழங்கும்போது சுக்கிரன் வந்து சூழ்நிலை கூறித் தடுத்தல்]

644 அன்ன தாகவென் றவனியில் மூன்றடி யென்றும்
உன்ன தாகவென் றுதகமோ டவன்கையி லுதவும்
நன்னர் வேலியில் வெள்ளிவந் துரைக்குவ னலனன்
றென்ன காரியஞ் செய்தனை புவனமா ளிறைவா! 42

645 சிறிய வோர்மறை யவனிவ னெனமனந் தேறல்
நறிய தாமரை நாயகி கணவன்விண் ணவர்க்காய்
பிரிய நல்லுரு வெடுத்துனைப் பேதிக்க வெவரும்
அறிய வந்தனன் மூன்றடி மண்ணினுக் கன்று 43

---

642 விரியுமாதவ – விரிந்த பெரிய தவமுடையோய்.

644 உதகமோடவன்கையிலுதவும் – நீர் வார்த்துக் கையில் கொடுக்கும். வெள்ளி – சுக்கிராச்சாரியார். புவனமாளிறைவா – உலகாளும் தகுதியுடையவனே.

645 தேறல் – எண்ணுதே. பேதிக்க – வஞ்சிக்க.

646 தொடுத்த பல்சரா சரவுயிர்த் தொகுதிகள் தோறும்
விடுத்து நின்றிலாப் பூரணமெய்ப் பொருள், வினையம்
எடுத்து வந்தனன் பின்னரும் திரங்கிடா தவனுக்
கடுத்த செய்கையோர்ந் தளிக்குதி யென்றலு மரசன் 44

[சுக்கிரன் தடையை மீறி மகிழ்வுடன் மாபலி தாரைவார்த்தல்]

647 தன்னை யொப்பலாப் பசுந்துழாய் மவுலியன் ருனே
என்னி டைப்புகுந் திரந்தன னென்றிடி விதுபோல்
நன்ன யப்புக முளகொலோ வென்றுடன் நன்னீர்
அன்ன வன்கரத் துதவினன் தானம் ஆதரவால் 45

[வாமனர் விசுவரூபமெடுத்தல்]

648 உள்ள தோதிய வெள்ளியைக் கலுழனை யுணவந்
தள்ளி யேக,நின் றசுரனும் அஞ்சவின் ணடங்காத்
தெள்ளு பேருரு மணிமுடி தோள்கரந் திருத்தாள்
எள்ள வில்விழிக் கீறிதென் றறிகிலா தெடுத்தான் 46

[மூன்றடியால் அளந்து மாவலியைப் பாதலத்தமுத்தித் தேவரை காத்தல்]

649 அவனி முற்றுமோ ரடியினல் அளந்தன னுயர்ந்த
புவனம் யாவும் ஓரடியினற் போர்த்தன னினிநம்
உவமம் அற்றவோ ரடிக்கிட மீதென வோர்ந்து
தவறி லாதுரை யென,முடி யசுரர்கோன் சாய்த்தான் 47

650 கறுத்த னன்றிரு வளந்திறன் மாவலி கலங்கப்
பொறுத்தீ ராதிவ னுக்கெனப் பாதலம் புகுத்தி
மறுத்தொ ராசையுற் புகாவகைக் காரக மாக்கி
நிறுத்தி னிமை யவரைவிண் ணட்டினின் நிலைக்க 48

---

646 வினையம் – மாயச்செயல். திரங்கிடாது – மயங்காமல்.
647 பசுந்துழாய் மவுலி – பசிய துளசி முடியினையுடைய திருமால். தானம் – கொடை.
648 கலுழன் – கருடபகவான். நையுண – வருந்த. ஈறிதென்றறிகிலா – முடிவு இதுவென்று அறியவியலாமல்.
649 முடி – தலை.
650 கறுத்தனன் – வெகுண்டனன். காரகம் – சிறை.

[மாபலி இறப்பிலனாய் இருப்பானெனத் திருமால் கூறலும் அவன் செயலுக்கேற்ற நிலையே எய்தினன் எனக்கூறலும்]

651 சிவபு ரந்தனிற் றீர்த்மொன் றமைத்தருந் தவமும்
தவறி லாதுசெய் தானருள் பெற்றிடுந் தகையால்
உவண மூர்த்தியாற் காரகத் துறுமது பொழுது
நவம தாகமும் மூர்த்திகள் கிருபையும் நணுகி 49

652 ஏவரும் புகழ்ந் தேத்திடற் குரியனாய் என்றும்
சாவி லாதிருக் கின்றன னென்றனன், தவத்தோர்
பாவை பங்கன தருள்பெறும் பான்மையோ னவனுக்
காவ தோசிறை யிழிவஃ தென்னென வறைய 50

653 அசுர ராயினோர் அரியமா தவங்களும் புரிவார்
வசிய மாகநல் வரங்களும் பெறுவர்பல் வரங்கள்
நசிவி லாதனுப விப்பர்மற் றெவருக்கும் நடலை
கசிவி லாதுசெய் தழிவரின் னணர்பலர் காண்கில் 51

654 அன்னர் தங்களி லொருவனும் இவனுமாண் மையின்
இன்ன தெய்தினன் உயிர்கள்செய் இதமகி தங்கள்
தன்னை யோர்ந்ததற் கின்பமும் துன்பமுந் தருதல்
முன்ன வன்செய லாதலால் முறைமையா வதுவே. 52

655 ஆயி னுஞ்சிவ புரத்தினோர் நீர்த்தட மமைத்துத்
தூய நல்வரம் பெற்றதா லெவர்களுந் துதிப்ப
மேயி னினிற வாமையும் பெற்றனன் விளங்கத்
தோய மேன்மையார் சொல்பவர் என்றனன் சூதன். 53

---

652 பாவைபங்கன் – சிவபெருமான். அறைய – முனிவர்கள் கூற.
653 நசிவு – அழிவு. நடலை – துன்பம். இன்னணர் – இத்தன்மையர்.
654 இதமகிதம் – நன்மைதீமை.
655 தோயம் – நீர்த்தடம். துகடீர் – குற்றந்தீர்ந்த.

[அசுரதீர்த்தமென்னும் பெயர்க்காரணத்தை விளக்கி அதன் சிறப்புக்கூறுதல்]

656 இன்ன வேதுவி னசுரரு லியற்றலி னதற்குத்
துன்னு நாமமு மப்பெய ராயிற்றுத் துகடீர்
வன்னி நற்றரு சூழ்தர வைகுமாங் கதிற்சென்
றுன்னி யாடினர்க் களவிலாப் பாதக மொழியும். 54

657 விறலுண் டாம்நலம் மேவுமா யுளுமிகப் பெருகுந்
திறலுண் டாகுநற் புத்தியும் விருத்தியும் செருநர்
அறலுண் டாமதில் முனங்குரங் கொன்று வந்தாடி
இறலின் ருங்கதி பெற்றதென் றிசைத்தனன் இருடி. 55

658 நிருபன் மாதவன் வாய்மொழி கேட்டலும் நெகிழ்ச்சி
தருநெஞ் சோடவன் ருள்தொழு தய்யநீ சாற்றும்
ஒருகு ரங்கதன் செய்கையின் விரிவினை யுவந்தேன்
கரிசு தீர்வகை மொழிகென முனிவரன் கழறும் 56

659 விழைவு தக்கவர் மிக்கசெல் வத்தர்தம் மிகுதி
பழமை பெற்றுநற் பண்புநல் வளம்பல பலித்தோர்
பிழையு மற்ருெளிர் புளிந்தமாம் பெயருள தேசம்
உழைவி லாதசே ணலைய மென்றதி னேரூர் 57

660 விமல விப்பிர நிருப்புமற் றன்னவர் விருப்பம்
யமுனை யின்கரை யாமதில் வாழ்வனேர் மறையோன்
அமல நெஞ்சினன் பெயர்விசு வேசன்மற் றவற்கு
அமல மற்றிடு தனையரோ நிருவர்கள் உளரால் 58

---

657 விறல் – வெற்றி. செருநர் – பகைவர். அறலுண்டாகும் – நீங்குதலுண்டாகும். இறல் – சாவு.

658 விரிவினை – வரலாற்றினை. கரிசு – குற்றம். கழறும் – கூறும்.

659 உழைவு – (உளைவு) துன்பம்.

660 விப்பிரர் – பார்ப்பார்.

661 முன்ன வன்றனக் குறுபெயர் முதுவிரூ பாக்கன்
பின்ன வன்பெயர் சிவன்இவ ரிருவரும் பிதாப்போல்
நன்னர் பெற்றுள நெஞ்சினர் நியதிகள் நழுவார்
அன்னை தந்தைதம் மொழிவழி யொழுகுவ ரறத்தால் 59

662 மக்க ளோடுதம் வைதிக நெறிவழு வாமல்
தக்க தேபுரிந் தறத்தொடும் சரித்துவே தியரில்
மிக்க னும்விசு வேசனும் வார்த்திக மேவித்
தொக்கு நீத்தயன் றன்னுல கடைந்தனன் தொடர்பால் 60

663 மைந்த ராமிவர் தம்பிதா மரித்திடு மதனால்
அந்த மில்துயர்க் கடல்தனில் வீழ்ந்தெழுந்தவற்கு
மூன்றும் வைதிக மொழிவழி செய்கடன் முறையே
தந்து முந்துபோற் றணந்திடா திருந்தனர் தம்மில் 61

664 சிறிது வைகலொத் திருந்தபின் சேர்வில ராகிப்
பிறிது செய்துகொண் டவரவர் விருத்தியைப் பெருக்கிச்
செறியு மில்லறச் செயற்கையைத் திருத்தி
நேர்ந்தொழுகிக்
கறுவி லாதநெஞ் சினர்களாய் இருந்திடுங் காலை 62

665 பிதிர்ச்சி ரார்த்தம்வந் ததுவுணர்ந் திருவரும் பேணத்
திதிதம் இல்லிடைச் செயத்துணிந் தியற்றிடு மமையத்
ததிக னன்மையன் மூத்தவன் கொல்லியி னகத்துப்
புதிய பாகலின் காய்பறித் தீயவன் புறம்போய் 63

666 தன்ன கத்திடைச் சமைத்திடப் பணித்தவன் பிதிரை
உன்னி வேதியர் தமைவிளித் துதவினன் சிரார்த்தம்
முன்ன வற்குரித் தாகிய கூரலின் முதுகாய்
தன்னை யன்னவர் கேட்டிடா தபகரித் துதவும் 64

---

662 சரித்து – ஒழுகி. வார்த்திகம் – வளர்ச்சிமுதுமை. தொக்கு – உடம்பு.
663 தணந்திடாது – பிரியாமல். தம்மில் – தமது மனையின்கண்.
664 பிறிது – பாகப்பிரிவினை. விருத்தி – தொழில். செயற்கை – செய்தல். கறுவிலாத – வஞ்சனையில்லாத.

667 தீமை யாலவன் புரிதரு சிரார்த்தமும் பிதிர்கள்
தாமதித் திடா தசுரர்கள் தமக்குரித் தாகத்
தோமுறப் பல தருக்குலம் யாவையும் சுழலும்
ஏம மற்றபுன் குரங்குரு வெய்தின னிலையோன் 65

668 உடனு தித்தவன் பாகலின் காய்பறித் துதவும்
திடன் மிகுத்தநற் றிதிதருஞ் செயலிதா கையினால்
இடன்மு தற்பல திரவியஞ் சுத்தியோ டியற்றல்
மடன கற்றுமா சிரார்த்தத்தின் மாண்பெனல் வழக்கே 66

669 ஈன ரஞ்சித மில்குரங் காகிய இலையோன்
வான ரங்களி னோடுபல் வனங்களிற் புகுந்து
தோன ரம்புரோ மங்களும் பறிபடச் சுழன்று
தானருந்து காய் பழங்களும் தின்றுசஞ் சரித்தே 67

670 திரியுங் காலையக் கவிமுனைத் தவத்தினற் றெருள்சேர்ந்
தருமை யாயகுந் தாரர ணியத்தினை யடைந்து
தருவெ லாஞ்சுழல் காலியி னசுரநீர்த் தடத்தைப்
பரிவி னோடுகண் டுற்றவண் வன்னிமேற் பாய்ந்தே 68

671 சமியின் காய்பறித் தருந்தியத் தடத்துநீர் பருகிற்
றமுதின் மேற்படும் அப்புன லுகருமந் நலத்தாற்
றமசு மற்கட வுருமுதற் பவமெலாங் கதிர்முன்
இமமெ னத்தணந் திடத்தொழுந் தேவரு வெய்தி 69

[இலையவன் பெற்ற பேறு]

672 ஒளிவி மானமீ தும்பராற் புகுந்தவ ணுளவாங்
களிகொ ளின்பெலாம் நுகர்ந்துபல் காலங்கள் கழித்துத்
துளியு லாவரும் கண்ணெகிழ் கொன்றையந்
தொடையோன்
தெளிவு தந்திடக் கயிலையில் இருந்தனன் சிறந்தே 70

---

667 தாம் மதித்திடாமல். தோமுற – குற்றமுற. ஏமம் – பதுகாவல், இன்பம்.

670 கவி – குரங்கு. குந்தார் அரணியம் – குருந்தமரமுள்ள காடு. வன்னி – வன்னி மரம்.

671 சமி – வாழை. மற்கடம் – குரங்கு. இமம் – பனி. தணந்திட – நீங்க.

672 கள் நெகிழ் கொன்றை.

673 ஆத லாற்சொலு மசுரநற் றடமதின் மகிமை
ஓத லாந்தகைத் தன்றெரு வருக்குமவ் வுதகத்
தேத மற்றிடப் படிந்துயர் கதியிலெய் தினருக்
கீதி லக்கமென் றறைந்திடற் கரிதுகா ணிறையே 71

[இச்சருக்கம் பயில்பவர் பெறும் பயன்]

674 இன்ன மாக்கதை யோதினர் செவிப்படுத் திசைத்தோர்
அன்ன தீவினை யணைத்தும்விட் டகம்விரும் பியபெற்
றுன்னும் வெந்திற லீகையந் துறையராய் ஒங்கி
மன்னி வாழ்ந்திருந் தீற்றிடை வதிர்வா ளுலகே 72

[அசுர தீர்த்தச் சருக்கம் முற்றும்]



678 இலக்கம் - எண்ணிக்கை (அளவு)

மானவ தீர்த்தச் சருக்கம்

[கலிவிருத்தம்]

[மனுவின் வரலாறு கூறத்தொடங்குதல்]

675 மானவ தீர்த்தனன் மரபு கூறுதும்
ஞானமர் வேலர சுவந்து கேட்டியால்
பானுவின் குலமகன் பகைஞ ராங்கரிக்
கானவெங் கோளரி மனுவென் பானரோ 1

[மனு அரசன் திருப்பெருந்துறை சேரல்]

676 உலகெவர் தமைமன முவந்து காக்குநற்
குலமுதல் அரியசெங் கோல்ந டாத்துநான்
புலவர்கள் தொழுசிவ புரனன் மாநகர்த்
தலநல மறிந்ததிற் சார வந்தனன் 2

[அக்கினி தீர்த்தத்தில் மனு நீராடி இறைவனைப் போற்றிப் பூசனை புரிதல்]

677 வந்தழல் மடுவினில் மகிழ்வி னூற்படிந்
தந்தமில் மகிழ்விலே டமல ரூபமாம்
குந்தமூ லத்தின்முன் குவித்த கையொடும்
சந்தணி புயந்தினன் தாழ்ந்து போற்றியே 3

678 குருந்தெனும் பெருந்துறைக் கொன்றை வேணியன்
திருந்துளங் களிதரச் சிறந்த பூசனை
புரிந்துசெய் தனனருட் பான்மை கண்டதில்
இருந்துநோற் றிடமனம் எண்ணி னனரோ 4

---

675 ஞானமர்வேல் – புலால் தங்கிய வேலாயுதம். பானு – சூரியன். கோளரி – பகையை வென்றிகொள்ளும் சிங்கம். மனு – அரசன்பெயர்.

676 புலவர்கள் – தேவர்கள் ஞானியருமாம்.

677 சாந்தணிபுயம் – சாந்தணிந்த தோள்.

[மனு ஒரு தீர்த்தமுண்டாக்கி அவ்விடத்திருந்து தவம்புரிதல்]

679 புடவியின் பொதுப்பிதா புரிந்து நோற்றிடும்
இடமதற் கடுத்தவக் கினியின் றிக்கினிற்
றடமதொன் றமைத்தனன் சார்பின் மாவின்கண்
மடமக லருந்தவம் மரபி னற்றினன் 5

680 காமமே முதலிய கடிந்த னேகநாள்
தாமரை நாயகன் றனது காதலன்
சேமமார் தவஞ்செயும் திறத்தை நோக்கியே
வாமமே கலியுமை மாது பாகனும் 6

[இறைவன் குருவடிவில் எழுந்து காட்சிதரல்]

681 குருந்துவிட் டருள்தரும் குருவின் மூர்த்தமாய்ப்
பொருந்துசின் முத்திரை புத்த கந்திருக்
கரங்களும் அருள்பொழி கடைக்க ணேக்கமும்
இருந்தொளி திகழ்தர வெதிர்ந்த் தானரோ 7

[இறைவனைக் கண்ட மனு பேரானந்தமுற்றுத் துதித்தல்]

682 கண்டனன் கருணையங் கடலைக் கண்களால்
மண்டனில் வீழ்ந்தடி மலரிற் சூழ்ந்தனன்
கொண்டனன் புளகமெய்க் குமுளி பாய்தர
விண்டனன் தாரைநீர் விளம்பி னன்றுதி 8

683 ஆதியும் அந்தமும் அருவும் ரூபமும்
ஏதுவுங் குணங்களும் இன்பம் துன்பமும்
போதலும் வரவுமில் லாத புண்ணிய
நாதனும் மனுமுகம் நாடிக் கூறுவான் 9

---

679 புட்வி – உலகம். பொதுப்பிதா – பிரமதேவன். மாவின்கண் – மாமரத்தின்கீழ்.

680 தாமரை நாயகன் – பிரமன். காதலன் – புதல்வன். வாமம் – ஒளி, அழகு.

[இறைவன் மனுவுக்குப் பல வரங்களையருளுதல்]

684 உன்னருந் தவத்தினு லுவகை பூத்தனம்
மன்னர்கள் மன்னனுய் மன்னி வையகந்
தன்னை நீ நாட்பல தாங்கிப் பற்பல
நன்மொழிக் குமரரை நல்கி வாழ்குவை 10

685 உனக்கெவை விருப்பவை யுதவ வோதெனத்,
தனக்கிலை யில்லவன் தாளில் வீழ்ந்தினி
எனக்கெவன் வேண்டுவ தெந்தை யேயுனை
மனக்கொளக் கொண்டிடும் வரம்பெற்றேனுக்கே 11

[இந்த மானவதீர்த்தம் புகழ்பெற மனுவேண்ட
இறைவன் அவ்வாறேயருளல்]

686 செடியனேன் புரியுமித் தீர்த்த மென்பெயர்
படியெலா முரைத்திடும் பான்மை தந்தருள்
அடியனேற் கென்றனன் அதனை வெள்விடைக்
கொடியனுங் கொடுத்துடன் குருந்தின் மேவினன். 12

687 வரந்தரக் குருந்தரன், மனுவும் பூவினிற்
புரந்தரற் கொப்பெனப் பொலிவு தோன்றவாழ்ந்
தரந்தையில் சந்ததி யளவி லாதபெற்
றிருந்தன னீற்றினில் ஏம நாட்டினில் 13

[மனு உண்டாகியதனல் அது மானவதீர்த்தமெனப் பெயர்பெற்றது எளல்]

688 சாத்தணி திகழ்மனுத் தரவின் மானவ
தீர்த்தமென் றருபெயர் சிறந்த தப்புனல்
காத்திர மதனிடைத் கழுவி னோர்புரி
தீத்தகற் கல்லர்பின் சேர்வர் வானகம். 14

---

687 புரந்தரன் - இந்திரன். அரந்தை - துன்பம், கேடு. ஏமநாடு - இன்பபுரி,

688 தரவின் - தந்ததனல். காத்திரம் - உடம்பு. கழுவுதல் - மூழ்கிக் குளித்தல்.

[இத் தீர்த்தத்தின் பெருமைகள்]

689 முக்கடன் களுமதில் மூழ்கத் தீர்ந்திடும்
தக்கநன் னியதியிற் ருனஞ் செய்திடின்
மக்கணேப் பெறுகுவர் மலட ராயினும்
மிக்கதன் குலங்களும் விருத்தி யாகுமே 15

[இத் தீர்த்தத்தில் மூழ்கி வாழ்வுபெற்ற சவுபரிமுனிவன் வரலாறு கூறத்தொடங்குதல்]

690 தீதகல் மானவ தீர்த்தந் தன்னிலோர்
காதையுண் டதனேயும் கழறு கின்றனம்
மாதவன் ஒருமுனி வரன்வந் தாடியே
பேதமில் சந்ததி பெருகி னனென 16

691 என்றருள் புரிந்ததை இறைவன் கேட்டலும்
நன்றுநன் றருந்தவ நாதனின் மொழி
துன்றிய துறவுடைத் தூய ருக்குரித்
தன்றுசந் ததிகளுக் கார்வங் கூருதல் 17

692 பெற்றனன் முனிபல பிள்ளே யென்றுநீ
சொற்றதற் கேதுவென் சொல்லு கென்றலும்
முற்றுணர் தவுமிய முனிவன் கூறுவான்
பற்றிக லறுசவு பரியென் ரேர்முனி 18

693 கலேக்கடல் யாவையுங் கரைகண் டோனுயர்
மலேக்கெதிர் காட்சியன் வரம்பில் கேள்வியன்
அலேக்குமைம் பொறிவழி யடைக்கு மாண்பினன்
நிலேத்திடு முனர்வினன் நெகிழ்ந்த சிந்தையான் 19

---

689 முக்கடன் – தேவர் கடன், முனிவர் கடன், பிதிரர் கடன், தன்னம் – கொடை.

690 காதை – வரலாறு.

694 திருவெழுத் தைந்துமே சிறந்த நாவினன்
மருவிய தவமெலாம் வாய்த்த மாண்பினன்
அருள்மிகு குணத்தினன் ஆகும் அம்முனி
இருடராப் பயோகினி என்னு மாற்றினில் 20

[சவுபரிமுனிவன் தவம் புரியுங்காலை மடுவினில்
குழாத்தொடு விளங்கும் ஒரு மீனைக் காணுதல்]

695 அறனிறை நிலையிலா மடுவொன் ருங்கதிற்
புறனறி யாவகை புதைய மூழ்கிநற்
றிறமுட னருந்தவம் செய்யுங் காலையில்
விறலுள தாமொரு மீன மானது 21

696 குஞ்சுக வினங்கள்பல் குழாந்தற் சூழ்தர
நெஞ்சகங் களிகொள நிருவி சாரமா
யஞ்சிறை யடிக்கொடங் கமர்ந்து நின்றது
விஞ்சையம் முனிவனும் விரும்பி நோக்கினன் 22

[முனிவனின் எண்ணம்]

697 வாம்புனல் திரியுமோர் மச்ச மானது
தாம்பெறு சிசுக்களைச் சார்ந்து சூழ்தர
வாம்பல நலங்களை யடையப் பெற்றது
நாம்பிற நிருந்தென வென்று நாடியே 23

[தானும் இல்லறம் பூண்டு மக்கள் சுற்றத்தோடு வாழ விரும்புதல்]

698 புத்திரர் களத்திரர் பொருந்து மித்திரர்
அத்தகை யவரோடும் அமர்ந்து வாழ்வுறும்
சித்தம தாகியத் திருநன் மாமுனி
வித்தக மடுவொரீ இ வெளியில் மேவினன் 24

---

693 மலைக்கெதிர் காட்சி – மலையையொத்த புகழாளன். அலைக்கும் – துன்புறுத்தும்.

695 அறனிறை நிலையிலாமடு – நீர் நிறைந்த ஆழமான மடு (அறல் – நீர்) விறல் – செருக்கு. மீனம் – மீன்.

696 நிருவிசாரம் – கவலையின்மை. விஞ்சை – வித்தை.

697 பிறரிருந்தென – (சுற்றமின்றி) தனித்திருக்கின்றோமே என எண்ணி.

698 வித்தகமடுவொரீ இ – தவம்புரிந்த மடுவினின்றும் நீங்கி.

[சவுபரி துருவாசரிடம் உபாயங் கேட்டல்]

699 ஆசகல் முனிவெளி யணையுங் கால், துரு
வாசனன் முனிவர மகிழ்வு கூர்ந்துதன்
ஆதர வுரைத்திதற் காமு பாயமொன்
றேசலி லாதுரைத் திடுதி யென்றலும் 25

[மானவ தீர்த்தமாடின் பெறுவை எனத் துருவாசர் கூறல்]

700 முனிவரன் மனத்தவா முற்று மோர்ந்துனக்
கினியவை வருங்குருந் திறைவன் வாழ்மூர்
தனிலொரு மானதத் தடமுண் டாங்கதிற்
புனிதமுற் றுடுதல் புரியென் றோதியே 26

701 வருந்துரு வாசனன் மாத வன்செல
இருந்தவச் சவுபரி என்னும் யோகியும்
குருந்திறை புரத்தினிற் குறுகி மானவப்
பெருந்தட மதிற்றனுப் பெயர்கொள் திங்களில் 27

[சவுபரி மானவதீர்த்தமாடிப் பின் மாந்தா என்னும் அரசனிடம் செல்லுதல்]

702 விதியொடு மூன்றுநாள் விழைவி னுடிவின்
நதியணி குருந்திறை நாதர் தம்மையும்
துதிபல சொல்லிவீழ்ந் திறைஞ்சிச் சூழ்ந்துபோய்
சதிரர சளிக்குமாந் தாவைக் கண்டனன் 28

[அரசன் வரவேற்று மகிழ்ந்து வினவல்]

703 கண்டனன் ஆசிகள் கழறி னன்முனி
மண்டலா திபனுமம் மாத வன்வர
வெண்டர வேற்றுவீழ்ந் திறைஞ்சிப் போற்றியே
தொண்டனே னேவலென் சொல்க என்றனன் 29

---

699 ஆசு – குற்றம். ஆதரவு – உடன்பாடு. ஏசல் – இகழ்ச்சி.
700 மானதத்தடம் – உயர்ந்த தீர்த்தம்.
701 தனுப்பெயர்கொள்திங்கள் – மார்கழி.
702 விழைவு – விருப்பம். சதிர் அரசு – நாற்படையுடைய அரசு.

[சவுபரி தன் விருப்பத்தைக் கூறல்]

704 உண்ணெகிழ் மனக்கருத் தொன்றி னிவனின்
நண்ணின மென்னெனின் நாம னேகநற்
புண்ணியப் புதல்வரைப் பெற்று வாழ்வதற்
கெண்ணினம் இல்லறத் தியல்பின் மேவியே 30

705 ஆதலின் நீபெறு மறுப தாயிழை
மாதரி லொருத்தியை வதுவை யாற்றியே
நீதர வேண்டுமென் றுரைக்க நீள்சக
நாதனு முனிமொழி நன்றென் றுன் னுவான் 31

[மன்னன் குழப்பமுற்றுப் பின் தன் கருத்தை மொழிதல்]

706 இம்முனி வரன்வடி விருப்ப தோர்விதம்
நம்மனே மகளிரோ ராச கன்னியர்
செம்மையன் றளிப்பது சீறி மாதவன்
வெம்மொழி சொலுமில னெனவி ளம்பிலே 32

707 என்சொலத் தகுமென வெண்ணிக் கூறுவான்
உன்றனுக் கென்பெணே யுதவல் கிட்டுமோ
நன்குலத் தரசர்க ணல்கு கன்னியர்
தன்கருத் துணர்ந்துபின் றருவ ராதலால் 33

[அரச கன்னியரிடம் எனை அழைத்துச்செல்க என்னை விரும்புபவனை மணம் செய்து தருக என முனிவன் கூறல்]

708 ஓதுவன் அவர்மன முணர்ந்து மன், றவ
நாதவென் றுரைத்தலும் நம்மை யவ்வழிப்
போதர விடுத்தியுன் புதல்வி மாரிலென்
ஆதர வுடையனே அளித்தி நீயென 34

---

705 வதுவை – திருமணம். சகநாதன் – உலகாளும் மன்னன்.
706 சீறி – வெகுண்டு. வெம்மொழி – சாபம்.

709 மன்னவன் முனிவரன் மாற்றங் கேட்டுநங்
கன்னியர் இவருருக் காணின் காய்வரென்
றுன்னியென் செய்வனென் றுரைப்பன் பின்னெனை
அன்னதே யாகவென் றறிய யோகியை 35

[முனிவன் தன் வடிவை மன்மதனைப்போல் ஆக்கிக்கொள்ளுதல்]

710 புதல்விய ரிருப்புழிப் புகுமென மாதரோ
டிதமுட னனுப்பினன் இருடி யேகியக்
கதிர்நகை வதனியர் காணக் கோடிமன்
மதவடி வாமென மகிழ்ந்து தோன்றினன். 36

[அரச கன்னியர் முனிவரின் பேரழகில் மயங்குதல்]

711 கண்டவ ரறுபது கன்னி மாரும்விண்
கொண்டல்கண் டிடுமயிற் குழாங்க ளொத்துநாண்
பெண்டகை மடம்தமிற் பிரிய மால்மிக
அண்டினர் விழிகளா மலரிட் டேத்தினர் 37

[அரச கன்னியர் காதல் மயக்கால் உறும் மெய்ப்பாடு கூறுதல்]

712 நாணுவர் சற்றுளே நகைப்பர் பேரெழில்
காணுவ ரிவரெவர் காணு மென்பர்கள்
பூணுவர் அணிகளைப் புணர வேமனம்
பேணுவர் கலிகளைப் பிரித்து டுத்துவார் 38

713 பாடுவர் இசைகளைப் பகர்வர் நன்மொழி
கூடுவர் போல்நயங் குறிப்பிற் காட்டுவர்
மூடுவர் முலிகளை முயங்க வேறிடம்
தேடுவர் அவ்வணந் திரிய லாயினர் 39

[அரசகன்னியரின் நிலையைத் தோழியர் மன்னனிடம் கூறுதல்]

714 முனிசவு பரியெழில் மூரி வேலையிற்
கனிவுட னறுபது கன்னி மார்களும்
தனித்தனி வீழ்ந்தெழாத் தகைமை கண்டவர்
பனிமதிக் குடையன்முன் பணுகிக் கூறுவார் 40

---

711 விண்கொண்டல் – மேகம். மால் – காம மயக்கம்.
714 மூரிவேலை – வலிய கடல்.

715 தாதவிழ் மாலைமாந் தாவின் முன்னிவை
ஓதலும் அற்புதத் தொடும னம்வெரீ இ
மாதவர் செயலெவர் மதிக்கப் பாலரென்
ரூதரம் பெருகவுள் ளரங்கில் வந்தனன் 41

[அரசன் நேரேகண்டு மணஞ்செய்துதர உடன்படல்]

716 ஆக்கநன் முனிகொள்பே ரழகின் நேர்மையும்
தாக்கணங் கனையதம் மகளிர் தன்மையும்
நோக்கினன் வேறினி நுவல்வ தென்னையென்
பாக்கியம் மருகன்இப் பரம யோகியே 42

717 என்றுளத் தெண்ணியவ் விருடி தாளில்வீழ்ந்
துன்றன்மா மகிமையை உணர்தற் பாலர்யார்
நன்றறி நீமரு காகி நண்ணையான்
முன்றரு தவமென முகமன் கூறியே 43

718 சவுபரி முனிக்கு மாந்தா பயந்தரு
புவிபுகழ் அறுபது புதல்வி மாரையும்
அவிர்தரும் மன்றலென் ரூன மேலடி
குவிமுர சறைதரக் கூறி மன்னனும் 44

[மன்னன் நகர்க்கு அறிவித்துத் தன் அறுபது மகளிரையும்
முனிவருக்கு மணஞ்செய்து கொடுத்தல்]

719 வினைக்குரி யமைச்சரை விளித்து மாநகர்
தனைப்புதுப் பித்தெலாம் தருமென் ரோதியே
மனக்கினி வதுவைநன் மண்ட பத்துநற்
றினத்தறு பதுமலர்த் திருவன் னரொடும் 45

---

715 மாந்தா – அரசன் பெயர். வெரீ இ – அஞ்சி. ஆதரம் – பேரன்பு. உள்ளரங்கு – அந்தப்புரம்.

718 பயந்தரு – பயந்த அரிய. ஆனமேலடிகுவிமுரசு அறைதரக் கூறி – மணச்செய்தியை யானமேல் முரசு அறைந்து தெரிவித்து,

720 வாலுறு முடுத்திரள் வயங்கு மாமதி
போலரி ஏந்திய புதிய வாதனம்
மேலுற விருத்தியவ் விருடி கையினில்
சாலுநன் மொழிசொலித் தாரை வார்த்தனன். 46

[அவர்கள் இன்புற்று வாழ யாவையும் அமைத்துக்கொடுத்தல்]

721 மணவினை முற்றிய மருக ஞெடுதன்
பிணைவிழி யறுபது பெண்ம காருமொத்
திணைபிரி வற்றுவந் தென்றும் வாழ்ந்திடப்
புணர்மணி மாளிகை புதிதி றற்றியே 47

722 ஆதன மூரணி யாடை தாதியர்
நூதன வரும்பொருள் நுவலின் எண்ணில
சீதன மாகநற் றிருவெ லாங்கொடுத்
தோதனம் பாலுடன் உண்ண வைத்தனன் 48

723 தவமகி மையிற்சவு பரிநற் ருபதன்
உவமையி லாதவொவ் வொருத்திக் கோரொரு
நவமண வாளனுய் நயந்தன் ஞர்கள்தம்
குவிமுலை நலமெலாங் கொள்ளை கொண்டனன். 49

[முனிவன் விரும்பியாங்குக் கிளைபலகுழும வாழ்தல்]

724 இன்னவா ருகவவ் வெழினல் லாரொடும்
மன்னிவாழ்ந் தளவிலா மக்கள் பெற்றனன்
அன்னவர் பெறுமகார்க் களவு மில்லைமற்
றுன்னிடின் முனிகிளை யுலகம் யாவுமே 50

725 புதல்வரப் புதல்வர்கள் புதல்வர் மற்றவர்
மதலைய ரவர்பெறும் மக்கள் மற்றுள
துதையுநற் கிளைபல சூழ மீனினும்
பதின்மடங் காய்நலம் பயப்ப வாழ்ந்தனன் 51

---

720 வாலுறுமுடுத்திரள்–தூய்மையுடைய விண்மீன் கூட்டம். அரியேந்திய ஆதனம் – அரியாசனம்.

722 ஓதனம் – (சோறு) உணவு.

726 நிகரகல் மானவ நீரின் ஆடிய
தகுதிகொள் மேன்மையாற் சவுப ரித்தவன்
இகலறு புதல்வர்கள் எண்ணி லாதபெற்
றகலிடம் போற்றவாழ்ந் தனன்மற் ருதலால். 52

[இவ்வரலாறு பயில்வோருறும் பயன் கூறுதல்]

727 அப்புனல் மேன்மையை யறைகு வாரெவர்
ஒப்பதற் கில்லையென் றுறுவன் மன்ஞெடு
செப்பினன் இக்கதை செவிபுக் கோரெலாம்
மைப்புரை மகமொரீஇ மரபும் மல்குவார் 53

[மானவதீர்த்தச் சருக்கம் முற்றும்]



726 அகலிடம் – உலகம்.

727 உறுவன் – தவமிய முனிவன். மன் – பூரூரவ மன்னன்.

வாயுதீர்த்தச் சருக்கம்

[தரவு கொச்சகக் கலிப்பா]

[தவுமியர் வாயுதீர்த்த வரலாறு கூறத்தொடங்குதல்]

728 திருந்துநலந் தருமவாயு
தீர்த்தமென வொன்றுளது
பொருந்துமதன் வரலாறும்
புனிதவந்நீர் மேன்மையையும்
இருஞ்செவிக்கா ரமுதமென
இயம்புதும்யாம் நீகேளென்
றருந்தவமா முனிவரனும்
அரசனெடும் மொழிதருவான். 1

[பிரமன் வாயுவைப் படைத்தலும் அவன் மொழியும்]

729 நூலகத்தாட் டாமரையோன்
நுவலரிய முதற்சிருட்டி
காலமதில் வாயுவையும்
கற்பிக்கக் காலவனும்
நீலநிற மால்புதல்வன்
நீளடியிற் ரூழ்ந்தடியேன்
ஏலும்வகை செய்பணிகள்
இன்னமென ஓதுகென 2

[பிரமன் வாயுவைச் சிவபுரஞ்செல்கென ஆற்றுப்படுத்தல்]

730 அவனிதனில் ஆதிகயி
லாசமென வொருநகரம்
சிவபெருமான் குருந்துருவம்
சேர்ந்ததனில் வாழ்குவன்மற்

---

729 நூல் அகத்தாள் தாமரையோன் – பிரமன், காலவன் – வாயு, மால்புதல்வன் – பிரமன்.

றுவமையதற் கீதாமென்
றோதவொருங் காருமிலை
பவனெனும்பே ருடையாயப்
பழம்பதியாம் அதிற்சார்ந்து 3

731 அருந்தவம்நீ யாற்றிலிமை
யவர்க்கிரங்கி மிகவடர்ந்து
வருங்காலக் கொடுங்காள
மாந்தியருள் தரும்பெருமான்
குருந்தினிவிட் டெழுந்தருளிக்
கூறுகென வுனக்கெவையும்
தரும்பொழுதோ டேகென்று
சாற்றவயன், அப்பதியின். 4

[வாயு பெருந்துறைவந்து தவம்புரிதலும் – தீர்த்தமுண்டாக்கலும்]

732 வந்தகுரும் தீசனடி
வந்துவந்து வந்தனைசெய்
தந்தமிலாப் பேருவகை
யாற்றுதிவா சகமியம்பிச்
சிந்தைகளி கூரவலஞ்
செய்தவர்தம் பேரருளாற்
சந்தனநீ முற்றருவில்
தன்திசைக்குத் தென்பாலாய் 5

733 அங்கணெரு நீர்த்தடமுண்
டாக்கியந்தத் தாருவின்கீழ்த்
தங்கியித யத்தையரன்
தாளிணைக்கண் ணேநிறுவிப்

---

780 ஒருங்கு – முழுதும். பவனம் – காற்று (வாயுதேவன்)
781 காலக்கொடுங் காளம் – ஆலகால நஞ்சு.
782 தன்திசை – வாயுதிசை.

பொங்கியெழு சதவருடம்
புசிப்பின்றி யரியதவம்
செங்கனலோன் தந்தைவெளி
செயவிரும்பி யாற்றினனால். 6

[வாயு தவம்புரிதலும் இறைவன் காட்சிகொடுத்தலும்]

734 உலவைபுரி தருதவங்கண்
டோங்குகுருந் திறைமகிழ்வுற்
றுலகிலருள் தருகுருவ
மாகவெழுந் தருளியொளி
நிலவியதந் திருக்கோயில்
நேர்கொளக்கால் காணவெழுந்
திலகியசெஞ் சடைமுடியும்
ஏந்துசிறு மதியொளியும் 7

735 கருணைவழிந் தொழுகுதிருக்
கண்களும்வெண் மதிமுகமும்
பொருளிதென வருள்கனிவாய்ப்
புன்சிரிப்பும் நீற்றொளியும்
தெருள்தருவெண் பளிங்கொளிபோற்
றிருமேனிப் பேரழகும்
அருள்தருமுத் திரைக்கரமும்
அருங்கமலச் சேவடியும். 8

[இறைவனை வாயுதேவன் போற்றித்துதித்தல்]

736 கண்டனன்கண் ணிரஅந்தங்
காணவொணாப் பெருமகிழ்வி
கொண்டனன்பே ரானந்தம்
கூரமனம் பரவசமாய்

---

788 சதவருடம் – நூருண்டுகள். புசிப்பின்றி – உண்ணமல். செங்கனலோன் – முருகன். வெளிசெய – காட்சிதர.

784 உலவை – (காற்று) வாயுதேவன். கால்காண – வாயு காணுமாறு.

மண்டுகூரகு கரமெகின
மாயகழ்ந்தும் தாவியும்நேர்
பண்டறியாய் நீயெளியைப்
பாவியேற் காயினையே. 9

[அறுசீர் ஆசிரிய விருத்தம்]

737 நாதனே! யிமைய வல்லி
நாயகா! மறைக ளோதும்
நீதனே! மாசி லாத
நிமலனே! யமனைக் காய்ந்த
பாதனே! யிமையா முக்கட்
பவளமால் வரையே! பாந்தட்
காதனே! மேருத் தாங்கும்
கையனே! கருணை வாழ்வே! 10

738 ஆவின்கீழ் மறைகள் நால்வர்க்
கருளிய அமுதே! துய்ய
கோலமால் விடையாய்! திங்கட்
கொழுந்துதங் கியகோ டீரா!
மாலினை ரிட்ட செந்தா
மரைவிழி துலங்குங் கஞ்சக்
காலனே! யாத்ம நாதக்
கடவுளே! கோ! என் ரோதி. 11

[இறைவன் மகிழ்ந்து வாயுவுக்கருள்புரிதல்]

739 துளியுலாங் கண்ண ஞகித்
தொழுதகை தலைமேற் கொண்டு
வளிநிரம் பார்வத் தோடு
வாய்மையிற் றுதித்தல் கேளாக்

---

786 மண்டுகூரகரம் – பூமியைக்குடைந்த பன்றி (திருமால்) எகினம் – அன்னம் (பிரமன்)

787 பாந்தள் – பாம்பு.

788 கோடீரா – சடைமுடியனே!

களிவரு முளத்த னாகிக்
காரிகை பாகத் தண்ணல்
அளிவரு மொழியால் காலின்
ஆனனம் நோக்கிக் கூறும் 12

740 வாதமே! அன்பா லுள்ளம்
மகிழ்ந்தனம் உலகுக் கெல்லாம்
ஓதரும் பிராண னாகி
உன்றிசைக் கதிப னாகிப்
பேதமி லாம லெங்கும்
பிறிவற நிறைந்து வாழ்தி
நீதயங் கிடமே சத்து
நீங்கிடம் அசத்தா மென்றும். 13

[வாயுதேவன் இத்தீர்த்தம் புகழடைய வேண்டுதல்]

741 உன்றனக் கென்ன வேண்டும்
உரைமன விருப்பென் றோத
என்றனக் குன்ரு னன்றி
என்செய மற்றொன் றிந்த
மன்றலந் தடநீர்ப் பொய்கை
வரநதி தனிலும் மிக்காய்த்
துன்றிய அகவி ருட்குச்
சுடரென விளங்க வேண்டும் 14

742 இவ்வர மொன்றும் எந்தாய்
ஈந்தரு ளென்று வேண்ட
அவ்விய மில்லாய் நீயுண்
டாக்கலின் வாயு வுப்பேர்ச்

---

740 வாதம் - காற்று (வாயு) உன்றிசை - வாயுதிசை. பிறிவற - நீக்கமற. சத்து - உயிருள்ளது,

செவ்விய தீர்த்த மாமித்
தீம்புனல் படிவோர்க் குள்ள
வெவ்விதீ முழுதும் போம்நம்
மெய்யிலொன் றுவை யீயும் 15

743 என்றருள் புரிந்து குந்தத்
தெய்தினர் எம்மை யாளும்
கன்றிள மறிமா னேந்தும்
கையரப் பொய்கை தோய்வோர்க்
கொன்றிய பாவம் யாவும்
ஒழியும்வே ண்டியவந் தெய்தும்
முன்றிகழ் பெருவி யாதி
முதலிய பிணிகள் தீரும். 16

[இந்தத் தீர்த்தத்தால் பேறுபெற்ற ஒரு வணிகனுடைய வரலாறு கூறுதல்]

744 அத்தடந் தன்னில் முற்கா
லத்திலோர் வணிகன் நாளும்
குத்திர விதீயாற் கொண்ட
கொடுந்தொழு நோய்தீர்ந் துய்ந்தான்
சத்திர நிழற்கீழ் வையம்
தனைக்குளிர் விக்குங் கோவே
எத்தகை விரிவென் றோதில்
இயம்புவன் அதனைக் கேண்மோ 17

[காஞ்சி என்னும் நகரச்சிறப்பு]

745 நாமகள் தனக்கு வேதன்
நாவென நவிற்ற லாகும்
தாமரை மகட்கு மாயன்
தன்னுரம் எனலாம் ஒருர்

---

742 மெய்யில் ஒன்றுதல் – இறைவனின் அட்டமூர்த்தங்களில் வாயுவும் ஒருகூறுதல்.

744 குத்திரவிதீ – வஞ்சகச்செயல். சத்திரம் – குடை. விரிவு – வரலாறு.

பூமகள் தனக்குக் காஞ்சி
போல்விளங் குதலால் மிக்கோர்
ஏமமா ரதற்கு நாமம்
இட்டனர் காஞ்சி யென்றே. 18

[மாடன் என்னும் வணிகன் தன்மை]

746 அப்பதி தன்னில் வாழ்வோன்
அழுக்குடை மனத்தன் சாதி
பப்பன வன்பேர் யாரும்
பகருவர் மாட னென்றே
கைப்பொருள் தன்னை வாசிக்
கடுவட்டி யாக நாளும்
செப்பியீந் திடுவான் வாஞ்சை
செய்குவன் றனத்தின் மிஞ்ச 19

747 சாதுவஞ் சனவியா பாரம்
தன்னில்வஞ் சகமே யாக்கிப்
பாதகன் தேடு வான்பொன்
பகர்மொழி மோகத் தாலே
ஏதிலார் பொருள்கள் தம்பால்
எய்திடப் புரிவன், கள்ள
நீதிசேர் தராசின் நாளும்
நிறுப்பனிப் படிப்பன் னூட்கள் 20

748 ஈட்டினன் பொருள னேகம்
எவ்விதச் சரக்குங் கொண்டு
மீட்டுவிற் றொன்று பத்தாய்
மிகப்பெருக் கினன்பொல் லாத

---

745 வேதன் – பிரமன். உரம் – மார்பு. ஏமம் – காவல்.

746 பப்பனவர் – ஒரு சாதியர். வாசி – வட்டிக்குமேல் அதிகமாகக் கழித்து எடுக்கும் கழிவுத்தொகை. வாஞ்சை – விருப்பம். தனம் – செல்வம்.

747 சாது – பேதைமை.

மாட்டியல் புடைய மாட
ணுகையின் வளர்க்கும் பொன்னின்
தாட்டிறந் தொருகா சேனும்
தன்மனைச் செலவுஞ் செய்யான் 21

749 அடுத்தவர் அந்த ணுளர்
ஆதுலர் கிளைஞர் யார்க்கும்
கொடுத்தறி யாஞர் காசும்
கொடாவிடந் தன்னி லீவான்
விடுத்துடன் விதிரா அங்கை
வியன்கொடி றுடைப்பார்க் கன்றிக்
கடப்பரிக் கயவர் என்னுங்
கட்டுரை யவன்க ணுண்டால் 22

[மாடனின் கொடுவினையை அரசனறிந்து அவன் பொருளைக் கொள்ளையிடச் செய்தல்]

750 இவ்வணம் எவரும் எள்க
இரும்பொருள் விருப்ப ரூத
மைவண வுளத்தன் அவ்வூர்
வாழுநாள் அந்நா டாளும்
செவ்விய இறைவ னிந்தத்
தீயவன் செய்கை யாவும்
அவ்வவர் புகல மெய்யென்
றறிந்துபா தகனென் றெள்ளி 23

751 முறையறி யாத மாடன்
மூடன் ஆடகமும் வெளவி
உறையுளுங் கொள்ளை யிட்டவ்
வூர்க்குமா காதென் றுய்த்தான்

---

748 தாட்டிறந்து – (பெட்டியின்) தாளைத் திறந்து. மனை – வீடு.

749 ஆதுலர் – இரவலர். விதிரார் – கைவிதிர்த்தலைச் செய்யார். "ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும் கூன்கையரல்லாதவர்க்கு" என்னும் குறட்பாவை நோக்கியது.

750 எள்க – இழித்துப் பேச. மைவணம் – கருமை.

751 ஆடகம் – பொன். உறையுள் – வாழும் மனை.

அறநெறி யின்றி யீட்டும்
அரும்பொருள் யாவும் கொள்வார்
பிறரென நூல்கள் யாவும்
பேசிய பொய்ப டாதே 24

752 கைப்பொருள் யாவுந் தோற்றுக்
காவலன் ஆணைக் கஞ்சி
அப்புரம் அந்நாட் டாசை
அற்றுமற் றூர்நா டுற்று
வைப்பெலாம் போன வன்றே
மாய்ந்திடா திருந்தே னென்னுன்
எப்படி உய்கு வேனென்
றிடருறு மனத்த னாகி 25

[மாடன் தொழு நோயுற்று வருந்துதல்]

753 நகரமொன் றதனைச் சார்ந்தான்
நல்குரர் அங்குக் காணுன்
இகல்பசிக் காற்ரு னாகி
இரந்துதின் றேக்க முற்றுத்
தகுவன வொன்று மின்றித்
தானவ ணுழலுங் காலை
மிகுதிகொள் பெருவி யாதி
மேனியில் விரவிற்றன் றே 26

754 கரசர ணாதி யங்கங்
களுங்குறைந் தளிபுண் ணாக
விரவிய முடைநாற் றங்கால்
மெய்யெலாங் கிருமி மொய்ப்பப்
பரிவுளத் தாற்ரு னாகிப்
பதைபதைத் தருகண் ணீரோ
டொருவரு முதவ லின்றி
யுற்றனன் பலநாள் துன்பம் 27

---

754 கரசரணாதி - கைகால் முதலிய உடலுறுப்புக்கள்.

755 என்னினிச் செய்வன் நாளும்
இருந்தவூர் மகீனயும், தேடும்
பொன்கீனயுந் தோற்றேன் வேறூர்
புரம்புகுந் திருந்தும் உண்டேன்
துன்னிய விகீனயேற் கிந்தத்
துயரெலாம் போதா தென்று
மன்னிய குட்ட நோயும்
வந்தெகீன வருத்து தந்தோ! 28

[முன்விகீனப்பயனல் மாடன் கம்பைநதியில் மூழ்கல்]

756 என்றுசொற் றிரங்கி மாழ்கும்
இவன்முதற் பிறவி தன்னில்
வென்றிகொள் புராணம் ஓதும்
விப்பிர ஞெருவற் கஞ்சு
பொன்றரு நலத்தால் கம்பைப்
பூம்புன லாடச் செல்வோர்
பின்ஞெடர்ந் தவனும் போயப்
பெருநதி யாடப் பெற்றான் 29

[அவன் சிவபுரம்செல்ல எண்ணிச்சென்று வாயுதீர்த்தத்தைக் காணுதல்]

757 அக்கதை யதனின் அப்பேர்
அதனில்நற் றீர்த்த மேன்மை
மிக்கதென் றுரைத்துக் குட்ட
வியாதியைப் போக்கு மென்று
தொக்கவர் கேட்பச் சொன்ன
சொல்லிவன் காதில் வீழ
இக்கணம் போக வேண்டும்
என்றுளத் தெண்ணங் கொண்டான் 30

758 சிவபுர மகிமை கூறும்
திருமறை யவரைப் போற்றி
அவர்விடை பெற்று மீண்டே
அழுகுறு தொழுநோய் தீர்க்கும்

பவனநீர் இருக்குந் தானம்
பயப்பய வந்து சேர்ந்து
கவரிலா மனத்த னாகிக்
கண்டன னந்த நீரை 31

[வாயுதீர்த்தத்தில் ஆடித் தொழுநோய் நீங்கல்]

759 வணங்கியுள் புகுந்தோர் பக்கம்
ஆடினன் தொழுநோய் முற்றுந்
தணந்தது பிறுமோர் பக்கம்
தானதி னாடுங் காலைப்
பிணங்கிமுன் குறுகுங் கைகால்
பிறையென வளர்ந்த தந்தக்
குணங்களைக் கண்டு மாடன்
குளிர்ந்துகண் களிப்ப தானன். 32

[இவ்வரலாற்றை விரித்துறைக்குமாறு புரூரவா தவுமியரைக் கேட்டல்]

760 என்றருள் புரியுந் தெவ்வ
விருடியை அரசன் நோக்கி
முன்றரு பவத்தின் மாடன்
முதுமறை யவர்க்கீ பொன்னின்
நன்றியி னெய்திற் றந்த
நலமென வுரைத்தா யந்தத்
துன்றிய செயலைத் தோன்றச்
சொலிகென முனிவன் சொல்வான் 33

[கொச்சகக் கலிப்பா]

[மாடனின் முற்பிறப்பு வரலாறு]

761 செல்வமிக மலிதருமுச்
சினியென்னுந் திருநகரில்
அல்லகல மாடனென
லாகுமிவன் முதற்பவத்தின்

---

758 பவனநீர் – வாயுதீர்த்தம். கவரிலா – வேறுபடாத.
760 நன்றி (அறம்) துன்றிய – நெருங்கிய.

மல்லல்வளந் தரும்வணிகர்
மரபினில்வந் துற்பவித்துப்
பல்வகைச்சீர் மிகவுளனெய்ப்
பார்மதிக்க வாழ்ந்தனனால் 34

762 எப்பொருளும் பெற்றிருந்தும்
ஈத்துவக்கு மின்பறியான்
மைப்புரைவன் நெஞ்சனிவன்
வாழ்மறுகில் ஓர்மறையோன்
செப்பருமி ராகவன்றன்
சீர்மருவு காதைதனை
அப்பெரியோர் யாவருங்கேட்
கத்தொடங்கி வாசித்தான் 35

763 அவரவரக் கதைகேட்டவ்
வந்தணனை யுபசரிப்பர்
இவனெருபோ துங்கேளான்
ஈந்தறியான் ஓர்காசும்
தவறகலக் கதைமுடிவிற்
சாற்றியவே தியர்க்குதவ
இவறகலப் புரமுதியோர்
எழுதினர்கள் ஊரில்வரி 36

764 அந்தவரி ஏட்டிலிவற்
கஞ்சுவிரா கன்வரைந்து
தந்திடுநீ எனக்கேட்கத்
தருவதிலை யானென்றான்
இந்தநகர் தனிலிருந்தால்
எங்களினை டொத்தவரி
வந்தவிடத் தில்லையெனில்
வாய்த்திடுமே வென்றுரைத்து 37

---

761 உச்சினி - உச்சினி நகரம். அல்லகல - இருள்நீங்க. முதற்பவத்தின் - முற்பிறப்பின் பயனால்.

762 இராகவன் சீர்மருவுகாதை - இராமாயணம்.

763 இவறகல - லோபத்தனம் நீங்க. புரமுதியோர் - ஊர்ப்பெரியவர்கள்

765 தடுத்துமறித் தடாமொழிகள்
சாற்றவினித் தீராதென்
றெடுத்துமனத் துயருடனீ
தென்னகுடி கேடென்று
கொடுத்தனன்மற் றதைவாங்கிக்
கோதில்கதை யோதினர்கைப்
படுத்தினரப் புண்ணியமிப்
பவத்தவற்கே தாயினதால் 38

766 என்றறிக மன்னேயவ்
விளங்கோவா யுவின்புனலின்
ஒன்றியமெய்ப் பிணிகழிய
ஓங்கியபே ருவகையொடு
நன்றிதரு மிப்புனலே
நற்கதிக்கே தாகுமெனச்
சென்றதிலா டிக்குருந்தைச்
சேவித்தங் கினிதிருந்தான் 39

767 இன்னவகை யவனிருப்ப
இடைகழிய நாட்சிலபின்
றன்னுடல்நீத் தான்கமலத்
தாளடைபே றுற்றனனால்
மன்னியவப் புனல்படிந்து
வான்கதியுற் றோர்க்களவில்
துன்னுமந்நீ ரின்பெருமை
சொல்லவல்லார் தாமரிதே 40

---

765 அடாமொழி – பொருந்தாத சொற்கள். தீராது – கொடுத்தாலன்றி அவர்கள் வற்புறுத்தல் தீராது. பவம் – பிறப்பு.

767 கமலத்தாள் – இறைவன் திருவடிப்பேறு.

[இத்தீர்த்த வரலாறு கேட்டோர் எய்தும் பயன் கூறல்]

768 வளிதீர்த்த மேன்மையினை
வாசிப்போர் உரைப்பதற்கோர்
அளிபெருகச் செவிக்கிடுவோர்
அவருறுமெய்ப் பிணிமுதலா
எளிவருந்தீ வினையகலும்
எய்துமிவண் வேண்டிய,பின்
களிவருபே ரின்பவளம்
காண்பர்பிற வார்மீண்டே 41

[வாயுதீர்த்தச் சருக்கம் முற்றும்]



768 அளி – கருணை. எளிவரும் – இழிவுபடுத்தவரும்.

கந்திருவ தீர்த்தச் சருக்கம்

[கலித்துறை]

[ஆவாவூவ என்னும் கந்திருவர் வரலாறு]

769 நாவார் செல்வி பூமக ளுக்கிட மாமன்னே
தாவா மேன்மைக் கந்திரு வப்புனல் தானென்றூர்
பூவார் பொய்கை யுண்டதன் வருவாய் புகல்கிற்பேன்
ஆவா வூவ என்றிரு கந்தி ருவரன்னோர் 1

770 பேரெழி லாளர்க ளிருவரும் நட்பிற் பேராதார்
கூரிய நெஞ்சினர் மேன்மைய னேகம் கொண்டுள்ளோர்
தாருநி முற்கண் வாழ்பவ ருக்குந் தலையானோர்
யாரும்வ ழுத்திடு மெய்ப்புக ழாளர்க ளறமுள்ளோர் 2

[கந்திருவரிருவரும் பிரகஸ்பதியிடம் அருளுள் பெற உபாயங் கேட்டல்]

771 இவரிரு வோருந் தமதுல கின்கணி ருக்குங்கால்
உவமையில் பிறகற் பதிவரல் காணூஉ வுபசாரந்
தவறில வாகவ னேகமி யற்றித் தாழ்ந்தெந்தாய்
புவனமெ வைக்கும் சற்குரு வாகப் பொலிகின்றேய் 3

772 நின்றெரி சனப்யாம் எய்தினம் யாவும்நி ரம்புற்றோம்
ஒன்றுரை செய்யவி ரும்பின மென்றனர் உயர்பொன்னும்
நன்றும செய்கையு ரைக்குதும் யாததை நவில்வீர்நீர்
என்றருள் செயவவ ரரனருள் பெறுமா றெணுகுற்றோம் 4

---

769 நாவார் செல்வி – கலைமகள். பூமகள் – இலக்குமி. வருவாய் – வரலாறு. ஆவா, ஊவ இவை கந்தர்வர்களின் பெயர்கள்.

770 தாரு – கற்பக முதலிய ஐந்தருக்கள்.

771 பிறகற்பதி – வியாழ பகவான் (தேவகுரு) காணூஉ – கண்டு.

772 தெரிசனம் – காட்சி. பொன்னும் – வியாழனும். எணுகுற்றோம் – எண்ணுகின்றோம்.

[பிரகஸ்பதி சிவபுரம் சென்று தவம் புரியக் கூறல்]

773 அதுவரு மாறருள் செய்யென ஆசனு மறைகிற்பான்
துதிபெறு கந்திரு வர்க்கிரு வீர்கடல் சூழ்பூவிற்
சதிருள நலமிக சிவபுர மெனுமொரு தலமுண்டாம்
பதியினி லெய்தி யிருந்தவ மாற்றிற் பரனெய்தி 5

774 நீவிர் விரும்பிய யாவு மளித்திடும் நீர்போமென்
றேவிய கன்றன னந்தணன் மகிழ்வினெ டிருவோருந்
தாவில் பெருந்துறை வந்துகு ருந்திறை தாள்போற்றி
ஆவலி னெய்தினர் கீழ்த்திசை தேமா வருகின்கண் 6

[கந்திருவர்கள் தீர்த்தத் தடமொன்றமைத்து அங்கே தவம்புரிதல்]

775 நீர்த்தட மொன்றுசெய் தங்கணி ருந்துநெ டுங்காலம்
சேர்த்தறி வைம்பொறி யாக்கிவ சத்திகழ் செயலின்றிக்
கார்த்திகழ் கண்டனை யுன்னிய ருந்தவங் கைக்கொண்டு
பேர்த்தொரு செய்கையும் நீக்கியி யற்றினர் பெயராமல் 7

[இறைவன் அவர்களுக்கு காட்சிதரல்]

776 கந்திரு வத்தவர் சிந்தைவி ரும்புதல் கடனைகச்
சிந்தையில் வைத்துயர் குந்தவ னத்திறை திருமேனி
அந்தம தற்றவ னப்பமர் குருவுரு வாய்நேரே
வந்திரு வர்க்கெதிர் நின்றுகொ டுத்தனர் வளர்காட்சி 8

[கந்திருவர் இறைவனைப்போற்றி வணங்கிப் பின் வரம்வேண்டல்]

777 அண்ணலெ ழுந்தமை கண்டுடல் புளகாங் கிதராகி
மண்ணினில் வீழ்ந்துவ ணங்கி யெழுந்தும கிழ்ந்தாடிக்
கண்ணிறை நீர்பொழி யச்சிர மீது கரங்கோலி
எண்ணமு டிந்ததி னிக்குறை யேதென் றிசைக்கின்றார் 9

---

773 ஆசன் – ஆசாரியன் (குறுக்கல் விகாரம்) சதிர் – சதுரப்பாடு.
774 அந்தணன் – (ஈண்டு) வியாழன். தேமா – தேமா மரம்.
775 ஆக்கிவசத்தி – வசமதாக்கி. கார்திகழ்கண்டன் – நீலகண்டன் (சிவன்)
776 கரங்கோலி – கைகுவித்து வணங்கி.

778 திருவளர் தருவே! யருள்நிறை கடலே! தேவே! நற்
குருவளர் வடிவே! சதுமறை முடிவே! கோவே! மெய்ப்
பொருள்ளர் கலையே! யமுதருன் மலையே! பொன்னே! நன்
மருவளர் குந்தம தாமிறை யே! யெமை வாழ்விப்போய்! 10

779 அரவொடு சிறுமதி விரவிய சடையாய்! மலர்திண் டோள்
கரமலை யுரிசெய் ததளணி புயனே! கங்காளா!
சிரமொரு கரவா! மலைமகள் கணவா! திகழ்சேர்பொன்
வரைசிலை யுடைய குருந்திறை வாவெமை வாழ்விப்பாய் 11

780 சிற்சபை வாசா! பொற்புரி நூலா தேசாரும்
அற்புத ரூபா! கற்றவர் வாழ்வே! அளகேசன்
நற்றுணை வா! கண் நெற்றியி லுடையாய்! நசையேதும்
அற்றவர் பெற்றரு ருந்திறை வா! வெமை யாள்வாயே! 12

[இறைவன் யாதுவரம் வேண்டும் எனல்]

781 இன்னவை பற்பல பன்னிவ ழுத்திய விவர்தம்மை
முன்னவ னுகிய சன்னவ னத்தமர் முதல்,பாரா
மன்னிவ ழுத்தும நற்றுதி யாலுளம் மகிழ்வுற்றேம்
என்னவு மக்கிவண் வேண்டுவ தென்ன, விசைக்கின்றார் 13

[கந்திருவர் இத்தீர்த்தம் புகழ்பெற வேண்டுதல்]

782 அய்யவெ மக்குன தருளல தொன்றினில் யாமாசை
செய்தில மதுவுத வன்றியு னருள்கொடு செயுமிந்தப்
பொய்கையு மேன்மைய தெய்திட வருணீ புரிகென்ன
செய்யச டைப்பெரு மான்மகிழ் வுற்றருள் புரிகின்றான் 14

---

779 கரமலை – யானை (கயாமுகாசுரன்) அதள் – தோல். சிரம் – பிரம கபாலம். பொன்வரை – மேருமலை. சிலை – வில்.

780 தேசு – ஒளி. அளகேசன் – குபேரன். நசை – பற்று.

781 முதல் – மூலகாரணன். பாரா – பார்த்து.

[இறைவன் அவ்வாறே அருளி மேலும்பல வரங்களைத் தரல்]

783 கந்திரு வர்க்கிறை யாகுவி ரெய்துவிர் கதிர்ஞானம்
சிந்தையி லூற்றன யாவையு மெய்துவிர் தெளிவீர்நம்
முந்துரு வுற்றிடு வீர்கடை யிற்,றிரு முதுவாவி
நந்தமி யற்பெயர் ஆகுக விதனில் நுவல்கிற்பேம் 15

784 எங்குள நீரினும் மிக்குள தாகு மிதிற் றோய்வோர்
தங்களி ருட்பவம் யாவும கன்றருள் தாமெய்திப்
பொங்கொளி நற்கயி லைத்தலை யெய்துவர் புகுதார்பூத்
துங்கந லத்தறி வீரென வன்பொடு சொற்றண்ணல் 16

785 திருந்திய நற்றவர் பூதக ணத்தொகை திசைவாழ்வோர்
மருந்தச னத்தர் நெருங்கி வரச்சிவ மணம் வீசும்
குருந்தினில் வந்துபு குந்தனர் கண்டிவர் கொண்டாடிப்
பொருந்திய தம்முல கெய்தி யிருந்தனர் புகழோடும் 17

[இத்தீர்த்தத்தில் ஆடிப்பெருமையுற்ற நந்தி வரலாறு கூறுகின்றார்]

786 சிந்தைம கிழ்ந்து சிலாதநன் மாமுனி சேயிந்தக்
கந்திரு வப்பனல் வந்துபு டிந்துமா கதியுற்றான்
அந்தம கத்துவ மேதெனில் அம்முனி யருநோன்பால்
நந்திபி றந்தனன் மைந்தனெ னச்சொன்மு னிளின்கண் 18

[நந்திபிறந்து கலைஞானம் நிறைதல்]

787 கைம்மலை யீருரி யாரரு ளால்வரு கனிவாய்நற்
செம்மலை நங்குலம் உய்ந்திட வந்தருள் சேயாமென்
றம்முனி வன்வளர் வித்தொளி நாலும னிந்துள்ளத்
தெம்மலை வுட்கழ லக்கலை யாவையு மியம் புற்றான் 19

---

783 கதிர்ஞானம் – ஒளிபொருந்திய மெய்யறிவு. வாவி – கந்திருவ தீர்த்தம்.

784 இருட்பவம் – மயக்கமுடைய பிறப்பு. புகுதார்பூ – பூமியின்கண் பிறவார்.

785 மருந்தசனத்தர் – தேவர். (மருந்து – அமிழ்தம் அசனம் – உணவு)

786 சிலாதமாமுனியின் சேய் – நந்திதேவர்.

787 கைம்மலை – யானை. ஈருரி – குளிர்ச்சிபொருந்திய தோல். ஒளிநூல் – பூணூல். மலைவு – ஐயந்திரிபுகள்.

788 ஆகம வேதபு ராணமுன் னுகுநூ லாமெல்லாம்
சோகம லாமலு ரைத்திடு முன்னுணர் சூழ்வுற்றோர்
பாகம தைக்கவு ரிக்கென வருள்பவர் பதமல்லால்
மோகம கற்றுதல் வேறிலை யென்றுள முழுதெண்ணி 20

[நக்தி சிவபுரம் வந்து இத்தடத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டு வருதல்]

789 அந்தக லந்தரு கின்றது குந்தா டவியின்கண்
கந்திரு வத்தடம் ஒன்றது வன்றியோர் கயமூழ்கிற்
சந்திர சேகரர் அருள்சேர் தற்கா காதென்றே
வந்தனன் நற்சிவ யோக வனத்திடை மகிழ்வோடும் 21

790 மிக்க பவுத்திர மொடுசங் கற்படமும் மிகவோதி
யக்கய மூழ்கி யெழுந்து குருந்திறை யடிதாழா
நெக்குள முட்கனி வோடு தரக்கணில் நீர்வாரத்
தக்கது ரைத்திவை நியதிய தாகவே சாருங்கால் 22

[அறுசீர் விருத்தம்]

[இறைவன் காட்சி தந்தருளல்]

791 கொந்தலர் கொன்றை யலங்க லணிந்த
குருந்துறை சங்கரனார்
சிந்தைம கிழ்ந்து சிலாதநன் மாமுனி
சேய்முன் எழுந்தருளி
வந்தனர் நீற்றொளி மேனியும் முக்கணும்
வார்ந்தொளிர் செஞ்சடைமேல்
தங்குமி ளம்பிறை யும்மழு மான்மறி
தங்கிய சங்கரமும் 23

792 உரகப டப்பணி யும்விட கண்டமும்
உமையொரு பாகமுமாய்
நரைவிடை மீதள வற்ற கணத்தொடு
நாதன மைந்தமைகண்

---

788 கவுரி – உமாதேவி. பதம் – திருவடி. மோகம் – மூவாசை.

789 குந்தாடவி – குந்த + அடவி – அடவி – வனம். சிவயோகவனம் – திருப்பெருந்துறை.

790 பவித்திரம் – தூய்மை. நியதி – வரையறை.

டுருகினன் நந்திப ணிந்து மகிழ்ந்துகை
யுச்சிகு வித்தாடி
இருகணி றைத்திட நீர்மொழி குழறு
வேத்துதல் மேயினனால் 24

[பேரானந் தமுற்று நந்தி இறைவனைப் போற்றி வேண்டுதல்]

793 அரகர ! சங்கர ! சம்புச தாசிவ
அமல ! தி கம்பர ! வேள்
எரிபட அழல்கொளு வியநுத லம்பக
டேறணியுந்துவ சா !
கருவளர் திருமிட றுடைய பரம்பர !
காரண ! பூரண ! நற்
பரைசிவ யோகமி னொளொரு பாகநின்
பாதமெ னக்கருளே 25

794 அம்புலி யோட ர வம்புனை செஞ்சடை
யாயயன் மாலறியா
நம்பர மா ! பர வம்பல மீது
நடம்புரி நாயக ! நீள்
செம்பொன் மலைத்தனு வங்கையி னிற்றிகழ்
சேவக ! மால் விடையாய் !
பைம்பொழில் சுற்று குருந்துறை நாதநின்
பாதமெ னக்கருளே ! 26

[இறைவன் நந்திக்குப் பதவிமுதலிய வரமருளல்]

795 இன்னன வாயள வற்ற துதித்தனன்
எம்பெரு மான்மகிழா
உன்னம தித்தெதிர் வற்றனம் நீநம்
உருப்பொலி வுற்றெமது

---

792 உரகபடப்பணி - பாம்பு. நரைவிடை - வெள்ளேறு.

793 அம்பகடு ஏறு - இடபம். துவசம் - கொடி. கரு - கருமை.

794 பரவம்பலம் - சிதம்பரமாகிய பொன்னம்பலம். தனு - வில். மால்விடை - பெரிய இடபம், திருமாலாகிய விடை.

நன்னல மேவு கணங்கள் தமக்கொரு
நாயக மாகியுயர்
பொன்னணி வாயிலின் மேவுதி யென்றிரு
மோன பிரம்புதவி 27

796 நாயக நந்தியெ னத்திரு வாய்மொழி
நல்கியிருத் தியொளி
பாயும ணித்திரு மாமுடி சூட்டினன்
பல்லிய மார்த்திடநற்
றூயதி ருக்கையி லைருள் பெற்றிடும்
சுந்தர நந்தியுமந்
சாயல ணங்கர னீரரு தாள்மலர்
தண்ணில் வணங்கினனால் 28

797 வணங்கிய நந்தியை முன்செல ஏவிநன்
மா துடன் மால்விடையார்
இணங்கிய நற்கண நாதர்கள் சூழ்வர
ஏகியிருந் தனனால்
மணங்கொள் குருந்தினன் நந்தியை வைத்தது
நாள்முதல் வாயிலவாய்க்
கணங்கள் தமக்கிறை யாயயன் மால்அடி
கைதொழ வைகினனே 29

[இவ்வரலாறு கேட்போர் உரைப்போர் உறும்பயன்]

798 செப்பிய விச்சரி தந்தனை யாவர்
செவிக்கொரு வோர்,பகர்வோர்
இப்புவி பாற்புகழ் பற்பல வோடும்
இருந்துவி னங்கொளிசேர்
துப்புறழ் வேணியன் நற்கயி லைக்கிறை
தொண்டர் தமக்குறுபே
ரொப்பக லப்பெறு வார்க ளிதற்கிலை
யுன்னிடி லேயமதே 30

[கந்திருவ தீர்த்தச் சருக்கம் முற்றும்]

---

796 அஞ்சாயலணங்கரனர் – உமையை இடப்பாகமுடைய சிவனர்.
798 துப்புறழ்வேணி – பவளம்போன்ற நிறமுடைய சடை.

இந்திர தீர்த்தச் சருக்கம்

[அறுசீர் விருத்தம். வேறு]

[இந்திரதீர்த்த வரலாறு கூறத்தொடங்கி அதன் புகழ்சிறப்புக் கூறுகின்றார்]

799 வாசநற் ருரு நீழல்
வாசவன் றடமொன் றுண்டு
பேசுது மதன்சீர் மன்னு
பெருவிருப் புடன்ஈ சான
ஆசையி லோடை ரூப
மாயமர்ந் திலங்கு மந்தத்
தேசுள நீரின் மூழ்கிற்
றிருவுடை யோர்க ளாவார் 1

800 மனமொடு வாக்குக் காயம்
ஆமிவை களினுற் செய்தீ
வினையெலாங் கழியு மாயுள்
மிகவளர்ந் திடுமோர் நூறு
கனமகப் பலனுண் டாகும்
காசினி தன்னி லந்தப்
புனலினுக் கொப்பில் லென்று
புகலமா முனி,வேந் தோதும் 2

[தேவதீர்த்த மொன்றிருக்கவும் இந்திரதீர்த்த மொன்று ஆக்கியதற்குக் காரணம் யாதென மன்னன் வினவல்]

801 இந்திரன் முதலா வானேர்
எவரும்வந் தொருநீர் வாவி
சிந்தனை மகிழ்வி னோடு
செய்தலிற் றேவ தீர்த்தம்

---

799 தாரு - (தரு) மரம். வாசவன் - இந்திரன். தடம் – தீர்த்தம். ஆசை – திக்கு. தேசு – ஒளி.

800 நூறு கனமகம் – நூறு சிறப்புடைய யாகம். காசினி – உலகம்.

முந்துள தென்றுரை வானம்
முழுவதும் ஆள்வோன் பின்னும்
தந்ததோர் நீருண் டென்று
சான்றின தென்னை எந்தாய்? 3

802 பாகசா தனன்வந் தோர்நீர்ப்
படுகருண் டாக்கற் கேது
நீகழ றுகவென் றண்ணல்
நிகழ்த்திட முனிவன் சொல்லும்
ஆகம்பொன் னிறத்த னுகும்
அந்தணன் உலக மெல்லாம்
மோகமார் சிருட்டி செய்து
முறைமையின் நிறுத்தி வாழ்நாள் 4

[முனிவர் காரணங்கூறி விளக்கல்]

803 வச்சிர பாணிக் கோவா
வசைவரும் ஊழ்நல் வேதற்
கிச்சையொன் றுளதாய்ப் பெண்கள்
எவரினும் அதிக ரூபம்
நச்சுமால் விழியி னுள்ளோர்
நங்கையைப் படைக்க எண்ணி
வைச்செழி வெல்லாம் சேர்த்தோர்
மங்கை கல்லுருவு செய்தான் 5

[பிரமன் அகலிகையைப் படைத்தல்]

804 ஏர்குடி யிருந்த கொங்கைக்
கிடைக்குடி வாங்கு மானுட்
பேரக லிகையென் றிட்டப்
பெண்ணமு தினுக்கு மாதர்

---

801 வானமுழுதும் ஆள்வோன் – இந்திரன்.
802 பாகசாதனன் – இந்திரன். படுகர் – வாவி, குளம். ஏது – காரணம் ஆகம் பொன்னிறத்தந்தணன் – பிரமன்.
803 வச்சிரபாணி – இந்திரன். ஓவாவசை – நீங்காதபழி. நச்சு – நஞ்சு. மால் – மயக்கம், பெரிய. வைச்செழிவு – உலகத்துள்ள அழகு.

நேரொரு வருமில் லென்று
நெஞ்சகங் கனியக் கஞ்சன்
சீரருட் புதல்வி யாகச்
சிறந்தினி திருந்தா ளன்றே 6

[அகலிகையின் பேரழகைப் பற்றிய வருணனை]

805 மலரயன் உலகில் உள்ள
வனப்பெலாம் திரட்டி வைத்தோர்
சிலேநுத லிவை யாகச்
செய்தனன் என்ரு லந்த
அலககல் எழில னுள்தன்
அவயவ மதனுக் கிந்த
உலகள வுவமை தன்னை
உரைத்திடி லென்ன மன்றே 7

806 ஆதலால் அவளு றுப்புக்
கவளுறுப் புவமை யன்றி
ஓதவே றிலேய ரம்பை
ஊர்வசி திலோத்த மைப்பெண்
காதல்கொ ளிரதி விண்ணோர்
காவலன் தேவி மற்ற
மாதரா மவள்காற் பக்க
வனப்பிலா யிரத்தொன் ருகார் 8

[இந்திரன் பிரமனிடம் வருதல்]

807 இன்னபே ரெழிலாள் கஞ்சத்
திறையுள மகிழ்வு தோன்றச்
சின்மொழி மழலேத் தீந்தேன்
செவிக்கினி தருந்தி வைகும்

---

804 ஏர் – அழகு. குடிவாங்கும் – இளேக்கும். கஞ்சன் – பிரமன்.
805 சிலேநுதல் – வில்லேயொத்த புருவமுடைய நெற்றி. அலகு – அளவு.
806 விண்ணோர் காவலன் தேவி – இந்திராணி. வனப்பு – அழகு.

அன்னதோ ரமையந் தன்னில்
அசுரர்தங் குருதி மாந்தி
வன்னிநெட் டுயிர்க்குஞ் சீற்ற
வச்சிர பாணி வந்தான் 9

[இந்திரன் அங்குள்ள அகலிகையைக் காணலும் பேரவாக் கொள்ளுதலும்]

808 வந்தவிந் திரன்எண் கண்ணன்
மலரடி முடியாற் சூழ
உந்தியி னுதித்தா னுசி
உரைத்துநன் மொழிகள் கூறித்
தந்தனன் இருக்கை யந்தத்
தவிசிடை பரிவு கொன்றப்
சுந்தரி கணவன் கஞ்சற்
றுதித்திலி திருக்குங் காலை 10

809 அயற்புற மதனிற் றெய்வ
அணங்கக லிகையைக் கண்கள்
நயப்புறக் கண்டான் கண்ட
நயனங்கள் மீட்கி லாஅய்
உயப்புக விலிவே றில்லென்
றுலைமெழு காக நெஞ்சம்
செயப்பெறும் மாரன் வாளி
தனுவெலாம் துளைக்க நின்றான் 11

[இந்திரன் காமவேட்கை மீதூரப் பிரமனை வினவல்]

810 அடிமுதல் முடிகா றிந்த
வணங்கெழில் வனப்புக் காணும்
படியொரா யிரங்கண் ணேனும்
பாரிக்கப் பெற்றி லேனென்

---

807 வன்னி – நெருப்பு. சீற்றம் – வெகுளி. வச்சிரபாணி – இந்திரன்.

808 எண்கண்ணன் – பிரமன். உந்தியினுதித்தான் – பிரமன். பரிவு – அனுப்பு. சுந்தரி – இந்திராணி.

809 உயப்புகல் – காமத்துன்பத்தினின்று உய்யும் புகலிடம். வாளி – அம்பு. தனு – உடம்பு.

றிடிநெடுந் துவசத் தண்ணல்
இரங்கிய உளத்த னாகிக்
கடிமல ரயனைப் பார்த்திக்
கன்னியார் என்ன வேதன் 12

[பிரமன் மறுமொழி கேட்டு மீண்டும் வினவித் தனக்கு அகலிகையை மணஞ் செய்துதர வேண்டுதல்]

811 மகபதி ! நமது பெண்ணும்
மாதினுக் குரிய நாமம்
அகலிகை யிவள்தன் மேன்மைக்
கடுத்தநற் குமரற் றேடித்
தகுமண மியற்றி யீயத்
தகுமென வெண்ணி யிந்த
நகைமுகத் தமுதை வைத்து
நாம்வளர்த் திடுது மென்றான் 13

812 தாமரைத் தலைவன் கூற
சதகிரு துளத்திற் பின்னும்
காமவெந் தீயில் நெய்யைக்
கவிழ்த்தது போல வாகி
நாமகள் கணவ னொன்று
நவிலுவ னிரங்கென் பாலுன்
சேமநல் லருளாற் றந்த
திருவெவர் பெறப்பெற் றார்கள் ? 14

813 முதியவா னவரை வர்க்கும்
முதண்மைவிண் ணாடு காவல்
அதிகநல் வளங்கள் ஆயுள்
ஐந்தரு நிதியந் தேனுத்,

---

810 பாரிக்க – வாய்க்க. துவசம் – கொடி. அண்ணல் – இந்திரன்.

811 மகபதி – இந்திரன். மேன்மை – தகுதி.

812 சதகிருது – இந்திரன். (நூறுயாகஞ் செய்தவன் என்பது பொருள்)

துதிபெறு கரடக் கும்பத்
துணையிரு மருப்புத் தந்தி
புதியகல் லமுதம் மற்றும்
போதநீ யளித்திட் டாயால் 15

[பிரமன் அவனுக்குக் கொடுக்க விருப்பமின்றி மறைத்துக் கூறல்]

814 அத்திரு வதனுக் கேற்ப
ஐயவிவ் வணங்கென் பால், உன்
சித்தம திரங்கி யீயத்
திருவுளஞ் செய்கென் றோத
மத்தவா ரணனுக் கீய
மனமில னாகி வேதன்
வைத்தநின் விருப்பம் பின்னும்
வளருகர்க் கேகு கென்றான் 16

[அகலிகையை கவுதம முனிவருக்கு மணஞ்செய்துதர எண்ணிப்
பிரமன் அவரிடம் அழைத்துச் செல்லல்]

815 ஆசையி லாமற் கூறும்
அயன்றனை யிறைஞ்சித் தன்னூர்
வாசவன் புகுத விந்த
மாதினுக் குரியன் யாரென்
றேசலில் வேதா வுள்ளத்
தெண்ணிநற் கவுத மன்றான்
மாசக லிவளுக் கேற்ற
மணமக னாகு மென்று 17

816 கன்னியைக் கொண்டு வேதன்
கௌதமன் றன்பால் நண்ண
நன்னய முகமன் கூறி
நற்றவன் இறைஞ்சி வந்த

---

813 ஐந்தரு – கற்பகம் முதலிய ஐந்து தேவதருக்கள். தேனு – காமதேனு
துணையிருமருப்புத்தந்தி – நான்கு தந்தங்களையுடைய வெள்ளையானை.
814 மத்தவாரணன் – இந்திரன் (வாரணம் – யானை)
815 வாசவன் – இந்திரன். ஏசலில் – குற்றமில்லாத. வேதா – பிரமன்.

தென்னெனத் தவவேந் தேநின்
ஏவலின் பொருட்டிம் மாதைப்
பன்னியாக் கோடி நிற்காய்ப்
பயந்தனம் இவளே என்ருன் 18

[கௌதமனுக்கு அகலிகையை மணஞ் செய்து கொடுத்தல்]

817 கஞ்சன்வாய் மொழியும் நிற்கும்
கன்னியின் வனப்பும் நோக்கி
நெஞ்சகங் களிக்க வாய்ச்சொல்
நேர்ந்தனன் முனிவன் றேனுர்
அஞ்சொலி னுளே யந்த
அருந்தவர்க் கழல்சான் ருகச்
செஞ்சொலா ரணன்ருன் மன்றல்
செய்தனன் மதிக்க யாரும் 19

[இந்திரன் அகலிகை மையலால் மயங்கியிருத்தல்]

818 இப்பரி சிது வீதாக
இந்திரன் மலரோ னேவ
மைப்படி கன்னி யந்த
மாதருள் மால்மீ தேறி
எப்படி யுய்கு வேனென்
றிடருறு மனத்த னுகித்
தப்புற னுலகில் மெள்ளத்
தளர்நடை கொண்டு புக்கான் 20

819 புக்கவன் மனம்வே ருகிப்
புலோமசை முகமும் நோக்கான்
தக்கது புரியான் துய்ய
தண்ணமு துண்ணுன் தேவர்

---

816 பன்னி – (பத்தினி) மகனே. பயந்தனம் – உண்டாக்கினேம்.
817 அழல்சான்ருக – அக்கினி சாட்சியாக. ஆரணன் – பிரமா.
818 பரிசு – நிலைமை. மால் – மயக்கம். தப்புறனுலகு – அந்தப்புரம்.

தொக்கவ ரெவர்க்கும் ஏவல்
சொல்லுவ சொல்லான் பைங்கண்
இக்குவேள் கணைக்கி லக்காய்
யெரிமெழு காகி நின்றான் 21

820 அரசியற் கொலுவின் வாரான்
அரியரா டகமும் பாரான்
விரவிய தேவ கீதம்
விருப்பொடு காதிற் கேளான்
பரவவோ ரிடத்தி ரான்றன்
பரிசொரு வருக்குங் கூறான்
அரவகல் காஞ்சி யல்குல்
அகலிகை மயம தானான் 22

[இந்திரன் நிலைகண்டு தேவர்கள் வருந்திக் குழப்பமுறல்]

821 இவன்மனக் கவற்சி யைக்கண்
டிமையவர் சங்கை எண்ணி
அவரவர் தெளிவு மாற்றம்
அறைவதை யொன்றும் கேளான்
துவளிடை யரம்பை மாதர்
தொழும்ஊர் வசியு முன்னுய்
பவளவாய் வரவி னோதப்
பயில்விழி யாளும் பாரான் 23

[அகலிகை மணஞ் செய்துகொண்டமையறிந்து இந்திரன் மயங்குதல்]

822 வானவர்க் கிறைவன் முனிவ்
வணமனம் மருளுங் காலைக்
கானவா ரளகத் தாமக்
கன்னியைக் கௌத மற்குப்

---

819 புலோமசை – இந்திராணி. பைங்கண் இக்கு – பசியகணுக்களை யுடைய கரும்பு. வேள் – மன்மதன்.

820 பரவ – மற்றவர்கள்வந்து வணங்க. காஞ்சி – மேகலையாடை, அணி.

821 சங்கை – ஐயப்பாடு.

பானிறத் தெகினப் பாகன்
பண்ணினன் மன்ற லென்று
போனசொற் கேட்டா னுள்ளம்
புழுங்கிநெட் டுயிர்த்து மாள்கி 24

[அகலிகையை வஞ்சனையால் நுகர எண்ணி இந்திரன் சூழ்ச்சிசெய்தல்]

823 அகலிகை காமச் செந்தீக்
காற்றல னூகி யுள்ளத்
தகுதிக ளிழந்து கள்ளத்
தாலனு பவிப்பான் அல்லின்
மகபதி தவசிக் கௌத
மாமுனி பர்ணசாலை
அகமக லுதய கால
மாங்குறி காட்டி நின்றான் 25

[இந்திரன் அகலிகையை முனியுருவில் துய்க்குங்கால் கௌதமன் வந்து காணல்]

824 வைகறை யாயிற் றென்று
மாமுனி எழுந்து தூநீர்ப்
பொய்கையின் வாயிற் சென்றான்
புரந்தரன் உள்புக் கந்த
மொய்குழ லாளைச் சேர்ந்து
முயங்கினன் முனிவ னின்னும்
வெய்யவ னுதிக்குங் காலம்
மிக்குள தென்று மீண்டான் 26

[முனிவன் வெகுண்டு மகபதியைச் சபித்தல்]

825 வந்தமா முனிவன் இல்லின்
வாயிலிற் புகுத, வில்லாள்
பரந்தன முலையிற் சேர்ந்த
பாகசா தனன்விண் டோட

---

822 எகினப்பாகன் – இந்திரன் (எகினம் – அன்னம். பாகன் – செலுத்துபவன்)

823 கள்ளத்தால் – வஞ்சனையால். அல்லின் – இரவில். அகமகல் – புறத்தேசெல்லும். குறி – அடையாளம்.

824 மாமுனி – கௌதமன். வெய்யவன் – கதிரவன்.

அந்தமில் வெகுளி பூண்டிவ்
வசடன்யார் என்று நோக்கி
இந்திர னகு மென்றூர்ந்
தெரிவிழி காலச் சொல்வான் 27

826 முனிவரன் பன்னி யென்றும்
முன்னிவன் அறநூல் சாற்றும்
தனியர சியலும் பாரான்
தருமமும் கருதான் புல்லன்
நனியறக் கடையன் இந்த
நாரியின் பகத்தி னர்வம்
மனதினிற் கொடுவந் தோர
வஞ்சனை புரித லாலே 28

827 புவனமோர் மூன்றுந் தீய
புன்றொழில் புரிந்த தீய
அவமதிப் புடைய னுமென்
றசதிசெய் திழிக்க நாணும்
உவமையி லரசு நீங்கி
உடம்பெலாம் யோனி யாகி
இவனிடர் கூர்க வென்றே
இட்டனன் கொடிய சாபம் 29

[அகலிகையைக் கல்லாகச்சபித்து தேவமாதர்களும்
கற்புநிலை தவறுக என முனிதல்]

828 வாசவன் றனக்கிச் சாபம்
வழங்கி,யுள் நடுங்கி நிற்கும்
பாசிழை மனைவி தன்னைப்
பார்த்தய லானென் றூர்ந்தும்

---

825 எரிவிழிகால - கண்கள் நெருப்பைக்கக்க.

827 அசதிசெய்திழிக்க - உலகம் இவனை எள்ளி நகையாடிப் பழிகூற.

நேசம்வைத் தினங்கு பேதாய்
நீயுங்கல் லாக வென்று
பேசிவிண் மாதர் கற்பும்
பிரிந்தெலாந் தழுவு மென்றான் 30

[அகலிகை அஞ்சிச் சாபநீக்கம் வேண்டுதல்]

829 அருந்தவன் சாபங் கேட்ட
அணங்கக லிகைதா னஞ்சிக்
கருங்குழற் கற்றை தாழக்
கட்புனல் சோர வீழ்ந்தென்
மருங்கணை யவன்வே றென்று
மனந்தெளி கில்லேனிகி
இருந்தனன் தலைவ நெஞ்சம்
இரங்கிடென் றிரந்து வேண்ட 31

[அகலிகையை இராகவன் திருவடி தீண்டலால் உய்வை என அருளல்]

830 பன்னியின் வருத்த மந்தப்
பண்ணவன் கண்டு பேதாய்
என்னுரை வழுவா நீகல்
லெனச்சில காலந் தங்கும்
அன்னெறி யிடை யிராக
வன்வரு மவன்ரு ளுன்னை
முன்னைநல் வினையாற் றீண்ட
முன்னுரு வாவை யென்றான் 32

[இந்திரன் தன்னிலைக்கு வருந்தி மறைந்துவாழ எண்ணுதல்]

831 உடன்சிலை யுருவ மானுள்
ஒண்டொடி சசிம ளைன்
திடந்தரு மேனி யெங்கும்
செறிந்தன யோனிக் குப்பை

---

828 ஓர்ந்தும் – காரணங்களால் தெரிந்தும். இணங்குபேதாய் – உடன் பட்ட அறிவில்லாதவளே விண்மாதர் கற்பும் பிரிந்தெலாம் தழுவும் என்றது – தேவமாதர்களும் கற்புநிலை கெடுவர் என்றபடி.

830 என்னுரைவழுவா – என்சாபம் தவறாது.

அடங்கமில் லாத போகி
யக்குறி யுடம்பெ லாங்கண்
டிடந்தரா மனத்த னாகி
என்செய்வே னிதற்கென் றேங்கி 33

832 கண்களாற் காண்போ ரெள்ளக்
கடவுளர் நாப்பண் மெய்யிற்
பெண்குறி யோடும் வைகப்
பெறுதலின் இறத்தல் நன்றென்
றெண்கொளா, உலகில் என்போல்
இவ்வசை யெவர்பெற் றுரென்
றுண்குண ரெவருங் காண
தொளிக்குவன் என்று வெட்கி 34

[இந்திரன் தாமரைத்தண்டினுள் மறைந்துறைதல்]

833 மேருவின் புறத்திற் சார்ந்தோர்
விரைமரை யோடை யிற்றன்
பேருடல் ஒடுக்கிப் புக்கோர்
பிரசநாட் கமல நாளத்
தானுறுப் படக்கும் ஆமை
யாமென வொடுங்கிப் பன்னாள்
சீரிழந் தொருவ ராலும்
தெரிந்திடா திருந்தா னன்றே 35

[தேவர்கள் இந்திரனை எங்கும் தேடிக் காணது வருந்துதல்]

834 தாமரை நாளந் தன்னில்
சதக்கிரு திருத்தல் காணர்
ஏமநாட் டிமையோர், வேந்தன்
எவ்வழிப் புகுந்தா னென்று

---

831 சிலை – கல். சசிமணாளன் – இந்திரன். அடங்கம் – அடக்கம். போகி – இந்திரன்.

832 எண்கொளா – எண்ணி. வசை – பழி.

833 விரைமரையோடை – மணம் பொருந்திய தாமரைப்பொய்கை. பிரசம் – தேன். நாளம் – தண்டு.

வேமனத் துடனெண் டிக்கும்
விரைந்துசென் றெங்குந் தேடிக்
காமுறக் காணு ராகிக்
கவலைகொண் டிருந்தா ரன்றே 36

[பிரகஸ்பதி தன் ஞானத்தால் இந்திரன் நிலையும் இருப்பிடமும் அறிதல்]

835 விண்ணவர்க் கிறைவ னில்லா
விண்ணுல கொளியிழந்த
கண்ணென வெகுநாள் துன்பக்
காரிரு ளழுந்தல் நோக்கி
எண்ணின னண்ட ளப்பான்
இந்திர னெங்குற் றனென்
றுண்ணிக ழுணர்ச்சி யாற்றேர்ந்
தோர்ந்தன னுற்ற தெல்லாம் 37

[பிரகஸ்பதி இந்திரனிருக்குமிடம் வந்து அழைத்தல்]

836 இவ்விதி வருமோ வென்றென்
றிரங்கிய வுளத்த னாகிக்
கவ்வைகொ டண்ணல் வைகுங்
கமலநீ ரோடை எய்தி
அவ்விய மில்லா நெஞ்சத்து
ஐய இந்திரவோ! என்ன
நைவரு மளப்போன் கூவி
னன்புரு கூதன் கேட்ப 38

837 கேட்டவிந் திரன்றன் னுசான்
கிளர்த்தொலி யாமென் றெண்ணித்
தாட்டுணை பணிவே னென்று
தாமரை நாளம் நீங்கிக்

---

834 ஏமநாடு – தேவலோகம். வேமனம் – வேகும் நெஞ்சம்.

835 ஆண்டளப்பான் – பிரகஸ்பதி. (அறுபதாண்டுமுறை குருவின் சுழற்சியால் வருதலின் இப்பெயர் வந்தது)

836 அவ்வியம் – சருக்கம். அளப்போன் – குரு. புருகூதன் – இந்திரன்.

கோட்டமில் குருவின் முன்னர்க்
குறுகவும் நாணி நாணிப்
பாட்டளி முரலுந் தாரான்
பையவந் திறைஞ்ச ஆசான் 39

[பிரகஸ்பதி இந்திரனைக் கழறி அவன்நிலைமாற உபாயங் கூறல்]

838 தருத்திரு நாடு சேராத்
தானெடு நாணித் திந்த
மருத்திக ழோடை யின்கண்
மறைந்தனை விதியி தென்ரூற்
கருத்தினிற் றுயரே னுள்ளங்
கலங்கின தடா தென்றெண்ணி
நெருப்பினைத் தொடுவா ருண்டோ
நிகழ்த்தியென் பாலென் ரோத 40

839 புரந்தரன் வெட்கி யானென்
புகலுவன் என்று கண்ணீர்
சொரிந்திட நிலம்பார்த் திந்த
துரிசுடல் எங்கு மாக
அருந்தவ னுரைத்த சாபம்
அகலுமா றுளதோ வென்ரூன்
வருந்தல்நீ யதற்கு பாயம்
வழங்குவ னென்ன லோடும் 41

340 அருளினு லுரைத்தா யுன்றன்
அருளலாற் புகல்வே றின்றுன்
திருவுள மிரங்கி யிந்தத்
தீவினை முழுதுங் தீர்த்தல்

---

887 பாட்டளி – பாடும் வண்டுகள்.
888 நாணித்து – நாணமுற்று. அடாது – பொருந்தாது.
889 துரிசு – குற்றம், களங்கம்.

மருவுநின் கடனு மந்த
மறையினீ யருள்செய் கென்னப்
பொருவகல் வியாழப் புத்தேள்
புகலுதல் மேயி னனைல் 42

[சிவபுரம் சென்று குருந்திறைவனீ வழிபடுக எனக் குருமொழிதல்]

841 மாதவர் சீற்றச் செந்தீ
வசனம்,வெண் பிறைசேர் சென்னி
நாதனீ யன்றித் தீர்ப்பார்
நாடில்வே றிலீயன் னேற்கும்
பூதலந் தனில நேக
புரங்களுண் டவையின் மிக்க
தாதிநற் கயிலீ என்றோர்
அருந்திரு நகருண் டங்கண் 43

842 நிறைபரம் பொருளாய்ச் சத்தாய்
நிமலமா யறிவா யின்பாய்க்
குறைவொடு நிறைவி லாதாய்க்
குணங்குறி கடந்த வொன்றாய்
மறைகளின் வடிவாய்ப் பொங்கும்
வளர்பரப் பிரம மேவண்
டறைதரு குருந்து ரூப
மாயமர்ந் திருந்த தன்றே 44

843 அத்திரு நகரில் நீசென் று
அருட்குருந் திறைய வன்முன்
பத்தியிற் பணிந்து போற்றப்
பசுபதி யிரக்கஞ் செய்துன்

---

840 மறை - இரகசியம். வியாயழப்புத்தேள் – பிரகஸ்பதி.
841 வசனம் – (ஈண்டுச்) சாபம். நாடில் – ஆராய்ந்தால்.
842 வண்டறைதருகுருந்தம் – வண்டுகள் இசைபாடிச் சூழும் குருந்தமரம்.

சித்தநோய் முழுதுந் தீரத்
திருவருள் புரிவ னென்னக்
கைத்தலங் குவித்தீ தேகற்
கருமமென் றமரர் கோமான் 45

[இந்திரன் இறைவனைப் பலவாறு போற்றி வழிபடுதல்]

844 வந்தனன் புகுந்தவ் வூரை
வணங்கினன் அழனீர் தோய்ந்து
சிந்தையின் மகிழ்வு பொங்கத்
திருவருட் பெருமை காட்டும்
குந்தமூ லத்தின் முன்பு
குவிந்தகைத் தலைமே லாக
இந்திர னுவந்து தாழ்ந்தங்
கிறைஞ்சினன் நிறைந்த வன்பால் 46

845 அண்ணலே! கருங்கட் செவ்வாய்
அம்பிகை பாகத் தெந்தாய்!
விண்ணுலாம் மதியந் தோயும்
விரிசடைக் குழகா! நெற்றிக்
கண்ணினாற் காமற் காய்ந்து
காரிகை யிரதி வேண்ட
உண்ணெகிழ்ந் திரக்கஞ் செய்த
உயர்குருந் திறைவா போற்றி! 47

846 வேலைவாய் எழுந்த நஞ்சை
விரும்பியுண் டெமைக்காத் தாண்ட
நீலகந் தரனே! யுன்றாள்
நேசர்கள் நால்வர்க் காக

---

843 சித்தநோய் - மனத்துயர்.
844 அழனீர் - அக்கினி தீர்த்தம்.
845 குழகா - அழகுடையவனே. காமற்காய்ந்து - மன்மதனை எரித்து.

ஆலின்கீ ழிருந்து வேதத்
தரும்பொருள் உரைத்த செல்வா!
காலனைக் காய்ந்து மாணிக்
கருள்குருந் திறைவா போற்றி! 48

847 அழுக்குடை மனத்த னாகி
அடியனேன் புரிந்த தீய
இழுக்கினை லெய்தி னேனிவ்
விழிபுன தருளி னாலே
வழுத்துடைத் தருளல் வேண்டும்
வானதி முடித்த கோவே!
புழுத்தலை புலைய னேனுன்
பொன்னடிக் கபயங் காவாய்! 49

848 என்றுசொற் றிரந்து வேண்டி
இறைஞ்சியீ சான தீக்கிற்
றுன்றுமா மலக நாப்பண்
சுரர்பதி தடமொன் றுக்கிக்
கொன்றைவே ணியனை யுள்ளம்
குறித்திருந் தீரைஞ் ஞூறென்
றொன்றிய பருட முணற்
றுறுதவ மியற்றி னனால் 50

[இந்திரன் தவத்திற்கிரங்கி இறைவன் குருவடிவாய்க் காட்சி தரல்]

849 புரந்தர னிய நோன்பு
புரிவதைக் குருந்தின் மேலும்
கரந்தைவார் சடில மோலிக்
கண்ணுத லெந்தை யன்னான்

---

846 வேலை - கடல். கந்தரனே - கண்டத்தையுடையவனே. மாணி - மார்க்கண்டேயன்.

847 வழு - குற்றம். வானதி - ஆகாய கங்கை.

848 ஆமலகம் - நெல்லி (மரம்). சுரர்பதி - இந்திரன். உணற்று - உணவுண்ணல்.

அரந்தைதீர்த் தருள வேண்டி
யருட்குரு மூர்த்த மாகப்
பரந்தெழு மடியார் சூழப்
பண்ணவர் கோமுன் உற்றான் 51

850 சிரித்தநன் முகமு மையன்
திருவடி நிலையுங் கையிற்
றரித்தபுத் தகமுங் கங்கை
ததும்புசெஞ் சடையும் மேனி
விரித்தநல் லொளியுஞ் சூழும்
மெய்யடி யவரு மாய்முன்
தெரித்திடக் கண்டா னந்தஞ்
சேர்ந்துமுன் னிறைஞ்சி வீழ்ந்தான் 52

[இறைக் காட்சி கண்டு இந்திரன் போற்றித் துதித்தல்]

851 வீழ்ந்தவ னெழுந்து நின்று
விம்மியா னந்த வெள்ளத்
தாழ்ந்தன னிருகை சென்னி
அஞ்சலி கோலி யன்பிற்
சூழ்ந்தனன் விழிகண் மாரி
சொரியநின் றேத்து கின்றான்
போழ்ந்தவெண் மதியி னீனப்
புரந்தர னென்னும் கோமான் 53

852 கருணையங் கடலே! முக்கட்
கன்னலே! யண்ட கோடிக்
கொருபெருந் தலைவா! அன்பர்
உளந்திருக் கோயி லாக
மருவிய பரமா னந்த
வள்ளலே! யயன்மால் காணாத்
திருவுரு வுடைய ஞான
தேசிகா! போற்றி போற்றி! 54

849 சடிலமௌலி - சடைமுடி. அரந்தை - துன்பம்.
851 போழ்ந்தவெண்மதி - பிறைச்சந்திரன்.

853 ஆதியும் ஈறு மில்லா
அமலமே! விமல ஞானச்
சோதியே! உமையாள் நங்கைத்
துணைவனே! மறைக ளோதும்
நீதியே! ஆல முண்ட
நித்தனே! முடியிற் றங்கும்
சீதவெண் பிறையாய்! குந்தத்
தேசிகா! போற்றி போற்றி! 55

854 பருப்பத வில்லாய் போற்றி!
பவளமால் வரையே போற்றி!
கருப்பனைக் காய்ந்த நெற்றிக்
கண்ணனே போற்றி! வெள்ளிப்
பொருப்புறை விடையாய் போற்றி!
புரிசடைக் குழகா போற்றி!
திருப்பெருந் துறையில் வாழும்
தேசிகா போற்றி போற்றி! 56

[இந்திரன் வேண்டுதல்]

855 அடியனேன் புரிந்த தீமை
யாலுளம் கனன்று வேதப்
படிவமாங் கவுத மன்ருன்
பாவியேன் றேக மெங்கும்
கொடியிடை வலைக்கை மாதர்
குறிபல தோன்ற வென்ருன்
செடியனேன் பொருக்க லாற்றேன்
தீர்த்தருள் செய்தி என்ருன் 57

---

853 சீதவெண்பிறை – குளிர்ந்த வெள்ளிய பிறை.

854 பருப்பதம் – மேருமலை. கருப்பன் – மன்மதன் (கரும்பு வில்லை யுடையவன் என்றும் கரியநிறமுடையவனென்றும் பொருள்)

855 செடியனேன் – குற்றமுடையேன்.

[இறைவன் முனிவன் சாபத்திற்கு மாற்று அருளுதல்]

856 தேக்குநீர்ச் சடிலத் தெந்தை
தேவர்கோன் மாற்றங் கேளா
ஊக்கமார் கௌத மப்பேர்
உறுவனம் அன்ப னன்னோன்
வாக்குரை வழுவா நீசெய்
மாதவ மதும்வீண் போகா
தாக்கமுண் டாகு மாரூர்வ்
றறைகுதுங் கேளென் ரோதும் 58

857 இழிவுதங் கிடவுன் றேகழ்
தேய்ந்தபெண் குறிகள் மாறி
விழிகளா யிரமாய் என்றும்
விளங்குறு மதனல் யாரும்
பழியுரை பகரார் நீயும்
பலவளம் பொழிவிண் ணோடுன்
மொழிவழி நிற்கத் தேவர்
முதல்வனு யளவில் காலம் 59

858 வாழ்ந்துபி னையு ளந்தம்
வரும்வழி நம்பே ரின்பத்
தாழ்ந்திடு நலமுஞ் சேர்வாய்
அஞ்சல்நீ யாக்கும் நீரின்
வீழ்ந்துமூழ் கினர்க்கும் ஈய்தும்
விருப்பெலா மென்று கூறிப்
போழ்ந்தவெண் மதியன் சென்று
புக்கனன் குருந்து தன்னில் 60

[அருள்பெற்ற இந்திரன் அமரருல செய்தி ஆளுதல்]

859 அவ்வருள் பெறும் வலாரி
ஆயிரங் கண்ண னாகி
நவ்விசேர் கரத்துக் குந்த
நாதரை யிறைஞ்சி யேத்திச்

858 ஆயுளந்தம் - ஆயுள்முடிவு. நீயாக்கும் நீர் - நீ உண்டாகிய இத்தீர்த்தம்.

செவ்விடை பெற்று வானஞ்
சேர்ந்துவா னவர்கள் போற்றக்
கௌவையொன் றேனு மின்றிக்
காவல்செய் திருந்தா னன்றே 61

[இச்சருக்கம் பயின்றோர் உறும்பயன்]

860 இம்முறை மையினல் வந்த
திந்திரன் றீர்த்த மேன்மை
விம்முமப் புனலின் றன்மை
விளம்புதற் கரிய தென்ரூன்
செம்மைநற் றவனும் ராச
சிங்கமு மகிழ்ச்சி கொண்டான்
அம்மவிச் சரிதங் கேட்போர்
அறைபவர் பிறவி சேரார் 62

[இந்திரதீர்த்தச் சருக்கம் முற்றும்]



---

859 வலாரி – இந்திரன். நவ்வி – மான். கௌவை – அலர்மொழி.

860 நற்றவன் – தவுமியன். ராசசிங்கம் – புருரவன். அறைபவர் – கூறுபவர். பிறவிசேரார் – முத்தியடைவர்.

பராச தீர்த்தச் சருக்கம்

[தரவு கொச்சகக் கலிப்பா]

861 அருந்தவனை கியபரா
சரமுனிவன் றடமுளது
பொருந்துமதன் றனக்கிணையாப்
புகலவொரு நீரிலையப்
பெரும்புனலின் மேன்மையினைப்
பேசரிதென் ரோதமுனி
திருந்தியசெங் கோலரசன்
செப்பலுறு வான்பரிவால் 1

[தவுமியரைப் புரூரவன் பராசதீர்த்தம் தோன்றக்
காரணம் யாதென வினவல்]

862 சகலமுமுற் றுணர்ந்தருள்செய்
தவுமியமா தவவேந்தே
புகலருமம் முனிவரன்ரூன்
போந்தொருநீ ராக்குதற்கே
தகலமுற வுரைத்தருளென்
றவன்மொழியப் புகல்வனறம்
மிகநெருங்கி வளர்தருமா
விரதிபரா சரமுனிவன் 2

[பராசரன் மகவாசையால் திருப்பெருந்துறை நண்ணினன்
எனத் தவுமியர் கூறல்]

863 அலககலும் பலகலைக்கும்
ஆகரமா மிவனெனுமோர்
நலமருவு மகவாசை
நண்ணினனங் கெண்ணமொடு

---

861 இணையாப்புகல - ஒப்பாகக்கூற. நீர் - தீர்த்தம். அரசன் - புரூரவன்.

862 ஏதுஅகலமுறஉரை - காரணத்தை விரித்துக் கூறுக. மாவிரதி - பெரியதவசி.

தலமதனி லதிகமெனும்
சன்னவன மதுசார்ந்தான்
நிலவியமுற் காலமதில்
நிகழ்திரே தாயுகத்தில் 3

[பராசரன் குருந்தீசரை வணங்கித் துதித்தலும்
தீர்த்தமுண்டாக்கித் தவமியற்றலும்]

864 சார்ந்தமுனி வரனழல்நீர்
சார்ந்துவந்து தோய்ந்துநலம்
சேர்ந்தகுருந் தீசர்முனம்
சென்றிறைஞ்சிக் கண்ணருவி
வார்ந்தொழுகச் சூழ்ந்துமறை
வாசகங்க ளாற்றுதிசெய்
தார்ந்தமகிழ் வுடன்குழவி
யாசையினீ முன்புகன்று 4

865 வேண்டுதல்செய் தருந்தவத்தை
மேற்கொண்டு செயமனது
பூண்டணிக்கை யொடுமேற்பால்
போயொருகூப் பிடுதூரம்
தீண்டுபுனல் வெள்ளாற்றின்
தெற்கரம்பை சூழ்நடுவோர்
நீண்டவசு வத்தமயல்
நீர்த்தடமொன் ருக்கியவன் 5

866 மோதிவரும் முக்குறும்பு
மூச்சவித்து நோன்பொடுநற்
காதலினத் தரவேண்டும்
கண்ணுதலே யென்றரன்றன்

---

868 அலகு – அளவு. ஆகரம் – கடல். மகவு – புதல்வன். அதிகம் – சிறப்பு.

864 அழல்நீர் – அக்கினி தீர்த்தம். ஆர்ந்த – நிறைந்த. புகன்று – கூறி

865 மனதுபூண்டு – உளத்தில் எண்ணி. அணிக்கை – அருகில். கூப்பிடுதூரம் – ஓர் அளவு. கரம்பை – படுகை. அசுவத்தம் – அரசமரம்.

பாதமல ரிணைமறவாப்
பண்பினனெய்ப் பன்னெடுநாள்
ஆதரவின் மாதவமங்
காற்றியிருந் தானன்றே 6

[இறைவன் குருவடிவாய் வந்து காட்சி கொடுத்து வரங்கேள் எனல்]

867 பராசரன்பன் னெட்டவசு
பண்ணுதலால் வெண்மதியோ
டராவணிசெஞ் சடைக்கற்றை
யண்ணல்குருந் தீர்சமகிழ்ந்
தொராலின்மறைப் பொருள்விரித்த
உயர்குருவின் வடிவுகொடு
புராதனமா முனிவனெதிர்
போந்தனன்சூழ் தரக்கணங்கள் 7

868 மாதவனும் பூங்கொன்றை
வார்சடையன் தோன்றுதல்கண்
டாதரவின் வீழ்ந்திறைஞ்சி
யானந்த பரவசனாய்
வேதமுடி வெனுங்குருந்தில்
வீற்றிருக்குங் குருபரன்முன்
காதல்கனிந் தேயொழுகக்
கைசிரமேற் கொண்டிசைப்பான் 8

[பராசரன் இறைவனைப் போற்றிப் புகழ்தல்]

869 மாலொடுநான் முகனறியா
வள்ளலே வானவர்க்காய்
ஆலமமு தாகவுணும்
அண்ணலே பாற்கடலோர்

---

866 மூக்குரும்பு – ஆணவ முதலிய மூக்குற்றம். காதலன் – மகன். ஆதரவு – அன்பு.

867 அராவணி – பாம்பினையணிந்த. ஒராலின் – ஓர் ஆலமரத்தின் கீழிருந்து. புராதனமாமுனிவன் – பழமையான பராசரன்.

868 சடையன் – சிவபிரான். குருபரன் – குருவடிவாக வந்துள்ள இறைவன்.

பாலகனுக் காயழைத்த
பண்ணவனே யோர்முனிசேய்
காலனைக்கண் டேங்கவருட்
கண்ணுதவுங் குருந்தேசா 9

870 முப்புரந்தீ யூட்டுமன்று
மூவர்தமைக் காத்தருள்செய்
துப்புறழ்வே ணித்தலீவா
தொண்டருள முங்குருந்தும்
எப்பொழுதும் நாடியெழுந்
திருக்குமிட மென்றிருக்கும்
அப்பா ! அப் பார்சடிலத்
தய்யாவென் குருந்தேசா 10

871 போதமறி யாச்சிறிய
புன்மையே னைப்பொருளாய்
நாத ! எழுந் தருளினையுன்
நல்லருளின் பாங்கவனென்
ரோதுகே னெந்தாய்என்
றுள்ளமுரு கிப்பரவச்
சீதமதி வேணியனும்
தெய்வமுனி வற்குரைப்பான். 11

[பராசரன் சிறந்த புத்திரப் பேறு வேண்டுதல்]

872 யாவரெமக் குன்போல
வன்பர்நெடு நாளிருந்து
நீவருந்திச் செய்தவத்தால்
நேர்ந்தனம்வேண் டியதுரையென்

---

869 மால் – திருமால். ஆலம் – ஆலகாலவிடம். பாலகன் – அபிமன்யு முனிவர். ஓர்முனி – மிருகண்டு. சேய் – மார்க்கண்டேயன். அருட்கண் – அருள் நோக்கம். உதவும் – செய்த.

870 துப்பு – பவழம். உறழ் – ஒப்பு. வேணி – சடைமுடி. அப்பார் சடிலம் – கங்கையாகிய நீர் நிறைந்துள்ள சடாமுடி.

871 போதம் – மெய்யுணர்வு. பாங்கவன் – பக்கத்தவன். சீதமதி – குளிர்ந்த பிறை.

றேவமுனி வரன்மகிழ்ந்துன்
இணையடித்தா மரைமறவா
மாவரம்நற் சேயருளிவ்
வாவிக்குந் தாநலமே! 12

[இறைவன் அவ்வாறே வியாசமுனிவனை மகவாக அருளுதல்]

873 முனிவரன்கூ றியவிருப்பம்
முக்கணிறை வன்கேளா
இனிதுமகிழ்ந் துரைத்தவெலாம்
ஈந்தனன்நீ தருங்குழவி
புனிதமுறு பரஞானப்
பொருள்களுமா யுளும்பெருகித்
தனிமறையா கமமுதல்நூல்
தனைமுழுதும் ஆய்ந்தெவர்க்கும் 13

874 குருமுதலா யிருந்தருளுங்
குணமுடையோ னவனென
அருள்புரிந்து போந்துகுருந்
தத்திருந்தா னெம்பெருமான்
திருமுனிவன் அவ்விறைவன்
திருவருளின் பெருமைகினைந்
துருகியநெஞ் சுடன்மிகவும்
ஒங்குகளிப் பினைஞகி 14

[பராசரன் யமுனைக்கரையில் மச்சகந்தியைக் கண்டு அவள் மூலம் மகனைப்பெற எண்ணிக் கூறல்]

875 வந்துதிருக் குருந்திறையை
வந்தனைசெய் தனுமதியாற்
சிந்தைமகிழ் வுடன்றனதா
சிரமகினைந் துத்தான்போய்

---

872 நேர்ந்தனம் – உன்முன் காட்சிகொடுத்தோம். ஏவ – கட்டளையிட. நற்சேய் – நல்லபுதல்வன். வாவி – பராச தீர்த்தம்.

873 நீதருங்குழவி – நீ பெறப்போகும் புதல்வன். பரஞானப்பொருள் – மெய்ப்பொருள்.

874 குருமுதலாய் – ஆசாரியர்களுக்குத் தலைவனுய்.

முந்துமயமு னைக்கரையில்
முன்னலும்நெய் தற்றலிவன்
தந்தமச்ச கெந்தியெனும்
தாழ்குழலிக் கண்டனனல் 15

876 மட்டகலுங் கூர்விழியாள்
மன்மதபா ணம்போனின்(று)
இட்டமுடன் ருன்நாவாய்
எற்றுதொழில் பூண்டொழுகும்
கட்டெழிலாள் காதலிறைக்
கைத்தூங்கு குண்டிகைநீர்
தொட்டவள்மேற் ருன்றெளித்தான்
துர்க்கந்தம் போயொழிய 16

[மச்சகந்தி பரிமளகந்தியாதல்]

877 நீதிதரு மாதவன்கை
நீருடம்பிற் சேர்த்தலுமம்
மாதுபரி சுத்தபரி
மளகந்தி யாய்முனிவன்
பாதமல ரிற்பணியப்
பைந்தொடிகேள் நீயுமொரு
காதலனைப் பெற்றிடுவை
காலமிது போற்கிடையா 17

[பரிமளகந்தி முனிவருக்கு உடன்பட்டு வியாச முனிவரை ஈன்றுதரல்]

878 என்னலுமம் மாதுமும
திச்சைவழி நிற்பனென
மன்னியவன் பொடுபுணர
வாசமலர்க் குருந்திறைவன்

---

875 யமுனை – யமுனைநதி. முன்னலும் – நெருங்க. நெய்தற்றலிவன் – மச்சகந்தியின் தந்தையாகிய செம்படவன்.

876 மட்டகலும் – அளவின் விரியும் (கள்போன்ற மயக்கம் திகழுமெனலுமாம்) நாவாய் – படகு. கைதூங்கு – கையினிடத்தில் தொங்கும். குண்டிகை – கமண்டலம். துர்க்கந்தம் – புலால்நாற்றம்.

877 அம்மாது – மச்சகந்தி. காலம் – மகப்பெறுதற்காங் காலநிலை.

றன்னருளால் வேணிமுடி
தண்டுகமண் டலமிலக
மின்னிகர்தே சுடனுதித்தான்
வியாசனெனும் மாதவர்கோன் 18

[வியாச முனிவன் பெற்றோரை வணங்கித் தவம்புரியத் திருப்பெருந்துறை சேர்தல்]

879 வந்துதித்த மைந்தனெனும்
வாதரா யணன்றனது
தந்தையைவந் தித்துணர்விற்
றன்னிகர்வே றிலனெகிச்
சிந்தையருந் தவம்புரியச்
செல்கின்ற ததற்குரிய
தெந்தவிட நற்றலஞ்சொல்
எந்தாயென் றோதினனே 19

880 அரியதிரு மகன்மொழிகேட்
டருந்தவனும் பராசரனும்
பெரிதுமகிழ்ந் தருகிருத்திப்
பேசவேண் டியபேசித்
திருமருவுங் குருந்தூரிற்
சேர்கெனத், தாயொடுதந்தை
மருமலர்த்தா ளிணையிறைஞ்சி
வந்தனன்குந் தாடவியில் 20

881 வாதரா யணன்றந்தை
வாவியிற்சென் றுடியுடன்
ஆதரவாற் குந்தமூ
லத்தைவலங் கொண்டிறைஞ்சிப்

---

878 இச்சை – விருப்பம். வேணிமுடி – சடைமுடி. இலக – விளங்க. தேசு – ஒளி. வியாசன் – வேதவியாசன்.

879 வாதராயணன் – வியாசமுனிவன். வந்தித்து – வணங்கிப்போற்றி. ஓதினன் – கேட்டான்.

880 குருந்தூர் – திருப்பெருந்துறை. தாய் – பரிமளகந்தி. அடவி – காடு.

போதநெடு நாட்டவத்திற்
புக்கிடச்செய் தெக்கலீக்கும்
நாதனிவ னெனென்னும்
நல்வளம்பெற் றனன்றே 21

[பராசதீர்த்தத்தின் பெருமையும் படிந்தார் எய்தும் பயனும் கூறல்]

882 சகலநலங் களும்பரா
சரன்றடநீர் தருதலினால்
மகிமைதிக ழப்புனலின்
வந்துமுழ் குதல்புரிய
வெகுசனனம் புரிதருநல்
வினையுளதே லுளதாகும்
தகுநலஞ்சேர் வார்புகலும்
சரிதமிது கேட்பவரே 22

[பராசதீர்த்தச் சருக்கம் முற்றும்]



---

881 தந்தைவாவி – பராச தீர்த்தம். போத – நிறைந்த. நாதன் – தலைவன்.

882 நல்வினை – புண்ணியம். தகுநலம் – மிக்க செல்வம்.

சூரிய, சந்திரர் தீர்த்தச் சருக்கம்

[கலிவிருத்தம்]

[தவுமியர் சூரிய தீர்த்தத்தின் சிறப்பை முன்னர்க் கூறத்தொடங்குதல்]

883 சூரி யன்சந்தி ரன்றட மென்றிரு
நீர்க ளுண்டுநி கழ்த்துவன் முன்கதிர்ப்
பேரின் வாவியின் பெற்றியென் றோதுவான்
நாரு லாமன மன்னன்முன் னற்றவன் 1

[கதிரவன் தன் மனவிருப்பம் உணர்த்துதல்]

884 ஆயி ரங்கதி ரோனண்ட மாமணிக்
கேய வேற்றுநற் றீப மிருட்பிழம்
போய நுங்கு மொருதிகி ரிப்பதம்
வாயு மாவிர தத்தினிற் பண்ணவன் 2

885 சிருட்டி காலம் வரத்தவஞ் செய்துநாண்
சுருட்டு வேணியன் றொல்லருள் பெற்றெலாம்
இருட்டி ராவகை யெய்துவ னென்றதன்
பொருட்டு வந்தனன் பூங்குருந் தூரினில் 3

[கதிரவன் திருப்பெருந்துறை வந்து தவம்புரிதல்]

886 வந்த பானு வகுப்புன லாடிநற்
குந்த மூலத்தைக் கும்பிட் டிறைஞ்சியே
சிந்தை மாமயல் தீர்த்துன் றிருவருள்
தந்தி டென்று துதிபல சாற்றியே 4

---

883 கதிர்ப்பேரின்வாவி – சூரியதீர்த்தம். பெற்றி – தன்மை. நார் – அன்பு. மன்னன் – புரூரவன்.

884 இருட்பிழம்புஒய – இருளின் திட்ரசி நீங்க. நுங்கும் – விழுங்கும். பதம் – நிலை. வாயும் – வாய்க்கும். பண்ணவன் – பிரமன்.

885 வர – வருமளவும். நாண் – நாகம். வேணியன் – சிவபெருமான். எய்துவன் – விளங்குவேன்.

886 பானு – சூரியன். வகுப்புனல் – அக்கினி தீர்த்தம். மயல் – மயக்கம்.

887 அனுக்கை பெற்றனி லன்றடத் துக்கன
வினுக்கி சைதிசை யிற்றட மொன்றுசெய்
மனத்த னகி யமைத்தயல் வைகியே
பனிப்ப கைவெகு நாட்டவம் பண்ணினன் 5

[இறைவன் காட்சிதரக் கண்டு சுடரோன் மகிழ்ந்து போற்றி வேண்டுதல்]

888 பானு வின்றவம் பார்த்துக் குருந்துறை
ஞான நாயகன் நண்ணினன் வெய்யவன்
ருனை மூந்தடி சாய்மரம் போல்விமுந்
தூனை கிழ்ந்துகை யுச்சியிற் ருங்கியே 6

889 செய்யனே திரு மாமறை தேடிய
மெய்ய னேவட மேருவிற் ருங்கிய
கைய னேகரு ணைக்கட லேகுருந்
தைய னேயுன் னடித்தொண் டருள்வையே ! 7

890 மூவ ருக்கு முதற்பொரு ளாகுமா
தேவ ! சங்கர ! சிற்குண ! பொன்மலைப்
பாவை பங்க ! பரனே ! குருந்தமர்
காவ லா ! கடன் காப்ப துனக்கெனை 8

[இறைவன் கதிரவனுக்குப் பல சிறப்புகளை அளித்து மறைதல்]

891 போற்றி னைனருள் பூத்தனன் பொற்சடை
யாற்றி னன்கதி ரானனம் நோக்கியுன்
ரூற்று மேனி சுடர்ப்பிழம் பாகியே
சாற்று மவிர்கிர கங்கள் தலைவனுய் 9

---

887 அனுக்கை (அருஞ்ஞை) – ஆணை. அனிலன் – வாயு. அனல் – அக்கினி. (இவையிரண்டும் ஈண்டுத் தீர்த்தங்களை உணர்த்தும்) பனிப்பகை – சூரியன்.

888 வெய்யவன் – கதிரவன். சாய்மரம்போல் – மரஞ்சாய்ந்ததுபோல. ஊன் – உடம்பு.

889 மேருவிற்ருங்கிய – மேருமலையை வில்லாக ஏந்திய.

891 பொற்சடையாற்றினன் – சடையில் கங்கையையுடையவன். கதிர் – சூரியன். ஆனனம் – முகம்.

892 கரும நாதனு மாயுல குக்கெலாம்
மருவு சாட்சிய தாய்நல் வலக்கணுய்
உருவில் நீயுமொன் ருவையிவ் வொண்புனல்
பொருவி லுன்பெய ராற்பொலிந் தோங்குறும் 10

893 அகலும் நோய்களெ லாமதி லாடினேர்
உகவை எய்துவர் நாளுமென் ரேதியப்
பகல வன்றனே நோக்கிப் பரிந்தருள்
மிகவி ருத்திக் குருந்திடை மேவினன் 11

[கதிரவன் பெற்ற பேறுகூறிச் சந்திரனைப்பற்றிக் கூறத் தொடங்குதல்]

894 சரிக்கு மாத்ம வருக்கந் தமக்கெலாம்
பிரிக்கொ ணுதபெ ருந்துணை யாய்மிக
விரிக்கும் பேரொளி யாகி விளங்கினன்
உரித்தி றச்சொல்வன், உடுபதி நீரினி 12

895 விளங்கு திங்களின் தீர்த்தநன் மேன்மைகண்
டளந்து சொல்ல வரிதரி தப்புனல்
உளங்கு ளிரக்கு டைபவ ருற்றமெய்
துளங்க லின்றி விளங்குவர் சோதியாய் 13

[சந்திர தீர்த்தம்பற்றிப் பேசுவதே பண்ணியமெனல்]

896 தேசு டைச்சிவ ஞானிய ராருவர்
மாசெ லாமக லும்மதின் றல்வரல்
பேசு கின்றனன் முனச்சி பெட்புடன்
ஈசன் நல்லருள் எய்துத லெண்ணியே 14

---

892 கருமநாதன் – வேள்வி முதலிய கருமங்களுக்குத் தலைவன். வலக்கணுய் – இறைவனுடைய வலது கண்ணுகி. உருவில் – இறைவனின் எண் வகை உருவங்களுள். பொருவில் – ஒப்பில்லாத.

893 உகவை – உவப்பு. மிகவிருத்தி – மிகவும் செய்தருளி.

894 சரிக்கும் – இயங்கிவரும். ஆத்மவருக்கம் – உயிரினங்கள். உரித்து இறச்சொல்வன் – விளக்கி முழுதுங் கூறுவேன். உடுபதி – சந்திரன். நீர் இனி – நீர்மையை (வரலாற்றை) இப்பொழுது.

895 குடைபவர் – மூழ்கித்தினைப்பவர். துளங்கல் – நடுங்குதல்.

896 மாசு – பாவம். வரல் – வரலாறு. நச்சி – விரும்பி. பெட்பு – விருப்பம்.

[சந்திரன் குருந்தீசரை வணங்கி உளமுருகுதல்]

897 சேர்ந்த னன்சிவ யோகவ னத்தருள்
ஆர்ந்த குந்தம தாமரன் றன்முனம்
நேர்ந்த னன்மிக நெக்கழு தான்மிக
வார்ந்து கட்புனல் மார்புற விம்மவே 15

898 அடிய னேனையு மாண்டருள் செய்வது
கடிம லர்க்குருந் தண்ணல் கடனென
ஒடிவி லாப்பரி வாலுவந் தேத்தியம்
முடிவி லானரு ளாற்பிறை முன்னவன் 16

[சந்திரன் தடமுண்டாக்கித் தவமியற்றல்]

899 வெய்ய வன்றட மேற்புற மாகவோர்
பொய்கை தன்பெய ராற்பொலி வித்தயல்
செய்ய மாதவம் நாட்பல செஞ்சடை
ஐயன் றன்னை நினைந்திருந் தாற்றினன் 17

[இறைவன் காட்சி தரல்]

900 சந்தி ரன்றவம் நோக்கிநற் ருணுவும்
குந்தம் நீங்கிக் குருவின் வடிவமாய்
வந்து தோன்றினன் மாதவர் போற்றிட
இந்து வுங்கண் டெழுந்தடி வீழ்ந்தனன் 18

901 வீழ்ந்தெ ழுந்துவி ரைநறுங் கொன்றைசேர்
தாழ்ந்த வேணியிற் றண்புன லின்னெடு
போழ்ந்த வெண்மதி சூடும் புனிதர்முன்
ஆழ்ந்த சிந்தைய னாய்நின்று வாழ்த்துவான் 19

---

897 அரன் – சிவபெருமான். நெக்கழுதான் – மனம் உருகியழுதான்.
898 ஒடிவிலா – முறிந்து நீங்குதலிலாத. பிறை – சந்திரன்.
899 வெய்யவன்றடம் – சூரிய தீர்த்தம். பொலிவித்து – உண்டாக்கி.
900 தாணு – இறைவன். இந்து – சந்திரன்.
901 தண்புனல் – கங்கை. போழ்ந்த வெண்மதி – பிறைச்சந்திரன்.

[இறைவனைப் போற்றிச் சந்திரன் துதித்தல்]

902 மாலும் நான்முக னுந்தெரி யாததோர்
கோல மே! யருள் சேர்தரு குன்றமே!
நீல கந்தர னே! புரம் நீறெழப்
பால லோசனம் பாரித்த பண்பனே! 20

903 குந்த மேவடி வாக விருந்தருள்
எந்தை நீவர வேதவஞ் செய்தனன்
சந்த மாமறை போற்றுந் தலைவ! உன்
முந்து பேரரு ளின்முறை யீதென 21

[இறைவன் வேண்டுவ கேளெனலும் பல வரங்களையருளுதலும்]

904 திங்கள் கூற்றுத் திருச்செவிக் கிட்டருள்
சங்க ரன்புகல் வான்சசி யேயுனக்
கிங்கு வேண்டுவ தெத்திரு வென்றனன்
பொங்கு தண்மதி போற்றிப் புகலுவான் 22

905 வேண்டும் நின்னடித் தாமரை என்றருள்
பூண்டு கொண்டு புகன்றிடக், குஞ்சித
தாண்ட வப்பெரு மானது தந்தனம்
ஈண்டு நம்மருள் மெய்விழி யாகுவை 23

906 துகிர்நம் வேணிக்கோர் சூளா மணியுமாய்ச்
சகமெ வைக்குமோர் சீவநற் ரூதுவாய்
நிகரி லாநிசி நாதனு மாகுக
தகுதி சேர்நலம் தாங்குக நன்புனல் 24

---

902 நீலகந்தரன் – நீலகண்டன். பாலலோசனம் – நெற்றிக்கண்.

904 சசி – சந்திரன். எத்திரு – எவ்வகைச் செல்வம்.

905 தாண்டவப்பெருமான் – சிவபெருமான். மெய்விழி – (என்உடம்பில்) இடக்கண்ணாகுவை.

906 துகிர் – பவளம். வேணி – சடை. நிசி – இரவு.

907 என்று பற்பல நல்வரம் ஈந்துபொற்
குன்ற வில்லி குருந்திடை மேவினன்
துன்று மவ்வரு ளின்படி சோமனும்
வென்றி சேர்தரு மீரும் வீளங்கினர் 25

[இச்சருக்கம் கேட்டலின் பயன்]

908 இன்ன தாங்கதிர் இந்தறல் மேன்மையென்
றுன்னு மாதவ னேதின னிச்செயல்
தன்னி யார்சொல் பவர்செவி தாழ்ப்பவர்
பொன்னி னாட்டவர் போற்ற விருப்பரே 26

[சூரிய சந்திரர் தீர்த்தச் சருக்கம் முற்றும்]



907 குன்றவில்லி – மேருவை வில்லாகவுடைய சிவன். சோமன் – சந்திரன்.

908 கதிர் இந்து அறல் – சூரியச் சந்திர தீர்த்தங்கள். தாழ்ப்பவர் – கேட்பவர்.

சரசுவதி இலக்குமி தீர்த்தச் சருக்கம்

[அறுசீர் விருத்தம்]

[இலக்குமி தீர்த்த வரலாற்றை முன்னர்க் கூறத்தொடங்குதல்]

909 பாற்கடலிற் பிறந்ததிருப் பாரதிதந்
திடுமிரண்டு பட்ட முண்டாற்
சாற்றுதுமுன் பொறிதடத்தின் றகமைதிருக்
குருந்தவனந் தன்னி லெய்தி
நோற்றருள்பெற் றிடத்திருவா நுண்ணிடைவந்
தருமறைகள் நுவறற் கெட்டா
நீற்றழகர் வடிவாகும் திருக்குருந்தை
இறைஞ்சினள்ந்ன் நேய முற்றே 1

910 அக்கினிதீர்த் தம்மதனுக் குத்தரத்திற்
புகுந்தாங்கோர் அரவி யாக்கித்
தக்கநிய மத்துடன்பன் னளரிய
தவம்புரிந்து தகைசேர் சூந்த
முக்கணிறை வன்அருளால் சக்கரமால்
மனிவியெனும் முதல்வி யாகி
மிக்கவளம் பலபெருக வீற்றிருந்தாள்
அந்தமலர் மின்னின் வாவி 2

[இலக்குமி தீர்த்தம் எல்லாச் செல்வத்தையும் தருமென்று கூறிச் சரசுவதி தீர்த்த மேன்மையை சொல்லத்தொடங்குதல்]

911 இலக்குமியோ டையெனப்பேர் எய்தியிடும்
புனலிற்சேர்ந் தெழிலி னுடின்
அலக்கணறும் அடைதருமெண் ணளவீறந்த
திரு,வாணி யிலந்தை மேன்மை

---

909 திரு – இலக்குமி. பாரதி – சரசுவதி. பட்டம் – தீர்த்தக்குளம். பொறி – இலக்குமி. நீற்றழகர் – சிவன் (நீறு – திருநீறு).

910 உத்தரம் – வடதிசை. அரவி – குளம். சக்கரமால் – சக்கரத்தை யுடைய திருமால்.

சொலத்தகுமா றன்றுமுனஞ் சன்னவனஞ்
சேர்ந்துசொலின் தோகை யென்பாள்
நிலத்துறவீழ்ந் தருட்குருந்தே சரைவந்தித்
தருள்செய்வாய் நிமலா வென்று 3

[சரசுவதி பிரமன் மனைவியாய்ச் சிறப்புறுதல்]

912 பரிவுபெரு கப்போற்றி யழல்மடுவின்
றென்பாற்புன் னைகத் தின்கீழ்
மருமலர்நீர்த் தடமொன்று மாணவமைத்
தப்புனலின் மாடு வைகிப்
பொருவகல்மா தவநெடுநாட் புரிந்துகுருந்
திறையருளாற் புவன மீன்ற
திருமலர்ச்செல் வனுக்குரிய தேவியாய்க்
கலைஞானச் செல்வி யானாள் 4

[சரசுவதி தீர்த்தப் பெருமையும் இச்சருக்கங் கூறுவோர் உறும் பயனும் கூறல்]

913 அக்கலைமான் புரிதருமத் தீர்த்தமதில்
ஆடினவர் முக ரேனும்
எக்கலையும் கற்றுணர்வர் எந்நாளும்
அவ்வலர்மின் னிருந்து நாவிற்
தக்கநட மிடுவளவர், தமையகலும்
புரிந்தவினை ; சாரும் நன்மை
தொக்கவிவர் தடப்பெருமை சொல்பவர்கேட்
பவர்கள்வளந் துய்த்து வாழ்வார். 5

[சரசுவதி இலக்குமி தீர்த்தச் சருக்கம் முற்றும்]

---

911 ஓடை – தீர்த்தம். அலக்கணறும் – துன்பம் நீங்கும். வாணி – சரசுவதி. இலந்தை (இலஞ்சி) – குளம். சொலின்தோகை – கலைமகள்.

912 அழல்மடு – அக்கினிதீர்த்தம். புன்னகம் – கொன்றைமரம்.

913 மூகர் – ஊமையர். அலர்மின் – கலைமகள். தொக்க – ஒன்றுபட்ட.

பாண்டவ, கௌதம தீர்த்தச் சருக்கம்

[பாண்டவ தீர்த்தச் சிறப்பை முன்னர்க் கூறத் தொடங்குதல்]

914 பாண்டவருங் கௌதமரும் பரிவொடுதந்
திடுமிரண்டு பட்ட முண்டால்
ஈண்டுமுறை யிற்பகர்தும் பாண்டவநீ
ரின்மேன்மை இறைவ கேண்மோ
வேண்டியநல் வளம்பெருகத் தினபுரத்தி
னேர்உயர்ந்த வெய்யோன்றுய்ய
மாண்டமனத் தருமர்முத லோவரொடு
மாறுகொளும் மனத்த ஞகி 1

[மகாபாரத வரலாற்றைச் சுருக்கிக் கூறல்]

915 பலபலவஞ் சனகள்புரிந் தரக்குமா
ளிகைமுதற்பல் லிடங்கள் தன்னிற்
கொலைபுரிதற் கெண்ணிமனங் கொண்டனன்மற்
றவரிவன்றன் கொடுமை நாணி
விலகியிந்தி ரப்புரத்தில் வளமோங்க
விருந்தரிய ராச சூயம்
நலமருவப் புரிந்தனர்கள் இவன்காண
மனத்தழுக்கம் நண்ணித் தன்னுள் 2

916 எவ்வகையா லிவரைவெல்வ தென்றென்று
சகுனிமுத லெவரி லேடும்
கவ்வைமனங் கொண்டளந்து சூததனல்
வெல்வதெனக் கருத்து முற்றிச்

---

914 கேண்மோ – கேட்பாயாக. வெய்யோன் – (ஈண்டுத்) துரியோதனன்.
915 நாணி – நீதிக்கொவ்வாமையால் நாண முற்று. அழுக்கம் – பொருமை.

செவ்விழியி லாத்தந்தை யோலையினுல்
அழைத்தறத்தின் செம்ம லோடும்
பொய்வகைச்சூ தியற்றியவர் திருவெல்லாங்
கவர்ந்தனன்றீப் புன்மை மிக்கோன் 3

917 ஆண்மையினற் றிறத்தினில்மிக் கோரெனினும்
ஐவருநல் லறத்தா றெண்ணிப்
பாண்மொழிகற் பரசியெனும் பாஞ்சாலி
யொடுமந்தப் பழன நாடு
நீண்மருவு மெல்லியினைக் கடந்தருங்கான்
அகம்புகுந்து நிலவுங் காலைச்
சேண்மலிநற் பெரும்புகழ்சேர் திருக்குருந்தா
டவிவந்து சேர்ந்தா ரன்றே 4

918 வந்தவவ ரத்தலத்தின் மாண்பெவையும்
நோக்கியழல் மடுவின் ஆடிக்
குந்தமூ லத்தின்முனம் சென்றிறைஞ்சி
மெய்யன்பு குலவப் போற்றிச்
சிந்தனைமுற் றிடும்படியத் திருநகரி
னிருந்துதவஞ் செய்ய வெண்ணி
முந்துமழற் புனற்கங்கி மூலையிற்சென்
ரூர்வாவி முயன்று செய்து 5

919 பன்னெடுநா ளங்நீரின் பாங்கிருந்து
நோற்றருளின் படிவாங் குந்த
முன்னவன்றன் பேரருளாற் பாரதப்போர்
முயன்றெவையும் முடித்துத் தீய
புன்மையனஞ் சுயோதனன்செய் புன்மையவன்
உயிரோடும் போக்கிப் பின்னர்
நன்னர்முடி கவித்துலகு தன்னெடு
நாட்புரந்து நலமுற் றூரால் 6

---

916 கௌவைமனம் – வஞ்சனையுள்ளம். முற்றி – முடிவு செய்து. அறத்தின்செம்மல் – தருமராசன்.
917 ஐவர் – பஞ்சபாண்டவர். பாண்மொழி – பண்ணிசைபோலும்மொழி
918 குலவ – நிறைய். அங்கிமூலையில் – அக்கினித் திசையில்.

[பாண்டவ தீர்த்தச் சிறப்புக் கூறிக் கௌதம தீர்த்தம்பற்றிக் கூறத் தொடங்கல்]

920 அவர்கள்தரும் பொய்கையின்பேர் பாண்டவருற்
றீர்த்தமென அறைவ ரந்த
உவமைதவி ரும்புனலி னுடுமவர்
பவமெவையும் ஒருவித் தீர்வர்
கவர்மருவும் வகையெவையும் பின்வருநீர்
கௌதமன்விண் காவ லாளன்
தவறிழைத்தல் தகைக்கண்டு மகையாகக்
கல்லாகச் சபித்தா னன்றே 7

[அகலிகையை மீண்டும் பெறக் கௌதமன் குருந்தூர் வந்து தவமியற்ற எண்ணுதல்]

921 கல்லுருவா யவள்புகுத கௌதமனவ்
வகலிகைதன் கவினுஞ் சீரும்
மெல்லியலும் பண்புமவள் மேன்மையுஞ்சிந்
தித்துலியின் மெழுகாய் நெஞ்சம்
புல்லவெழும் விரகமோ கிதனகி
யவள்மகையாய்ப் பொருந்து தற்கோர்
சொல்லருமா தவம்குருந்தூர் தனிலியற்றிப்
பெறுவனெனத் துணிந்து வந்தான் 8

[கௌதமன் தீர்த்தடம் அமைத்தல்]

922 வந்ததிரு முனிவனழல் மடுவினிற்சென்
றுடிமன மகிழ்ச்சி பூப்பக்
குந்தமூ லத்தினவர் திறைஞ்சியன்பின்
வலங்கொண்டு போற்றிச் சூழ்ந்து
சந்தமலர்த் திருக்குருந்துக் கிரண்டுகுரோ
சத்தளவு சார்ந்து கீழ்பால்
உந்துதிரைப் புனற்றடமொன் றுவப்புடன்செய்
தனனருகின் உறுதி கூற 9

---

920 விண்காவலாளன் – இந்திரன்.
921 புல்லவெழும் – பொருந்தியெழும்
922 குரோசம் – ஒரு கீட்டலளவை. அருகின் – பக்கத்தில்

[கவுதமன் தவமியற்றலும் இறைவன் தோன்றியருளலும்]

923 கனகமணி மன்றினருட் காரிகையி
னுடனடிக்குங் கருணை வாழ்வை
மனதினின்வைத் தரியதவம் மாண்பொடுபல்
காலம்மறை மரபிற் செய்தான்
இனமருவுங் கணந்தழுவக் குருந்திறைவன்
தெதிர்தோன்ற வெழுந்து தாழ்ந்து
புனனிறைசெஞ் சடிலமுடி புங்கவரே
றே! என்று போற்றி செய்தான் 10

924 அன்பொடுபற் பலதுதிகள் சொற்றிரக்கும்
முனிக்கண்ணல் அகவிகைப் பெண்
முன்போலுன் பணிசெய்தற் குரியவனாய்
வருவள்நம துருவ மாகும்
மன்பரவும் புகழிரா கவனடியின்
பரிசத்தால், மயங்க லென்று
நன்கருள்செய் துடன்குருந்தில் வந்துபுகுந்
தனனத்ம நாத னன்றே 11

925 மாதவனு குங்கௌத மாமுனிகுந்
தேசரருள் வரத்தி னலே
சீதைமண வாளனடி தீண்டுதலாற்
கல்லுருவந் தீர்ந்து முன்போல்
தாதவிழுங் கூந்தலக லிகைமனை யாய்ச்
சாரமுனி தாக மோகம்
ஏதுமில னிகிமகிழ் வெய்தினனம்
மாதுவட மீனு யொத்தாள் 12

---

923 நடிக்கும் – நடம் புரியும். கருணை வாழ்வு – இறைவன். கணம் – கூருத்திர கணங்கள். அடியின் பரிசத்தால் – பாதம் தீண்டுதலால்.
925 வடமீன் – அருந்ததி.

[இச்சரிதம் சொல்பவர் கேட்பவருறும் பயன் கூறல்]

926 அம்முனிசெய் தடமதற்குக் கௌதமதீர்த்
தம்மதப்பேர் ஆயிற் றந்தச்
செம்மைதரு நீர்மடுவிற் ரேய்பவர்தம்
காமியம்போம் சேரும் நன்மை
இம்மையினிற் பெறுவர்கதி யம்மையினி
லிச்சரிதம் இயம்ப வல்லார்
தம்மொடுகா திற்கொளுவோ ரும்பெறுவர்
நீங்காமற் றழையு மின்பம். 13

[பாண்டவ, கௌதம தீர்த்தச் சருக்கம் முற்றும்]



926 காமியம் – ஆகாமிய கன்மம்.

பத்த தீர்த்தச் சருக்கம்

[எழுசீர் ஆசிரிய விருத்தம்]

927 பத்த தீர்த்தநல மோது தும்மது
பரிந்து கேட்கென வியம்புவான்
உத்த மத்தவுமி யத்த வக்குரிசில்
உலகம் யாவுமொரு குடைநிழல்
வைத்து நாடொறும்வ ளர்த்தி டும்புரூர
வாவி னேடுகிரே தாயுகம்
வித்த கம்பெறுசெல் கால மாமதில்
விரும்பி மெய்த்தொழில் செயுந்தவர் 1

[முனிவர்களின் தவவொழுக்கம்]

928 அளவி லாதவர்கள் கிருபை நெஞ்சருல
காசை யற்றபரி பாகர்தம்
உளம ரன்சர ணிடத்த லாதுபிறி
தொன்றை யுங்கருதி லார்மிகும்
வளமி குந்தசிவ சத்தி வந்துபதி
மகிமை தங்கினர்கள் நீறணிந்
தொளிரு மேனியர்கள் அஞ்செ முத்துநிதம்
ஓது நாவுள புராதனர் 2

[முனிவர்கள் வியாக்கிரபாதர் பதஞ்சலி முனிவர்களோடு இறைவனைத் தரிசித்து மகிழ எண்ணுதல்]

929 பவள மொத்திலகு மேனி மாமகுடர்
பந்த முற்றவர்கள் கண்களாற்
சிவபி ரானினுடன் வாழ்வு கண்டுதெரி
சிக்கு மாசைகள் செனித்துளார்

---

927 நலம் – மகிமை. வித்தகம் – ஞானம். தவர் – தவமுனிவர்கள்.

928 கிருபை நெஞ்சர் – கருணை வாய்ந்த உள்ளத்தவர். அரன்சரண் – சிவனுடைய பாதங்கள். அஞ்செழுத்து – பஞ்சாட்சரம். புராதனர் – பழமையானவர்.

இவர்கள் தம்மொடுவாழ் அன்பி னிற்பெரிய
வினையி லாதபுலி முனிவனும்
தவமு தற்றலைவ னுகு மென்றிடுப
தஞ்ச லிக்கருணை வள்ளலும் 3

930 சேர்ந்தி ருந்தளவ ளாவி நற்செயல்
தெரிந்த சிந்தையர்க ளாகியே
நேர்ந்து றும்பொழுது நடன மேன்றருளும்
நிமல னென்றெவரும் விழிகணீர்
வார்ந்து சோரவுரை செய்ய மெய்யரெனும்
மாத வத்தரச ரிருவரும்
ஆர்ந்த காதலுற வுங்க ளுக்கெதிரின்
றருளும் முக்கணிறை யையர்காண்! 4

931 பரம பூரணம தாகு மப்பொருள்
பரிந்து யிர்க்கருள் புரிந்திடற்
குரிய பற்பல விடங்க ளுண்டுசிவ
யோக மாவன மவைக்கெலாம்
பெரிய நற்றலம தாம தன்கணெவிர்
பிள்ளை வெண்மதியர் குந்தமாய்
அரிய பற்பலவ ரங்கள் வேண்டுவ
தளித்து யிர்க்கினி திருந்தனர் 5

[பதஞ்சலி முதலியோர் திருநடக் காட்சி காண வேண்டி குருந்தவனம் சென்று சேர்தல்]

932 ஆத லாற்சொலுமி டத்த னேந்துநம
தாசை சொற்றவ ணமர்ந்துயாம்
நீத மார்தவ மியற்றி லைரன்
நிருத்த வாழ்வருள் கொடுத்திடும்

---

929 பந்தம் – தொடர்பு. செனித்துளார் – தோன்றியுள்ளார். வினை – கர்மம். புலிமுனி – வியாக்கிரபாதர்.

930 நிமலன் – சிவபிரான். இருவர் – பதஞ்சலி, வியாக்கிரபாதர்.

931 மாவனம் – பெரிய வனம்.

போது மின்னென வெழுந்து மெய்யருள்
பொருந்து மாதவ கணங்களோ
டோது மவ்விருநன் முனிவ ரும்பெருமை
யுற்ற குந்தவனம் நண்ணினர் 6

[குருந்தீசரை வணங்கி வழிபட்டு முனிவர்கள் வேண்டுதல்]

933 நண்ணு மாதவர்கள் அந்த மாநகர்
நலங்கொள் சீரெவையும் நோக்கியே
புண்ணி யத்தலமி தென்ற கங்கவி
பொருந்தி யக்கினி புனற்படிந்
தண்ணல் வெண்ணில வணிந்த செஞ்சடையெ
மையன் மெய்யுருவ மாகியே
விண்ணு லாவியுயர் குந்த மூலமுன்
விருப்பின் வந்துதெரி சித்தனர் 7

934 அரவ மாமுனிவி யாக்கி ரச்சரண
வண்ணல் மாதவன்முன் னகிய
விரவு தாபதர்கள் அனைவ ருந்திகழ்வி
ரைச்சு ருந்திரைமுன் வீழ்ந்தெழாப்
பரவ சத்தொடுடல் புளக முற்றுவிழி
பரிய முந்துதவ மகிழ்வொடுங்
கரமலர்த் தொகைகள் சிரமி ருத்திகடம்
கருது மிச்சையொடு கழறுவார் 8

935 வேத மந்திரசொ ரூப!சம்புசரு
வேச! தேசிக! பராபரா!
நாத! வுன்றனட னம்வி ரும்பிவெகு
நாள லைந்துமஃ தெய்திலேம்

---

982 நீதம் – முறைமை. நிருத்தவாழ்வு – திருநடனக்காட்சி. போதுமின் – வாருங்கள்.

984 அரவமாமுனி – பதஞ்சலி முனிவர். யாக்கிரச்சரணவண்ணல் – புலிக்கால் மாமுனிவர். விழிபரிய – ஆனந்தக்கண்ணீர் வழிய. கழறுவார் – வேண்டுதல் செய்வார்.

போத மின்பநட வனுப வத்தலது
புகுதல் கண்டில மிரங்குவாய்!
கீத மாரொருகு ருந்து ருபமென
நின்றி டும்பரம நிமலனே! 9

[மாதவர்கள் நீர்த்தட முண்டாக்கித் தவமியற்றி வழிபடல்]

936 என்று மெய்ப்பரிவி னோடி யம்பியல
ரிட்டி றைஞ்சிமறை மொழிகளால்
மன்ற லந்துதிகள் எண்ணி லாதன
வழுத்தி யவ்விறை யளிக்கையாற்
பொன்றி டாதவட திக்கி லெய்தியொரு
பொய்கை செய்ததி லிருந்துதாம்
துன்று நற்பொருள்நி னைந்து நோற்றனர்கள்
சுருதி மாதவர்க ளனைவரும் 10

937 உண்டி யாதியவெ லாம்வெ றுத்துநடம்
ஒன்றுமே மனதின் இச்சையாக்
கொண்டு நாள்பல வருந்து மெய்த்தவர்
குறிப்பு ணர்ந்துதல வாணராம்
வண்டு லாவும்வளர் குந்த வாணர்வெளி
வந்த வர்க்கருள் புரிந்தி
அண்ட வாணர்கண நாதர் மாதவர்
அளப்பி லார்புடை நெருங்கவே 11

[இறைவன் காட்சிதரல்]

938 வேத கீதவிசை விம்ம நாரதர்
விரும்பு தும்புருநல் வீணையின்
நாத மெங்கணும் முழங்க விண்ணவர்
நலங்கொள் பூமழை சொரிந்திடப்

---

936 மன்றலந்துதி – பக்தி மணங்கமழும் துதிகள். பொன்றிடாத – அழியாத.

937 உண்டியாதி – உணவு முதலிய. நடம் – இறைவனுடைய திருக்கூத்து

பூத மற்றவர் நெருங்கி டாவகை
புடைத்தொ துக்கிவர நந்தியும்
கோதில் மால்விடையி னிமைய மாதினெடும்
குந்த நாதரெதிர் நண்ணினர் 12

939 இருமு னித்தவர்க ளொடுமெய் நற்றவர்கள்
எவரும் அற்புதவெள் விடையின்மேல்
மரும லர்ச்சரிய குழலு மைப்பெணெடு
மகுட முற்றுவளர் பிறையுட
னரவி ருத்தியக ணுதல ருற்றமை
யறிந்தெ முந்துபரவ சர்களாய்க்
கரமெ டுத்துரிய சிரசின் வைத்தரிய
காதல் வெள்ளமதின் மூழ்கினர் 13

940 அளவி லாதபரி வெழவு ளந்தழைய
அருவி பொங்கவிழி யலர்கடாம்
புளக மூழ்கவுட லலகி லாதமகிழ்
பொருந்த வார்சடைநன் மகுடமும்
வளரும் வெண்பிறையும் நெற்றி யம்பகமும்
வாய்ந்தி லங்குமதி வதனமும்
தவள மூரலுமை யிடமு மற்றுமுள
தயங்கு பேரழகு நோக்கியே 14

[முனிவர்கள் இறைவனைக் கண்டு ஆடிப்பாடி மகிழ்தல்]

941 தட்ட மிட்டகர மலர்க ளோடதி
சயத்த ராயக மகிழ்ச்சியால்
வட்ட மிட்டுநட மாடு வார்துதி
வழுத்து வார்சிவ மயத்தராய்
இட்ட முற்றனமெ னச்சொல் வார்கள்,விழு
வாரெ முந்தமுவர் மெய்ம்மையாற்
குட்ட மிட்டெதிர்வி ழிக்கு வார்கள்நிரை
கோலி னின்றுதுதி செய்வரால் 15

938 மால்விடை – பெரிய ரிஷபம் – திருமாலாகிய ரிஷபமெனலுமாம்.
939 அரவிருத்திய – பாம்பினையணிந்த. காதல் – அன்பு, பக்தி.
941 தட்டமிட்ட கரமலர் – தாளமிட்டு ஒலிக்குங் கைகளோடு. குட்ட மிட்டு – கரணமிட்டு. விழிக்குவார் – நோக்குவார்.

942 சோதி ரூபவ்வக ளங்க! சங்கர!
சுயம்பு வே!கருணை மேருவே!
நீதி யே!யுலகெ லாம்வி ராவிநிறை
கின்ற பூரண!நி ராமயா!
வேத சாரமென நின்ற சுந்தர!
விடங்க! வங்கண! வசஞ்லா!
மாது லாவுமொரு பாக! குந்தவுரு
வாயிருந் தருள் புரா தனே! 16

943 மால யன்றனுடல் கழியெ லும்புதலை
மாலை யாகவணி மார்பனே!
காலன் மார்பிறவு தைத்தெ ரன்பனுயிர்
காத்தி டுங்கமல பாதனே!
நீல கந்தரதி கம்பரா;சகள
நிட்க ளா!பரம நின்மலா!
சூல நின்றிலகு கையெ! மெய்யகுருந்
தென்ன நின்றருள் சுரா திபா! 17

944 தக்கன் வேள்வியவி யுண்ண வந்தசுரர்
சலம டைந்துபய மெய்தியெண்
டிக்கி னுஞ்சிதற மோது ருத்ர!நல்
இரதி வேண்ட எரிவிழியழற்
புக்கு வெந்தடலை யான வேள்வரல்
புரிந்த பூதகண நாயகா!
முக்க ணைமணமி குங்கு ருந்தென
முளைத்தி ருந்தநிச வின்பமே 18

---

942 விடங்க – செய்யப்படாதவனே. அங்கண – நெற்றிக்கண்ணுடைய வனே. அசஞ்சலன் – துயரமற்றவன்.

943 காலன் – யமன். திகம்பரா – திக்குக்களையாடையாக உடையவனே. சுராதிபா – தேவர்தேவனே.

944 சுரர் – தேவர்கள். சலம் – நடுக்கம். மோதும் – புடைக்கும். அடலை – சாம்பல். வேள் – மன்மதன்.

945 முடிவி லாதமல மூலவா ணவ
முயக்கி லுல்விழிக ளிருளினிற்
படியு மாறென வீருந்த பல்லுயிர்
பதைப்பு ணர்ந்துதனு வாதியை
விடியு மாறுள வரைக்கு மாயையின்
விளக்க தென்னவரு வித்தகீனத்
தடிய ராக்கியள வற்ற வின்பமய
மாக்கு குந்தவுரு வண்ணலே 19

946 வானும் மாருதமும் அனலும் அப்புமுயர்
மண்ணும் எண்ணில்புவ னங்களும்
ஈன முற்றிடுச ராசரங் களெனும்
எண்ணி லாதவுயிர் வர்க்கமும்
தானெ னப்பிரிவி லாது நின்றுநட
னந்தருங் கருணை வெள்ளமே
ஞான நாயக திருப்பெருந் துறைநன்
நகரின் வாழ்வுசெயு நம்பனே 20

[இறைவன் காட்சி தந்தருள முனிவர்கள் வேண்டல்]

947 அய்ய உன்னருளை நாடி நாள்பல
அலைந்தனங் கிருபை வள்ளலே
எய்தி னேமெமது காதலென் றுதவர்
எவரு மன்பொடு புகன்றிடத்
துய்ய மால்விடையின் மீது வந்தருள்
சுரந்த சுந்தர விடங்கரும்
மெய்யர் காளும துதிம கிழ்ந்தனம்
விருப்ப மோதுவிர் எனத்தவர் 21

948 கொன்றை வார்சடில மோலி யாய்கருணை
கூரு நாடக விருப்பெமக்
கென்று தந்திடுவை எண்றிருந் தமையுன்
இதய முந்தெரிவி லாததோ

945 பதைப்பு – துன்பம். தனு – உடம்பு.
946 மாருதம் – காற்று. அப்பு – நீர்.

மன்ற லங்குழல்பொன் வல்லி பங்கவென,
வளர்புன் மூரலொடு வாய்மலர்ந்
தொன்று நல்லமுத தாரை போலவர்
உவப்ப முக்கணிறை யோதுவான். 22

[திருவுடம் புரிதற்கித்தலமாகாது எனக்கூறிச் சிதம்பரத்தில் வந்து காணுவீர் என அருளல்]

949 உவமை யற்றநம தடியர் காணுடம்
உதவு தற்கிவிடம் ரகசியம்
கவன மற்றநிரு மலம தாமிது
கடுப்ப தொன்றிலையெங் ஙாஞும்யாம்
விவக ரிக்குமொரு மூன்ற வத்தையும்
விளக்க மாமெவையும் விட்டுநம்
சிவம யப்பொருள தாயி ருந்துவளர்
திருவிருந் தலமி தாதலால் 23

950 நடன மிவ்விடம டாதெ மக்குமது
நற்றவப் பயன தாமருட்
டிடமி குத்தபர ஞான வம்பரம்
சிறந்த நற்றல மதன்கண்யாம்
வடுவில் நற்றவர்மூ வாயிரத் தர்நட
வரமெ மக்கரு ளெனப்பணட்
கடுமு யற்சியர்க ளவர்பொ ருட்டுமுயிர்
களினி மித்தமும் நடித்திட 24

951 ஏகு தும்மகிழ்வின் மீவி ரும்விரைவி
னெய்து மின்களும தாவியிற்
தாக மோடுபடி வார்கள் நிவிணகள்
தவிரும் வந்திடுந லுயர்கதி

---

948 சடைமோலி – சடாமகுடம். நாடகம் – ஆனந்தத்திருநடனம். புன்முரல் – இளஞ்சிரிப்பு.

949 கவனம் – கலக்கம். விவகரிக்கும் – செயற்படும். மூன்றுஅவத்தை – சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி. இருந்தலம் – பெரியதலம்.

950 ஞானவம்பரம் – சிதம்பரம். நடவரம் – நடனக் காட்சியாகிய வரம்.

மோக மாகநமை நீர்வ முத்துதுதி
மொழிகு வோரிதய கமலமென்
றேக நாதன்மன மகிழ்வி னிவ்வரம்
இசைத்து வந்துகுருந் தெய்தினன் 25

[இறைவன் அருள்மொழி கேட்டு முனிவர்கள் ஆனந்தமுறல்]

952 ஆத்ம நாதர்வெளி வந்து தில்லைதனில்
ஆடுதும் நடனம் நீவிரும்
போற்ற வாருமென ஏகலும் விழிகள்
பொழிய நீர்கள்முனி வரர்கள்தாம்
ஈற்றி லிவ்வருள் பெறக்கி டைத்தனமி
தென்ன வற்புதமிவ் வைகலிற்
றோற்ற லுற்றனமெய் யருளி லென்றுபல
சொல்லி நற்றவர்கள் துள்ளினர். 26

[முனிவர்கள் தில்லை வனம் சென்று சேர்தல்]

953 அளவி லாதமன மகிழ்வொ டங்குநிகழ்
பவர்க ளிப்பவர்கள் புகலுவார்
புளக மேனியர்க ளாக வந்தருள்
பொருந்து குந்தவுரு வாமரன்
உளம கிழ்ந்திட இறைஞ்சி யிவ்வருள்
உவந்து தந்தனை எனச்சொலி
இளகு கின்றமன வன்பர் தில்லைவனம்
எய்தி னர்கள்விடை கொண்டுடன் 27

954 வந்த மாதவர்கள் இதய புண்டரிக
மாகு மத்தல மதிற்குருந்
தெந்தை யென்றுநட னந்த ரற்குளமி
ரங்கி வந்தருளு மென்றவர்

---

951 எய்துமின்கள் – வந்துசேருங்கள். ஆவி – குளம் (பத்ததீர்த்தம்)
952 வைகல் – இப்பொழுதில். துள்ளினர் – மகிழ்வாற் குதித்தாடினர்

சிந்தை வைத்தவ ணிருந்து சில்பகல்
செலுத்த நாடகம் நடித்திடக்
குந்த வாணர்திரு வம்ப லத்துமகிழ்
கூர்ந்தெ முந்தருள வெண்ணியே 28

[இறைவன் பொதுவில் ஆனந்தத் திருக்கூத்தாட எண்ணுதல்]

955 ஆறைஞ் ஞூறுதவ வாணரும் பொதுவில்
அடைமி னுடலருள் தரவெனக்
கூறி மங்கல தினங்கு றித்திரவி
கோடி யோர்திசை யுதித்தென
மாறில் சோதிமய மாக நந்திமுதல்
மாக ணந்தழுவி வாழ்த்தவே
வேறு சீர்கொள்சிவ யோக நாயகி
யிடந்த ரப்பொதுவி லெண்ணியே 29

[தேவர்கள் முனிவர்கள் யாவரும் திருநடங்காண மொய்த்தலும்
கண்டுபேரானந்த முறுதலும்]

956 வேத மங்கல முழக்க மும்பொருவில்
விபுதர் துந்துபி முழக்கமும்
மாத வத்தர்கள் காண்கெ னச்சொலும்
மதுர வாசக முழக்கமும்
சீத ரன்முதல்வி ணைடர் போற்றெலி
சிறந்த தின்பெரு முழக்கமும்
ஓது தண்கடலொர் ஏழ்மு ழக்கினும்
உயர்ந்து தில்லைவன மொய்த்திட 30

957 சோதி நாயகனெ திர்ந்த னன்னருள்
துலங்கு நாயகனெ திர்ந்தனன்
வேத நாயகனெ திர்ந்த னன்னுமை
விரும்பு நாயக னெதிர்ந்தனன்

---

954 இதயபுண்டரிகம் – உளத்தாமரை. சிந்தைவைத்து – எண்ணி.
955 ஆறைஞ்ஞூறு – மூவாயிரம். பொது – அம்பலம். இரவி – சூரியன்
956 மதுரவாசகம் – இனியமொழி. சீதரன் – திருமால். தில்லைவனம் – சிதம்பரம்.

பூத நாயகனெ திர்ந்த னன்அளவில்
புவன நாயக னெதிர்ந்தனன்
ஆதி நாயகனெ திர்ந்த னன்கருணை
யாத்ம நாயக னெதிர்ந்தனன் 31

958 என்று சங்கிலெடு தாரை காளமோ
டெழுந்து சின்னமு முழங்கவே
யொன்ற லாதபல பல்லி யங்களுரு
மேற தொத்தெதிர் தழங்கவே
மன்றுள் நின்றுபத செஞ்ச ரோருகமென்
மலரி னென்றினை யெடுத்துடன்
துன்று பேரருள் இன்ப நாடகம்
தொடங்கி யாடல் புரிந்தனன் 32

959 எண்ண லாதுபெரு கொலியு மாதவரோ
டிந்தி ராதிபர்க ளெய்தலும்
அண்ணல் வந்துநட மாட லுந்திகழும்
அரிய தாபதர்க ளொடுபுலி
வண்ண மாமுனிப தஞ்ச லித்தவனும்
மருவு மற்புதம தாயெழாக்
கண்ணி லைலெவையும் நோக்கி மன்றின்வளர்
கருணை வாழ்வையெதிர் கண்டனர் 33

[திருநடனக் காட்சியின் வருணனை]

960 விரித்த செச்சடைம திக்கொ முந்துருதி
வெள்ளம் வெண்டலை துளங்கலும்
சிரித்த வானனமு மாடு தோடுகுழை
சேர்ந்த காதழகு முக்கணும்

---

958 பல்லியங்கள் – பலவகை வாத்தியங்கள். சரோருகம் – தாமரை.
959 புலி – வியாக்கரதபாத முனிவர்.

உரித்தெ ஞுந்துடியொ டங்கி வீசபயம்
உறுங்கரங் கரிய கண்டமும்
தரித்த புலியத ளெடுத்த சேவடி
தயங்கு மெய்யொளி விளக்கமும் 34

961 வாம மேவுசிவ காம வல்லிதன்
வனப்பை நோக்கு மகிழ்ச்சியும்
தாம மார்பிடை கபால மாலிகை
தருக்கு சூகர முதிர்த்தகோ
டாமை யின்முது கெலும்பு நூலுடன்
அசைந்த சைந்தவைகள் புரள்தலும்
சேம வாழ்வெனவென் னோய ஞடுதல்
செயுந்தி றங்களையும் நோக்கினர் 35

[முனிவர்கள் ஆனந்த பரவச முறல்]

962 ஆடி னர்பதறி யோடி னர்விழிகள்
அருவி பாய்தர விரைந்துடன்
கூடி னர்புளக மூடி னர்தலை
குவித்த செங்கைகளி னைடெதிர்
பாடி னரைழுது விம்மி னர்பரவ
சத்த ராயனு பவத்தராய்
நீடி னர்நடன வின்ப வாரிதி
நிலைப்ப டாததி லழுந்தினர் 36

963 அவர்க ளின்பநட அனுப வத்தையெவர்
அறைய வல்லவர்கள் தவரெலாம்
சிவபி ரான்றனெதிர் நின்ற னேகதுதி
செப்பி யன்பிலே டிறைஞ்சினர்

---

960 ஆனனம் – முகம். துடி – உடுக்கை. அங்கி – நெருப்பு. அபயம் – அபயக்கை.

961 வாமமேவும் – தென்பால் பொருந்தும். மாலிகை – மாலை. சூகரம் – பன்றி. கோடு – கொம்பு.

962 இன்பவாரிதி – இன்பக்கடல்.

புவன நாயகனு மளவி லாவருள்
புரிந்து மாதிஞை டுயிர்ப்பொருட்
டுவமை யற்றமணி மன்றில் வைகினன்
உயர்ந்த இன்பநட னத்தொடே 37

[இறைவன் திருக்குருந்தில் சென்று சேர்தல்]

964 அன்ன வாறவர் தமக்கு நல்லருள்
அளித்து வைகுமந் நாளினில்
துன்னு மண்டம தீர்ப்ப வோசைகள்
தொனிக்கு நீர்மை செவிக்கொளா
துன்னி நாடும வர்க்கு நாளுநல
முதவு மாறவனும் வைகிநேர்
தன்ன திச்சையரு ளோடு குந்தமது
சார்ந்தி ருந்துமகிழ் கூர்ந்தனன் 38

[பத்த தீர்தத்தின் சிறப்பிகனக் கூறியலாதெனல்]

965 அரும்ப தஞ்சலி புலிப்பதன் முதல
வாகு மாதவர்க ளீனவரும்
பெரும்ப யன்பெறுத லுற்ற ருததிலை
பெயர்ந்தி டாதவணு றைந்துவாழ்ந்
திருந்து மேவினர்மு னிவர்கள் செய்தபுனல்
எந்த நன்னலம தெய்துரு
விரும்பு மாதவர்செய் பொய்கை யின்பெருமை
விள்ளு தற்கெவர்கள் விரகுளார் 39

966 அன்ன தாகுமற வின்கண் மூழ்கவழி
யாத பாவம ழிந்திடும்
துன்னு மைவித மறங்க ளுந்தமச்
சுடரின் முன்னென விலகுமால்

965 அருதிலை – நீங்காத திலலையம்பதி. புலிப்பதன் – வியாக்கிரபாதர்.

கன்னர் பற்பலம கப்ப லங்கள்சுர
நதிமுன் னுய்புனல் படிபலந்
தன்ம சோடசமு னுய தானவிர
தங்க ளாதிய தரும்பல 40

[இவ்வியல் படிப்பவர் கேட்பவர் உறும்பயன்]

967 இகத்தி லின்பமறு மைக்கண் நற்கதியும்
எய்து மையம திதற்கிலைத்
தொடுத்த றைந்தமதன் தன்மை என்றுமுனி
சொற்ற னன்முடி துளக்கினன்
மிகுத்து ளங்கனிய மன்ன னிவ்வியல்
விரும்பி யோதுபவர் கேட்பவர்
சகத்து திக்தலையொ ழித்து மெய்க்கதி
தழைத்து வாழ்குவர்கள் சரதமே 41

[பத்த தீர்த்தச் சருக்கம் முற்றும்]



966 ஐவிதமறங்கள் – பஞ்சமாபாதங்கள். தமச்சுடர் – சூரியன். ஈகப்பலம் – வேள்விப்பயன்கள். சுரநதி – கங்கை. தன்மசோடசம்– பதினாறு தருமங்கள்.

தலவிசேடக் சருக்கம்

[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

[புரூரவா முனிவரை வேண்டிக்கொள்ளுதல்]

968 திருந்தியநற் றவத்தரதி பதியே யன்பர்
தீர்த்தமரன் திருநடனச் செய்கை யாவும்
விரும்பியளித் தலின்நெளியப் பெற்றேன் குந்தம்
விமலரக சியம்நடனம் இங்கா காதென்
றிருந்தவருக் கரன்வெளிவந் தளித்தா னென்னுப்
இத்தலத்தின் மாண்பெலையும் அறிவி னேன்யான்
தெரிந்துயுமா றருள்புரியென் றிரந்து வேண்டத்
திருமுனிவன் அரசனெடு செப்ப லுற்றான் 1

[இத்தலமகிமை சொல்லுமிடம் தூயதாகவும் கேட்போர் தவஒழுக்கங்களால் தூயராகவும் இருத்தல் வேண்டுமெனல்]

969 கேட்டதுநற் சங்கையிர கசிய மாகும்
கிளர்ந்திடவொண் ணுதெவர்க்கும் கெழுவு பாசம்
வீட்டுமவர்க் குரைத்திடலாம் அசுத்த பூமி
விரிந்தசபை களிற்புகலின் மேவும் பாவம்
தேட்டமர னன்புணர்வி லோர்க்கு நாளும்
திரோதஞ்செய் திடல்வேண்டும் செவிக் கொன்வாரும்
வாட்டமிலந் தணராகக் கேட்டல் வேண்டும்
வந்ததுரைக் குதுந்தொகையாய் மகிழ்ந்து கேண்மோ 2

---

968 இச்சருக்கம் முழுதும் தத்துவ விளக்கமாக அமைந்துள்ளது. பாடல்கள் செம்மையாக அமையவில்லை யாப்பமைதியைவிடக் கருத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் ஆசிரியர். தவத்தரதிபதி – தவமிய முனிவர். அரசன் – புரூரவச் சக்கரவர்த்தி.

969 சங்கை – ஐயப்பாடு. கிளர்ந்திட – பேச. அசுத்தபூமி – தூய்தல்லாத இடம். புகலின் – சொன்னால். தேட்டம் – தெளிவு. திரோதம் – மறைப்பு. தொகை – சுருக்கம்.

[அண்டத்தில் உள்ள இத்தலத்தோடு பிண்டத்தை ஒப்பிட்டுக் கூறுகின்ருர்]

970 அண்டத்தின் இயல்புமுனம் அறைந்தோ மே,பிண்
டத்தினுக்கு மதற்குமிலே பேத மந்தப்
பிண்டத்தி னியல்புபுகன் ருத்ம நாதர்
பிரிவிலிர கசியமதின் பெற்றி யீதென்
றெண்டிக்குந் திகிரிசெலுத் தரச ரேறே
இயம்புதுமெத் தேவதைக்கு மிருப்பாய் வட்டங்
கொண்டொளிசக் கரம்போலும் குந்த வாணர்
குலவிடமும் ஆகுமுனங் கூறும் பிண்டம் 3

[ஆருதார விளக்கம்]

971 அதனியல்பே தெனிற்புகல்கின் றனம்யாம் மூலா
தாரமொடு சுவாதிட்டன, மணிபூரக, மன
கதம்விசுத்தி ஆக்கினையென் ருரு தாரங்
களுங்கமலம் போன்றிருக்கும் தானங் கூறின்
இதனிரையாய் மூலமுடன் லிங்கம் நாபி
இதயங்கண் டம்புருவ நாப்ப ணம்சேர்
பதுமநிரை யாகநா லிருமூன் றெட்டுப்
பன்னிரண்டு ரெட்டிரண்டு பருந்தளங்கொள் 4

972 அக்கமல மூலநாளத் தினிறைக் கொப்புண்
டலங்கார தீபம்போல பிழுகமா யிருக்கு
மிக்கவிதின் மேற்பரம், பரற்பரநற் பரமம்
விரும்பானந் தம்பரான ந்தமகா னந்தம்

---

970 அறைந்தோம் – கூறினேம். பேதம் – வேற்றுமை. பெற்றி – தன்மை. குந்தவாணர் குலவிடம் – குருந்தப்பெருமான் திகழும் திருப்பெருந் துறை.

971 நிரையாய் – வரிசையாய். நாபி – வயிறு. நாப்பண் – நடு. தளம் – இதழ்.

தொக்கவிவை மூவிரண்டுங் குணரகிதம் முன்னஞ்
சொன்னவிரு மூன்றிடமும் சகுனமிரு வகையாய்ப்
புக்கிடமீ ராறிவையி ஞைடுநான் காகப்
பொருந்திடமீ ரெட்டனெவே புகன்றிடுஞ் சாங்கியமே 5

[ஆருதாரத்திற்குரிய தேவர்கள்]

973 இயங்கியபின் டத்திலிட மீராரு மென்னும்
இவைக்கதிபர் மூலமுதல் நிரனிரையாக் கொள்க
தங்குகணே சன்பிரமன் விட்டுணு ருத்திரன்
மகேசன்சதா சிவன்கலோநா தம்விந்து சோதி
முயங்குபரஞ் சோதியாத்மா வாமாக்கி ணேக்கு
மொழிந்தசதா சிவர்தமக் குருவென்றும் பெயராம்
நயங்கொளுமத் தானப்பேர் சபைபிருத்தத் தானம்
நவிலிடமீ ராறிலுக்கப் புறம்பரமாத் மாவாம் 6

[மூலத்தானங்கள் மூன்றின் விளக்கம்]

974 அவராத்ம நாதரென அறிகருத் தியங்கள்
ஐந்துக்கும் காரணநிட் களம்குண மதாகும்
இவரிடமீ ராறுடனு விடமுளதா மென்றல்
இயம்புது மூர்த்தமூலமத்திம மூலத்தொ டுவமை
தவிரதோ மூலமென மூன்றுகு மொன்றை
யுரைக்குதும்பின் மூலமூன்றினி லூர்த்த மூலம்
தவறில்நிரா தாரத்தி னிடமத்திம மூலம்
சமேசன்வீ டதோமூலம் கணேசன் வீடாமே 7

976 மூலாதா ரமுதல்மத் திமமூல வரைக்கும்
மொழிந்திடலா குந்துரியா தீதமெனச் சபையாய்க்
கோலுநடு மூலமுத லதோமூல மளவும்
கூறலுமா குந்துரியா தீதமெனச் சிருட்டி

---

972 அபிமுகம் – நேர்முகம். குணரகிதம் – குணமின்மை. சகுணம் – குணங்களுடையது. பொருந்திடமீரெட்டு – பொருந்துமிடம் பதினாறு. சாங்கியம் – சாங்கிய தத்துவம்.

973 அதிபர் – ஆதாரச் சக்கரத் தேவர்கள்.

974 கிருத்தியம் – தொழில் மூலத்தானம் மூன்றையும் விளக்குகிறது.

சீலமுறுஞ் சங்காரக் கிரமமிரு வகையும்
செப்பிடலா குந்துரியா தீதமெனச் சிறந்த
மேலெனுமூ லஞ்சருவா தீதநடு மூல
மிதற்கதுமூ லம்பிரமத் தினுடைய வீடே 8

[வியக்த-அவ்வியக்த குணவிளக்கம்]

976 இடமீரா றுக்கு மூலமூலா தார
மிம்மூல மூலமதாகு மூர்த்த மூலம்
விடலரு மூர்த்தமூல மதோமூலந் தனிலும்
மேவியதெய் வமுமொன்று மேல்மூல முந்தன்
படர்தருசா யைகள்கீழ் மிருந்திடுமோ வெனிலப்
படியிருக்கு மென்றுசுரு திகள்பகரு மதனில்
வடுவகலுந் தேவதைகள் வசித்திடுவர் பிரம
மாமாத்ம நாதரிட மாமூர்த்த மூலம்

977 அவ்விறையிச் சையிலுண்டா னவராத்மாக் கீழுத்
தானமதா கும்பனிரண்டி லமர்ந்துவியா பகராய்
தீவ்வியசதா சிவமென்றி ருந்தனர்மற் றவர்க்குத்
திகழ்குணங்க ளவ்வியத்தம் வியத்தமென விரண்டு
கவ்வையிலவ் வியத்தமென லாத்மதத் வத்துடனே
கலந்தைந்து பேதமதாய் ஊர்த்தமூ லக்கீழ்
மெய்வகையா மைந்திடத்தும் நிற்கும்வியத் தந்தான்
மிகுபுருட தத்துவத்தோ டைந்துவித மாகி 10

978 மத்திமமூல முதலிலந்திடத் தினிலு நிற்கும்
வளருமவ்வி யத்தவியத்தங் களினு லிடங்கள்
பத்துமுத லோடிடங்கள் பன்னிரண்டின் றன்மேல்
பராசத்தி வீடென்று பதுமசக்கி ரத்தோ
டத்தினடுப் பரமேட்டி யெனுமவரோ டிருப்பாள்
அவளுக்கு மவ்வியத்த வியத்தமிரண் டுண்டு
வித்தகமா மூர்த்தமூல முதற்கீ ழாறும்
வீட்டினிலா யிரவிதழ்வெண்டா மரையின் கண்ணே 11

976 சுருதிகள் – தத்துவதூல்கள். வடு – குற்றம்.

979 பரமகுரு வாகுசதா சிவருடனே கூடிப்
பராசத்தி என்றுபிர காசிக்கப் படுவன்
மருவிவயச் சத்திதனில் ஆதார சத்தி
வந்துமத்தி மூலத்துக் கீழாரும் வீட்டில்
பெருகுமுல கச்சுமையைத் தரித்துவசித் திடுவாள்
பிறங்குசத்தி மயமாகும் அவ்வியத்த வியத்தம்
இருவகையி லாதாரம் பனிரண்டும் வேதத்
தியம்பியநிச் சயப்பொருளென்று ரைத்திட்டோதும் 12

980 ஆறுதா ரத்தினியல் பகினத்திகினயும் புகன்றீர்
அவைகடனில் வசித்திடுதே வதைகளமைப் பிகினயும்
மாறுத வவ்வியத்த வியத்தங்க ளுண்டாம்
மாண்பிகினயும் அருள்கவென மாதவன்கூ றிடுவான்
வீறுகும் பனிரண்டுங் கடந்தவந்த ராத்மா
விச்சையினுற் றுவாதசாந்தத்தான் மேவும்
தேறுமாத் மாவிடத்திற் பரஞ்சோதி தோன்றித்
திகழ்பதிஞென் றுமிடஞ்சேர்ந் திருந்ததுதன்னில் 13

981 சோதியுற்ற தீரைந்து தனினின்ற ததனிற்
ரூன்றியொன்ப தாமதனி னுதநின்ற ததனில்
நாதவிந்து தோன்றி யெட்டின் நின்றதிது வரைக்கும்
நிகழ்த்துமவ் வியத்தவியாப் பகமென வோர்ந் தறிக
ஒதுமிதின் கீழ்த்தானம் பிரணவத்தின் வடிவாய்
ஓங்கமுத மண்டலமத் தியின்சத்தி தடமென்
ருதரவின் முனமுரைத்தோ மவ்வியத்த தான
மாறுக்குங் கீழ்த்தான மாம்வியத்த முணரே 14

982 விளங்குவியத் தங்களொரா றினுக்குமுதன் மைப்புருடன்
மிகுமாரு தாரபரா சத்தியியக் கியராய்க்
களங்கமில வருவுருவாய் ஐமுகமீ ரைந்து
காமவேல் கடகஞ்சூலம் கட்டுவாங்கம் வரதம்
வளங்கொள்வல மிடந்துடிமா துளங்கனி பரம்பக்கம்
வடநீலம் பிறைவேணி பணிப்பூணூ ரிருதாள்
துளங்கலிலா விவ்வடையா ளமுமுளராய் எவையும்
தோற்றுவிக்குங் காரணராய்ச் சிவவளத்துக் கிடமாய் 15

983 பேசுதுரி யாதீத ராய்விபுவாய்ச் சகுண
பிரமமாயனுக்கிரகப் பேற்கறையுடை யோராய்த்
தேசுதவுஞ் சதாசிவரென் றிருப்பரவர் தானஞ்
சிற்சபைமற் றதிலுலகச் சிருட்டிமுதற் றொழில்கள்
ஏசலிலா துளவாக அனவரத நடனம்
இயற்றுவர்பின் சத்தியொடு பிரிந்துதொழில் புரிய
ஆசையுள தாயிற்றப் போதமகே சுரருள்
டாயினர் திரோதகிருத் தியமுடைய ராகி 16

984 ஒளிவிடுவெண் படிகநிற நான்கோப வீதம்
உடுத்துசிங்கத் தோல்யானைத் தோல்மதியின் பாதி
தெளிவிழிமூன் றெண்கரத்தில் வலமிடத்திற் கதிர்வாள்
தெறுசூலஞ் சரமுத்தி ராக்கவட மபயம்
அளிமிகுகுண் டிகைவரதம் கமலமுமுள் ளவராய்
ஆச்கிணியின் கீழ்ப்படியா குய்விசுத்தி யென்னும்
களிமிகுமானக் கயிலை யாமதன்மே லிருப்பாம்
கருதிலிவர் கொடுப்பர்பர கதியெனுமுத் தியையே 17

985 அவர்பேத மிருபத்தைந்தாகும் முரைக்கிற் பெருகும்
அவரிற்ரு மதகுணத்தோ டமலவருத் திரருற்
பவமான ரவர்படிக நிறநீல கண்டம்
பணிமுந்நூல் பிறைமவுலி திரிவிழி நாற்கரஞ்சேர்
உவமையில்வியாக் கியமுத்திரை யோடங்கி ஞானம்
ஒளிர்சூல மோசெருவா பரணமுமுள் ளவராய்க்
கவர்தருசங் காரகிருத்ய ராகியே யஞ
கதமதனி லிருப்பவர் கருதுசங்கற் பத்தால் 18

986 அங்கரநான் கணிபணிலம் நேமிகதை பதும
மருங்கோண நிறந்துளப மாலைமணி மகுடம்
செங்கணிரண் டாகவம் பரமூளராய் மாயன்
திதிவிருத்தி சாத்துவிக குணமுடைய ராகிப்
பொங்குமணி பூரகத்தில் வசித்திடுவர் அவரிற்
போந்தயன்பொன் நிறவதனம் நான்குமுக மெண்கண்
தங்குசிருக் கக்கவடந் தண்டுகுசை நான்கத்
தம்மிரா சதகுணராய்ச் சுவாதிட்டா னத்தில் 19

987 சிருட்டிகிருத் தியமுடைய ராய்வசிப்பர் வேதஞ்
செப்பியிடும் வியத்தத்து மிவ்வைந்து மென்றே
தரிப்புளமூ லஞ்தனில்வல் லபையுடனே சருவா
தாரரட்ச காரணராய்க் கணபதியங் கிருப்பர்
விரிக்கிலவ ரேசருவாதா ரவா தேயம்
விளம்புதிரி மூர்த்திகளும் மகிமையே தென்னில்
மரித்துறு மூலத்தினற் சாயைவிருத் திகள்போல்
மருவும் ஆருதாரங் களும்விருத்தி யாமே 20

988 மொழிதரு துவாதசாந்தத் தாத்ம நாதர்
மூலா தாரத்தில்விஞ யகவடிவா யிருந்தார்
அழிவகலீ ராறுமே பரிணமித்த தீரெட்
டாகமே லோதெட்டும் பிரமாண்டங் கீழெட்
டிழிவகலும் பிண்டமூல மெனவாமூர்த்த மூலத்
தினிலாத்ம நாதர்குந்த மூலமா னதினற்
ரெழுசகல மூலமாயிற் றுதில்லீ முதலாய்ச்
சொல்லுமிடங் கள்தனில் வியத்தராகி
மகிழ்ந்திருந்தே 21

989 தெரிசிக்கும் மெய்யன்பர்க் கருள்புரிவ ரென்றும்
திகழ்குருந்தி லவ்வியத்த ராகியே மெய்மைப்
பரிவுளர்க்குச் சிவஞானம் பாலித்து வாழ்வார்
பகர்சருவா தீதரெனப் பகராத்ம நாதர்க்
குரியவர சத்தான மாகையிலப் புரமே
ஓதரிய துவாதசாந் தத்தான மென்று
விரிவுபெற வுரைத்தருளப் பெற்றதுமற் றெங்கும்
வியத்தராய் மேவியதி லேவிரும்பி யுறைவார் 22

[இச்சருக்கத்திற் கூறப்பட்ட தத்துவங்கள் இவை எனல்]

990 அறியுய்வகை குணம்குணம் திரிமூலம் வியத்தம்
அவ்வியத்த மூன்றுசத்தி யாறிரண்டா மிடமும்
பிறியமுற வோதினமைந் தொழிற்குரியோர் தம்மை
பின்னமறச் சிருட்டிமுதற் ரெழில்கள்தனி லேவிச்

செறியும்லய காலத்தில் தன்னிடத்தில் ஒடுக்கித்
திரும்பவிடுங் கால்வெளிவிட் டிவ்விதலீ லீகளோ
டுறுங்குண ராகவொளி தருகுருந்த மூலத்
துயராத்ம நாதரரு ளுடன்வசிப்ப ரன்றே 23

[இச்சருக்கம் கேட்டோர் எய்தும் பயன்]

991 இம்மகிமை யுடையவிட மாதலினல் நடனம்
இங்காகா தென்றிறைவ னிசைத்தனற் றவர்க்கக்கென்
றெம்மலீவுங் கழலமுனி புகல முகம்மலர
இறைவன்கேட் டுடல்புளக மெழும்கிழ்பூத் திறைஞ்சி
அம்மஅந்தத் தலப்பெருமை யேபெருமை யாமென்
றகங்குளிர்ந்தா னிச்சரித மறைபவர்கேட் பவர்கள்
வெம்மைவினை போய்ப்பாசம் வீட்டிவள ரின்ப
மேய்சிவயோக ம்பெறுவர் வேறுகுறை வின்றே 24

[தலவிசேடச் சருக்கம் முற்றும்]



இரகசியச் சருக்கம்

[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

[முனிவர்கள் சூதரிடம் வினவல்]

992 சீர்வளருஞ் சவுனகா தியராம் தெய்வத்
திரள்களெனும் முனிவரர்கள் சிறந்த சூதர்
ஏர்வளரும் ஆனனம்பார்த் தியம்பு கின்றூர்
எமக்கருளி னலுரைத்த தெவையுந் தேர்ந்தோம்
நீர்வளர்செஞ் சடைமகுட வாத்ம நாதர்
நிற்குணமா மதிகரக சியமா மென்றூற்
பார்வளரும் வாதவூ ரடிகள் வந்து
பரனருள்பெற் றுப்பணிகள் செய்தா ரென்றும் 1

993 அருச்சனைசெய் தேத்தியெதிர் பணிந்தா ரென்றும்
அன்புருவாய் நின்றுகரைந் தழுது நேசம்
விருப்பொடுசெய் தனரென்றும் தில்லை மன்றுள்
மேவினரென் றுந்தொகையாய் விளம்பல் யாங்கேட்
டிருப்பதனல் விம்பமிலா திருக்கிற் பூசை
எவ்விதமாம் ஆலயந்தா னேதுக் கந்தக்
கருத்தைவிரித் துரைத்தியென மொழிந்தார், சூதன்
கனிந்தவர் கேள் விக்குவிடை கழறு கின்றூன் 2

[சூதமுனிவர் விளக்கங்கூறல்]

994 ஆதிகற்பத் துக்குளெந்தை பிரமா வுக்காய்
ஆத்மகா யகர்குருந்த மாகி யுண்மை
யோதியவக் காலமுதல் முனிவர் வானு
ளோர்கள்பல ரிதுதனையே யருச்சித் தேத்தித்

---

992 ஏர் – ஒளி. ஆனனம் – முகம். நீர் – கங்கை.

993 விம்பம் – படிமம் (விக்ரகம்).

தீதறுநற் கதியடைந்தார் என்று முன்னம்
செப்பினம்யாம் திருவாத வூர்கோன் மிக்க
மேதகுசத் தினிபாதம் உடையோ ராகி
மேவுதல்கண் டருட்குருவா முருவந் தாங்கி 3

[திருவாதவூரருக்கு இறைவன் குருவடிவாகத் தோன்றிச் செய்ய வேண்டுவன கூறல்]

995 குருந்தடியி லிருந்துதிரு வடியுஞ் சூட்டிக்
கோதில்லாப் பரஞானங் கொடுக்க நாதன்
பரிந்தழுது மெய்ப்புளகாங் கிதரா யண்ணல்
பாதகம லங்கள்தனில் பணிந்து பூண்கள்
விரிந்தபரி யினங்கள்கொளக் கொண்டு வந்த
வியன்பொருள்கள் உடலாவி முற்று மீந்து
மருங்கினினின் றேத்தவிறை மகிழ்ச்சி கூர
மலர்க்கையில்தொட் டருட்கனிவாய் மாற்றம் விள்வார் 4

[திருவாதவூரரை ஆலயம் எழுப்புமாறு இறைவன் பணித்தல்]

996 அன்புருவாய் நின்றிடுமா ணைக்க நீகேள்
அகிலகா ரணமாமிக் குருந்தின் பாங்கின்
பொன்றிரளெல் லாங்கொண்டா லயமுண் டாக்கிப்
பூசிக்கச் செய்கவெனப் புகன்று சுந்தஞ்
சென்றுபுகுந்தனர் கண்டு வாத வூரர்
திகைத்தழுதெங் கொளித்ததெனத் தேரு ராகிக்
கன்றையகல் புனிற்றுப்போல் நின்று வாயாற்
கதறினர் பதறினர் கண்ணீர் வார 5

[குருந்தவன முனிவர்களுடன் திருவாதவூரர் நிகழ்ந்ததைக்கூறி அவர்கள் உள்ளமறிதல்]

997 அருள்பெறுமெய் யன்பரிறை பிரிவாற் ருமை
யால்நடுங்கும் நிலையினைக்கண் டங்கு நாளும்
திருவருள்பெற் றுறைமுனிவர் அய்ய கேளித்
திருக்குருந்தே யவர்வடிவம் திகைப்பு வேண்டாம்

---

994 ஆதிகற்பம் – அண்டத்தின் முதல் தோற்றக் காலம்.
995 கோது – குற்றம். பூண்கள் – குதிரைச் சேணம் முதலியவை. பரி – குதிரை.
996 பொன்றிரள் – குதிரை வாங்கக் கொண்டுவந்த செல்வங்கள். புனிற்று – ஈன்றணிமையுள்ள பசு.

பொருவிறந்த வரனருள்பெற் றுடையார் நும்போல்
புவனமதி லெவர்,கிடையாப் பொருள்பெற் றீரென்
றருகிருந்து தேற்றவுமாற் றலராய் விம்மி
யழுவதுகண்ட ருட்குருந்தின் மேன்மை யாவும் 6

[இறைவன் படிவத்தை எவ்வாறு அமைப்பதெனக் கேட்டல்]

998 எடுத்தியம்பித் தேற்றவெழுந் திறைஞ்சிச் சூழ்வந்
தின்பவனுபவ வசராய் இயம்பு கின்றார்
அடுத்தநெறி யெனக்குதவு மையர் காளிங்
காலயமுண் டாக்கெனவுத் தார மாகும்
தொடுத்துமுயல் வதுதானெவ் வகையாம் விம்பத்
தொல்லுருவ மெதுவாமத் தூயோன் றன்மை
விடுப்பரிய வகண்டாகா ரமதாய்ச் சுத்த
வெளியன்றே யான்புரிதல் விதிமின் என்றார் 7

[முனிவர்கள் வாதவூரருக்கு விளம்புதல்]

999 அவ்வுரைகேட் டருள்முனிவர் கணங்கள் சங்கித்
தருமறைநூ லாய்ந்து தெளிந் துய்யக்கூறும்
செவ்வியதா கும்மவ்வி னை நன்ற தாமச்
சிவவிபுவும் சத்தியொடு சேர்ந்தா லன்றி
எவ்வமிலாப் பஞ்சகிருத் தியமுங் கூடா
தியைபொழுதுண் டாமதலை லெவைக்கும் மூலம்
நைவிலதாய்த் துவாதசாந் தத்தி லோங்கும்
நளினமுறை பவள்பரா சத்தி யாகும் 8

1000 அவளுடைய விம்பமதை யெடுத்து மன்ற
மதிற்பிரதிட் டாவிதியா லமைத்தான் நாளும்
சிவமதனிற் பிரகாசம் செய்யு மங்கி,
தி நுழ்நேய மணிதெய்வ முலகி னுக்கு

---

997 மெய்யன்பர் – திருவாதவூரர். முனிவர் – குந்தவனமுறையும் அந்தணர்கள்.

998 அடுத்தநெறி – பொருந்தும் நெறி. உத்தாரம் – கட்டளை. விம்பம் – படிமம்.

999 சங்கித்து – தம்முள் வினவி. விபு – கடவுள். பஞ்சகிருத்தியம் – ஐந்தொழில். துவாத சாந்தம் – உச்சிக்குமேல் பன்னிரண்டாம் எல்லையில் உள்ள இடம். நளினம் – தாமரை.

துவர்த்திபூ மந்திரம்பூ மான்க ருப்பஞ்
சொல்வதுபோல் சிவகருப்பஞ் சத்தியாகும்
சிவையெனுமச் சத்தியுநற் பிரண வத்தின்
திகழ்கருப்பை யாமதனுற் செப்பு மந்த 9

[சத்தி பிம்பத்தைப் பிரதிட்டை செய்ய முனிவர்கள் கூறுதல்]

1001 சத்திகருப் பமதாகும் பிரண வத்தைத்
தாபித்தாற் சிவம்பிரதி பலிக்கும்கூட
வைத்திடிலிங் கத்தையது சகுண மாகும்
மற்றதுதந் திடுஞ்சாலோ காதி நான்கும்
உத்தமமாம் சத்திவிம்ப முத்தி யொன்றே
யுதவுமுயர் பிரமத்தைப்பிர திட்டை செய்ய
எத்தனித்தல் கூடாது சத்தி விம்பத்
தின்பிதிட்டை யேபரமப் பிதிட்டை யாமே 10

1002 உலகமா தாசத்தி சிவம்பி தாவாம்
உவரிலனீ முதற்காட்சி பிதாப்பின் காட்சி
இலகுமிரு பொருளும்பே தமதா மென்றே
இயம்புமறை நுட்பமென எடுத்துக் காட்டி
மலிவதுநற் சத்திவிம்ப மெனும் பிரண
வத்தைபிர திட்டைசெயல் மரபென் றோதக்
குலவுபரம்பொ ருள்குருவாய் இருந்த தானங்
குறித்தெடுத்தா லஞ்சபையாய் குலவச் செய்தே 11

[சத்திவிம்பத்தைப் பிரதிட்டைசெய்து திருவாதவூரர் சிதம்பரம் செல்லுதல்]

1003 சத்திவிம்ப மாம்பிரண வத்தை யந்தச்
சபையினிற்ரு பித்தெவரும் பரிந்து போற்றச்
சித்தமகிழ்ந் துறைந்துசில நாட்கள் போக்கிச்
சிதம்பரத்திற் பூரணமாய்ச் சென்ரூர், முத்தி
வித்தகராம் வாதபுரி ஈசர் மேன்மை
மேவுமறை முனிவரர்கள் விளம்பு மிந்த
உத்தமமா மறையறிந்தோர் வெளியிற் கூற
ஒண்ணுதிம் மறைமுடிவென் றுரைத்தா ரன்றே 12

[இரகசியச் சருக்கம் முற்றும்]

1000 பிரதிட்டாவிதி – விக்கிரகங்களை எழுந்தருளச் செய்யும் மந்திர விதிகள்.

1001 தாபித்தல் – நிலைபெறச் செய்தல். எத்தனித்தல் – முயலுதல்.

1002 உவரில் – குற்றமில்லாத ஆலயமும் சபையுமாக விளங்கச் செய்து.

1003 முத்தி வித்தகம் – முத்தி ஞானம் கைவரப் பெற்றவர். மறை – இரகசியம்.

யோகபீடச் சருக்கம்

[அறுசீராசிரிய விருத்தம்]

1004 ஆதரவி னியன்ற ஆத்துமநா
யகர்விம்ப மருளிச் செய்த
சூதர்முனம் பணிந்தெழுந்து சொல்கின்றார்
அருந்தவர்கள் தொன்மை யாவும்
போதமுற வுற்றுணர்த்தோய் புகன்றவருட்
டிறமெவையும் புந்தி தேர்ந்தேம்
தீதகற்றும் திருக்குருந்திற் கருகுசத்தி
விம்பமுள தென்றாய் முற்றும் 1

1005 அதற்குமிதற் கும்பேத முண்டோமற்
றதுதான்சிற் சத்தி யன்றே
மதித்துணர அருள்கவென, மாதவத்தீர்
மாசகற்று மாத்ம நாதர்
கதித்தெழுசித் துருவாகும் சிவயோக
மினும்நிமலர் கரமே யாம்நால்
விதித்தமறை தொடர்தருமாத் மேசரிட
மாகநாம் விளம்பும் விம்பம் 2

1006 அதுவேயோ காம்பிகைவிம் பமதாகும்
பேதமிலை யுறையுஞ் சத்தி
மதுவாரும் மலர்க்குருந்தின் தொக்காகும்
சிவம்வயிர மாகுஞ் சத்தி
பதியாக வதியிடங்க ளெவற்றினுக்கும்
பகரதுவே மூல மாகும்
துதியாருஞ் சத்திபே தங்களெலாம்
தோற்றிடமாய்ச் சொலலு மாகும் 3

1005 கதித்து - தோன்றி. சிவயோகமின் - யோகாம்பிகை.
1006 தொக்கு - உடம்பு.

1007 தக்கண்மக ளாயபரா சத்தியவ
தரித்ததுமச் சத்தி விம்பத்
தக்கருணை மேனியருத் தந்தைமகத்
தாகம்நீத் தசல மின்ற
மைக்கண்மயி லாயரனை மணந்துதவத்
தாலரிய யோக பீடத்
தொக்கவருட் சத்தியா யுறைகின்ருள்
உருவவழக் கொன்று மின்றி 4

[அயன் அம்பிகைக்கு மணிப்பாதுகை யமைத்தமைக்குக் காரணங் கூறுகிறார் சூதமுனி]

1008 அருச்சனைசெய் திறைஞ்சமுன மயன்சிந்தா
மணிபதும ராகச் சோதி
விரிக்குநிறப் பாதுகையை விரும்பியமைத்
தானென,மா தவரிந் திராதி
யிருக்கமணிப் பாதுகையை யெண்கணன்ரு
பிக்கவேண் டுவதே னென்ருர்
திருத்தமுத லருட்பரா சத்தியே
சிவயோகச் செல்வி யாமே 5

1009 அவளுயிரின் பொருட்டுருவ மமைந்துகிர
மத்தெவையு மாக்க வுன்னிற்
சிவனமா மவ்விறைவி திருவடியே
யைந்தொழிலுஞ் செய்வ தாலே
பவமகற்ற வடிதாங்கும் பாதுகையை
அயன்படைத்தான் பழுதி லாவெப்
புவனமுமவ் விறைவிமயம் என்றனன்சூ
தன்,றவர்கள், புகலு கின்ருர் 6

1007 கருணைமேனியள் – உமை. ஆகம் – உடம்பு. அசலம் – மலை.
1008 அயன் – பிரமன். எண்கணன் – பிரமன்.
1009 கிரமம் – முறை.

[நாரணன் சத்தியின் கூறே எனச் சூதமுனி விளக்குதல்]

1010 சகலமும்நா ரணன்மயமாய்ச் சாற்றலெவன்
உரைக்கவெனச் சாற்று கின்ருன்
இகலகல்சத் தியின்கூறே அரியெனநான்
மறைமுழுது மியம்பா நிற்கும்
அகிலமுமீன் றுதவுபிதா அன்னீசிவன்
அரியெனவு மறையு மன்றிப்
புகலரியும் அரனுமொரு வடிவாக
வுந்தோன்றிப் பொலி கின்ருரால் 7

1011 ஆதலினற் சத்தியரிக் கும்பேத
மின்றுமற்ற வங்கந் தன்னிற்
பாதமுல காக்குசெயல் பூணலினல்
அரிதனக்குப் பாத பூசை
ஏதமிலா வதிகபல மென்பதும்மற்
றிவ்வருமை யெல்லாம் நோக்கி
வாதபுரி யீசரும்பா துகைதனீயே
பிதிட்டைசெய்து வைத்தா ரன்றே 8

[மணிப்பாதுகையின் சிறப்பும் அதனை அபிடேகஞ் செய்த
தீர்த்தத்தின் சிறப்பும் கூறுதல்]

1012 சத்தியடை யாளமதாய் யோகபீ
டத்திலருள் தாங்கி யென்றும்
முத்திதர வீற்றிருக்கும் பாதுகையிற்
ரூயுதக முண்டு, கண்டோர்
எத்தகைச்சித் தியுமடைவர் இம்முறைமை
சிவயோக விறைவி சீரென்
ரூத்துரைத்தா னருந்தவர்கள் ஆனந்த
பரவசராய் உரைக்க லுற்ருர் 9

1010 இகல் - மாறுபாடு. அரி - திருமால். ஒருவடிவம் - சங்கர நாராயண வடிவம்.

1011 சத்தியரி - சத்திக்கும் அரிக்கும் (உம்மைத்தொகை) வாதபுரியீசர் - திருவாதவூரர்.

1012 தோய் உதகம் - பொருந்திய நீர் (அபிடேகநீர்).

[பொன்னம்பலத்தின் மாட்சியை விளக்க முனிவர்கள் சூதரிடம் வேண்டிக் கொள்ளுதல்]

1013 இன்னுமொரு முறைகேட்க வெண்ணினமற்
றையதலங்கள் எவைக்குந் துய்ய
பொன்னெலிமா மன்றதிகம் எனவுரைப்ப
தேனதுதீ புகல்வா யென்ன
நன்னர்விஞ் எவராலும் நவிலரிது
தெரிந்ததுயான் நவிற்று கின்றேன்
என்னதுதான் துவாதசாந் தத்தலத்தீ
சற்குவிலோ யாடுந் தானம் 10

[பொன்னம்பலத்தின் மேன்மை கூறுதல்]

1014 ஆதலினு லும்பரமா காயமா
தலினுமது வாயா கத்தே
பேதமற யாவையுமுண் டாதலினு
லதனிடத்திற் பிறந்த மற்றத்
தீதகன்ற பலங்களெலாம் அதுவொன்ரு
காயமற்றத் தெய்வத் தானம்
பூதமொரு நான்கிடமாப் போந்ததென
வாதலினு மிக்காய்ப் புகன்றதாகும் 11

1015 முதியபுண்ட ரீகபுரஞ் சகுணவிட
மெவற்றினுக்கும் முதன்மை யாகும்
அதிகவங்கந் தொறுமிருக்கும் ஆத்மாவுக்
கிதயநிலை யாகு மாபோற்
பதிகடொறு மேவுமர னுக்குநிலை
யாகுமந்தப் பதியின் மேவு
கதிதருனின் மயப்பொருளால் மற்றவிடந்
தொறுமுறையுங் கடவு ளெல்லாம் 12

1013 பொன்னெளி மாமன்று – பொன்னம்பலம். என் – என்று.

1014 பலங்கள் – பிற அம்பலங்கள் (அம்பலம் முதற்குறை). நான்கு பூதம் – மண் நீர் நெருப்பு காற்று.

1015 புண்டரிகபுரம் – பொன்னம்பலமாகிய சிதம்பரம்.

1016 கருவிகர ணங்களெலாம் சுழுத்தியினில்
ஒடுங்கிநிற்கும் காட்சி போல
வரையிருளில் வந்தொடுங்கும் அப்பொழுது
சிற்சபைவந் தணையுண் டாகிப்
மருவுபவத் துயரகன்று மாசில்லா
முத்திநெறி மருவ லாகும்
பொருவுகலச் சபையினையெங் கிருந்துநினைத்
தாலுமவர் புவியிற் றோன்றூர் 13

[தில்லைக்குந் திருப்பெருந்துறைக்குந் தொடர்பு உண்டெனக் கூறுதல்]

1017 இத்தகைய மேன்மையினு லில்லையதற்
கொப்புயர்ப தீது மாகும்
தத்துவமார் சிவபுரமு லத்தினுக்கப்
புலிப்பதிதான் சாகை யாகும்
அத்தகையாற் பலம்பொதுவி லாமென்றத்
தின்கணித்தாண் டவம தாகும்
துய்த்தவரெண் ணிலரதனற் பெருந்துறைக்கும்
புலிப்பதிக்கும் தொடர்ச்சி யுண்டாம் 14

[திருப்பெருந்துறையின் உயர்வு விளம்புதல்]

1018 கெழுமுமற்றப் பதிகளினும் அரனருள்பெற்
றுய்ந்திடவும் கிடைக்கு மேனும்
பழுதகலும் பெருந்துறைக்கொப் பாகவொரு
தலங்கள்தணைப் பகர்த லாகா
திழிவுளதாந் சொலிலதன்கண் இருந்துமற்றத்
தலந்தீர்த்தம் எண்ணல் தீது
வழுவகலத் தலத்திலிருந் தாலுமிதை
யேநிகவாய் மதித்தல் வேண்டும் 15

1016 சுழுத்தி – உறக்கநிலை. பொருவு – ஒப்பு.

1017 அதீதம் – அளவுகடந்து. புலிப்பதி – சிதம்பரம். சாகை – இலை வளார் முதலிய உறுப்புக்கள்.

1018 கெழுமும் – பொருந்தும். மிகவு – மிகுதி.

[ஈரேழு ஆண்டுகள் கானில் உறைந்த இராமன் குருந்தவனம் வாராமைக்குக் காரணம் யாது என முனிவர்கள் சூதரிடம் வினவுதல்]

1019 சிவபுரமற் றதலங்கள் எவற்றினும்
அதிகமெனச் செப்ப லாகும்
தவமுதல்வீ ரென்றனன்மா தவருமிக
வகமகிழ்ந்து சாற்ற லுற்றார்
நவமகிமை யாயெவையுங் கேட்டுவந்தேம்
பதினன்கு வருடங் கானம்
உவமையிலா இராகவன்சேர்ந் துறுங்காலத்
திதின்வரத்தா யோதல் காணேம் 16

[இராமபிரான் சிவபெருமானின் ஒரு கூறேயென விளக்குதல்]

1020 என்னவே துவினலிங் கெய்தாத
தென்ன,மகிழ்ந் தியம்பு கின்றான்
மன்னுகர ணைதீத மானகுண
ரகிதமாம் ஆத்ம நாதர்
தன்னுடைய கூறேயத் தசரதன்சே
யாகஅவத ரித்துத் தீய
புன்னிலைவல் லசுரர்தமைப் பொன்றுவித்தெல்
லாவரமும் பொலிவ தாக்கி 17

1021 பேதமிலாப் பொருளாகி யிருந்ததனு
ளும்மீற்றிற் பிரியா தொன்றி
யேதமற வொடுங்குவதுள் விடமாத
லானுமவ னேய்ந்த தில்லை
மாதவர்கா ளிந்தவொரு மூன்றுசருக்
கமுமோத வல்ல ராகில்
தீதகலைச் சருக்கமுமோ தியபலனுண்
டாய்ஞானச் செல்வ ராவார் 18

1019 இதின்வரத்தாய் – இவ்விடத்திற்கு வந்ததாக.

1020 கரணைதீதம் – கரணங்களுக்கு அப்பால். பொன்றுவித்து – அழித்து.

1021 மூன்று சருக்கம் – தலவிசேடச் சருக்கம், இரகசியச் சருக்கம், யோகபீடச் சருக்கம்.

1022 பரப்பிரமத் தின்னியல்பு பகர்ந்தசருக்
கம்மிவையாம் பரிவிற் கேட்க
உரித்தொருநால் வருணருக்குங் குருமுகமாய்க்
கேட்டிதயத் துணர வேண்டும்
விரித்திடும்மெய் ஞானவித்தை யாமிதனை
விளம்புவரே, விமல மேவு
குருந்துருவ முளரவரைத் தெக்கணை
மூர்த்தமெனக் கொள்ளல் வேண்டும் 19

[இம்மூன்று சருக்கங்களைச் சிந்தித்தோர் கேட்டோர் எய்தும் பயன்கூறுதல்]

1023 இம்முறையிற் கேட்டதனைச் சிந்தித்தோர்
பாசபந்த மெல்லாம் நீங்கிச்
செம்மையதா கும்பரம பூரணத்தோ
டத்துவிதச் செல்வ முற்று
விம்மலுறு மானந்த மேவடிவா
குவரென்றுன் மெய்சேர் சூதன்
அம்மவென மாதவர்கேட் டற்புதமற்
புதமிவையென் றன்பு செய்தார் 20

[யோகபீடச் சருக்கம் முற்றும்]



1023 விம்மல் – பெருகுதல்.

பத்தர் மகிமைச் சருக்கம்

[அறுசீராசிரிய விருத்தம்]

[பக்தர்களின் பெருமையைக் கூறுமாறு புரூரவா தவமுயரிடம் வேண்டல்]

1024 வளமருவுந் தவமுயமா தவவேந்தே
யுன்றனருள் வண்மை யாலே
கிளருமவன தீர்த்தபுர கேந்திரமீ
சன்பெருமை யெவையுங் கேட்டென்
உளமுருகப் பெற்றதினிப் பத்தர்நல
மிம்முறையென் றுரைத்தாள் கென்ன
வளமமர்மேன் மைப்பொருள்சேர் புரூரவா
கேட்கமுனி யருள்செய் கின்றான் 1

1025 மலரயற்கு முன்புபதே சம்புரிந்து
திருக்குருந்தின் வடிவ மான
நிலவணிசெஞ் சடைப்பரனே யவ்வயனே
யருச்சனைசெய் நியமம் பூண்டு
பலபொழுது பூசித்து வருநாளிற்
றிரேதயுகம் படர நோக்கித்
தலமதில்நா டோறுமருச் சிக்கயுக
மிதின்வரற்கா காதென் றுன்னி 2

[பிரமன் திருக்குருந்தீசனுக்குப் பூசனைபுரிய அந்தணர்களையுண்டாக்க ஓமஞ்செய்தல்]

1026 செப்பரிய மெய்ப்பொருளாம் திருக்குருந்தை
நாளுமருச் சிக்க வேறு
விப்பிரருண் டாகிவர வேண்டுமெனச்
சன்னிதிமுன் விதிவ ழாமல்

1024 கிளரும் – விளங்கும். பத்தர் – பக்தர்கள்.

1025 நிலவணிசெஞ்சடை – பிறையை அணிந்த சடை. நியமம் – விரதம். தலம் – பூதலம் (மண்ணுலகம்).

ஒப்பகல்செங் தீயைவளர்த் தோமத்தந்
தணரிதிலுண் டாக வென்று
மூப்பொருட்கு மூலமதா குங்குருந்தை
வந்தித்தான் முளிரி மேலோன் 3

[ஓமகுண்டத்தில் ரூட்சாயணர் தோன்றுதல்]

1027 அப்பொழுது குருந்துறையெம் அண்ணலரு
லாலயன்செம் ஓம குண்டத்
துப்புறழ்செந் தீவலமாய்ச் சுழித்தெழுந்தோங்
கிப்பொலியுஞ் சுவாலை நாப்பண்
வைப்பெனவோ ரருங்குழவி தோன்றவதி
சயத்தொடதை மலரோன் கண்டு
தப்பிலதற் குப்பெயர்ரூட் சாயணனு
மென்றதனைச் சாற்றப் பின்னும் 4

[ரூட்சாயணருக்கு அக்கினிவேசர் என்று பெயரிட்டு உபதேசித்தல்]

1028 அங்கியினிற் ரோன்றுதலா லக்கினிவே
சர்எனவும் அதற்கு நாமம்
தங்கவிரண் டுந்தரித்துச் செங்கையினு
லெடுத்தோமத் தழலிற் ரூனந்
துங்கமுறச் செய்வித்துச் சாதகமா
தியுமவற்குச் சுதனுக் கேற்ப
மங்களமாச் செய்துபதே சித்தான்கா
யத்திரியா மனுவை யன்பால் 5

[ரூட்சாயணருக்கு எல்லாக் கலைகளையும் கற்பித்தல்]

1029 மறையளவா மெனுமந்த மாமனுவி
னுபதேச மான போழ்தே
அறைதருமெண் கலைஞான மதற்குண்டா
யினவே தன்பார்த் தன்பால்

1026 விப்பிரர் – அந்தணர்கள். ஓமம் – யாககுண்டம். முளரிமேலோன் – பிரமன்.

1027 வைப்பு – புதையற்செல்வம். மலரோன் – பிரமன்.

1028 இரண்டு – இரண்டு பெயரும். தானம் – ஸ்நானம் (சிரார்த்தம்) மனு – மந்திரம்.

நிறைதருமா மறைவிதியால் சீவதிக்கை
புரிந்தரிய நிமல மாகும்
உறைதருபஞ் சக்கரமும் யுபதேசித்
தருகிருத்தி யோதுகின்றான் 6

1030 அருள்தருகுந் தேசர்திரு வருளதனை
லவதரித்த அய்யா நீகேள்
மருவுசச்சி தானந்த மாமுதலே
திருக்குருந்தின் வடிவ மாகும்
தெரிவரிய வப்பொருளே யெமதுகுரு
வாஞ்சகத்தின் சிருட்டி நாடொட்
டொருவிலதா யிதுகாறும் பூசித்தோம்
திரேதயுக முறுத லாலே 7

[ரூட்சாயணரை பூசனைபுரியப் பிரமன் பணித்தல்]

1031 இக்காலந் தனிலஞ்சி முன்புபோற்
பூசிக்க வெம்மாற் கூடா
தக்காரம் போலினிய குந்தேசர்
பூசையையீ யாற்று கென்று
மிக்காரும் வேதமுறை யாகவருட்
சனையாவும் விதித்துக் கூறித்
தக்கோர்வந் தித்திறைஞ்சச் சதுமுகத்தோன்
றன்னுலகஞ் சார்ந்தா னன்றே 8

[பிரமன் உபதேசித்த முறையில் ரூட்சாயணர் இறைவனுக்கு
பூசைமுதலியாற்றுதல்]

1032 அயன்றனக்குக் கூறியபூ சாவிதியின்
முறைரூட்சா யணனுஞ் செந்தீப்
பெயர்மடுவிற் றோய்ந்தரன்கண் மணியொடுவெண்
பொடியணிந்து பெருகு மன்பின்

1030 ஒருவிலதாய் – நீங்காமல்.
1031 அக்காரம் – சருக்கரை. தக்கோர் – ரூட்சாயணர்.

நயமொடுபூ சைப்பணிக்கு வேண்டுமுப
கரணமெலம் நாடிக் கைக்கொண்
டுயர்நெறிமற் றிதுவாமென் றுவந்துகுருந்
திறைபூசைக் குற்ற னன்றே 9

1033 அருக்கியங்கெவ் வியந்தபன முதலியதா
பித்தபிடே கங்க ளாற்றி
மருக்கமழும் மலரிலைகொண் டருச்சித்து
மதுரமிகு மன்ன மாதி
திருத்திமுனம் வைத்துநிவே தித்துமணித்
தூபமொடு தீப மீந்து
விரிக்கும்மறை யின்விதியால் வேண்டுமுப
சாரமெலா மிகச்செய் தன்பால் 10

1034 அட்டாங்க பஞ்சாங்க மாகநமக்
காரஞ்செய் தன்பி லாதார்க்
கெட்டாத பரம்பொருளாம் திருக்குருந்தை
வலமாய்வந் திருகண் தாரை
விட்டோட வுடல்புளக மிக்கோங்கப்
பரவசமாய் விம்மா நின்று
மட்டாரும் மலர்க்கரஞ்சென் னியிற்ருங்கித்
திருமுன்பு வழுத்து கின்ருன் 11

[சூட்சாயனர் இறைவனை வழிபட்டுப் போற்றி வேண்டுதல்]

1035 திருமாலு மலரயனு மேனமுமன்
னமுமாகித் திகழ்பல் லூழி
யொருவாது பூவகழ்ந்தும் வான்பறந்தும்
சற்றுமறி வொண்ணை தாகும்

1032 செந்தீப்பெயர் மடு - அக்கினி தீர்த்தம்.

1033 அருக்கியம் - மந்திர நீர். கெவ்வியம் - ஆனைந்து. தூபம் - கெருப்பு. மரு - மணம். நிருத்தி - படைத்து. உபசாரம் - பதினறு வகை உபசாரம்.

1034 அட்டாங்கம், பஞ்சாங்கம் - கீழ்விழுந்து வணங்கும் முறைகள். மட்டு - தேன்.

இருபாத கமலமும்நீள் முடியுமுடை
யாயென்ரு லெந்தா யுன்றன்
உருவாகு மதனீயெவ ரறிவர்குருந்
தெனமூலத்திங் குற்ற கோவே 12

[இறைவன் திரிபுரமெரித்த செயலில் வியத்தல்]

1036 மாமேரு வில்லாக வாசுகி நா
ணாகஅரி வாளி யாகத்
தேமேவு மறைப்பரிபூண் டிருசுடரு
முருளுலகேழ் தேர்த்தட் டாகப்
பூமேவு மயன்பாகாய்ச் செலுத்திரத
மேற்போந்து புரங்கள் மூன்றும்
தீமேவப் புன்னகைசெய் யுன்னீ யெவர்
அறிவர்குருந் தேசா யின்றே 13

[இறைவன் ஆலமுண்டருள் செய்ததை வியத்தல்]

1037 மந்தரமத் தாய்நிறுவிப் பாற்கடலுள்
வாசுகியை மாட்டி நாணு
இந்திரைநா யகன்முதல்வின் ணவருமசு
ரருமமுத மெய்தப் பற்றித்
தந்தமிட லாற்கடையக் காளமெழக்
கண்டெவரும் தாழ்வுற் றஞ்சி
வந்தலற வவ்வாலம் நுகர்குருந்தே
சாவுனையார் மதிக்கற் பாலர் 14

1035 ஏனம் – பன்றி. பூவகழ்ந்தும் – பூமியைத் தோண்டியும்.

1036 அரிவாளியாக – திருமால் அம்பாக. மறைப்பரி – வேதமாகிய குதிரைகள். உருள் – சக்கரம். அயன்பாகாய் – பிரமன் தேர்ப் பாகனாக.

1037 மந்தரம் – மந்தரமலை. நாணு – கயிறாக. மிடல் – வலிமை. காளம் – நஞ்சு. ஆலம் – ஆலகாலமாகிய நஞ்சு.

[இறைவன் சண்டேசருக்கு அருளியதைவியத்தல்]

1038 கோதனங்கள் தந்திடுபால் கொண்டுமண்ணி
யாற்றினில்வெண் மணலீலக் கூப்பி
நீதமுற வாட்டிவழி பாடுபுரி
யுஞ்சிறவன் நிலைமை நோக்சித்
தாதைவெகுண் டக்குடப்பால் கால்கொடுசாய்
திடவவன்ருள் தரையில் வீழ்த்துங்
காதலனைத் தண்டீச னைக்குகுந்தே
சாவுனையார் காண வல்லார் 15

[இறைவன் மார்க்கண்டேயருக்கு அருளியதை வியத்தல்]

1039 அருள்பெறுமாற் கண்டமுனி யிறுகாலம்
உறுவதுகண் டனன்பா லன்ருள்
மருவியல ரிட்டுவழி படுபொழுதந்
தகனனைந்து வலியப் பாசம்
வெருவுறவீ சச்சினந்தன் னன்துடித்து
விழுவுதைத்து, மேன்மை யந்த
திருமுனிசேய்க் கருளியகுந் தேசாவுன்
சீரறிய வல்லார் யாரே 16

[இறைவன் சிறுத்தொண்டர்க்கருள்புரிந்ததை வியத்தல்]

1040 சிறுத்தொண்டர் மனையின்வயி ரவக்கோலந்
திகழவெழுந் தருளி மெய்யில்
மறுக்கான வில்லாத யைந்துபிரா
யம்முளதாய் மாதா தந்தை
யறுத்தடிசி லுண்பமென வப்பரிசு
புரிபெரியோர்க் கடல்வெள் ளேறு
பொறுப்பவெழுந் தருளியருள் குந்தேசா
வுனையறிந்து போற்றுவார் யார் 17

1038 கோதனம் – பசுவின் பால்மடி. நீதம் – நெறி. சிறுவன் – சண்டேசர்.

1039 இறுகாலம் – ஆயுள் முடியுங்காலம். அந்தகன் – இயமன். வெருவுற – அச்சமுற.

1040 மறு – குறை. அறுத்தடிசில் – அறுத்துச் சமைத்த உணவு. பரிசு – தன்மை. பொறுப்ப – தாங்க.

[இறைவன் சந்திரனுக்கருளியதை வியத்தல்]

1041 குருமனையை யபகரித்த குற்றமுடை
யோனெனவின் ணோர்கள் கூடிப்
பொருபடைகொன் டமர்க்கெழவம் புலிக்கடவுள்
போற்றியுனைப் புகலென் றோதச்
செருமுகத்து வந்துசினந் தெவரையுமச்
சம்புரிந்தத் திங்கள் தன்னைக்
குருமுடியின் மேற்றருங்கு குந்தேசா
நின்பெருமை கூறு வார்யார் 18

[இறைவனின் திருமுடிச் சிறப்பைப் புகழ்தல்]

1042 தொல்லுலகம் யாவையும்நின் நெற்றியழ
லாற்றெகித்தச் சுடலை தன்னில்
புல்லுமணி மார்பிலரி பிரமகபா
லத்தொடையல் புரள வோங்கி
வில்லிடுமூ விலைச்சூலம் வலப்புயத்தி
னேடணைத்து வீணை யேந்தி
வல்லிருளில் நடனமிடு குந்தேசா
வுனையறிய வல்லார் யாரே 19

[இறைவனின் பரத்துவத்தைப் புகழ்தல்]

1043 உருவென்ரு லுருவல்லை யருவென்ரு
லருவல்லை யுபய மாகி
வருமென்ரு லவையல்லை யெவ்வுயிரு
நீயாகி வருவை கண்டு
தெரியுங்கா லவையலவாய்ச் செல்வையுன
தருள்மேனி தேர்ந்தீ தென்று
பரிவொடுபூ சிப்பதெவ்வா றடியனேன்
குந்தேசா பகரு வாயே 20

1041 குரு – பிரகஸ்பதி. அம்புலிக் கடவுள் – சந்திரன். செருமுகம் – போர்க்களம். குருமுடி – செந்நிறம் பொருந்திய சடைமுடி.
1042 புல்லும் – பொருந்தியிருக்கும். தொடையல் – மாலை. வில் – ஒளி.
1043 உபயம் – அருவுரு. வருவை – வினங்குவாய்.

1044 என்றுபல வாற்றுதிசெய் தருள்பெற்றுச்
சிவயோக விறைவி தன்பால்
சென்றலர்மஞ் சனமுதலா கியகொடுபூ
சித்துவலஞ் செய்து தாழ்ந்து
தன்றுணைச்செங் கரங்கள்சிரந் தாங்கவிழி
நீர்ததும்பித் தாரை சோர
நின்றுதுதித் தேத்தலுறு கின்றனன்ரூட்
சாயணன னன்நேசத் தோடும் 21

[சிவயோக நாயகியைத் துதித்து வேண்டுதல்]

1045 ஆதவனுங் கிரணமும்போல லருளாத்ம
நாதருடன் அமர்ந்து வாழும்
போதமய மேயகில காரணமா
யோங்குமருட் பொற்பே மிக்க
நாதமுத லேயெழிலார் சிவயோக
நாயகிநற் ருயே யானுன்
பாதமலர்க் காளாயுய்ந் திடுமாறென்
கண்ணருளீ பாலிப் பாயே 22

1046 மலையரையன் திருமகளா யவதரித்துக்
கயிலையரன் மன்றல் வேட்டு
நிலைபெறுமா தவமிந்த வருட்பீடத்
தலிலியற்று நிமலாய்! வேதத்
தலைதருபூ ரணைக்கடலே சிவயோக
நாயகிநற் ருயாம் ஞானக்
கலையமுதே யெனையுனது கமலமல
ரடிமையெனக் கருது வாயே 23

1044 மலர் மஞ்சனம் – மலரபிடேகம்.
1045 போதமயம் – ஞானமயம். நாதமுதல் – நாதத்துவத்தின் மூலம்.
1046 வேதத்தலை – வேதத்தின் உச்சி.

1047 ஒருகோட்டு மதக்கயமா முகக்கோவும்
திருக்கையில்வேல் ஓங்கிச் சூர்மா
வருகோட்டுந் திறல்வேளும் திருவாய்வைத்
தருந்தமுலை யளித்து மேன்மை
தருகோட்டு மலைக்கொடியாஞ் சிவயோக
நாயகிநற் ருயே யென்றன்
றிருகோட்டுன் பாதமலர்க் காளாயுய்ந்
திடுமாறுஞ் செய்வா யன்றே 24

1048 மலரடியுந் துவளிடையுந் திகமுடையு
மணிமுலையும் வயங்குங் காந்தள்
நிலவுகர மலருமுக மதியுமருள்
பொழிவிழியு நிகரில் பூணும்
இலகுமள கமுநிலவு சிவயோக
நாயகியே யானுன் செய்ய
நலமருவும் பணிக்காளாய் வந்தனன்நீ
தந்தருள்நா டோறு மன்பே 25

[பிரமன் குருந்திறையை வழிபட ஒருபோது வருதல்]

1049 இன்னவகை யாற்றுதிசெய் தன்பிஞெடும்
ஈரிடத்தும் ஏடார் கஞ்சன்
சொன்னமுறை மையின்ரூட்சா யணன்பிரம
சாரியாய்த் தொடர்பி ஞெடு
பன்னெடுநாள் பூசித்து வந்தனன்பின்
ஞெருகாலம் பண்டு போல
அன்னமுயர்த் தானணைந்தான் குந்தேசன்
அருள்வணங்கும் ஆசை கூர்ந்தே 26

1047 ஒருகோட்டு மதக்கயமா முகக்கோ – விநாயகர். சூர்மா – சூரபன்மன் திருகுஓட்டும் உன்பாதமலர். திருகு – மாறுபாடு.

1049 ஈரிடத்தும் – இறைவன் இறைவி இருவரிடத்தும். ஏடு – இதழ். அன்னமுயர்த்தான் – அன்னக்கொடியையுடைய பிரமன் கூர்ந்து – மிகுந்து.

[பிரமன் ருட்சாயணரை வினவல்]

1050 வந்தவயன் குருந்திறையை வந்தித்தெண்
கண்களுநீர் வாரப் போற்றிச்
சிந்தைமகிழ் வுற்றிடருட் சாயணன்வந்
தடிவணங்கச், சிறந்த வன்பால்
மைந்தவரு வாயெனத்தன் செங்கைகளா
லெடுத்தணைத்து மதுரங் கூறி
எந்தையருட் பூசைவழு வாதியற்றி
வந்தனையோ வென்ரு னன்றே 27

[பிரமன் ருட்சாயணர் மறுமொழி கேட்டுத் துணைவரில்லாமையையும் கண்டான்]

1051 அய்யநீ மொழிந்தவருச் சனவிதியின்
படியானும் அறிந்த வாறு
செய்துவரு கின்றனனுன் றிருவருளா
லென்றனனச் செம்மல் கூற்றும்
பொய்விரவா வன்புமரன் பூசையினி
லுறுதியுமப் பூசைக் கேவ
லெய்துபரி சாரகரில் லாமையுந்தா
னேபுரிவ தெவையுங் கண்டான் 28

[பிரமன் உருத்திரராகுதி செய்தல்]

1052 கண்டதிசை முகன்ருட்சா யணர்பூசைப்
பரிசார கிராத்த மாக
மண்டுசிவ வழலிடைவிப் பிரர்சிலரை
யுதிப்பித்து வைக்க வெண்ணங்
கொண்டுதிருக் குருந்திறையை வுனிக்கையினு
லோமகுண்டங் கோலிச் செந்தீப்
பண்டுபோ லெழுப்பிருத்ர ராகுதிபன்
னென்றுமதிற் பண்ணி ஞனல் 29

1050 மதுரம் – இன்மொழி.
1051 பரிசாரகர் – பூசைக்குத் துணைபுரிபவர்.
1052 உதிப்பித்து – தோன்றச்செய்து. உன்னி – நினைந்து.

[ஆகுதியில் பதினொருவர் தோன்றல்]

1053 அன்னபொழு தத்தழல்வா யவதரித்தார்
பன்னெருவர் அருங்கு மாரர்
மன்னுபுகழ் மாமலரோன் மைந்தரவ
ரைக்காணூஉ மகிழ்வுற் றன்னேர்க்
குன்னுபெய ரத்திரி,யங் கிரிசு,குச்சர்
வச்சர்பிரு குறுமா ரீதர்
பன்னுகாகர் முற்கலர்கண் ணுவர்கபிலர்
நலம்பெருகு பரத்து வாசர் 30

[பிரமன் அவர்களுக்குக் காயத்திரி முதலிய உபதேசித்து ரூட்சாயணருக்குத் துணையாக அமைத்தல்]

1054 என்றுபெய ரிட்டுரூட் சாயணரைப்
பார்த்திந்த வெழிற்கு மாரர்
ஒன்றியசா தகமாதி கருமமெம
வையும்புரிய உவந்தன் னேர்கள்
மன்றவறி வுடையகுண சீலர்குருந்
திறையருளால் வந்தோர் நாளும்
உன்றனருச் சனைக்கேவற் குரியர்கா
யத்திரியை யுபதே சித்து 31

1055 ஆரணம்ரு ளும்பகர்ந்தா சாரமுங்கற்
பித்திவரோ டமல மூல
காரணராங் குருந்தேசர் பூசைசெய்து
வருகவெனக் கழறி யந்த
ஏரணுகு பன்னெருவர் தம்மையும்பார்த்
தெந்நலமும் ஏய்ந்துள் ளீர்காள்
பூரணமா மிக்குருந்தின் பூசையருட்
பணியேவல் புரிந்தெந் நாளும் 32

1053 காணூஉ – கண்டு. உன்னுபெயர் – வழங்குதற்குரிய பெயர்.

1055 ஆரணம் – வேதம். ஏர் – அழகு. ஏய்ந்துள்ளீர் – பொருந்தியிருக்கின்றீர்கள்.

1056 அருந்தவனு மிந்தரூட் சாயணன்சொல்
வழுவாம லாற்றி யிங்ஙன்
இருந்திடுமின் நீவிருமென் றியம்பியயன்
றன்னுலகம் எய்தி னனவ்
விரிஞ்சனுரைப் படியவருக் குபதேசம்
மறைபிறவும் விளம்பி மேன்மை
பொருந்தியரூட் சாயணனன் னேர்மகிமை
கண்டுடலம் பூரித் தன்பால் 33

[ரூட்சாயணர் இரண்டு உபவேதங்களைச் செய்தருளல்]

1057 ஆக்கினவே கியமென்ரூர் கிரந்தமிரண்
டாம்வேத மனு சரித்த
நோக்குளதாய்ச் செய்துகொடுத் தவர்நடுவில்
இருந்துசெயம் நுவலிற் றீய
போக்கிடுமே காதசருத் திரர்நடுவீ
சன்வைகல் போலும் வான்மீன்
சேர்க்கைநடுச் சேர்தருசந் திரன்போல
வுஞ்சிறந்து திகழ்ந்து நாளும் 34

[கலியுகம் வந்தகாலை பிரமன் எண்ணுதல்]

1058 அவர்கடரும் பணியேவை யும்கொண்டு
பூசித்தங் கமருங் காலைக்
கவர்தருமைக் கலியுகம்வந் ததுவிரிஞ்சன்
முன்போலக் காணு மாவந்
திவர்கடரும் பரிசெவையும் நோக்கிமனங்
களித்திவர்கட் கினியிக் காலம்
பவநெருங்கு கலியுகமா தலிற்பிரம
சரியங்கை பழுதென் றெண்ணி 35

1056 விரிஞ்சன் - பிரமன்.

1057 ஆக்கினை, வேகியம் - இவையிரண்டும் நூல்களின் பெயர்கள். செயம் - வெற்றி. ஏகாதசருத்திரர் - பதினேரு உருத்திரர்.

1058 கவர்தருமைக் கலியுகம் - குற்றங்களைச் சூழ்ம் கலியுகம்.

[பிரமன் ரூட்சாயணரை இல்லற மேற்கக் கூறுதலும்
அவர் அஞ்சி மொழிதலும்]

1059 அய்யரூட் சாயணவொன் றறைதுமது
கேட்கவிக்கா லந்தான் றீய
பொய்விரவு கலியுகமா தலிற்பிரம
சரியமினிப் பொருந்தா தன்பின்
மெய்யனெனும் அத்திரிகன் னியைமணந்து
பரம்பரையால் விரைக்குந் தேசர்
செய்யவடித் தாமரையைப் பூசிக்க
வேண்டுமெனச் செப்ப வன்னேன் 36

1060 இம்மாற்ற மருளியதெவ் வாருது
மலினமிலா வென்கோ மின்னர்
தம்மாற்பௌ வத்துள்விழுந் தழுந்திடச்செய்
திடிலிதனிற் ரூழ்வ தல்லால்
விம்மாநின் ரெருகாலும் கரையேற
மாட்டேனவ் விண்ணக்குள் வீழ்த்தா
தம்மாநன் மலர்ப்பொகுட்டி னரசிருக்கு
மெந்தாய்நீ யருள்செய் யென்ரூன் 37

[பிரமன் அவர் அச்சத்தைப் போக்கி உடன்படச் செய்தல்]

1061 அலரவன்ரூட் சாயணன்கூற் றதுகேட்டஞ்
சலிநீதுர்க் கருமக் காகா
துலிவில்பரி சுத்தமுடை யோனும்நீ
யாதலினு லுலகு தன்னில்
நிலவியவா சிரமமொரு நான்கினீலும்
இல்லறநன் னெறிசீர்த் தாகப்
பலகலிநூல் களுமுரைக்கும் பரிசாலும்
அவ்வறம்நீ பரிக்க வேண்டும் 38

1059 அத்தரி - அத்தரி முனிவர். விரைக்குந்து - மணங்கமழும் குருந்த மரம்.

1060 மலினம் - வலிமை (மல் - வளம்) பௌவம் - கடல்.

1061 துர்க்கருமம் - தீயசெயல். உலிவு - துயரம். சீர்த்து - சிறப் புடையது. பரிக்க - தாங்க.

[ரூட்சாயணருக்கு அத்தரி முனிவரின் மகளை மணஞ் செய்வித்துப் பரம்பரையாய் வழிபாடியற்றப் பணித்தல்]

1062 திருந்துமறி வுடையோய்நம் மொழிகடவ
லென்றுமனந் திருத்தி யுள்ளம்
பொருந்தியவத் தரிமுனிவன் றரும்புதல்வி
கலாவதியைப் பொருத்த நோக்கி
விரும்புமழல் சான்றுக மன்றல்முடித்
திவ்வறத்தில் மேவித் தீஞ்சொல்
அருங்குழவி பெறுமதனைப் பரம்பரையா
யரன்பூசைக் காக்கி யீயும் 39

1063 பரமநிட்டை மேவியருட் செல்வமதுற்
றிடுகவெனப் பகர்ந்து பின்னும்
திருமருவு மைந்தர்பதி னொருவருக்கும்
மன்றல்வினை செய்து வித்து
தருமவர்கள் மைந்தர்பரம் பரைபரிசா
ரகமியற்றச் சாற்றித் தெய்வ
மருமலரெம் மிறைபூசை மன்னுமெந்நா
ளினுமெனவாய் மலர்ந்து போதன் 40

[ரூட்சாயணர் இரு புதல்வர்களைப் பெறுதல்]

1064 தன்னுலக மெய்தினன்ரூட் சாயணனில்
லறமருவிச் சாரும் நாளில்
பன்னருங்கற் புடையகலா வதியிருவர்
மைந்தர்தமைப் பயந்தாள் பேரும்
முன்னவற்குச் சிவசாமி, ரோமசன்பின்
னவற்குமென மொழிந்தாள் நேய
மன்னியரூட் சாயணர்சந் ததிவிருத்தி
யிம்முறையாய் மதிப்ப தாமே 41

1062 அழல் சான்றுக – அக்கினி சாட்சியாக.

1063 பரமநிட்டை – உயர்ந்ததியான வழிபாடு. போதன் – பிரமன்.

[ஏனைய பதினெருவரும் இல்லறத்தை ஏற்று மக்களைப் பெற்று ருட்சாயனரோடு விளங்குதல்]

1065 அங்கிரிசு முதலாய்ப்பன் னெருவரும்ருட்
சாயனேரே வலினெற் றங்கள்
துங்கமர பினுக்கடுத்த குலமறையோர்
கன்னியரைத் தொடர்வி வாகம்
பொங்கும்விதி யாற்புரிந்து சந்ததிகள்
மிகப்பெருக்கிப் பொலிய வன்னோர்
தங்கினையெல் லாம்பிரம ஞாலிகளாய்
வேணிமகு டங்கள் தாங்கி 42

[இவர்கள் முறையாகப் பூசனை புரிந்து ஒழுகுதல்]

1066 ஆக்கினைவே கியமெனுநூல் முறைவழியாய்க்
கருமங்க ளாற்றி மிக்க
யோக்கியராய்த் தியானபர ராயுரிய
சிவப்பணியி லரிமை யோராய்
நீக்கமில ராய்வெகுதூ ரங்களிற் போய்
வேண்டுவன நியம மாய்க்கொண்
டுக்கமுடன் மலர்பலனை வேதனமஞ்
சனமுதலா யுதவ நாளும் 43

1067 அருமறையுள் ருட்சாய ணன்மரபோர்
குருந்திரைவர்க் கவைகொண் டன்பால்
மருவியருச் சனைபுரிந்து வந்தனர்மற்
றவர்தமது மரபு தானென்
றுரியபரி சாரகர்தம் மரபுபதி
னென்றெனவு முறைப்ப தாமவ்
விருமரபு தனிலுமருட் பணிபுரிந்து
கதியடைந்தோ ரெண்ணி லார்கள் 44

1065 வேணிமகுடம் = சடைமுடி.

1067 அருமறையுள் – வேதங்களை எப்பொழுதும் நினைக்கின்ற.

[குருந்திறைவர்க்கு அரிசியட்ட அன்னத்தை நிவேதனமாகப் படைத்து வழிபடல்]

1068 இவர்கள்முனங் குருந்திறைக்குப் பணிக்குரிய
ராய்வருங்கா லெண்ணி லாதாய்க்
குவிதருநை வேதனஞ்செய் தமைத்திடுங்கா
லம்முதலாய்க் கொள்கை யாகச்
சுவைதருநெற் புழுக்கியந்த வரிசியையட்
டுப்படைத்த தொடர்பா லென்றும்
நவையிலதாய்ப் புழுக்கியநற் றண்டுலம்யோக்
கியமாக நடந்த தன்றே 45

1069 இன்னலமுள் ளோர்தொகையிற் குருந்திறையு
மொருவராய் இருப்ப தாலே
தன்னிகரி லோன்பரிந்தன் னோர்சிசுக்க
ளேதனது தனைய ராக
மன்னியத வளக்கருணை யாலளித்த
மாண்பதனல் வடித்து வாய்த்த
இன்னமுத மவர்கள்தரும் சிசுக்கள்முனம்
உணவியைந்த தென்று மன்றே 46

[புளினர்குல மன்னனின் கொடுங்கோன்மையும் அதனல் இவர்களில் சிலர் வடநாடு சென்று தங்குதலும்]

1070 இவ்வகையா லிவர்கள்பணி செய்துவருங்
காற்புளின னிறைவ னகிச்
செவ்வில்கொடுங் கோலங்கை யிற்செலுத்தி
வந்தனனத் தீமை யோன்செய்
எவ்வமதாற் றலராகி யிவர்கடமிற்
சிறிதுபெய ரெடுபட் டேகிக்
கவ்வையிலா வுத்தரஞ்சென் றந்தரவே
தியிலிருந்தார் கவலை யின்றி 47

1068 அட்டு – சமைத்து. தண்டுலம் – அரிசி. நவை – குற்றம்.

1070 புளினன் – வேடர்குலத்தான். எவ்வம் – துன்பம். எடுபட்டு – குடி பெயர்ந்து, உத்தரம் – வடதிசை.

[எஞ்சியிருந்தவர்களின் சிறப்புக் கூறுதல்]

1071 குருந்திறைவன் றிருப்பூசை குறைவுபடா
தியற்றிவெங்கோற் கொடுமைக் கஞ்சி
யிருந்தனர்மற் றையர்களவர் மேன்மையறி
தற்கரிதாம் எவர்க்கு மன்னேர்
பெருஞ்சரத மிதுவதனே யாவர்செவிக்
கொள்ளினுமப் பெரிய ரோடு
விரும்புகலப் புடையவரைக் காணினுமுண்
டாமரிய மேன்மை யாவும் 48

[பத்தர் மகிமைச் சருக்கம் முற்றும்]



1071 சரதம் – உண்மை. கலப்புடையர் – உறவினர், நண்பர்.

யுகநான்கினும் பூசிப்போர் மரபும் நாமத்திரைய மகிமையுங் கூறிய சருக்கம்

[அறுசீராசிரிய விருத்தம்]

[புரூரவா தவமியரை வேண்டிக் கொள்ளுதல்]

1072 என்றருளும் முனிவரனே நோக்கியிறை
மொழிந்திடுவான் இயம்பு மிக்கோர்க்
கொன்றியநற் சீரெவையும் கேட்டுவந்தேன்
திரேதயுகம் உற்ற தென்று
பொன்றருமே னிப்பிரமன் பூவினிற்பூ
சிக்கவரப் போகா தென்றோர்ந்
தன்றுரைத்தா னென்றனையெவ் வுகத்திலெவர்
உரியரதை அறைதி யென்றான் 1

[யுகம் நான்கினும் சன்னவனம் இருக்கும் நிலையையும் பூசனை புரிவோர் இவர் எனவும் தவமியர் கூறல்]

[கிரேதயுகம் தேவர் முனிவர் அந்தணர்களுக்கு ஆம் எனல்]

1073 கிரேதயுகந் தனிற்கனக மயமாகும்
சன்னவனம் கெழுவு பூமி
யரிதவொளி நவமணிக ளொடுவிளங்கும்
விருக்கமெலாம் அம்பொன் வெள்ளி
பிராதமணி மயமாகும் தேவிரு
டிகளொடுவிப் பிரருந் தீய
பொருதகுருந் திறைபூசைக் குரியர்மற்ற
மூவருக்கும் பொருந்தா தன்றே 2

1072 இறை – புரூரவமன்னன். பூவினில் – பூலோகத்தில். அறைதி – கூறுவாயாக.

1073 விருக்கம் – விருட்சம் (மரங்கள்) பிராதமணி – தலைமையான மணிகள்

[திரேதாயுகம் அந்தணர் அரசர்க்கு ஆம் எனல்]

1074 அரியதிரே தாயுகமா மென்றிடில்பூ
வுந்தருவும் அம்பொன் வெள்ளி
மருவுமணி யின்வடிவாய்ச் சில்லிடத்துண்
டாந்தேவர் மறைந்து நாளும்
பரிவொடருச் சிப்பர்மறை யவரொடுமன்
னருக்கவ்வுகம் பணிச்சு மற்ற
இருவருக்குங் கூடாது துவாபரமா
மென்றிடில்பூ விலங்கு மண்மேல் 3

[துவாபராயுகம் மூவருணத்தார்கும் ஆம்எனலும் கலியுகம் யாவர்க்கும் ஆம் எனலும்]

1075 சேர்தருகற் றருக்களெலாம் பூந்சோலை
யாமுயர்நற் றினங்க டன்னில்
ஆர்வமொடு வானவர்வந் தொருகால
முருமறைய வருச்சிப் பார்கள்
சார்தருமூ வருணரும்பூ சைசக்குரியர்
பின்னவர்க்குத் தகுவ தாமென்
றேர்மருவாக் கலியெனில்மார் கழியுதயம்
பிரதோட மிந்து நாளில் 4

1076 வானவர்க ளுருமறைந்து வந்தருச்சித்
தேத்துவர்மண் வடிவாம் பூமி
யூனமிலா நான்குவரு ணத்தாரும்
இருடிகளும் உறுநோன் பாற்றி
ஞானியரா யேலுமவ ணமர்ந்
திடுவர்பல வாம்நற் றவரும்
ஆனமையாற் றிரேதயுகத் தயன்முனம்போல்
வரக்கூடா தாகு மென்றான் 5

1074 தரு – மரங்கள் சில இடங்கள் நவமணி வடிவாக விளங்கும் என்றபடி.
1075 மூவருணம் – அந்தணர், அரசர், வணிகர். ஏர்மருவா – சிறப்புப் பொருந்தாத. பிரதோடம் – அந்தமனத்திற்கு முன்னும் பின்னும் உள்ளகாலம். இந்து – சந்திரன் (பூரணை).
1076 மண்வடிவாம் பூமி என்றது ஏனையுகத்தில் உள்ள சிறப்பில்லை என்றபடி.

[இன்னதலங்களில் இன்னதிங்கள் பூசனைக்குச் சிறந்தது எனல்]

1077 இன்னபரி சாலோவென் றிறைமகிழ்வி
னேடுபினும் இயம்பு கின்றுன்
மன்னியமார் கழியுதய மதிகமென
வோதினேயம் மதியின் மேன்மை
என்னேயதில், மொழிகவென வதுசரத
மாமறைது மிறைவ கேண்மோ
அன்னமலி வயல்புடைசூழ் மதுரைநகர்
மேடமா சம்வி சேடம் 6

1078 இடபமதி வானிருதி நலங்குருக்கேத்
திரத்தானி யினிய தாகும்
மடமகல்விக் குஞ்சேது கண்டிவிசே
டஞ்சிங்க மாசம் நன்று
திடமருள்கோ தாவிரியி னருமதையிற்
கன்னிமிகச் சிறந்த தாகும்
கடம்வருகா வேரிதனிற் றுலாமாசம்
அதிகமெனக் கழற லாகும் 7

1079 விருச்சிகமா சம்அதிகம் யமுனையினிற்
றனுமாசம் மேலாம் நம்பர்
அருத்தியுட னுடுசிதம் பரம்மகர
மதியதிக மாகுங் கங்கை
விருத்திதருங் கும்பமதி நன்னலமாம்
பிரயாகை மீன மாசம்
பொருத்துநல மாகும்பற் குணநதியி
லதிகமிங்குப் பகலீ ராறும் 8

1077 அறைதும் – கூறுகின்றேன். மேடமாசம் – சித்திரைத் திங்கள்.

1078 இடபமதி – வைகாசித் திங்கள். சிங்கம் – ஆவணித் திங்கள். கன்னி – புரட்டாசித் திங்கள். துலா மாசம் – ஐப்பசி. கடம் – கார்க்கை.

1079 விருச்சிக மாசம் – கார்த்திகை. தனுமாசம் – மார்கழி. மகரமதி – தைமாதம். கும்பமதி – மாசி மாதம். மீனமதி – பங்குனி.

[பன்னிரண்டு திங்களும் சிவபுரத்திற்குச் சிறப்பெனலும் மார்கழி மிகச் சிறப்பெனலும்]

1080 சிவபுரமா நகரிலதிற் றவவாசம்
செபமாதி செய்யின் பீராப்
பவமகலும் பரபோகம் பலித்திடுமிப்
பன்னிரண்டிற் பகர்விற் றிங்கள்
தவறகலப் புரியில்மிக நலமதினு
முதயமிக்க தாம்வி சேட
கவையகலும் அப்பதியிற் பருவமா
திரைமகிமை நவிலு வார்யார் 9

1081 சோமவா ரமுங்கூடிற் கிடையாதப்
புண்ணியநற் றினமந் நாள்வந்
தேமமுற நேர்வதுவு மெண்ணிறந்த
புண்ணியத்தா லெய்த வேண்டும்
தீமையிலா ஈரயணந் திட்பமா
குந்துலாந் தேள்வி சேடம்
தாமமணி மார்பதனு வாவிமிகச்
சிறந்ததின் தன்மை சொல்வாம் 10

[மார்கழித் திங்கள் உதயகாலச் சிறப்பை விளக்குதல்]

1082 வானவர்க்குத் தைமுதலா யானிவரை
பகலாடி மாச முன்னுய்
ஞானநலஞ் சேர்தருமார் கழிவரைக்கும்
இரவாகும் நாளீ தென்றங்
கூனமிலம் மாசமொவ்வொன் றைவைந்து
நாழிகையா யுதய வத்த
மானி, வானவர்தமக்குப் பிரதோட
காலமிது வாத லாலே

1080 பரயோகம் – சுவர்க்க இன்பம். விற்றிங்கள் – மார்கழி. பருவம் – பூரணை. ஆதிரை – ஆதிரை நட்சத்திரம்.

1081 சோமவாரம் – திங்கட்கிழமை. ஏமுற – இன்புற. ஈரயணம் – தெட்சணாயணம், உத்தராயணம். நுலாம் – ஐப்பசி. தேள் – கார்த்திகை. தனு – மார்கழி.

1082 பகல் – ஒரு பகற்பொழுது. இரவாகும் – ஓர் இராப்பொழுதாகும். ஒவ்வொரு திங்களும் தேவர்களுக்கு ஓர்நாள் நாழிகைப்பொழுதாகும். பிரதோடகாலம் – சந்தியாகாலம்.

1083 முனிவரர்விண் ணவர்களரி பிரமர்முத
லியரெவரும் முறையிற் ருழ்ந்து
களிவொடுபூ சித்துவரங் கொள,குந்த
வாணரையக் கால நன்ருந்
தனியிரவா ருங்கூறு மார்கழியா
கையில்விபுதர் தரும சீல
மனமருவிப் புரியுமுஷா காலம்தாம்
வருமுதய மதின்முன் பாகும் 12

1084 ஆதலினல் மார்கழிமுற் றும்புனித
காலமது வாகும் ஆத்ம
நாதர்பிற தலத்தமரும் கடவுளர்க்கு
முதன்மையெனும் நலத்தி னலே
ஏதமிலா வக்கால மவ்விறைக்கு
மிகவுமரித் தென்று நோக்கிப்
பூதலர்மற் றையரெவரும் தனுமதியிற்
பூசைமிகப் புரிதல் வேண்டும் 13

[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

[மார்கழித் திங்களில் ஆதிரைநாளின் சிறப்பு]

1085 அம்மதியி லாதிரைநாள் குருந்த வாணர்க்
ககமகிழுஞ் சுபதினமா கையிலெண் ணெய்பால்
விம்முதயிர் கன்னல்சருக் கரைதேன் பஞ்சா
மிருதம் விழை கனிவருக்க மிளநீர் வாசஞ்
செம்முசந்த ஞதிகளான் மிகவு மாட்டித்
திரளாய்மை வேதனங்கள் செய்வித் தேத்தி
யெம்மையுன தடியிணைக்கீழ் வைக்க வேண்டும்
என்பவர்க்குப் பரமபதம் எளிதா மன்றே 14

1083 அக்காலம் – மார்கழி உதயகாலம். விபுதர் – கடவுள்.

1084 பூதலர் – மண்ணுலகில் உள்ளவர். தனுமதியில் – மார்கழித் திங்களில்.

1085 எள்நெய்பால். வாசம் – பஞ்சவாசப் பொருள்கள். ஆட்டி – அபிடேகஞ் செய்து. செம்மு – செம்மையான.

1086 திருவாத வூரருக்குக் குந்த வாணர்
தெரிசனங்கட் டளையிட்ட தினமந் நாளாம்
ஒருவாவிந் நலமுடைய தாத லாலே
யுயரானி மார்கழியு மாத்ம நாதர்க்
கருள்கூருந் திருநாளென் றெவரும் போற்று
வார்களின்னு மொன்றனந்த மாகி யென்றும்
பெருகாநின் றிடுமறமொன் றுளதா மென்று
பேதமில்வேந் தோடுமுனி யேசினலல் 15

[அறுசீர் விருத்தம்]

[இத்தலத்தில் செய்யும் அறம் ஒன்று ஒருகோடியாகும் எனல் விளக்குதல்]

1087 மாதவ ருக்கர சாகிய தவுமியர்
மலரடி யிற்பணியா
சீதம திக்குல நாதனென் னுத நீ
செய்தனை யெவ்வருளும்
ஏதம கற்றுமொவ் வொன்றெரு கோடி
யிலக்கம தாகுமறம்
ஓதிடி லுற்றுள தென்றது நீபரி
வுற்றருள் செய்கவென 16

1088 கேட்டி யெவற்றினு நன்றதி னுண்மை
கிளர்த்துதும் யாமெனவெண்
டோட்பர னர்தமை யுன்னி யுளத்தில்
உவந்தர சோடுமுனி
மாட்சித ருங்குருங் தாய்வள ரீசர்நா
மத்திரை யம்மதுவாம்
வேட்டுரை செய்முறை யும்பெறு லாபமும்
விள்வனென் றோதுவலல் 17

1086 ஒருவா – நீங்காத. அனத்தம் – பல.

1087 சீதம் – குளிர்ச்சி. நாத – தலைவனே. ஏதம் – குற்றம்.

1088 எண்டோட்பரனர் – எட்டுத் தோள்களையுடைய இறைவன். திரையம் – மூன்று. வேட்டு – விரும்பி. விள்வன் – கூறுவேன்.

1089 தாவில்யோ காம்பிகை யீசகுந் தேச!சர்
வாத்தும நாயக!வென்
றேவுரை சொற்றிடில் முற்புரி பாவமெ
லாமக லுந்தவமே
மேவிய நற்சதுர் வேதபு ரேச!மெய்
ஈச! பெருந்துறையா!
சேவில் வருஞ்சிவ யோகவ னேச!வென்
பார்கதி சேர்குவரால் 18

1090 நீத மலிசிவ கேத்திர வீச!
நிறைசரு வேச!மிக
வேத முழங்கு சிவபுர வீச!
வெனிற்பிர மைப்பிணிபோம்
ஆதி கயிலைகன் நாயக! வாத்தும
நாத!ச பேச! எனின்
பேத மதாம்பிற விக்கட னீந்துவர்
பேருலகில் எவரும் 19

1091 பவுத்திர மாணிக்க நாத! விளங்கருட்
பண்புள விப்ரேசா!
எவர்க்குமு லகிய சன்னவ னேச!
வெனிற்செறி பந்தம்விடும்
அவித்தையி லாத்திரி மூர்த்திகள் தேசிக!
ஆசில்முந் நூற்றிருவர்
தவத்துரு வாகு செகத்குரு வே!எனிற்
சருவசெ யம்வருமே 20

1089 தாவில் – கேடில்லாத. சே – எருது (இடபவாகனம்) கதி – மோட்சம்.
1090 நீதம் – நெறி. பிரமை – மருள். பேதம் – பல்வேறுவகை.
1091 பந்தம் – கட்டு (பாசமலம்) அவித்தை – அறியாமை (மும்மலம்) ஆசில் – குற்றமற்ற.

1092 மறுவகல் லீலையெட் டெட்டுடை யாய்!மூ
வாயிரர் தனிலொருவா!
நிறைதரு பாரச டாமகு டாவெனின்
நீங்குவர் துன்பமெலாம்
இறைவஇவ் வாறுரை செயகுருந் தீசர்நா
மத்திரையம் இவையைப்
பெறுபய னுமென வோர்ந்து செவித்திடல்
பெற்றவர் யாரெனினும் 21

1093 ஆசிரியர்க்குவி ரோதம் பிதிர்த்துரோ
கம்பிர மக்கொலைகள்
மாசுள கோக்கொலை தெய்வவி ரோதம்
மறைக்குலர் பொன்கவர்தல்
வேசிய ராசைகொ ளல்பிறர் தாரம்
விரும்பல்முன் னியகொடுந்
தூசுக ளற்ருளிர் பேருணர்வுற் ருளிர்
சுத்தரு மாகுவரே 22

[மஞ்சரி என்பவள் இத்தலத்திறைவனை வழிபட்டுப் பேறடைந்தாள் எனல்]

1094 மாட்சித ருங்குருந் தாகிய வீசர்நா
மத்திரை யத்தினை, ய
பேட்சையு டன்செபஞ் செய்தரன் நேசம்
பெருக்கிய மாது, விசா
லாட்சிப ழக்கம தீற்றிடை யுற்றள்
அறக்கடை யாகிய ளாம்
வாட்பு ரைகண்ணி பழிப்புள மஞ்சரி
வான்கதி யுற்றனள் முன் 23

1092 மறு - குற்றம். செவித்திடல் - செபித்திடல்.
1093 பிரமக்கொலை - பிரமஹத்தி. கோக்கொலை - பசுக்கொலை. மறைக்குலர் - வேதியர். தூசு - குற்றம் (பாவம்).
1094 அபேட்சை - விருப்பம். உற்றள் - உற்றவள். பழிப்பு - பாவம்.

[மஞ்சரியின் வரலாறுயாதென மன்னன் வினவுதல்]

1095 என்றருள் செய்முனி வன்றனை நோக்கியவ்
வேந்தனி யம்புறுவான்
நன்றுரை செய்தஅம் மஞ்சரி யார்? சொலு
நல்விசா லாட்சியெவள்?
ஒன்று மிவர்க்குற வெவ்விதம் யாவையும்
ஓதென மாதவனும்
வென்றி விறற்றிகி ரிக்குரி சிற்கிவை
விள்ளுதல் மேவுவனால் 24

[இச்சருக்கம் ஓதுவார் எய்தும் பயன்]

1096 பொங்கும் யுகந்தொறும் வந்து குருந்திறை
பூசையு ஞற்றுபவர்
தங்கள் சரித்திர மும்முறை நாமம
தாயநா மத்திரையம்
மங்கள மேன்மையு மோதிய விவ்வியல்
மாண்பினு ரைத்திடுவோர்
துங்கமு றச்செவி கொள்பவர் பேறெவர்
சொல்பவர் செல்வர்களே 25

[யுகம் நான்கினும் பூசிப்போர் மரபும் நாமத்திரைய மகிமையும் கூறிய சருக்கம் முற்றும்.]



1095 விறற்றிகிரி – ஆணைச் சக்கரம். விள்ளுதல் – சொல்லுதல்.
1096 உஞற்றுபவர் – முயற்சியோடு செய்பவர். துங்கம் – மேன்மை.

மஞ்சரிச் சருக்கம்

[ஆறுசீர் விருத்தம்]

[ஆதித்தபுர மறையவர் சிறப்பு]

1097 அருளா கரராஞ் சங்கரருக்
கவர்கெஞ் சகமா லயமாக்கி
மருமா மலரர்ச் சனையோம்பி
வழுவா தியற்றி வைதிகமே
பெருவாழ் வெனக்கொண் டம்முறையே
பேரா தியற்றும் பெற்றியராம்
திருமா மறையோர் வாழ்தருமா
தித்த புரமென் றிருநகரம் 1

[ஆதித்தபுர நகர் வளம்]

1098 மாட நிரையும் வேதிகையும்
மணிவா யிலுத்தல் னறுந்துளப
மேடைக ளுந்தோ ரணநெருங்கும்
வீதி யொழுங்கும் பூங்காவும்
நீடும் யாக சாலைகளும்
நியதி மண்ட பங்களுநீர்
ஓடை களுமற் றுளபெருமை
யோங்கும் யாவும் நிறைந்துளது 2

[அந்நகர்வாழ் அந்தணர் ஒழுக்கச் சிறப்பு]

1099 மனைக ளெல்லாம் மறைமுழக்கம்
வளர்ப்ப தெல்லாம் மகச்செந்தீ
புனைவ தெல்லாம் வெண்ணீறு
பூண்ப தெல்லாம் அக்கவடம்

1097 அருளாகரர் – கருணைக்கடலாக விளங்குபவர். மருமாமலர் – மணம் பொருந்திய மலர்கள். பேராது – நீங்காது.

1098 வேதிகை – முன்முற்றம். துளபமேடை – துளசி மாடம்.

நினைவ தெல்லாம் பிரமநிலை
நீப்ப தெல்லாம் காமாதி
இனையர் பயிலவ் வூர்தனிலோர்
எல்லை யாசி யெனுமறையோன் 3

[விசாலாட்சி என்னும் பார்ப்பனியின் மாண்பு கூறுதல்]

1100 சீல மருவு மம்மறையோன்
தேவி கற்பி னருந்ததியே
போலுங் குணத்த லில்லறப்பண்
புள்ள நங்கை மலரயனும்
மாலு மறியாக் கமலபதம்
மறவா அன்பின் வழிவருமா
தாலுஞ் சுருதி நெறியள்விசா
லாட்சி யென்னும் பெயருடையாள் 4

1101 நிலவும் புனலும் உலவுசடை
நிமலர் நேசர் வினைமுழுந்து
மலர்கொ டருச்சித் திறைஞ்சிமொழி
மதுர மியம்பிப் போனகமும்
அலகில் கறியு மறுசுவையோ
டருந்த வளித்தே தேவர்களும்
உலகம் புகழப் பெருநலமும்
உடையா ளுவமை தவிர்நடையாள் 5

[எல்லியாசியும் விசாலாட்சியும் மகப்பேறு வேண்டித் தவமியற்றல்]

1102 இன்ன மனையாள் தன்னுடனே
எல்லியாசி யெனுமறை யோன்
நன்ன ரறம்பூண் டிருந்துசில
நாள்க ளகன்றுந் தவக்குறையால்

1099 மகச்செந்தீ – யாகத்தீ. அக்கவடம் – உருத்திராக்கமாலை. காமாதி– காமக்குரோதம் முதலிய குற்றங்கள்.

1100 ஆலும் சுருதி – முழங்கும் வேதம். சீலம் – ஒழுக்கம்.

1101 புனல் – கங்கை. நேசர் – அடியார். போனகம் – சோறு. நடை – ஒழுக்கம்.

மன்னுங் குதலைக் கிண்கிணிக்கால்
மகவி லாமை யால்வருந்தி
என்னே செயநான் முன்னேவினே
யீதா மென்று மனந்தேறி 6

1103 அறத்தி லுயர்ந்த வில்லறம்பூண்
டமர்தல் போகத் தாலன்றே
இறக்குங் காலத் தபரவினே
இயற்றித் தருப்ப ணைதிகளாற்
சிறக்கும் பிதிர்த்தே வதைகளுக்குத்
திருத்தி செய்யும் பொருட்டன்றே
துறக்கம் புகுதார் மகவிலர்தாம்
என்றல் சுருதித் துணிவன்றே 7

1104 என்று பலவு மந்தணன்றன்
எண்ணி யினியில் வாழ்க்கைநசை
நன்று நமக்கின் றருந்தவமே
நாமுய் வதற்கு நெறியென்று
மன்ற லோதிக் குரைத்தகன்று
மறைநூல் வழியாற் றவம்பூண்டு
வென்றைம் புலனும் மோனமதாய்
மிக்க யோகந் தனிலமுந்தி 8

[எல்லியாசி கடுந்தவத்தால் சுவர்க்கம் அடைதல்]

1105 சிறிது பருவ மகன்றதன்பின்
சிறையா முடலந் தனைநீங்கி
மறுவி லாத சுவர்க்கரொளி
மானங் கொணர வதிலேறி

1103 அபரவினை – பிதுர்க்காரியம். தருப்பணைதி – திதி கொடுத்தல் முதலிய கருமங்கள். திருத்தி – நிறைவு (திருப்தி). புகுதார் – சேரமாட்டார்.

1104 மன்றலோதி – மணங்கமழும் கூந்தலையுடைய மனைவி. மோனம் – தவம்.

இறுநுண் ணிடையார் கவரிபுடை
யிரட்ட விமையோ ரேத்தெடுப்ப
உறுநல் லியங்கள் கலந்தொலிப்ப
உயர்வா னகம்போய் இனிதிருந்தான் 9

1106 கணவன் றவமேற் கொண்டதன்பின்
காதல் மகீயாம் விசாலாட்சி
உணர்வை யவன்பாற் றனியிருத்தி
உண்மை யறங்கள் வழுவாமல்
துகீணயும் பொருளும் மக்களுநற்
சுற்ற மெவையு முற்றிளமான்
அகீணயுங் கரத்த ரவர்பொருளே
யாமென் றிருக்கு மந்நாளில் 10

[விசாலாட்சி கணவன் எய்திய நிலையறிந்து கைம்மைபூண்டு
விரதத்தோடு ஒழுகுதல்]

1107 தவத்திற் புகுந்த கணவனிறந்
தமைகண் டுள்ளந் தளர்வெய்திச்
சிவத்திற் புகுதுஞ் சிந்தகீணயாள்
திருமங் களசூத் திரமகற்றிப்
பவத்திற் பிறந்தார்க் குறுகடன்கள்
பலவு மியற்றி விரதமொடும்
அவத்திற் பொழுது கழியாமல்
அரன்பூ சகீனசெய் நியமியளாய் 11

1108 அதிதி யெதிர்பந் தாசான்மெய்
யடியார் பூசை களுமியற்றிக்
கதிதங் குரவோர் புராணகதை
கழறு மிடங்கள் தனிற்சென்று

1105 ஒளிமானம் – ஒளிபொருந்திய விமானம். இயங்கள் – மங்கல வாத்தியங்கள்.

1106 இளமான் அகீணயுங் கரத்தர் – சிவபெருமான்.

1107 மங்கள சூத்திரம் – திருமாங்கலியம். அவம் – வீண்.

முதிரும் பரிவாற் கேட்டவர்க்கு
முறைமை யால்வேண் டுவகல்கி
வதியு நாளிற் பெருந்துறைமான்
மியத்தைக் கேட்டு மனமுருகி 12

[அவள் திருப்பெருந்துறை சென்று வழிபட விரும்பிச் செல்லுதல்]

1109 குந்தா ரணிய நாதரைக்கை
கூப்பி யிறைஞ்சும் பெருவிருப்பம்
நந்தா தெழுத்தன் சுற்றமுடன்
நப்பர்க் குதவ வேண்டுவகொண்
டந்தா மரைச்சீ ரடிவருந்த
அருங்கா னகங்கள் பலகடந்து
வந்தா ளாதி கயிலாச
மாகும் புரத்தில் நேசமுடன் 13

[அவள் குருந்தீசரைக் கண்டு வணங்கி ஆனந்தமுறுதல்]

1110 வந்து வனகேந் திரபுரத்தின்
வளங்க ளெவையுங் கண்டுதொழு
தந்த மில்லா வுவகையொடு
மகிணீர் படிந்து கடன்முடித்துக்
குந்த டிவா யிருந்தருளும்
குளிர்மா மதிச்செஞ் சடையரைக்கண்
டெந்தம் பெருவாழ் வீதோவென்
றிறைஞ்சி யெழுந்து புளகமுடன் 14

1111 கண்கள் பொழியப் பெருந்தாரை
கரைய வுள்ளம் பரவசமாய்
மண்கள் புரள வீழ்ந்தெழுந்து
மலர்க்கை சிரத்தின் மேற்ருங்கிப்

1108 எதிர்பந்து – உற்றவர்கள். வதியும்நாளில் – வாழும் காலத்தில்.

1109 நந்தாது – குறையாமல். ஆதிகயிலாசம் – திருப்பெருந்துறை.

1110 அகிணீர் – அக்கினி தீர்த்தம். புளகம் – மெய்ம்மயிர் பொடித்தல்

பண்கள் தருமின் சொற்கனிவாய்ப்
பாவை கணவா குந்தேசா
எண்கொள் ளாத பாவியெனக்
கெய்து மோநின் பேரருளே 15

[அவள் சிவயோகநாயகியை வணங்கி வேண்டுதல்]

1112 என்று பலவும் புகன்றுதுதித்
திறைஞ்சி வலம்வந் தெம்பெருமான்
உன்றன் மலர்ச்சே வடிக்களாய்
உய்யக் கொள்வாய் எனையென்று
கன்று வெனநின் றுளமுடலும்
கரைந்து சிவயோ கப்பரைமுன்
சென்று தரத்தில் வணங்கியிரு
செங்கை கூப்பித் தொழுதுமைப்பால் 16

1113 அன்னே யாத்ம நாயகருக்
கமுதே யண்டப் பரப்பெவையும்
முன்னே யுதவும் சிற்றுதர
முகிழ்மென் முலைக்கோ மளமயிலே
தன்னே ரில்லாப் பூரணமே
சதுர்மா மறையுந் தொடர்வரிய
மின்னே யுன்ற னடிசேரும்
விருப்பம் வேண்டு மருள்செயென 71

1114 வணங்கி யெழுந்து சிவயோக
வனநா யகர்க்கும் நாயகிக்கும்
இணங்கும் வெகுவா மபிடேகம்
இயற்றும் பலகை வேதனங்கள்
மணங்கொள் தூபந் தீபமலர்
மணியா பரண மாடைமுதல்
குணங்கள் கூரக் கொடுத்தேத்திக்
கோதி லாவப் புரியுறைவோர் 18

1111 பாவை - சிவயோக நாயகி. எண்கொள்ளாத - அளவில்லாத.
1112 கன்று - கன்றையுடைய பசு. சிவயோகப்பரை - சிவயோகநாயகி.
1113 சிற்றுதரம் - சிறிய வயிறு.
1114 கோது - குற்றம். அப்புரி - அந்தத்தலம் (பெருந்துறை).

[அவள் பெருந்துறை வாழ்அந்தணர் முனிவர் எல்லோரையும் வணங்கி வழிபட்டுப் பல அறங்கள் செய்தல்]

1115 முனிவர் மறைவல் லாளரையும்
முகம னுடன்பூ சித்திறைஞ்சிக்
கனிவின் றுதிகள் சொற்றவர்தங்
கருணை நோக்கு மிகவுடைத்தாய்
இனிய நலமார் தீர்த்தங்கள்
எல்லாம் படிந்து மிகுமன்பர்
புனித முறுதா னங்கள்பல
புரிந்து வசித்து வருநாளில் 19

[மார்கழி மாதம் திருவாதிரை நாளில் இறைவனை வழிபட்டு மகிழ்ந்து பின் தன் ஊர் வந்தடைதல்]

1116 குருநான் மதியம் இலங்குசடைக்
குழகன் றினமாம் மார்கழிநற்
றிருவா திரைநாள் வரவுதயத்
தினம்வெள் ளாற்றிற் சென்றுடிப்
பெருகார் வத்தோ டடியருளம்
பேரா தி ருக்கும் பெருந்துறையார்
இருநாட் கமல பதமிறைஞ்சி
எழுந்து நின்று கைகூப்பி 20

1117 ஆத்ம நாதர் தம்பெயர்க
ளாகும் நாமத் திரையமெலாம்
போற்றி செய்து வேண்டும்வரம்
புகன்று விடைகொண் டருட்பரைதாள்
ஏற்று வணக்கஞ் செய்தருள்பெற்
றெழுந்து பெரியோ ரையும்பரவித்
தேற்ற முடன்றன் னூரகம்போய்ச்
சேர்ந்தாள் மாசு சேராதாள் 21

1115 கனிவின்றுதி – உளங்கனிந்த தோத்திரங்கள்.

1116 குருநான்மதி – நிறம்பொருந்திய பிறைச் சந்திரன். குழகன் – வடிவழகன்.

[திருவாதிரை தோறும் அவள் சிவபுரம் சென்று வழிபடுதல்]

1118 அன்ன தாகுஞ் சீலவிசா
லாட்சி யென்னும் மூதணங்கு
நன்மை திகழுங் குந்தவன
நாத ரடித்தா மரையெமனம்
தன்னி லிருத்தி யமர்தருநாட்
டனுவா திரைநாள் வருந்தோறும்
உன்னி யெழுந்து பெருந்துறைசேர்
வுற்று வணங்கி யூர்வருவாள் 22

[மஞ்சரி வரலாறு கூறத் தொடங்குதல், மஞ்சரியின் இயல்பு]

1119 நறைகொ ளிதழி புனையாத்ம
நாதர் நாமத் திரையமனு
இறைவி டாது நாளுமுரு
எண்ணிக் கனிவோ டிருக்குமிவள்
உறையு ளதனுக் கயல்மனையாள்
உறும்பே ரெழிலாள் மஞ்சரியென்
றறையும் பெயராள் முற்றிழைடர்பால்
அடங்காக் காமத் தொடுஞ்சரிப்பாள் 23

[மஞ்சரியின் கணவன் நந்திவர்மன் இவள் தீயொழுக்கங்கண்டு
இவளை நீத்து வடக்கேகி விடுதல்]

1120 காம சரத்தா லடியுண்டு
களவிற் பலரைப் புணர்ந்தொழுகும்
தீமை யொழுக்கந் தலைநின்ருள்
செயலைப் பலவாற் ருற்றெரிந்து
தூர மனல்சான் ருய்வேட்ட
துணைவ னந்தி வர்மனந்தத்
தாமக் குழலாள் தணைத்துறந்து
சார்ந்தான் பிரயா கைக்கரையில் 24

1118 தனுவாதிரைநாள் – மார்கழி மாதத்துத் திருவாதிரைநாள்.
1119 நறை – தேன். இதழி – கொன்றை மலர் மாலை. மனு – மந்திரம். இறை – சிறிது. சரிப்பாள் – ஒழுகுவாள்.
1120 சரம் – மன்மதபாணம். வேட்ட – மணம் செய்துகொண்ட. தாமம் – மாலை.

[சுந்திவர்மன் சுவர்க்கம் எய்தல் – மஞ்சரி மேலும் தீயொழுக்கத்தில் மூழ்குதல்]

1121 அங்கு வைகி யிருந்தவஞ்செய்
தகலப் பலநாள் பின்புடல்நீத்
தெங்குங் கிடையா வரும்போகம்
எய்துஞ் சுவர்க்கம் பெற்றிருந்தான்
துங்க மில்லான் தன்கணவன்
துறந்த தேனன் றுனதெனத்
தங்கு மனத்தி னிச்சைவழி
சார்ந்து விடர்பற் பலரோடும் 25

[மஞ்சரி பெருநோய்க்கு ஆளாதல்]

1122 விரவி யல்லும் பகலுமதி
வியாத்தி யாகச் சரித்தலினல்
உருவ முழுதும் பிணிக்கிரந்தி
உற்று முடைநாற் றம்பெருகி
மருவு மூட்டுத் தொறுப்புடைத்து
வடிய வுன்கீ டந்துளைக்க
இருகை காலுங் குறைந்துருடை
இல்லா ளாகி முடங்குற்றுள் 26

[மஞ்சரி விசாலாட்சியை வணங்கி மடப்பக்கோடல்]

1123 இன்ன பலதுன் புழந்துமூப்
பெய்தித் தளரு மிவள்புரிதன்
முன்னை வினையாற் பிணிமருந்தால்
முன்போ லிலதாய்ச் சிறிதகன்று
தன்னே ரில்லா விசாலாட்சி
தாளில் நாளும் வணங்கி, யென
தன்னே யெனச்சென் றுறவாட
அவளும் பரிவு செயலொருநாள் 27

1121 துங்கம் – சிறப்பு. விடர் – காமவேட்கையொடு திரிபவர்.
1122 அதிவியாத்தி – மிகுதி. கிரந்தி – பெரும்புண் கீடம் – புழு.
1123 அன்னை – அன்னையே. பிரிவு – அன்பு.

[மஞ்சரி விசாலாட்சியை வினவுதல்]

1124 வருடந் தோறும் போயெங்கே
வருகின் றுய்நீ போம்தெய்வத்
தருடா னென்னே பலனென்னே?
யங்கு நீபோய்ச் செயலென்னே?
தெருடா னில்லா வெனக்கருணீ
செய்ய வேண்டும் யான்கொடிய
மருடா னுடைய அவகேடி
வழங்குய் மார்க்க மெனக்குமென 28

[விசாலாட்சி தான் சென்று வழிபடும் தலத்தைப்பற்றிக் கூறுதல்]

1125 பரிவும் பயமுந் தோன்றவிவை
பகர்வாள் முகநோக் கிப்பரிந்து
வெருவ லாதி கயிலாசம்
என்னும் ஒருமா நகரமதற்
குரிய நாமம் பெருந்துறையென்
றுரைப்பர் பின்னும் பெயர்பலவாம்
விரியும் பெருமை பலநெருங்க
விளங்கி யோங்கு மப்புரியில் 29

[சிவபுரத்து இறைவன் பெருமையையும் அங்குசென்று வழிபடுவோர் அடையும் நலத்தையும் விசாலாட்சி கூறல்]

1126 அருவா யுருவா யுபயமுமாய்
அகண்ட மாகி யெங்குநிறை
தருபே ரொளியாம் பரப்பிரமந்
தானே யுயிர்கள் தமக்கிரங்கிக்
குருநாண் மலர்சேர் குருந்துருவங்
கொண்டு மெய்யன் புடையார்தம்
பெருவாழ் வாகப் பிறங்கிநிதம்
பேரா திருக்கப் பெறுமதனை 30

1124 தெருள் – அறிவுத் தெளிவு. மருள் – மயக்கம். அவகேடி – கெடுதலுடையவள்.

1125 வெருவல் – அஞ்சாதே. நெருங்க விளங்கி – மிகுதியாக விளங்கி.

1126 உபயம் – அருவுரு. பிறங்கி – விளங்கி.

1127 கண்டு தெரிசிப் பார்கடப்பர்
கரையி லாத பிறப்புததி
உண்டு நலங்கள் யாவையுஞ்சென்
றுற்று வணங்கத் திங்கள்பனி
ரெண்டும் நலமாம் விற்செங்கை
யவற்று ளதிக மத்தினம்போய்த்
தொண்டு புரிந்து குந்தேசர்
இணைத்தா ளிறைஞ்சப் பெற்றோர்கள் 31

1128 பெறும்பேற் றினைக்கண் டனந்தனுச்சும்
பேச வரிதா கையின்வருடர்
தொறும்போய் வணங்கி வருகுவன்யான்
சுத்தப் பிரம மேகுருந்து
நறுங்கா லுலவும் அப்புரமே
நவைதீர் பிரம லோகம், விசை
தெறுந்தே வதனைக் கண்டவர்கள்
சீவன் முத்த ராகுவரால் 32

[குருந்திறைவனை வழிபட்டால் எல்லாப் பிணிகளும் நீங்குமெனல்]

1129 திகழுங் குருந்த மூலமிருத்
தியைதீ ராரோ கங்களுக்கு
மிகலும் பிறவிப் பிணிக்கும்மன
வியாதி யெவைக்கும் நன்மருந்தாம்
புகல்மற் றதனை யணிந்திடினும்
புசித்தல் செயினும் பவமனைத்தும்
பகலைக் காணும் பனியெனப்போம்
பலிக்கும் வேண்டும் பயனெவையும் 33

1127 புறப்புததி – பிறவியாகிய கடல். விற்செங்கை – மார்கழி மாதம் ஆதிரைநாள்.

1128 அனந்தன் – ஆதிசேடன். நறுங்கால் – தூயகாற்று. தெறும் – அழிக்கும்.

1129 மூலமிருத்தியை – வேர் முதல் இலைகள். பலிக்கும் – உண்டாகும்.

[அங்குள்ள தீர்த்தங்களின் மகிமை கூறுதல்]

1130 ஈடில் குருந்தூர்க் கெல்லியோ
சனியெண் டிக்கு முளவதிற்பல்
கோடி தீர்த முளபசுக்காற்
குளம்பு நீருங் கங்கை, யழ
லாடி யழைத்த தோரறுபத்
தாறு கோடி தீர்த்தமுள
நாடி நோற்போர்க் கெல்லியென்ற
னலிவ் வளவென் றுரைப்பரிதே 34

[மஞ்சரி தனக்குய்தி யுண்டோவென விசாலாட்சியை வணங்கிப் புலம்புதல்]

1131 மற்றப் பதியின் பெருமைபல,
வாக்கு மனத்துக் கெட்டாதென்
றற்பிற் புகலக் கேட்டுவிசா
லாட்சி தாளில் மஞ்சரியும்
பற்பல் கால்வீழ் திறைஞ்சியிந்தப்
படியில் நீயே பாக்யவதி
எற்றுக் கோநான் தோன்றினதங்
கெய்த லாகேன் செய்வதெவன்? 35

1132 கையுங் காலும் முடமெவரும்
காண வொண்ணு ரோகிமிகச்
செய்த திதுநாள் காறுலஞ்
சேராத் தீய கொடுந்தொழில்கள்
உய்யும் வகையெங் ஙனமுனிநான்
உற்று வணங்கப் பெற்றிடுதற்
கெய்துந் தவம்யா தோநீயே
என்னைப் புரக்க வேண்டுமென 36

1130 பசுக்காற் குளம்புநீர் – பசுவினுடைய காற்குளம்பு அளவுள்ள நீர். அழல் – அக்கினிதேவன். ஆடி – மூழ்கி.

1131 அற்பிற்புகல – அன்போடு கூற. படி – பூமி.

[விசாலாட்சி அவனைத் தேற்றி உபதேசித்தல்]

1133 அழுது விம்மி யிவைமொழிவாட்
கஞ்சல் நீமஞ் சரியெனவே
பழுதி லாநன் மதுரமொழி
பலவும் இயம்பி நீபுரிந்த
வழுவை நினைந்தெப் போதுபயம்
வந்த தோகுந் தேசருனை
முழுதும் புரப்பா ரென்றுரைத்தம்
முன்னோன் நாமத் திரையமனு 37

[விசாலாட்சி அவளுக்கு குருந்து இலையை உண்ணக் கொடுத்து இறைவனை வேண்டிக்கொள்ளச் சொல்லுதல்]

1134 சீலம் பலகற் பித்துபதே
சித்துக் குருந்தின் மிருத்திகையும்
ஏல வழங்கி னள்சரண்பூண்
டிறைஞ்சி வாங்கி யுட்கொண்டு
மேலும் பூசி யம்மனுவை
விடாது செபித்து மஞ்சரியும்
காலந் தனக்குள் ளனவெவையும்
கடத்தி னள்ஈற் றுறுங்காலை 38

[மஞ்சரியின் அந்தியகாலத்தில் யமதூதர்கள் நாயொடு வருதல்]

1135 நலத்திற் சிறந்த விவள்மகிமை
நாடா ராகிக் கூற்றுவன்றன்
குலத்திற் பிறந்து முகிலதிர்போற்
குரைக்குஞ் சாம சவளமென
விலக்கற் கரிய கொடுந்துயரம்
விளைக்கு நாய்க ளிரண்டொடுஞ்சென்
றலக்கண் புரிந்து கொடுபோக
அடர்ந்தார் மறலி கொடுந்தூதர் 39

1133 வழு – குற்றம்.
1134 மிருத்திகை – பச்சிலை. சரண் – பாதங்கள்.
1135 முகிலதிர் – முகில் முழக்கம் (இடி) சாமம், சவளம் – நாய்களின் பெயர்கள். அலக்கண் – துன்பம். அடர்ந்தார் – நெருங்கினர்.

[எழுசீர் சந்த விருத்தம்]

[எம தூதர்களின் தோற்றமும் செயலும்பற்றி வருணித்தல்]

1136 இடிக்கி ணங்கதிர் சொல்லி னுர்பிறை
யிற்பி றங்கிய பல்லினர்
துடித்தெ ழுந்துசெல் காலி னுர்கறை
துன்னு நெட்டிலே வேலினர்
கடித்து மென்றிடு மிதழி னுர்கடுங்
காலெ னச்செலுங் கதழ்வினர்
தடித்த கார்நிற மெய்யி னுரெரி
தங்கு சூல்நெழு கையினர் 40

1137 கறுவு கொண்டசெண் டையி னுர்கருங்
கச்சு வீக்கிய வுடையினர்
முறுகி வன்மைசெய் திறலி னுர்புவி
முற்றை யுந்தெறு விறலினர்
பொறுமை யற்ற மனத்தி னுரிடர்
பொங்கு தீய சினத்தினர்
பெறுக டுந்திறல் விழியி னுரிகல்
பேசி யேயடுந் தொழிலினர் 41

[எம தூதர்களின் கொடுமையால் மஞ்சரி கதறித் துடித்தல்]

1138 இன்ன பற்பல ரார்த்தெ ழுந்தெலி
யைத்தொ டர்ந்திடு பூசைகள்
தன்னை யொத்தெறி கால பாசம
தைக்க முத்தினி லிட்டிமுத்
துன்னி வெங்கதை கொண்ட டித்துறு
நாயி ரண்டையு மேவியே
பன்னு நாவிடைமுன்ன டித்தனர்
பதறி மஞ்சரி கதறவே 42

1136 இடிக்கிணங்கதிர் – இடிமுழக்கம் போலும் அதிர்கின்ற. பிறங்கிய – விளங்கிய. கடுங்கால் – பெருங்காற்று (புயல்). சூல் – சூலம்.
1137 கறுவு – வெகுளி. விறலினர் – வெற்றியாளர்.
1138 பூசைகள் – பூசனைகள். நாவிடை – நாக்கினிடத்து.

[மஞ்சரியை அழைத்துச் செல்ல நந்திகணங்கள் வருதல்]

1139 அன்ன காலையில் வெள்ளி யங்கிரி
அண்ண லேவலி னலுயர்
பொன்னின் மாமணி யிற்கு யிற்ருெளி
பொங்கு மானம துங்கொடு
நன்னர் நந்திக ணத்தர் சீறியந்
நாரியைக் கொடு போவதற்
குன்னு மந்தக னேவ லாளரை
யுற்று மோதியம் மாதினை 43

1140 அஞ்ச லஞ்சலெம் மன்னை பாதகர்
அச்சு றுத்துத லுன்னையோ
நெஞ்சி னும்பய மற்றெ னைவரை
நேர்ந்து பந்தம கற்றியே
மஞ்ச ரித்தவ மாதை மின்னெளி
மான மீதி லிருத்தியே
கஞ்ச னற்றலை தாங்கு கையினர்
கயிலை கொண்டுசெல் காலையில் 44

[எமபடர்கள் நந்திகணத்தவரைக்கண்டு அஞ்சியோடி மீண்டுவந்து தடுத்துப்பேச சிவகணத்தவர் அவர்களை அழித்தல்]

1141 சிவக ணத்தவ ரானை மன்றமர்
சிந்தி யோடுநர் மீண்டுவந்
தவம திப்புள விவள்பொ ருட்டெம
தாரு யிர்க்கிட ராற்றியே
உவமை யற்றிடு மான மீதினி
லுற்றி டக்கொடு போவதற்
கிவள்தனின் (ரு)சயல் யாது கூறுவிர்
என்று கற்றி யரற்றினர் 45

1139 மானம் – விமானம். நாரி – மஞ்சரி. மோதி – போரிட்டு.
1140 பந்தம் – யமதூதர்களிட்ட காலபாசம். கஞ்சன் – பிரமன்.

1142 அக்க ணந்தனில் நந்தி மாகணர்
ஆர்த்த கன்றுமு னேடினர்
தொக்கு வந்தன ரச்ச மற்றிவர்
தோள்க ளஞ்சிரம் யாவுமெண்
டிக்கி னுங்கமு குண்ண வீழ்த்துதுஞ்
செங்கை பற்றிய கதைகொடென்
ரெக்க வீசிட வீழ்ந்து மாய்ந்தன
ரொழிய மற்றவ ரோடினர் 46

[யமபடர்கள் யமனிடம் சென்று முறையிடல்]

1143 கால்க ளற்றவர் தோள்க ளற்றவர்
கண்க ளற்றவர் பல்லுடன்
தாலு வற்றவர் நாசி யற்றவர்
தலைக ளிற்சிறி தற்றவர்
தோள்க ளற்றவர் கைக ளற்றவர்
துடைக ளற்றவ ராகியும்
பால்க ளற்றவ ராகி யேயம
படர்க ளுற்றனர் நமன்முனம் 47

1144 வந்து கோவென வலறி வீழ்ந்தனர்
மற்றி தென்னென வந்தகன்
புந்தி வாயடங் காப்ப யத்தொடும்
புகலு கின்றனர் தூதர்யாம்
நிந்தை மஞ்சரி தன்ற னுவியை
நேர்ந்து கண்டிடு மளவினில்
நந்தி மாகணர் வந்து நீக்கி
நலங்கொள் மானம தேற்றினர் 48

1145 நற்றி றங்களி லொன்றை யேனுமிங்
நாரி செய்ததுண் டாமெனிற்
சொற்றல் வேண்டுமெ மக்கெ னுவுரை
சொற்ற வாய்குவி யாமுனம்

1142 கணர் – குழுவினர். தொக்கு – ஒன்றுதிரண்டு. கதை – கதாயுதம்.
1143 தாலு – நாக்கு. பால் – உடம்பின் பகுதிகள்.

பற்று கைக்கதை வீழ்தல் கண்டனம்
பாற வுஞ்செய லின்மையால்
அற்று மாய்ந்தனர் பற்ப லோர்சிலர்
அஞ்சி யோடினர் எங்ஙனே 49

1146 அங்க மெங்கணும் பின்ன மாயெம
தாரு யிர்க்கழி வில்லையாய்
இங்கு வந்தன மெளிய ஞமனக்
கேச்சு மாகு தலின்வலி
தங்க வோடின முமக் கடிமைசெய்
சார்பு நன்றுனி மேலெமக்
குங்கள் சேவகம் போதும் போதுமென்
ரெக்க ணைந்துரை யாடினர் 50

[எமன் வெகுண்டெழுதல்]

1147 கூற்று வன்செவி தன்னி லேவலர்
கூற்று ணீண்டச லாகையை
ஏற்றி னுலென வாத விற்கணி
ரண்டும் வெம்பொறி காலவே
சீற்ற மிக்கித ழெயிறு தின்றிடி
சேண்மு ழக்குதல் போன்றதிர்ந்
தாற்றல் நன்றிது சால வும்நன்
ருமெ னப்புகல் கின்றனன் 51

1148 தாவி லாவுயிர் கட்கு நீயொரு
தண்ட நாத னெனச்சொலிப்
பாவை பங்கன்மு னீத லாலொரு
பாவி மஞ்சரி மீதிலென்
ஏவ லாளரை யேவி னேனவண்
எய்தி வெங்கணர் கொல்வரேல்
ஆவ தேதினி யென்ற ஞணை
யறத்தி னுள்வ னெனிலுறும் 52

1146 ஏச்சு – பழி. ணைந்து – வருந்தி.
1147 சலாகை – தீயில் காய்ந்த இரும்பு. எயிறு – பற்கள்.

[சிவபிரானிடம் சென்று முறையிட எண்ணி வாகனத்தைக் கொணர ஏவுதல்]

1149 போது மித்தொழில் வெள்ளி வெற்புறை
பூத நாயகர் முன்புசென்
ரோதி முற்றையு மிவ்வி ருத்தியொ
ழித்து நாமுய வேண்டும்நம்
மேதி யைக்கொணர் மின்கள் யாவரும்
விரைவின் மிக்கெழு மின்,கணக்
கோத வேண்டிட வருவிர் சித்திர
குத்த ரும்மென வோதினன் 53

[அப்பொழுது கருணீகர்கள் வந்து மஞ்சரியின் புண்ணியம் பற்றிக் கூறி நிலைமையை விளக்குதல்]

1150 தென்றி சைக்கிறை சீற்ற மோடிவை
செப்ப லுங்கரு ணீகரும்
நின்ற வட்குண செய்கை யாவையும்
நேடி நற்செயல் கண்டுநாம்
இன்று குற்றம தாற்றி னேமதற்
கேற்ற தண்ட மியற்றினர்
வென்றி நற்கணர் என்ன, நெஞ்சம்
வெருக்கொ ளப்புகல் கின்றனன் 54

1151 இற்றை நாள்வரை சற்றும் நம்மை
இடர்ப்ப டுத்தின வோகணம்
குற்ற மின்றி யிராது நீரது
கூறு மின்னென, நின்றுடன்
முற்று மஞ்சரி செயலை யோதி
முதிர்ந்த காலையி லீசர்தம்
அற்பின் மிக்கவ ளென்றி டும்விசா
லாட்சி யென்பவள் முன்புபோய் 55

1149 விருத்தி – தொழில், மேதி – எருமைவாகனம்.

1150 தென்றிசைக்கிறை – இயமன். கருணீகர் – சித்திரகுப்தர்கள். நேடி – ஆராய்ந்து.

1152 பெருவி ருப்பொடு இறைஞ்சி நீபுரி
பெற்றி யாதென வினவினள்
உருகு மன்பினி லன்ன வட்குப
தேச மாக வுரைத்தனள்
திருவ ருட்டுறை யாம்பெ ருந்துறைச்
செல்வர் நாமமொர் மூன்றையும்
அருமை கூர்தர வோதி வீந்தனள்
ஆத லாலவள் தூயளே

1153 அன்றி யும்விசா லாட்சி யோடுசா
வாச முற்றத னலுமற்
றொன்று மில்லிம னத்தெ ழுந்தது
ஞற்றி யுற்றன மிடரெனக்
குன்ற வில்லியி னம மோதிய
கோதி லாவவள் தன்னையோ
இன்று தூதுவர் கொணர வேவிய
தென்று சண்ட னிரங்கியே 57

[எமன் மஞ்சரி வரலாறு கேட்டபின் மனந்தெளிந்து
இறைவனை வேண்டுதல்]

1154 இப்பி ழைக்கினி யென்செய் வேனர
னேபொ றுத்தரு ளவுணர்வாழ்
முப்பு ரந்துக ளாக வென்றபுன்
மூர லண்ணல் பொறுத்தருள்
செப்ப மாமறை போற்று கின்ற
திருப்பெ ருந்துறை மேவிவாழ்
அப்ப னேபொறுத் தருள்க வென்றுமண்
ணதனில் வீழ்ந்து வணங்கியே 58

1155 தெண்ணி லாமதி யண்ண லேத்துதி
செய்து தூதுவர் தம்முடன்
எண்ண மென்கொல் திருப்பெ ருந்துறை
ஈசர் நாமம தெண்ணிய

1153 சாவாசம் - நட்பு. உஞற்றி - செய்து. சண்டன் - இயமன்.
1154 புன்மூரல் - புன்சிரிப்பு.

புண்ணி யட்கிடை யூறி ழைத்திடு
புன்மை கண்டு புடைத்தனர்
நண்ணு குற்ற மகற்றி னேமரன்
நாம மோதுவ ரெளியரோ? 59

1156 கஞ்சன் மால்விழி யாயிரன் றிசை
காவ லாளர்கள் தன்னெடும்
அஞ்ச லேதுமி லாத யானும்விண்
ணவர்கள் யாவரும் ஒளிர்மதிப்
பிஞ்சு சூடிய செஞ்ச டாடவிப்
பிஞ்ஞ கன்னடித் தொண்டினில்
எஞ்சல் மிஞ்சுதல் இன்றி யேபுரி
யேவ லாளரி தன்றியே 60

1157 கெழுமு நிக்கி ரகம னுக்கிர
கங்க ளும்அரன் ஆதினம்
நழுவ லின்றி யவர்க்கு வப்புற
நாக டத்திடி லுய்யலாம்
பழுது கண்டுதண் டித்த லாவது
பழுத லக்கட னமக
முழுதும் விட்டிடு மின்க ளென்றிட
மொழிவர் தூதுவர் அண்ணலே 61

[எமதூதர்கள் எமனிடம் வேண்டுதல்]

1158 எங்க ளுக்கிய மான குகுமுன்
ஏவ லின்வழி யெய்தியாம்
பங்க முற்றனம் எம்மை யவ்வுழி
படர ஏவுவ தென்னெனச்

1155 தெண்ணிலா – தெளிந்த நிலவு.

1156 விழியாயிரன் – இந்திரன். மதிப்பிஞ்ச – பிறைச்சந்திரன். எஞ்சல் மிஞ்சுதல் – ஏற்றத்தாழ்வுகள்.

1157 கெழுமும் – பொருந்திய. நிக்கிரகமனுக்கிரகம் – அழித்தல் அருளல். ஆதினம் – உரிமை. அகம் – அகங்காரம்.

சங்கை யுற்றுண ராதி ருந்திடு
தன்மை மேலினி யுங்களைப்
பொங்கு நற்றவ முடையர் தம்மயல்
பொங்க வேவலம் நீவிரும் 62

[எமன் குருந்தவனத்தில் உள்ளவர் யாவரையும் நீர்
அணுக வேண்டாமெனத் தூதர்களுக்குக் கட்டளையிடல்]

1159 குருந்த மேவடி வாயி ருந்தருள்
கொன்றை வேணியர் நாமம்நா
விருந்து ளோர்களைந் நகரில் வாழ்பவர்
ஏது செய்யினு மணுகன்மின்
திருந்த றுபதோ டாறு கோடிநற்
றீர்த்த மும்மவண் வதிதலால்
பொருந்து நாமம் பெருந்து றையெனும்
பொற்பின் மேவிய தப்புரி 63

1160 மணலெ லாஞ்சிவ லிங்க மங்குள
வனமெ லாஞ்சுர நதியதாம்
குணம னேகம தால தன்புகழ்
கூறு தற்கரி தாகுநீர்
உணர்வு தாக வுரைத்த னன்னிடர்
ஒழிபி னென்றவர் தம்மொடும்
இணையி லந்தகன் றன்வி ருத்தியின்
எய்தி யங்க ணிருந்தனன் 64

[சிவகணங்கள் பஞ்சரியைக் கயிலைக்குக் கொண்டுசெல்லலும்
அவள் வீடுபேறடைதலும்]

1161 கால தூதர் தமைக் கடிந்த
கணங்கள் மஞ்சரி யைக்கொடு
நீல கந்தரர் வெள்ளி மால்வரை
நீக்க மின்றி யிருத்தினர்

1158 இயமானன் – தலைவன். ஏவலம் – ஏவமாட்டோம்.
1159 அணுகன்மின் – நெருங்காதீர். வதிதலால் – இருத்தலால்.
1160 சுரநதி – தேவகங்கை. இடர் – மனத்துயர்.

சீல மேவும ஞள்ப ஞள்மிகு
செல்வி யாயவண் வைகியே
மேல தாம்பத மாவ தேயெனு
மிக்க பொன்னுல கத்திலே 65

1162 இயக்கர் தம்வழி மின்னெ னப்பொலி
வெய்தி ஞள்மிகு பாவியாய்
மயக்க முற்றவள் குந்த ஈதர்நா
மங்க ளீற்றிடை யோதிய
நயத்தி ஞலவள் பெற்ற தீதெனின்
நாளு மம்மனு வைப்பகர்ந்
தயர்ப்பி லாவிசா லாட்சி பேற்றீனை
யாரு ரைத்திட வல்லரே 66

[பெருந்துறையின் மகிமையும்—பிறமுத்திதலங்களும்]

1163 இன்ன பற்பல மகிமை யத்தல
மெவை யறிந்துரை செய்யலாஞ்
சென்ம முற்றவர் கமலை மாநகர்
சிந்தை செய்தவ ரருணையை
மன்னு காழியில் வாச மானவர்
வார ஞசியில் மாய்ந்துளோர்
பொன் மயச்சபை கண்டு ளோரது
புகல்ப வர்க்குநன் முத்தியே 67

1164 திருப்பெ ருந்துறை தன்னில் வந்து
செனித்து ளோரதில் மரித்துளோர்
இருப்ப மென்றதில் வசித்து ளோரதில்
எண்ணம் வைத்து நினைத்துளோர்

1161 வனம் – நீர். நீலகண்டரர் – சிவபெருமான். பனள் – பலநாள்.

1162 இயக்கர் – கருந்திருவரில் ஒரு பிரிவினர் (அழகுமிக்கவர்கள்). மின் – மகள். நயம் – அறம். அயர்ப்பு – மறதி.

1163 கமலைமாநகர் – திருவாரூர். அருணை – திருவண்ணமலை. காழி – சீர்காழி. வாரணசி – காசித்தலம். பொன்மயச்சபை – சிதம்பரம்.

விருப்பி னோடுரை செய்து னோரதை
விழியி னுற்றெரி சித்துளோர்
கருத்தி னோடிவை யாறி லொன் றுளோர்
காண்ப வர்க்கும்நன் முத்தியே 68

[இவ்வியல் ஓதுவார் கேட்பார் எய்தும்பயன்]

1165 அறத்தின் மெய்வடி வாமெ னும்விசா
லாட்சி தந்தருள் மனுவினிற்
றிறத்தின் மேவிய கூற்றை வென்றருள்
சேர்ந்த மஞ்சரி செய்வினை
யுறைப்பி னோடுரை செய்த விவ்வியல்
ஓதல் செய்பவர் கேட்பவர்
மறத்தி னின்றொரு விப்பெ ருந்திரு
மல்கி வாழ்குவ ருண்மையே 69

[மஞ்சரிச் சருக்கம் முற்றும்]



1164 சனித்துளோர் – பிறந்தவர்கள். மரித்துளோர் – இறந்தவர்கள்.
1165 உறைப்பு – உறுதி. மறம் – பாவம். ஒருளி – நீங்கி. மல்கி – பெருகி.

கேத்திர மகிமைச் சருக்கம்

[அறுசீர் விருத்தம்]

[தவமியர் புரூரவாவை இத்தலத்தின் மகிமையைக் கேளெனக் கூறுதல்]

1166 கேத்திர மகிமை தன்னைக்
கிளர்த்துஞ் சிறிது கேட்டி
பார்த்திப வென்றன் போடு
பகருவன் முனிவன் அந்த
மாத்தல மதனில் மேவி
வாழ்சரா சரங்க ளெல்லாம்
சீர்த்திகொள் சிவமே யங்குச்
செறிமண லெவையும் லிங்கம் 1

[இக்கேத்திரத்தைக் கண்டோர் எய்தும் பேறு]

1167 குளப்படி நீருங் கங்கை
எனமுனங் கூறி னேமால்
அளப்பரும் பெருமை சேரும்
அத்தலங் கண்டோர் தம்மை
உளப்படத் தெரிசித் தோரும்
உயர்கதி யுடைய ராவார்
கிடப்பருங் குருந்த மூலம்
கெழுவொரு குரோசந் தன்னுள் 2

[இதற்கு ஒருகுரோச எல்லைக்குள் மரித்த உயிர்கள் எய்தும் பேறு]

1168 மரித்திடு முயிர்கள் யாவும்
வலச்செவி மேல தாக
விரித்துயி ரிறக்குங் காலை
விமலரா மாத்ம நாதர்

1166 கேட்டி – கேட்பாயாக. சராசரம் – மரஞ்செடிகள் முதல் எல்லா உயிர்களும்.

1167 குளப்படி – பசுவின் குளம்பு அடி. கிளப்பரும் – சொல்லுதற்கரிய. குரோசம் – ஓர் அளவை.

தரித்தெதிர் காணத் தோன்றித்
தாரக முபதே சித்துப்
பரித்துறுந் தாதை போலப்
படுமிகூப் பாற்றித் தம்முள் 3

1169 அயிக்கிய மாக்கிக் கொள்வர்
அங்கம்விட் டுயிர்போங் காலை
நயப்புறும் பிரம்ம ரந்தி
ரத்திகூப் பேதித் தேகும்
தியக்கம தாற்றிப் போதுந்
தெரித்திட லாமத் தன்மை
மயக்கறு காசி தன்னில்
வயிரவர் வேதி யுண்டு 4

[இங்கு சேர்ந்த எலும்பும் சிவலிங்கமாம் என்பது]

1170 அத்தல மதிற்றண் டித்தல்
ஆத்மநா யகரல் லாது
வித்தக வேறின் றுண்மை
விளங்கிய ஞான மேவி
முக்தியாம் வசிப்போர்க் கெல்லாம்
மொழி சிவபூமி மற்ற
வெத்தலங் களிலும் வீயந்தோர்
என்புசே ரினுமாம் லிங்கம் 5

[ஓர் அந்தணன் வரலாறு கூறத் தொடங்குதல்]

1171 அதனிலோர் சரித முன்னுண்
டாயுள தறுவுஞ் சொல்வாம்
சதுமறைக் குலத்திற் றோன்றித்
தகுமறை யெவையுங் கற்று
விதிபெறும் யாக மாதி
விருப்பொடு செய்து வந்தோன்
சிதைவிலாக் கண்ணுவக் கோத்
திறன்மிகு சீல முள்ளோன் 6

1168 தாரகம் – தாரகமந்திரம். பரித்துறும் – அன்புறும், தாங்கும்.
1169 பிரமரந்திரம் – தலை உச்சியில் உள்ள ஓர் இடம்.

[அவ்வந்தணன் துலாபாரதானம் பெற்று வருதலும் அதற்குரிய பரிகாரம் செய்யாமையும்]

1172 மதுரையிற் றென்னர் கோமான்
மாதானஞ் செய்வ தோர்ந்து
நிதிபெறு மாசை யாலந்
நெடுநகர் சேர்ந்து தீமை
பதிதரு துலாதா னத்தைப்
பரித்தன னதற்குத் தக்க
விதிதரு பரிகா ராதி
விருப்பொடு புரிந்தா னில்லை 7

[அவன் புலியால் இறத்தலும் பிரமராட்சதனாக மாறுதலும்]

1173 அத்தன மோடு தன்னூர்
அணைதரும் போத வற்றை
மத்தியின் வைகை யோரம்
மாய்ப்புலி யாற்கோட் பட்டுச்
செத்தனன் சேரா ரந்தத்
திரவியங் கொண்டு போனார்
நத்திலா துடன் பிரம
ராட்சத ரூப மானான் 8

[இங்ஙனம் கேட்டு இவன் மகளாகிய மாடகள் வருந்துதல்]

1174 கோரமாம் விகற்ப ரூபங்
கொண்டுபல் விதனத் தோடு
நாரமு முணவு பின்றி
நடுக்கமோ டலறி மையல்
சேரநின் றுழன்ரு னன்னோன்
சேயெனு மாடகன் ரூன்
ஈரமி லாது தந்தைக்
கெய்திய தன்மை கேட்டு 9

1172 தூலாதானம் - துலாபாரதானம். பரித்தனன் - பெற்றான். விதி - நூல்விதி.

1173 கோட்பட்டு - கொல்லப்பட்டு. சேரார் - உறவில்லாதவர்.

1174 விதனம் - துன்பம். நாரம் - நீர். மையல் - பித்தம்.

[மாடகன் பிரமராட்சதனாக வருந்துந் தந்தையைக்காணல்]

1175 பரிந்தழு தந்தோ வென்று
பகர்ந்துடன் றந்தைக் கந்நோய்
இரிந்திடு மாறுண் டாகும்
இயல்பெலாம் விதிவ ழாமல்
புரிந்தனன் தீர்ந்த தென்று
பொருந்திடக் காண லுகி
வருந்திமற் றவனைக் காணும்
வாஞ்சையாற் சென்று கண்டான் 10

[மாடகன் தந்தையிடம் விளவல்]

1176 அழுகுர லோடு வேரும்
அங்கமோ டுழல்பி தாவைப்
பழுதகல் மாட கன்ருன்
பார்த்தழு தையா நானும்
வழுவுரு ததற்கு வேண்டும்
வகையெலாஞ் செய்து மிந்நோய்
கழுவுறக் காணேன் செய்யக்
கடவதென் னென்று ரைத்தான் 11

[மாடகனுக்கு அவன் மறுமொழி கூறல்]

1177 தந்தையாம் பிரம்ம ரரட்ச
தன்புதல் வன்சொல் கேளா
மைந்தநீ புரித லாற்றுன்
மரணத்தால் வரும்ப சாச
நிந்தைகொள் வடிவ மையல்
நீங்கின தான மேற்ற
அந்தமில் பவத்தாற் சேரிவ்
வாக்கையாற் றுயரு கின்றேன் 12

1175 இரிந்திடும் – நீங்கிவிடும். ஆறு – வழி. வாஞ்சை – விருப்பம்.
1176 கழுவுற – நீங்க. கடவது – செய்யத்தக்கது.

1178 சிறந்தவுன் றன்ஞ லிங்நோய்
தீர்ந்துய வேண்டும் யான்முன்
இறந்திடும் பொழுது வீழ்ந்த
என்பினை எடுத்துக் கொண்டு
... ... 13

[பதின்மூன்றுவது செய்யுளின் பிற்பகுதியும் பதினன்காவது செய்யுளின் முற்பகுதியும் சிதைந்து கெட்டுப்போயுள]

1179 ... ...
செவ்விய கங்கை நோக்கிச்
செல்பவன் நெறியில் வைகும்
பொய்யகல் குருந்தூர் சென்று
புக்குநின் றன்பின் நோக்கி 14

[மாடகன் தந்தையின் எலும்பை வெள்ளாற்றின் கரையில் வைத்துவிட்டு நீரோடுதல்]

1180 நடந்துவெள் ளாற்றின் பாங்காய்
நண்ணியப் புனலின் வீழ்ந்து
படிந்திடக் கருதி யங்கோர்
பாறையி லென்பை வைத்து
வடிந்தொழு கியவந் நீரில்
மரபுட னுடித் தான்பின்
மடிந்திடா அன்பிற் சென்றென்
புற்றிடு மறையைப் பார்த்தான் 15

[எலும்பு லிங்கவடிவாய் இருத்தல்]

1181 பார்க்குமவ் வுழியி லிங்கப்
படிவமா யிருத்த லாலே
நீர்க்கரை யதில்முன் பில்லா
நிகழ்சிவ லிங்க மேதென்
றோர்ந்துளம் வெருவி யையுற்
றுவணமைத் திட்ட வென்பே
சீர்த்திகொ ளிலிங்க மாகிச்
சிறந்ததென் றுவந்து பின்னும் 16

1180 என்புற்றிடுமறை – எலும்பை வைத்துச் சென்ற பாறை.

[அந்தணன் கொடியரூபம் மாறித் தேவவடிவுறுதல்]

1182 சலனமி லாது நோக்கித்
தான்மகிழ் வுற்றுன் தந்தைக்
குலைவுசெய் கொடிய ரூபம்
ஒழிந்திடத் தேவ ஞகி
இலகிய சரற்கா லஞ்சேர்
இந்தென விளங்கா நின்றுன்
அலகிலா ஒளிமா னங்கொண்
டணைந்தனர் கணங்க ளங்கண் 17

[தேவவிமானத்திற் செல்லும் அந்தணன் தன்மகன் மாடனிடம்
இத்தல மேன்மையையும் தீர்த்த மகிமையையும் கூறுதல்]

1183 தாவிலா விவையெ லாங்காண்
தனையனற் றந்தை யாகும்
தேவனை நோக்கி யிந்தச்
செய்கையிங் குறுதற் கேது
வாவதென் னய்யாநீ சொற்
றருள்கென விமான மீது
போவதற் குறுவான் மைந்தன்
புகல்வது கேட்டுச் சொல்வான் 18

1184 வருகவென் மைந்த நீயே
மறமிலா வறம்பூண் டுள்ளோன்
கரிசுள யானுன் றன்னுற்
கண்டன னிந்த வாக்கந்
தெரியுமிவ் விடஞ்சி வக்கேத்
திரமெனுஞ் சிறந்த தானம்
பரிவிலென் னங்கந் தன்னைப்
பாறையின் வைத்து மூழ்கும் 19

1182 கொடியரூபம் – பிரமராட்சத வடிவம். சரற்காலம் – பனிக்காலம். இந்து – சந்திரன்.

1184 கரிசு – குற்றம். ஆக்கம் – நன்மை. அங்கம் – எலும்பு.

1185 நதியிது வுஞ்சு வேத
நதியெனும் நாமந் தெய்வ
கதியினுல் வைத்தாய் என்பை
கணிதமில் பெருமை சாரிப்
பதிநல மதனுல் லிங்கப்
படிவமா யினதவ் வாற்றுல்
உதிர்தர வரக்கர் மேனி
யுற்றது தேவ ரூபம் 20

1186 உன்னலே யிதின்வே றையம்
உறுதிசேர்ந் துலகில் நீயும்
மன்னிவாழ்ந் திடுக வென்று
வரமளித் தொளிர்வி மானத்
தென்னையா ருடைய பெம்மான்
இரசத கிரிவந் துற்றுத்
தன்னையே ரில்லார்ப் போற்றித்
தரும்பர பதத்தை யுற்றுன் 21

[மாடகன் உவகையூத்து வணங்கித் தன்னூர் செல்லுதல்]

1187 தந்தைசொற் றேரும் வண்ணம்
தன்னைமா டகனும் நோக்கி
இந்தவற் புதம்போ லுண்டோ
எனவுளத் திறும்பூ தெய்தி
அந்தருற் றலமும் லிங்கத்
தருமையும் நினைந்து போற்றி
எந்தைதன் கடன்றீர் வுற்றேன்
என்றுதன் னூரிற் புக்கான் 22

1185 சுவேதநதி – வெள்ளாறு. உதிர்தர – நீங்க.
1186 உன்னலே – எண்ணுதே. இரசதகிரி – வெள்ளிமலை.
1187 இறும்பூது – வியப்பு.

[இச்சருக்கம் ஒதுவோர் கேட்போர் உறுபயன்]

1188 வளர்சிவ கேத்தி ரத்தின்
மாண்பிதென் றுரைத்து மிந்த
ஒளிதிகழ் சருக்கந் தன்னை
யோதுவோர் செவியிற் கொள்வோர்
உளமலி மலினம் நீங்கி
உயர்சிவ ஞான மேவித்
தளர்வுறு பிறப்பை நீத்துத்
தாணுவி னுருவ மாவார் 23

[கேத்திர மகிமைச் சருக்கம் முற்றும்]



1188 மலினம் – துன்பம். தாணு – இறைவன்.

வெள்ளாற்றுச் சருக்கம்

[ஏழுசீர் ஆசிரிய விருத்தம்]

[புரூரவன் வெள்ளாற்று மகிமையை உரைத்தருள முனிவனை வேண்டுதல்]

1189 தவமணிந் தேத்துந் தவவுரு வனைய
தவுமியத் தலைவனீ சொற்ற
சிவபுர மகிமை தன்னில்வெள் ளாறு
சிறந்துள தென்றனை யதன்றன்
உவமையில் வரலா றெவையுமோர்ந் தறிய
உரைத்தருள் புரிகென முனிவன்
சிவமல தறியாப் புரூரவா வுள்ளந்
தெருளுறச் செப்பல்மே யினனால் 1

[சுவேதகேது பாண்டியன் சிறப்பு]

1190 வளவர்தங் குலத்தில் வந்தவ தரித்து
மனுநெறி புறக்குமோ ரரசன்
கிளர்தரும் பலநூற் றெளிவுளன் சுவேத
கேதுவென் றரும்பெய ருடையோன்
உளமலி திறத்தாற் றன்வச மெனப்பூ
வுலகெலா மாக்கிய வுரவோன்
அளவகல் புகழோன் கொடையினில் முகிலே
யாமெனு மாதர வுடையோன் 2

[பாண்டியன் தன்நாட்டு வளங்காணப் புறப்படல்]

1191 தன்குடை நிழற்கீழ் வாழுமெவ் வுயிர்க்குந்
தாயென விருந்தருள் புரிவோன்
பொன்விளை தன்பூ வெங்கணு முளநற்
புண்ணியத் தலங்கள்மன் றங்கள்

1190 வளவர் - பாண்டியர். அளவகல் - அளவுகடந்த. ஆதரவு - கொடைப்பண்பு.

ஒன்றொரு கோடி யாய்வளம் பெருக்கி
உயிர்க்கெலா முறுந்துய ரகற்றி
மன்பதை புரக்கும் நாளிற்றன் றேச
வளமெலாம் நோக்கவென் றெழுந்தான் 3

[சோழவளநாட்டின் பொன்னிவளங்கண்டு தலங்களே வழிபட்டு ஆவன செய்து மகிழ்தல்]

1192 மந்திரத் தலைவர் சேனகா வலர்கள்
மறங்கெழு கருவியம் பதாதி
யெந்திரத் தேர்யா னைகளொடு புரவி
எங்கணும் மொய்த்திட வெழுந்து
செந்திரு வளநா டெங்கணும் நோக்கித்
திங்கள்வே ணியன்றிரு மாறன்
மந்திர மெவையுந் தாழ்ந்துபூ சனைகள்
வரம்பிலா தியற்றிமா மறையோர் 4

[பாண்டிநாடுகண்டு நதிவளமின்மை நோக்கி அக்குறைதீர்க்க எண்ணுதல்]

1193 விருத்திகள் முதலா மறப்புற மெவையும்
மிகவளர்த் தரும்பொன்னி நதியில்
திருத்திபெற் றோங்கும் குடியெலாம் நோக்கித்
தென்றிசை பார்க்கவந் தனன்நா
டிருத்தலை நோக்குங் காலற வின்றி
எங்கணும் அடவியாய் விளைவற்
றுருத்திடர் வேடர் குழுக்களா னிறைவுற்
றொற்கமார்ந் திருப்பதைக் கண்டான் 5

1191 தன்பூ – தன்னாட்சிக்குட்பட்ட நிலவுலகம். தலம் – இறைவன்பதிகள்.

1192 மந்திரத்தலைவர் – அமைச்சர்கள். பதாதி – வீரர்கள் முதலிய. புரவி – குதிரை. மந்திரம் – திருக்கோயில்.

1193 விருத்திகள் – அந்தணர்களுக்களிக்கும் பிரமதேயங்கள். அறப்புறம் – அறநிலையங்கள். திருத்தி – நிறைவு (திருப்தி) அறல் – நீர்வளம். அடவி – காடு. திடர் – மேடு. ஒற்கம் – தளர்ச்சி.

[அரசுப் பொறுப்பை அமைச்சனிடம் விட்டுத் தான் தவமியற்றப் புறப்படல்]

1194 நதியிலா மையிலிந் நாடரு கியதோர்
நதியுள தெனிற்பொன்னி நாட்டுக்
கிதுவ திகமென் றெண்ணிட விளங்கும்
இக்குறை தீர்ப்பனென் றுளத்திற்
றுதிபெறு மரசன் எண்ணின னுடன்றன்
தொல்லர சாட்சியாம் உலகை
மதிதிக ழமைச்சன் தன்வச மாக்கி
வளர்தவம் புரிவதற் கெழுந்தான் 6

[இமயமலையில் கடுந்தவம் புரிந்த பாண்டியனுக்குப்
பிரமன் வெளிப்பட்டுக் காட்சிதரல்]

1195 இமயமால் வரைக்கண் சென்றருந் தவப்பூண்
டிரணிய கர்ப்பனை நினைந்து
கவர்தரு வருட மாயிர முணவு
கழியநோற் றிருந்தனன் மலரோன்
இவனருந் தவத்தை நோக்கியோ திமத்தில்
எதிர்ந்துமுன் னின்றனன் இறைகண்
டவசம தாக வெழுந்துவீழ்ந் திறைஞ்சி
அஞ்சலி சென்னிமேன் முகிழ்த்து 7

[பாண்டியன் பிரமனைப் பலவாறுபோற்றி வணங்கப் பிரமன்
வேண்டியவரம் கேளெனல்]

1196 மறைமுத லாகுங் கலிமகள் கணவா
மன்னுயிர்த் தொகையெலா முதவி
நறைமலர்ப் பொகுட்டின் அரசுவீற் றிருக்கும்
நான்முகத் தண்ணலே பன்னுள்

1194 அருகியது – வறுமையாற் சுருங்கியது. துதி – புகழ். ஆக்கி – அளித்து.

1195 இரண்யகர்ப்பன் – பிரமன். உணவுகழிய – உணவின்றி. ஓதிமம் – அன்னம். இறை – சுவேதகேது மன்னன். அஞ்சலி – கூப்பியகை.

நிறைதவ மாற்றும் முனிவரர் புடைசூழ்
நின்மலா பால்நிறத் தெகினப்
பறவைவா கனனே வதனீயே கொடியாப்
பரித்தருள் புரிதரு மிறையே 8

1197 பொன்மலை யனைய மேனியாய்! ஞானப்
புண்ணிய முதல்வவெண் கணனே!
நன்மைசே ரடியார் உளமக லாதாய்!
நாரணன் நாபியங் கமலத்
தின்வரு முதலே! உலகெலாஞ் சிருட்டித்
தெவ்வுயிர்க் கும்உயி ராகுஞ்
சின்மய மாய தன்மையா யிமையோர்
சிரங்களி லலர்ந்தசே வடியாய் 9

1198 என்னையும் பொருளாய்த் திருவுளத் தடைத்திங்
கெழுந்தரு ளப்பெறும் பேறு
தன்னைநா னடையப் பெற்றனன் வேறு
தாழ்விலே னெனமகிழ்ந் தேத்தும்
மன்னனை நோக்கி மகிழ்தும்நின் றவத்தால்
வழங்கவேண் டியதுரை தருதும்
தன்னிக ரில்லோய் எனவய னியம்பத்
தரணிகா வலன்வகுத் துரைப்பான் 10

[பாண்டியன் பிரமனிடம் பொன்னியின் மிக்கதோர் நதிவளம் வேண்டுமென்று கூறல்]

1199 அய்யவேண் டுவதொன் றடியனேற் குதவும்
அவனியிற் பொன்னிநா டனைத்தும்
துய்யநீர் வளத்தால் மிகவளர்ந் தோங்கிச்
சுரருல கெனத்திகழ்ந் திடுமால்

1196 நறைமலர் – தேன்மலர் (தாமரை) எகினப்பறவை – அன்னம். பரித்து – தாங்கி.

1197 எண்கணனே – எட்டுக் கண்களையுடையவனே. நாபி – வயிறு. சிருட்டித்து – படைத்து. சின்மயம் – ஞானமயம்.

1198 அடைத்து – எண்ணி. உரை – சொல்லுக. தரணிகாவலன் – மன்னன்.

வெய்யதா யென்றன் புறத்துள நாட்டோர்
வெண்டிரை நதியிலா மையினுல்

பொய்யகல் மாந்தர் வசிப்பதற் கிலதாய்ப்
புளினர்வாழ் அடவிசேர் புவியாய் 11

1200 பொலிவகன் றிருத்த லாம்மிக வதுவும்
பொன்னிநாட் டினும்பல வளங்கள்

மலிதரு நாடென் றெவர்களும் மனத்தில்
மதித்திடப் புரிவிருப் படைந்தேன்

ஒலிமறைத் தேவே யவ்விடை நதியொன்
றெழுகுமா றுதவென வெவையும்

பலிதமாங் கங்கை தன்னினும் மிகமேம்
பாடுறு மொருநதி தருதும் 12

[பிரமன் ஒருகடத்தினின்றும் தெய்வநதியொன்றை வரவழைத்தல்]

1201 நிருபநீ வருந்த லென்றயன் கடத்தே
நினைவொடும் பார்த்தன னதினின்

றெருபெருந் தீர்த்தக் கன்னியாய்ப் பிராயம்
ஒரிரு நான்குடை யவளாய்ப்

பொருவக லதிக சவுந்தரி யாகப்
போந்தயன் றனையடி வணங்கி

அருகுநின் றனளார்த் தந்தணன் வகுக்கின்
றுன்கடத் தணங்கினை நோக்கி 13

1199 அவனி – உலகு. பொன்னிநாடு – சோழநாடு. சுரருலகு – தேவருலகு. வெய்யதா – தீர்வளமின்றி வெப்பமுடைய பாலியாக. புளினர் – வேடர்.

1200 பொலிவு – வளம். பலிதமாம் – உண்டாகிவினங்கும்.

1201 நிருப – அரசனே. கடம் – குடம். பிராயம் – வயது. பொருவு – ஒப்பு. அந்தணன் – பிரமன். கடத்தணங்கு – குடத்தில் தோன்றிய நதியாகிய பெண்.

[அதற்குச் சுவேதநதியென்று பெயரிட்டுப் பாண்டி நாட்டை வளப்படுத்துக என விடுத்தல்]

1202 புனிதநற் றீர்த்தக் கன்னிகேள் நீயே
புண்ணிய தீர்த்தமா மெவைக்கும்
நனிநல முடைய ளாய்ப்பொலி குவையிற்
நரபதி தருமவா னிவணுட்
டினிலொரு நதியாய் இவன்பெயர் விளங்க
என்றுப்நீ சுவேதமா நதியென்
றுனியெவ ருஞ்சொற் றிடும்பெய ருடனே
யுவந்துசென் றிடரெலா மொழித்து 14

1203 பல்வளம் பெருக்கி யொழுகுவாய் என்று
பணித்துட னரசநீ யிவணீச்
செல்வமா நின்னுட் டினிற்கொடு வதியச்
செய்துகொள் போவென நிருபன்
நல்குர வகற்றூர் நதியருள் என,வோர்
நங்கையை யளித்ததேன் நறுந்தேன்
மல்குதா மரைநன் மலரிருந் தருளும்
வள்ளலே எனவயன் வகுப்பான் 15

[பாண்டியனிடம் நதியை ஒப்பித்து மேலும் அருள்செய்வேன் எனக்கூறிப் பிரமன் செல்லுதல்]

1204 மானிலங் காக்கும் மன்னகேண் (மகளாய்)
வருமிவள் தன்னெடு மெழுந்து
தேனலர் சோலைச் சையமால் வரையில்
சேர்ந்தருந் தவம்புரிந் திருத்தி
வானறல் பொழியுங் காலமுற் றிடுங்கால்
வானவர் குழுவுடன் நாம்வந்
தீனமில் வரங்கள் வேண்டிய தருதும்
இவணீயும் பொன்னியோ டிணக்கி 16

1202 நனி – மிக்க. நரபதி – அரசன். உனி – கருதி (உன்னி) இடர் – துன்பம்.

1203 பணித்து – கட்டளையிட்டு. வதியச்செய்து – வாழச்செய்து. மல்கு – நிறையும்.

1204 சையமால்வரை – சூடகுமலை. வானறல் – மழை. இணக்கி – ஒன்றுபடுத்தி.

[நதிமகளோச் சையமால்வரையில் வைத்துப் பாண்டியன் தவமியற்றல்]

1205 என்றருள் புரிந்து மறைந்தனன் வேதன்
இயம்பிய மொழிவழி யேயம்
மன்றலங் குழலி தன்னெடுஞ் சைய
மால்வரை சேர்ந்துபார்த் திபனும்
வென்றிகொள் தவஞ்செய் திருந்தனன் மழைநாள்
விரவிய தரும்பொனீ நதியும்
ஒன்றிய பெருக்குற் றெழுகிய தயனும்
உற்றனன் விபுதரோ டுணர்ந்தே 17

[பிரமன் தோன்றிச் சுவேத நதியைப் பொன்னியோடிணைந்து வளந்தரக் கூறுதல்]

1206 இறைவனு மெழுந்து கன்னியோ டிறைஞ்ச
இனியநன் கருள்புரிந் தயனு
நறைகமழ் பதும நாபனை வணங்கி
நலமுறப் பூசைசெய் தருள்பெற்
றுறைதரு பொன்னி தன்னெடு மொழிவான்
உலகுயிர்ப் போற்றருள் பெருகி
நிறையுமங் கலஞ்சேர்ந் தொழுகுகா வேரி
நேரிழாய் இவளும்நம் புதல்வி 18

1207 உனக்கிவள் சகியாய் இருத்தலி னினைத்திங்
குற்றுநோற் றிருந்தன ளதனால்
நினைத்தவள் நிமித்தம் வந்த நின்றேச
நிருபனுஞ் சுவேதகே தினன்பேர்
தனக்குள நாடு தன்னில்நீ புகுதாத்
தரணிதென் றிசைக்கொரு நதிக்காய்
எனக்குவந் துரைத்தான் அளித்தன னிவளை
இவளும்நின் றனைவிரும் பினளால் 19

1205 பார்த்திபன் – அரசன். விரவியது – வந்துசேர்ந்தது. விபுதர் – தேவர்.

1206 கன்னி – நதிப்பெண். பதுமநாபன் – பிரமன். நேரிழாய் – பெண்ணே.

1207 சகி – தோழி, நோற்றிருந்தனள் – தவஞ்செய்திருக்கிறாள்,

[காவேரியோடிணைந்த சுவேதநதி இருகூறுகப் பிரிந்து வளம்செயப் பணித்தல்]

1208 ஆதலா லிவளுன் னுடன்பிர வேசித்
தறல்பெரு குன்றணட் டிரண்டு
பேதமாய்ப் பிரிந்துத ரத்திவர்ந் தேற்கும்
பிறங்கொளி முத்துமா லிகைபோல்
ஏதம தகல வொழுகிடப் புரிவாய்
இவட்குமுன் றனக்குள பெருமை
நீதரத் தகுமென் றுரைத்துட னெகின
நெடுந்துவ சத்தனே துவனுல் 20

1209 நலமலி சுவேத நங்கையை நோக்கி
நாரமாய்ப் பொன்னியி னுடன்சென்
றலகிலாப் புகழிவ் வண்ணல்நா டுறுங்கால்
அங்குகா வேரியைப் பிரிந்தொள்
அலைசெறி யிரண்டு நதியதாய்த் தெற்குத்
தரத்தினு மாய்ப்பிர வேசித்
திலகுபற் பலநல் வளங்க ளந்நாட்டி
னிற்பொலி வித்துமே வுதிநீ! 21

[சுவேத நதியின் ஒருபிரிவு சிவபுரத்தினருகிலும், ஒருபிரிவு சிதம்பரத்தின் அருகிலும் நடக்கப் பணித்தல்]

1210 உன்றனக் குபய பாரிசந் தனிலும்
ஓங்குமுத் தேவர்கள் முனிவர்
என்றுசொல் பெரியா ராங்குழாங் களுமெக்
காலமும் வசிக்குவ ரினிநீ
சென்றிடு தென்றிக் கினிற்சிவ புரநற்
றிருநகர் சிதம்பரம் வடபால்
ஒன்றிய பரமப் பிரமமே வசித்தற்
குளவிடம் அவைக்கரு குறுவாய் 22

1208 பேதமாய் – பிரிவாய். உதரத்து – வயிற்றின்கண். மாலிகை – மாலை. ஏதம் – துயர். எகினநெடுந்துவசன் – அன்னத்தைக் கொடியாகவுடைய பிரமன்.

1209 நாரமாய் – நீர்வடிவாய். உத்தரம் – வடக்கு மேவுதி – செல்லுவாயாக.

1210 உபயபாரிசம் – இருபக்கம். வசிக்குவர் – தங்கிவாழ்வார்கள்.

1211 அத்தல மேன்மை தன்னையு மதிக
மாகநீ விளக்கிமுன் னேசெ
முத்திர ராசன் றனையடை யெனநான்
முகனுரை சுவேதமா நதிகேட்
டொத்துள மகிழ்ந்து பொன்னியைப் பூசித்
துடன்சல ரூபியாய் எழுந்தாள்
வித்தக மலரோன் அரசனை நோக்கி
விளம்புவா னருந்தவ வேந்தே 23

[பாண்டியன் சலரூபமாகிய சுவேத நதியைப் பெற்று மீளுதல்]

1212 பன்னெடு நாள்நீ புரிந்திடுந் தவத்தால்
பணித்திடு மிந்நதிப் பெருக்கின்
றன்னுட னேசெல் வேண்டிய விடத்திற்
ருன்பிரிந் தவ்வுழிப் புகுந்து
நன்னலந் தருமென் றருள்பல புரிந்து
நான்முகத் தந்தணன் மறைந்தான்
கொன்னுனை வேலோன் அவ்வருள் தலைமேற்
கொண்டுமா நதியினே டணைந்தான் 24

[சுவேத நதியின் சிறப்பும் அது பரவியொழுகும் பெருமையுங் கூறல்]

1213 மணிபல வரன்றித் திகழ்தரும் பொன்னி
மாநதி சுவேதநன் நதிவந்
தணைதரும் பொழுது திரைவளைக் கரத்தால்
அணைத்தெடுத் தொருமுக மாகி
இணையக விருவோ ருந்தமிற் கலந்தே
யீர்ங்குழற் சைவல மதற்குக்
கணைநறு மலர்வேய்ந் தொளிவளைக் கரத்திற்
காஞ்சன மணிபல புனைந்து 25

1211 விளக்கி – விளங்கச்செய்து. பொன்னியை – காவிரிநதியை. வித்தகம் – வேதத்தையுடையவன்.

1212 பணித்திடும் – (யான்) அருள்செய்திடும். கொன்னுனை – கொல்லுந் தன்மை வாய்ந்த நுனி (அச்சந்தரும் கூர்மைபொருந்திய வேலென்றுமாம்)

1213 மணி – வைரம்முதலிய மணிகள். திரைவளைக்கரம் – அலைகளாகிய வளைந்த கைகள். இணை – ஒப்பு. ஈர்ங்குழல் சைவலம் – குளிர்ந்த பாசிகளாகிய கூந்தல். கணை – காம்பு. வளை – (சங்கு) வளையல். காஞ்சனம் – பொன்.

1214 தந்தணிந் தமுதம் வேண்டுவ வூட்டித்
தருமிகு கரைமருங் கெவரும்
வந்தனீ புகழ்ந்து வாழ்த்தெடுத் துரைப்ப
வருவன வீரண்டுமோ ருருவாய்
அந்தரம் அவனி யுங்கொளா தென்ன
ஆர்ப்பரித் தகன்கரை யெறிந்து
சிந்துர மகில்சந் தனமுரு டுருட்டித்
திடர்படு கயந்திடர்ப் படுத்தி 26

[பொன்னிநதி சுவேதநதிக்குக் கூறுதல்]

1215 திசையெலாங் காலாய்ச் சென்றுயி ரிடர்கள்
தீர்த்துநல் லறம்பல பெருக்கி
வசையகல் சோணைட் டெல்லியின் வருங்கால்
மலரயன் உரையினீப் பொன்னி
இசைதர நினைந்து சுவேதமா நதிமின்
னேயினி யெனைப்பிரிந் திரண்டு
விசைதரு நதியாய்த் தெற்குமுத் தரத்தும்
விரைந்தெழ வேண்டுமென் றுரைத்து 27

1216 இன்றுகா றுடனீ என்னுயிர்த் துணையாய்
இரங்கலை யொடும்பிறி விலதாய்
ஒன்றிவந் தனையென் னமுதமே மேலும்
ஒருவுறு தித்தொடர் பயலல்
வென்றிகொ ளரசின் பொருட்டுநீ வரலால்
விரும்பிய இவணெணம் முடிக்கச்
சென்றுநின் கால்க ளாற்கொடும் பாலை
தேய்தரச் சிதைத்தறம் பெருக்கி 28

1214 அமுதம் – நீர் (உணவு) அந்தரம் – ஆகாயம். அவனி – பூமி. திடர் – மேடு. கயம் – குளம்.

1215 கால் – வாய்க்கால். இசைதர – கூற. நதிமின் – நதியாகியபெண்.

1216 இன்றுகாறு – இன்றையளவும். இரங்கு அலை – ஒலிக்கும் நீரலை. ஒருவுறு – நீங்காத. பாலை – பாலைநிலம் தேய்தர – அழிந்துமாற.

1217 தீயனல் எவையும் நீங்கிநன் மாந்தர்ச்
சேர்ந்துறும் புளினரைச் செறுத்துத்
தாயென வுயிர்க ளெவைக்குநின் னளியே
தந்துதோய் பவரிட ரகற்றி
மாயவெம் பசிகள் முதற்பிணி கணீந்து
வளம்பல பெருக்குவித் தந்த
தேயமிந் திரலோ கத்தினுஞ் சிறந்த
தெனச்செய வேண்டும்நீ என்றுள் 29

[வேதநெறிபோலச் சுவேதநதி ஒழுகும் சிறப்பு]

1218 இன்னநன் மாற்றம் பொன்னிசொற் றிடல்கேட்
டென்றனக் குறுபெருந் துணையாய்!
நின்னுரை வழிநின் றொழுகுவே னென்ன
நேர்ந்தருத் தியதாய்ப் பிரிந்து
மன்னவன் பெயர்கொண் டெழிற்சிவ யோக
மகிமகள் கருணையின் ஒழுகி
என்னையா ளுடைய வாத்மநா யகர்சொற்
றிடுமறை யொழுக்குமொத் தியங்கி 30

[அந்நதி வெள்ளாறு என்னும் தீந்தமிழ்ப் பெயரொடு பாய்ந்து பல்வளமும் பெருக்குதல்]

1219 தென்றிசை வரும்வெள் ளாறெனுந் தெய்வத்
திருநதி யதிகவே கமதாய்
ஒன்றிய காளத் துறுதருக் குலங்கீண்
டோங்குவெம் பாறையைத் துரந்து
மன்றலங் கமல வாவிகா லோடை
மடுக்கள்சேர் மருதமே யாக்கி
இன்றமிழ் புகழாக் கம்பல, தரும
மேமுதல் நல்லன தொகுத்து 31

1217 தீயனல் – கொடிய வெப்பம். செறுத்து – அழித்து. அளி – கருணை. தோய்பவர் – மூழ்குபவர். இடர் – பாவம்.
1218 அருத்தியதாய் – ஆசையோடு. இயங்கி – நடந்து.
1219 கானம் – காடு, தருக்குலம் – மரங்கள். கீண்டு – பெயர்த்து. துரந்து – அகற்றி. மன்றல் – மணம். வாவி – குளம்.

1220 அருந்திறற் சுவேத கேது வா மிறைவன்
அவனீ னின்படி படர்ந்து
மருங்குள வசர சரமெலாம் வருந்தா
வகைவளர்த் திருகரைப் புறத்தும்
பொருந்துமா லயங்கள் தமைத்திரைக் கரத்தால்
பூவொடு நீர்சுமந் தேத்திப்
பெருந்துறை புகுந்து பெருகல மடைந்து
பேணுமா ருததிசேர்ந் திடுமால் 32

[சுவேதநதியின் வரலாறு இத்தகையது என முனிவர் புரூரவனுக்கு விளக்குதல்]

1221 நனியிசை பெருகும் புரூரவா வரச
நாமுனஞ் சொற்றவெள் ளாற்றின்
றனதுறும் வரலா றிம்முறை யாகும்
சாற்றுமத் திருநதி யதனீ
மனதுற நினைக்கின் புகழ்பல பெருக்கும்
வந்துகா ணிற்றுய ரகற்றும்
முனமதைப் பரிசித் திடிற்பிணி கனீயும்
மூழ்கின்வெம் பிறவியை முடிக்கும் 33

[வெள்ளாற்றில் மூழ்கி வழிபட்டோர் எய்தும் சிறப்பும் பயனும் முனிவர் கூறுதல்]

1222 யாதுகா மித்து மூழ்கினு முதவும்
அப்புன லருந்திடின் அமுகள்
மோதுவ் வானதிப்புக் காடுபே றுளதா
முடியினிற் றெளித்திடி லளகை
நாதனு மென்ன வைத்தருள் தருமந்
நதிக்கரை வசித்திடிற் பாக
சாதன னுகும் உடலதிற் றெளிக்கச்
சாருமேல் விசும்பெலாந் தருமால் 34

1220 படர்ந்து - பரவி. அசரசரம் - நிலைப்பொருள் இயங்குபொருள்கள். உததி - கடல்.

1221 இசை - புகழ். பரிசித்திடின் - தீண்டினால். கனீயும் - தீர்க்கும்.

1222 காமித்து - விரும்பி. அருந்திடின் - உண்டால். வானதி - ஆகாயகங்கை. அளகைநாதன் - குபேரன். பாகசாதனன் - இந்திரன். விசும்பு - சுவர்க்க இன்பம்.

1223 நகமயி ரெலும்பு களிற்சிறி தந்த
நதிதனி லிடப்பெறு வாரைத்
திகழ்மலர்த் தருவாழ் விபுதராய்ச் செயுமந்
தியகிரி யைச்செயி லவன்முன்
மிகுகொடும் பாவி யெனவரு நரகில்
வீழ்த்தினு மீட்டெடுத் தருளும்
தொகுமரங் கல்புல் கிருமிபுள் விலங்கத்
தோயநேர்ந் திடிற்பெறுஞ் சுவர்க்கம் 35

[இந்நதிக்கரையில் சிவலிங்கப் பிரதிட்டை செய்வோர் பெறும் பயன் கூறல்]

1224 அத்திரு நதியின் கரையினிற் சிவலிங்
கப்பிர திட்டைசெய் தன்பால்
வைத்திடின் கோடி லிங்கமற் றிடத்தில்
வைத்துள பெரும்பயன் மருவிச்
சித்தமா சகற்றிப் பிறவியுந் தீர்ந்து
சிவமதா குவர்சிவார்ச் சனையிற்
றத்துமந் நீர்கொண் டாட்டிலெஞ் ஞான்றும்
தணந்திடா ததினுறுந் தாணு 36

[இந்நதிக்கரையில் வில்வமுதலாய தருக்களை வைத்து வளர்ப்போர் எய்தும் பயன் கூறல்]

1225 சூழ்கரை மருங்கோர் நறுந்தரு வில்வந்
துழாய்கர வீரம்யா தேனும்
வாழ்வுற விருத்தப் பெற்றவ ரவரே
வான்றரு நீழலின் வதிவோர்
ஆழ்புன லதன்றன் பெருமையா ரறிவர்
அதற்கது நிகரலா துலகில்
தாழ்விலா தொன்றை யெடுத்துவ மிக்கத்
தகுவதன் றுத்தர நதியும் 37

1223 விபுதர் – தேவர். அந்தியகிரியை – இறந்தவர்க்குச் செய்யும் சடங்குகள். கிருமி – புழு. புள் – பறவை. தோயம் – நீர்.

1224 சித்தமாசு – மனக்குற்றம். ஆட்டில் – அபிடேகம் செய்தால். தணந்திடா – நீங்கா. தாணு – கடவுள்.

1225 துழாய் – துளசி. கரவீரம் – விளாமரம். வான்றரு – கற்பகமரம். உத்தரநதி – கங்கை.

1226 இரங்குவெண் டிரைவெள் ளாறெனும் பெயர்கொண்
டெழுந்துவே கத்துட னுபய
மருங்கினுந் தரள மணிகொழித் தெழுந்து
மலர்சுமந் தகில்முத லுருட்டி
நெருங்குபல் வளமப் புறமெலாஞ் செறித்து
நேர்ந்துமூழ் குநர்க்கருள் சுரந்து
தரங்கநற் கரத்தாற் றலையுற வணங்கிச்
சாகரத் துறும்புகழ் தரித்தே 38

[இச்சருக்கம் ஓதுவோர் கேட்போர் பெறும் பயன் கூறல்]

1227 இயங்குபல் பெருமை நெருங்குவெள் ளாற்றின்
இயல்பெடுத் தோதுமிச் சருக்கம்
நயம்பெற உரைத்து ளோர்செவிக் கொளுவோர்
நடலைதீர்ந் தரைருட் பெருக்கின்
முயங்கிவாழ்ந் திடுவர் என்றருந் தவத்தோர்
மொழிந்தன ரரசுகேட் டுவந்து
வியந்தனன் மகிமை சானுவி தனிலும்
மிக்கதென் றுரைத்தனன் விரும்பி 39

[வெள்ளாற்றுச் சருக்கம் முற்றும்.]



1226 இரங்குவெண்டிரை – ஒலிக்கும் அலைகள். தரங்கம் – அலை. சாகரம் – கடல்.

1227 நடலை – துன்பம். முயங்கி – கலந்து. சானுவி – கங்கை.

புரூரவச் சருக்கம்

[தரவு கொச்சகக் கலிப்பா]

[யாக்கியவல்கியர் சனகருக்கு அருளிய வரலாற்றைத் தவுமியர் புரூரவாவுக் குரைத்தாங்குச் சூதமுனிவர் முனிவர்களுக்குக் கூறல்]

1228 ஆக்கியவர்க் கியர்சனகர்க் கருளுமறை முறையீதென்
றூக்கமுடன் சூதமுனி யுரைப்பமுனி வரருகி
நீக்கமிலாப் பேரன்பின் நெடுந்தாரை கண்பொழியப்
பாக்கியமா னானந்த பரவசராய் மொழிகிற்பார் 1

[சனகன் யாக்கியவல்கியரையே பரப்பிரமமாகக் கொண்டு சிறப்புற்றன்னெனல்]

1229 அய்யநீ விரித்தறைந்த வருமறைகள் முழுதுமுயர்
தெய்வமுனி வரனுழியத் தேர்வேந்தன் கேட்டதற்பின்
எய்தியதென் அவையுமெமக் கியம்புகென மொழிதருவான்
துய்யவருட் சனகன்முனி சொல்லதனு ளுளந்தெருண்டு 2

1230 மிக்கவதி பக்குவத்தின் மேம்பட்டு முனியாக்கிய
வக்கியரைப் பரப்பிரம மாகமதித் தொருவாமல்
ஒக்கவவ ருடனிருந்தே யுற்றனன்பே ரின்பசுகம்
பொக்கமிலா வறம்புரக்கும் புரூரவா வெனும்வேந்தன் 3

[புரூரவன் தவுமியரை அரியணையில் வைத்துப் பலவாறு போற்றித் துதித்தல்]

1231 சிவபுரமான் மியமுதவும் தெய்வவருட் டேசிகனும்
தவுமியமா தவனடியிற் ருழ்ந்தரியா சனத்தேற்றி
நவமணிப்பூண் விலையறியா நற்றுகில்பற் பலதரித்துப்
புவனபதி விதிவழியாற் பூசனைசெய் தேத்துறுவான் 4

1228 ஆக்கியவர்க்கியர் – யாக்யவல்கிய முனிவர். பாக்கியம் – பேறு.
1229 கேட்டு அதன்பின் எய்தியது என்ன எனச் சனகன் கேட்டான்.
1230 ஒருவாமல் – நீங்காமல். பொக்கம் – பொய்.
1231 நற்றுகில் – உயர்ந்த ஆடைகள். புவனபதி – அரசன்.

1232 அடியனு மெனதிதய மாகியதா மரையலரப்
படியினில்மே வியஞான பானுவே மும்மலமாம்
கொடியபா சந்தவிர்த்தாட் கொண்டருளும் கோவேவெண்
பொடியொளிருந் திருமேனிப் போதானந் தப்பொருளே 5

1233 மண்ணுண்டு பாழ்நரகில் மாழ்தலுறக் கடவேனுக்
கெண்ணுது பொருள்தந்தென் னேயுமொரு பொருட்படுத்திக்
கண்ணருண் மணியாகிக் காட்டினீ பெருந்துறைச்சீர்
அண்ணலென் குற்றேவல் யாதுளதுன் பொருளேயான் 6

[புரூரவனுக்கு அருள்புரிந்து தவுமியர் தன் ஆசிரமம் சென்றமர்தல்]

1234 என்றுபல வாற்றுதிசெய் ஏந்தலோகோக் கிப்பரிந்து
தன்றுணைச்செங் கைமலராற் றைவந்து நீறணிந்து
வென்றிகொள்பற் பலவரங்கள் மிக்கருளி
விடைகொடுத்துச்
சென்றிருந்தா ஞசிரமத் தின்றவுமி யத்தவர்கோன் 7

[புரூரவன் சிவபுரத்திற்குச் சென்று வழிபடப் பேரவாவுற்றவனுய்த் தன் பரிவாரங்களுடன் புறப்படல்]

1235 அரசனுமெய்த் தவுமியமா தவனருள்பெற் றுடனெழுந்து
நிருபர்கணம் புடைசூழ நேரகறன் னூரகஞ்சேர்ந்
துருகியமெய் யுணர்வினெடும் ஒங்குசிவ புரப்பெருமை
கருதியிர வும்பகலும் கண்படைக்கொள் ளாஞகி 8

1236 அத்தலஞ்சென் ருன்மேச ரடிவணங்கப் பெறுவனெனப்
பத்தியொடு நற்பயணம் பண்ணுவித்துச் சேணுயுடன்
சித்திதரும் பெருந்துறையின் திசைநோக்கிப் புறப்பட்டு
முத்திவழி தருங்கங்கை முதற்றீர்த்தம் பலபடிந்து 9

1232 பானு – சூரியன். பாசம் – கட்டு. வெண்பொடி – திருநீறு. போதம் – ஞானம்.
1233 மாழ்தல் – மூழ்கியமிழ்தல். பொருள் – மெய்ப்பொருள். அண்ணு – தலைவனே.
1234 தைவந்து – தடவி. தவர்கோன் – தவசியர்க்கரசன்.
1235 நிருபர்கணம் – சிற்றரசர்கள் கூட்டம்.
1236 ஆன்மேசர் – ஆத்மநாதர்.

[புரூரவன் கங்கை முதலாய புண்ணிய நதிகளையும் திருத்தலங்களையும் மூழ்கி வழிபட்டுச் சிவபுரம் வந்தடைதல்]

1237 ஆனமூ வகைத்தருப்ப ணம்புரிந்து சோடசமா
தானம்விதி யாற்கனகந் தன்னியிறைத் தாலயங்கள்
மோனமுனி வரர்சாலை முழுவதுங்கண் டடிதொழுது
மானபரன் பெருந்துறையின் வளரெல்லை சேர்ந்தனனால் 10

[அரசன் திருப்பெருந்துறையின் தெய்வீக வளங்களைக் கண்டு மகிழ்தல்]

1238 அற்புதமார் பூங்காவும் அணிமலர்நீ ரோடைகளும்
பொற்பமரும் வேதகீ தப்பொலிவும் புள்ளினங்கள்
சொற்பயில வேமாறிச் சொல்லுமங் குள்ளபல
நற்றிறமெல் லாந்தெரிந்தா னந்தசா கரத்தழுந்தி 11

[அக்கினித் தீர்த்தத்திற் படிந்து பின் வெயிலுவந்த கணபதியை வழிபடுதல்]

1239 பாவமெனும் வெம்பனிக்கோர் பானுவெனுந் தெய்வவழல்
வாவியிற்சென் றுடிங்ய மங்கள்மிக வும்பலவோ
டாவலினால் வெயிலுவந்த ஐங்கரனைத் தாழ்ந்திறைஞ்சி
மூவருரு வாங்குருந்த மூலத்தின் முன்னணைந்தான் 12

[அரசன் திருக்குருந்தைக் கண்டு பேரானந்தமுற்று வழிபட்டு வணங்கிப் போற்றுதல்]

1240 திறிகுணமே யிலையாகத் திரிமூர்த்த மேவாராய்
இறுதலிலாக் கலைஞான மேயலராய் மறைவிதியே
முறிதளிராய் முனிவரரே முதிர்பறவை யாய்முதலே
மறுவிகலும் பரப்பிரம மாய்விளங்குந் திருக்குருந்தை 13

1241 கண்ணுரைக் கண்டனன்மெய்க் காவலனெஞ் சத்துருகி
மண்ணுரை வீழ்ந்தெழுந்து மாமறைக்கு மெட்டாத
அண்ணலென் றஞ்சலிக்கை யம்பொன்முடி மேற்ருங்கி
விண்ணுடு கண்டாரை விட்டோடப் போற்றிசைப்பான் 14

1237 சோடசமாதானம் – பதினாறு அறங்கள். கனகம் – பொன்.
1238 மாறிச்சொல்லல் – புள்ளினங்கள் வேதங்களை மாறிமாறிச்சொல்லுதல்
1239 பானு – சூரியன். தெய்வவழல் – அக்கினி தீர்த்தம்.
1240 திறிகுணம் – மூக்குணம். இறுதல் – அழிதல். முறி – கொழுந்து. முதல் – அடிமரம்.

1242 மூலமே! தோன்ரு முதலே குணக்கடலே!
காலமே யாவருக்குங் காட்டாந் தனிச்சுடரே!
ஆலமே நல்லமுத மாகஅருந் தும்பொருளே!
சீலமே குந்தமெனும் தெய்வப் பரம்பொருளே 15

1243 அம்புயமே லோற்கும் அரிக்கு முருத்திரர்க்கும்
செம்பொருள்காட் டும்பொருட்டுத் தேசுருவங் கொண்டருளி
உம்பர்பதந் தருதீக்கை யுபதேசஞ் செய்துகந்த
சம்புவே குந்தமெனும் தாணுவே சங்கரனே 16

[அறுசீர் விருத்தம்]

1244 எந்தா யொன்று மறியாத வேழையுன்ரு ளேதுணையாய்
வந்தே னென்ன வன்பிறவி மாற்றியருள்தந் தருள்வாய்நீ
சிந்தா மணியே தெவிட்டாத தெள்ளமுதே .....
குந்தே சாவென் றுளங்கசிய உருகிக் கோமான்
பணிந்தெழுந்தே 17

[தரவு கொச்சகக் கலிப்பா]

[சிவயோக நாயகியை வழிபட்டு ஏத்தித் துதித்துக் குருந்தேசர் பெருமையைக் கூறியருள வேண்டுதல்]

1245 சிவயோக நாயகிதன் செங்கமலத் தாளிணையை
நலமாகக் கண்டிறைஞ்சி நற்றுதிசொற் றெண்ணிறந்த
தவமேதந் துதவியருட் சாயணர்தந் குலராகி
அவமாற்றும் ரோமசன்முன் ஞமறையோர் யாவரையும் 18

[அத்தலத்து முனிவர்களே வணங்கிப் போற்றுதல்]

1246 தாழ்ந்திறைஞ்சி வேண்டுவன தந்தலராற் பூசித்துப்
போழ்ந்தமதிச் சடையார்க்காம் புண்ணியர்கா
ணும்பெருமை
ஆழ்ந்தகடல் சூழுலகில் ஆரறிவா ருமைக்காணூஉ
வாழ்ந்தனன்குந் தேசரருள் வண்ணமுரைப் பீரெனக்கே 19

1242 ஆலம் – ஆலகாலவிடம்.
1243 அம்புயமேலோன் – பிரமன். அரி – திருமால். தேசு – ஒளி. உம்பர் – தேவர்.
1245 குலராகி – குலமரபில்வந்தவராய். அவம் – வீண்செயல்.
1246 போழ்ந்தமதி – பிறைச்சந்திரன். காணூஉ – கண்டு. வண்ணம் – மாண்பு.

[ரோமசமுனிவர் புரூரவாவுக்குக் குருந்திறைவர் மகிமையைக் கூறுதல்]

1247 இம்முறையிற் ரூழ்ந்தியம்பு மிறைமொழிகேட் டனுமகிழ்ந்து
செம்மைதரு ரோமசர்தாம் செப்புகின்ரு ரெப்பொருளும்
எம்மையுடை யாரருளே என்றுலகங் காத்ததிரோர்
வெம்முனைசாய்க் குந்திகிரி வேந்தே யுரைக்குதுங்கேள் 20

1248 அரிபிரமர் முதலெறும்பீ ருமெவையு மாத்மாவாம்
இரிதலிலா தவைக்கரசாய் இருத்தலினு லெம்மறைக்கும்
பிரியமுறு கின்றதிருப் பெயராத்ம நாதரவர்
விரிமலர்சே ருங்குருந்தாய் வீற்றிருந்தார் காணரசே 21

1249 திசைமுகனர்க் குக்காயத் திரிகருட கேதனருக்
கிசைதருமா றக்கரமு முருத்திரர்கஞ் சக்கரமும்
வசையகலக் குருவடிவ மாகவிருந் துபதேசித்
தசைவில்பர ஞானநெறி யருளினன்வீண்
ணேர்க்கணத்துள் 22

1250 வந்துபுகுந் தடிவணங்கி வரமடையா தவரில்லை
கந்தமலர்க் குழலிமயக் கன்னியும்வந் தரியதவம்
அந்தமிகும் யோகபீ டத்திலிருந் தாற்றவருள்
எந்தைமணம் புணர்ந்தருள இன்புற்ரு ணிறையே 23

[கேத்திரச் சிறப்பையும் இறைவன் திருநாமச் சிறப்பையும் அவர் கூறி விளக்குதல்]

1251 அருட்குருந்துக் கெண்டிசையோ சனிசிவயோ கவனமாம்
இருட்டகல்வா னவர்பிரம விருடிகள்மற் ரேரெவரும்
தெருட்டருமா தவம்பூசை செயுமிடமெங் கணுநிசமாம்
பொருட்டருமா கேத்ரவன புரமுனறீ ரெட்டவர்பேர் 24

1247 எதிரோர் – பகைவர், வெம்முனை – போர்க்களம். திகிரி – சக்கரம்.
1248 இரிதல் – நீங்குதல்.
1249 காயத்ரி – காயத்திரிமந்திரம். ஆறக்கரம் – ஆறட்சரமந்திரம். அஞ்சக்கரம் – ஐந்தெழுத்து மந்திரம்.
1251 எண்டிசை – எட்டுத்திக்குகளிலும். யோசனை – யோசனைதூரம். தெருட்டரும் – தெளிவைத்தரும். இறைவன் திருநாமம் பதினறென்படி.

1252 திருக்குருந்தை வந்துதெரி சிப்பவரித் திருநகர்வாழ்ந்
திருக்குமவர் பேறுரைக்க வெண்ணிலெம்மால் முடியாதன்
பருக்கமுத நாதமய மாகும்ப ராபரையே
மருக்கமழுஞ் சிவயோக வல்லியென வேவிளங்கி 25

1253 அடியவர்கள் தொழுதேத்த அமர்கின்ரு ளெவரேனும்
கடிமலர்கள் தூய்த்தொழுது கமலமல ரடிகாணிற்
படிவமெடுத் துழல்வதிலாப் பரயோக மிகப்பெறுவார்
முடிவிலதா மழற்புனலு முண்டான தெம்மிறையால் 26

[அக்கினி தீர்த்தப் பெருமையையும் பிற தீர்த்தடங்களின் சிறப்பையும் கூறல்

1254 பலகோடி மகம்புரிநற் பலனுளதே லழன்மடுவின்
அலைநீரா டுதல்கிடைக்கும் அப்புனல்சேர் கால்படுநற்
றலமேவு மெவ்வுயிரும் தாணுவுல கம்பெறுமால்
மலமாதி யின்றம்மடு மன்னியுள தப்புனலின் 27

1255 ஆடுதல்கூ டிற்சென்ன மந்தமுறு மவையன்றிப்
பீடுறுகா ரணமருவப் பெற்றுளதீர்த் தம்வெகுவா
நாடியவை களிற்றருப்ப ணுதிபுரிந்திடிற் பிதிர்கள்
நீடியநித் தியம்பெறுவர் நிருபவினங் கூறுதுமே 28

[இறைவன் திருவுடனம் பற்றியும் திருவிளையாடல் பற்றியும் கூறல்]

1256 ஞானமய மாமாத்ம நாதருறை ரகசியமித்
தானமதாற் புலிமுனிப தஞ்சலிமுன் னும்முனிவர்க்
கானவுடஞ் சிதம்பரத்தி லாடினர்கூ டற்பதியில்
ஈனமுற வீளையாட லெட்டெட்டுஞ் செய்தனரால் 29

1252 பராபரை – சிவசக்தி. மருக்கமும் – தெய்வமணங்கமும்.

1253 படிவமெடுத்துழல்வது – பிறவியெடுத்துத் துன்புறுவது.

1254 மகம் – யாகம். அழல்மடு – அக்கினிதீர்த்தம். கால் – காற்று.

1255 சென்னமந்தமுறும் – பிறவித்துயர்முடிந்துவிடும். பீடு – பெருமை. தருப்பணம் – உணவு. இனங்கூறுதும் – மேலும்சொல்லுவேன்.

1256 புலிமுனி – வியாக்கிரபாதமுனிவர். எட்டெட்டு – அறுபத்துநான்கு

1257 தேவுறையா யிரத்தெட்டுச் சிவபுரிக்கும் மூந்தியதால்
ஆவனிக ழாதிகயி லாயமெனும் பெயரிதற்குக்
காவலவெங் நாளும்வணங் கத்தகுமார் கழியதிகம்
பாவலர்நூன் முகத்தானும் பகர்வரிதா மிதன்பெருமை 30

[அரசன் தனுர் மாதம் வரையிருந்து வழிபட்டுத்
திருப்பணிகள் புரிந்து மகிழ்தல்]

1258 என்றருள்செய் ரோமசர்தா ளிணைமலரின்
வீழ்ந்திறைஞ்சித்
துன்றெளிமா மணிக்கலனற் றுகில்முதலா கியவுதவி
வென்றிதரும் பணிக்குரிய விப்பிரர்க்கும் வேண்டுவவீந்
தொன்றியசீர் பெருகவரோ டுரைவின்மா தம்வரையும் 31

1259 அத்தலத்தின் மேவியம ராத்மநா யகரிருதாள்
பத்தியினற் போற்றிசைத்துப் பணிந்தொழுகித்
தீர்த்தமெலாம்
சித்தமகிழ் வுறத்திளைத்து செய்கடனெல் லாம்முடித்து
வித்தகமா கும்பணிகள் வேண்டுவன செய்தமைத்தே 32

1260 கயிலாச நாதருக்கும் காயாம்பூ மேனியர்க்கும்
அயமாக ஆலயஞ்செய் தமர்தருநா ளம்மறையோர்
பயிலோமம் தவம்பூசை பணிதிருமுன் காத்திருக்கும்
செயல்யாவும் கண்டிவரே தேவரெனத்
தேர்ந்துரைப்பான் 33

1257 தே - இறைவன். ஆவனிகழ் - விருப்பம்நிகழும். பகர்வு - சொல்லுதல்.

1258 துன்று - நெருங்கும். கலன் - ஆபரணம். வின்மாதம் - மார்கழித் திங்கள்,

1260 காயம்பூமேனியன் - திருமால். அயம் - இரும்பு. தேவர் - சேவைக்குரிய தேவர்,

[இத்தலத்து அந்தணர்களின் தவம் பூசனை முதலிய கண்டு அம்மறையவர்களின் வரலாற்றைக்கூற அரசன் வேண்டுதல்]

1261 அய்யர்காள் குருந்திறைவர்க் களவிறந்த திரவியங்கொண்
டெய்திநிதம் பூசிக்கின் றீர்விருத்தி யெவ்விதந்தாஞ்
செய்யசடை யாரருளாற் சேர்தருமோ நும்வரலா
றுய்வகையா னேதுமென ரோமசரென் பார்மொழிவார் 34

[ரோமசர் அவ்வேதியர்களின் மாண்புகளைக் கூறல்]

1262 வெங்கயமா வேந்தேயாம் விப்பிரரின் மிகப்பெரியம்
பொங்கொளிவா னவர்க்குமுயர் பொற்புடையம் ஈசரருள்
எங்களுக்கே முந்தினிதா மேதெனில்முற் சிருட்டியினிற்
பங்கயத்தோன் றன்குருவாம் பரம்பொருளைப் பூசிக்க 35

1263 ஓமகுண்டத் தங்கதனி லோர்குழவி தோற்றுவித்துத்
தாமமுறு நாமமும்சூட் சாயணரென் றிட்டதனுக்
கேமமுள தாங்காயத் திரிமறைமுற் றுங்கொடுத்துப்
பூமருவு குருந்தரனைப் பூசிக்க வைத்தனரால் 36

1264 பரிசார கப்பொருட்டோர் பன்னெருவிப் பிரரையுமவ்
வெரிவாயிற் பிறப்பித்தா ரிம்மரபி லெண்ணிறந்தோர்
விரிவாகி ஞானிகளாய் வெகுகாலங் கண்டிருந்தார்
கரிசாருங் கலவாவோர் காலமிங்கா டாளரசும் 37

1265 தீயமனத் தினனகிச் செங்கோலின் முறைபிறழ்ந்து
ஞாயவழி யின்றியே நடத்தினனை தலினால்
மாயமன வேடர்புரி வன்முழுலுக் காற்றாது
போயினர்க ளிம்மரபிற் பூசுரர்சில் லோரவரும் 38

1261 விருத்தி – வாழ்க்கைக்குரிய செல்வம். சேர்தருமோ – உண்டாகுமோ?

1262 வெங்கயமா – வெகுளிமிக்க யானை. விப்பிரர் – தேவர். பங்கயத்தோன் – பிரமன்.

1263 தாமம் – ஒளி. ஏமம் – காவல்.

1264 எரிவாயில் – வேள்வித்தீயினிடத்து. கரிசு – குற்றம்.

1265 மாயமனம் – வஞ்சனைமிக்க உள்ளம். பூசுரர் – அந்தணர்.

[அவர் வரலாறு கேட்ட அரசன் வேடர் கொடுமைக்கஞ்சி உத்தரவேதி சென்ற முனிவர்களை அழைத்துவர உரியாரை அனுப்புதல்]

1266 அந்தரவே தியிலடைந்தங் கருந்தவஞ்செய் திருந்தனர்கள்
குந்தவிறை தாள்பிரியக் கூடாமற் சில்லோர்யாம்
வந்தனைசெய் திங்கிருந்து மன்னினம்மன் னுவெனலுஞ்
சிந்தைமகிழ் வுறவுமது செல்வமே செல்வமென 39

1267 நன்னயமோ திப்பணிந்து நானடிமை யுங்கள்தமக்
கென்னகுறை யந்தரவே தியிலிருக்கும் பூசுரரும்
மன்னிடமுன் போலவர வழைத்திடயான் வேண்டுமென
அந்நிலையே பத்திரம்வா கனமாதி கள்விடுத்தான் 40

1268 செல்வமலி யந்தரவே தியிலிருந்த பூசுரரும்
மல்குபுகழ் புரூரவா மன்னன்விடு மோலையுணர்ந்
தல்லலகன் ரோமினியென் றந்நிலையே மொய்த்தெழுந்து
பல்புகழ்சேர் பெருந்துறையின் பாங்குற்றார், பூபதியும் 41

[உத்தரவேதியிலிருந்து வந்த பூசுரர்களையும் யாவரையும் பணிந்துபோற்றி எல்லார்க்கும் வேண்டிய நிலமுதல் பல தானங்களை அரசன் செய்தல்]

1269 அருந்திறல்சேர் ரோமசர்முன் னமைறையோர் தாமெதிர்போய்ப்
பொருந்துபல முகமனுரை புகன்றுமுறை மையின்வணங்கி
குருந்திறைதா ளிணைபணிந்து கூடவே யாவரும்வந்
திருந்தனர்கள் பழமைமொழிந் தேத்தியர சன்மொழிவான் 42

1270 அய்யர்காள் யானுமுய்தற் கனித்திடப்பூ தானமுமக்
கெய்துமவ ரோடிருந்தோர் எண்ணளவு கூறுமென
மெய்யர்கள் முந்நூறுபெயர் வாய்ந்தேமெம் விரிவென்றார்
துய்யரா மவர்க்குமனை சூழ்வீதி போக்கியிறை 43

1266 அந்தரவேதி – இமயத்தில் ஓரிடம். மன்னினம் – வாழ்கின்றோம்.
1267 நயம் – இன்மொழி. பத்திரம் – ஈட்டோலை.
1269 பழமைமொழிந்து – நட்புறவுகளைப்பேசி அளவளாவி.
1270 எண்ணளவு – முனிவர்களின் எண்ணிக்கை. வீதிபோக்கி தெருக்கள் அமைத்து.

1271 தேவரின்மா ணம்போலச் செய்துமுந்நூ ரும்மனைக்கும்
ஆவலொடு வேண்டுவவெல் லாங்குவித்துத் திருக்குருந்தின்
தாவகலெண் டிக்கும்யோ சணைநிலமும் அவர்க்கென்று
மாவலன்சா சனமெழுதி மகரமா சந்தனிலே 44

[அவ்வந்தணர்கள் மகிழ்ந்து அரசன் அளித்த தானங்களை ஏற்று அவனை வாழ்த்தி மகிழ்தல்]

1272 தானபூ ருவமாகத் தக்கமனை யோடளித்துக்
கானலர்தூய்த் தொழுதெழுந்தான் காவலனம் மாமறையோர்
மானபர னீநெடுநாள் வாழ்கவென வாசிபுகன்
றீனமுறு வவ்வரச னீந்தனகைக் கொண்டிருந்தார் 45

1273 ஐந்தறுப தாமனையும் ஆவணமும் அம்மறையோர்
தந்தொகையும் மற்றவர்செய் தன்மைகளுங் கண்டிறைவன்
இந்தநகர் பவுத்திரமா ணிக்கமென்றான் மாமுனிவீர்
முந்துமிவ்வே துக்களினல் மொழிதருமித் திருநகர்க்கு 46

1274 திருந்தாதி கயிலாசம் சிவபுரநற் சதுர்வேத
புரம்பிரம தேசமெழில் பொங்குசிவ கேத்திரநீள்
குருந்தவனஞ் சன்னவனம் கோதில்சிவ யோகவனம்
பெருந்துறைநற் பவுத்திரமா ணிக்கமெனும் பெயரொருபான் 47

[அரசன் முனிவர்களை வணங்கி விடைபெற்றுச் செல்லுதல்]

1275 இன்னவகை யிறையவரோ டின்புற்றுப் பின்சிலநாள்
மன்னியவர் தம்மிசைவின் வாசமலர்க் குருந்திறைதாள்
சென்னியிற்கொண் டேயவர்க்குப் செய்வதெலாஞ் செய்தருளால்
தன்னகர்க்கே கப்பயணம் தானுங்கொண் டெழுந்தனனே 48

1271 தேவரின்மாணம் – தெய்வதச்சன் திருமாணம். தா – வலிமை மாவலன் – அரசன், மகரமாசம் – தைமாதம்.

1273 ஆவணம் – சாசனஓலை.

[அரசன் திருப்புனவாயில், சேது ஆகிய தலங்கள் சென்று வழிபடல்]

1276 சிந்தைமகிழ் சேஷ னொடும் தென்றிசைநோக் கிப்பரிவின்
வந்துதிருப் புனவாயில் மன்னிவளர் பேரொளியாம்
எந்தையடித் தாமரையை யேத்தியிறைஞ் சிப்புறம்போந்
துந்துபெருங் காதலினுல் உற்றுனச் சேதுவினில் 49

[அரசன் தனுக்கோடி தீர்த்தமாடிப்பின் ஆவலாய் வந்து வழிபடல்]

1277 தலையொருபத் துடையவனைச் சாய்த்தவிரா கவர்கந்தக்
கொலைகழுவும் பரம்பொருளின் கோகனகத் தாளிறைஞ்சி
அலைசெறியுந் தனுக்கோடி யாடிமது ரைப்பதிசேர்ந்
திலகியசுந் தரக்கருணை யின்பவெள்ளத் தின்மூழ்கி 50

[சூதமுனி இவ்வரசனை இளன் என்னும் பெயராற் குறிப்பிடுதல்]

1278 அருள்விடைபெற் றுப்புறம்போந் தனிகமொடு
தன்பதிசேர்ந்
துருகுமனத் துளனகி யொப்பகல்செங் கோலோச்சி
நிருபர்கள்தந் தொகைமகுட நெடுங்கழற்கா லிற்புரளத்
திருவருள்கொண் டுலகளித்தான் திங்கள்மர
பெனுமையினன் 51

[இச்சருக்கத்தை உரைப்போர் கேட்போர் உறும்பயன்]

1279 என்றுபுகன் றனன்சூதன் இருடிகளம் மொழிகேளா
நன்றிறைவன் செய்கையென மவின்றுமுக மிகமலர்ந்தார்
வென்றிதரு மிவ்வியலை விரித்தறைவோர் கேட்பவர்கள்
மன்றினடம் தருபவர்தாள் வாழ்வுறுவோ ராகுவரே 52

[புரூரவச் சருக்கம் முற்றும்]

1277 தலையொருபத்துடையவன் – இராவணன். கொலை – பிரமகத்தி. ஆடி – நீராடி.

1278 அனிகம் – சேஷ. எனுமையினன் – என்னும்தலைவனுகிய இளன்.

இளன் சருக்கம்

[அறுசீர் விருத்தம்]

[இளன்என்னும் பெயர்சுட்டியமைக்குரிய வரலாற்றை முனிவர்கள்விளவல்]

1280 சொல்லரிய நைமிசவ னத்துறுவர் (சூதனிடம்)
சொல்வரிவ ணேதுமரசை
வில்லுடு பதிக்குலம் விளக்கும இளப்பெயர்
விளம்பவரு மேதுபுகல்வாய்
நல்லவர் தமக்கருள்செய் ஞானமுனி வாவென
நலங்கொள்தவ மேவுமறவீர் !
ஒல்லும்வகை யாலிதை யுரைப்பனென வோதுவன்
உணர்ச்சிமிகு சூதமுனிவன் 1

[சூதமுனி இளன் வரலாறு கூறுதல்]

1281 ஏதமில் கிரேதயுகந் தன்னில்முனங் கத்தமன்
எனும்பதி நெடுங்காலமண்
கீதகல ஆள்வனவன் றன்கண்இள னென்றொரு
திருத்தகு விறற்குமரனிப்
பூதலமி யற்றுதவ வேதுவி லுதித்துநிறை
பூரணம திக்குநிகராய்
ஆதரவி னற்கலை யனைத்துமுணர் வுற்றுலகம்
ஆள்திறமு மொத்துவளர்வான் 2

[கத்தமன் மகனாகிய இளன் கானகத்தில் வேட்டையாடச் சென்று
வேட்டைபுரிதல்]

1282 வனமிருக வேட்டையில் மனஞ்செல வெழுந்துபுடை
வந்தணிகொள் சேனையுடனே
கனதைகொள் நெடும்புரவி யேறிமிரு கஞ்செறிகொள்
கானகம் நடத்தியவணேர்

1280 வில்லுடுபதிக்குலம் – ஒளிவீசும்விண்மீன்களின்தலைவனாகியசந்திரன் குலம். ஏது – காரணம். ஒல்லும்வகை – இயன்றவரையில்.

1281 கத்தமன் – அரசன்பெயர். ஆதரவின் – விரும்பத்தால்.

இனமிகு விலங்குபல வைப்பிளவு செய்திமய
மெய்திவலீல கட்டிவிறலா
ரனிகமொடு சுற்றிமிரு கங்கலீ வெருட்டியரி
யேறென வடர்ந்துவருகால் 3

[இறைவன் உமையோடு கலந்து மகிழும் காளகத்தில் அறியாது புகுந்து பெண்ணுருவமடைதல்]

1283 குசைப்புலவன் மிக்கொரு குகைப்புற மதுற்றுளது
கொற்றவ னதன்கணுறவே
இசைக்குருகு முக்கணிறை தானிமய மாதுடனீ
ருந்தவண் மகிழ்ந்துகலவா
நசைத்தொழில் புரிந்துவிலீ யாடினர்க ளிவ்வுழியின்
நண்ணுமெவ ரேனுமவர்கள்
வசைக்குரிய பெண்ணுருவ மாவரென வோதிவதி
வாரதறி யாதநிருபன் 5

[பெண்ணுருவமுற்ற இளன் திகைப்புற்று இறைவேலேடிருந்த உமாதேவியைக் கண்டு வணங்கி விலவுதல்]

1284 சென்றிடுத லாலுரிய சேனையொடு தானும்மெய்
திரிந்தரிவை ரூபமணுக
நின்றனன் மயங்கியிது வென்னென வியப்பிலெடு
நேடுபொழு தீசனுமையோ
டொன்றிவிலீ யாடுமது கண்டனன் விழுந்தடி
யுவந்துதுதி செய்தமலீலமா
தென்றிலகு தேவிமுனில் அங்கரிவை ரூபமோ
டெதிர்ந்துமொழி கின்றனனிளன் 6

1282 பிளவுசெய்து – கொன்று. விறல் – வெற்றி. அனிகம் – சேனை.

1283 குசைப்புலவன் – மான். நசைத்தொழில் – இன்பவிலீயாட்டு. உழி – இடம். நண்ணும் – நெருங்கிவரும். வசை – இழிவு அதுஅறியாதநிருபன் – இறைவன்விதித்த அவ்விதியைத்தெரியாத இளன்.

1284 மெய்திரிந்து – ஆண்உருவம்மாறி. நேடுபொழுது – ஆராயுங் காலத்து.

[உமையவள் அருள்புரிந்து கூறுதல்]

1285 உலகுதவு சிற்றுதர வொப்பகல் மடக்கொடி,யிங்
குற்றிடலு மென்றனுவருவம்
கலகவிழி மாதர்வடி வானதடி யன்ருதை
கத்தமன் யானும்இளனும்
அலகில்வசை யாமிகு தகற்றியருள் தந்திடென
அம்பிகை யிரங்கியொருபால்
இலகுபுரு டப்படிவம் ஈவனெரு பாதியையும்
ஈசனெடு கேளெனலுமே 7

[இறைவன் இளகோ டீ ஒருதிங்கள் ஆணுருவும் ஒருதிங்கள் பெண்ணுருவும் கொண்டு விளங்குவாய் என அருளுதல்]

1286 கன்னியுரு வாகுமிளன் பொன்மலிவி லண்ணல்முனங்
கைகள்சிர மீதுகுவியா
முன்னவ வெனக்குவித் முற்றுமகல் வித்தெனது
முன்னுருவ மாகவருள்வாய்
என்னவர னுள்ளமதி ரங்கிமுன் இயம்புமுரை
பேதமரு வாதவகைகோ
மன்னுருவ மாண்பெனென மாதமொரு ரூபமுரு
மாறிவரும் ஓருமொருநாள் 8

[இளன் பெண்ணுருவில் இருந்த காலை புதன் காணுதல்]

1287 என்றிறைவ னேதியுமை யோடுமறை .....
.....
மன்றல்தரு கின்றதட மொன்றய லிருந்துதவ
மாற்றுபுத னேக்கிமொழிவான் 9

1285 சிற்றுதரம் – சிறியவயிறு. ஒருபால் – ஒருபக்கம். ஈசனெடு – ஈசனிடம்.

1286 பொன்மலிவில் – மகாமேருவாகியவில். குவியா – குவித்து. முன் இயம்புமுரை – முன் வித்தித்த சொல். ஏதமருவாத – பழுதுறுத. ஒரும் – அசை.

1287 இப்பாடல் இடையே சிதைந்துபோய்விட்டது. புதன் – கிரகங்களில் ஒருவனாகிய புதன்.

[புதன் பெண்ணுருவில் இருக்கும் இளனை விரும்பி வினவுதல்]

1288 அற்பொலியு நீலமலர் முண்டகங் கோங்குகுமிழ்
ஆம்பல்செங் காந்தள்மலர்சேர்
பொற்கொடி யெனப்பொலியிவ் வன்னமிவள்
போவள்பொறி
யோரதிமி னெகனதைசே
ரற்பரம டந்தையர் தமக்குளெவ ளாவளென
வயர்த்தருகு சென்றுபுருவ
விற்குலவு தோகை மயிலேயுறைவ தெவ்வழி
விரும்புமண வாளனெவன்கீ 10

[அவள் புதனின் வரலாற்றைக் கேட்க அவன் கூறுதல்]

1289 இவ்விடை வரற்கேது யாதுன்னை யீன்ரோர்கள்
யாவர்புக லென்னவனேர்
நவ்விவிழி வேலையெறிந் தச்சமொடும் நாணெடும்
நயப்புனகை கூரமொழிவாள்
செவ்விய தவப்படிவ! நின்றன்வர லாறுமுரை
செய்கவுற வின்றுமணமின்
றவ்வியமி லாவுனரு னேக்கருதி வந்தனென
ஆர்வமொடு மேதைமொழிவான் 11

1290 அன்னநடை மின்னிடையென் னுரமுத மேயுனைய
லாதுபுகல் வேறுமுளதோ
என்னுடைய பேரொடுபி றப்பையு முறைக்குவ
னெனக்குரிய தாதைமதியம்

1288 அல் - இருள். முண்டகம் - தாமரை. பொறியோ - இலக்குமியோ. கனதை - பெருமை. அயர்த்து - ஐயுற்று. உறைவது - இருப்பது.

1289 நவ்வி - மான். விழிவேலையெறிந்து - பார்த்து. மணமின்று - இதுகாறும் மணம் செய்துகொள்ளவில்லை. அவ்வியம் - மனக் கோட்டம். என - என்றுகூற. மேதை - புதன்.

பொன்னுடைய மன்னியனை, முன்னரொரு நாளிலகில
பொங்கியெழு மந்தாகினி
தன்னிலவள் மூழ்கிவரும் போதுமதி நேருறவே
சாரும்விதி யிற்கூடினர் 12

1291 யானவள் வயிற்றிடை மதிக்குரிய கர்ப்பமது
வாகவிவை யாவுமுணரா
வானவரோ டம்பொன்ஒளிர் திங்களோ
டெதிர்ந்துபொர
வான்மதி வெருண்டுகயிலைக்
கோனிரு பதத்திலப யம்புகுத நம்பனருள்
கூரமுடி மீதிலதனை
யேனினி யுனக்கிட ரெனத்திகழ வைத்துட
னெழுந்தமர ரைச்சீறினன் 13

1292 அப்பொழுது வானவர்கள் பயந்தடி வணங்கியெம
தய்யவும தாணைநெறிதான்
இப்பொழுது தப்பிலினி யாருடனு ரைக்குவம்
எனப்பரிவி னேடுமொயழித்
துப்புறழும் வேணிமதி யைப்பொன்மனைப் பற்றுவிடு
சோம,வினி யென்னமதியும்
மைப்புய லவட்குளக ருப்பமென தாகுமென
வானவ ரெதிர்ந்துமொழிவார் 14

1293 துய்யமதி வாய்மொழிய சத்தியமெனப் பெரிய
தோன்றலவள் தன்னைவினவி
மெய்யுரைமி னென்னவிமை யோர்கலக வம்பகமி
னேயுரை கருப்பமெவரால்

1290 புகல் – அடைக்கலம். தாதை – தந்தை. மதியம் – சந்திரன். பொன் – வியாழன். மன்னி – மனைவி. அனை – தாய். அவள் – குருவின் மனைவியாகிய தாரை. சாரும்விதி – ஊழ்விதி. கூடினர் – கலந்தார்கள்.

1291 பொன் – வியாழகுரு. பொர – போரிட. நம்பன் – சிவபெருமான்.

1292 பொன்மனைப்பற்று – குரு மனைவியிடத்துகொண்ட பற்று. சோம – சந்திரனே. மைப்புயலவள் – சரிய கூந்தலையுடைய தாரை.

அய்யமக லப்புகல வேண்டுமென வம்புலியி
னைதென மாதுவிபுதர்
தொய்தரு கருப்பமுதி ராதமுனம் வீழ்கவெனுஞ்
சொற்றர வுதித்தனுடனே 15

1294 என்னேமதி மைந்தனென வொதினர்கள் யாருமெனை
யின்றவளே யிசன்மொழியாற்
பொன்னனுடன் சேர்த்தமர ரேகினர்கள், நற்சிவ
புறத்துறை நிருதரிருதாள்
தன்னேவழி பட்டுரிய கோள்கள்தமில் யானுமெளி
தாகவொன் ருனணிணிநான்
மன்னுசிவ னுரருள்பெ றத்தவசு செய்துகொடு
வைகுவனென் பெயர்புதன் 16

[புதனுடைய வரலாறு கேட்ட இளனுகிய மடந்தை
உடன்பட்டுக் கலந்துமகிழ்தல்]

1295 என்றுதன துற்பவ முறைத்திவணி யான்றவம்
இயற்றல்பழு தாகாமலே
உன்றனது காட்சியுற வுற்றனனே முற்றும்மீ
உள்ளம்வைத் தாளங்னேவாய்
மன்றலங் கூந்தல்மட வன்னமே யென்றனன்
மகிழ்ந்துட னணங்குமருவி
ஒன்றியிரு வோருநய வின்பமுற் ருர்மன
துறக்கலவி நூன்முறமையால் 17

[மறுதிங்களில் ஆண்வடிவமுற்ற இளன் தவமியற்றிக்
கொண்டிருக்கும் புதனுகிய முனிவனே விளைவுதல்]

1296 அம்முறைமை யால்மகிழ்ந் தன்புறுங் காலவள்
காட்டிற் கருக்கொண்டனள்
செம்மைதரு வத்திங்க ளகலமறு திங்கள்,
சேர்ந்ததுமே யாண்டிவடிவமாய்

1293 அம்பகம் – கண். அம்புலி – சந்திரன். தொய்தரு – (தோய்) உண்டான. உதித்தன் – தோன்றினன்.
1294 நிருதர் – இறைவன். வைகுவன் – இங்குஉறைகின்றேன்
1295 உற்பவம் – பிறப்புவரலாறு. மருவி – கூடி.

விம்மவய னேக்கிமுனி வன்றனீக் கண்டடியில்
வீழ்ந்துவெரு வோடுமொழிவான்
பொய்மையறி யாமுனிவ னீயாவன் என்சேனை
போமிடமெங் கென்றுபுகல 18

[புதன் அவனுக்கு நிகழ்ந்தவற்றைக் கூறித்தன்னோடு
தவம் புரியப்பணித்தல்

1297 மதிமகன்கை கூப்பினெடு நீயாரை யென்றனன்
வகுத்தான்றன் வரலாறெலாம்
அதுசரதம் நின்சேனை யாவுங்கன மாரியத
னுலிறந்திட யாமுனைப்
பதிமகனெ னப்பாது காத்தனம் எம்மோடு
பரித்திரு தவத்தையெவையும்
புதிதலவெ லாம்சேரும் நீபினர்ப் போகலாம்
பொங்கொளிகொள் நகரிலெனவே 19

[பின் பெண்ணுருவமெய்திய இளன் ஓர் மகவினை ஈன்று வளர்க்கப்பின்
ஆணுருவமெய்திப் புதமுனிவனை இக்குழவி வந்த வரலாறு
யாதென வினவுதல்]

1298 அய்யநின் னுணைவழி நிற்பனு னென்றிளன்
அருந்தவ மியற்றிவருநாள்
துய்யவத் திங்களக லப்பெணுரு வாகிய
தொடர்ச்சியிற் றசமாசமும்
எய்தவீன் றனள்மகவொன் றம்மதி வளர்த்தனள்பின்
ஏய்மதியி லாணுகச்
செய்யசூழ வியைமுனிவர் வளர்க்க இளன்நோக்கியிச்
சேய்வந்த வாறேதென 20

1296 விம்ம – விளங்க. முனிவன் – புதன். வெருவோடு – அச்சத்தோடு

1297 மதிமகன் – புதன். வகுத்தான் – கூறினன். சரதம் – உண்மை. கனமாரி – பெருமழை. பதிமகன் – அரசன்மகன். பரித்திரு – தாங்கியிரு.

1298 அத்திங்கள் – (இளன் ஆணுருவில் இருக்க) அந்தமாதம். தசமாசம் – பத்துமாசம். பின்ஏய்மதியில் – பின்வந்த திங்களில். ஏது – விளக்குவாயாக.

[புதன் மீண்டும் நிகழ்ந்தவற்றைக்கூறி துருவாசர் முதலிய முனிவர்களையழைத்து இளனுக்குச் சாபம் நீங்க வழிகேட்டல்]

1299 அருணன்மொழி வானரச வாய்மைமொழி வேனென
அடுத்தவையெ லாமோதினன்
நிருபன்மன மஞ்சியிது தீர்விதமெவ் வாறென
நினைந்துதுரு வாசர்சவனர்
மருவுமிவர் முதல்முனிவர் தம்மையழைத் தேயவன்
வரலாறெ லாமோதியே
பெருகிவள ரிச்சாப மொருவும்வகை நீருரைமின்
பேணியென அவரோதுவார் 21

[முனிவர்கள் அசுவமேத யாகமியற்றுதலும் இறைவன் தோன்றிக் கூறுதலும்]

1300 அசுவமே தமகஞ்செய் தரன்கிரு பைபெற்
ருலலது தீர்வதரிது
வசையகல வம்மகம் நடத்துவ மெனக்கூடி
வந்தமுனி வன்சீடனும்
இசைபெருகு ராசமுனி வன்மருத் தன்றனை
இயமான னுக்கியெவரும்
நசையினெடு பரிமகம் முடித்தனர்கள் மால்விடையின்
நாதன்நணு கிக்கூறுவான் 22

[இறைவன் இளனுக்குச் சாபவிமோசனம் அருளுதல்]

1301 நீவிர்புரி (பரிப்பெயர்) தருமகத் தெம்முள
மகிழ்ந்ததின் நீங்கினதிளன்
பாவமென் ருவின்வரு மண்ணலுரை செய்தகல
ஆணுருவ மாகவிளனும்
தாவகலு மாதவர்கள் கண்டுமகிழ் கூர்ந்தாசி
சாற்றிமதி மகனெடினிக்
காவலனை நாடாள ஏவுகென வோதியே
கலந்தா ரகன்றேகினர் 23

1299 அருணன் – (ஈண்டு) புதன். அடுத்தவை – நிகழ்ந்தவை. சவனர் – சியவனமுனிவர். ஒருவும் – நீங்கும்.

1800 மகம் – யாகம். இயமானன் – வேள்வித்தலைவன். பரிமகம் – அசுவதமேயாகம். மால்விடை – இடபம். நாதன் – சிவபெருமான்

1801 அதின் – அதனால். ஆவின்வருமண்ணல் – சிவபிரான். தா – வருத்தம். காவலனை – இளனை.

[இளனுக்குப் பிறந்த குழவிக்குப் புரூரவசு எனப் பெயரிட்டு அருளுதலும் இளன் புரூரவாவுக்கு முடிசூட்டி அரசளித்தலும்]

1302 ஏதமற வீன்றகுழ விக்குப் புரூரவசு
வென்றுபெய ராகுமினிநீ
நீதமுறு நின்றேச மேகுகென வாசிகள்
நிகழ்த்திவிடை தரமேதைதன்
பாதகம லங்களி லிறைஞ்சிமக வோடுதன்
பதிபுகுந் தொளிர்மாமணிச்
சோதிதரு மகுடம்பு ரூரவா வுக்கிளன்
சூட்டியுல காண்டுவருநாள் 24

[இளன் தவம் செய்து பேறுறுதலும் இச்சருக்கத்தின் பலனும் கூறுதல்]

1303 வானுலகு தன்வசம தாக்கும் பொருட்டிளன்
வசுந்தரையை நீத்தேகினன்
மானபர னும்புரூர வாசக்ர வர்த்தியாய்
மதிக்குல விளக்காகியே
ஞானநர பதியா யிருந்துல களித்தனித
னல்இள னுமென்றனன்
மோனநிலை யார்சூத னிவ்வியல் செவிக்கொளுவர்
மொழிபவர்கள் பெறுவர்திரு வே 25

[இளன் சருக்கம் முற்றும்]



1302 ஈன்றகுழவி – பெண்ணைஇருந்தஇளனோடுகூடிப் புதன்பெற்றகுழவி. மேதை – புதன். பதி – நாடு.

1303 வானுலகு – சுவர்க்கம். வசுந்தரை – பூமி. மதிக்குலம் – சந்திரகுலம். நரபதி – அரசன். மோனநிலை – தவம்.

அகத்தியச் சருக்கம்

[சந்தத் தாழிசை]

[முனிவர்கள் சூதரிடம் வினவுதல்]

1304 விரகார்தரு தவமாதவர் மிகுசூதநன் முனிபால்
பரிவோடுபின் மொழிவார்முனம் பானேர்கட முனிவன்
திருமால்வரை பொதியத்திடை சேர்காற்சிவ புரம்வந்
தருமாதவ மினிதாற்றினன் அதிலென்றருள் செய்தாய் 1

[சூதமுனிவர் அகத்தியரைப்பற்றிக் கூறத் தொடங்குல்]

1305 அம்மாதவ னம்மாநக ரதின்நோற்றருள் சேரும்
எம்மானும்வி ரித்தோதுக வென்றுரொளி குன்று
வும்மாலெவை யறியாதன வுளவாயினு மொழிவேன்
விம்மாவுறு தலமேவிய மெய்யீரென வருள்வான் 2

[அகத்தியர் தென்னாடு செல்லுதலும் விந்தத்தை அடக்குதலும்]

1306 இமவான்மகள் திருமன்றலின் இருமாநில மகள்தான்
சமமாகுற மலையத்துழி சார்கென்றிட முதல்வன்
நமையாள்கட முனிதென்றிசை நணுகிப் படர்விந்தத்
தமர்மாமுர ணெற்றிப்புகுந் தான்விண்டக அடவி 3

1304 விரகு – மதிப்பு. கடமுனிவன் – அகத்தியன். மால்வரை – பெரியமலை. சேர்கால் – சேர்ந்தகாலை.

1305 எம்மானும் – எல்லாச்செயல்களையும். ஒளி – ஞானம். விம்மாவுறு – புகழால் ஓங்கியிருக்கின்ற.

1306 இமவான்மகள் – பார்வதி (உமை) மன்றல் – திருமணம். மாநிலமகள் – பூமி. மலையம் – பொதியமலை. நணுகி – அடைந்து. அமர் – அமர்ந்து. முரண்எற்றி – (விந்தமலையின்) கர்வத்தைஅடக்கி அடவி – கானகம்.

[அகத்தியர் தவமியற்றலும் பிரமன் தோன்றி வினவுதலும் சிறந்த ஆசிரமவாழ்க்கை வேண்டி என அகத்தியர் கூறுதலும்]

1307 அக்கான மதனிற்றவ மாற்றித்தமிழ் முனிவன்
மிக்கோர்துதி செயவைகினன் விரைமாமலர் மேலோன்
புக்கோன்முனி வன்போற்றல்பு ரிந்தாரண முதலே
இக்கானிடை வருதற்குள வேதென்னென மொழிவான் 4

1308 தேனுருமின் றமிழ்மாதவச் செல்வாவருந் தவம்நீ
ஆனதிவண் புரிகின்றதற் காமேதுரை யென்ன
வானேதரு மதியாசிர மத்தின்விருப் பென்றான்
நானுமறை களுமோதுமா சிரமம்ஒரு நான்கில் 5

[பிரமன் இல்லறமே சிறந்ததென்று கூறி லோபாமுத்திரையை மணந்துகொள்ளக் கூறுதல்

1309 பழுதில்லநல் லறமில்லறம் பகருந்துற வறமோ
முழுதுந்தவ ரூதோம்புதல் முற்றிற்பெரி தினிதாம்
வழுவின்றிந டத்தற்கது அரிதாகும்நம் கன்னி
அழகின்வடி வம்போலும்லோ பாமுத்திரை யென்பாள் 6

1310 நின்பால்மணம் எய்தத்தவம் செடுநாள்புரி கின்றாள்
அன்போடவள் தனைவேட்டருள் வாயென்று கூமகளால்
நன்பாலென முனியைமுக நான்குள்ளவன் றேற்றி
இன்பார்முனி கள்மத்தியில் இருமன்றலி யற்றி 7

1307 விரைமாமலர் மேலோன் – பிரமன். ஆரணமுதலே – வேதத்தின் நாதனே.

1308 ஆமேதுரை – ஆனகாரணத்தைச் சொல்க. வான் – உயர்ச்சி. மதியாசிரமம் – சான்றோர்கள் கூறும் நால்வகை ஆசிரமங்கில. நானு– பல. நான்கு – பிரமசரியம், கிரகந்தம், வானப்பிரத்தம், சந்நியாசம்.

1309 ஓம்புதல் – தவறாது கடைப்பிடித்தல். நம்கன்னி – என்மகள்.

1310 வேட்டருள் – மணந்துகொள். நன் பால் – நன்மையால். இரு – சிறந்த.

[அகத்தியர் லோபா முத்திரையுடன் பல தலங்களையும் வழிபட்டு இறுதியில் குந்தவனம் அடைதல்]

1311 வேண்டும்பல வரமீந்தயன் மீண்டான்றன தூலகில்
பாண்டங்கியே மொழிமாதுலோ பாமுத்திரை யோடும்
ஆண்டுஞ்சில நாள்வைகிய கன்ருலய மெங்குங்
கோண்டங்கிய பிறையாற்ருழக் குறுமாமுனி குறுகி 8

[குந்தவனமுனிவர்கள் அகத்தியரை வரவேற்று மகிழ்தல்]

1312 வந்தித்துயர் குந்தத்திரு வடிவாமரன் றன்னைச்
சந்தித்தடி தாழத்திகழ் சதுர்வேதபு ரத்தின்
முந்துற்றன னம்மாநகர் முதுவேதிய ரெவரும்
கொந்துற்றெழு மகிழ்வோடெதிர் கோலித்
தொழுதுய்ந்தார் 9

[அகத்தியர் வெள்ளாற்றில் நீராடி இறைவனை வழிபட்டுக்களித்தல்]

1313 கொண்டாடெதிர் பறையோரொடு குறுமாமுனி யணையா
வண்டோலிடு சிவயோகவ னத்தைத்தொழு தன்பால்
கண்டார்திரு வெள்ளாறுக லந்தாடிநன் முனிவர்
தண்டாதுறை செயலுந்தெரி தந்தேகளி யுற்றே 10

1314 திரள்மாதவர் தம்மோடுயர் சிவகேத்திர மணுகும்
குருமாமுனி வன்மேன்மைகண் குளிரத்தெரி சித்தே
திருவாரழல் நீர்தோய்ந்துயர் தேவாம்வெயி லுவந்த
ஐமாமருப் புடையோனடி யுபயந்தொழு தேத்தி 11

1315 அருவாயுரு வழுமாயுப யமுமாகிய வண்ணல்
வருவார்குரு துருவாய்வளர் வதுகண்டனன் முனிவன்
பெருகார்வமொ டிருதாரையும் பெய்யப்புன லுளமும்
உருகாமயிர் புளகாவுரை குழறுடல் பதறு 12

1311 தனதூலகு – சத்தியலோகம். பாண் – இசை. கோண்டங்கிய – வணங்துள்ள. பிறையாற்ருழக் – சிவபிரானைத்தொழ. குறுகி – அடைந்து.

1312 சதுர்வேதபுரம் – திருப்பெருந்துறை. கொத்துற்று – ஒருங்குகூடி.

1313 அணையா – கலந்து. தண்டாது – நீங்காது. குறுமாமுனி – அகத்தியன்.

1314 ஒருமாமருப்புடையோன் – விநாயகர்.

1316 வீழ்ந்தானடி தாழ்ந்தான்மனம் வியந்தான்குனித் தாடி
சூழ்ந்தான்மலர் இட்டஞ்சலி சுமந்தான்றலை யினிமேல்
வாழ்ந்தானருட் பெருவாரியின் மதித்தான்குருந் திறைசீர்
போழ்ந்தான்மல வலியாவையும், போற்றப்புகு
கின்றான் 13

[அகத்தியர் இறைவனைப் பலவாறு போற்றித் துதித்தல்]

1317 உலகேயுரு வமதாய்விழி ஒளிசேர்முச் சுடராய்
நலமார்தரு மருளுட்கர ணமாயுயி ரெவையும்
விலகாதமர் புலைக வியந்தாடிய நீயே
இலகாவொரு குருந்தாகி யிருந்தாயிது வென்னே 14

1318 அடியாயிரங் கையாயிரம லர்க்கண்ணி யிரம்பொன்
முடியாயிரம் முகமாயிரம் மொழியாயிரம் வெள்ளைப்
பொடியாயிர மடுமார்பகப் பொலிவாயிரம் விடைசேர்
கொடியாயிர முடையாயொரு குருந்தாகிய தென்னே 15

[சிவயோகநாயகியை வழிபட்டுத் துதித்தல்]

1319 என்றின்னன பலநற்றுதி யியலார்தமிழ் முனிசொற்
றன்பின்சிவ யோகத்திரு வருள்நாயகி முன்பு
சென்றுற்றவ ளடிமாமலர் சிரமீதுபு கூம்பத்
மன்றற்றுதி யளவில்லன வாகத்துதி செய்தான் 16

1320 இவ்வாறுது திக்தவ்விறை யின்சன்னதி முன்பு
செவ்வாறுதவ ருமாதவஞ் செய்தன்பொடு பன்னாள்
ஓவ்வாவிடை யத்தோனவ ணுறுகாற்புற மதில்வாழ்ந்
தெவ்வாறுநின் றுணர்வேதிய ரினமோடிவை
மொழிவான் 17

1316 குனித்தாடி – வளைந்து கூத்தாடி. பெருவாரி – பெருங்கடல். மலவலி – வினைத்துன்பம்.
1317 உட்கரணம் – அகக்கரணம். இலகா – விளங்கும்.
1318 வெள்ளைப்பொடி – திருநீறு. விடை – ஆனேறு.
1319 இயலார் – இலக்கணத்தால் நிறைந்த. மன்றல் – நறுமணம்.
1320 செவ்வாறு – நன்னெறி. எவ்வாறும் – எல்லாவழியும்.

[அகத்தியர் குருந்தவன அந்தணர்களின் வரலாற்றை வினவுதல்]

1321 பரமன்றிரு வருபங்கொளி பயிலுந்திரு வுடையீர்
திரமொன்றிய நுமதின்செயல் தெரியும்படி யன்ருல்
மரபொன்றுறும் வரலாறிது வாமென்றுரை தருமின்
பெருகன்பினை டென்னப்பல பிரியஞ்சொலி
மறையோர் 18

1322 வளருந்தெளி வுளதங்கிஜ மரபும்மெவை யுஞ்சொற்
றுளதன்குறும் இளனின்பெரி துதவும்புவி யதனேக்
கிளருங்கலி யுகமாகையிற் கெழுவும்புவி மனராற்
றளர்வொன்றிய தெமையாளரன் ருளேது ணேயன்றி 19

[அந்தணர்களின் இடர் அறிந்து இறைவன்வந்து போக்கியருளுவான் என அகத்தியர் கூறல்]

1323 வேரூர்புக வின்றென்றுதம் மெலிவோதின ரந்த
மாருதுயர் தமிழ்மாமுனி மறைவாணர்கள் மொழிகேட்.
டேரூர்கொடி யுடையார்பணி யேயன்றியொன் றில்லா
மாருப்புக முடையீரிடர் வருமோநுமக் கென்றே 20

1324 அராகஞ்செய லறிவும்மரன் அன்றிப்பிறி தில்லீர்
சுரோசம்புவி யுயதென்றுகு றித்தேஇத னுக்கோர்
விரோதம்புரி லவராவிகள் மெலியும்என வோதி
இராகின்றகல் லிசைவோடெழு திச்சாசன மீந்தே 21

1325 கலமேபெரு குவிர்நீவிரிந் நகர்மேவிய நாதன்
பலமேவிய நுப்பாலொரு பழமாமறை யவர்போல்
சிலநாளினில் வெளிவந்திடர் தீர்த்தும்மொடு மருவும்
பலவாகிய கலியாவையும் பயிலப்பெறு வீரால் 22

1321 தெரியும்படியன்ருல் - தெரியுந்தன்மையதாகவில்லே. தருமின் - கூறுங்கள்.

1322 உதவும்புவி - அந்தணர்களுக்கு அளித்த பிரமதேயங்கள். கெழுவும் - ஆளுகின்ற. தளர்வு - நெறிதளர்வு.

1323 மெலிவு - வறுமைத்துன்பம். ஏரூர்கொடியுடையார் - சிவபெருமான்

1324 அராகம் - விருப்பம். சுரோசம் - சுரோசதூர அளவு.

1325 உம்மொடுமருவும் - உங்களோடு உடன் உறைவார். கலி - ஆகமம்.

[அகத்தியர் முனிவர்களிடம் விடைபெற்று மதுரைக்குச் செல்லுதல்]

1326 அதனுற்பல நலனுக்கிட மாவீரென வருளி
மதுராபுரி தெரிசித்திட மனநேர்வது மோதிச்
சதுமாமமறை நகர்வாழிறை தாள்வீழ்ந்துடன்
விடைபெற்
றதிமாதவம் புரிசாலியி னருகோர் சிலநிறுவி 23

[அகத்தியர் ஆக்கிய தடத்தின் பெருமை கூறல்]

1327 தன்னுற்புரி பொய்கைக்குறு தகமேன் மைகள்சாற்றிப்
பொன்னுற்பணி புரிந்தோங்குமிப் பூவெல்லியிவ்
வளவென்
றந்நாற்றிசை யினுங்கற்சில யதுநட்டுறு திகள்சொற்
றுன்னுவெழுந் துயர்கூடல யுற்றேகினன் பொதியில் 24

[அகத்திய தீர்த்தத்தில் மூழ்குவோருறுபயன் கூறல்]

1328 அவர்செய்புனல் தவவெல்லியி னதுகீழ்ப்புற மாகும்
கவருஞ்சுப தினமங்கது கண்டாடுத லுண்டேற்
றவநன்சுப நிதியங்கல தாம்மிஞ்சுமிவ் வியலிற்
செவியின்வழிக் கொளுவோர் புகல்செய்வோர்
துயர்தீர்வே 25

[அகத்தியச் சருக்கம் முற்றும்]



1326 இடமாவீர் – உரியராவீர். மனநேர்வு – விருப்பம். சிலை – தீர்த்தம் நிறுவி. உன்னு – நினைந்து.

1327 தகமேன்மை – தக்க சிறப்புக்கள். சிலையதுநட்டு – எல்லைக்கற்கள்

1328 உண்டேல் – வாய்க்குமெனின். நன்சுபம் – மங்கலம். மிஞ்சும் – மிகும். இயல் – சருக்கம். புகல்செய்வோர் – மொழிவோர்.

வழக்குரைத்த சருக்கம்

[கலி விருத்தம்]

[நைமிசாரணிய முனிவர்கள் சூத முனிவரிடம் வேண்டல்]

1329 மறுவகல் நைமிச வாச ராகிய
உறுவர்கள் சூதரோ டுரைசெய் வார்முனம்
குறுமுனி சிவபுரம் குறுகி யப்பதி
அறுதொழி லாளரோ டறையுஞ் சொல்லினும் 1

1330 தம்மைநே ராகுமோர் தாணு வேயொரு
செம்மைகொள் வேதியச் செல்வ னாகிவந்
துய்மிடர் தவிர்ப்பனென் றுரைத்த னென்றனன
அம்மவிச் செயல்விரித் தறைதி ரீயென 2

[சூதர் குந்தவாணர் அந்தணராய் வந்தருள்புரிந்த வரலாறு கூறத் தொடங்குதல்]

1331 வாதரா யணன்றன்மா ணாக்க னேதுவான்
தீதகல் தவமிகு செல்வர் காளுயர்
பூதலந் தனிற்சிவ புரத்துள் மேவிய
வேதிய ரளவிலா மிகுந்த செல்வராய் 3

[நாடாளும் பாண்டியன் காலஞ்செல்ல அவன் மகன் இளையதனின் அமைச்சன் துணையாக நாடாளுதல்]

1332 தங்கடம் விருத்தியிற் றலைமை பூண்டுல
கெங்கணும் போற்றவாழ்ந் திருக்கும் நாள்தனில்
பொங்கெழிற்றிரு நாடு போற்றுவான்
திங்கள்தன் மரபினோர் செழியன் என்பவன் 4

1329 மறு – குற்றம். உறுவர் – முனிவர். குறுமுனி – அகத்தியர். அறுதொழிலோர் – அந்தணர்.

1331 வாதராயணன் – வியாசமுனிவர். மாணாக்கர் – சூதமுனிவர்.

1333 தந்திர முறைநெறி தழுவி நாட்பல
அந்தமி லரசிய லாற்றி யாக்கைநீத்
திந்திர வுலகினை யெய்தி னனைவன்
பந்தமர் மகளிளம் பருவ மாதலால்

[பாண்டியன் அமைச்சனுகிய கவுமாரன் தீயவன் எனல்]

1334 மந்திரி மகன்கவு மாரன் என்றொரு
வெந்திறற் றீயவன் வேந்தன் மைந்தனுக்
கிந்தநாட் டரசென வியம்பு மோர்பெயர்
தந்துமற் றெவையுந்தன் வசம தாக்கினன் 6

[கவுமாரனின் பண்புகள்]

1335 வெருவருஞ் சொல்லினன் விருப்ப மிக்குளான்
ஒருவருந் தனக்கிலை யொப்பென் றேதுவான்
அருளிலன் உயிர்க்கொலைக் கஞ்சிடான் நலன்
கருதிலன் றீமையே கலந்த நெஞ்சினன் 7

1336 அறப்புறம் யாவையு மருக்கி னன்செயு
முறைத்தொழில் யாவையும் முருக்கி னன்பல
திறத்துள பொருளெலாம் திரட்டி யிட்டினன்
ஒறுத்தனன் குடியெலா முலைந்து சோரவே 8

[கவுமாரன் சிவபுரத்து வேதியர்களின் நிலத்தைக் கவர எண்ணுதல்]

1337 இன்னபல் கொடுமையா லியம்பந் நாட்டினில்
மன்னிவா முயிர்க்கெலாம் வருத்த மூட்டிய
புன்னிலை யோன்சிவ புரத்து வேதியர்
நன்னிலம் விழைநலம் நாளி லோர்ந்தனன் 9

1333 தந்திரமுறை – வேதநூல்முறை (மனுமுறையுமாம்) இந்திரவுலகு – சுவர்க்கம்.

1335 வெருவரும் – அச்சம் தரும். நலன் – நீதி.

1336 அறப்புறம் – தர்மசாலைகள். அருக்கினன் – குறைத்தான். முறைத் தொழில் – வருணசிரமத்திற்குரிய செயல்கள். ஒறுத்தனன் – தண்டித்தான்.

1338 பொன்றிரள் விளைசிவ புரத்து மாநிலந்
தொன்றுதொட் டிருக்கும்பூ சுரருக் கேற்பதோ
என்றுளத் திவறல்வைத் தெவர்க்கு மில்லது
தன்றமர்க் குளதெனச் சாற்ற வுன்னியே 10

[சிவபுர வேதியர்களின் விளைநிலம் யாவும் தன்குலத்தவருடையது என இளவரசனிடம் கூறுதல்]

1339 அரசிளங் குமரனுக் கறிய வோதுவான்
புரவலர்க் கேறரி போலும் மன்னவெம்
மரபினோர் காணிமுன் வளர்கொள் நற்சிவ
புரங்கண் அதைச்சில பூசு ரர்குழாம் 11

1340 தங்களுக் கொருபதி தந்ததா மென்ப
பொங்கு நற்சாசனம் புதுப்பித் தோங்குநற்
றிங்கள்நன் மரபினர் செய்வ தேதென
அங்கவர் ஆட்சிகொண் டார்சின் னாள்தனில் 12

[சுமாரன் தன்னுடைய ஆட்கள் சிலரைவிட்டு அந்நிலங்களை வயப்படுத்த ஏவுதல்]

1341 என்றுபொய் மொழிபல இயம்பித் தன்மனைச்
சென்றுவன் கணர்சிலர் தெரிந்து நோக்கியே
இன்றுநீர் சிவபுரத் தெய்தி யப்புறந்
துன்றிய வேதியர்த் துரந்து போக்கியே 13

1342 இணையகல் விளைநில மெவையு நம்மிதென்
றணைபல குறிகண் டாங்கு வைகியப்
பணைவள மெவைகளும் படுத்து வீரெனக்
குணமகல் கொடியவன் கூறி யேயினன் 14

1338 இவறல் – லோபத்தன்மை. தன்தமர் – தன் சுற்றத்தார். உன்னி – கருதி.
1339 ஏறரி – அரியேறு (சிங்கம்). காணி – காணியாட்சியாகிய விளைநிலம்
1341 வன்கணர் – அருளற்றவர்கள். துரந்து – நீங்கி.
1342 இணையகல் – ஒப்பில்லாத. குறி – அடையாளம். வைகி – செய்து. பணை – பண்ணை (வயல் நிலம்) படுத்துவீர் – அகப்படுத்துங்கள்.

[அவ்வன்கண்ணர்கள் சென்று சிவபுரவேதியர்களை அச்சுறுத்தி யகற்றுதல்]

1343 அன்னதே செய்துமென் றந்த மானவர்
தன்னிகர் சிவபுரத் தணுகி வேதியர்
முன்னுறக் கொணர்ந்துவன் முரணி யற்றியே
இந்நிலத் தாசைவிட் டேகு மென்றனர் 15

1344 அவர்புரி கடுந்தொழிற் காற்ற கில்லராய்ச்
சிவபுரத் துறையரன் திருவு ளச்செயல்
எவரறி குவர்நமக் கெய்துமோ பொலாக்
கவர்நெடுந் துயரெனக் கலக்கங் கொண்டனர் 16

[அந்தணர்கள் கவுமாரன் ஆட்களுக்கு அஞ்சி நீங்குதல்]

1345 மதிக்குல முதல்வ னுமிள னேயெமக்
குதவிய நிலமிதை யொருவர் கொள்வது
தகுதியே தெனிலுரை தருதற் குள்ளதோ
விதிவழி யிதுவென விலகி நீங்கினர் 17

[கவுமாரனுடைய ஆட்கள் பழைய சாசன எல்லைக் கற்களை நீக்கிக் கவுமாரன் மபிரனர் பெயர்களைப் பொறித்து நாட்டுதல்]

1346 அறவுரு வாமறை யவர்கள் போனபின்
மறவடி வாங்கவு மார னேவலர்
பெறுநில மறையவர் பெயரிற் றீட்டிநட்
டுறுசிலை களைப்புறத் தொதுக்கி நீக்கியே 18

1347 வன்கண னுங்கவு மாரன் முன்னவர்
தன்பெயர்ச் சிலைகளைத் தாபித் தன்னவர்
முன்பெறு காணிபோல் முழுதும் வவ்வியே
யன்பறு மக்கொடி யவனுக் குய்த்தனர் 19

1346 மானவர் – கொடியவர். முரண் – பொய்வழக்கு. இயற்றி – கூறி.
1344 கவர்நெடுந்துயர் – கவலைதரும் பெருந்துன்பம்.
1346 நட்டுறுசிலை – கல்வெட்டுக்கள். புறத்தொதுக்கி – பெயர்த்தெறிந்து.
1347 தாபித்து – அமைத்து. வவ்வி – கைப்பற்றி.

[கவுமாரன் மகிழ்ச்சியும் வேதியர்சிந்தையும்]

1348 அந்தமா பாவியும் அவைகொண் டப்புரஞ்
சொந்தமா வெண்ணினன் மெல்லே வேதியர்
இந்தநாட் டினிலிவன் இருக்கும் மட்டுநம்
சிந்தையவ் வூர்வழி செலுத்தல் தீதென 20

[வேதியர்கள் பொன்னிநாடேகி உறைதல்]

1349 பொன்னிநாட் டெய்தியோர் புரத்தில் யாவரும்
மன்னினர் குருந்திறை வருக்குப் பூசனைக்
கென்னசெய் வோமென இரங்கித் தங்கள்தம்
முன்னவி நாற்றியங் குறுஞ்சின ளுள்தனில் 21

[இறைவன் மறையவர்துயர் போக்க வேதியர்உருத் தாங்கிவரல்]

1350 எத்திசை யுந்தொழு தேத்து குந்தமாம்
வித்தக ரவர்துயர் மீட்க வேயுளம்
வைத்தொரு வார்த்திக மாகும் வேதியர்
ஒத்தொரு திருவுரு வுவந்து கொள்வரால் 22

[சிவவேதியரின் வடிவப் பொலிவு வண்ணனை]

1351 கூனுற முதுகொரு கோல்கைத் தாங்கலாத்
தோனரை திரையொடு துவண்ட மேனியாய்ப்
பானிறத் தெகினன்முன் பார்க்கொ ணுமுடி
மேனிரைக் குடுமியு மிளிர்ந்து லாவர 23

1352 சாத்துடை யரையினிற் சரிந்து தோன்றிட
நாத்திற மலதுடல் நடுக்கங் காட்டிடப்
பாத்திர மிவரெனும் பண்பு தோன்றிடப்
பூத்தொளிர் நீற்றணி பொலியு மெய்யராய் 24

1349 பொன்னிநாடு – சோழநாடு. முன்னவிநாற் – யாககுண்டங்கள் அமைத்து.

1351 எகினன் – அன்னக்கொடியை உடைய பிரமன்.

[சிவவேதியர் மறையவர்களை அணுகிக்கூறல்]

1353 அறக்குழ வுருவுகொண் டமல மூர்த்தியன்
புறம்பணி புரிசிவ புரத்தை நீத்துறு
மறைக்குல வேதியர் வதியு மூர்தனிற்
றிறத்துட னணைந்தவர்த் தெரிந்து கூறுவார் 25

[சிவவேதியர் உங்கள் துயரத்தைப்போக்க வந்துள்ளேன் எனக் கூறல்]
[தரவு கொச்சகக்கலிப்பா]

1354 அய்யர்காள் நும்பதியோ ரருங்கேடன் ருன்கவர
வெய்யவவன் றனக்கஞ்சி மேவியீ ரிப்பதியில்
எய்தியிருந் தனிர்பலநாள் என்றெவருஞ் சொலக்கேட்டு
மையலுரு வோருறுதி வழங்கவணைந் தனமென்றார் 26

[மறையவர்கள் உளங்கசிந்து சிவவேதியரை வினவுதல்]

1355 சுருதிபல முகமாகத் தொடர்ந்தரற்றுங் கிழமுதியோர்
அருகினில்வந் தோதுவதை யணைவருங்கேட் டுளமுருகித்
திருமறையோர் தங்கள்குல தெய்வமெனப் போந்தருள்நீர்
தருமுறுதி யாததனைச் சாற்றுவீ ரெனமொழிவார் 27

[எமக்கும் ஒருபங்குதருவீரேல் உங்கள் நிலத்தை மீட்டளிப்பேன்
எனச் சிவவேதியர் கூறல்]

1356 உம்மிலொரு குடியாக ஓங்கியநுஞ் சிவபுரத்தில்
எம்மைநிகர்ந் தோர்பங்கீந் திடநீர்வல் லீராகிற்
செம்மைபெருங் கவுமாரன் தீங்கினைக்கூ டற்கோமுன்
விம்மவுரைத் தவற்செயித்து மீட்டாளிப்பம்
நிலமென்றார் 28

1353 அறக்குழுவுரு – அறத்தின் வடிவமாகிய அழகிய உருவம். வதியும் – வாழும்.

1355 சுருதி – வேதம். ஓதுவது – கூறுவது.

1356 விம்மி – விளங்க.

[மறையவர்கள் அவர் மொழிகேட்டுப் புன்னகை புரிந்து கவுமாரன் தன்மையைக் கூறுதல்]

1357 அவ்வசனம் முதியமறை யந்தணரு ரருள்புரியச்
செவ்வியநன் னெறியடையும் திருமறையோ ரதுகேளா
இவ்வகையெங் ஙனநிகந்தா ரிவரெனப்புன்
னகையினராய்க்
கவ்வையிலீர் நீர்விருத்தர் கவுமார ரெனகொடியன் 29

1358 அவன்கொடுமை தெரியாம லரைந்தனிரெம் மூர்முழுதும்
கவர்ந்தெழுந்தன் னெனிழைத்த கடுந்துயர்க்கோ
ரளவின்ரூல்
பவந்தொலைக்கும் பருவத்தின் படிவத்தீர் நீரவன்முன்
உவந்தடுத்தல் தானுமரி துமக்கேனிவ் விருப்பென்ரூர் 30

[எம்மைக் கிழவனென நினைத்தீர் போலும் என் ஆற்றலைக் கேண்மின் எனச் சிவவேதியர் கூறுதல்]

1359 வளர்வேணி முடிமறைத்தோர் மறையவனுய்
உடல்திரங்கும்
தளர்பருவத் தொடுமணைந்த தனிமுதலன்
னேர்மொழிகேட்
டுளமருவும் பெருந்திறத்தால் உரைக்கின்ரு
ரெம்மையொரு
கிழமறையோ னெனமதித்தீர் கிளர்த்துதுமெந்
திறங்கேண்மின் 31

1360 முப்புவனத் தினுமெமைப்போல் முற்றுமுணர்ந்தோ
ரரிதாம்
விப்பிரர்கா ளோர்மொழியாம் விதிக்கிலதைப் பேதிக்க
எப்பெரியோ ரினுங்கூடா தெங்கணுநா மாயிருத்தும்
தப்பகலக் கோலியதே சாதிக்க வல்லேம்யாம் 32

1360 பேதிக்க - மாற்றியமைக்க. கோலியது - கூறியது, எண்ணியது.

[சிவவேதியர் என்னுடன் வாருங்கள் பாண்டியனிடம் வழக்காடி வெற்றிப்பெற்று நும் துயர்களைவேன் என அழைத்தல்]

1361 பெருகவுரைத் தாவதெவன் பின்னறிய லாமினினீர்
வெருவறவீர்ந் தெம்முடனே மேவுவிர்தென் கூடலிலோர்
கரிசுமகீனயா, நெறிசேர் கவுரியன்முன் கவுமாரன்
திருவிலங்கொள் கொடுமையெலாம் செப்பிநுங்கா
ணியைத்திருப்பி 33

1362 தந்திடுவம் யாமதன்பின் தாருமொரு பங்கெமக்கென்
றந்தணனுய் வந்தகுரும் தண்ணலுரைத் தனரெவரும்
சிந்தைமகிழ்ந் தவர்மொழியைத் தேர்ந்தெளிய ரல்லரிவர்
எந்தவிதத் தினுமுடிப்பர் எண்ணியதென் றுளங்கருதி 34

[அந்தணர்கள் உளந்தெளிந்து ஒப்பி சாசன ஓலை முதலியவற்றுடன் அவருடன் புறப்படல்]

1363 அண்ணல்குருந் தேசரென அற்புதமா யிப்புறத்தில்
நண்ணியமா மறைமுனிவீர் யாமுந்தே வர்பணிபூண்
டெண்ணவழி நிற்பதினி எங்கள்கட வுமெனவப்
புண்ணியரெம் மொடுபயணம் புறப்படுமென் ருரவரும் 35

1364 தானசா சனமுதல்தா மெவ்வெவையுங் கொண்டுமறை
யானமா முனிவரொடும் நண்ணினரன் ஞேருடனே
கானிலதள் ளாடவொளிர் கைத்தண்டின் றன்பலமாய்
மீனவன்கூ டற்பதியின் மேவினர்பூ ரணமுதியோர் 36

[சிவவேதியர் பாண்டியன் அரண்மனை வாயிலில் வந்துநின்று நீதிகேட்டு ஓலமிடல்]

1365 வந்தரசன் திருக்கோயில் மணிவாயில் சேர்ந்தரனே
கந்தரபாண் டியனுகிச் சுடர்மணிமா முடிதாங்கி
அந்தமிலா வரசுபுரிந் தருட்செங்கோ லினைநடத்தும்
இந்தவள நாட்டிலறம் ஏகிற்ரே விந்நாளில் 37

1361 வெருவறவீர்ந்து – அச்சத்தை முழுதும் நீக்கி. கரிசு – துன்பம்.
1364 தானசாசனம் – அகத்தியரளித்த (புருரவன் தந்த) சாசனஓலை.

1366 செழியர்திருக் குலமுதலோர் செங்கோல்கோ டிற்ருலை
பொழியவெழு மோமுகில்வான் பூமகளெவ் வாறுறைவாள்
விழைதருமேர் வுழுகிலமுண் மிகுமோபோ மோமிடிகள்
எழில்மட வார்க்குளவாமோ வியங்குமோ
மறையொழுக்கம் 38

1367 நடுவிகலியோ விங்ஙகரில் ஞாயமிகல யோவருளன்
புடையரிகல யோவறநூ லோதியுணர்ந் தோரிகலியோ
கொடியரலால் வேறிகலியோ கோவிகலியோ நீதிசொலும்
படியொருவ ரிகலியோவென் பகர்வன்முறை
யோவென்பார் 39

1368 கூடலர சேமுறையோ கொற்றவர்கோ வேமுறையோ
நாடரிய வைகைவள நாடமுறை யோநறிய
தோடவிழ்வேம் பணிமீனத் துவசமுறை யோவெவர்க்கும்
வீடுதவுந் தென்பொதிய வெற்பமுறை யோமுறையோ 40

[முறையிடும் சிவவேதியர் தோற்றங்கண்டு யாவரும் மனங்கனிதல்]

1369 இன்னபல வாற்றினு லியம்பியய்ய கோவென்றே
பன்னரும்விப் பிரரொடுமால் பண்டறியா முதுமறையோர்
மன்னவன்வா யிலினெருசார் வாய்ந்தின்று முறையிட்டார்
துன்னினரெல் லோருமண்ணல் தொல்லுருக்கண்
டுளங்கரைந்தார் 41

[வாயில் காவலர் சிவவேதியரை உற்றது வினைதல்]

1370 வந்தவர்க ளடிவணங்கி மறைமுதியீர் யாவருமக்
கிந்தவின லுளவாதற் கேதியற்றுந் தீயரெனச்
சிந்தைதளர்ந் திடவேண்டாஞ் செப்புமினென் ருர்முதிய
அந்தணர்வே ருருவரைச்சொற் ருவதெவ
னெம்விதிகாண் 42

1366 கோடிற்ருலை – வலையுமானல். முகில் – மழை. விழை – விளைவு ஊண் – உணவு. மிடிகள் – வறுமைகள்.

1368 தோடு – மலரிதழ். பணி – மாலை. துவசம் – கொடி. வீடு – விடுதலை.

1370 இயற்றும்தீயர் – காரணம் என்ன? இயற்றிய கொடியவர் யார்?

[சிவவேதியரின் முறையீட்டைக் காவலனுக்கு வாயிலார் தெரிவித்தல்]

1371 என்றனரன் ஞேரெவரும் ஏகிவிரைந் தடல்வழுதி
தன்றிருமுன் னுறவணங்கித் தரியலர்கள் மகுடநிரை
வென்றிமத கயமிடற விடுத்தமரும் விறல்வேந்தே
உன்றிருவா யிலின்புறத்தின் ஒருபெரிய மறைமுதியோர் 43

1372 அந்தணர்பல் லோருடன்வந் தய்யகோ வென்றுமுறை
தந்தரற்று கின்றனர்மெய் தசையொடுங்கும் பெரியரெழில்
இந்தவுல கினிற்கண்ட தில்லையவர்தம் செயலுரைக்கிற்
சுந்தரநா யகரென்று சொல்லலாஞ் சுடர்வேலோய் 44

[பாண்டியன் அவரை அழைத்துவரப் பணித்தல்]

1373 குறைபெரிது முடையவர்போற் குலைகின்றார் வரவழைத்து
முறைபுரிய வேண்டுமென மொழிந்தனர்கூ டற்கோமான்
அறைதருமப் பெரியோர்க்கிங் கியாவரிழைத் தாரிடரென்
றிறைதரியா தழைமினென ஏவினனே வலர்புகுந்தார் 45

[அவரை அரசனிடம் அழைத்துச் செல்லுதல்]

1374 மணிவாயிற் புறத்தரிய மறையவரோ டுறைதருநூற்
றுணிவாகுங் கிழமறையோர்த் தொழுதடிக ளெம்மிறைவன்
பணியால்வந் தனமழைக்கப் பரிவொடெழுந் தருளுகென
அணியாகும் வேதியரோ டணைந்தனர் மீனவன்முன்பு 46

[வேதியர் தோற்றத்தைக்கண்டு மன்னன் வணங்கி வரவேற்று முகமன்கூறல்]

1375 அரியணைமே லிருந்தருள்கோ அண்ணல்வர
விணைக்காணு உப்
பரிவொடெழுந் தெங்குமிலாப் படிவினைக்கண் டுளமுருகிக்
கரமலர்சென் னியிற்குவியக் கடிதெதிர்சென் றடிகள்தொழு
தெரிகதிர்மா மணித்தவிசீந் திருத்திமுக
மன்மொழிவான் 47

1371 அடல்வழுதி - பகைவரை அழிக்கும் பாண்டியன். தரியலர் - பகைவர். மதகயம் - மதயானை. இடற - தேய்த்தழிக்க.

1373 குலைகின்றார் - வருந்துகின்றார். இறைதரியாது - சிறிதும் காலம் தாழ்த்தாமல்.

1375 காணுஉ - கண்டு. படிவு - படிவம். தவிசீந்து - இருக்கை அளித்து

1376 தேவரீர்க்கு மொருவர்தீங் கிழைப்பாரோ சொல்லுமெப்
பாவிபுரிந் தான்வருத்தப் படுவதோ திருமேனி
நோவதோ திருவுள்ளம் நுமதுதெரி சனமெனக்கின்
ரூவதா லெத்தவமுன் பாற்றினனே யானென்ரூன் 48

[வேதியர் அரசனை வாழ்த்திக் கூறுதல்]

1377 வேந்தனுத வியதவிசின் மிக்கவுடுத் திரள்நடுவிற்
காந்திதரும் மதியமருங் காட்சியின்வே தியர்நடுவிற்
போந்திருந்த மறைமுதலும் புரவலனுக் காசிபல
சாந்தமொடு கூறினர்பின் தந்தனர்மற் ரேராசி 49

[வேதியர் அரசனுக்கு அரிசியளித்து வந்த வழக்கினைக் கூறத் தொடங்குதல்]

1378 ஆசிபல பெற்றுடன்வெள் ளரிசிதரக் கையேற்றுத்
தேசுடையீர் நுமதுகுறை செப்புமினென் ரூன்வேந்தன்
பூசொளிநீற் றணிவிளங்கும் பூசுரர்சிந் தாமணியாம்
மாசகலும் பழமறையோர் வழக்கெடுத்து மொழிகின்ரூர் 50

1379 பொதுநீக்கி யறம்பெருக்கிப் பூவுலகம் தனிபுரக்கும்
மதிகுலநன் மரபின்வரு மன்னவரே நேநீகேள்
விதியொடுமா லடிமுடியும் மேவியுணர் வரியவர்வாழ்
பதிகளின்முந் தினதாகப் பகர்தருநற் சிவபுரம்யாம் 51

[திருப்பெருந்துறையின் பெயர்ச் சிறப்புக்கினை வேதியர் கூறல்]

1380 அப்பதிக்குத் திருப்பெயர்கள் ஆதிகயி லாசமென்றும்
தப்பகலும் துவாதசாந் தம்என்றும் மெய்யரெனும்
விப்பிரர்கள் நெருங்குசதுர் வேதபுர மென்றுமருள்
வைப்பெனுநற் சிவயோக வனமென்றும் ஆண்டகையே 52

1377 உடுத்திரள் – விண்மீன் கூட்டம். மதி – சந்திரன். சாந்தம் – அமைதி.

1378 ஆசி – வாழ்த்து. வெள்ளரிசி – மங்கல அரிசி. தேசு – ஒளி. சிந்தாமணி – முடிமணி.

1379 விதி – பிரமன். மால் – திருமால். பதி – புண்ணியத் தலங்கள்.

[அத்தலத்தின் மகிமையை விளக்குதல்]

1381 ஏத்தரிய பவுத்திரமா ணிக்கமென்றும் ஏடவிழ்பூ
மாத்திகழும் திருக்குருந்த வனமென்றும் பலநாமம்
கூத்தரெனும் பரம்பொருளே குந்தமெனும் படிவாகும்
சீர்த்திகொளத் தலமுறையும் சிலையெல்லாம் சிவலிங்கம் 53

1382 புனலெல்லாஞ் சுரநதியப் புரியுளரெலாங் கணங்கள்
இனியவருந் தவமதனி லியற்றியுயர் கதியடைந்தோர்க்
குனியுரைக்க வளவுபடா வோங்குகுரு நாதகுருவாய்ப்
பனிவருமா மலரோற்குப் பண்டுரைத்தா ருபதேசம் 54

[பிரமன் அத்தலத்திற்குப் பூசகராய் எங்களை அமைத்தான் எனல்]

1383 அத்திசைமா முகனெடுநாள் அதுதனையே பூசித்துப்
பத்தியொடும் பரம்பரையாய்ப் பரிந்தருச்சித் தேத்திவரச்
சித்தமகிழ்ந் தெம்மரபோர்ச் சிருட்டிபுரிந் தப்பதியின்
வைத்தனனவ் வழிவழியா வளருமருட் குருந்தரனே 55

[புரூரவ மன்னன் அந்தணர் முந்நூற்றுவர்க்கும் அளித்த நிலக்கொடையைக் கூறுதல்]

1384 பூசித்து வந்தனம்முன் புரூரவா வெனுமுமது
மாசற்ற குலதிலகன் வந்தெமைநோக் கிப்பரிவால்
ஆசற்ற தொகைமுந்நூ றாருமெமக் கப்பதியைப்
பூசித்தங் கருந்தான பூருவமதாய்க் கொடுத்தான் 56

[அதுமுதல் யாம் பரம்பரையாய் அந்நிலவளங்களை அனுபவித்து வருகிறோம் எனல்]

1385 மீனவர்தங் குலமுதலாம் வேந்துதவும் செழுமனையும்
தானசா சனமாகத் தருநிலமுங் கைக்கொண்டு
மானமுறும் பரம்பரையாய் வந்தனம்பன் ஞாலிதுநாள்
ஈனமுறு வுன்னமைச்சன் எச்சனுங் கவுமாரன் 57

1381 கூத்தர் – சிவபெருமான். படிவு – திருவடிவம். சிலை – கற்கள்.
1382 சுரநதி – தேவகங்கை. கணம் – சிவகணங்கள். உனியுரைக்க – எண்ணிச்சொல்ல.
1383 சிருட்டிபுரிந்து – படைத்தருளி. வைத்தனன் – வாழச்செய்தான்.
1384 பரிவால் – அன்பால். ஆசு – குற்றம். தானம் – கொடை. பூருவம் – முழுமை.
1385 மானம் – சிறப்பு. ஈனமுறு – தாழ்மையுற்று. எச்சன் – கொடியன்.

[கவுமாரன் எங்களை வஞ்சித்து நிலங்களைக் கவர்ந்து கொண்டான் எனல்]

1386 கனிதருநற் றருவைவளை கண்டகம்போ லுன்வாயிற்
கினியனலா னட்பாவி எங்கள்நிலப் பொலிவுணர்ந்து
தனியறநூற் றெளிவறியா தாளைகி யெமைவிழிக்கட்
புனலுதிர வொறுத்தயலூர்ப் போக்கிநிலந்
தனைக்கவர்ந்தான் 58

1387 அன்னவனின் கொடுந்துயருக் காற்றகிலே மேயாகிப்
பொன்னிவளந் தருநாட்டிற் புக்கவண்வை கினஞ்சிலநாள்
நின்னுடைய பெருஞ்சீர்த்தி நிலைநின்தரைப்ப மிதனையென
மன்னவவன் தனமைமது வருத்தமெலாந் தீரென்றார் 59

[பாண்டியன் அவற்றைக் கேட்டு அஞ்சி வாருந்தி அமைச்சனை அழைத்துவர ஏவுதல்]

1388 அரசனது முழுவதுங்கேட் டஞ்செவியிற் கைபுதையாத்
திருவளரென் செங்கோலின் றிறல்நன்று லென்றீனிநீர்
வெருவலிர்தீ ரத்துலக்கி விளம்புவனென்
றுரைத்தமைச்சன்
தருகவுமா ரனையிங்குத் தருகவென ஓதினனால் 60

[அரசன் அமைச்சனை வெகுண்டு வினவுதல்]

1389 செழியர்குல பதிஏவச் சென்றழைத்தோ ருடன்றீய
பழுதியற்றுங் கவுமாரன் பார்த்திபன்முன் வந்துதொழ
விழியுளையா விவர்நிலங்கொண் டின்னல்புரிந்
தெமக்கென்றும்
வழுவணையப் புரிவித்த வகையெவன்நீ புகல்கென்றான் 61

[அமைச்சன் வேதியர் அடாது மொழிகின்றார் எனக் கூறி அவ்வூர் முதியர்களை அழைத்து விசாரிக்க வேண்டுதல்]

1390 அரசர்களே றேயிவர்சொல் வதுசரத மாகவுளங்
கருதலெவன், முனமெமது காணியா மவ்வூர்விப்
பிரிவர்சின் னளிலொரு பெரும்பதிதந் தாமெனப்பொய்
விரவவுரைத் தெடுத்தாண்டார் வீணிலின லுழக்கின்றார் 62

1386 கண்டகம் – முட்செடிகள். தனி – சிறப்பு. ஒறுத்து – துன்புறுத்தி
1388 வெருவலிர் – அஞ்சாதீர். தீரத்துலக்கி – நன்குவிசாரணைசெய்து.
1389 விழிவுளையா – கண்சிவந்து. வழுவணைய – குற்றம்வந்துபொருந்த.
1390 சரதம் – உண்மை. வீணிலினலுழக்கின்றார் – வீணைகத்துன்புறுகின்றார்.

[அரசன் அவ்வாறே ஊர் முதியர்களை அழைத்து வழக்கினைத் தீர்க்கக் கூறுதல்]

1391 அறநிலைதேர்ந் துணர்முதியோ ரவர்சிலரை யழைத்தந்த
முறையினைச் சொற்றுற்சர தமொழிகுவா ரென்றனனவ்
விறையுமவர் பலரையழைத் திருத்திவழக் கிதனிநிசம்
பெறுவகைதேர்ந் துரைமினெனப் பேசினன்செங்
கோலரசன் 63

[வேதியர் புரூரவர் அளித்த சாசன ஓலையை அகத்தியர் தரப்பெற்றிருந்தனை நடுவர்களிடம் அளித்தல்]

1392 நடுநிலைதேர்ந் துணர்முதியோர் நாடியிரு வோர்மொழியும்
குடிபெறுசா சனமுளதேற் கொணர்மினென வுரைசெய்தார்
புடையமருங் கிழமறையோர் புரூரவரப் பொதியமுனி
தடையகல வெமக்குதவுஞ் சாசனமீ தென்றளித்தார் 64

[அமைச்சன் நிலம் எங்கள் அனுபவத்தில் உளதெனக் கூறல்]

1393 மன்னவன்மு னவையிரண்டும் வாசித்தந் துணரெவரும்
அன்னிலைதேர் கவுமாரன் ஆட்சியெமக் கல்லதுவே
றின்னமுறி நறுக்கென்றான் எவருமவன் மொழிகேட்டுச்
சொன்னதுவும் வழக்காகும் தொடர்வுளதே
லுரையென்றார் 65

1394 தொடர்பெமது மரபினர்கள் தொன்றுதொடு தாமாட்சி
நடுசிலையு மவர்பெயரின் நாட்டினதுண் டவ்வூரில்
விடலருபல் குறிகளினம் வேண்டியதுண் டென்றனனற்
றிடமருவு முதியமறைத் தேசுருவ முடையோரும் 66

[வேதியர் பழையவற்றை நீக்கிப் புதிய கற்களை நாட்டியுளதன்றி வேறு சான்றுகளிருப்பின் சாற்றுகவென அமைச்சனிடம் கூறல்]

1395 எமதுமர பினர்பெயர்முன் பெழுதிநடுஞ் சிலையகற்றித்
தமதுகுடிப் பெயர்வரைந்து தாபித்தா னிப்பொழுதில்
அமைவதல வறிகுறியுண் டாமெனிற்சொற் றிடப்பணிமின்
றமைநிகர்வீ ரெனவவரும் சாற்றுகவென் றனரவனும் 67

1391 இறை – அரசன். பேசினன் – கட்டளையிட்டான்.

1392 நாடி – ஆராய்ந்து. பூரூரவனளித்ததை அகத்தியர் சாசனமாகக்கொண்டு ஓலையென்று அளித்தனர் என்க.

1394 ஆட்சி – அனுபவம். நடுசிலை – கல்வெட்டு.

[வேதியர் தாம் சில சான்றுகளைக் கூறுதல்]

1396 அவ்வூரி னெல்லையினி லறுபதுபாகத் தளவு
செவ்வியமண் கீழ்ந்தெடுக்கில் செழும்புனலுண் டாகுமுமக்
கிவ்வியல்பு தோற்றுவிப்பே னெல்லாரனனத் தொல்லோனைக்
குவ்விலுள தாநான்கு கோட்டுமண்டோண் டிற்புதுநீர் 68

[நடுவரும் அரசனும் வேதியர் கூறியபடி நிலத்தை
அகழ்ந்துகாண ஒருப்படல்]

1397 என்றனர்வேந் தனுமவையி லிருந்தகரு மச்செயலின்
வென்றவர்க்கே காணியென விளம்பினர்விப் பிரரெவரும்
சென்றுகிழ மறையவரைச் சேர்ந்தறியா தென்புகன்றீர்
ஒன்றியநீர் சொன்னபடிக் குண்டாமோ புனலென்றார் 69

[பிற அந்தணர்களுடைய அச்சத்தைப் போக்கித்
தான் கூறியபடியே நிகழும் எனல்]

1398 திருந்துமறை யவர்பயந்து செப்புதல்கேட் டெம்மிறைவர்
வருந்தமனம் நீவிரொரு மாற்றமுரைத் திடவேண்டாம்
பொருந்துவகை யாவருக்கும் புகன்றபடி யாங்காட்டிக்
குருந்திறைவர் தம்மருளாற் கொண்டுமுடிப்
போமென்றார் 70

1399 விதுமவுலி மறைத்துவரும் விருத்தருரை கேட்டவர்கள்
இதுவுமொரு திருவிளையாட் டெதுவருமோ வென்றவரும்
மதிமயங்கி நின்றனர்கள் மன்னவனச் செயல்தெரியப்
பொதுவர்சிலர் தமைக்கூட்டிப் போமினென ஏவினனால் 71

[எல்லோரும் உண்மை காணப் புறப்படல்]

1400 அமைச்சன்மகன் கவுமாரன் அடுத்தசெய லிதனிலிவர்
தமைக்கடிவ னெனவுளத்திற் றருக்கெழச்சென் றனனன்கலங்கா
துமைக்கொருபங் களித்ததிரு வுருமறைத்து வரும்பெரியோர்
எமக்கிவனே விடையமென எழுந்தனர்விப் பிரருடனே 72

1396 கு – பூமி. கோட்டுமண் – மண்வெட்டியால் எடுக்கும் அளவு.
1399 விதுமவுலி – சந்திரகூப்புனைந்துள்ள சடைமுடி. பொதுவர் – நடுவர்.
1400 கடிவன் – வெகுண்டு தண்டிப்பான்.

[அமைச்சன் தோண்டிய இடத்தில் நீர் ஊற்று வருமாறு காட்டுமின் என வேதியரைக் கேட்டல்]

1401 வந்துசிவ புரத்தணைந்தார் மன்னவனே வலிற்புகுந்தோர்
சிந்தைமகிழ்ந் திருவரும்நீர் செப்பியவப் படிகாட்டித்
தந்திடுமின் எனவமைச்சன் தரும்புதல்வன் மறையவரை
முந்தவறி வித்திடநீர் மொழிமினெ அவர்புகல்வார் 73

[சிவவேதியர் அறுபத்தாறு தீர்த்தங்களையும் பொங்கிஎழ எண்ணுதல்]

1402 மறையவர்தம் தவம்பழுத்து வந்ததென வருமுதியீர்
இறையவையில் மொழிந்தபடி எம்முன்முன் நீர்காட்டிக்
கறையகலிற் நிலமுழுதுங் கைக்கொளுமென் ருருடனே
குறைவிலறு பத்தாறு கோடிதீர்த் தங்களையும் 74

[பணியாளரை நிலத்தை யகழ்ந்து சோதிக்க ஏவுதல்]

1403 சிவபுரமுற் றும்பிரவே சிக்கவெனத் திருவுளத்தில்
உவமையிலா னுன்னினன்வர் துற்றெழுந்த தக்கணமப்
புவனபதி யேவலரைப் புராணமறை முனிநோக்கித்
துவர்நிலமற் றிதைநீரே சோதிப்பீ ரென்றுரைத்தார் 75

[நிலத்தை வெட்டிய இடந்தொறும் நீர்குமிழியிட்டுப் புறப்படுதல்]

1404 இட்டமுட னேதியவா றேபுரிவ மெனச்சிலரை
விட்டனர்மண் வெட்டுமென வெட்டினர்கள் வெட்டியமண்
கொட்டுவழி யேகுமுளி கொண்டுகுதித் தெழுந்ததுநீர்
தொட்டவிட மெங்கணுநீர் தோன்றுதல்கண் டாரெவரும் 76

[நடுவர் வியந்து கவுமாரனே நீ தோற்றாய் எனல்]

1405 அற்புதமுற் றேர்க்கவுமா ரனைநோக்கி நீயுரைத்த
சொற்கிட மெங்கினியுளது தோற்றனைநீ மறைமுனிவீர்
நெற்குவையி னெடுநிலமும் நீரேகைக் கொண்மினெனப்
பற்றெடுசொற் றேகினர்கள் பார்த்திபனு ணையைநிறுவி 77

1402 இறையவை – அசன் அவை. குறைவு இல் அறுபத்தாறு.
1403 புவனபதி – அரசன். துவர்நிலம் – உப்புமண்.
1405 நெற்குவையினெடும் – விளைந்த நெல்லோடும். நிறுவி – நிறைவேற்றி.

[சிவவேதியர் தாங்கருதியது முடிந்ததென அந்தணர்களிடம் கூற அவர்கள் மகிழ்ந்து கொண்டாடுதல்]

1406 துன்மதிசேர் கவுமாரன் தோற்றனனென் றுளங்கருகி
அந்நிலையிற் பெயர்ந்தகன்று னப்பதியின் நசைநீங்கி
மன்னியவ னிலைதெரிந்த மறையவர்முன் கிழமறையோர்
சொன்னபடி யாமுடித்தோம் துயர்விடுமி னினியென்றார் 78

[இச்சருக்கத்தின் பயன் கூறல்]

1407 அருமறையந் தணரவரும் அடிகளென வரும்பெரிய
திருமுனிவ ரடிவணங்கிச் சிறந்தனரிச் சரிதமிதை
உருகியவன் பொடுகேட்போர் ஓதுமவர் பகையகன்று
கருதியவெல் லாஞ்சேர்ந்து கண்ணுதல்பா தஞ்சேர்வார் 79

[வழக்குரைத்த சருக்கம் முற்றும்]

1407 கண்ணுதல் – சிவபெருமான்.

ஒதுவித்த சருக்கம்

[கலித்துறை]

[சிவவேதியர் அந்தணச் சிறுவர்களுக்குக் குருவாயினமை கூறல்]

1408 மால யற்கறி வரியவ ரொருமுது மறையோர்
போலு ருக்கொடு வழக்கின்வென் றிடுசெயல் புகன்றேஞ்
சீல மிக்கவம் மறையவர் சிறுவர்க்குக் குருவாய்
நூலு ணர்த்திய வருட்டிறம் அறிந்தவா நுவல்வேம் 1

[முனிவர்கள் விரும்பிக் கேட்டல்]

1409 என்று கூறுதல் கேட்டுளம் வியப்பொடு மிறைஞ்சி
நன்று நன்றென முனிவரர் யாவரும் நவில்வார்
குன்ற வில்லிதன் அருட்செயல் யாவரே குனிப்பார்
வென்றி மாதவ வருளெனச் சூதனும் விரிப்பான் 2

[அருமறையோர் சிவவேதியரைப் போற்றி மகிழ்தல்]

1410 மாறன் முன்பெமொ டருமறை முதியராய் வழக்கிட்
டுறு நீரரி தாகுநம் மூரினீர் உதவி
வீறி லாக்கவு மாரூ ரென்றுநம் விருத்திக்
கீறி லாவகை புரிந்தன ரென்றுளங் களித்தே 3

1411 அந்த ணாளர்க ளெவர்களும் அகமகிழ் கூர்ந்து
தந்த மேற்றுகில் தாங்கிநின் ரூர்த்துரை தழும்பச்
சிந்து மூழ்கிய நிதிகரி வாய்க்கனல் திரும்பி
வந்த தாமென வழங்கினர் நிலமென மகிழ்ந்தே 4

1408 சீலம் – ஒழுக்கம். நூல் – வேதாகமங்கள்.

1409 குன்றவில்லி – சிவபெருமான். குனிப்பார் – ஆய்ந்தறிவார்.

1410 ஊரினீருதவி – திருப்பெருந்துறையில் நீர்வளஞ்செய்து. விருத்தி – தொழில்.

1411 மேற்றுகில் – மேலாடை. தாங்கி – கையில்தாங்கி. கரிவாய்க்கனல் திரும்பி வந்ததாமென – கரியினிடத்து நெருப்பு மீண்டும் வந்தமை போல.

1412 பூசு ரர்த்தவ முனிவரர் பாற்புகுந் திறைஞ்சி
யேச லற்றுயர் வளமெலா மிழந்துயாம் புகுந்த
தேச முற்றுவந் துறுதிகள் புகன்றெமைச் செறிந்த
மாச கற்றியிவ் வாழ்வினீ யருளினீ மதித்தே 5

1413 என்று பற்பல நன்னய மொழிந்துவீழ்ந் திறைஞ்சி
யுன்ற லுலிக பரத்துள வுறுதிசேர் வுற்று
நின்று வாழ்ந்தன மெமக்கினி நின்னடிக் கமலம்
அன்றி வேறுள தோபுகல் என்றுசூழ்ந் தார்த்தார் 6

1414 அன்பி லுலுளம் கரைந்துநின் ருதரித் துலவா
இன்ப வாரிதி யாய்வரும் பெரியரை யெடுத்து
நன்பு யங்களிற் றரித்தெங்கள் நாயக மிவரென்
றென்பு றக்குழைந் தாடினர் பாடினர் இசைப்பார் 7

1415 மனையும் வாழ்க்கையும் காணியும் இழந்துமெய் வருந்தி
யனையி லாமக வெனமிக அலம்வர லுறுவேமுக்
கெனைய நல்லறப் பகுதியோ வெவர்புரி தவமோ
உனையெ மக்களித்த தென்கொலோ வருமறை யுரவோய் 8

1416 மதுரை மன்னவை யினிற்கவு மாரனை வழக்கிட்
டெதிர்செ லாவகை மொழிந்தறம் பலபல வியம்பிப்
புதியநீர்வரக் காட்டிவென் றெம்மைமுன் போலிப்
பதியில் வைத்திட வந்திடும் பழமறைப் பொருளே

1417 பற்று வேறெமக் கெவருளர் எனவுளம் பரிவேமுக்
குற்று நற்றுனை யாகிவந் துதவிசெய் யுனக்கு
மற்று வேறுகைம்மாறுள தோவெங்கள் மரபு
முற்று நின்னடிக் கடிமையா தலதருள் முதலோய் 10

1413 நன்னயம் – இன்மொழிகள். புகல் – அடைக்கலம்.
1414 வாரிதி – கடல். புயங்களிற்றரித்து – தோள்களின்மேல் வைத்து.
1415 அனையிலாமக – தாயில்லாத குழந்தை. அலம்வர – துயர்வர.

[அருமறையோர் யாவரும் தங்கள் அடிமையெனக் கூறியிருத்தல்]

1418 பெருகு நான்மறைத் தனிமுத லேயெனப் பெயரா
தருமை யிட்டக மகிழ்ந்துசீ ராட்டின ரளவில்
பெருமை யுற்றன ரண்ணலும் அவர்க்கருள் பிரியா
துரிமை வைத்துரை யாடினர் மறையவ ருரைப்பார் 11

1419 அண்ண லேயெமக் காருயிர்க் கமுதமே யளவில்
புண்ணி யப்பொரு ளேசதுர் வேதவில் புரிநீத்
துண்ண டுக்குற வீந்திடக் கடவம்யாம் உய்ந்துன்
வண்ண மார்விழி யருளினல் வாழ்ந்தன மதனல் 12

1420 அடிக ணீருமக் கடிமையாம் ஆட்கொளல் கடனென்று
ஒடிவி லாதபல் பூசைசெய் துவந்துவந் திருத்து
முடிவி லாதபே ருவகையை ராய்மறை முழங்கக்
கடிகொள் மாமனை வீதிகள் முன்புபோற் கண்டார் 13

[முந்நூற்றுவரோடு சிவவேதியரையும் சேர்த்திருக்க வேண்டுதல்]

1421 அரிய வேதிய ரனைவரு முதியரை யணுகிப்
பெரிய நீருமெந் தொகையினிற் பிரிந்திடா முந்நூற்
றொருவ ராயுடன் அமர்ந்துவந் தும்மதருள் நாளும்
புரிய வேண்டுமென் றொருமனை நடுவினிற் புரிந்து 14

[சிவவேதியர்க்கு ஒருபங்களித்துப் போற்றல்]

1422 பின்ன மற்றதம் நிலத்தினிற் பங்கொன்று பெருக்கி
இன்ன லற்றவர் யாவரும் கையெழுத் திட்டு
மன்னு சாசனம் வரைந்துநன் மங்கல தினத்தில்
தன்னை நேரிலா முதியர்தங் கையினிற்றந்தே 15

1418 அருமையிட்டு – அரிய சிறப்புக்களைச் செய்து.

1419 உண்ணடுக்குற – உள்ளம் நடுங்க. வீந்திட – அழிந்திட.

1420 ஒடிவிலாத – திரிவுபடாத. கடி – சிறப்பு, காவல். கண்டார் – அமைத்தார்.

1422 பின்னம் – வேற்றுமை. பெருக்கி – மிகுதியாக்கி அமைத்து.

1423 இதனை முன்னம்மீ ரிம்பிய வாறளித் தனம்நும்
பதும மாமலர் அடித்தொழில் யாவையும் பரிப்பேம்
நிதிய மெம்முயி ருடலும தாகயாம் நினைந்தோம்
முதிய மாதவத் தையகைக் கொள்ளென மொழிந்தார் 16

[இறைவனுகிய சிவவேதியர் யான்துறவியாதலின் ஒருபங்கு வேண்டாஎனக் கூறல்]

1424 விருத்தர் கேட்டெமக் கிம்மனை வாழ்க்கையை விரும்பிப்
பரிக்க யாருளர் ஏகம்யா முனம்பகர்ந் ததுநும்
வருத்தம் நோக்கியல் லாதுவே றிலையெமக் கென்றும்
உரித்த தாகிய சுற்றமும் மீவிரென் றுறைத்தார் 17

1425 எமக்கு மீரொடு தந்தையிம் மரபின ரெவரும்
உமக்கு மைந்தர்கள் ஆதலிற் குறையெவ ரொருவர்
தமக்கு மித்துணைத் தனையருண் டோபெருந் தகையீர்
சுமக்க வேறொரு வருமிலை யென்பதென் சொல்லீர் 18

[அந்தணச் சிறார்களுக்கு மறைநூல்கள் கற்பித்தல்]

1426 என்று பற்பல மொழிந்தவ ரிருந்திட வேற்று
மன்றல் மாமனை யதனிடை மருவிவீற் றிருந்து
துன்று மம்மறை யவர்க்கெலா மொருபெருந் துணையாய்
வென்றி சேர்மறை நுட்பஞன் நிலையெலாம் விளம்பி 19

1427 செல்வ மிக்கநற் றேசிக ராயிருந் தருளி
சொல்ல வேண்டுவ யாவையும் சொல்லிமற் றவரோ
டல்லு நண்பக லும்பெரு மகிழ்வினு தரவாய்
எல்லை யில்லவ ரருளினுற் கலந்துவாழ்ந் திருந்தார் 20

1428 அனைய தன்மைய ராகுமவ் வந்தண ரெவரும்
நினையு மீழலின் மீங்கில ராகியவ் வடிகள்
மனதி னிச்சையின் வழியொழு கினர்கள்மற் றவர்தந்
தனையர் தங்குல வொழுக்கமும் தகுதியுந் தெரிந்தார் 21

1424 பரிக்க – தாங்க (மனையறம்புரிய) ஏகம் – தனி.
1427 செல்வம் – பெருமை. தேசிகர் – ஆச்சாரியர்.

[பள்ளிக்கூடம் அமைத்துப் பலகலைகளையும் கற்பித்தல்]

1429 இச்சி ரூர்களுக் கருமறைக் கலைமுத லெவையும்
நிச்ச யம்பெற வுரைக்குதும் யாமென நிகழ்த்தி
அச்சம் வேறில ராகுமவ் வந்தண நிசைவால்
முச்ச கம்புகழ் தருபள்ளிக் கூடமொன் றியற்றி 22

1430 மதிய ளித்திட ரகற்றிடும் உவாத்திய ராகி
அதன்மு கப்பினில் ஆசனத் தினிதமர்ந் திருந்து
புதிய சிற்றுரு உடையவச் சிறுவரைப் புடையிற்
பதிய வைத்தினி துணர்த்துவான் புகுந்தனர் பரிவால் 23

1431 அகர மாகிய வக்கரம் வரைந்துதந் தவர்தம்
தகைமை நோக்கிமுன் னுரைத்தவர் தமைச்சொலச் சாற்றி
நெகிழு மாறுள நிலவெழுத் திடப்பணித் துணரும்
பகுதி யாலறிந் தெழுத்தொடு புணர்பதங் காட்டி 24

1432 ஒருவ ரோடொரு வரையுசா வுந்துணைக் காக்கு
மருவு பாடமுந் தினந்தினம் வரைந்துமுன் கொடுத்துப்
பருவ நோக்கிமுன் பகர்மறை யவர்க்குளம் படியத்
தரும மூர்த்தியும் உணர்த்துதல் தொடங்கினன் றகையால் 25

[சிறுர்கள் கல்வியிற்றேர்ந்து விளங்குதல்]

1433 நான்கு வேதங்கள் மிருதிகள் அங்கமா கமங்கள்
தேன்க னிந்தொழு கும்புரா ணங்கள்நற் றெளிவு
தான்ற ரும்பிற நூலெவை யுங்கொளுந் தகையால்
ஏன்ற றிந்திடும் பகுதியி லுதவின னெவர்க்கும் 26

1434 அனைய ராகுமச் சிறுவரும் அவ்வருட் குரவன்
தனைம தித்தலு காதக லாதழற் காய்வோர்
நினைவை யொத்துநேர்ந் தருளிய வாறெலாம் நிரம்பிப்
புனையு மாமதிக் குலனென விளங்கினர் பொலிவால் 27

1430 மதி – அறிவு.

1431 மாறுள நிலவெழுத்து – பிறதேசங்களின் மொழிகள். பகுதி – இலக்கணப் பான்மை.

1432 மிருதி – ஸ்மிருதி. அங்கம் – வேதாங்கங்கள். ஏன்று – ஏற்று.

1434 அழற்காய்வார் – தீக்காய்வார்.

[சிறார்கள் சரியைமுதல் நான்கும் பயின்றெழுகுதல்]

1435 சரியை யாற்றுவர் சிலரரன் றனைமனம் விரும்பிக்
கிரியை யாற்றுவர் சிலர்துணி வருளொடு கெழுமிப்
பெரிய யோகம தாற்றுவர் சிலர்நலம் பெருகித்
திருவு லாவுரு ஞானம தாற்றுவர் சிலரால் 28

1436 இன்ன வாருயர் சிவபெறு விருப்பார் எவரும்
மன்னு பக்குவ ராய்ப்பர மானந்த வாழ்வு
தன்னி லுற்றுணர்ந் திருந்தனர் தாணுவே குருவாய்ப்
பின்ன மற்றுவந் துணர்த்திடப் பெறிலவை யறிதோ 29

[சிவவேதியர் குருந்திடம் சென்று மறைதல்]

1437 மூல மீறிலா முதலொரு முதுமறை யவர்தம்
கோல மாகிவந் தினிதிருந் தருள்பல கொடுத்துச்
சால நாட்பல கழிந்தபின் ஒருதினந் தன்னில்
சீல வேதியர் குழுவொடும் குருந்தினேர் சென்றார் 30

[அந்தணர்கள் வியந்து மகிழ்ந்து போற்றுதல்]

1438 எம்மை யாளுடை முதியரிங் கெமைப்பிரிந் தொளித்த
தம்ம விச்செய லரிதரி தற்புத மாகும்
பொய்மை யற்றவர்க் காண்பமோ வினியென்று புழுங்கி
விம்ம லுற்றழு திரங்கினர் யாவரும் வியந்தே 31

1439 நாரி ழந்தவன் மனக்கவு மாரன்ற னல்யாம்
ஊரி ழந்துயர் பேரிழந் துலகெலாந் தொழுநற்
சீரி ழந்தலிந் திடுமெமக் கவ்விடர் தீர்த்த
சூரிழந்த பொற் குன்றமே யெங்குற்றாய் சொலாய் 32

1440 எம்மி லோர்குடி முதல்வரா யிங்கினி தமர்ந்து
செம்மை யோங்கிய மறைநுட்ப மியாவையும் தெரிவித்
தம்மை யிம்மையி னிற்பெறுந் திறமெலா மளித்த
விம்மு பேரருட் செல்வமே யெங்குற்றாய் விளம்பாய் 33

1436 மன்னு – நிலைபெறும். தாணு – கடவுள். பின்னம் – மாறுபாடு.
1437 கோலம் – வடிவு. குருந்தினேர் சென்றார் – குருந்திடை மறைந்தார்.
1439 நார் – அன்பு, இரக்கம். சூரிழந்த – அசுரர்களையழித்த.
1441 பவுத்திரம் – மோதிரம். வெண்டுசு – வெள்ளாடை. பண்டி – வயிறு.

1441 சிரித்த வான்மதி முகமும்வெண் புண்டரந் தீட்டி
விரித்த நெற்றியும் பவுத்திரக் கரமும்வெண் டூசு
தரித்த பண்டியும் சழக்குடைப் பொலிவும்நன் முதுமை
பரித்த பேரெழில் மேனியுங் காண்பமோ பகராய் 34

1442 அய்ய நின்னடிக் கடியரேம் துயரமெங் கேகத்
துய்ய நெஞ்சினில் நிலைந்தனை யெனப்பல சொல்லிச்
செய்ய வேதிய ரெங்கணும் தேடியும் காணை
தய்ய முற்றுணர்ந் தனர்குருந் திறைவரென் றருளால் 35

[சிவவேதியர் ஆத்மநாயகரே என அந்தணர்கள் தெளிதல்]

1443 எமது துன்பினை நீக்குதற் காத்மநா யகரே
தமது பேரரு ளாலொரு முதுமறைத் தவராய்
அமைய வந்தெமக் கருளிய வாறிது வாமுன்
சிமைய மால்வரைத் தமிழ்முனி கூற்றையுந் தெரிந்தார் 36

1444 இற்றை நாள்வரை யெம்முட னெருவரா யிருந்தும்
ஒற்றை வெள்விடைப் பரம்பொரு ளாமென வுணராச்
சிற்று ணார்ச்சிய ராயினம் எனமனந் திகைத்தங்
குற்ற வச்சமோ டுடம்பெலா மயிர்ப்புள கோங்க 37

1445 சிரத்திற் ருங்கிய கரத்தராய்ப் பரவசத் தினராய்
வரத்தி னேங்கருள் தருங்குந்த மூலத்தை வலம்வந்
துரத்தின் வீழ்ந்துதாழ்ந் துளத்தடங் காப்பெரு விருப்பால்
நிருத்த கீதவா யினர்களாய் நின்றிவை மொழிவார் 38

1446 மருவு லாவருந் திருக்குருந் துருவமாய் வயங்குந்
திருவு லாவரும் செல்வமே திகழ்பெருந் தேவர்
ஒருவ ராலும்நின் றறிவொணு உண்மைமெய்ப் பொருளே
கருவி லாவகை யெமக்கருள் தருங்கனை கண்ணே 39

1443 தவராய் - தவமுனிவராய். தமிழ்முனி - அகத்தியர்.
1446 மருவுலாவரும் - மணம்வீசும். கனைகண் - பற்றுக்கோடு.

1447 மறைக ளாலுநல் லளவைக ளாலுமண் புவன
இறைக ளாலுமற் றுள்ளன வா மெவை யாலும்
அறைய வோரிறை யாகிலு மறிவொணு தகன்ற
நிறைகொள் பூரண மாயொளி தழையுநின் மலமே 40

1448 துங்க மாமிறை வேதிய வுருக்கொடு தோன்றி
எங்கள் மாநிலங் கவர்கவு மாரஹ யிறைமுன்
அங்கண் மாநிலம் அறியவென் றந்நில மதிலோர்
பங்கு மேற்றுமுந் நூற்றிரு வருமெனப் பரிந்தே 41

1449 வேத மேமுத லியகலை யாவையு மெமக்குப்
போத மார்வகை யருளினுற் புலப்படப் புரிந்து
தீதி லாவகை யெம்மொடுஞ் சிறந்தினி திருந்த
நாத நீயென வறியநின் மகிமையார் நவில்வார் 42

1450 என்று மிவ்வண மருட்பரி சிருந்தவா றியம்ப
ஒன்றும் வல்லம்யாம் அருமறை வண்டுசூழ்ந் தொலிக்கும்
மன்ற லங்குருந் துருவமாய் வயங்குபே ரொளியே
நன்று நன்றுநின் னருளெனத் துதிபல நவின்றார் 43

1451 இன்ன வாறரு மறையவர் குருந்துறை யிறைசீர்
பன்னி யாதரித் தேத்திவாழ்ந் திருந்தனர் பரிவாற்
சொன்ன விச்சரி தஞ்சொலு வோர்செவிக் கொளுவோர்
எந்த லங்களும் இகத்திலுற் றிறையருள் பெறுவார் 44

[ஓதுவித்த சருக்கம் முற்றும்]

1447 புவன இறைகள் - உலகத் தெய்வங்கள். இறையாகிலும் - சிறிதேனும்.

1450 அருட்பரிசு - அருட்டன்மை. வல்லம்யாம் - வலிமையில்லேம்.

1451 பன்னி - விரித்துரைத்து. இகத்தில் - இவ்வுலகத்தில்.

மாணிக்கவாசக சுவாமிகள்
திரு அவதாரச் சருக்கம்

[அறுசீர் விருத்தம்]

[முனிவர்கள் சூதமாமுனிவரிடம் வாதவூரர் வரலாறு கூறியருள வேண்டல்]

1452 திருந்தியமா தவப்படிவத் தெய்வமறை
முனிவரெலாஞ் சிறந்த மேன்மை
பொருந்துதிறற் பெருஞ்சூதப் புண்ணியமா
முனிவனெடு புகலு கின்றூர்
குருந்திறைவ ரருட்பெருமைக் குணங்களெலாம்
விரித்தெமக்குக் கூறு நின்ற
பெருந்தகையே யெம்விரும்பம் இன்னுமுள
வாமவையும் பேசு வோம்யாம் 1

1453 அன்புருவ மாகுதிரு வாதவூ
ரடிகள்குருந் தமரு நாதன்
பொன்பிறங்கு மருள்கிடைத்தெண் ணிறந்ததிருப்
பணிபுரிந்து பொதுவிற் சேர்ந்தார்
என்றனைமுன் னச்சரிதம் யாவையுங்கேட்
குறுநசையுற் றேமெம் பானீ
ஒன்றியபே ரருளதனல் உரைத்தருள
வேண்டுமென ஓத லுற்றூர் 2

[சூதமுனிவர் சொல்ல ஒருப்படுதல்]

1454 மாதவத்தோர் மொழிசூத மாமுனிவன்
கேட்டிதய மகிழ்ச்சி கூர்ந்தந்
நாதனருட் செயலேயென்ற னுளுரைக்கத்
தகுவதன்று நலம ருத

1453 பொன்பிறங்கும் – பொன்னை ஒக்கும். திருப்பணி – தெய்வத் தொண்டு. பொது – பொன்னம்பலம். நசை – விருப்பம்.
1454 போதம் – மெய்ஞ்ஞானம். ஆதரவு – அன்பு.

போதமிகுந் தவத்தொழுகும் புண்ணியர்காள்
நீவிரிதைப் புகலென் றோதும்
ஆதரவால் யானுமுளத் தறிந்தவா
றியம்பியரு ளடைவன் கேண்மின் 3

[பாண்டிநாட்டின் தெய்வத்தன்மை]

1455 உலகெலா மீன்றருள்சிற் றுதரவல்லி
யெனும்பரைமுன் ஞெருமூன் றென்னு
முலையொடுதித் தரசாள சவுந்தரபாண்
டியனுக முன்னோன் வந்தவ்
இலகமுதை வேட்டுமுடி கவித்தாண்டுக்
கிரகீனயளித் திறைமை நல்கும்
நலமருவும் வழுதியர்தங் குலம்புரக்கும்
வைகைவள நாட்டின் றென்பால் 4

[வாதவூரின் சிறப்பு]

1456 கண்கவரும் பேரழகு கனிந்தோங்கும்
எமதுபுரக் கவிஞே வுங்கள்
எண்பெருகும் பொன்னுலகோ மிக்கதெனக்
காணவம்மின் என்று கையால்
வெண்சுதைமா டங்கள்தொறும் மிடைகொடுவிண்
ணவரையெலாம் விளித்தல் போலாம்
வண்புகழ்சேர்ந் திலங்குதிரு வாதவூ
ரெனுமொருமா நகரம் வைகும் 5

1455 சிற்றுதரவல்லி – சிறிய வயிற்றினையுடைய உமாதேவி. உதித்து – அவதரித்து. முன்னோன் – சிவபெருமான். இலகமுது – உமை யாகிய அங்கயற்கண்ணி. வேட்டு – மணந்து. உக்கிரன் – உக்கிர குமார பாண்டியன். இறைமை – அரசு. வைகைவளநாடு – பாண்டியநாடு.

1456 வம்மின் – வாருங்கள். மிடைகொடு – நெருங்கி. விளித்தல் – அழைத்தல்.

[ஆமாத்தியர் குலச்சிறப்பு]

1457 அப்பதியின் வருணம்நான் காங்குடிகள்
தனப்பெருக்கின் அளகை வேந்தும்
ஒப்பிலனென் றேங்குமதில் மிக்கபெருந்
திருவுளராய் ஒழுக்கம் மேன்மை
செப்பருநல் லருளறிவு சேரிதயத்
தரனடியைச் சேர்த்து நாளும்
வைப்பிதுவென் றேவளர்க்கும் மாத்தியர்தங்
குலத்திலொரு வள்ள லுண்டாம் 6

[திருவாதவூரரின் பெற்றோரின் தவவமும் வேண்டுகோளும்]

1458 நலமருவும் பெரியோரில் லொழுக்கம்பூண்
டொழுகிவரு நாளிற் றுய்ய
கலைமதிச்செஞ் சடையவரைக் கருத்துறத்தாழ்ந்
தெனக்குனது கருணை தங்கி
இலதுமொரு பசுங்குழவி யருள்புரிய
வேண்டுமென விரந்து போற்ற
உலகமுழு வதும்புரிநற் றவப்பயனு
மொத்துவளர்ந் தோங்குங் காலே 7

1459 மாத்தியர்தங் குலப்பதியின் மனைவயிற்றிற்
கருவருளால் வதிய வுள்ளம்
பூத்துவகை தரநெருங்கு சுற்றமொடு
மதிகடொறும் புதிய தாக
ஏத்தலுறு நெய்யின்விழா வெடுத்தரன்பூ
சனையடியார்க் கினிய நல்லூரண்
கோத்தடிசி லுடனமைத்தார் திங்கள் பத்தும்
நிறைந்ததந்தக் கோதை யார்பால் 8

1457 தனப்பெருக்கு – செல்வவளம். அளகைவேந்து – குபேரன். திரு – செல்வம். வைப்பு – நிதி (பேறு).

1458 இல்லொழுக்கம் – மனையறம். காலே – காலத்தில்.

1459 மாத்தியர்குலம் – ஆமாத்தியர் குலம். வதிய – தோன்றியிருக்க. மதி – திங்கள். நெய்யின்விழா – கருவுற்ற மகளிர்க்குத் திங்கள் தொறும் செய்யும் சடங்கு.

[திருவாதவூரர் அவதரித்தல்]

1460 அரும்பிறவித் துயர்நீங்கி யவனியெலாம்
குளிர்தூங்க அளவில் மேன்மை
தருந்திருநற் சைவநெறி தழைத்தோங்கக்
கோளனைத்துந் தகைசே ருச்சத்
திருந்திடநல் லோரைதனி லென்போல்வா
ருந்தெளிய விணையொன் றில்லாக்
குருந்திவறைவர் திருவருளால் அவதரித்தார்
மெய்ஞ்ஞானக் கொண்ட லன்னார் 9

[பெற்றோரும் சுற்றமும் மகிழ வாதவூரர் வளர்ந்துவரல்]

1461 அருமையொடும் பயந்தளித்தார் அகமகிழ்நற்
சுற்றமுடன் அளவில் தானம்
பெருமையொடு புரிந்துமறை விதியொடுசா
தகவினையும் பேணித் தங்கள்
இருகையினு லும்எடுத்துக் கண்மணி போற்
போற்றிவளர்த் திட்டா ரந்தப்
பொருவகலும் மெய்ஞ்ஞானப் புண்ணியக்கன்
றும்பிறைபோற் பொலிந்து தோன்றி 10

1462 கவின்மருவு நுதலினிடுங் கடவுள்திரு
நீற்றணியே காப்பதாகச்
சிவசமயந் தலையெடுப்பச் சிரமெடுத்துச்
செங்கீரை திருந்த வாடிப்

1460 அவனி – உலகம். குளிர்தூங்க – அருள்நிலை பெற. கோள் – கிரகம். கொண்டலன்னார் – திருவாதவூரர் (கொண்டல் – மழைமேகம்)

1461 சாதகவினை – சோதிட நூல்பற்றிய செயல்கள். புண்ணியக்கன்று – வாதவூரர்.

பவமுறுபல் புன்சமயப் பறவையிரிந்
தோடிடச்சப் பாணி கொட்டித்
தவமிகுந்து லாவுதல்போற் றூங்குமஞ்சத்
தொட்டிலின்மேற் ருலு மாடி 11

[பிள்ளைத் திருவிளையாடல்கள்]

1463 முதிர்ஞானத் தேனெழுகும் திருவாயாற்
ருய்மகிழ முத்த மீந்து
மதிவதனத் தேன்மொழியார் கண்மணியே
வருகவென மகிழ்ந்து சென்றும்
அதிமதுர மொழியாலம் புலியைவிளை
யாடவர வழைத்துஞ் செய்ய
துதிமருவு சிறுமடவா ரிழைத்த சிற்றில்
சிதையவடித் துணையாற் பேர்த்தும் 12

1464 செம்பொன்னுற் செய்தசிறு பறைமுழக்கி
விளையாடித் திரிந்து மிக்க
உப்பர்தொழு மறுகுதொறும் உருள்மணிப்பொற்
சிறுதேர்கள் உருட்டி யார்த்தும்

1462 கவின் – அழகு. நுதல் – நெற்றி. செங்கீரை – கையையூன்றி காலைமடித்தாடும் பிள்ளை விளையாட்டு (பிள்ளைத் தமிழில் இரண்டாம் பருவம்) சப்பாணிகொட்டல் – கையால் தாளமிடல் (இது பிள்ளைத் தமிழில் நான்காம் பருவம்) மஞ்சம் – தொட்டில். தாலுமாடி – தாலாட்டுக் கொள்ளுதல் (தாலசைத்தலும் ஆம், தால் – நாவு இஃது மூன்றும் பருவம்).

1463 முத்தமீனுதல் (ஐந்தாம் பருவம்) முத்தந்தருதல். வருக என்றது ஆறுவதாகிய வாராணைப் பருவத்தைக் கருதியது. மதுரம் – இனிமை அம்புலியை விளையாட அழைத்தல் ஏழாவதாகிய அம்புலிப் பருவம்) சிற்றில்சிதைய அடித்துணையால் பேர்த்தும் என்றது எட்டாவதாகி சிற்றிற் பருவத்தை நோக்கி.

பம்புறுகாற் சிலம்பலம்ப நவமணிப்பூண்
புயத்திலங்கப் பசும்பொற் பின்னல்
அம்புயக்கை மணிவளைமேல் றுலங்கவிரு
செவிமடற்பூ ணசைய வோடி 13

1465 சினமறுநற் சிறுவரொடும் வெளிபுகுந்து
சிறுவிளையாட் டயர்ந்துந் துய்ய
புனல்மடுவிற் புகுந்துகுடைந் தாடியுநன்
மணமலர்பூங் காவிற் கொய்தும்
இனமருவும் மலர்தொடுத்தும் கனமருவும்
அனுராக வியற்கை முற்றும்
மனமகிழப் பூசித்துக் கற்றுணர்ந்தும்
ஏழ்பருவம் மருவா நின்றூர் 14

[திருவாதவூரருக்கு உபயனமுதலிய செய்வித்தல்]

1446 தந்தைமகிழ்ந் துபநயனம் தகுமுறைமை
யாற்புரிந்து தவறில் வேத
மந்திரம்யா வையுமுணர்த்திப் பள்ளியினில்
வைத்தனரம் மணியைக் கேள்வி
முந்துறுநற் றொடர்ச்சியினுல் சுருதிசிவா
கமமுதலாய் மொழியா நின்ற
வந்தமிலாக் கலையெவைக்கும் ஆகரமா
மிவனெனவுற் றறிந்தார் பின்னும் 15

1464 சிறுபறை முழக்கி என்றது ஒன்பதாவதாகிய சிறுபறைப் பருவத்தை எண்ணி. உம்பர் – தேவர். மறுகு – வீதி. சிறு தேர்கள் உருட்டி என்றது பத்தாவதாகிய சிறுதேர்ப் பருவத்தைக் கருதி. அலம்ப – ஒலிக்க இம் மூன்று பாடல்களிலும் பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவ வருணனைகளைச் சுருக்கமாக இசைத்துள்ளார் இவ்வாசிரியர்.

1465 புனல்மடு – வாவிகள். கனம் – பெருமை. அநுராகம் – ஆசை. ஏழ்பருவம் – ஏழாண்டு அகவை.

1466 சுருதி – வேதம். ஆகரம் – கடல். என – என்று சான்றோர் வியக்க,

[அவர் கல்விகேள்வி ஒழுக்கங்களால் நிறைந்து விளங்கல்]

1467 பயிலவேண் டுவனவெலாம் பயின்றுகல்விக்
கெல்லைபரம் பொருளென் றேரும்
நலமருவு மனத்தினராய் நல்லொழுக்கம்
வாய்மையருள் நன்மை மேன்மை
தயவுபகா ரமறிவா சாரம்வணக்
கம்பொறைநற் சாந்தம் நட்பு
வயமருவுந் துறவுதிட மாகமுனற்
குணங்களொடும் வயங்கா நின்றார் 16

[திருவாதவூரர் மெய்ஞ்ஞான வேட்கையுடையவராய்ப் பற்றற்று ஒழுகுதல்]

1468 நித்தியமு மநித்தியமும் வைத்தோர்ந்து
நித்தியமெய்ஞ் ஞானு னந்தச்
சுத்தவெளி யாயகண்டா காரமய
மாய்விபுவாய்ச் சுயமாய் நீங்காத்
தத்துவமொன் றுமதுவே யிகபரத்தும்
உயிர்க்குறுதா ரகமென் றேதும்
சித்தமுள ராயதையே தெரிசிக்கும்
காதலொடு தெருண்டு சிந்தை 17

1469 தாமரைநீர் போலுலகந் தனிலிருந்தும்
ஒட்டாத தன்மை யாகிக்
காமமுத லாயெவையும் கடிந்தொருவி
அருட்டுறவே கருத்துள் தங்க
ஏமமிகு முலகியலும் இகழாமல்
அமர்ந்திருந்தார் இணையி லாரச்
சேமமுறு நகருறையும் செல்வர்களா
மெவருமகிழ் சிறந்து பொங்க 18

1467 ஓரும் – உணரும். தயவு – கருணை. ஆசாரம் – குல ஒழுக்கம். வயமருவும் – வெற்றிபொருந்தும். வயங்காநின்றார் – விளங்கினர்.

1468 தாரகம் – மூலம். தெருண்டு – தெளிந்து.

1469 தாமரை நீர்போல் – தாமரையில் உள்ள தண்ணீரைப்போல். ஒருவி – நீங்கி.

[சான்றோர்கள் வாதவூரர் பண்பாடுகளைக்கண்டு போற்றிப் புகழ்தல்]

1470 கண்டுதொழுந் தொறுஞ்சிவன்மேற் காதன்மிகுந்
தவர்பேசுங் கருத்தும் மெய்யிற்
கொண்டதிரு நீற்றழகும் அக்கமணி
யணிபொலிவும் குணத்தின் சீரும்
அண்டர்பிரான் றிருவடியைப் பூசிக்கும்
நியதியுமெய் யரன்ருள் போற்றும்
தொண்டர்தமை யாதரிக்கும் நேசமுமற்
றுளதேவைத் துதியாக் கற்பும் 19

1471 அறிந்துபுகல் வார்சிவனே வவன்கருணைக்
குணந்தானே வருள்மெய்ஞ் ஞானஞ்
செறிந்தொருமா னுடவடிவாய்த் தோன்றியதோ
வல்லதுநற் செவ்வேள் தானே
உறுஞ்சதுர்வே தப்பொலிவோ ஆகமத்தின்
பொருட் பயனே வுலகமுய்யப்
பிறந்தசிவ புண்ணியமெல் லாங்கூடித்
திரண்டுவந்த பேறு தானே 20

1472 என்னென்றிவ் வாதவூ ரிறைவரருட்
செயல்புகல்வோ மென்று பேசி
முன்னழகும் பின்னழகும் முகச்சந்த்ரோ
தயத்தழகும் முறுவற் செவ்வாய்
மன்னுமந்த காசநகை மணியழகும்
உடையழகும் மார்பிற் பொற்பூண்
மின்னழகும் பார்த்திமையாக் கண்படைத்தார்
உலகவரு மிகவும் அம்மா ! 21

1470 அக்கமணி – உருத்திராக்கமணி. மற்றுளதேவை – பிறதெய்வங்களை
கற்பு – ஒருமைப்பாடு.

1471 செவ்வேள் – முருகன்.

1472 மந்தகாசநகை – புன்னகை.

1473 இவ்வியற்கை யொடும்வாத வூரர்புவி
புகழ்ந்தேத்த ஈரெட்டாண்டின்
செவ்விநிறை தந்திடுநாள் தென்கூடற்
பதிக்கரசேர் செழியர் கோமான்
நவ்விமழு வேந்துசொக்க நாயகர்தந்
திருவருள்நற் சார்பு தங்கும்
அவ்வியமி லாமனத்தான் நற்செங்கோல்
செலுத்தியுல காளா நின்றான் 22

[பாண்டிய மன்னன் அமைச்சர், பேரறிஞர்களோடு அளவளாவி மகிழ்தல்]

1474 மனுநெறியிற் புவிபுரக்கும் மன்னனயற்
புலமன்ன வர்கள் யாரும்
கனமருவுந் திறையளந்து கண்ணருளேற்
றிடநிற்பக் கதிகொள் யூக
மனமருவும் மந்திரிகள் பலர்சூழச்
சைவமறை வாணர்சங்கத்
தினமருவும் பெரும்புலவர் எவரொடும்வந்
தரியணையி லிருந்தா னேர்நாள் 23

1475 வந்திருந்த செழியர்குல பதிமுதியோர்
வதனமெலாம் மகிழ்ந்து நோக்கி
இந்தவுல கச்செயலும் ஏனையுல
கத்தியலு மியற்பு மிக்க
தந்திரநூற் றிறமுணர்ந்த தக்கோர்தம்
செயலும்விரித் தறைந்தன் ரோ
டந்தமிலா மகிழ்ச்சியுட னளவளா
விக்கலந்தான் அறிஞர் தாமும் 24

1473 நவ்வி – மான். மழு – மழுவாயுதம். அவ்வியம் – வஞ்சனை. அழுக்காறு.

1474 கனம் – பெருமை. கதி – நடை (ஒழுக்கம்). யூகம் – நுண்ணறிவு

[பாண்டியன் அகவிருப்புணர்ந்த அறிஞர்கள் வாதவூரரைப் பற்றிப் புகழ்ந்துகூற அரசன் அவரை அழைத்துவரச் சொல்லுதல்]

1476 இறைவனரு ளியமொழிகட் கேற்குமா
றியம்பியரு ளேந்த லேமெய்
உறைதருநற் றிருவாத வூர்தனில்மாத்
தியர்குலத்தில் ஒருவ ரன்னோர்
நிறைமருவும் பெருந்தகைமை யிவ்வுலகத்
தெவர்க்குமிகை நிகழ்த்தி லென்னூர்
விறல்மிகுமா றனுமவரை யழைத்திடுமின்
யாங்காண வேண்டு மென்றான் 25

[அரசன் அழைப்பை ஏற்று வாதவூரர் அரசவைக்கு எழுந்தருளல்]

1477 அரசன்மொழி தலைக்கொண்டு திருவாத
வூரர்முனம் அமைச்சர் சில்லோர்
விரவிவணக் கம்புரிந்து வேந்தனுமைக்
காண்பொருட்டு விளித்தா னென்னூர்
உருகியநற் சிந்தையரு முடன்பாடாய்
அவராடும்போய் உலக மேத்தும்
திருமதுரா புரியதனிற் செழியர்பிரான்
திருந்தவைமுன் சென்று ரன்றே 26

[பாண்டியன் மகிழ்ந்து தழுவி வரவேற்றல்]

1478 மந்திரிமார் படைத்தலைவர் மறையவர்பண்
டிதர்நான்கு வகைப்ப தாதி
சுந்தரமா தவர்கள்புடை சூழமண்மீ
திந்திரனூர் தோற்றம் போல
அந்தமிலாப் பெருங்கொலுவாய் அமர்ந்திருந்த
அரசினைச்சென் றன்பிற் காணச்
சிந்தைமகிழ் வுடன்புல்லித் தென்னவர்கோ
னருகிருத்திச் செப்பு கின்றான் 27

1476 மாத்தியர் குலம் – ஆமாத்தியர் மரபு. விறல் – வெற்றி.
1477 விளித்தான் – அழைத்தான். உடன்பாடு – ஒப்புதல்.
1478 பதாதி – காலாட்படை முதலியவை. புல்லி – தழுவி.

[இருவரும் மகிழ்ந்துரையாடல்]

1479 உமதுபெருந் தகைமையெலாம் நாடோறுங்
கேட்டுமகிழ் வுற்றே முன்னம்
எமதுபெருந் தவமுளதா கையிற்காணப்
பெற்றனமின் றென்று னன்பர்
தமரெடுங் கடலவனி முழுவதையும்
புரந்தருளுந் தனிச்செங் கோலாய்!
விமலீதன்ற் றிருவிவையும் அடைந்தனனின்
றெரிசனத்தால் மிகவு மென்றார் 28

[பாண்டியன் வாதவூரரை அமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டியளித்தல்]

1480 திருவாத வூரர்மதி யூகமுஞ்சற்
குணமுமெழிற் சிறப்புங் கல்விப்
பெருவாழ்வும் சிவநேசப் பெருமையுங்கண்
டிவரேகம் பெருவாழ் வென்றேர்ந்
தொருவாத பேரமைச்சாய் உடனமர
வேண்டுமென உரைத்து வேண்டி
வரமார்ந்ற் றினத்தெவரும் மதிக்கவமைச்
சுரிமைமனம் மகிழ்ந்து தந்தே 29

[வாதவூரருக்குத் தென்னவன்பிரமராயன் எனப் பட்டமளித்து
வரிசைமுதலாயின அளித்தல்]

1481 நலமுளதென் னவன்பிரம ராயனென
நாமமொன்று நவின்று சாத்திப்
பொலமருவும் பன்மணிப்பூண் பொன்னுடை
முதல்வரிசை பொழிந்து வாசக்
கலவைகள்மான் மதங்கமழக் கைம்மலீமே
லேற்றியியங் கல்லென் றார்ப்ப
நிலவுமிழ்வெண் குடைதுவசம் கவரிமுதல்
வரிசையெலாம் நிரந்து சூழ 30

1479 தமரம் – அகல. விமலீ – திருமகள். திரு – எண்வகைச் செல்வம்
1480 ஓர்ந்து – எண்ணி. ஒருவாத – நீங்காத. அமைச்சுரிமை – மந்திரி பதவி.
1481 தென்னவன் பிரமராயன் என்பது அரசர் அளித்த பட்டம். பொலம் – பொன். கைம்மலீ – யானை. இயம் – வாத்தியங்கள். கல் – ஒலிக்குறிப்பு. துவசம் – கொடி. வரிசை – பல பரிசுகள்.

[அரசன் வாதவூரரை அமைச்சராக உலாவரசெய்து சிறப்பித்தல்]

1482 முன்னிருந்த அமைச்சர்குழாம் படைத்தலைவர்
சேனைவெள்ளம் முழுதுஞ் சூழத்
தன்னிகரில் மணிவீதி வலம்வருவீர்
என்றுவந்து சாற்ற மன்னன்
இன்னதெலாம் கூடலுறை இறைசெயலென்
றேற்றெவரும் ஏத்தல் செய்யப்
பொன்னின்மறு கூடுவலம் போந்தரச
னுளமகிழப் புகுந்தா ரன்றே 31

1483 அரசனும்பின் வரிசையள வகலமிக
வுதவியுள அமைச்சர்க் கெல்லாம்
பெருமுதன்மை யுமக்காகும் அப்பாரம்
பொறுத் தெவையும் பேணிப்போற்றி
விரவுபெரும் புகழ்தருவீர் என்றுரைத்தான்
இகபரத்தும் வேந்தன் வேண்டும்
திருவெவையும் உதவவளம் தெருண்டிறைவன்
மொழியமைச்சின் செய்கை பூண்டார் 32

[வாதவூரர் அமைச்சுக்கடன் மரபிற் புரிந்தும் நாடொறும் இறைவன் பூசை முதலிய குறைவிலாமல் செய்துவித்தும் ஒழுகல்]

1484 வைகல்தொறும் வைகறையி னெழுந்துநிய
திக்கடன்கள் மரபி னற்றிப்
பொய்கலவா வுளத்தரசன் றனைமுனங்கண்
டுரைப்பதெலாம் புகன்று போந்து
மைகவருங் கயற்கண்ணி மணவாளர்
பூசைவளம் மரபின் ஆய்ந்து
கைகரவா மெய்யடியார் பூசை,அறப்
புறங்களெலாம் கருதி யோர்ந்து 33

1482 ஏத்தல்செய – பாராட்டி வணங்க. மறுகு – வீதி.
1484 கயற்கண்ணிமணவாளர் – சொக்கலிங்கப் பெருமான்.

1485 வாரிவளம் தருகுடிகள் பலவெவையும்
களிதூங்க மரபி னூற்றிப்
போரியல்நால் வகைத்தாகை விரிவெவையும்
புரத்தல்புரி பொற்பு நோக்கிச்
சீரியவா சகமுடங்கல் செலுத்தவேண்
டிடங்களெலாம் செலுத்தி மிக்க
கூரியரோ டளவளாய்க் கல்விநலம்
பாராட்டிக் கொடைமேற் கொண்டும் 34

[அமைச்சுப்பணி முதலிய ஆற்றிவரினும் உள்ளம்
துறவு நிலையிலேயே நிற்றல்]

1486 அயற்புலத்து மன்னர் திறை தென்னவர்கோன்
அடியிணைக்கீழ் அளப்பச் செய்தும்
செயற்கரிய செய்கையெலாம் செய்தெவரும்
உளங்களிப்பச் செய்து நாளும்
கயற்கொடியோன் றனக்கணியும் கவசமுங்கண்
போலுமிகக் கலவா நின்று
வியப்புடைய ராய்உலகச் செயலினக்கண்
டருந்துறவே விருப்பங் கொள்ள 35

1487 பொடிமூடு மழல்போலப் பிறரறியா
வாறடக்கிப் புவன நீதி
நெடிதுவளர்ந் திடநடத்தி யிருக்கும்நாள்
தென்மதுரை நிருபர் கோமுன்
கடிதுசில வணிகர்வந்து வீழ்ந்திறைஞ்சிச்
கைகுவித்துக் களிப்புத் தோன்ற
படிபுகழ்பஞ் சவிவெமது மொழிசெவிக்கொள்
எனப்பரிவிற் பகரா நின்றார் 36

1485 வாரி – வருவாய். களி – மகிழ்ச்சி. முடங்கல் – அரசாணை ஓலை. கூரியர் – அறிவால் மிக்கோர்.

1487 பொடி – சாம்பல். கடிது – விரைந்து. படி – உலகம்.

[வணிகர் சிலர் வந்த பாண்டியனிடம் அயல்நாட்டுப் பரிகள் கீழைக் கடற்கரையில் வந்திறங்கியுள்ள செய்திகளைக் கூறல்]

1488 வடதிசைத்தே சங்கலிங்கம் வங்கமரா
டம்ஈழ மாம்முன் னுகும்
இடமுறுநற் றேங்களுள பரிகள்மிக
வும்வங்கத் தேற்றி யிக்கீழ்க்
கடலருகு கொணர்ந்துவிலை பகர்கின்றார்
அத்தேசங் களிலுள் ளார்நற்
றிடமருவும் பரியவைகட் கிரவிபசும்
பரியுமிணை செப்பொ ணுதால் 37

[மன்னன் மகிழ்ந்து வணிகர்க்குப் பரிசு வழங்குதல்]

1489 இந்நிலத்தில் இப்பரிகட் கிணையாகுந்
துரகதங்கள் எங்குங் காணேம்
மன்னவுனக் கேவுரிய வாகுமவை
யெனமனத்தில் மதித்து வந்தோம்
அன்னதிந்த புரவியெலாம் விலைகொடுத்து
வாங்கல்மிக அழகா மென்றார்
சொன்னவுரை கேட்டவர்க்குத் தென்னவர்கோன்
மகிழ்வொடுநற் றூசு நல்கி 38

[மன்னன் வாதவூரரைப் பரிகள் வாங்கிவர வேண்டுதல்]

1490 மனவிருப்பி னைடுகொலு மண்டபத்தில்
வந்துதிரு வாத வூரர்
தனையழைத்தங் கருகிருத்தி முகமனெடு
மினியமொழி தழையப் பேசி
இனியதிந்த புரவிவிலைக் கெய்தியவென்
றார்குணபால் இந்நாள் நீர்போய்த்
தனமிகவும் கொடுத்தந்த புரவியெலாம்
வாங்கிநம்பாற் சார வேண்டும் 39

1488 தேங்கள் – தேசங்கள். வங்கம் – கப்பல். பரி – குதிரை. இரவி – சூரியன்.

1489 துரகதம் – குதிரை. நற்றூசு – நல்லாடை.

1490 குணபால் – கீழ்த்திசை (கடற்கரை) தனம் – (விலைக்குறிய) பொள்

[அரசன் அளித்த பொருள்களைப் பெற்றுக்கொண்டு செல்ல ஒருப்படல்]

1491 என்றுரைத்து நிதியறையைத் திறந்துதனக்
குவையிலம்பா னிரட்டி லக்கந்
துன்றுபசும் பொன்னெடுத்துக் கொளவுரைத்துக்
கல்லுடை சுகந்தங் கந்தம்
வென்றிவிரு துகள்முதலா கியவரிசை
மனமகிழ்ந்து மிகவும் நல்கி
யன்றுவிடை கொடுத்திடநற் றிருவாத
வூரருமங் கதுமேற் கொண்டே 40

[வாதவூரர் சோமசுந்தரக் கடவுளை வணங்கியருள்பெறல்]

1492 தம்மனத்தின் செயல்வேரு யெழுந்துபோய்
அங்கயற்கண் தையல் பாகன்
செம்மணிப்பொற் கோயில்வலம் வந்துபணிந்
துயர்கூடற் சிவனே யுன்ரூள்
இம்மையிலென் றனக்கருளி யுனதடியா
ரொடுங்கூட்ட விரங்கென் ரேதி
விம்மிதமெய்ப் புளகமொடு கண்டுளிபெய்
தருள்நோக்கம் மிகவும் பெற்று 41

[வாதவூரர் புறப்பட்டுச் செல்லுங்கால் நற்சகுனம் தோன்றுதல்]

[ஏழுசீர் விருத்தம்]

1493 தென்ன வன்பிரம ராய ரென்ரெரு
சிறந்த நற்பெயர் பூண்ந்தவர்
மன்னு தென்மதுரை வீதி சூழ்ந்துவெளி
வந்து வேகவதி மாநதிப்
பொன்னி லங்குகரை மேல்வ ரும்பொழுது
புனித நற்சகுன மாதல்கண்
டின்னி மித்தமிகு நன்மை யுற்றகுறி
யாகு மென்றுள மகிழ்ச்சியாய் 42

1491 ஐம்பானிரட்டிலக்கம் – நூறுலட்சம் (கோடி)

1493 வேகவதி – வையை நதி. நிமித்தம் – நற்சகுனம்.

[பரிவாரங்களோடு வாதவூரர் செல்லும் காட்சி]

1494 தரள வெண்மணி யிலங்கு பொற்சிவிகை
தன்னி லேறியரு கெங்கும்நீள்
உருள்பெ ருங்கனக மணிர தங்கள்சில
வும்பர் மேவுதுவ சத்தொடும்
மருவ முன்மிகு முகப டாத்தினெடு
வாகு கிம்புரி மருப்பசைத்
துரமி குங்கரிகள் மதமு டன்செல,மை
யுப்பு வீரைதரு புணரிபோல் 43

1495 அனும னித்துமிகு கொய்யு ளைப்புரவி
யழகு பண்ணமைவு பெற்றுநற்
ரெனிமி குந்தமணி யணிக முத்தினெடு
துள்ளி யாடிவர விகலின்மேற்
சினமி குந்தபடை கடலு டைத்துவரு
செய்கை போலளவில் சேனைகள்
புனைக ழற்பொலிவு மடிபெ யர்த்துமிகு
பூணு லாவுபுய வெழிலொடும் 44

[பல்வகைப் படைக்கருவிகள் ஏந்தி உடன்வருவோர் காட்சி]

1496 கூர்கொள் வாள்பலகை சிலைகள் வாளியெறி
குந்தம் வேல்முசலம் நேமிதண்
டேர்கொ ளுங்கழுமுள் பீலி கட்டுமணி
யீட்டி யெண்ணிலகொ டெய்தநற்
சீர்கொள் வெண்கவிகை யால வட்டமெழில்
சேர்ம ணிக்குடைகள் ஒன்னலர்
போர்க லங்கவெழும் மீன கேதகமுன்
பொங்கி யெங்கணு நெருங்கிட 45

1494 தரளம் – முத்து. சிவிகை – பல்லக்கு. உம்பர் – மேல். கிம்புரி – பூண். புணரி – கடல்.

1495 தொனி – ஒலி. இகல் – போர். கழல் – வீரக்கழல்

1496 பலகை – கேடயம். சிலை – வில். வாளி – அம்பு. குந்தம் – குந்தாலிப்படை. முசலம் – உலக்கைத்தண்டு. நேமி – சக்கரம். கழுமுள் – ஒரு படைக்கருவி. ஆலவட்டம் – விசிறி. ஒன்னலர் – பகைவர். மீனகேதகம் – மீன்கொடி.

[பல்வேறு வாச்சிய முழக்கங்களின் வருணனை]

1497 விசைய மாமுரசு பேரி நாகசுர
மிக்க பூரிகுழல் மத்தளம்
இசைமி குந்தவகீ முதல வாய்ப்பதி
னெட்டு வாத்திய மியம்பொலி
அசைவு கொண்டமுகில் குமுறு கின்றவென
ஆர்ப்ப வெண்டிசையு மாகதர்
திசைநி றைந்தபுகழ் செப்பி யன்பொடு
சிறந்த கட்டியம் விளம்பிட 46

1498 இலகு சாமரைகள் குஞ்ச நீள்விசிறி
இருபு றங்களு மசைப்பநன்
னலமி குந்தவிலை பாக டைப்பைசிலர்
நல்க வாய்ந்தொளி களாசிகொண்
டுலவி யன்பர்சிலர் வரநல் யாழினெடு
ருத்திர வீணைசுர மண்டலங்
குலவு நாதமொடு கீத வின்னிசைகள்
கூறியே சிலர்கள் சூழ்தர 47

[வாதவூரர் திருப்பெருந்துறையிற் புகுதல்]

1499 திக்கெ லாம்புகழ் மிக்கெ மூந்துகுண
திக்கு நாடிவரு போதுநல்
அக்க மேவுபுய வாத வூரரைமுன்
ஆத்ம நாதரருள் நோக்கெதிர்
இக்கண் வாவெனவோர் காந்த மாமலை
யிரும்பை ஈர்ப்பதென ஈர்த்திட
மிக்க சீர்பெருதி ருப்பெ ருந்துறை
விளங்கு மெல்லியினுள் மேவினர் 48

1497 விசையம் - வெற்றி. வகீ - சங்கு. மாகதர் - ஏத்துரைகூறுபவர்
1498 பாகடைப்பை - தாம்பூலப்பேழை. களாசி - காளாஞ்சி.
1499 அக்கம் - அக்கமணி.

[வாதவூரர் சிவிகையினின்றும் இறங்கிக் கூப்பிய கையினராய்ச் செல்லுதல்]

1500 அத்தலப் பெருமை தன்னை யுன்னியெழு
மன்பி னிற்சிவிகை விட்டிழிந்
தொத்த பேருணர்வின் அங்கம் எட்டொடும்
உவந்து மண்மிசை வணங்கினின்
றத்த முச்சியதின் மேன்மு கிழ்த்தலருய்
யான னங்குளிர்த டாகனீள்
எத்த கைப்பலத ருக்குலத் தையும்
இறைஞ்சி யப்பதியி னெய்தினர் 49

[வாதவூரர் ஒரு சிறந்த மண்டபத்தில் பொற்குவைகளோடு
தங்கியிருத்தல்]

1501 அங்க ணைந்திடுமவ் வெல்லை வெய்யவனும்
அந்த வெற்பினை யடைந்தனன்
பொங்கு சேணகலை யிங்கு வைகுதல்
புரிந்து கொண்மினென வோதியே
சங்க முற்றநிதி யங்கள் காவலர்கள்
தம்ம சத்திலுற வைத்தரும்
சிங்க மொத்ததுவை மண்டபத் தினிடை
சிறந்தி ருந்தனர் பெருந்தவர் 50

[திருவவதாரச் சருக்கம் முற்றும்]



1500 அங்கம் எட்டு – எட்டுறுப்புக்கள். அத்தம் – கைகள். முச்சி – உச்சி.

1501 வெய்யவன் – கதிரவன். அத்தவெற்பு – மேற்குமலை. சங்கம் – ஒருஎண்.

உபதேசச் சருக்கம்

[அறுசீர் விருத்தம்]

[சூத முனிவர் மற்றைய முனிவர்களிடம் கூறுதல்]

1502 திருவளருங் குருந்திறைமா ணைக்கர்பல
ரொடுமருட்டே சிகராய் வந்து
பொருவகலுந் திருவாத வூரர்தமக்
குபதேசம் புரிந்தாட் கொண்ட
அருளினையா னறிந்தபடி புகல்கின்றேன்
கேண்மினருந் தவர்காள் என்று
சுருதிமறை முனிவர்தொழும் ஆரணன்றன்
அருள்சேரும் சூதன் சொல்வான் 1

[திருப்பெருந்துறைவாழ் அந்தணர்கள் யாவரும் வந்து வாதவூரரைக் கண்டு முகமன் கூறல்]

1503 தென்னவன்றன் மந்தியரியார் குதிரைகொள
வந்தருளும் செய்கை யோர்ந்தப்
பொன்னகர்வாழ் திருமறையோர் எவர்களும்வந்
தெமதுவரல் புகல்மி னென்னத்
தன்னகர்வா யில்புரப்போர் சாற்றவெழுந்
தவரையிங்குத் தருக வென்று
முன்னணையி லவர்களுஞ்சென் றிறையணிநீ
றுதவிவளர் முகமன் சொன்னார் 2

1502 பொருவு – ஒப்பு. சுருதி – ஓலி. ஆரணன் – இறைவன். (வேதமயமானவன்).

1503 தென்னவன் – பாண்டியன். வரல் – வருகை. நகர் – மண்டபம். சாற்ற – (வாதவூரரிடம்) கூற. தருக – அழைத்துவருக. அணை – இருக்கை.

[வாதவூரர் இறைவன் பூசை முதலிய பற்றி அவர்களோ வினவுதல்]

1504 திருவாத வூரருமத் திருமறையா
ளருக்கெல்லாம் சிறப்பு நல்கிப்
பெருவாழ்வுக் குருந்திறைவ ரருட்பணியேன்
றகமுருகப் பேணி வாழ்வீர்
மருவாருந் தொடையிதழி நும்மிறைவர்
பூசைநலம் வளமோ வென்ன
ஒருநாளுந் தாழ்விலீரீர் வைத்தனனி
லென்னகுறை யுள்ள தென்னூர் 3

[குருந்திறைவனின் பெருமைகளைக்கூற அம்மறையவர்களோ வாதவூரர் சேட்டல்]

1505 குருந்திறைவர் பெருமையெலாம் அருள்புரிய
வேண்டுமெனக் குணக்குன் றன்ன
திருந்தியபே ரறிவுடையார் செப்பினரம்
மொழிமறையோர் செவியிற் கேளா
அருங்கலைநூற் றிரங்களெலாம் அறிந்தெவையும்
தெரிந்திடுமீர் அறியா மேன்மை
இருந்துளதோ உலகிலெமை யியம்புமெனு
முரையையமரு திசைக்க லுற்றும் 4

[மறையவர்கள் கூறத் தொடங்குதல்]

1506 என்றுபுகன் றவர்களிலோர் பெருமதியர்
அறைகின்றார் இறவா அன்பு
துன்றியமெய்ப் படிவத்தீர் கேண்மினெனத்
தலநாமத் தொகையும் நம்பர்
மன்றல்கமழ் குருந்துருவ மாமுறையும்
சோடசநா மத்தின் சீரும்
நின்றபுகழ் வனபுரகேத் திரமுறையும்
குருவடிவாய் நிமல மூர்த்தி 5

1504 ஏன்று – ஏற்றுக்கொண்டு. மரு – மணம். இதழி – கொன்றை.
1505 கேளா – கேட்டு. மருது – மறுக்காமல்.
1506 படிவத்தீர் – தவவேடமுடையீர். சோடசம் – பதினாறு. உறையும் – வாழும்.

1507 அயனரிருத் திரர்க்குபதே சம்புரிந்து
படைப்பாதி யருளு மாண்பும்
தயவொடிவ ரன்றியள விறந்தோர்கட்
கருள்புரியும் தகையு மின்ப
நயமருவும் யோகபீ டத்தியல்புங்
கவுரிதவம் நண்ணி யாற்றிக்
கயிலேயரன் றனிவேட்டுப் பிரியாதப்
பீடிகையிற் கலந்த வாறும் 6

1508 தங்கள்வர லாறும்முன் மறையவர்போல்
குருந்திறைவர் தாமே தோன்றி
எங்கள்நிலங் கவர்கவுமா ரனிவழுதி
பால்முன்வழக் கேற்றி வென்ரூர்
பங்கெமைத்தந் திடச்சொலியேற் றெம்மொடுதாம்
ஒருவரெனப் பன்னுள் நீங்கா
திங்கணிருந் தெமதுசிரூர்க் கோதுவித்துத்
திருக்குருந்தி லேய்ந்தா ரென்றும் 7

[குருந்திறைவன் வரலாற்று மாண்பும் அவ்அந்தணர்கள் வரலாறும் தீர்த்தங்களின் மகிமையும் கேட்டுப் பேரானந்தமுறல்]

1509 பொருந்துமழற் றீர்த்தமுதல் புனல்வளம்மற்
றுளவெவையும் புகன்ரூர், அண்ணல்
பெருஞ்சரிதை கேட்டுடலம் புளகமெழக்
கண்தாரை பெருகா நின்று
குருந்திறைவர் செயலிதுவோ வென்றிரவெல்
லாம்மனது குழைந்தன் ரோ
டிருந்தனர்மெய்ஞ் ஞானமுமக் கிப்பரிசா
மென்றென்றூழ் எழுமுன் கீழ்பால் 8

1507 படைப்பாதி – படைத்தல், காத்தல், அழித்தல். கவுரி – உமை. நண்ணி – நெருங்கி. வேட்டு – மணந்து.

1508 தங்கள் வரலாறு – ரூட்சாயணர் மரபில் தோன்றிய வரலாறு.

1509 புனல்வளம் – தீர்த்தங்களின்மகிமை. இப்பரிசு – இவ்வணம். ஏன்றூழ் – கதிரவன். எழுமுன் – உதிப்பதற்குமுன்னர்.

[எண்சீர் விருத்தம்]

[வாதவூரர் வைகறை எழுந்து இறைவனை வழிபடத் தம் பரிவாரங்களுடன் புறப்படல்]

1510 எழுந்துதிய மங்கள்முற்றிச் சேனை யாவும்
இருந்தவிடங் களிலிருக்க இயம்பி வேண்டும்
தொழும்பரிசா ரகரோடும் குருந்த மூலம்
தொழுவதற்கு வந்தருளும் தோன்ற லார்முன்
அழுந்துமிடர் கழுமுனிவர் திரள் களங்கங்
கமர்ந்துதவம் ஆற்றுவர்தம் சுருதி நாதம்
எழுந்துமுழங் கரவமுமெய்ப் பணியிற் ருக
மேவுமடி யார்திரளும், வீதிப் பண்பும் 9

[பெருந்துறையின் வள முதலியன கண்டு மகிழ்தல்]

1511 மாடகூ டச்சிகர மாண்பு மந்த
மாளிகைகள் மீதோங்கி வான ளாவி
ஆடுகொடி களினழகும் வாயில் தோறும்
அணிகெழுவெண் சுதையொழுக்கி யம்பொற் கும்பம்
பீடுபெற வைத்தெதிர்தோ ரணங்கள் தூக்கும்
பெற்றியும்வேள் விச்சாலைப் பெருக்கும் நன்னீர்
ஓடைதடா கச்செறிவும் அதனிற் ரூயும்
ஒண்டொடியார் மைந்தர்திரள் ஒழுக்கின் சீரும் 10

[யாவும் இறைவடிவாய் விளங்கக்கண்டு மகிழ்தல்]

1512 அந்தணரா குதியினெழும் புகைகொண் மூவெண்
றயிர்ப்பவெழுங் கருப்பாலை யமைவு நோக்கிச்
சிந்தைமகிழ்ச் சியினேடும் வாத வூரர்
சிவானந்தக் கடறேடிச் செலுமா ரூத்து
வந்திடும்போ திற்குருந்த வனங்க ளெங்கும்
வளருமருட் சிவானந்த மயம தாகி
இந்தவுல கெனுங்குறிசற் றேனுங் காட்டா
தேயரிய சிவவடிவா யிருந்து தோன்றும் 11

1510 அழுந்துமிடர் – பொருந்தும்வினைகள். சுருதிநாதம் – வேதவொலி.
1512 கொண்மூ – மேகம், அயிர்ப்ப – ஐயமுற. கருப்பாலை – கரும்பாலை

[கலி விருத்தம்]

[தருக்கள் நிறைந்த சோலைவளம்]

1513 மந்தமுறு தென்றல்மலர் வாசமொடு லாவக்
கந்தமிகு கற்பகங் கமழ்ந்துகனி தூவச்
சந்தன மரங்கள்மலர் தங்குமது மாரி
சிந்தநில மெங்குமலர்ச் செந்துகள் நிரந்து 12

1514 மென்பர லுருதவடி மீதமளி யாகப்
பொன்பொரு பலாச்சுளை பொழிந்துவழி தேனும்
இன்பமரு மாங்கனி யிழிந்தொழுகு தேனும்
அன்பரிவர் சேருமர சாமிதென வூர 13

[மயில்கள் ஆட வண்டுகள் பாடும் வருணனை]

1515 பூகமடல் கீறியெழும் பூவிரிக ளெங்கும்
சேகறுநல் வெண்கவரி போலசைவு செய்யத்
தோகைகள் விரித்துமயில் சுற்றிவிளை யாட
வாகுறுசு ருப்பினம் மலிந்திசைகள் பாட 14

[குயில், பூவைகள் கூவக் கிள்ளைகள் பேசும் வருணனை]

1516 கோகில மிடைந்திசைகள் கூவிமலி வெய்த
நாகுவளர் பூவைசிவன் நற்புகழ்கள் பேச
வாகுகிளி கேட்டது மதித்தபொருள் கூறிச்
சேகறுமெய் நட்பினொடு சேர்ந்துகளி கூர 15

[மாவினங்களின் வருணனை]

1517 வேய்மணி கலைச்சிதறி மிக்கநில மெங்கும்
ஏயுமுடு வானமென எங்கணும் விரிப்ப
நேயமொடு மான்மறிகள் நேரிரு புறத்தும்
தூயசிவன் கைம்மறியிற் றுள்ளிவிளை யாட 16

1513 மந்தம் – தளர்வு. கந்தம் – நறுமணம். மதுமாரி – தேன்மழை. செந்துகள் – மகரந்தப்பொடி. நிரந்து – பரவி

1514 பரல் – சிறுகற்கள். அமளி – மெத்தை.

1515 பூகம் – பாக்குமரம். சுரும்பினம் – வண்டுகள்.

1516 கோகிலம் – குயில் நாகு – இளமை. பூவை – நாகணவாய்ப்பறவை

1517 வேய் – மூங்கில். உடு – விண்மீன். மறி – கன்று. கைம்மறி – கையிலுள்ளமான்கன்று.

[வாவிகுளங்களின் வருணனை]

1518 மொய்த்தமலர் வாவியுறு சங்குகள் முழங்க
மத்தளமெ னப்பொலிசெம் போத்தொலிகள் வாய்ப்ப
எய்த்தவிடை மாதர்கள்நின் ரூடலென வெங்கும்
கொத்தலர் மிகுந்தணிகொள் கொம்பர்கணின் ரூட 17

[வாதவூரர் குருந்திறைவனைக் காணல்]

1519 நாரணுகு மவ்வன நலம்பல தெரிந்தே
சீரணுகு மாதவ மலிந்ததிரு வாத
வூரர்விழி நீர்சொரிய வுள்ளுருகி ஞானங்
கூரருள தாய்வளர்கு ருந்தையெதிர் கண்டார் 18

[வாதவூரர் மெய்ப்புளகமுறல்]

1520 கண்டக மகிழ்ந்துமிகு காதலொ டிறைஞ்சிக்
கொண்டகைசி. ரத்தொடு குவித்தனைகு வார்முன்
பண்டையறை யும்பெரிய பங்கயனும் மாலும்
அண்டர்களும் கண்டறி வொணதபெரு வாழ்வே 19

1521 அரும்பொருள் தெரிந்தவடி யார்களொடு மூலக்
குருந்தடியில் ஞானகுரு வாகிமுனி ருந்தார்
பரிந்தவினை யொப்புமல பாகுமுநற் சத்தி
பொருந்துவது மேகவியல் பிற்புணர்த லாலே 20

[குருவடிவாய் இறைவன் அமர்ந்திருக்கும் அவையைக்காணல்]

1522 கண்குளிர நோக்கியிரு கைகுவிய மண்மேல்
எண்குண வுறுப்புமமுந் தப்புளக மெய்தப்
பண்பொடு வணங்கியெதிர் இன்பமொடு பாரா
விண்பரவு மன்பர்குரு மேவுமவை கண்டார் 21

1518 எய்த்த – இளைத்த. கொம்பர் – பூக்கிளைகள்
1519 நார் – விருப்பம். சீர் – தவச்செல்வம்.
1521 வினையொப்பு – இருவினையொப்பு. மலபாகு – மலபரிபாகம். ஏகவியல்பு – ஒன்றுக.

1523 சாதிகுல மாண்பென்னுந் தன்மைய திலாத
ஆதிநடு ஈறிலியோர் அந்தணர்த மைப்போல்
நாதமுடி வாமெனுமோர் நற்கமல பீடத்
தோதுமறை யீற்றின்வதி யும்பதும மாகும் 22

[இறைவன் தக்கணமூர்த்தியாய் வீற்றிருக்குங்கோலம்]

1524 சரணமலர் தன்னிலொரு தாளாயுள் மடக்கிப்
பரவுறுமொர் தாளாயோகப் பட்டமிசைச் சாய்வித்
தொருகைமுழந் தாளின்மிசை வைத்தொருகை தன்னால்
முரண்மல மகற்றிடுசின் முத்திரைத ரித்தே 23

1525 தாழியறு கோணசிகை தனிற்குலவ வேய்ந்து
சூழுமெழி லாரமணி தோளிலொளி காலும்
ஈழமய மாயவுடை யேயவளர் நீறு
போழுமதி போலிலகு பொன்னுதலின் மின்னே 24

[மாணக்கர்கள் பணிபுரிதலைக் காணுதல்]

1526 அன்பொடடி யார்கள்சில ரார்கவரி குஞ்சம்
இன்புறுகா லவட்டமிரு பாலினு மசைப்பப்
பொன்புரையு மெய்யெழில் புகழ்ந்துசிலர் நிற்ப
மன்குலவு சிந்தையொடு வாழ்ந்துசிலர் துள்ள 25

1527 செஞ்சடில மேற்சீலர்கள் செங்கைகள் குவிப்பக்
கஞ்சநிகர் கால்கள்சிலர் கைவருடல் செய்ய
எஞ்சுதலி லாதருளெ னச்சிலர்பு லம்ப
வஞ்சவினை மாற்றென மதிச்சிலர்வ ழங்க 26

1524 சரணமலர் - பாதங்கள்.

1525 அறுகோணசிகை - (தக்கணமூர்த்தியின்) சடைமகுடம். ஈழமயம் - பொன்மயம்.

1526 ஆலவட்டம் - விசிறி.

1527 சடிலம் - சடைமுடி. கஞ்சம் - தாமரை.

[தொண்டர்கள் வணங்கி வேண்டுகின்ற காட்சிகளைக் காணல்]

1528 தொழுதுவலம் வந்துசிலர் தூமலர்கள் தூவ
அழுதிருகண் ணீரொடுமெய் யன்பர்சிலர் நைய
ஒழிவறுநன் னேயவமு துண்டுசிலர் வாழ
வழிபடுமெம் மால்கள்சிலர் வாங்கென வுரைப்ப 27

1529 சிரிப்பவரு முட்களி சிறப்பவரும் நெஞ்சம்
உருக்கமொடு மெச்சுவரும் உண்மைமொழி வாரும்
விருப்பமொடு கேட்பவரும் மேவியருள் நாமம்
தரிப்பவரும் நற்றலைவ! தாங்கெமையென் பாரும் 28

1530 பன்மலர் தொடுப்பவரும் பத்திபுரி வாரும்
சின்மயமெய்ஞ் ஞானநிலை சேர்ந்துகுழை வாரும்
வன்மனமில் பாலரொடுன் மத்தர்தமை யொத்துத்
தன்மயம துற்றுயர் சமாதியுறு வாரும் 29

[எழுசீர் விருத்தம்]

[இக்காட்சிகளைக் கண்டவாதவூரின் சிந்தையும் செயலும்]

1531 இவ்வித மாய்ந்ல் லடியார்கள் சூழ
இலங்கருள் புரிந்தவ ரவர்க்குத்
திவ்விய ஞான தேசிக ராகச்
சிறந்துவீற் றிருத்தல்கண் டிவரே
கவ்விய பாசக் கட்டறுத் தழியாக்
கதிகொடுத் தருள்பரம் பொருளென்
றுய்வகை யருளால் உணர்ந்துடன் நடுங்க
வூற்றெழுந் திருகணீர் பொழிய 30

1532 உருகிய வுளத்தோ டவனியின் மீள
வும்பணிந் தெழுந்துதம் வசமற்
றருகணைந் துரையும் குழறிடக் கதிர்கண்
டலர்ந்தசெந் தாமரை யனைய

1528 மால்கள் – காமவெகுளிகளாகிய மயக்கங்கள்.
1530 உன்மத்தம் – பித்தம். சமாதி – யோக சமாதி நிலை.

திருமுகச் செவ்வி மலரகின் றையன்
திருக்கணைக் கேற்றிரு கரமும்
விரைவொடு மெழுந்து சிரமிசை முகிழ்ப்ப
விருப்பொடும் சிலவிலை மொழிவார் 31

[வாதவூரர் குருவடிவாயுள்ள இறைவனை வணங்கி வேண்டுதல்]

1533 சுருட்டுவெண் டிரைசூழ் வேணிசேர் மதியும்
சுடருமுக் கண்ணுநாற் புயமும்
இருட்பொலி களமும்அங்கைமான் மழுவும்
ஏந்தெழில் அரவநற் பணியும்
பொருட்பெறு மெவையும் கரந்தெமைப் போலோர்
பொங்கொளி மேனியைத் தரித்திங்
கருட்பெருங் கடலாய் அமர்ந்தினி திருந்தே
அடியவர்க் கருள்சிவ குருவே 32

1534 உருவெடுத் தழலும் உயிர்க்கெலாம் உயிராய்
உடனமர்ந் திருவினை மலமா
மருவிடக்கொடுத்து நாளும்நாள் மூல
வலியினை மெலமெலக் குறைத்துத்
திருவருள் புரிய உருவுகொண் டருளும்
செம்மலே அடியனேன் பிறவிப்
பருவரற் காற்றென் கடைக்கணைக் கெனக்கும்
பாலித்திங் கெனையுமாட் படுத்தி 33

1535 இன்பமா ரடியார் இவரொடுஞ் சேர்த்துன்
இணைமலர்த் தாளருள் புரிந்தென்
துன்பெலாந் தவிர்க்க வேண்டுமென் றிரந்து
சொற்றனர் கருணைவா ரிதியை
முன்புநின் றிரந்து பணிபவர்க் கருள்சேர்
முகமளித் தனரரு குறையவ்
அன்பரி லொருவர் பணிந்தெழுந் திவர்மெய்
யன்பராண் டருள்செய வேண்டும் 34

1533 சுருட்டுவெண்டிரை – கங்கை (நதியைக் குறித்தது). களம் கழுத்து.
1534 மலவலி – ஆணவமலத்தின் வலிமை. பருவரல் – துன்பம்.
1535 வாரிதி – கடல். அருகுறை – பக்கத்திலிருக்கும்.

[இறைவன் திருவாய்மலர்ந்தருளுதல்]

1536 அருமையா லெமையாண் டருள்செயும் கருணை
அண்ணலே என்றனர் எவையும்
திருவுளத் தடைத்து மலபரி பாகஞ்
சேர்பரி பாகிநம் மருளுக்
குரியனு மன்ன தாகவென் றபயம்
உதவிநன் முகத்தினு லழைத்துக்
கருதிய தளித்து மயலுறே லுனது
கருத்தெலா முணர்குவே மென்றார் 35

[வாதவூரர் இறைவன் மொழிகேட்டுப் பரவசராய்க் களித்தல்]

1537 அடிகள்தந் திருவாய் மொழியினைக் கேளா
அடியனேன் உய்ந்தனென் றுருகிப்
படியின்வீழ்ந் தெழுந்து கண்கணீர் பொழியப்
பரவச மாகிநின் றெளிர்வெண்
பொடியணி மேனி புளகெழக் கருணைப்
புணரிபோன் றிலங்கெழில் மேனி
வடிவையே நோக்கி நின்றனர் கருணை
வள்ளலும் மதுரவாக் களிப்பார் 36

[இறைவன் தீக்கைதந்து ஏமைப் பூசித்துறைக எனல்]

1538 இன்றருட் டீக்கை தந்துப தேசம்
எவையுமீந் திடுதுமெஞ் ஞான்றும்
நின்றருள் சுரக்கும் குருந்தமூ லக்கீழ்
நிறையணி திருத்தி யாங்கெவரும்
சென்றிடா வண்ணம் புரிந்தெமைப் பூசை
செய்கவென் றருளினர் மகிழ்ந்தவ்
வென்றிசே ரருள்தந் தலையின்மேற் கொண்டு
மேவினர் அவர்பணி புரிவார்

1587 படி – நிலம் (பூமி). பொடி – திருநீறு. புணரி – கடல். மதுரவாக்கு – இன்மொழி.

[வாதவூரர் குருந்தமூலத்தை அணிசெய்து பரவல்]

1539 அருட்டிரு வடிவாம் அக்கினி தீர்த்தத்
தரன்கழல் நிகேந்துநீ ராடி
மருக்கமழ் திருநீ றணிந்துகண் டிகைநன்
மாலிகள் அணிந்துமெய் யுருகும்
கருத்தொடும் வாத வூர்த்திரு முனிவர்
காவலங் கியற்றிமெய் யடிகள்
இருக்குநீள் குருந்த மூலத்தை மிகவும்
எழில்பெற அலங்கரித் திடுவார் 38

1540 வந்தெழு தான சுத்தியாய்ப் புறங்கோ
மயங்கொடு மெழுகிநன் மணங்கள்
தந்திடுந் தொடர்மா லிகள்மிகப் புனைந்து
தமனியப் பட்டமும் பட்டுஞ்
சுந்தரப் பவளக் கொத்தும்வெண் டரளத்
தொங்கலுஞ் சுடர்மணித் திரளும்
பைந்துணர்க் கொழுந்தும் இரசதத்தகடும்
பரப்பியப் பந்தருட் டிக்கி 39

1541 தெங்கினெண் பழமும் கமுகமென் கனியும்
திகழெலு மிச்சைநா ரத்தை
யின்கனித்திரளும் கோவைசெய் தணிந்தங்
கெழில்மணித் தூணிரை தோறும்
நன்குறு மரம்பைக் குலைகளுங் கரும்பும்
நலமுறச் சேர்த்துநுண் ணறுநெய்
பொன்குல வகலிற் சுடர்பல வேற்றிப்
பொருவில்தோ ரணம்பல நிரைத்தே 40

1539 கண்டிகை – உருத்திராக்க வடம்.

1540 தமனியப்பட்டம் – பொற்பட்டம். தொங்கல் – மாலை. இரசதம் – வெள்ளி.

1541 கமுகம் – பாக்கு. அரம்பை – வாழை.

1542 சங்கொலி முழங்கத் தாரைபோற் சின்னந்
தருமொலித் திரள்பெரு கிடச்சீர்
பொங்குசே கண்டி மணியொலி யிரைப்பப்
பொருந்துநல் லோரையி லடியார்
துங்கநன் நிதியாய் இருந்தருள் சுரக்கும்
துணைவிழிப் பரமதே சிகரை
அங்கமா குருந்து மூலபீ டிகைபொன்
ஆசன மீதினி லிருத்தி 41

1543 அகலும்வெண் பட்டுத் தமனியக் கலிங்கம்
அழகுறப் புனைந்துநற் களப
மிகுநறுஞ் சாந்தம் வடிவெலாந் திமிர்ந்து
விரைமலர்த் தாழியோ டறுகு
தொகுவில்வம் முல்லை மல்லிகை கமுகீர்த்
தொடுத்தமா லைகள்பல சார்த்தித்
தகுநவ மணிகள் முத்துபொன் மகுடம்
தயங்குறச் சிரமிசை தரித்து 42

1544 மகரகுண் டலமும் தரளமா லிகையும்
தரணியும் பதக்கமும் வயிரத்
தகைபெறு கனகப் பூணுமா ணிக்கத்
தாழ்வடக் கொத்துமுப் புரிநூற்
றிகழ்சரப் பணியும் அக்கநன் மணியும்
திருப்பவுத் திரமும்பொற் சிலம்பும்
சுகமுறப் புனையும் இடந்தொறு மணிந்து
சுந்தரம் பார்த்துளங் கனிந்தே 43

1542 சேகண்டி – ஒருவகை மணி.

1543 கலிங்கம் – ஆடை. களபம் – நறுமணச் சாந்து. கமுகீர் – செங்கமுகீர்ப் பூ.

1544 தரளமாலிகை – முத்துமாலை. சுந்தரம் – அழகு.

[வாதவூரர் எளிய கோலந்தாங்கி உள்ளுருகி இறைவன் உபதேசத்தை நோக்கியிருத்தல்]

1545 மாசறுந்தமது திருவுடல் முழுதும்
வளர்திரு மேற்றெளி யொளிரத்
தூசுடை யகற்றிக் கோவணந் தரித்துச்
கருள்மயிர்ச்சி சிகைபுறங் குலவ
நேசமுட் பெருக நெக்குநெக் குருகி
மீர்த்திரள் இருவிழி பொழிய
ஆசறுந் தீக்கை பெறவருட் புதல்வர்
அருகுறு நிலைதெரிந் தருளால் 44

[இறைவன் வாதவூரர்மீது முதலாவதாக அருட்கண்சார்த்துதல்]

1546 அகில காரண ராமாத்ம நாயக
தேசிகர் தெக்கணை முகமாத்
தகவொடு மிருந்த சீடரைத் தமது
தயங்குபொற் கலியினல் மூடித்
துகளற வாறத் துவாவையும் அருளாற்
சோதனை செய்தய லாக்கி
மகிழ்வொடுந் திருக்கண் ணிலிருள் மலத்தை
வாதனை யொடுங்கெடப் பார்த்தே 45

[இறைவன் பரிசத்தாலும் வாக்காலும் அருளுபதேசம்பெறுதல்]

1547 திருக்கரஞ் சிரத்தில் அமைத்திரு மாயைச்
செயல்வினை யொடுங்கெடச் சிதைத்தே
அருட்டிரு நாவால் செவிப்புலன் வழியே
ஆருயிர் சிவமய மாகக்
கருக்கொளா வழிசேர் தருமத்தி பஞ்சாக்
கரவுப தேசமு மருளி
விருப்பிலான் மாவைத் தாமெனக் கருதும்
விளங்குநற் பாவக மியற்றி 46

1545 ஆசு – குற்றம். அருட்புதல்வர் – வாதவூரர்.
1546 வாதனை – வாசனை (தொடர்பு)
1547 இருமாயை – சுத்தாசுத்த மாயைகள். கருக்கொளா – பிறவி எடுக்காவாறு.

[வாதவூரரைச் சிவகரணராக இறைவன் செய்தல்]

1548 யோகமார்க் கத்தால் உடல்புகுந் துயிரை
யுளத்தொடு மெடுத்து மேலேற்றிச்
சோகமில் பிரமரந் திரவழி யாற்று
வாதசாந் தத்தினிற் கொடுபோய்
ஏக போகப்பே ரின்பினிற் கலப்ப
இரண்டறப் பிணைந்தொரு நிலையாய்த்
தேகமோ கத்தின் பரப்பெலா மறுத்துச்
சித்துரு பச்சிவ மாக்கி 47

[அபிடேகதீக்கை செய்தருளுதல்]

1549 சித்தமார் கரணச் செயலெலாஞ் சித்தாய்ச்
சேர்ந்திடச் செய்துபின் னுலகம்
முத்திபெற் றுயுமா வெனியபி டேக
முதன்மைசேர் தீக்கையு மியற்றித்
தத்துவ வுருவாம் உடல்பொரு ளாவி
தனைப்புன லொடுந்தர வேற்றே
எத்திசை யுயிர்க்கு மருட்குரு வாகி
யிருந்தருள் புரிகென வியம்பி 48

[இறைவன் தன்னைப் பூசிக்கப்பணித்தலும் அவ்வழி வாதவூர் பூசனை புரிந்தொழுகலும்]

1550 நான்றநம் பதத்தின் விதிவழி பூசை
நலம்பெறச் செய்யென மொழியச்
சான்றென வுயிர்கட் குயிருமாய் நிறையும்
தயங்கருட் புதல்வரா யுதித்தே
ஊன்றனு வகற்றும் அருட்டிரு வாத
வூரர்பூ சனைசெயத் தொடங்கி
ஆன்றபால் தயிர்நெய் சருக்கரை யினீர்
ஐந்து கவ்வியம்பழ வருக்கம் 49

1548 இரண்டு – சீவன் சிவன். தேகமோகம் – உடற்பற்று. சித்து – ஞானம்.

1550 நான்றநம்பதம் – தூக்கிய நமது திருவடி. ஊன்றனு – புனாவுடம்பு.

1551 தேன்கனற் சாறு சந்தனக் குழம்பு
சிறந்தநன் னீர்முதற் பலவும்
பாங்கொடு மபிடே கஞ்செய்து களபம்
பரிமளந் திமிர்ந்துபூப் புனைந்து
தாங்குமை வகையுண் டிகள்நெய் வேதித்துத்
தகுதிகொள் தூபதீ பங்கள்
ஓங்குபொற் குடைசா மரைதருப் பணமா
தியவுப சாரமு மியற்றி 50

1552 அன்பொடு மினிய பூசனை மகிழ்ந்தங்
கழகுறச் செய்தடி பணியப்
பொன்புணர்ந் திடுமா லயன்முத லெவரும்
புனல்கால் உண்டியாய்த் தவங்கள்
என்பெலாங் கரையைப் புற்றுமாய் ஆகி
இயற்றியுங் காண்பதற் கரிய
மின்பொரு மலர்த்தாள் வாதவூர் முனிவர்
மேம்படு சிரமிசை யிருத்தி 51

1553 நெற்றியிற் றிருநீ றணிந்துதாம் புனைந்த
நிறைமலர்த் தாமமும் பணியும்
சுற்றுபொற் றூசும் அளித்துமுன் னனைந்த
சுந்தர மாக்கிமற் றெவர்க்கும்
நற்றிரு வெண்ணீ றீந்து பண்புடனே
நமக்கரி யிவரையென் றியம்பப்
பொற்றிரு வடியை யருச்சித்து வணங்கிப்
புகழ்ந்துசேட் டரையெலாம் பணிந்தார் 52

1551 கனற்சாறு – கருப்பஞ்சாறு. திமிர்ந்து – பூசி. தருப்பணம்– கண்ணாடி.

1552 பொன் – திருமகள். புனல் – நீர். கால் – காற்று.

1553 தூசு – ஆடை. நமக்கரி – வணங்கு. சேட்டர் – அடியவர், சிறந்தவர்.

[இறைவன் ஞானபோதக ஏடு அளித்தல்]

1554 புலரியில் லாச்செங் கமலமே யனைய
பொன்னடி கமழுநீண் முடியார்
இலகுமவ் வடியா ரருளமேற் றவரோ
டியைந்துமெய்ப் பவம்பரி வுடனே
நலமிகு குருவி னடிதொழும் பொழுது
நற்சிவ ஞானபோ தகவே
டலர்முகக் கருணை யோடுமவ் வன்பர்
அங்கையிற் கொடுத்தனர் வாங்கி 53

[வாதவூரர் வேண்டலும் இறைவன் சாத்திர தீக்கை அருளலும்]

1555 நேத்திரத் தானஞ் சொரிந்திடப் பொருமி
நீதனே எனையுமோ ரடிமைப்
பாத்திர மாகத் திருவுளத் தடைத்த
பரிவினுக் கென்கைம்மா றென்கொல்
காத்திடு மெனைமுற் றுங்கடை போகக்
காத்தல்நின் கடனென விரங்கிச்
சாத்திரத் தீக்கை நூலொடுஞ் சுவானு
பவம்படத் தனையருக் குரைப்பார் 54

[இறைவன் பதிபசுபாசப் பொருள்களை விளக்குதல்]

[அறுசீர் விருத்தம்]

1556 மைந்த கேண்மிகும் பதிபசு பாசமாய்
மன்னநித்துவிதமா மூன்றும்
முத்த னதியா யுளவவை களிற்பதி
முதலென் றதுநாமாம்
பந்த மேவிய பசுக்களெண் ணிலவதின்
பாசமை வகையாகும்
அந்த வைந்தினில் ஆணவ மலந்தனை
டெழுந்துயிர் தொறுமொன்றாய் 55

1554 புலரி – சூரியன். ஏடு – சாத்திரச் சுவடி.
1555 பொருமி – விம்மி. நீதனே – நீதிமயமாக இருப்பவனே.
1556 நாமாம் என்றது இறைவன் தன்னைச் சுட்டிக் கூறியது. பந்தம் – கட்டு.

[பாசத்தின் விளக்கம்]

1557 செம்பிற் காளிதம் போல்மறைத்
திருவினைச் செயறரு கருமத்திலின்
பந்துன் பவிச்சையை செய்வித்
திடுமதற் கிசையமெய்ம் முதல்நான்கும்
பம்பு மாயைக ளிரண்டிலுண்
டாமவை பற்றுயிர்க் கருமபாகம்
அன்பி னூற்புரி திரோதையோர்
மலமதா யவைநான்கி னெடுங்கூடும் 56

[ஆணவமல விளக்கம்]

1558 ஆண வமல வடிவுயி ராய்விடி
னவையுமா ணவமாகும்
பேணு மம்மறு வடிவுயி ராய்விடின்
பிரிந்தவை யொருநான்கும்
பூணு நல்லருள் வடிவமே யாமிருட்
பொங்குமா ணவநீங்கக்
கோணி லாவவ் வுடம்பென வவையைநாம்
கூட்டிவாங் குவதாமால் 57

[கேவல, சகல, சுத்தநிலைகளின் விளக்கம்]

1559 மலம றைப்பெலாங் கேவல மாமிரு
மாயையி னெடுங்கூடி
அலம ரலுறு மெழுவகைப் பிறப்பினி
லாடுபம் பரம்போல
உலவி யேபிறந் திறப்பது சகலமாம்
உறுமலத் துயர்நீங்கி
இலகு தீவிரதர சத்திபதி நடுதம்மோ
டியைவதே மிகுஞ்சுத்தம் 58

1557 காளிதம் – களிம்பு. திரோதை – திரோதானசக்தி.
1558 கோணிலா – கோட்டமில்லாத.
1559 மலம் – ஆணவம். கேவலம் – கேவலாவத்தை. அலமரல் – சுழலுதல். சத்திபதி – சத்திநிபாதம் சகலம், சுத்தம் என்பவை அவத்தைகள்.

1560 சுத்த மென்னுரல் லவத்தையை யுயிர்வந்து
தோய்ந்திடும் வகைகூறிற்
பெத்த மொன்பதும் நான்குநூ ருயிரம்
பேதமாம் பிறப்பின்கண்
உத்த மப்பிறப் பாகிய மானுடத்
துலகினற் றலத்தின்கீ ழ்
மத்தி மக்குல மொருவிநற் குலத்தினின்
மருவியுற் பவஞ்செய்தே 59

1561 அவமி ருத்துவும் பிணியுமில் லாமறீர்க்
காயுவு முடைத்தாகிப்
பவமெ டுத்திடுந் தொறும்புறச் சமயத்தும்
பயிலுமுட் சமயத்தும்
புவியின் மேவிநா லாசிர மத்தொழில்
பொருந்தியுங் கலியோர்ந்தும்
கவின்ம றைச்சிரப் பொருட்பய னறிந்துநாட்
கழித்துமுற் போதுநீக்கி 60

[சாயுச்சிய முத்திபெறும் நீர்மை விளக்கம்]

1562 சிவசம் பந்தம தாகிய சைவத்திற்
சேர்ந்துண்மைச் சரியாதி
யவமி லாமலே செய்துநால் வகையினும்
அருள்பதிந் துயிர்மேலாய்ப்
பவவி னைக்கடற் குள்விடு மிருள்மலப்
பற்றறுத் தருளாகி
உவமை தீருநற் சுத்தமுற் றிருவினை
யொப்புமங் குளதாகி 61

1561 அவமிருத்து - அகாலமரணம். தீர்க்காயு – நீண்டஆயுள். பவம் – பிறப்பு. நாலாசிரமம் – பிரமச்சரியம் முதல் நான்குநிலை. கலி – சாத்திரம்.

1562 சரியாதி – சரியைகிரியையோகஞானங்கள், அவம் – குற்றம் இருள்மலம் – மாயாமலம்,

1563 ஞான சற்குரு வாற்சுத்த வவத்தையுள்
நல்குகாரியம் பத்தோர்ந்த்
தீன மாம்பசு பாச மொத்ததிலெய்
தாமலே சிவஞான
மோன மாகிய நேயத்தி லமுந்தியுள்
முகிழ்சிவ மதுவுண்டு
வானு லாவுகால் போலத்து விதமுத்தி
மருவிநாம் புரிகின்ற 62

1564 இன்ப சாகரத் திருத்தல்சா யுச்சிய
முத்தியி னியல்பாகும்
அன்பி னலிந்த முத்தியுற் றிடுவதற்
கமைந்திடும் படிநான்கிற்
றுன்பி லாதமெய்ப் பத்தியி லெமதடி
யவர்கூடித் தொழுதென்றும்
பின்பு சென்றவர் சொல்லுநல் லுறுதியைப்
பிடித்தொரு மையிலேடும் 63

[நால்வகை மார்க்க விளக்கம்]

(தாச மார்க்கம்)

1565 தாதமார்க் கமாகிய வுண்மைச் சரியையைச்
சகத்தினில் செயுமன்பர்
கீதி லாதரம் மாலயம் அலகிடல்
மெழுகல்பன் மலர்சேர்த்துக்
கோதி லாத்தார் அணிதல்பா டுதல்நந்த
வனஞ்செய்து குளிர்வித்தல்
ஒது நல்விளக் கிடலிவை செயிற்கொடுப்
போம்நமக் குறும்லோகம் 64

1563 காரியம்பத்து – தசகாரியம். கால் – காற்று.

1565 தாதமார்க்கம் – தொண்டு நெறி. சரியை – ஒழுக்கம். அலகிடல் – பெருக்கல். நமக்குறுலோகமென்றது சிவலோகத்தை.

[சற்புத்திர மார்க்கம்]

1566 பொருந்து புத்திர மார்க்கமாங் கிரியையைப்
புரிபவர் விரைப்போது
திருந்து தூபதீ பந்திரு மஞ்சனம்
திகழனம் முதலேந்திப்
பரிந்த வன்பொடு பூசனை செய்தெமைப்
பணிந்திடி லவர்தம்மை
வருந்தி டாதுநம் முலகத்தி லிருத்திநன்
மதிகொடுத் துயர்விப்போம் 65

[சக மார்க்கம்]

1567 பண்பொ டுஞ்சக மார்க்கத் தினைப்பயில்
பவர்புலன் போக்கித்
திண்பெரும் வளியடக்கி யாநெறிநற்
செழுமதி யமுதுண்டு
தண்பெ றும்பெருஞ் சோதியா யெமையெங்குந்
தயங்கிடக் காண்பாரேல்
எண்பொரு ளாவுறு மின்பமார் நமதுரு
விசைத்து வளர்த்தாள்வோம் 66

[சன்மார்க்கம்]

1568 சிறப்பு மிக்கசன் மார்க்கஞா னம்பயில்
திறத்தார்பல் கலையாய்ந்தே
உறப்பெ ரும்பல சமயத்தின் வழியெலா
முணர்ந்துகீ முறப்போக்கி
மறப்பி லாமலே திரிபதார்த் தங்களை
மனனஞ்செய் தருள்நாடிற்
குறித்தி டாத்திரி புடியறு ஞானசா
யுச்சியங் கொடுப்போம்யாம் 67

1566 புத்திரமார்க்கம் – மகன்மை நெறி. கிரியை – நற்செயல். விரைப் போது – மணங்கமழ் மலர். அனம் – அன்னம் (சோறு)

1567 சகமார்க்கம் – தோழமை நெறி. போக்கி – அடக்கி. வளியடக்கி – பிராணயாமம் செய்து. எண்பொருள் – எளியபொருள். இசைத்து – பொருந்தச் செய்து.

1568 சன்மார்க்கம் – ஞான நெறி.

[பகவிளக்கம்]

[கலித்துறை]

1569 உயிரின் தன்மையை யுணர்ந்திடிற்
படிகங்கண் ணுயர்வானம்
பயில்கு ணங்களீ யொத்திடும்
அவைகளிற் படிகம்
மயல்செய் கங்குலாய்ப் பன்னிற
மாய்க்கதிர் வடிவாம்
அயர்வு பெற்றுமூன் றவத்தையுற்
றுயிருமப் படியாம் 68

1570 கண்ணிருட் டோடு விளக்கொடுங்
கலந்துமுன் னுறினும்
எண்ணு பானுவின் ஒளிகலந்
திடினிவற் றிசையா
வண்ண மொன்றிலா வுயிருமெய்
ஞானமெம் மருவிற்
றிண்மை யாமிருட் கேவல
சகலத்திற் செறியா 69

1571 வானு றுங்குண மிரவெலாம்
இருள்வண்ணம் மருவிப்
பானு மேவிடில் ஒளிவண்ண
மாகியே பதியும்
ஈன மூற்றிடு பேதத்தில்
உயிர்மல வியல்பாய்
ஞான முற்றமுத் தியிற்சிவ
மாய்விடின் நலமாய் 70

1569 படிகம் – பளிங்கு. கங்குல் – இருள்.

1570 பானு – சூரியன்.

1572 என்னி டத்தினி லபேதத்தில்
நாம்மொழிந் ததுபோல்
மன்னு முத்தியில் எம்முன்நீ
யொழித்தென்றும் மருவில்
உன்னை நல்லுட லாக்கொண்டு
நாமுனக் குயிராய்
மன்னு வோமெம தானந்தம்
உன்னதாய் மருவும் 71

[சாத்திரவிளக்கங்கேட்டுணர்ந்த வாதவூரர் பெருமகிழ்வுற்றுப் பணிந்திருத்தல்]

1573 இன்ன வாறுப தேசமாய்ச்
சாத்திரத் தியல்பைக்
கன்ன மூலமாய் அருளினர்
அவரருட் கடலில்
உன்னு மைம்புலப் போதவன்
சிறைமுறித் துடனுய்
மன்னி னர்திரு வாதவூர்
முனிவரும் மகிழ்ந்தே 72

1574 தேக மும்பசுக் கரணமும்
திருவருட் கரண
மாக மாறிநற் சிவவடி
வாகிமெய் யன்பால்
மோக மாய்த்தமை யாண்டதே
சிகமுழு முதலோப்
பாக மேவுசொற் கனிவினுற்
றுதித்துமுன் பணிந்தார் 73

1572 அபேதம் – வேறுபாடின்மை. நீ – நீயாகும் தனித் தன்மை.

1573 கன்னமூலம் – செவி வழியாக. போதவன் சிறை – கெடிய வலிய சிறை.

1574 பசுக்கரணம் – ஆன்ம உறுப்புகள். தேசிகமுதலில் – குருவாகிய முதல்வனை. பாகம் – இனிமை.

[இறைவன் வாதவூரரின் மொழிகளைக் கேட்டுவந்து அவற்றை மாணிக்கவாசகமென்று கூறிப் பாராட்டல்]

1575 பணிந்தெ ழுந்துநின் றிரந்திடும்
அவரிடைப் பரமர்
இணங்கு நல்லருள் முழுவதும்
இருத்தி யின்றுதியின்
குணங்க ளேத்திமா ணிக்கவா
சகமென்று கூறத்
துணிந்த மெய்யரு ளுடையரப்
பெயரொடுந் துதிப்பார் 74

[மாணிக்கவாசகர் துதிமொழிகள்]

1576 அன்னை போலெனை யாதரித்
தாண்டவா சரணம்
பன்னு நான்மறை முடிவில்வாழ்
பரமனே சரணம்
உன்னு வார்க்கமு தாகிய
வொருவனே சரணம்
தன்னை நேர்திருப் பெருந்துறைக்
கதிபனே சரணம் 75

1577 செங்கண் மாயென் தேடுதற்
கரியவா சரணம்
பொங்க ராவொடு புனல்மதி
யணிந்தவா சரணம்
மங்கை யோகநா யகிபுணர்
மணாளனே சரணம்
சங்க ராசிவ புரத்துறை
சம்புவே சரணம் 76

1575 துதியின் குணங்கள் - வாதவூரர் பரவிய புகழ்மொழிகளின் தன்மை. இம்மொழிகள் மாணிக்கவாசகமென்று இறைவன் பாராட்ட அது முதலாம் வாதவூரர் மாணிக்கவாசகர் என்னும் பெயரோடு விளங்கினர் என்பதாம்.

1576 உன்னுவார் - நினைப்பார்.

1578 அழைக்கும் அன்பர்கட் கஞ்சலென்
றருளுவாய் சரணம்
குழைத்த மேருவில் பிடித்தகைக்
குழகனே சரணம்
இழைத்தி டாதுமெய்ப் பணிசெய்வோர்க்
கிரங்குவாய் சரணம்
தழைத்த பூங்குருந் துருவமாம்
பசுபதீ சரணம் 77

[மாணிக்கவாசகர் இறைவனிடம் இனிச் செய்யும் பணியாதென அருள் வேண்டுதல்]

1579 சரணெனைத் துதித்தி திரைஞ்சிவாய்
புதைத்தொரு புறஞ்சார்ந்
தருகில் நின்றடி யேனையும்
பொருளென வாண்ட
பரம னேயினி யான்செயும்
பணிவிடைக் குரிய
கருமம் யாதவை யருள்செயின்
புரிந்திடக் கடவேன் 78

[இறைவன் ஆலயம் அமைக்கப் பணித்து மறைதல்]

1580 என்று கூறலும் உயிருடல்
உடனெமக் களித்தாய்
துன்று பொற்றிரள் கொண்டெவ
ருந்தொழு துயவோர்
மன்ற மாகவிங் காலயம்
இயற்றென வழங்கி
வென்றி சேரடி யவரொடும்
கரந்தனர் விமலர் 79

1577 புனல் - கங்கை.

1580 பொற்றிரள் – குதிரைவாங்கக் கொண்டுவந்த பொருள், கரந்தனர் - மறைந்தார்.

[இறைவன் மறைந்தமைக் காற்றதவராய்ப் புலம்பல்]

1581 அண்ண லவ்வருள் புரிந்துருக்
கரத்தல்கண் டன்பர்
மண்ணில் வீழ்ந்தித வென்னகண்
மாயம்வல் வினேயேன்
எண்ணம் யாதென முடிந்ததென்
றிளங்கன்றைப் பொருவும்
வண்ணவா வெனக் கதறினர்
பதறினர் மயங்கி 0

1582 என்னை யீங்கொழித் தெவ்வுழிப்
புகுந்தனை யெந்தாய்
உன்னை யான்பிரிந் தெங்ஙனம்
வாழ்குவே னுனது
பொன்ன டித்துணை தந்தெனை
யாண்டதும் பொய்யோ
அன்னை ஐயகோ ஆற்றிலேன்
ஆற்றிலே னரசே ! 81

1583 வெய்ய னுமிவன் றனைமறந்
தாண்டனம் விருப்பார்
மையல் வாழ்வினுக் குரியனென்
றுளத்தினில் மதித்தோ
பொய்யி லாவடி யவரொடும்
புகுந்தனை புகழோ
செய்ய மேனியாய் உய்கிலேன்
உய்கிலேன் சிறியேன் 82

1581 மாயம் – மறைப்பு. பொருவும் – ஒக்கும். ஆ – பசு.

1582 வெய்யன் – விருப்பமானவன். ஆண்டனம் – ஆட்கொண்டருளி னோம். மையல் – உலகவாழ்வின் மயக்கம்.

1584 அரிய யன்முதற் றேவர்கள்
இருடிகள் யாரும்
தெரிவ தற்கரி தாகும்நீ
தேசிகன் வடிவாய்ப்
பரிவி னேடெனக் கெளிவரும்
பரிசதோ பாவிக்
குரிய தோதகா தாகையா
லொளித்தனை யெந்தாய் 83

1585 கிட்டொ ணுதபே ரின்பவா
ரியுட்புகக் கிடைத்தும்
கட்டி லாதபா விக்குண
வாய்த்தில வதனால்
முட்டி லேன்றலைக் கீறிலேன்
அழலிடை மூழ்கேன்
அட்டி லேனுட லினைவரை
யேறிவீழ்ந் தழியேன் 84

1586 பேதை யேனுயி ரொடுமிருந்
தனனருட் பெருமைக்
கேத மோவடி யாரொடும்
என்னையு மிருத்தின்
ஈத னேயெனை யிகழ்ந்திடில்
உனதடி யவரும்
தீத னென்றெனை யிகழ்வரே
திருவுளு மிரங்காய் 85

1585 இன்பவாரி – ஆனந்தவெள்ளம். கீறிலேன் – உடைக்காமலுள்ளேன். அட்டிலேன் – இறக்கச் செய்திலேன். வரை – மலை.

1586 ஏதமோ – குற்றமோ. தீதன் – தீமையுடையவன்.

1587 என்று நாதனைப் பிரிந்தகை
யறவினு லிரங்கி
ஒன்றும் வேறுணர் ராதுகண்
மழைதர வுடலம்
துன்று கம்பமீக் கொளவுரை
குழறிடச் சோர
நின்றெ முந்தழ லிடைப்புகு
மெழுகென நின்றார் 86

[சிலைகொளாதுகதறி உருகிநிற்கும் மாணிக்கவாசகர்பால்
அந்தணர்வாழ்மறையவர் குறுகிமொழிதல்]

1588 இன்ன வாறுநின் றிரங்கிய
வாதவூ ரிறைவர்
முன்ன ணைந்துநின் றந்தணர்
மறைத்திரு முனிவர்
துன்னு மாதவ முதியர்கள்
எவருமாய்த் தொடர்ந்தீங்
குன்ன ருந்திறல் மாதவத்
தையவென் றுரைப்பார் 87

[இறைவன் குருவடிவு மறைத்துக் குருந்துருவாய் விளங்குகின்றார்
கவலேவேண்டாஎன அவர்கள் கூறுதல்]

1589 குருந்த வாணரே தேசிக
வடிவமாய்க் குறுகிப்
பொருந்து மாறுப தேசமும்
பலபல புகன்று
திருந்து நல்விளை யாட்டதாய்
மறைந்தனர் திகைத்து
வருந்த வேண்டுவ தென்னவர்
வடிவமிக் குருந்தே 88

1587 துன்றுகம்பம் – நெருங்கிய நடுக்கம்.

1588 உன்னருந்திறல் – நினைத்தற்கரிய ஆற்றல்.

1590 உலகில் நீர்பெறும் பேறெவர்
பெற்றனர் உமது
நிலமை கண்டினம் வந்தருள்
புரிகுவார் நிமலர்
இலகு நெஞ்சயர்ந் திரங்குவ
தடாதென விறைஞ்சி
அலகி லாவகை தேற்றவுந்
தேறல ராகி 89

[மறையவர்கள் தேற்றவும் தேறலராய் குருந்தையும் யோகபீடத்தையும் வணங்கி இனியாதுசெய்வேன் எனக் கவலுதல்]

1591 பொழிந்த கண்களும் சிரங்குவி
கரங்களும் பொலிய
அழிந்த சிந்தைய ராயவ
ரொடுந்திருக் குருந்தை
எழுந்த காதலி னெடுந்தொழு
திறைஞ்சிமுன் றுதித்து
வழுந்த மெய்யருள் யோகபீ
டத்தையும் வணங்கி 90

1592 என்செய் வேனினி யென்றுமெய்
நடுங்கிநின் றரங்கி
யன்ப ராகுமப் பெரியரோ
டய்யர்கா ளடிகள்
பொன்க ளால்நமக் காலய
மாக்கெனப் புலனில்
என்ற தோடரு ளியதுள
தியற்றுமா றருள்வீர் 91

[இறைவன் பணித்தவண்ணம் ஆலயம் எடுக்கத் தொடங்குதல்]

1593 என்று கூறினர் அதற்கவர்
இயம்பிய முறையை
முன்பு கூறினர் அம்முறை
யாலய முயற்சிக்

கன்பர் பற்பலர் தமையமைத்
ததற்குவேண் டுவன
பொன்க ளோச்சொரிந் தீட்டினர்
விரைவொடும் பொலிய 92

[முறைப்படி ஆலயம் எழுப்புதல்]

1594 மன்னு தத்துவா தீதமாய்
வயங்கருள் மயமாய்
பொன்னெ ழிற்சபை தென்றிரு
வாசலாய்ப் புதிய
இன்ன லந்தரு குருந்தமூ
லத்தினு மியைய
மின்ன ளைமர் யோகபீ
டத்தினும் விரித்து 93

1595 மண்ட பங்களும் உயர்திரு
மதிளுமா ளிகையும்
அண்டர் போற்றுபொற் புறுவுயர்
கோபுர வமைவும்
தெண்டி ரைப்புன லெழுமழற்
றிருக்குளச் சிறப்பும்
தொண்டர் மேவுநன் மடங்களும்
எழிலொடுந் துலங்க 94

1596 சிற்ப நூற்படி கம்மியர்
அனேகராற் செய்வித்
துற்ற நற்பணிக் குரியபொற்
கலன்களு மொளிசேர்
பொற்ப ணித்திரள் வருக்கமும்
நவமணிப் பொலிவும்
பற்பல் பணிக்கு ரியயா
வையுமுற் படுத்தி 95

1593 வேண்டுவன – ஆலயம் கட்டுதற்கு வேண்டும் பொருள்களும், சிற்பிகளும்.

1595 அழற்றிருக்குளம் – அக்கினிதீர்த்தக் குளம்.

[அந்தணர் மூன்றூற்றுவர்க்கும் மணியமைத்துக் கொடுத்தல்]

1597 பொருவி லாவெழிற் பவுத்திர
மாணிக்க புரமாம்
மருவு மப்பதி மெய்யர்மூந்
நூற்றுவர் மகிழ
அருள்பொ ருந்துநன் மணிவளம்
வேண்டுவ அளித்துப்
பரிவி னுலவ ரொடும்மறை
விதித்திடும் படிக்கு 96

[இறைவனைப் பிரதிட்டைசெய்து வழிபட்டுறைதல்]

1598 வினவி யன்பொடு பிதிட்டைசெய்
திறைஞ்சிமெய் குளிரக்
கனவி னுங்குரு வேவலே
செயுங்கருத் தினராய்ப்
புனையும் நீறும்வெண் கோவண
வுடையுமே பொருந்தித்
தணம றந்திருந் தனர்திரு
வாதவூர்த் தலைவர் 97

[பரிகள் வாங்கிச்செல்ல உடன்வந்த பரிவாரங்கள் இவர்செயல்
கண்டு கலங்குதல்]

1599 தென்ன வன்பரி கொளக்கொடுத்
திடுந்திர வியச்செம்
பொன்னெ லாஞ்செல வழித்ததும்
துறவுருப் பொருந்தி
மன்னு கோலமுங் கூடவந்
தவர்கண்டு மயங்கி
என்ன காரியஞ் செய்தனர்
இவரென விரங்கி 98

1598 பிதிட்டைசெய்து – இறையவனே எழுந்தருளச்செய்து (பிரதிஷ்டை)
1599 கூடவந்தவர் – குதிரைகள் வாக்க வாதவூரருடன் வந்தவர்கள்.

[இவ்வாறு செய்தது பொருந்துமோ என வாதவூரரை அவர்கள் வினவுதலும் அவர் வாளாவிருத்தலும்]

1600 அண்டி டாதக லாதுதீக்
காய்தல்போ லலவோ
தண்ட நாயக ஞகிய
வரசர்பாற் சார்தல்
கொண்டு மன்னவன் நிதியெலாம்
அழித்தது குணமாய்க்
கண்ட பேர்க்கிவை யொக்குமோ
சொலுமெனக் கழற 99

[இச்செயலை அரசனிடத்தில் மொழிவாமெனச் சில அமைச்சர்கள் புறப்படல்]

1601 மோன மாயெதீர் மொழிகொடா
திருந்தள ரதுகண்
டேனை யோர்களின் மந்திரிச்
சனர்சிலர் எழுந்து
மான வேற்கர மாறன்முன்
இவர்செய்த வகையும்
ஞான மோனமுற் றதுஞ்சொல
விரைவொடு நடந்தார் 100

[வாதவூரர் இறைவன் திருப்பணிசெய்து துறவிபோல் வீற்றிருப்பதை யவர்கள் பாண்டியனிடம் கூறுதல்]

1602 மதுரையிற் சென்றுபாண் டியன்றனைக்
கண்டுமுன் வணங்கிப்
புதிய வாம்பரிக் கொளக்கொடுத்
தீட்டபொன் முழுதும்
சதுரகல் வேதமா புரத்திலோர்
குருவுரை தனைக்கேட்
டதிக பொற்புறு கோவிலுங்
குளமுமுண் டாக்கி 101

1603 உவகை கூரவுன் றனஞ்செல
வானபின் னுரையா
மவுன மாகியுன் மந்திரி
திகம்பர வடிவாய்த்
தவள நீற்றெளி தயங்கிடக்
கோவணந் தரித்துச்
சிவவுன் மத்தராய் இருந்தனர்
என்றுசெப் பினரால் 102

[மன்னவன் அதுகேட்டு வெகுண்டு அவரை அழைத்துவரப் பணித்தல்]

1604 கேட்ட மன்னனுட் சினந்துமம்
பொருளெலாங் கெடுத்தோ
வீட்டு புண்ணியஞ் செய்வதிங்
கவரையிக் கணத்திற்
கூட்டி வாருமென் றேவவன்
தூதர்கள் குறுகி
வாட்ட மின்றியங் கிருந்ததொண்
டரைக்கண்டு வணங்கி 103

[தூதர்கள் வாதவூரரை யழைக்க அவர் குருந்திறைவன் முன் செல்லல்]

1605 இக்க ணமுமைக் கூட்டிவந்
திடச்சொலி யிறைவன்
மிக்க கோபமா யனுப்பினன்
விரைவொடு மவன்முன்
புக்கி டத்தகும் இன்றெனக்
கேட்டுநற் புனிதர்
அக்க ணந்திருக் குருந்தமூ,
லத்தரு கணைந்தார் 104

1603 மவுனமாகி – வாய்பேசாமல். திகம்பரவடிவு – ஆடையற்றவடிவம்.

[அப்பொழுது இறைவன் முன்புபோல் சீடர்களோடு குருவடிவாய் அமர்ந்திருப்பது கண்டு பேரானந்தமுறல்]

1606 அன்ப ராமவர்க் கரசரால்
வருந்தொடர் பகற்ற
முன்பு போலருட் டேசிக
வடிவமாய் முதல்வர்
இன்ப மெய்யடி யவர்புடை
சூழ்தர விருந்தார்
மன்றலார் திருக் குருந்துசூழ்
மன்றமா மதன்கண் 105

1607 அண்ணல் முன்புபோல் வீற்றிருந்
தருளிய வதுகண்
டெண்ணம் வேறிலார் சேணிடைப்
பிரிந்தகன் றிரங்கும்
வண்ண ஆவினைக் காண்டல்போல்
வல்விரைந் தோடிப்
புண்ணி யத்திரு வடிகளைச்
சிரமுறப் பணிந்து 106

1608 பொருமி விம்மலோ டழுதழு
தரற்றினர் பொழியும்
இருகண் ணீரொடு மெனையொழித்
தேகிய தெவனென்
றுருகு மன்பருக் கினியகன்
றுறைவது முளதோ
அருளி னும்வைத்த படியிரு
வெனக்கரத் தேசிரமமைத்து 107

[அரசன் ஆணையை இறைவனிடம் வாதவூரர் புகலுதல்]

1609 அளவி லாதநற் கருணைசெய்
தனரக மகிழ்ந்து
புளக மீக்கொள வருள்மொழி
யின்றிவை புகல்வார்

குளக னேயெனை வழுதிதன்
னிடைவரக் கொடிதா
யுளம்வெ றுத்தழைத் தனுப்பினன்
சிலரையென் றுரைத்தார் 108

[இறைவன் வாதவூரரை அமைச்சர் கோலத்துடன் சென்று ஆவணி மூலத்தன்று குதிரைகள் வருமெனக் கூறச்சொல்லி ஒரு மாணிக்கத்தைத் தருதல்]

1610 அந்த வாசகங் கேட்டலும்
தென்னவ னமைச்சின்
பெந்த நீக்குதல் திருவுளத்
தடைத்தும் நீபெரிய
மந்தி ரிச்செய லாய்வந்த
வடிவுகொண் டேகி
கந்த மேவுதார்ப் புயத்திரு
மாறனைக் கண்டு 109

1611 ஆடல் வாம்பரி ஆவணி
மூலநற் றினத்தில்
கூடல் மாநகர்க் கெய்துமென்
றுரைத்திதைக் கொடுவென்
றீடி லாததோர் மணியளித்
தேந்தெழில் நுதலிற்
பீடு சேர்திரு நீறெடுத்
தணிந்தனர் பெரியோர் 110

[வாதவூரர் மணியை ஏற்று உளமுருகி இறைவன் கட்டளையை ஏற்றுக் கூடல்மாநகர் வருதல்]

1612 கொந்த ருமலர்க் கொன்றையா
னளித்தமா மணியை
யத்த மாமிரு மலரினேற்
றடிபணிந் தெழுந்து

1610 பெந்தம் – தொடர்பு. அடைத்தும் – எண்ணியுள்ளோம், கந்தம் – மணம்.

கர்த்த னேயெனை முழுவது
மாள்வது கடனென்
றெத்த வன்பினிற் பரிவுடன்
படர்ந்துசைந் துருகி 111

1613 அடிக ளேவலை மறுக்கவு மஞ்சிநின் றழுதார்
பொடிகொள் மேனியார் பிரிகல முனையொரு பொழுதும்
நெடிது நீமனங் கவலலென் றருள்செய நேர்ந்தங்
கொடிவி லாவிடை பெற்றுமுன் வரும்வடி வுடனே 112

[அரசன் வாதவூரர் வரவுகண்டு மகிழ்தல்]

1614 தாமு சூழ்ந்திடச் சிவிகைமேற் கொண்டுசஞ் சலமற்
றூன மொன்றிலார் மதுரையிற் சென்றுல களிக்கும்
கோனை யுந்திறற் பாண்டியன் றன்முனங் குறுகி
ஞான மேனியர் கண்டனர், அரசனுள் மகிழ்ந்து 113

[வாதவூரர் ஆவணி மூலத்தன்று குதிரைகள் வருமெனக் கூறி
இறைவனளித்த மணிமய மன்னனிடம் தருதல்]

1615 இருக்கை யீந்துநீர் போனகா ரியமெனென் றியம்பப்
புரக்கு மன்னவ ஆவணி மூலத்திற் புரவி
மருக்கு லாவுபூஞ் சோலைசூழ் மதுரையில் வருமென்
றுரைத் தரன்கொடுத் திடுமொளி தருமணி யுதவ 114

[வாதவூரர் தந்த மணியைப் பாண்டியன் பெற்று வியத்தல்]

1616 வாங்கி யிம்மணி யற்புத மெனமனம் மதித்துப்
பாங்கி னேடுளங் குளிர்ந்துமைச் சிலர்சொலால் பரிவற்
றீங்க ழைத்தனந் திடுமினென் றின்றும் நியற்கை
யோங்கு நீருல கத்துள தோவென வுரைத்து 115

1612 அத்தம் – கைகள் (அஸ்தம்)
1613 பொடி – திருநீறு. முன்வரும் வடிவு – அமைச்சர் வடிவு.
1615 மருக்குலாவும் – நறுமணஞ்சூழும். உதவ – அரசனிடம் தர.
1616 திடுமினென்று – விரைவாக.

[வாதவூரர் ஆலவாய் அழகனைச் சென்று வழிபட்டு மகிழ்தல்]

1617 வரிசை யாயொளிர் தூசளித் துமதுமா ளிகைக்கண்
பரிவி னேகுமி னென்றனுப் பினனருட் படிவத்
தரிய வன்பரும் எழுந்துசேற் கண்ணியோ டமரும்
கரிய கண்டர்தம் கோயிலுட் புகுந்தாளங் கனிய 116

[இறைவன் கட்டளையை நிறைவேற்றி அவர்தம் மாளிகையில் இருத்தல்]

1618 அருளி ருந்தவா றென்கொலென் றடிபணிந் தெழுந்து
பெருகு காதலிற் பரவிநின் றிருவிழி பெருக
மருவு மன்பொடு மீண்டுதம் மாளிகை யதன்கண்
திருவு லாவரு மணத்தொடுஞ் சென்றிருந் தனரால் 117

[சுற்றத்தார் ஆவணி மூலத்தன்று குதிரைகள் எவ்வாறு வருமென வினவலும் வாதவூரர் வாளாவிருத்தலும்]

1619 சுற்ற மாகுமித் தொடர்பினே ரிச்செயல் துணியப்
பெற்ற வாறிதென் னென்றுகை குவித்துநம் பெருஞ்சீர்
இற்ற தாமினி யாவணி மூலநற் றினத்தில்
கொற்ற வாம்பரி வருமென வெவ்வணங் குறித்தீர் 118

1620 உள்ள செய்கையை அரசனே டோதிடா துறுதி
கொள்ள விம்மொழி பகர்வரே விதுவென் குடிகே
டெள்ளல் சேர்கிலீர் என்செய்தீர் எனக்கரைந் திசைத்தார்
தெள்ளு நீர்மையார் மவுனமாயி ருந்தனர் சிறந்தே 119

1621 முன்பு போற்றினம் அரசுழைப் புகுந்தள முயற்சி
யின்க ணுந்திரு வுளத்தினைச் செலுத்தி மாவெய்தும்
என்ற நற்றினம் வருமள வுங்குரு வினைத்தாள்
அன்பி னேக்கியே யிருந்தனர் மதுரையம் பதியில் 120

1617 சேற்கண்ணி – மீனாட்சியம்மை.

1619 பெருஞ்சீர் – பெரும்புகழ். இற்றது – அழிந்தது.

1620 உள்ளசெய்கை – அரசனளித்த பொன்னை கோயில் கட்டச் செலவு செய்தது. எள்ளல் – இகழ்ச்சி. கரைந்து – வருந்திப்பேசி.

1621 ஏன்ற – பொருந்திய.

[இறைவன் ஆவணி மூலத்தன்று பரியொடுவரும் அற்புதத்தை இனிக் கூறுவேன் எனச் சூதமுனி கூறுதல்]

1622 தென்னன் மந்திரித் தலைவரிச் சிறப்பொடு மிருந்தார்
மின்னு பூம்பொழிற் றிருப்பெருந் துறைக்குரு விமலர்
மன்னர் மன்னனுக் காவணி மூலத்தின் வாசி
நன்ன லம்பெறக் கொடுவரு மற்புதம் நவில்வாம் 121

[உபதேசச் சருக்கம் முற்றும்]



1622 வாசி – குதிரை. அற்புதம் – வியத்தகு வரலாறு. நவில்வாம் – இனிக் கூறுவோம்.

குதிரையிட்ட சருக்கம்

[எண்சீர் விருத்தம்]

[மன்னன் ஆவணி மூலத்தன்று குதிரைகள் பற்றி வினவுதலும்
மற்றைய அமைச்சர்கள் வாதவூர் கூறியது பொய்
குதிரைகள் வரவில்லை எனலும்]

1623 ஆவ ணித்திரு மூலநன் னாள்தவா
ஆடன் மாக்க ளணையுந் தினமெனப்
பூவ லங்குதார் மன்னன்மற் றோரொரு
புரவி யெவ்வுழிப் போந்ததென் றோதினன்
மேவு மன்னவர் மன்னகேள் பொய்யிலை
மெய்ம்மை யாக்கும் விதியுண் டாகுமோ
வாவு தின்பரி யோரிடந் தன்னிலும்
வந்த தின்றவர் வார்த்தைபொய் யென்றனர் 1

[மன்னன் ஒற்றர் மூலம் குதிரைகள் வரவில்லை எனத்தெரிந்து
வாதவூரரையழைத்துப் பொன்னெலாம் திருப்பித்தருமாறு வற்புறுத்தல்]

1624 கேட்ட மாறனும் ஒற்றரை விட்டவர்
கேள்வி யாலுநற் றேசியின் றென்பது
வாட்ட மின்றி யுணர்ந்தத னாலரன்
வசன மொன்றையே நம்பிய வன்பரைக்
கூட்டி வந்திடச் சொல்லினும் சொன்மெயாய்க்
குறித்த னிர்பெரி யீர்பரிக் கென்றுரைம்
ஈட்டி நுங்கையிற் றந்திடும் பொன்னெலாம்
இங்கு வைத்தக லும்மென வன்பரும் 2

1623 ஆடன்மாக்கள் – ஆடல்வல்ல குதிரைகள். அணையும் – வந்துசேரும் விதி – நிகில். வாவுதின்பரி – பாய்ந்து செல்லும் வலிய குதிரைகள். அவர் – வாதவூரர்.

1624 தேசி – குதிரை. வசனம் – ஆவணி மூலத்தன்று குதிரைகள் வருமென்ற மொழி. ஈட்டி – தொகுத்து.

[வாதவூரரைக் காவலில்வைத்துப் பொன்னைத் தருமாறு காவலர்கள் வருத்துதலும் அவர் யாவும் சிவன் செயலென இருத்தலும்]

1625 வார்த்தை யொன்றுஞ் சொலாம லிருந்தனர்
மன்னவன் குறிப் பாற்சில வன்கணர்
கூர்த்த காவலில் வைத்துமன் பொன்னெலாம்
கொடுத்த லாமல் விடேமெனக் கூறினர்
ஆத்த வல்வினைக் கஞ்சுவ தில்லையாம்
அமைப்பெ லாஞ்சிவ னன்றியெய் தாதெனச்
சீர்த்த வன்பினர் தேறி யிருந்தனர்
தேடி யாண்ட சிவன்றுணை யென்னவே 3

[இறைவன் வாதவூரர்பொருட்டுக் குருந்தவனத்தில் உள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்க எண்ணுதல்]

1626 நினைக்கு முன்னடி யார்கள் மனத்துயர்
நீக்கி யாளுவ தேகட னுதலால்
அனைக்கு மைந்தர்தம் மீதெழு மன்புபோல்
ஆண்ட வன்பர்மீ தன்பு மிகுந்திடத்
தினைத் தினைப்பொழு துந்தரி யாமலே
திருப்பெ ருந்துறைத் தேசிக நாயகர்
நனைச்செ ழும்பெருங் குந்தவ னத்துறு
நரியெ லாம்பரி யாக நினைத்தனர் 4

[நரிகள் யாவும் பரியாகித் திரளுதல்]

1627 சம்பு வின்னினை வாலருள் மேவிய
சம்பு நாமந் தயங்கு நரியெலாம்
உம்பர் மீதுல வுங்கதிர்த் தேர்ப்பரி
ஒத்து வேக மொடுங்கதி யைந்தொடும்

1625 வன்கணர் – கொடிய ஏவலாளர். மன் – பாண்டியமன்னன். ஆத்த (ஆர்த்த) – சூழ்ந்த.

1626 அனைக்கு – அன்னைக்கு. தினைத்தனை – தினையளவு. நனை – மலர்.

பம்பு சீர்கொளி லக்கணம் வாய்த்துமுன்
பாய்ந்த னேகம் பரித்திர ளாகியே
நம்பர் காணும் படிக்கெதிர் வந்திட
நாதர் வாசித் திரள்களை நாடியே 5

[இறைவன் பரியாகிய நரிகளை அலங்கரித்துப் பூதகணங்களைப் பரிவீரர்களாக அமர்த்தி வேதங்களைத் தனக்குப் பரியாக ஆக்கிக்கொள்ளல்]

1628 கல்ல ணைத்திர ளுங்கடி வாளமும்
கவிழ்மு கப்பணி யுங்கள மீதினில்
புல்லு கிண்கிணி மாலையும் சல்லியும்
பொருந்து மாறற் புதத்தொடும் பூட்டுவித்
தெல்லை யற்ற புரிக்கொரு வீரராய்
ஏறு தற்கிறைஞ் சுங்கண நாதரை
ஒல்லை யிற்புக வேவிநால் வேதமும்
யோக வாம்பரி யாய்வர வுன்னினார் 6

[வேதமாகிய குதிரையின் வருணனை]

1629 எண்ணு முன்மறை நான்குமோர் வாசியாய்
எழிலு ருக்கொடு வந்துமுன் னின்றிடப்
பண்ண தற்குரல் லாகம மாகவும்
பன்ம ணித்திரள் நாதவிந் தாகவும்
வண்ண நன்னுதற் சுட்டிமு கப்பணி
வயங்கு பொற்கடி வாளம் பதப்படி
யெண்ணு நாற்பதத் தண்டை சிலம்புமற்
றியாவு மாறத்து வாகின் றியைந்திட 7

1627 சம்பு – சிவபெருமான். சம்பு – நரியின் ஒரு பெயர். உம்பர் – வானம். பம்புசீர் – மிக்க சிறப்பு. நம்பர் – இறைவன். வாசி – குதிரை.

1628 கல்லகண – கலகண (குதிரைச் சேணம் முதலியவை). களம் – முதுகு. உன்னினர் – நினைத்தார்.

1629 பண் – சேண முதலிய அணி. பதப்படி – காலடி. அத்துவா – உயிர் பரகதியடையச் செய்யும் காரணநெறி ; மந்திராத்துவா முதல் தாலாத்துவா வரை ஆறாகும்.

[குதிரைச் சேவகனுகிய இறைவன் தன்மையைக் கூறத் தொடங்குதல்]

1630 அமைத்தெண் டிக்கினும் மேலொடு கீழினும்
அட்ட வெற்பினும் அண்டங்கள் யாவினும்
இமைக்கு முன்சென் றுலாவி வருங்கதி
யேகொ ளுந்துடைத் தாகிய தேசியில்
உமைக்கு நாயகன் மிக்க பெருந்துறை
ஊர்க்கு நாயகன் ஏறியுல கெலாம்
சமைக்குஞ் சத்தீயி னுற்பரி பாகராய்த்
தயங்கு கோலத்தின் தன்மையைப் பேசுவாம் 8

[இறைவனுகிய குதிரைச் சேவகரின் தோற்றப்பொலிவின் வருணனை]

1631 உத்தி ரத்திசை யாரியர் மன்னர்போல்
ஒருதி ருப்பெயர் கொண்டொளி ருந்திரு
மத்த கத்தினில் மொய்த்திரள் .....
மன்னு பாகு வயங்கத் தரித்ததிற்
கொத்து நித்திலக் குச்சொன் றுலாவிடக்
கோதி லாக்குழை குண்டல மின்னநற்
சுத்த நெற்றிவெண் ணீற்றொளி மீதிலோர்
சுந்த ரத்தில கக்குறி தோன்றிட 9

1632 நீல மைக்களந் தோன்றிடா வாறுநன்
நித்தி லச்சரி சுற்றும் வகுத்திடக்
கோல மார்பினின் முப்புரி நூலொடும்
கொண்ட பொற்பணிக் கோவை குலாவநுண்
சீல மேவும்வெள் ளாக்கலிங் கத்தொடும்
சேர்ந்த கச்சுடை வாளும் சிறந்திட
ஓல மிட்டிரு தாமரைத் தாள்மிசை
ஒன்று நூபுர வோசை கலித்திட 10

1630 அட்டவெற்பு - எட்டுத் திக்கு மலைகள். கதி - செலவு. தேசி - குதிரை. சமைக்கும் - படைக்கும்.

1631 பாகு - வாகுவலயம். நித்திலம் - முத்து. குறி - அடையாளம்.

1632 மைக்களம் - நீலநிறக்கண்டம். சரி - ஒரு அணி. குலாவ - விளங்க. கலிங்கம் - ஆடை. நூபுரம் - சிலம்பு.

[இறைவன் தன் பரிவாரங்களோடு மதுரை நோக்கி வருதல்]

1633 அண்டர் போற்றெளி வெண்டிரு முண்டத்தோ
டானபள் ளிக்குப் பாயத்த ரூபராய்
கண்ட வன்பர்தம் உள்ளங் கவர்ந்திடும்
கவின் மிகுத்தவை வேல்கரத் தேந்தியே
திண்டி றற்பரி தாவ நடத்திநற்
சிவக கணப்பரி வீரர்கள் சூழ்ந்திட
மண்டு சீர்ப்புகழ் சேர்ந்தொளிர் பாண்டியன்
மதுரை மாநகர் நோக்கியே வந்தனர் 11

[குதிரைப் படைகள் செல்லும் வருணனை]

1634 அனும னித்திடும் ஓசை மிகுத்திட
அவனி யெங்கும்வி லாளி நகீனத்திட
மனதின் வேகமார் மல்லர்கள் போர்க்குறும்
வகைகள் போலவு மாமாயி லின்றிரள்
இனந டப்பது போலவுஞ் சல்லமீ
தெழுந்து பாய்ந்து குதிப்பது போலவுந்
தனுவி டுத்த சரத்தொகை போலவும்
தகுதி சேர்கதி வாய்ந்தநல் வாசிகள் 12

1635 வான மீதடி வைத்துல விச்சில
வாசி யோடின வாயுவே கத்தொடும்
கான மீதுல விச்சில வாசிகள்
கதியொ டேகின கால்நிலந் தோய்வுற
நானி லத்திட மெங்கும் உலாவியே
நடஞ்செய் தேசில வாசி நடந்தன
ஊன மற்ற கடற்றிரை போலவே
ஒழுங்கொ டுஞ்சில வாசிகள் சென்றன 13

1633 வைவேல் - கூரியவேல்.

1634 விலாளி - குதிரை வாயிடத் தூறியொழுகும் நுரை. வேகம் - சினம். சல்லம் - பன்றிமுள். தனு - வின். சரம் - அம்பு.

1635 கானம் - காடு. ஊனம் - குற்றம். கடற்றிரை - கடல் அலைகள்.

[குதிரை வீரர்களாகிய பூதகணங்களின் வருணனை]

1636 கன்ன டந்துளு வக்தெலுங் காரியம்
காட்டு சொற்பல பேசியங் கார்பரித்
தின்ன லம்பெறு மாப்பரி மீதினில்
ஏறு பூதர் இடத்தும் வலத்தினும்
மன்னு சாரிகை யாற்பரி விட்டுநல்
வாள்வி தித்தெறி வல்லியம் வேல்சிலை
துன்னு கேடகம் வீசிய சைத்துநற்
சுருதி மாவினைச் சூழ்ந்து தொடர்ந்திட 14

[பல்வகை வாச்சிய முழக்கங்களோடு குதிரைப் படைகள் வருதல்]

1637 தாரை யூரியெக் காளம்பொற் பேரிநற்
சங்க நாதங்கள் எங்கு முழங்கிடச்
சீருறுங் கொடை யாலவட் டங்கொடித்
திரள்க ளோடுவெண் சாமரை சூழ்ந்திடப்
பாரின் மீதுறு தூளியை முந்துவிண்
பருதி மண்டலம் மேலுமு லாவவந்
தேருறும் புகழ்க் கோன கர்க்கரு
கெய்தி னர்பரிச் சேனை யோடீசர் 15

[பரிகளின் வரவைக் கண்டவர் சிலர் அரசனிடம் சென்று தெரிவித்தல்]

[அறுசீர் விருத்தம்]

1638 பரிவரும் ஆர்ப்பும் நீடு
பல்லியத் தொனியும் தூளி
பெருகிய செயலுங் காணப்
பெற்றவர் சிலர்கள் ஓடி
அரியணை மீது வைகும்
அரசனைத் தாழ்ந்த னேகம்
புரவிகள் சமீப மாகப்
போந்தன வெண்ணூர் மன்னன் 16

1636 பூதர் – பூதகணங்கள். சுருதிமா – வேதமாகிய (இறைவன் ஏறி வரும்) குதிரை.

1637 ஏர் – அழகு. நகர் – மதுரை.

[மன்னன் மகிழ்ந்து மாணிக்கவாசகரை அன்போடு **அழைத்துவர** ஏவலர்களைப் பணித்தல்]

1639 சிந்தையின் மகிழ்ச்சி பொங்கச்
சேனையந் தலைவ ரோடும்
உந்துவாம் பரிகள் காண்பான்
ஓங்கெயிற் புறத்தோர் மேடைப்
பந்தரின் இருந்து வாத
வூரைப் பணிவி னேடும்
வந்திடும் படிக்க ழைத்து
வாருமின் விரைவி னென்ரான் **17**

[மாணிக்கவாசகர் மகிழ்ச்சியொடு மன்னன்பால் **வருதல்**]

1640 அருகுளார் சிலர்கள் ஓடி
அன்பரை இறைஞ்சி வேந்தன்
பரிகள்வந் தனவென் றுள்ளப்
பரிவொடு மழைத்தா னென்ரூர்
உருகிய வுளத்தார் கேளா
உற்றதோர் மகிழ்ச்சி கூரக்
கருணையங் கடல்செய் யாடல்
காண்பனென் றெழுந்து வந்தார் **18**

[மன்னன் முகமன்கூறி வரவேற்று மகிழ்தல்]

1641 மாடுறு வதன்முன் வேந்தன்
வாதவூ ரரசை நோக்கி
ஆடல்வாம் புரவி நீர்முன்
ஆவணி மூலத் தன்று
கூடன்மா நகரில் வந்து
கூடுமென் றுறைத்த வண்ணம்
பீடுற வருத வாலே
பெருமகிழ் வுற்றே மும்மை **19**

1639 ஏயிற் புறம் – மதிலின் புறம்.
1640 கேளா – கேட்டு. ஆடல் – திருவிளையாட்டு.
1641 மாடு – பக்கம். பீடு – பெருமை.

1642 படிறர்சொல் லதனைக் கேட்டுப்
பரிவின்றி யுரைத்தே மென்ரூன்
பொடியணி மார்பி னரும்
புரவல வதற்கே தென்ரூர்
ஒடிவிலா வுபசா ரச்சொல்
உரைத்தவ ரோடு மன்னன்
கொடிதிகழ் மதுரை மூதூர்க்
குணதிசை நோக்குங் காலை 20

[குணதிசைவழி குதிரைகள் வரவுகண்டு நடுவே வருபவர் ஆத்மநாதர் என்று மாணிக்கவாசகர் உணர்ந்துவத்தல்]

1643 மாதிரந் தோன்ரு வாறு
வரும்பரி வெள்ளங் காணூஉ
ஓதரும் அன்பர் இவ்வா(று)
உறுந்திரட் பரிகள் நாப்பண்
போதரு முயர்ந்த வெள்ளைப்
புரவியிற் புகுவா ராத்ம
நாதரென் றுணர்ந்தார் நெஞ்சி
னற்ரெழு துவகை பூத்தார் 21

[குதிரைகளின் வரவு வருணனை]

1644 வந்திடும் பரிமா வெள்ளம்
வட்டமிட் டெழுந்து நேர்பாய்ந்
தந்தரத் திசைகள் தூளி
யால்மறைப் புண்ண மீறி
யெந்திரம் வலமி டஞ்சா
ரிகையொடும் எழுந்து லாவித்
தந்தமேற் பாக ரோடும்
சார்தலும் நடுவர் பாய்மா 22

1642 படிறர் – வஞ்சகர். பொடி – திருநீறு.
1643 மாதிரம் – திக்கு. காணூஉ – கண்டு. நாப்பண் – நடுவே.

[வெள்ளப்பரிமீது வரும் சேவகரைக் கண்டு மன்னன் இவர் ஆலவாய் அண்ணலோ என வியந்து தன்னியறியாமலே கைகூப்பி வணங்குதல்]

1645 வரும்வரி சையுமவ் வெள்ளீ
வாசியின் றன்மேற் ரூன்றும்
ஒருவர்தஞ் சீரும் கண்ணுல்
உற்றெவர் களுங்காண் முன்னம்
பெருகிய விரைவி னேடும்
பேரர சவைமுன் செல்ல
நிருபனும் எழுந்து நின்று
நெஞ்சகங் கனிய நோக்கி 23

1646 ஆலவா யரன்ரு னிந்த
ஆரிய அரச னைகத்
தூலவாம் புரவி மீது
தோற்றிய தோற்றங் கொல்லோ !
ஞாலமா னிடர்போற் ரூன்ற
விலீயென நயந்து ளன்பாய்
ஏலுநன் னுதலின் மீதங்
கிருகையு மேத்தா நின்ரூன் 24

[அரசன் அளித்த பட்டாடையைக் கோலால் வாங்கி இறைவன் பரிமீது இடுதல்]

1647 மாறிலாக் கருணை வள்ளல்
மன்னவன் வணக்க மேற்றுத்
தேறுசீ ரருட்கண் ணுற்புன்
சிரிப்பொடும் பார்த்தார் வேந்தன்
மீறுபொற் ரூசொன் றீந்தான்
வேதமாக் கடவுங் கோலால்
பேறெனை தேற்று மாவின்
பின்புறத் திட்டார், மன்னன் 25

1646 தூலவாம்புரவி - பருமையான தாவிச்செல்லுங் குதிரை. ஏலும் - பொருந்தும்.

1647 மீறு - மிக்க. பொற்ரூசு - பொன்னுடை. கோல் - சாட்டைக் கோல். பேறெனை - ஒரு செல்வமெனக் கருதாமல். மா - குதிரை.

[அரசன் இறைவன் செயலைக்கண்டு புரியாதவனுய்ப் பார்க்க மாணிக்கவாசகர் அது அவர் தேச வழக்கென அமைதி கூறுதல்]

1618 மந்திரி யார்தம் சீத
மதிவத னத்தைப் பார்த்தான்
சிந்தனை வேறொன் றன்று
தேசத்தின் இயற்கை யென்றூர்
புந்தியின் மகிழ்ந்தான் மாறன்
புரவிகள் வைக்கும் வேந்தாய்
வந்தவர் மன்னு எங்கள்
வாம்பரிக் கதிகா ணென்றூர் 26

[குதிரைகளின் சிறப்பையும் கதிகளையும் காண்க என இறைவன் அரசனுக்குக் காட்டல்]

1649 நீதிசேர் வழுதி காணூஉ
நேசத்த ஞகி நின்றூன்
ஏதமில் பரிமா வீரர்
எவரையும் குறிப்பால் நோக்கி
வேதமா வினைமுன் பண்ணல்
விரைமலர்த் தாளின் எற்றப்
பாதநான் காலுந் தாவிப்
பாய்ந்துபாய்ந் தெழுந்த தன்றே 27

[கணங்களாகிய வீரர்களும் தத்தம் குதிரைகளின் கதிகளைக் காட்டுதல்]

1650 நந்தியே முதலாம் வீரர்
நாயகன் ஆடல் நோக்கித்
தந்தமாக் கடவி னர்கள்
தரைபிதிர்ந் தெழுமண் டூளி

1648 இச்செயல் தகுமோ வென்னும் குறிப்பால் மன்னன் பார்த்தான் அதனை உணர்ந்த வாதவூரர் அஃது அவர் நாட்டு வழக்கமென அமைதி கூறினர். கதி - நடைச்சிறப்பு.

1649 தாளின் - கால்களால். எற்ற - குறிப்போடு உதைத்து உந்த.

அந்தரம் மறைப்பச் சாரி
யாயிடம் வலஞ் சுலாவி
உந்த ஐங்கதியின் வேகம்
உற்றெழுந் தனமா வெல்லாம் 28

[மன்னன் குதிரைகளின் செலவு முதலாயின கண்டு வியந்துகூறல்]

1651 அவ்விய மிலாது கூடல்
ஆலவாய் வாழ்வோ ரன்றிக்
கவ்வையில் முகுந்த னதிக்
கடவுளர் யார்க்கும் நேரே
இவ்வணம் பரிகள் செல்வ
தென்றுகண் ணுழையா வாறு
செவ்விதம் நடத்தல் நோக்கிச்
செழியர்கோன் வியந்து சொல்வான் 29

1652 கற்றையங் கதிரோன் தூண்டும்
கடவுள்மாப் பரிய னேகம்
உற்றுவந் தனவோ ஓரேழ்
உவரியும் பொங்குங் காலத்
தெற்றிடுந் தரங்கக் காடோ
இவையன்றி யெவையோ மண்மேல்
சற்றுநான் காணே னிந்தத்
தகுதிகொள் குதிரை யென்றான் 30

[அரசே நீ செய்தவம் இது என வாதவூரர் கூறி மகிழ்தல்]

1653 திருந்திய வாத வூரர்
திருக்குரூந் திறைவர் அன்பிற்
றருந்திருக் கருணை யாடல்
தனையிமை யாது நோக்கிப்

1650 கடவினர் – செலுத்திக் காட்டினர். சுலாவி – சுழன்று. ஐங்கதி – குதிரை செல்லும் ஐந்து கதிகள்.

1651 அவ்வியம் – குறை. கவ்வை – குற்றம். செவ்விதம் – செம்மையான முறை.

1652 உவரி – கடல். தரங்கம் – அலைகள்.

பொருந்துமெய்ப் புளக ராகிப்
பொருவிலா வின்ப மோங்க
இருந்திடு மரச நீமுன்
பீட்டிய தவமீ தென்ரூர் 31

[பரிகளை ஒன்றுதிரட்டித் தலைமைச் சேவகராகிய இறைவன் நிற்றல்]

1654 மன்னனு மமைச்ச ரும்
மற்றுளார் எவரும் இவ்வா
றுன்னிய மகிழ்ச்சி கூறி
யுற்றுநோக் குற்ற காலைத்
துன்னிய பரிமா வேகந்
தோன்றிட வெவர்க்குங் காட்டித்
தென்னவன் முன்பு மாவின்
திரளெலாந் திருப்பா கின்ரூர் 32

1655 அலங்குகூர்ப் பரிக ளெல்லாம்
அணிகொளத் திருத்திப் பாசந்
துலங்குசெங் கரத்தால் வேதத்
துரகதஞ் சுருங்கப் பற்றிக்
கலந்தசீர் நடனத் தண்டைக்
கால்பெயர்ந் திடாத டாத்தி
இலங்குதேர்ச் செழியன் முன்வந்
தெய்தினர் குந்த வாணர் 33

[அரசன் அமைச்சரைநோக்க அமைச்சர் குதிரைகளை
ஒப்பிக்க வேண்டுதல்]

1656 மாறனும் இறைவன் மேனி
வடிவெலாந் திகழ நோக்கிக்
கோறிருத் தமைச்சைப் பார்க்கக்
குலவுமன் பருநேர் நோக்கித்

1655 அலங்குகூர் – அசைகின்ற பிடர். பாசம் – கயிறு. துரகதம் – குதிரை.

தேறுவார்க் கினியீர் மாவின்
றிரளெலாந் உதவு மென்றூர்
ஈறிலார் பரிமா மேனின்
றிழிந்தனர் யாவ ரோடும் 34

[இறைவன் பரியிலக்கணம் வல்லரோ டுசாவி இவற்றைக்
கொள்க என அரசனிடங்கூறல்]

1657 வேதமா விழிந்த வண்ணல்
வேந்தனை நோக்கிக் கூறும்
பூதலம் புகழுங் கூடற்
புரவல! எமது தேசத்
தேதமில் பரிகள் வேண்டி
ஈடினல் வரிசை யோடுன்
காதல்மந் திரிசேர் வித்தார்
கற்கிவந் தனமூ லத்தில் 35

1658 பரியிலக் கணங்கள் தேறும்
பண்டித ரோடு சாவிப்
புரவிகைக் கொள்க வென்று
புகன்றனர் மன்னன் மாக்கள்
அரியநற் குணங்கள் தேரும்
அவரொடு மிருந்து சாவ
பரவிய களிப்பிற் பாய்மா
விலக்கணம் விரிக்க லுற்றூர் 36

[தம்பரிகளின் இலக்கணப்பற்றி இறைவன் அரசனிடம் கூறத் தொடங்குதல்]

1659 ஆரிய னைக வந்த
வையனை சனத்தின் பால்தன்
நேரிருந் தரச மாவின்
இலக்கணம் முழுதும் விண்ணோர்

1656 கோல் – ஆட்சிக்கோல்.

1657 இழிந்த அண்ணல் – குதிரையினின்று இறங்கிய இறைவன். ஈழம் – பொன். கற்பி – குதிரைகள்.

1658 உசாவி – வினவி ஆராய்ந்து. விரிக்கலுற்றூர் – விளக்கினர்.

மேருவின் புறத்துத் தீட்டு
விதத்தநூல் முறையால் மாக்கட்
கோரெழு வகைத்தாந் தோற்றம்
உளவவை யுரைத்துங் கேண்மோ 37

[பரிகளின் பிறப்பிடம் இவைஎனல்]

1660 அயன்விழி நீர்தீத் தேவர்
ஆழியூன் கருப்பம் வேதம்
இடலுறுங் குடிஞை யண்டம்
இவையோரே ழிடத்தும் துய்ய
நயமதா மிறகி லேடு
நால்வகைச் சாதி பெற்றுப்
பயிலுமுக் குணங்கள் மேவிப்
பரியின முதித்த வன்றே 38

[முதல் மூன்று யுகங்களில் குதிரைகள் நிலை இவை எனல்]

1661 ஆயுளுங் கதியுஞ் சீரும்
ஆற்றலும் மிகுந்து விண்ணோர்
மேயநூல் யுகங்கள் மூன்றும்
விரும்பிட விளங்கு மந்தப்
பாயுமா வயதெண் ணான்காய்ப்
பகர்சிற கின்றி மாந்தர்க்
காயவர் கணம தாய
வடர்கலி யடுத்த வன்றே 39

[கலியுகத்தில் குதிரைகள் நிலைபற்றிக் கூறல்]

1662 ஆண்பரிக் காற்றுல் நோக்கால்
ஆனன மோக்கு மூச்சால்
பாண்பெறு குரலாற் பெட்டைப்
பரிகொளுங் கருப்ப மோகம்

1659 ஆரியன் – குதிரைச் சேவகன். விண்ணோர் – தேவர். நூல் – பரி இலக்கணம்.

1660 அயன் – பிரமன். ஆழி – கடல். குடிஞை – கூகை. அண்டம் – முட்டை. உதித்த – தோன்றின.

காண்புற இரண்டுங் கூடிக்
கலந்திடக் கொளுங் கருப்பால்
ஏண்பெறு மாற்றல் ரூபம்
இயைந்திட அவைகள் தாமே 40

[கருவுற்றுக் குதிரைகள் தோன்றுதல்]

1663 அகடுறு கருப்பந் தாங்கி
ஆறுநா ளளவு நீர்நாட்
டொகைபனி ரண்டிற் சோரி
தொகுந்தசை மூவைந் தாநாட்
டகுமதி யொன்றிற் பிண்டம்
தசமதி யளவின் முற்றப்
பகுதிகொ ளங்க முன்னல்
பசியொடு முதிக்கு மன்றே 41

[இக்காலத்தில் பிறந்த பரிகள் இக்குணங்களோடு திகழும் எனல்]

1664 செனிப்பது பகல தாகில்
தெளிபுன லுணினும் மேனி
பனித்திடு முறங்குங் கன்னம்
பருத்திடும் இரவிற் றோன்றின்
கனித்திடு மழகோ டாற்றல்
கதிபொறை யறிவு வாகை
தனித்தனி யதிக மாகத்
தயங்குமப் பரிகள் தாமே 42

[சுக்கில சுரோணித அளவையால் குதிரைகளின் குணங்கூறல்]

1665 சுக்கில மதிக மாயிற்
சொற்றிடும் வலிய தாகும்
மிக்கசோ ணிதமே யாகில்
விருப்பம் இல்லியாம் மற்ற

1662 ஆனனம் – முகம். பெட்டைப்பரி – பெண் குதிரை.
1663 அகடு – வயிறு. சோரி – குருதி. தசமதி – பத்துத் திங்கள். அங்கம் – உடம்பு.
1664 உணினும் – உண்டாலும். பனித்திடும் – நடுங்கும். வாகை – வெற்றி

தொக்கின்ற பரியா ஆகம்
உறினிரட் டையதா மின்னல்
மிக்கதாய் குரலின் ருலும்
மெய்யுறுப் பெவையும் பாழாம் 43

1666 கருவமா மறியின் ரொக்கிற்
கலந்திடும் வாயு வென்னில்
கருவிடும் சொறிநோய் ஊனின்
மருவுமேற் பருக்கும் மற்ற
துருவெழு கொழுப்பி னின்ரூல்
உறுமலி யாகும் தூங்கல்
குருதிசுக் கிலம தாயின்
கூழைடு குருடு மாமே 44

[கருவிடை வளரும் கணக்கு முதலிய கூறல்]

1667 உலவையில் வகைவெவ் வேறுய்
உருக்களின் மருவி லுமை
அலைதரு பசியே ரண்ட
மாலைமற் றுளவா மாவிற்
கிலகிய நாடி யோரா
யிரமவற் றிருமுப் பானும்
வலியவா றீரேழ் நாற்பான்
வளர்செவி சிரங்கால் சேரும் 45

1668 இறுகிடப் பிணித்தல் நாளும்
ஏறிடா திருத்தல் ஓதும்
மறுவறு கவள மூட்ட
மறந்திடல் குரப்ப மின்மை

1666 தொக்கு – உடம்பு. ஊனின் – தோலின்கண்.

1667 உலவை – காற்று. பேரண்டம் – ஒருநோய். இருமுப்பான் – அறுபது. ஆறுஈரேழ் – எண்பது நான்கு. நாற்பான் – நாற்பது.

தறுகிடப் புணர்ச்சி நீடல்
தந்திடுந் தீனின் மிக்க
முறுகிய கசப்பீ தோத
முறைபெறிற் பிணிகள் மிஞ்சும் 46

[பிறந்தது முதல் வளரும் உறுப்பு முதலியபற்றி விளக்குதல்]

1669 பிறவிகொள் மாத மொன்றில்
பிறங்குமுன் வாயிற் றந்தம்
சிறுகிட முளைத் திரண்டிற்
றெரிந்தொரு மூன்றும் நான்கிற்
குறையய லெயிறுண் டாகிக்
கோதிலாங் தாறிற் பின்வாய்க்
கறையெயி றுளவாய் நேரு
மவைமதி யொன்பான் பத்தில் 47

1670 துளையொடு வெளுத்து நீளும்
தொடர்பதி னொன்ரு மாண்டில்
இளகிடா திறுகி மற்ற
எயிறெலா முளைக்கு மாண்டு
விளையிரண் டரையில் முற்பல்
விழுந்து மூன்ருண் டிலுண்டா
முளவய தொருநான் கைந்தில்
உதிர்ந்தெயி றெவையு முண்டாம் 48

1671 ஐந்தின்மேல் வயதோ ரொன்பா
னைம்வரை யடையிற் றந்தம்
வெந்திடுங் கரிபொன் முத்து
மிளிருமை யவிதேன் திங்கள்

1668 பிணித்தல் – கட்டுதல். கவளம் – உணவு. குரப்பம் – மயிர்சீவும் குதிரைச் சீப்பு. ஓதம் – நீர் சுரக்கும் இடம். உறைபெறின் – தங்குதலுறின்.

சிந்துரற் குளிபோ லாகித்
திகழ்ந்தசை வோடு நீக்கம்
வந்திடும் பரிகட் கெல்லாம்
வருமிவை யெனல்கூ டாவே 49

1672 மாதமோ ரேழிற் குஞ்சி
வளர்ந்திரு குங்கா ணெட்டின்
ஓதிமுற் றுதிர்ந்துண் டாகும்
ஒன்பதின் முழக்கஞ் செய்யும்
பேதமி லிரண்டாண் டென்னில்
பிறந்தெழில் சிறக்கு மண்டம்
ஈதெலாம் பரியின் ரூற்றத்
தியல்,சுழிக் குணமேற் சொல்வாம் 50

[சுழியிலக்கணம் பற்றி விளக்குதல்]

1673 துரகத வுருவிற் காணும்
சுழிகள்தெண் ணூற்ரே டாரும்
அரியனீர்ச் சுழியல் பூர
மான்கன்று நக்கல் சிப்பி
மரவடி யதனிற் பாதி
மல்லிகை யரும்பு போலாம்
புரவிகள் மேனி தங்கப்
போந்திடும் சுழிகள் தாமே 51

[சுழியமைப்பால் வரும் நன்மை தீமைகளை விளக்குதல்]

1674 மத்தகஞ் சிரந்தோள் மார்பு
வயிற்றிடை யிரண்டி ரண்டாய்
ஒத்துநன் முகத்தின் மேல்வாய்
இதழிலொவ் வொன்றதாக

1671 தந்தம் – பல். ஐயவி – சிறுகடுகு. திங்கள் – சந்திரன். குளி – குளிகை. நீக்கம் – பல் விழுதல்.

1672 குஞ்சி – மயிர். ஓதி – மயிர். சுழி – சுழியமைப்பு.

1673 அரியல் – கீறியிருத்தல். பூரம் – தேள்.

வித்தக வலமாய்ச் சுற்றி
விளங்கிடுஞ் சுழியா மென்னில்
உத்தமம் இடமாய்ச் சுற்றல்
உறுஞ்சுழி யென்னிற் றீதே 52

1675 உரைத்தவிச் சுழிகள் பற்றி
ஒன்றிருந் தொன்றி லாது
வரைந்திடுந் தானந் தப்பி
வதியினும் பிழைத்திட் டாலும்
புரக்குநன் னிதியம் மக்கள்
போக்குறும் பயங்க லாபம்
கரைந்தழக் கொடுக்கும் அந்தக்
கற்கிநோக் கினுமா காவால் 53

1676 செவியடி கந்தம் முன்கால்
திகழ்வயின் கடைவாய் மஞ்சின்
கவினவிவ் விரண்டாய் மார்பு
களங்களத் தருகு கன்னந்
தவிரவொவ் வொன்றுய் நெற்றி
யதிலொரு நான்காய் நின்று
குவிதரு சுழிகள் மேவிற்
கோதில வாகு மன்றே 54

1677 ஆனைத் திருசா ரின்கீழ்
அசைசெவி நாசி நெஞ்சு
சானுமுன் சந்து கீழ்வாய்த்
தருகுதங் கந்த ரோமம்

1674 மத்தகம் – தலை உச்சி. சிரம் – தலைமுகப்பு. இதம் – உதடு.
1675 தானம் – இடம். வதியினும் – இருந்தாலும். பிழை – மாறுபாடு.
கற்கி – குதிரை. நோக்கினும் – பார்த்தாலும்.
1676 கந்தம் – மூக்கு. மஞ்சின் – மேகத்தின். கவின – அழகுற.
களம் – கழுத்து. கோதிலவாகும் – குற்றமிலவாம்.

ஊனமில் புருவ மத்தி
உறும்விலாப் புறங்க துப்பில்
மானவே லரச தோன்ற
வருஞ்சுழி பழுதா மன்றே 55

1678 நுதலுரந் தாள்கள் கோசம்
நுவலண்டம் முதுகு குய்யம்
துதிபெறு களத்தின் மேவு
சுழிவலம் புரிய தாயின்
அதிகநன் னலமாம் சானு
அண்டகோ சங்கால் சென்னி
பதிசுழி விலகிற் றீதாம்
பகர்சுழி இலவுந் தீதே 56

1679 வளர்சுழி முதுகி னின்று
வாலள வொழுகும் மாவும்
சுளியிது மட்டி யென்று
சொலப்படும் பரியுந் தீதாம்
தெளிசுழி இடச்சுற் றேனும்
தீதென லாகா தீய
தொளிர்வலம் புரிய தாகி
யுறினும்நன் ருகா தன்றே 57

1680 நகங்கணிற் சிறிய பூப்போல்
நண்ணிலப் பரியா காவாம்
முகஞ்செவி கதுப்பு நெற்றி
முடிகளில் மார்பி லந்தத்
திகழ்ந்தெழு வெளுப்புச் சேர்ந்த
திண்பரி யுளவேல் மிக்க
சுகந்தரு மகப் பேறுண்டாந்
தொல்லுல களிக்கும் கோவே 58

1677 நாசி – மூக்கு. சானு – தோள், முழந்தாள். பழுது – குற்றம்.

1681 இருதுடை புருவ நாப்பண்
இருவிழிக் கீழ்வால் கண்டத்
தருகரை துண்ட மண்ணீண
யருகித ழிவையி லப்பூ
மருவிய புரவி சேரின்
வருமிடி பலவும் எய்தி
ஒருவுவ ருயிரும் மாக்கட்
குரைக்குதும் நாம பேதம் 59

[குதிரைகளின் பெயரும் அவற்றின் இலக்கணங்களும் கூறி விளக்குதல்]

1682 வாலுடல் கந்தம் வெண்மை
வாய்த்தெழு கோசபீசம்
காலுறு குளம்பு சேந்தாற்
கவுடனும் உடல்கா ராகி
மாலுறும் விழிகள் சேந்தால்
வழங்குவர் கயிரனென்று
சாலவாய்ச் சிவப்பு வெண்மை
தாழ்வுறின் வீரசன்னன் 60

1683 விசாரமில் பொன்போல் மேனி
விலாங்குலங் கறுக்கிற் குங்கும
தெசாளும் பொன்னின் மைவால்
சிவப்பொடு கூடி .....
உசாவு கெ...ஞ்...ச நீலன்
உடல்மயிர் கறுப்பு வெண்மை
வசீகர மாகக் கூடி
வயங்குமா வார ளுமே 61

1681 மண்ணீண (கழுத்துப்போலும்) மிடி - வறுமை. நாமபேதம் - பெயர்வகைகள்.

1682 சேந்தால் - சிவப்பாக இருக்குமானால். காராகி - கருமையாகி. மால் - பெரிது. தாழ்வுறின் - குறைந்தால்.

1684 கறுப்பிடை வெண்மை செம்மை
கபிலுறல் கேட்டி காஞ
மருப்பிடர் வெள்ளை யூடு
மருவிடுங் கபிலை யென்னிற்
பொருத்தகஞ் சிரிசா ரன்காற்
புறக்குளம் பணுதோல் கோசஞ்
சிறுத்திடக் கறுத்து மேனி
சேர்ந்திடில் வெண்மை நீலான் 62

1685 கருமயி ரெவையு மாகிக்
கபிலைசற் றணுகு மாகில்
வருபெயர் தூம ஞகும்
வடிவெலாஞ் சிவப்ப தாகி
உரமுகம் வெளுக்கிற் போல்வான்
உடம்பெலாம் வெளுத்துச் சற்று
மருவிடிற் கபிலை, குன்று
மணிநீல மாகு மன்றே 63

1186 உடல்வெண்மை தன்னின் நீலம்
உறிற்கரு நீல ஞகும்
படர்தலை கறுத்து மேனி
பாலெனின் முஞ்ச சேனன்
அடுபுகை யுடலாய்க் கந்தம்
ஆனனம் வால்கு ராலாய்
விடுவது மவ்வி சாரன்
விழிகந்தம் குரம்வால் மையாய் 64

1687 பசுமைபொன் வெண்மை மூன்று
பரித்தல்கற் பூர மன்னும்
விசைதரு குரம்வால் கந்தம்
மிகக்கறுத் துடல் வாலானிற்

1684 கபிலுறல் – கபிலநிறமுறல்.
1686 குரம் – குளம்பு.

றசைமிடை மஞ்சனன்கே
சரிகறுப் பரத்த மான
திசைவுறு சமமேற் சம்பான்
எனும்பெய ராகு மன்றே 65

1688 கார்மிகுந் தரக்குக் குன்றின்
கரியசம் பாலும் மேற்றோல்
ஊர்தரு கருமை வெண்மை
உடலெலாம் அருஞ் சிவப்பு
வார்தரு கோசஞ் சென்னி
வாலிரு குரத்தி னோடு
பார்வையு மெனிற் சுவேத
பாடல மென்ன லாமே 66

1689 தோல்சிறு சிவப்பு வெண்மை
தொகுமயிர் விழி காலாய்நன்
நூல்தரும் பாடலப் பேர்
நுவலரு வெழுந் தூடுடே
கோலிய சிவப்பு நேரிற்
குருவிந்த நீலனுகும்
வால்கறுத் தேக வன்ன
மாக்கரு வால னுமே 67

1690 வன்னமொன் ருகிற் சிந்து
வாரமாம் வேற்று வன்னம்
பின்னமி லாது வட்டம்
பேரிலழ காளு மாவின்
தன்னுருக் கறுத்துக் கோசம்
தாள்குளம் பண்டம் சேக்கில்
நன்மைகொள் கிரவுஞ் சப்பேர்
நண்ணுமென் றுரைக்கும் நூலே 68

1690 சேக்கில் – சிவந்திருப்பின். நண்ணும் – பொருந்தும். நூல் – குதிரை நூல்.

1691 உருகிறங் கபிலை கந்தத்
துற்றுவா ளவோர் கீற்றுத்
தருமுது கென்னிற் சாரான்
சராவுறிற் சிங்க வன்னம்
பொருவகல் சிங்க போகன்
பொன்னிறங் குளம்பு கந்தம்
விரவிய மயிர்க்குண் டாகின்
மிளிரும்பொற் கேச னுமே 69

1692 முருக்கிலா நிறம்வால் நீலம்
முதிர்பசப் புருவிற் கீற்றுய்ச்
சுருக்கிலா தாகின் நாகா
சுவமென லாகு மேனி
தரிப்பதோர் நிறமாய்க் கந்தம்
தாள்முதல் வாலீ ருக
விரித்திடும் முதுகிற் பொன்மை
மேவுதல் கனவட் டம்மே 70

1693 வட்டமாய் நாபி சூழின்
வளரும்பொன் வெள்ளி மாமை
பட்டவர்த் தனமாங் கண்கள்
பாலுடன் நீல மாகிற்
கட்டெழில் மல்லி காணும்
காணுட லாக்குவால் தோல்
ஒட்டுதல் கொங்கான் காவி
யுறுநிறங் கொங்கா னுமே 71

1694 கந்தம்வால் முகங்கால் மார்பு
காணுற வெழுத்துச் சானு
வந்தவால் காலு மாலோ
டணியட்ட மங்க லாணுஞ்

1698 நாவி – கொப்புள்.

சந்தமார் முகங்கால் பாலாய்ச்
சானுவுங் குளம்புங் காராய்ப்
பந்தமார் உடல்சேப் பேறிற்
பஞ்சமங் களனு மன்றே 72

[குதிரைகளின் உயரம் பருமன் முதலிய அளவையும் அவற்றின் விளக்கமும் கூறல்]

1695 கரைந்தது பிடியேற் பஞ்ச
கலியாணி யாகு மே,நாம்
விரைந்தவை யளவு சொல்வாம்
வேந்தகேள் நன்மா விற்கு
வரைந்தவங் குலியி னெண்ணல்
வாய்முதல் வாலின் காறு
முரந்தரு மறுபா னீளம்பா
னேதுநாற் பான்சேர் நூறும் 73

1696 ஆனன நீள மெண்ணுன்
காய்,வெரின் எண்ணு றைந்தாய்
ஊனமில் சந்தா றைந்தாய்
உயர்கந்த மாறெட் டாகிக்
கூனும்வா லீரைந் தாமங்
குலிபெறி னலம தாகும்
ஈனமில் முன்கால் பின்கால்
இடைவெளி விரலி னெண்ணல் 74

1697 எண்பதோ டிரண்டா றேடே
எழுபதா மறுபத் தாறு
பண்கொள்மூ வகைக்காங் கோசங்
பகர்குரத் தளவீ ரெட்டு

1695 கரைத்து – சொல்லப்பட்ட இலக்கணம். பிடியேல் – பெண் குதிரைக்கு அமையுமானல். அங்குலி – விரல் அளவு.

1696 ஆனனம் – முகம். வெரின் – முதுகு.

மண்புகழ் தாளா ருறு
வரின்விரல் அம்மா நன்மை
கண்கொள்சுற் றளவு நன்று
கருதுதொண் ணூற்றே டொன்பான் 75

1698 சொன்னமுப் பரிக்கும் நன்ரும்
சுற்றிரட் டித்தல் நீளம்
நன்மைசுற் றளவே நீட்சி
நண்ணின்மிக் கதிக மாகும்
பன்னிய அளவு நீடும்
பரியது தூலன் குன்றிற்
றுன்னிய விருத்த னன்ரும்
சுழிகளுற் றளவு நீடி 76

[பிற அமைப்பு பற்றிய இலக்கணம் கூறல்]

1699 பரவிய சந்து மார்பு
பகர்கதுப் புறத்தல் தீதாம்
இருமூனந் தாள்மு கத்தில்
ஏய்ந்திடின் வெண்மை தீதாம்
ஒருசரண் மீதி னவ்வா
லுறின்மிகத் தீதாம் தூசி
பொருமுகத் துளவேல் முக்கால்
பொருந்தினும் வெண்மை தீதே 77

1700 முகஞ்சிரஞ் சேப்பாய் அங்கம்
முழுதும்வே றுறினும் நன்ரும்
திகழ்ந்தபொன் னிறமாய் வாயிற்
சிவப்புறல் மிகவும் நன்ரும்
சகம்பரித் திடுதிண் டோளாய்
சாதியும் வினவி லுமே
பகர்ந்திட வல்லோ மந்தப்
பரிகளின் வண்ண மென்றே 78

1700 சகம் – உலகம். பரித்திடும் – தாங்கி ஆண்டிடும்.

[குதிரைகளின் இலக்கண அமைப்பால் அவைபற்றிய நால்வருணப் பகுப்புக் கூறல்]

[அந்தணர் சாதி]

1701 கட்டழ குடைத்தாய்க் காமக்
கவலியொன் றிலதாய் வானே
ரிட்டமார் வீரந் தாங்கி
யிடப்புறந் துயிறல் மேவி
மட்டலர் புன்னை வாசம்
வாய்ந்துதேன் கபிலை வன்னம்
ஓட்டிநெய் குளம்பால் வாஞ்சை
யுறுவதந் தணர்கள் சாதி 79

[அரசர் சாதி]

1702 கறுப்பொடு வெளுப்பு மேவிக்
கருத்தினி லறிவு மிக்காய்
ஒறுத்திடு சமரின் வாஞ்சை
யுற்றர விந்த வாசம்
பொறுத்துவால் கருமை கண்ணிற்
போந்துகந் திருவ ரென்னும்
மறுப்படா வியக்கர் வீரம்
வாய்ந்துள தரசர் சாதி 80

[வணிகர் – வேளாளர் சாதி]

1703 வெயிற்பொறை நடைபா ரத்தில்
விரும்புத லகரர் வீரம்
மயற்பெறல் முடங்கல் வாசம்
மருவுதல் வணிகர் சாதி
வியப்பக லலகை வீரம்
வெறிகடித் தெறிதல் தீனி
நயப்புறல் கவடு நாரம்
நண்ணுதல் பின்னோர் சாதி 81

1702 அரவிந்தம் – தாமரை. இயக்கர் – யட்சர் (தேவசாதியார்).
1703 பொறை – பொறுத்தல். மயல் – மயக்கம். அலகை – பேய். நாரம் – நீர்.

1704 ஆதவ னுதயம் நோக்கால்
அசைவிலா தனுமா னித்தல்
போதுநற் கணிகை கன்னிகை
பூசுரர் அழல்சேர்ந் தாலும்
மீதுறு பணிபூண் போதும்
விளங்கிட வனுமா னித்தல்
பேதமோ டாட லோடல்
பெறும்பரி யுயர்ந்த வாமே 82

[தாம் கொண்டுவந்துள்ள பரிகளின் சிறப்பைப் பலபடக் கூறிக் காட்டுதல்]

1705 இவ்வியல் பரிகட் கேயும்
இலக்கணம் நம்மா லெய்தும்
அவ்விய மில்லா மாக்கட்
காகல மெவையும் நோக்கி
வவ்வுமான் புளிசூல் மாறு
வருஞ்சுழி வெருகின் பாதம்
கவ்வுவால் நுனியிற் கார்வால்
காலொன்றி லின்று காணே 83

[குதிரைகளின் ரேகைகளும் அவற்றின் சிறப்பும் கூறல்]

1706 முண்டகங் கழுநீர் ஆவம்
முதிர்சிலை குவிசந் தோட்டி
கெண்டைவேல் குடைவா ளாடி
கிளரரா சிலைவெண் டிங்கள்
தண்டெனும் வரைக ளுற்றுச்
சங்குதுப் பியைய பானுக்
கொண்டநன் னிறங்கள் பெற்றுக்
குலவுமிப் பரிகள் காணே 84

1705 புளி (புள்ளி) சூல் – சூலம். வெருகு – பூனை.

1706 முண்டகம் – தாமரை. ஆவம் – அம்புக் கூடு. சிலை – வில். தோட்டி – குந்தாலி. ஆடி – கண்ணாடி. அரா – பாம்பு. வரை – ரேகை. துப்பு – பவழம்.

1707 பல்லுட னண்டம் நாவாய்
பகர்சிரங் கறுத்தல் வேணி
ல்லமென் முகிலபா ரிந்த
நாவிரண் டடைந்து கால்மூன்
ருல்லுநற் செவிதாள் கண்ட
மொன்றது தானு மின்மை
யல்லுறு குருடு புள்ளி
அடுபுலி நிறங்க ளின்ரூய் 85

1708 தோற்றுபல் நாற்பா னுகும்
தொகையினிற் குறைத லேற்றம்
மேற்றிகழ் குஞ்சி குன்றல்
மிகுதிநாள் குறுகல் நீளல்
சாற்றுகண் பெருத்தல் குன்றல்
சாய்விழி பருத்த லண்டம்
ஏற்றகே சரிவால் போறல்
உள்ளன இவைக ளின்றே 86

[தம்முடைய குதிரைகளுக்குத் தீய ரேகைகள் ஒன்றுமில்லை எனக் கூறுதல்]

1709 சென்னியின் விரல்போ லாட்டின்
றிகழ்களத் தாபோல் ஆவின்
வன்னமார் முகிலபோல் நீரின்
வருசிறு குமிளி யேபோல்
துன்னிய கழற்போல் பூவிற்
ருேற்றும்வெண் சிறுகா ளான்போல்
மன்னிய கோடு தோற்றும்
வாம்பரி யொன்று மின்றே 87

[நடைக் குற்றமில்லாதவை தம் பரிகள் என விளக்குதல்]

1710 அடுபுலி செந்நாய் காகம்
அத்திவெள் ளடகில தூம
நெடுகரம் எலியின் வண்ணம்
நீங்கியந் தாள்பின் னுது

கடுவிசை வேங்கை சிச்சில்
காரரா ஆனை யன்ன
மடமயி லிடபங் கீரி
மந்திபோல் நடத்தில் பாராய் 88

[தீநாற்ற மில்லாதவை எனல்]

1711 ஈருளி ஞமலி மீனே
டேழக மாதி நாற்றம்
நேருத லின்றிப் பிண்டி
நிகழுஞ்செங் கழுநீர் கஞ்சம்
சீருள வில்வ மாரந்
திகழ்கடம் பில்ல மெளவல்
சார்தரு மணங்கள் பெற்றுத்
தகும்பரி நிற்றல் பாராய் 89

[ஒலிக்குற்ற மில்லாதவை எனல்]

1712 காகம்நாய் பன்றி யூகங்
கழுதையி ஞெலி போலின்றி
வேகமார் சீயம் யானை
மேகம்நல் லிடபம் பேரிக்
காகுநன் முழக்கம் போலிவ்
வசுவங்க ளனுமா னித்தல்
வாகையந் தாரும் தோளும்
வயங்கிய வரச நீகாண் 90

[எல்லாச் சிறப்பும் உடையவை இவை எனல்]

1713 கண்கவர் காட்சி நல்கிக்
கட்டழ கதிக மெய்தி
எண்கொள்நன் னிறத்த வாகி
ஈங்கவ யவங்கள் தாங்கி

1711 ஈருளி (இருளி) பன்றி. ஞமலி - நாய். ஏழகம் - எருமை. பிண்டி - அசோகு. கஞ்சம் - தாமரை. ஆரம் - சந்தனம், இல்லம் - இல்லமரம்.

மண்புகழ் தரும்நல் வாசம்
வாய்ந்தடி பந்து போலக்
கொண்டெழு குரத்த வாகிக்
குரகதம் நிற்றல் பாராய் 91

1714 பரியிலக் கணமுன் சாற்றிப்
பகர்விலைத் தேறி வந்த
புரவியின் வடிவம் மெய்யிற்
பொருந்துநன் னிறமும் குற்றம்
மருவிடாச் சுழியும் சாதி
வருக்கமும் விதித்த நூல்கள்
கருதிய வாறு கூடற்
காவல காட்டி னேமால் 92

1715 வாசிக ளிவைக்கு நீமுன்
வழங்குநன் னிதியைப் போல
தேசறு கோடி செம்பொன்
செலுத்தினும் விலைபற் றுதென்
றுசைசேர் இலக்க ணங்கள்
உற்றிடார்ச் சுழிசுற் றுக்கள்
ஏசறு குற்றம் சற்றும்
இலஇவைக் கென்றார் ; மன்னன் 93

[இறைவன் கூறிய பரி இலக்கண முதலியவை கேட்டு அரசன் விம்மிதமுற்றுக் கண்ணிமையாது நோக்கி மகிழ்தல்]

1716 ஏதமில் பரிகட் கிவ்வா
றிலக்கண மென்று கூறும்
நாதனார் வடிவும் துய்ய
நகைமுகத் தழகுமா நூல்

1715 ஒசைசேர் – ஒலிமிக்க. ஏசறு – குற்றமறு.

ஒதிய வாயுங் கையும்
ஓர்ந்துகண் ணிமை யாஞகி
மாதவர் பெறும்வாழ் வுற்று
வாழ்ந்துநன் மகிழ்ச்சி கூர்ந்தே 94

[வாதவூரரிடம் கயிறு மாறித் தரச்சொல்லி மன்னன் வேண்டுதல்]

1717 மந்திரித் தகிலமை யான
வாதவூ ரரசை நோக்கிக்
கந்துகங் கயிறு மாறித்
தரும்படி கழறு மென்ன
அந்தவா சகங்கேட் டன்பர்
அருகுசென் றிவர்தா மேறி
யுந்துமா வொன்று நீங்க
உற்றுள பரிக ளெல்லாம் 95

[இறைவன் வேதமா ஒன்று நீங்க மற்றவற்றை அவர்கள் கயிறு மாறிக் கொடுத்தல்]

1718 கயிறுமா றிக்கொ டுக்கக்
கடவரென் றுரைத்தார் கேட்டுத்
தயவொடு மதுரை மன்னன்
சம்மதித் தேற்று நிற்கப்
பயனுறும் பரிமா வெல்லாம்
பாங்கொடு கயிறு மாறி
இயைவொடும் பாண்டி யர்க்கென்
றீந்தனர் எல்லாம் வல்லார் 96

1717 கந்துகம் - குதிரைகள். கயிறுமாறித்தருதல் - விலைக்குப் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாகக் கயிற்றைத் தொட்டுப் பெற்றுக் கொள்ளுதல். ஒன்று - வேதக்குதிரை.

[குதிரைகளை உரிய இடத்திற்குக் கொண்டுசெல்ல அரசன் ஆணையிட்டுச் செல்லுதல்]

1719 மதுரையன் னவன்மா வெல்லாம்
வாங்கிய பின்னர் முன்னைக்
கதிமிகுங் குதிரை யோடும்
கலந்துகட் டுதற்குக் கற்பித்
திதமுறு தனது கோயிற்
கெய்தவன் றிரவில் வந்த
குதிரைகள் அனைத்தும் செய்த
குணத்தினைக் கூறு கிற்பாம் 97

[குதிரையிட்ட சருக்கம் முற்றும்]



1719 கற்பித்து – கட்டளையிட்டு. வந்த – குதிரைகளாகி வந்த நிலைகள். குணம் – செயல்.

பரி நரியான சருக்கம்

[நரி பரியாக்கிய இறைவன் மாணிக்கவாசகருக்கருட்கண் நோக்களித்து மறைதல்]

[கலித்துறை]

1720 செக்கர் வானிறந் திகழ்திருப் பெருந்துறைச் செல்வர்
மிக்க வாம்பரி இவையென்று மீனவற் கீந்த
அக்க ணந்தம தன்பருக் கருட்கணீந் தகன்று
திக்கெ லாம்புகழ் ஆலவாய்ச் சினகரம் சேர்ந்தார் 1

[இறைவன் அன்றிரவே பரிகளை நரிகளாக்க எண்ணுதல்]

1721 சேர்ந்த கண்ணுத லன்பர்பாற் பினுந்திரு விளையாட்
டோர்ந்து பஞ்சவர்க் குதவிய பரியெலாம் உறுகான்
சார்ந்து வாழ்நரி முன்புபோல் ஆகெனத் தயவே
கூர்ந்த பேரரு ளுளத்தினிற் குறித்தனர் குணித்தே 2

[பரிகள் நரியாகிப் பிணித்த கயிறுகளை அறுத்துக்கொண்டு வெளிப்படுதல்]

1722 அன்ன காலைநள் ளிருளின்முற் பரியொடு கலந்து
சொன்ன வாறுகட் டியபரித் தொகையெலாம் நரியாய்
இன்னல் தீர்ந்திடப் பிணித்திடு கயிற்றினை யெயிற்றூற்
சின்ன பின்னம தாக்கியெல் லாஞ்செயிர்த் தெழுந்தே 3

[நரிகள் குதிரைகளை கடித்துக் குதறி வீழ்த்தல்]

1723 வெருவி லாதுபோர்க் களத்துவீழ்ந் துழக்குறும் வீரர்
குரவை யிட்டுமுன் னெழுதலொத் துறுநரிக் கூட்டம்
நரலை யொப்பென முழங்கிமேற் பாய்ந்துநற் பரிகள்
சிரமு கங்கழுத் தடிகளிற் கறித்துவீழ்த் திட்டே 4

1720 செல்வர் – சிவபெருமான். மீனவன் – பாண்டியன். அருட்கணீந்து – அருள் நோக்களித்து. சினகரம் – கோயில்.

1721 பினும் – மறுபடியும். பஞ்சவவர்க்கு – பாண்டியர்க்கு. கான் – காடு. குணித்து – எண்ணி.

1722 எயிற்றூல் – பற்களால். செயிர்த்து – சினந்து.

1723 வெருவிலாது – அச்சமில்லாமல். குரவை – குரவை கூத்து. நரலை – ஓடல். கறித்து – கடித்துமென்று. வீழ்த்திட்டே – கொன்றே.

1724 அடர்செய் தீர்த்துமெய் விலாப்புறங் குடைந்துபுக்
கமுந்துங்
குடர்கொ ழுந்தசை பிடுங்கிநின் றிரத்தநீர் குடிக்கும்
மிடல்கொள் சந்துவே ருகவீர்ந் துறுதசை மிசையும்
பிடரி மத்தகம் மூளைகள் வேரோடும் பிடுங்கும் 5

[குதிரைகளை அழித்தபின்னும் பசிதீராநரிகள் யானைகளையும்
ஒட்டகங்களையும் பாய்ந்து கடித்துக் குதறல்]

1725 பரிகள் யாவையும் இவ்வணம் படவொரு பரிக்கு
நரிகள் நாலிரண் டாறதாய் நலிவுசெய் தகன்றும்
எரியுந் தீப்பசி தீர்ந்தில தாய்நரி யெவையும்
கரியி னங்கள்ஒட் டகங்கள்மேற் பாய்ந்தவை கதுவி 6

1726 மத்த கங்களிற் பிளிறிடக் கடித்துவா லடித்துத்
தத்தி வீழ்ந்துறு மிக்குறு நரியெலாஞ் சனங்கள்
எத்தி சைக்கணும் வெளிப்படா தொடுங்கவில் லகத்து
மொய்த்து மேவிமே னிலைகளின் முட்டியார்த் தனவே 7

[நரிகள் தெருக்களில் புகுந்து மனைகளிற் சென்று உணவுப்
பண்டங்களை உண்டு சிதறச்செய்தல்]

1727 தெருக்கள் தெற்றிநாற் சந்திக ளெங்கணுஞ் செறிந்தே
உருத் துரத்தொடு தடுக்கொணா வாற்றல்மிக்
குடைத்தாய்ப்
பெருக்கு னாக்குர மனைதொறும் பிறங்கிடப் புகுந்து
கருக்கு பானையின் சோறுகள் கறிகளைக் கவர்ந்தே 8

[எதிர்ப்பட்ட மக்களையும் கடித்துத் துன்புறுத்தல்]

1728 உண்டு டைத்துவிண் டோடிடுஞ் சிலநரி வழிகள்
கண்டு போக்குரு தலம்வரும் சிலநரி கறுவு
கொண்டு நேர்ந்தவர்க் கடித்திடும் சிலநரி குடிக்க
மண்டு நீர்க்கயந் தேடிடும் சிலநரி மதித்தே 9

1724 ஈர்த்து – இழுத்து. மிடல் – வலிமை.
1725 கரியினம் – யானைக் கூட்டம். கதுவி – கடித்துப்பற்றி.
1726 பிளிறிட – அஞ்சியலற. மேனிலை – வீட்டு மேற்கூரைகள்.
1727 தெற்றி – திண்ணை, மேடை. உருத்து – வெதுண்டு. உரம் – வலிமை
1728 கறுவு – சினம். கயம் – குளம்.

[நரிகள் கொம்மாளமிட்டுக் கூடித் திரிதல்]

1729 உயிரி றும்படி நாடிடும் சிலநரி உறிசேர்
தயிர்நெய் பாலெடுத் தருந்திடும் சிலநரி தசையுண்
அயிலும் ஓடுநின் ருடிடும் சிலநரி அணியாய்
எயிறு தோன்றிட நகைத்திடும் சிலநரி இயைந்தே 10

1730 மரத்திற் ருவும்நீள் சிகரியிற் ருவுமா ளிகையின்
சிரத்திற் ருவும்நீள் சிகரியிற் ருவும்மேல் வீட்டின்
உரத்திற் ருவும்மா மறுகிடைத் தாவும்நொந்
தொழிப்போர்த்
துரத்தித் தாவும்வால் குழைத்தெங்கும் நரிக்குழாம்
துணிந்தே 11

[மக்கள் அஞ்சி நடுங்கி ஆலவாய் அண்ணலே ! என ஓலமிடல்]

1731 இவ்வ ணந்திரு வாலவாய் எங்கணும் நரியாய்
எவ்வ நீள்துயர் படுத்திட எவரும்இவ் விரவில்
கவ்வை நோய்பல நரித்திரள் புரிந்திடக் கருத்தில்
உய்வ தெவ்வணம் சுந்தரா ஓலமென் றிரைந்தார் 12

[அரசன் தெரிந்து வெகுண்டு கூறுதல்]

1732 நகரு ளாரிரைந் தரற்றிய வோதையும் நரிகள்
சிகரி கோபுரம் மாடமா ளிகைதெருத் தெற்றி
பகரி டத்தெலாம் முழக்கிய தொனிகளும் பரிகள்
அகலி டத்தைவிட் டகலிடர் ஒலிகளும் பாகர் 13

1733 அய்ய கோவென விரைந்தவர் அரற்றுகம் பலியும்
செய்ய கோலர சன்செவிக் கசனிபோற் செறிய
வெய்ய தீங்கிவை என்கொலோ எனவுடன் வெளிப்பட்
டைய்ய மின்றியோர்ந் தரசனீ தழகிதென் றறையா 14

1730 சிகரி – உச்சி. மறுகு – தெரு.
1731 ஓலம் – அடைக்கலஒலி
1732 ஓதை – அபயக்குரல். பாகர் – குதிரைச்சேவர்.
1733 கம்பலை – ஆரவாரம். அசனி – இடி. அறையா – சொல்லி,

[வீரர்கள் நரிகளை படைக்கருவிகள் கொண்டு அடர்த்துத் துரத்துதல்]

1734 வன்க ணுளராம் மல்லர்பற் பலர்களை நோக்கப்
பின்கொ டாதவவ் வீரர்கள் தடியயில் பெருவாள்
முன்கொள் கேடக முசலமுற் படையெலாம் முழங்கத்
துன்ப டாதவந் நரிகளைத் தொடர்ந்துசென் றடர்த்தார் 15

[இறைவன் நரிகள் யாவும் கானகஞ் செல்ல நினைத்தலும்
அவை யாவும் மறைதலும்]

1735 கோல வாள்விதிர்த் தனேகராய்க் கொல்லென முழங்கும்
காலை யாலவாய் மேவிய கயற்கணி கணவர்
ஓல மிட்டவண் உலவிய நரிகளங் கொழிய
ஏல முன்புறுங் கானகத் தெய்திட நினைந்தார் 16

1736 அக்க ணந்தனில் ஆலவாய் அடங்கலும் கலக்கம்
மிக்கெ முந்திடப் புரிநரித் திரளெலாம் வெகுளி
தொக்க நீங்கியுட் பயத்தொடும் நகர்ப்புறத் தொருவித்
தக்க தம்வனம் உற்றருள் சார்ந்தன வன்றே 17

[இறைவன் வாதவூரார் பொருட்டு மேலும் புரியும்
திருவிளையாடலை இனிக் கூறுவாம் எனல்]

1737 உரிய ஆவணி முலத்திவ் வாடல்செய் துலகத்
தரிய ஆலவாய் அண்ணலாம் ஆத்மநா யகர்தம்
பெரிய வாதவூர் முனிவர்க்கு வழுதியே ரமைச்சின்
மருவு பந்தநீத் திடவைகை யடைத்தவா வகுப்பாம் 18

[பரிநரியான சருக்கம் முற்றும்]

1734 அயில் – வேல். முசலம் – முள்தண்டு.
1735 ஏல – பொருந்த,
1737 பந்தம் – அமைச்சராக இருக்கும் கட்டுப்பாடு. நீத்திட – நீங்க. வைகை – வைகையாற்றுவெள்ளம். வகுப்பாம் – கூறுவோம்.

பிட்டுக்கு மண் சுமந்த சருக்கம்

[பாண்டியன் அவையோரிடம் கூறுதல்]

[தரவு கொச்சகக் கலிப்பா]

1738 பரியுருவாய் வருநரிகள் பரமரருள் பெற்றுமகிழ்ந்
திருள்விடியும் முனங்காட்டில் எய்தியிட வெகுளியொடும்
அரியணையின் முகப்பினில்வந் தமர்ந்திருந்து
தென்னவர்கோன்
புரவிநரி யாய்வீழ்ந்த புன்கணைவை யும்மோர்ந்தே 1

1739 மந்திரிமார் அருமறையோர் மலிந்தபடைத் தலைவர்மிகு
தந்திரநூற் கலைஞருயர் தபோதனர்கள் தமைநோக்கி
இந்தவிந்தர சாலமெங்குங் கண்டதுண்டோ நேற்றுவந்த
கந்துகமுன் னுளவெமது கற்கியெலாந் தின்றழித்தே 2

[மன்னவன் வாதவூரர் நம்மிடம் வஞ்சனைபுரிந்தார் எனச் சினத்தல்]

1740 நரியாகி மதுரையெலாம் நடுங்கும்வகை புரிந்தொன்றும்
தரியாமற் கானகம்போய்ச் சார்ந்தனவென் செய்வதினி
திருவாத வூரருளந் தெரியால் தேறினம்யாம்
கருதாப்பொய் மாயவிஞ்சை கற்றதெம்பாற்
காட்டினரால் 3

1741 தீட்டுமரத் தினிற்கூர்மை காட்டுவார் செயல்போலாம்
ஈட்டுதிர வியங்கெடுத்த தன்றியுமெம் முடையபரிக்
கூட்டமுழு தையுங்கெடுத்தார் கொடுவாட்கும்
பிடுகரத்தின்
நாட்டமுரு தேயொழிக்கும் நட்பினர்போல்
துயர்விளைத்தார் 4

1738 புன்கண் – துன்பம். ஓர்ந்து – எண்ணி.
1739 கந்துகம் – குதிரைகள்.

[சான்றோர்கள் இஃது இறைவன் திருவிளையாடலே எனக் கூறல்]

1742 அவர்தமையாம் இனிப்புரிவ தியம்பிடுவீர் எனவழுதி
விவகரிக்க மானிடர்செய் வித்தைகள் போலல்லவிது
தவமுடையோர் தொழுங்கூடற் சங்கரற்கே தெரியுமென
எவருமொழிந் தனரவர்தம் இயல்பறியா துரைக்கின்றீர் 5

1743 வானுலகை மண்ணுலகில் வரவழைக்க வல்லசித்தும்
தானுடை யரிதுபுரியத் தக்காரோ தேவரன்றி
ஆனதெலாம் ஆகுகநம் ஆடகமென் போகுமென
மீனவன்றன் உளங்கொதிக்க வேசினந்து கூறுவனுல் 6

[மன்னன் சினந்தணியாதவனைப் வாதவூரரிடம் பொன்னைத் திரும்பப்பெற ஏவலர்களைப் பணித்தல்]

1744 மல்லர்சிலர் தமைநோக்கி வாதவூ ரரைமறித்துச்
செல்லல்பொருள் வரும்படிக்குச் செய்துருத்து
வாங்குவிர்நீர்
ஒல்லையிற்போ மெனவரசன் ஓதினன்மற் றவருறுமுன்
நல்லவருங் குறிகளுணர்ந் தன்பர்சிவன் றனைநினைவர் 7

[வாதவூரர் இறைவன் செயலை எண்ணிக் கலங்குதல்]

1745 நச்சுமர மேயெனினும் நாயகனே தன்கையால்
வைச்சவரே கொல்வாரோ மதிவேணிச் சடைமுடியாம்
செச்சைமலர் போல்வாயுன் திருவிளையாட் டெவரறிவார்
கொச்சையுறுங் கொடிக்கயல்நேர் கொம்பல்லாற்
சார்புளதோ 8

1746 அதுபோன்றுன் ருள்மலரல் லாலுளதோ புகலெனக்கு
முதிர்தருமூழ் வினையெனினு முன்னவன்நீ முன்னின்ருல்
விதியொடகன் றிடுமதலால் மேகத்துக் குபசாரம்
பயிர்செயுமோ யானுமந்தப் பண்பனன்றே
வெனநினைந்தார் 9

1743 ஆடகம் – பொன்.

1744 ஒல்லை – விரைவு. உறுமுன் – சென்று அடையும்முன். வருங்குறி – மேல்வரும் செயல்பற்றிய நிமித்தம்.

[மல்லர்கள் வாதவூரரைவருத்த இறைவன் வையையில் வெள்ளம் பெருகச் செய்தல்]

1747 அப்பொழுது மல்லர்கள்போய் அன்பர்தமைத் தொட்டீர்த்துப்
பொற்பமருந் திருமேனி தனைவஞ்சிக்கும் புணர்ப்பையுணர்ந்
தெப்பொழுதுந் தமதுசடை யினிலடங்குங் கங்கையினை
மைப்பரவும் கண்டர்திரு வைகையினில் வரவிடுத்தார் 10

[வையையில் வெள்ளம் பெருகி வருதல்]

1748 மூடிவிலெழும் பிரளயம்போல் முழங்கியெழுந் ததிவேகத்
தொடுமலைவா யுளமதமா வுறுமகில்சந் தனமுருடு
கடிதலிலாப் பெருமரங்கள் கரைமருங்கி லுளவெவையும்
படிநெருங்கும் படிவாரிப் பரந்துபெரு வெள்ளமதாய் 11

1749 அகலிடம்பா தலம்வரைக்கும் அகழ்ந்துகுழித் தறல்கொழித்து
மிகுகுரம்பெங் கணுங்கரைத்து மேலெழுந்து திரைமோதிப்
புகலரிதென் றெவர்களுமுண் ணடுங்கமது ரையிற்புகுந்து
தகுமரசன் மனைமுதலாய்ச் சகலவிலும் இடித்தனவால் 12

[வெள்ளப் பெருக்கிற்குக் காரணந்தெரியாமல் மக்கள் இறைவனை எண்ணிக் கலங்குதல்]

1750 ஊரவர்கள் பெருங்குழுவாய் ஒருங்குடன் சென்றிறை முனம்போய்ச்
சீருலவும் புகழ்மேவு தென்னவவிச் செழும் புனற்குக்
காரணம்வே றிலைமுகிலும் காலுான்றிப் பொழிந்ததுமன்
றேருறுசீர் வைகைநதிக் கியல்புமன்றிக் குணமாரூர் 13

1747 வஞ்சிக்கும்புணர்ப்பு – கிட்டியிட்டுத் துன்புறுத்தும்செயல்.
1749 அகலிடம் – மண்ணுலகம். அறல் – நீர். குரம் – செய்கரை.

1751 சுந்தரநா யகர்விடுப்பச் சுரநதியே பெருக்கெடுத்து
நந்தமது ரையையழிக்க நண்ணியதா குமிதற்கவ்
இந்துசே கரனேநின் றிரங்குவகை நீயிரந்தால்
உய்ந்தெவரும் வாழ்ந்திடுமா றுண்டாமென் றோதினரால் 14

[பாண்டியன் இறைவனுக்குரிய பூசனை முதலியவற்றிற் குறையோவெனக் கலங்குதல்]

1752 கேட்டகூ டற்கோமான் கிளர்த்துவன்வெண் கீற்றுமதி
சூட்டுசடைச் சுந்தரர்க்குத் தொண்டுசெய்யும் பணி
விடையில்
ஈட்டுமபி டேகைநவே தனவியல்பிற் குறையுளதோ
தேட்டமுறும் திருவிளக்குத் தீபவா ராதனைகள் 15

1753 மாலைசந்த னதியுப சாரமலி வாயினவோ
காலைவிழா மாலைவிழாக் கருதுமுர்ச்ச வாதிமுதல்
சீலமிகும் சிறப்புரிமைச் செயல்கடனிற் றீங்குளவோ
ஏலுமவ ரடியார்கட் கீங்கியற்றும் பிழையுளவோ 16

[பாண்டியன் அந்தணச் சான்றோரை இதற்குக் காரணம் வினவல்]

1754 திருவளர்கூ டலின்மேவுஞ் சிவபெருமா னருள்மாறுய்
வருவதனுக் கேதுவெவன் மதியுடையீர் ஓதுமென
வருமறையா கமமுணர்ந்த வந்தணரிற் சிலரடியார்
பெருமையைமன் னவன்கேட்டுப் பிரியமுறும்
வகைபுகல்வார் 17

[அடியார் பெருமைகளை அந்தணர்கள் கூறி வெள்ளத்தை வாதவூரரே கட்டுப்படுத்த உரியார் என விளக்குதல்]

1755 சங்கரர்க்குத் தமரவர்பொற் றுள்ளினையு மடியரலால்
எங்குமிலை யுறவுலகில் யானெனதென் றிருப்பவர்கள்
அங்கவருக் கன்னியரே யாமவர்க ளன்னியராம்
பங்கமறச் சிவவடிவாய்ப் பாருலகிற் சஞ்சரிப்பார் 18

1751 இந்துசேகரன் – சந்திரசேகரன். (சிவன்)

1756 சிவமுதன்மை யெவற்றினிலும் செகத்திலுள
பொருண்முழுதும்
சிவனுடைய பொருளுலகிற் சிறந்தவுயிர்த்
தொகையெவையும்
சிவனுடைய வடிமையெனும் தெளிவுடைத்தா
யெப்பொழுதும்
சிவமேகண் டிருப்பதலாற் சிறிதேனும் பிறிதறியார் 19

1757 ஆதலினு லத்துவிதி யாயரனே டொன்றுகிப்
பேதமற நின்றிடுவார் பிரானுமவர் தாமேயாய்
மேதினியோர்க் கருள்புரிந்து விளங்குவரென் றுகமங்கள்
ஓதலினுல் திருவாத வூரருமெய் வொழுங்குடைத்தாய் 20

1758 வேட்டுவனுற் பட்டபுழு வேட்டுவனும் தன்மையைப்போல்
நாட்டமரன் வைத்ததனுல் நற்சிவமாய்ப் பொருட்பயன்முன்
ஈட்டுமெமக் குறும்படிக்கங் கீசர்பணி செயஅவர்க்குக்
கோட்டமுற நீர்வாட்டங் கொடுத்ததனுல் அரன்கிருபை 21

1759 மாறுபட்டும் நரிப்பரியாய் வாசிபட்டும் மனுடர்பலம்
வேறுபட்டும் வேகவதி வெள்ளமது ரையையழிக்கச்
சீறியிட்ட தாகுமந்தத் திருவருள்பெற் றவரையிவண்
ஆறுகட்டும் படிக்குவர வழைத்துவகை செயுமென்றார் 22

[அரசன் உடன்பட்டு வாதவூரை அழைத்துவரக் கூறல்]

1760 மறைமொழிதப் பாதமன மாறனவ ருரைகேளா
நிறையுடையீர் யாமுளத்தின் நினைந்தபடி நீர்மொழிந்தீர்
பொறையுடைய வாதபுரிப் புனிதரடைப் பிப்பதுவே
முறைமையெனச் சிவசமய முனிவர்சிலர் தமையனுப்பி 23

1758 வேட்டுவன் – குள்வி. நாட்டம் – சிந்தனை. கோட்டம் – துன்பம்.
1759 வாசி – குற்றம். வேகவதி – வையை.

[மன்னன் வாதவூரிடம் வையைக் கட்டுப்படுத்த வேண்டுமெனக் கூறல்]

1761 வரவழைத்துத் திருவுளத்தின் மகிழ்ச்சியுறும் வகைபுகன்று
திருவருள்பெற் றுடையவர்நீர் ஆதலினற் றிருமதுரை
புரமருகா வகைவைகைப் புனலடைப்பித் தருளுமென
அரனருளே யாற்றையடைத் தாட்கொளுமென்
றுபசரித்தே 24

[வாதவூரர் வையைக்கரையை உயர்த்த எண்ணிச் செயற்படுதல்]

1762 மலிந்துவரும் புனற்கரைமேல் வாதவூர் முனியணுகிச்
சலம்பெருகா வகையெமையாள் தலைவாகாத் தருளுகென
அலம்புபுனல் வேகவதி யாறடங்கி யருகியநீர்
நிலம்பிளந்து வருவதனை நீள்கரைசெய் தடைப்பதற்கு 25

[குடிவீதம் பங்கிட்டு மக்களைக் கரை எழுப்பி அடைக்குமாறு தெரிவித்தல்]

1763 சீலமொடு மேவலராய்ச் செல்பவர்தம் முகநோக்கிக்
கோலதனல் மதுரைநகர்க் குடிவீதங் கரையளந்து
மேலுறவே மண்போடு விப்பீரென் றுரவரும்
சாலநதிக் குரம்புகுடித் தன்மையினற் செயும்பொழுது 26

[கலித்துறை]

[வந்தியின் நிலை]

1764 இட்டமி குத்தகூ டற்பதி வாழ்பவ ரினிலெண்ணப்
பட்டவ ளாய்க்கரை கட்டிட வேண்டிய பங்குள்ளாள்
பிட்டமு தைத்தினம் விற்றுணும் அம்முது பெரியட்காய்
விட்டபங் கிற்கரை கட்டுவ ரின்மையின் வேருகி 27

1765 கூறுகி டப்பது கண்டுமன் ஏவலர் கொடிதாய
ஊறுப டச்சொல வுட்பய முற்றவள் தான்வைகை
ஆறணை கட்டவெ னக்குள திப்பொழு தாள்தேடி
மாறனு வப்பவ டைப்பனீர் போமென மகிழ்வோதி 28

1761 அருகாவகை – அழியாவகை.
1765 ஊறுபடச்சொல – கொடுஞ் சொற்களை வருந்துமாறு கூறு.

1766 மூப்புமி குந்து நரைப்புடல் கூனிய முதியாளாய்க்
காப்பவர் வேறிலர் கைம்மையு மாய்இளங் காலத்தே
வாய்ப்புற மைந்தரி லாமல டாயினள் வளர்பிட்டுச்
சேர்ப்பத னல்மணக் குள்ளபு சிப்புறு செயலாளாய் 29

1767 பொங்கிய வன்புசி வன்கழல் வைத்திடு புனிதத்தாள்
அங்கணர்தன் திரு வாலயம் நாடொறு மலகிட்டுச்
செங்கையி னல்மெழு கிப்பணி செய்திடு சிவநேசம்
சங்கரர் முன்முறை யிட்டிடு மாறவள் தணியீர்ப்ப 30

[வந்தி கூலியாள் தேடியுங் கிட்டாமைக்கு வருந்தி இறைவனிடம் முறையிடல்]

1768 அட்டிடும் பிட்டொடும் எங்கும லைந்துமவ் வூரின்கண்
கிட்டுமோ ராட்கிடை யாமல்மி குந்த கிலேசத்தோ
டுட்டிக முஞ்சிவ சுந்தரர் கோயிலி னுள்மேவி
எட்டுணை யேனுநின் பாதம்நி னைப்பவர்க் கிடருண்டோ 31

1769 உன்றண யன்றி எனக்கொரு நற்றுணை யுண்டோமான்
கன்றுகு தித்திடு செங்கர வாகயற் கண்ணுள்சேர்
இன்றுணை வாவொரு கூலியாள் காட்டியயென்
னிடர்தீர்ப்பாய்
வன்றிற லார்பினும் வந்திடு முன்னென வந்தித்து 32

[இறைவனை வணங்கிக் கோயிலை வலம் வரும் வந்தியின்முன் இறைவன் கூலியாளாகத் தோன்றுதல்]

1770 அட்ட கயங்கள் பரிக்குமவ் வாலய மதுதன்னை
யுட்டய வாய்ப்பிர தக்கணம் வந்துரு கித்தாழ்ந்து
பிட்டுறுகூ டையும் கொண்டு புறத்துறு பெரியாள்முன்
சிட்டர்தொ முஞ்சிவ சுந்தரர் வந்தருள்
செயல்சொல்வோம் 33

1768 அட்டிடும் – சமைத்திடும். கிலேசம் – மனத்துன்பம்.
1769 கரவா – கையை உடையவனே. வன்றிறலார் – அரசன் ஏவலாளர் வந்தித்து – வணங்கி.
1770 அட்டகயங்கள் – எட்டுயானைகள். சிட்டர் – அடியவர்.

[கூலியாளாய் வரும் இறைவன் தோற்றப் பொலிவின் வருணனை]

1771 தந்தையொ டன்னையும் சுற்றமு மற்றதோர்
தனியாளாய்க்
கந்தையு டுத்தியோர் கோவணங் கட்டிய கவினேடும்
சுந்தர மாய்ச்சிறு பங்கியி லொட்டிய சும்மாடு
கொந்தலர் கொன்றை யிலைத்தழை யாற்சிர
மேற்கொண்டு 34

1772 காதில னிந்திசை யுங்குருந் தின்பசுங் காய்கொத்துச்
சோதி விளங்க நுதற்றில கந்துலங் கத்தோளின்
மீதுமண் வெட்டி கவிழ்த்தொரு கூடைகை மேற்றூங்கி
மாதிடு பிட்டுண வுட்பசி தோற்றுமோர் வடிவோடும் 35

[வந்தி மகிழ்ந்து கூலியாளாக ஏற்று மகிழ்தல்]

1773 வேலைகொள் வாருள ரோவென நின்று விளவுங்கால்
ஆலமி டற்றர ரரு ளென்றதி சயமுற்றுக்
கோலைய ணைத்தகை யாள்உனை வேலைகள்கொள்
வேனுன்
போலு மெனக்குரி யாருளரோமக னேபோதாய் 36

[பிட்டமுதே கூலியெனக் கூறியளித்தல்]

1774 பிட்டமு துண்ணவிப் போதும கிழ்ந்தளிப் பேன்பிட்டுச்
சட்டமு டன்கரை கட்டுமி டத்துநீ தானுண்ணக்
கட்டி முடிந்து கொடுத்திடு வேன்கரை கட்டாலல்
இட்டமு டன்றினங் கேட்கினும் பிட்டமு தீவேன்நான் 37

1775 வைகையி லென்பங் கடைத்திட வாவென மகிழ்வோடும்
செய்கை மிகுந்து கணத்தி லடைப்பது தீடமாகும்
கைகொடு நீயுதிர் பிட்டிடு வேன்றிருக் கையேந்த
உய்கை மிகுந்திட தந்திட வாங்கிநின் றுண்டண்ணல் 38

1771 கவின் – அழகு. பங்கி – தலைமயிர்.

[பிட்டமுதை யுண்டு இறைவன் வந்தியின் பங்கினை அடைக்க வையைக்கரை செல்லுதல்]

1776 இங்கனை நீதரு பிட்டமு தின்சுவை யில்லூர்வாழ்
கங்கை தரித்தவர்க் கேதகும் என்றுகை கம்பித்தே
பொங்கிய பிட்டமு தோர்கலை கட்டிய பொதியோடும்
அங்கவ ளுக்குவ பங்கது கண்டுநின் றவள்தன்னை 39

[வந்தியை அனுப்பிவிட்டு மண்வெட்டித் திருவிளையாடல் புரிதல்]

1777 ஆறடைக் கின்றவுன் பங்கினை யானடைக் கின்றேன்நீ
தேறிய சிந்தையொ டுன்மனைக் கேகென வேசெப்பிக்
கூறுகி டந்தகி டங்கிடை மண்டொடு கோட்டாலே
கீறியெ டுத்ததில் மீளவுங் கொட்டியக் கினர்மண்ணை 40

1778 வேறுப டப்பெருங் கொட்டி லணைத்தறல் மிசைவீசி
ஆறு தினந்தினங் கட்டிமு டிப்பவர்க் கரிதீதோ
கூறுவ ரென்றய னிற்பவர் மகிழ்வுறக் கூத்தாடி
ஏறு நடப்பது போல நடப்பர்நல் லிசையோடும் 41

1779 பாடுவர் யாரையும் நாடுவர் எய்ப்புறு பசியுற்று
வாடுவர் போற்பொதி பிட்டினைக் கைகொடு வாரித்தின்
ரோடற லக்கையில் அள்ளியுண் டேப்பமு ளாராகி
நீடுமண் வேலைசெய் தெய்த்தவர் போல்மிக நிலமீதில் 42

[அரசன் அடைபட்ட கரையினைக் காணவருதல்]

1780 கூடைத லக்கணை வைத்துநன் னித்திரைகொள் வார்போல்
ஆடைவி ரித்ததின் மீதுப டுத்தவ ணமர்போதில்
ஓடுபு னற்கரை கட்டுதல் காணுற வுலவாநல்
வீடுத ரத்தகு மந்திரி யாரொடும் விறல் மாறன் 43

1776 அனை – அன்னையே. கைகம்பித்து – கைகொட்டி. கலை – ஆடை.
1778 ஆறுதினந்தினங்கட்டி முடிப்பவர் என்றது சடையிலே கங்கையை வைத்து முடித்தலை. ஏறு – காளை.
1780 மந்திரி – வாதவூரர். மாறன் – பாண்டியன்.

[வந்தியின் பங்கு அடைபடா திருப்பதைப் பற்றி அரசன் வினவல்]

1781 ஆக்கிணை செய்த படிக்குவை கைக்கரை யணைசெய்த
ஊக்க மெலாங்கணின் நோக்கி வரும்பொழு
தோர்பங்கின்
மீக்கரை கட்டுவ தன்றிநன் நீர்செலும் விரைவைக் கண்
டாக்க வெவர்க்குள பங்குசொல் வீரென விறைகூற 44

[கூலியாளின் செயலை அரசனிடம் அலுவலர் கூறல்]

1782 கட்டு கரைக் கணின் நிற்பவர் கூடற் கரசேநற்
பிட்டினை விற்றுண வுற்றவள் பங்கிது பெருமூப்பாள்
அட்டிடு பிட்டிது கூலியு னக்கென வாள்தேடி
விட்டனள் கட்டுவன் என்றவட் போக்கியொர்
மெய்யில்லான் 45

1783 ஆடுவன் பாடுவன் மண்ணினை வெட்டுவன் அதையள்ளிப்
போடுவன் கூடையிற் கொட்டுதல் கண்டிலம் புனல்மீதும்
ஓடுவன் எங்குமெ னக்கினை யாரென வுரைசெய்வான்
நாடியிங் குள்ளவர் யாரொடும் நேருவன்
நகைசெய்வான் 46

[அரசன் அவன் யார் என வெகுண்டு வினவல்]

1784 வேலைசெய் தெய்த்தவர் போல்சிரங் கூடையின்
மேல்வைத்துச்
சாலவு றங்குவர் போற்கிடந் தானவன் ருனென்று
மாலுறு வோர்சொலக் கேட்டவன் யாரென மனவேகச்
சீலமு டன்றிகழ் பாண்டியர் கோவயல் செல்காலை 47

[அரசன் கூலியாளாய் வந்த இறைவனைப் பிரம்பால் அடித்தல்]

1785 நித்திரை செய்தெழு வாரினை முந்துமன் னேராக
மெத்தவும் அஞ்சினர் போலவும் நின்றனர் விறல்மாறன்
அத்தகை வந்திதன் னிலைன வந்தவன் அடையாத
புத்தியை னென்றுபிரம் புகொண் டோரடி போடுற்றான் 48

1782 மெய்யில்லான் - பொய்யன். (வடிவமில்லாத இறைவன் என்னும் குறிப்பு)

[இறைவன் மீது பட்டஅடி தேவர்கள் முதல் எல்லா உயிருடம்பின் மீதும் படுதல்]

1786 காதலொ டுஞ்சிவ யோகமி ஞங்கயற் கண்ணுடன்
மீதினி லேற்றிட அவ்வடி தென்னவன் மெய்மீதும்
ஓதுபு கழ்த்திரு வாதவூ ரன்பர்த் தம்உடல் மீதும்
தீதறு தென்மது ராபுரி வாழ்பவர் தேகத்தும் 49

1787 ஆண்பெண் அலிப்பவ மாய்ப்புவி தோன்றுமற் றெவர்மீதும்
காண்டகு மிந்திரன் ஆதிய தேவர்கள் காயத்தும்
மாண்புறு பாதல மேவிய நாகர்தம் வடிவத்தும்
பூண்பெறு கும்பமு லைத்திரு நாயகர் புயமீதும் 50

[பிரம்படி இறைவன் எங்கும் நிறைந்துள்ள தத்துவத்தை விளக்கமாக்குதல்]

1788 வண்கம லத்தயன் மீதுமண் டந்தொறும் வகையேழாய்ப்
பண்புறு நால்வகைத் தோற்றம தாகிய பலபேதத்
தெண்பெறு மாருயிர் யாவும் வருந்துற விசைவித்துப்
புண்பெறு மவ்வுயி ருக்குயிர் தாமெனும் பொருள் காட்டி 51

[இறைவன் மறைதல்]

1789 கண்ணுதல் நாயகன் தன்னியல் பாகுநிட் களமெய்யை
யெண்ணி யொளித்திட வந்திதன் ஆளென வேநின்ற
அண்ணலொ யாவரும் கண்டிலர் அவரவ ராகத்தில்
விண்ணுற வோங்கு பிரம்படி யொன்று விழக்கண்டார் 52

[வந்தி தேவ விமானத்திற் செல்லுங் காட்சியை யாவரும் கண்டு வியத்தலும் ஆகாயவாணி கூறலும்]

1790 வந்தி விளங்கொளி மானமி சைச்செலு வதுங்கண்டார்
அந்தர வாணியொன் றன்புசெய் வாதவூ ரவனுக்காய்
இந்த வருட்டிரு வாடல்வி ரூத்தனம் இனிமேல்நற்
சிந்தைய ஞமவ னிச்சயி னேவுதல்செய் கென்று 53

1788 பலபேதத்து எண்பெறு மாருயிர். பல்வேறுபட்ட உயிர்கள்.
1789 நிட்களம் – அருவம். ஆகம் – உடம்பு.

[பாண்டியன் விம்மிதமுற்று இறைவனை அழுது வணங்குதல்]

1791 மெய்திக ழம்மொழி யுஞ்செவி கேட்டனர் மெய்சோரக்
கைதவன் யாவரோ டுஞ்சிரமீ திரு கைகூப்பிப்
பைதிகழ் பாம்பணி சுந்தரர்என்று பயந்தோன்றி
எய்திடு குற்றம்நினைந்தெழு தான்பிழை யென்செய்வான் 54

[தரவு கொச்சகக் கலிப்பா]

[வாதவூரர் இறைவனை வணங்கித் துதித்தல்]

1792 தேறுமறுள் பெற்றதிரு வாதவூர்த் திருமுனிவர்
ஊறுமெழிற் கண்ணீ ரொழுகத் தமையாண்டோர்
ஆறுகரை கட்டு மடிச்சுவட்டின் மேல்விழுந்து
மீறுமயக் கம்மூற்று விம்மிப் புரண்டழுதே 55

1793 மண்ணெடுத்துச் சென்னியின்மேல் வைக்கவடி
யேன்பொருட்டால்
நண்ணிநீ யோ வைகையின்பால் நாதனே யென்றழுவார்
புண்ணுறுமோ உன்னுடைய பொன்மனே
வன்கண்ணைக்
கண்ணுறவே நீபட்ட வடிகண்டு மிருந்தேனே 56

1794 கூறிலங்கு மங்கைகொங்கைக் குங்குமமும் சந்தனமும்
நீறுமிலங் கும்முனது நின்மலர்செம் மேனியெலாம்
சேறும் புழுதியுமே சேர்ந்தநிறங் கண்டுமிங்ஙன்
கீறியுடல் போக்காமல் கேடுற் றிருந்தனனே 57

1795 வைத்திடுமண் வெட்டி மழுவோ திருக்கூடை
கைத்தலத்தி லேந்துங் கபாலத் திருவோடோ
தொத்துந் துகில்புலியின் தோலோவுன் சும்மாடு
கொத்தறுகோ கொன்றைக் குழையோ வறியேனே 58

1791 கைதவன் – பாண்டியன். பை – படம். பயம் – அச்சம்.
1798 வன்கணைய் – இரக்கமற்றவனை. கண்ணுற – நேரேகண்டு.

1796 மெய்ப்போத நான்மறையும் வேதனுங்கார் மேனியனுங்
கைப்பாறக் காணுக் கதிர்முடியும் பொன்னடியும்
இப்பூமின் காணுதற்கிங் கென்னதவஞ் செய்தனளோ
பொற்பார்ந்த வைகைநதி புரிமுன்நற் றவமெவனே 59

1797 நாவாற் சுவையுணரும் நன்குடைய பிட்டமுது
கோவேகீ கொள்ளக் கொடுத்த நரைமுதியாள்
மாவாற் சமைத்தனளோ மன்னுமன்பை யூட்டினளோ
ஆவாயீ தென்னவதி சயம்நீ யுண்டதுவே 60

1798 எங்கொளித்தாய் என்னையுமாட் கொண்ட
விடந்தனிலோ
சங்க மிருந்ததமிழ் மாமதுரை யாலயத்தோ
பொங்குதிரு வம்பலத்தோ பூரணத்தோ நீள்நாகக்
கங்கணத்தா யுன்னையுநான் காணப் பெறுவேனே 61

[பாண்டியன் வாதவூரருக்குச் செய்த கொடுமைகளை எண்ணி
வருந்தி வேண்டுதல்]

1799 என்றுதிரு வாதவூர் அன்பர் இரங்குதல்கண்டு
அன்றவர்போற் றென்னவனும் அன்புற் றழுதிரங்கிக்
கொன்றையணி வோருமையாட் கொண்டதிறம்
யானறியா
தொன்றும் பொருணசையா லோங்குதுயர்
செய்தேனே 62

1800 நிரஞ்சனமா யெங்கும் நிறைந்ததிரு மேனியின்மேற்
பிரம்படியுங் கொள்ளப் பிழைசெய் திருந்தேனே
யரன்பணிகள் செய்நீரே யரசாயிருந் தருளி
விரும்பியவே வற்புரியும் வீறேயெனக் கருள்வீர் 63

1796 பூமின் – நிலமடந்தை.

1797 "ஆவா" – வியப்பொலி.

[வாதவூரர் அரசனுக்கு அமைதி கூறியருளல்]

1801 ஆதரவாங் குற்றம் அனைத்தும் பொறுப்பதுவே
நீதியென நின்றிரருங்கு கின்ற நிருபனெடு
பேதமற வும்மைப் பிரானருளென் றேகினந்தோம்
தீதும் உமக்குளதோ தென்னவர்கோ வேயென்று 64

[மன்னன் வாதவூரை அமைச்சுப் பொறுப்பினின்று
விடுவித்து அவர்நெறியே செல்ல வேண்டுதல்]

1802 வசித்திவ் வுலகிலுறும் வாழ்க்கையும்விண்
வாழ்க்கையுமென்
டிசைக்கணும் வாழ்வுமற்றச் செல்வமுநாம்
பற்றுகிலோம்
இசைத்த துறவும்மா விசையும்தாம் உமக்கண்ணல்
விசித்தி யறவோதி யருள்வாறே விடுத்தருள்வீர் 65

1803 அண்ணல் அமர்ந்த அருந்தலங்கள் யாவையினும்
நண்ணித் தெரிசனஞ்செய் நன்மையுமுண் டாமுமக்கிங்
கெண்ணுங் கரும மிதற்குமே லில்லையெனத்
திண்ண முறுமுறுதிச் செய்கைதனைச் செப்புதலும் 66

[தன்னுடன் வரவிரும்பிய பாண்டியனை வாதவூரர்
தடுத்து ஆட்சி புரியக் கூறுதல்]

1804 யானு மும்மதுபின்பு வந்திடுவே னென்றுரைக்கக்
கோனேநீ ராலவாய்க் கோயிலத னில்லமர்ந்த
ஞானவுமை பாகருக்கு நற்பணிசெய் திங்கிருத்தல்
தானே மிகுந்த தகுதியென வேதேற்ற 67

[வாதவூரர் துறவுபூண்டு திருச்சிற்றம்பலத்தை நாடிச் செல்லுதல்]

1805 சம்மதித்த தென்னர் தமைமாளி கைக்கனுப்பிச்
செம்மை மிகுந்ததிரு வாதவூர் மாமுனிவர்
மும்மை மலமகற்றும் முத்தித் துறவுருக் கொண்
டுண்மைத் திருநீற் றொளிபுனைந்து கோவணராய் 68

1801 ஆதரவாய் – அன்பாய். நிருபன் – பாண்டியன்.

1806 ஒடுங் கவந்தியுமே உறவென் றுளங்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே யெனத் தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் கூத்தாடி
ஆடுங் குலாத்தில்லை அம்பலமன் றேநாடி 69

[மாணிக்கவாசகர் சென்று வழிபட்ட தலங்களைப்பற்றி இனிக்கூறு வேனெனச் சூதமுனிவர் கூறல்]

1807 சென்று பெருந்துரையிற் சேர்ந்துசிவ தேசிகராற்
பொன்றுபவச் சார்பெலையும் போக்கிப் புனிதமொடு
நின்றருள்பெற் றுய்ந்தபெரு நேச நெறியனைத்தும்
குன்றுத் தவமுடையீர் கூறுவோங் கேண்மினென 70

1808 திங்கட் கொழுந்தணியும் செல்வர் குருந்தவர்க்குப்
பொங்கு முளத்துவகை போதப் பொலிந்தோங்க
அங்கம் புளகமெழ ஆர்வம் மிகப்பெருகத்
துங்கமிகு நற்றவஞ்சேர் சூதமுனி வன்சொலுவான் 71

[பிட்டுக்கு மண் சுமந்த சருக்கம் முற்றும்]



1806 ஒடு – திருவோடு. கவந்தி – கந்தையுடை. குமண்டை – நிறைந்து தெவிட்டல்.

1808 கொழுந்து – பிறை. போதம் – ஞானம்.

மாணிக்கவாசக சுவாமிக்குத் தலங்கள்தொறும் காட்சிகொடுத்த சருக்கம்

[ஆறுசீர் விருத்தம்]

[வாதவூரருக்காக மதுரையில் இறைவன் திருவிளையாடல் புரிந்தருளியபின் பெருந்துறையில் கரந்திருந்தான் எனல்]

1809 திருந்துங் கருணைப் பெருந்துறைவாழ்
சிவனார் அன்பர் தனக்காகப்
பொருந்துங் குதிரை கொண்டுகுட
நாட்டின் மதுரைப் புரவலனுக்
கிரும்பொற் கயிறு மாறியளித்
தெழில்சேர் வைகை மண்சுமந்து
பிரம்புற் றிடுமெய் யடியெங்கும்
பெறுதற் காக்கிப் பெயர்ந்தபினர் 1

1810 அகள மயமாய் நிறைந்தபெருந்
துறையி லருள்நிட் களவடிவாய்ச்
சகள வுருவுந் தோன்றுமல்
தகைசேர் யோகாம் பிகையினெடும்
திகழுந் தமதின் னருள்வடிவாய்ச்
சிறந்த செழும்பொற் சபையிடத்தும்
சுகபூ ரணப்பைங் குருந்திடத்தும்
சுயம்பு வடிவாய்க் கரந்திருப்ப 2

[திருவாதவூரர் துறவுபூண்டு ஆலவாய் அண்ணலை வழிபட்டுத் துதித்தில்]

1811 மறுவி லாநற் றிருவாத
வூரர் மதுரை மாநகரிற்
றுறவு வடிவாய் நீற்றொளியுந்
துலங்கு திருக்கோ வணவுடையும்

1809 புரவலன் – பாண்டிமன்னன்.

பெறுதற் கரிய வருட்குணமும்
பெற்றோர் பற்றும் பெருராகி
இறைவர் மருவுந் திருவால
வாய்சூழ்ந் திறைஞ்சித் துதிபுகல்வார் 3

[ஆறுசீர் விருத்தம் வேறு]

1812 அக்கணி புயனே போற்றி
அம்பிகை பாகா போற்றி
மிக்கபிட் டுண்டு கூலி
வேகூலியா ளாஞய் போற்றி
மக்களுக் காக வைகை
மண்சுமந் தடியும் பெற்ற
சொக்கநா யகனே போற்றி
சுந்தரா போற்றி போற்றி 4

1813 ஆலவா யதனுள் மேவும்
ஆத்மநா யகனே போற்றி
சீலமோ டெஞ்ஞயாட் கொண்ட
திருப்பெருந் துறையாய் போற்றி
ஞாலமுய்ந் திடக்கான் மாறி
நடம்புரி பரம போற்றி
சூலபா ணியனே போற்றி
சுந்தரா போற்றி போற்றி 5

{ வாதவூரர் திருப்பெருந்துறையை நாடிச் சேறல் }

1814 இத்துதி.....
இறையருள் பெற்று மீண்டு
தத்துவங் கடந்த வின்பம்
தமக்கருள் செய்த ஞான
வித்தகர் தமைக்கா ணன்பால்
மிகுபெருந் துறையை நாடிக்
கைத்தலங் குவியக் கண்ணீர்
சொரியவுள் கனிய வந்தார் 6

1812 அக்கணிபுயன் – எலும்பு மாலையணிந்த தோள்களை யுடையன்.

[தேசிக வடிவில் தன்னை யாட்கொண்ட மூர்த்தியைக் காணராகிப் புலம்புதல்]

1815 வந்துமுன் தம்மை யாண்ட
வடிவினைக் காண ராகிச்
சிந்தையுள் மயக்க மெய்தித்
திருவருள் மயமாய் ஓங்கும்
குந்தமும் மன்ற மாகும்
கோயிலும் போற்றி நின்று
புந்தியு ளடங்கா மோகப்
புணர்ப்புடன் புகலு கின்ருர் 7

1816 புனிற்றிளங் கன்று தாயைத்
தேடியுட் பொருமி வாடித்
தனித்துநிள் றரற்று மாபோல்
சங்கரா சங்க ராநீ
அனைத்துமாய் நின்ரு லுன்னை
அறிவதெப் படியான் என்றும்
எனைத்தனி யாக விட்டெங்
கொளித்தனை ஐயா என்றும் 8

1817 தாணுவே சிவனே மிக்க
சற்குரு நாதா வென்றும்
வாணுதல் பாகா வென்றும்
வயங்குமா மணியே யென்றும்
பூணனி புயனே யென்றும்
பொருந்துபூங் குருந்தின் முன்போற்
காணுமா றருள வேண்டும்
கண்ணுதற் கணியே யென்றும் 9

1818 உனைப்பிரிந் தாற்றே னென்றும்
உறவெனக் கெவரே யென்றும்
தனித்துணை நீயே யென்றும்
தரிக்கிலேன் அடிமை யென்றும்

1815 ஆண்டவடிவு - தேசிவடிவு

தினைத்துணை யென்றும் இந்தத்
தேகம தாற்றே னென்றும்
மனத்தினுக் கினியாய் நின்பால்
வாங்குவாய் என்னை யென்றும் 10

[இறைவன் உளமிரங்கி முன்போற் காட்சி கொடுத்தருளல்]

1819 சிவமயற் பித்து மிஞ்சிப்
செயலிழந் தவ்வா றன்பின்
தவமலி வாதவூரர்
சாற்றுசொற் கிரங்கித் தாய்போற்
கவின்மிகு குருந்து தானைக்
கலந்தவர் வெளியிற் காண
நவமலி குருந்த மூல
நாதராய் முன்போற் றோன்றி 11

[இறைவன் வாதவூரருக்கு சுவானுப ஞானத்தை விளக்கியருளுதல்]

1820 எதிர்முக மாக வாத
வூரரை இருத்தி நோக்கி
மதியருள் புரிந்து பெத்த
முத்தியின் வகைமை நன்றுய்ப்
பதிவுற விரித்துப் பேசிப்
பரமுத்தி சீவன் முத்தி
விதியொன்றுப் படி சுவானு
பவத்தினில் விளங்கு வித்து 12

[வாதவூரரைத் தலங்கள்தொறும் சென்று வழிபட்டு இன்புறப் பணித்தல்]

1821 இத்தல முதலாய் நாம்வீற்
றிருக்குநற் றலங்க டோறும்
மெய்த்துமக் களிங்குங் காட்சி
மேன்மையுங் கீர்த்தி வீறும்
கைத்தலா மலகம் போலக்
கண்டுல குய்யு மாறு
வைத்தருள் விளங்கச் சொற்பா
மாலையும் புனைந்து போற்றி 13

1821 கைத்தலாமலகம் – உள்ளங்கை நெல்லிக்கனி.

[தில்லைக்கு வருமாறு இறைவன் பணித்தல்]

1822 ஞாலமுய்ந் திடநா மாடும்
நலமலி தில்லை தன்னுட்
கோலமார் பொதுவில் வாவென்
றருள்செய்து குருந்தின் கண்ணுஞ்
சீலமார்ந் திலங்கு தெய்வத்
திருச்சபை யிடத்தும் மேவிப்
பாலுறத் தியநெய் போலப்
பரமர்வீற் றிருந்தா ரன்றே 14

[எண்சீர் விருத்தம்]

[வாதவூரர் திருப்பெருந்துறையில் சின்னள் தங்கியிருத்தல்]

1823 அரனருளும் சிவானுபவ உபதே சத்தின்
அருமையினை நினைந்துநினைந் தவச மாகித்
திருமருவுங் குருந்தடியி லிருந்த ஞான
தேசிகர்தம் திருவடியை நினைந்து பூசித்
துருகுமனத் தொடுங்கோயில் சூழ்ந்து போற்றி
யோகநா யகித்தாயை உவந்து வாழ்த்திக்
கருவினுறு மூத்திபெற்ற களிப்பி னோடு
கவினுறுமோர் திருமடத்திற் கலந்து தங்கி 15

[சிவபுராணம் பாடியருளியது]

1824 வாதவூர் முனிவர்மகிழ்ந் திருந்து பின்னும்
வள்ளல்திரு மேனியைக்கா ணுத வாட்டம்
மீதுறலால் விதனமொடு குழைந்து சின்னள்
மிக்கதிருப் பெருந்துறையி லமர்ந்தஞ் ஞானத்
தீதகற்றி யுயிர்க்குமுத்தி கொடுப்ப தென்றும்
சிறந்தபஞ்சாக் கரமெனவே சிந்தை செய்து
நாதர்திருப் பெயர்தனையே நமச்சி வாய
வாழ்கவென முதன்மொழியா நவின்று காட்டி 16

1823 அவசம் – தன்னிலைமறப்பு.

1824 விதனம் – துன்பம்.

[திருப்பெருந்துறையிலிருந்து திருச்சதகம் முதலிய பாடிப் பின்னர் உத்தரகோசமங்கைக்கு எழுந்தருளுதல்]

1825 சிவபுரா னந்தகவி யுரைத்து மற்ற
திருச்சதக முதலான சிறந்த பாவிற்
கவின்மருவு பெருந்துறையூர்ப் புகழும் வாசங்
கமழ்மலர்ப்பூங் குருந்தெழிலும் சிறந்து பாடித்
தவமருவு மடியவர்கட் கருள்செய் மற்ற
தலங்களும் போய்த் தெரிசிக்குந் தயவுட்கொண்டு
மவுனபர ராகிடந்து மிகுந்து போதம்
வளர்திருஉத் தரகோச மங்கை மேவி 17

[நீத்தல் விண்ணப்பம் முதலியவை பாடியருளியது]

1826 அத்தலத்தி லமர்ந்துமங்க ளேசர் பாதம்
அணைந்துதொழும் பொழுதுபெருந் துறையி லாண்ட
வித்தகக்கோ லங்கயிலை மலைமேற் காட்டி
விமலர்திரு வருள்புரிய மிகுமன் புற்று
நித்தர்தமை நோக்கியெமை விடுதி கண்டாய்
என்றிரந்து நீத்தல்விண் ணப்பஞ் செய்து
புத்தியருள் பொன்னூசல் திருவெம் பாவை
புனலாடற் சிறப்பிலருள் பொருந்தப்பாடி 18

[மயேந்திர முதலிய தலங்களில் உள்ள இறைவனின் அருள் திருவிளையாடல்களை வியந்து அவற்றைக் கண்ணுறக்கண்டு மணிவாசகமாக அருளிச் செய்தல்]

[ஆறுசீர் விருத்தம்]

1827 மன்னுமா மயேந்தி ரத்தில்
வந்தரன் வதன மைந்தால்
சொன்னவா கமத்தின் உண்மை
தோற்றுவித் தருளப் பெற்று

1826 வித்தகக்கோலம் – ஞானவடிவம்.

1827 மயேந்திரம் – மகேந்திரமலை. நலாள் – உமையவள். நயப்பு – விருப்பு.

நன்னலம் பெறுங்கல் லாடத்
தினினலா லொடு நயப்புற்
றின்னலம் புரிந்த காட்சி
எழிலிரு விழியாற் கண்டும் 19

1828 பஞ்சப்பள் ளியினி லன்பர்
பான்மொழி தன்னே டண்ணல்
எஞ்சாதீண் டருள்வி ளைத்தங்
கெழில்வேட்டு ரூப மாகிக்
கிஞ்சுக வாயாள் கொங்கைக்
கிளர்தடம் படிந்தன் னுள்கை
மிஞ்சுசீர்க் கெளிறு சேர்த்து
விளையாடல் மகிழ்ந்து பார்த்தும் 20

1829 நந்தம்பா டியினில் வந்து நான்மறை யவர்போ னதன்
அந்தமி லாத ஞான வாரிய னைய மர்ந்த
சுந்தரங் கண்டு வேலம் புத்தூரிற் சுவேத மாவே
றுந்துகோ லத்தி னுள்ள பொலிவுகண் டுளங்கு
ளிர்ந்தும் 21

1830 தற்பண மதனின் முக்கட் சங்கரன் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விழைவுமொக் கணியின் மேவி
முற்பட விளங்கி யின்ப முழுத்தழல் மேனி காட்டும்
சுற்பிரங் கைக ளாரத் தெழுதுள மகிழ்ச்சி கூர்ந்தும் 22

1831 பூவண மதனிற் சென்று பொலிந்தினி தருளி யண்ணல்
தூவண மேனி காட்டும் தொண்மையும் வாத வூரிற்
றேவர்கள் தேவர் பாதச் சிலம்பொலி யளித்த பண்பும்
பாவனை சஞ்செய் கின்ற பரிசுபூ வணத்திற் பார்த்தும் 23

1828 பான்மொழி – உமை. அண்ணல் – சிவபிரான். கிஞ்சுகம் – கிள்ளை

1829 ஆரியன் – ஆசாரியன். சுந்தரம் – அழகு. சுவேதமா – வெள்விடை.

1831 தூவணம் – தூயவண்ணம். பரிசு – தன்மை.

1832 **பட்டமங் கையினிற் பண்போ டிருந்துபைந்**
தொடிமி னுர்கட்
கட்டமா சித்தி தன்னை அருளிய இயல்பும் போற்றி
உட்டய வுடனே **யோரி யூரினி** லுகந்து நாதன்
இட்டமோ டினிய பால னகிய வியல்புங் கண்டு 24

1833 வேடுவ னகி யாங்கே வேண்டுருக் கொண்டு நீண்ட
காடத னிற்க ரந்த கள்ளமு மேயக் காட்டி
நாடுதற் கரிய தக்கா னெருவனு நலமுஞ் (சேவித்து)
ஏடலர் **பரண்மூர் தன்னில்** ஈண்டமா வடிவு நோக்கி 25

1834 **தேவூர்த் தென்பாற்** றிக்கண் டிகழ்தரு **தீவின் மேவிக்**
கோவார்கோ லமுங்கொள் கின்ற கொள்கையுங்
தெரிசித் தேத்தி
நாவார்சொற் கவிகள் பாடி நலந்திகழ் **சோணை டெய்தி**
சேவேறு பரமர் வாழும் **திருப்பதி பலவுந் தாழ்ந்தே** 26

1835 தேனமர் சோலை சூழ்ந்த **திருவாரூர் தன்னின்** மேவி
ஞானவன் மீக நாதர் நல்கிடப் பெற்று மாலோர்
ஏனமாய்த் தேடிக் காணு எழில்திகழ் பரமர் பாதம்
மானணி கரன்சிரத்தில் வைத்திட மருதி லேற்றும் 27

1836 **ஏகம்பந்தந் தன்னின்** மேவி எழில்திகழ் சுண்ணம்
பாடிப்
பாகம்பெண் ணுடனு மின்பப் பரிசுகண் டுவந்தும் இந்து
சேகரன் மருவாநின்ற செழுமலர்க் குழலி யோடும்
வாகுதென் **வாஞ் சியத்தின்** மகிழ்ந்தவண்
ணமும்பார்த் தோதி 28

1834 தென்பால் திசையில் என்க. சே – எருது (இடபம்). தாழ்ந்து – வணங்கி.

1835 ஏனம் – பன்றி. மாணணிகரன் – மானேந்தியகையன். மருது – இடைமருதூர்.

1837 **கடம்பம ரூரிலெய்திக் கண்ணுத லுமையா** ளோடும்
இடம்பெற விருந்த கூட்சி எழிலினைத் தொழுது பச்சை
மடந்தையொ டிருச்சு **மீங்கோய் மலை**யெழில்
வணங்கிப் போந்து
தடம்புடை சூழ் **ஐயாற்றிற் சைவர்தாள்** வணங்கப்
பெற்றும் 29

1838 **துருத்தியி** லுருத்தி யோடு தோற்றிவீற் றிருந்த கோலம்
விருப்பொடு பணிந்து மிக்க **திருப்பனை யூரில்** மேவி
இருப்பவர் தமைக்கண் டேத்தி எழிற்**கழு மலத்தில்**
வந்து
பொருப்புறழ் தோணி மீது பொருந்தரன் காட்சி
பெற்றும் 30

1839 தேகிக வடிவாய் மிக்க **திருக்கழுக் குன்றிற்** கண்டு
மாசனை முருவு காட்டி மயக்கறுத் தாண்டா யென்று
நேசமாய்த் துதித்து வந்து நிறைபுகழ்ப் **புறம்பி யத்தில்**
ஆசிலா வறமுங் **குற்ரு லக்குறி** பலவும் போற்றி 31

1840 **சிதம்பரந் தன்னிற் சென்று** திருச்சிற்றம் பலத்தைச்
சூழ்ந்து
பதஞ்சலி முனியும் வியாக்ர பாதரும் தெரிசித் தேத்த
விதம்பெறு முயன்மே னின்றங் கெடுத்தொரு பாதங் காட்டி
முதிர்ந்தபே ரின்ப மீந்து முக்கண ராடுங் கூத்தை 32

1841 கண்டுகண் மாரி சிந்த கைகளுச் சியின்மேற் கூம்ப
மண்டுமெய்ப் புளகம் போர்ப்ப வாசக மொழிதள்ளாட
அண்டர்நா யகர்முன் வீழ்ந்தெட் டங்கமும் மண்ணிற் ரேய
தண்டரிப் பாதம் போற்றித் தருந்திரு வருளுட்
கொண்டே 33

1837 கண்ணுதல் – சிவன். பச்சைமடந்தை – உமாதேவி
1838 துருத்தி – திருப்பூந்துருத்தி. கழுமலம் – சீர்காழி.
1840 முயல் – முயலகன்.

[கோயில் மூத்த திருப்பதிகம் முதலிய பாடியருளியது]

1842 கோதிலாக் கோயில் மூத்த திருப்பதி கக்கு நிப்பின்
நாதனே என்னை யுன்றன் அடியவர் நடுவுள் மேவிப்
பேதமற் றிருக்க நீநற் பொருள்புரி யென்று நுண்மை
யோதிய பின்னர் யானும் உன்னடைக் கலமென்
றன்பால் 34

[அடைக்கலப்பத்து முதலிய பாடியருளியது]

1843 அடைக்கலப் பத்து சொல்லி யருவினைப் பிறவி யென்றுஞ்
செடத்துயிர் வேத னைக்குட் சிக்கிய வெனையாட்
கொண்டிங்
கிடர்ப்படும் பிறப்ப றுத்த வினையிலி தன்னை யின்பக்
கடற்றிரு வம்ப லத்துக் கண்டன னென்று பாடி 35

1844 திருமூலட் டானம் போற்றித் திருவருள் பெற்று வாழ்ந்து
மருமலி தில்லை மூதூர் மருங்குசூழ்ந் தேத்திச் சென்று
பரமர்பாற் கடற்ற டத்துக் குத்தர பாரி சத்திற்
றருவன நெருங்கி வாசந் தருமொரு தெய்வச் சூழல் 36

1845 திருப்பெருந் துறையி லாண்ட தேசிகர் தாள்நி ழற்போல்
அருட்பொலிந் தமரு மாங்கோர் ஆசிர மத்தின் மேவி
முருக்கிதழ் உமைகோ னீந்த முத்திபஞ் சாக்க ரத்தை
விருப்பொடு நினைந்து ஞான வேந்தர்வீற் றிருந்தா
ரன்றே 37

1846 அங்கவர் மனத்துட் டோன்றும் அனுபவ அருள்மே
லீட்டைத்
தென்கலைத் தமிழால் இன்பஞ் சேர்திரு வாசகமாய்
இங்குள அடியர் யாரும் இயம்பியுந் திடும்பொ ருட்டுச்
சங்கர னருளாற் பாடித் தனித்தமர்ந் திருக்கும் நாளில் 38

1844 உத்திரபாரிசம் – வடதிசைப் பக்கம்.

[புத்தரை வாதில் வென்ற வரலாற்றை இனிக் கூறுவேன் எனச் சூதமுனிவர் கூறல்]

1847 வாதுசெய் திடுவோ மென்று வந்தசாக் கியரை வென்று
பேதமி லாத வூமைப் பேடினைப் பேசு வித்து
நாதர்மெய்ச் சைவத் தன்மை நாட்டிய திறத்தை மிக்கீர்
ஓதுவன் கேண்மின் என்று சூதனு முரவோன் சாற்றும் 39

[மாணிக்கவாசக சுவாமிக்குத்
தலங்கள்தொறும் காட்சிகொடுத்த சருக்கம் முற்றும்]



1847 சாக்கியர் – புத்தசமயத்தினர். பேடு – பெண். உரவோன் – முனிவன்.

புத்தரை வாதின் வென்ற சருக்கம்

[ஏழுசீர் விருத்தம்]

[சிவசிதம்பர முனிவர் ஈழநாடு சென்று வாழ்தல்]

1848 அரன்றிரு நடஞ்செய் சிதம்பர வாசம்
அனேகநாள் செய்தருட் சுகம்பெற்
றிருந்தருன் முனிவர் ஒருவர்வங் கத்தில்
ஏறிவா ரிதிகடந் தேகிப்
பெருந்திருக் கோண மாமலை மருவும்
பிரானடி பணிந்துநற் கேதீச்
சுரம்புனர் சிவனைத் தொழுதருள் பெற்ற
சுகக்களிப் போடுமந் நாட்டில் 1

[சிவசிதம்பர முனிவரைச் சாக்கியர் எதிர்ப்பட்டு வினுதல்]

1849 சிவசிதம் பரமென் றிடைவிடா துவந்து
செப்புநன் மொழியொடு மொருநாள்
அவம்புரி புத்தர்க் கிறைவன்வாழ் புரியில்
அம்மொழி யாவரும் கேட்பத்
தவந்திகழ் முனிவர் உரைத்திடக் கேட்ட
சாக்கியர் மனம்பொரு ராகி
இவண்பய னுரைச்சொல் உரைத்தநீ யார்கொல்
இயம்பென வன்பரங் கிசைப்பார் 2

1848 அருட்சுகம் – பரமானந்தம். முனிவர் – சிவசிதம்பர முனிவர் (எப்பொழுதும் சிவசிதம்பரம் என்று கூறிக்கொண்டிருந்ததனால் இவர்க்கு இப்பெயராயிற்று) வங்கம் – கப்பல். வாரிதி – கடல். அந்நாடு – (இலங்கை) ஈழநாடு.

1849 புத்தர்க்கிறைவன் – புத்தசமயத் தலைவர். புரி – தேசம்.

[திருச்சிற்றம்பலம் என்னும் நாம மகிமையை முனிவர் கூறல்]

1850 பரவைசூழ் உலகத் துயிருட லனைத்தும்
பதுமைபோல் எங்கும் நின்றுடத்
திருநடம்புரியும் சிவசிதம் பரத்தின்
பெயர்சொல்வோர்க் கடிமையான் சேனனைக்
கருவுறூர் திருச்சிற் றம்பலத் திருப்பேர்
காதினுட் கேள்விபெற் றவரும்
வரமுற வேண்டில் இறையொடு நீரும்
வம்மினென் றுரைத்தன ரவரும் 3

[சாக்கியர் சிதப்பரம் சென்று எமது சமயத்தை நிலைநாட்டுவோம்
எனச் செருக்கி மொழிதல்]

1851 தாவிலா வெமது போதியி லிருக்கும்
தலைவனை யன்றியும் உலகிற்
றேவுமொன் றுளதோ விக்கண முமது
சிதம்பரந் தனிலெங்கள் தேவை
ஆவலோ டிருத்திப் பிடகநூற் சமய
மாக்குதற் கிறையொடும் வருவோம்
நீவிரைந் தேயுன் குருக்கள்மார்க் குரைபோ
என்றுரை நிகழ்த்தினர் பின்னர் 4

[ஈழத்தரசன் தன் மகளின் நோய் தில்லையில் நீங்கப்பெருவிடின்
புத்தசமயத்தையங்கு நிலைநாட்டுவேன் எனல்]

1852 அனைவரும் ஈழத் தரசன்முன் னணுகி
அம்மொழி பகர்ந்திட வவனும்
வினையமொ டெமது மகட்குறு மூங்கை
விலக்குமா றருளுமென் றுரைத்து
நினைவுறும் வண்ணம் செயாவிடின் நீங்கள்
நிகழ்த்திடும் படிசிதம் பரத்தில்
வனைகழற் போதி வேந்தனை நிறுவி
வணங்குவோம் வம்மினென் றெழுந்தான் 5

1850 பரவை - கடல். இறை - அரசனும் சமயத் தலைவனும்.
1851 தா - குற்றம். போதி - அரச மரம். தலைவன் - புத்தர். தேவு - கடவுள். பிடகம் - பவுத்த சமயத்து நூல் (திரிபிடகம்).
1852 மூங்கை - ஊமைத்தன்மை. போதிவேந்தன் - புத்தர்.

[ஈழத்தரசன் புத்தசமய ஆசிரியர், பரிவாரங்களுடன் சிதம்பரம் வருதலும் சமயவாதிடத் தூண்டுதலும்]

1853 பவுத்தவா சிரியர் கூட்டமு மூமைப்
பாவையும் பொருபடைத் திரளும்
தவத்தினர் மருவும் சிதம்பரம் நோக்கிச்
சமுத்திரங் கடந்துவந் திறங்கிச்
சிவபணி புரிந்து தொழுந்திலை மூவா
யிரவர்க்குஞ் செறிதவத் தினர்க்கும்
உவப்பொடுப்வா துபுரிந்துவெல் வதற்கிங்
குற்றுளோ மெனச்சொலி விடுத்தார் 6

[தில்லைவாழ் முனிவர்கள் அப்பலக்கூத்தனிடம் வேண்டல்]

1854 வந்ததூ துவர்சொல் வசனமும் முன்னுள்
வருமன்பர் புகன்றதும் மதித்துச்
சிந்தைசெய் தவர்கள் பிடகநூல் முறைமை
தெரிந்துமா றுரைசொலிச் செயித்தற்
கிந்துசே கரர்தந் திருவருள் வேண்டு
மெனநினைந் தியாவரு மணுகிச்
சுந்தர நடனம் தொழுதுசாக் கியர்கள்
சொன்மொழி யியம்பிமுன் துதித்தார் 7

[இறைவன் அந்தணர்கள் கனவில் தோன்றி மாணிக்கவாசகரை அழைத்து வாதுபுரிவீர் எனல்]

1855 அன்றிர வவர்கள் துயில்கொளும் பொழுதில்
அவரவர் கனவிடைப் புகுந்து
மன்றுளின் றாடும் மாணிக்கக் கூத்தர்
மாணிக்க வாசக ரிருக்கும்
பொன்றிக ழிடத்திற் சென்றுநீர் மொழிந்து
பொருக்கென வழைத்துவந் திருத்தி
வென்றிநீர் கொண்மின் எனவவர்க் குரைத்து
மீண்டுசிற் றம்பலம் புகுந்தார் 8

1854 முன்னுள் வருமன்பர் – சிவசிதம்பர முனிவர். சாக்கியர் – புவுத்த சமயத்தவர்.

[இவ்விடத்தில் ஓர் ஏடு இல்லையாதலின் பதினொரு பாடல்கள் விடுபட்டுள. பின்வரும் பாடலில் முற்பகுதியில்லை.]

[ஆறுசீர் விருத்தம்]

1856 .....ஞ்சற் றுண்டாய்க் கலிமகள் தன்னைச்சீறி
பொன்றுபேய்ச் சமயர் நாவிற்
பொருந்துவ தழகோ வென்ன
ஒன்றுசொற் கிழத்தி பின்றங்
குறவவர் ஊமை யானார் 23

[புத்தர்கள் ஊமையரானமை கண்டு ஈழத்தரசன் தன் மகளைப் பேசுவித்தருள மாணிக்கவாசகரை வேண்டுதல்]

1857 எழுதுசித் திரம்போ லன்னார்
ஊமையா யிருத்தல் கண்டு
நழுவிமுற் குணங்கள் போக
நடுநிலை பெற்று மன்னன்
தொழுதுமுன் வணங்கி வீழ்ந்தென்
தோகையைப் பேசு வித்து
வழியடி மைகொள் புத்தர்
மயக்கந் தீர்த்த் தாளவேண்டும் 24

[மாணிக்கவாசகர் கருணைகொண்டு அப்பெண்ணுக்குத் திருநீறு அளித்து இறைவன் பெருமையைக் கூறு எனப் பணித்தல்]

1858 அம்பலத் தாடு மண்ணல்
எமக்குநீ ராகு மென்று
நம்பிமெய் வசனங் கூற
நன்கென விரங்கி மன்னு
வெம்புமெய் மூகை தீர
விமலர்வெண் ணீற்றை யீந்து
சம்புவின் பெருமை யெல்லாம்
ஏடி! நீ சாற்று கென்று 25

1856 சொற்கிழத்தி – நாமகள். பின்றங்குற – நீங்க. அவர் – வாதிட்ட புத்தர்கள்.

1857 முற்குணம் – புத்தர்களைச் சார்ந்து ஓரம் பேசிய குணம். தோகை – அரசன் மகள்.

1858 நம்பி – ஈழத்தரசன். சம்பு – சிவபெருமான்.

[**வினு விடையாகத் திருச்சாழல் பாடல் அருளுதல்**]

[எண்சீர் விருத்தம்]

1859 சீரு றுந்திரு வாசகப் பாவினிற்
சேரும் நற்றிருச் சாழற் கவியினுல்
நீரு றுஞ்சடை தாழ்தன் மன்றினுள்
நிருத்த மாடுஞ்ச பேசர்தன் நீர்மையை
ஏரு றும்வினைக் கேட்பது பாதியும்
ஏடி பேசி யிடும்விடை பாதியும்
பாரு ளோர்கள் துதித்துயு மாறருட்
பண்பர் சொன்ன பதப்பொருள் கூறுகேம் 26

[மாணிக்கவாசகர் 'ஏடி' என விளித்து வினவலும் ஊமைப்பெண் சாழலோ என விடை கூறலும்]

1860 பூசு கின்றதும் வெண்ணீறு பேணிமேற்
பூண்ப துப்படப் பொங்கர வம்அரன்
பேசு கின்ற சொலும்திரு வாயினைற்
பெருகு நான்மறை போலும் காணேடியென்
நீசர் தன்மைநல் லன்ப ரியம்பிட
என்ன பூசினும் பேசினும் பூணினும்
ஆசி லாவுயி ருக்குயி ராயியல்
பாயி னன்சாழ லோவென் றறைந்தனள் 27

1861 என்னை யாண்டருள் அப்பனென் னெம்பிரான்
எவர்க்குந் தானிறை யாகி யிருந்துநற்
றுன்னம் பெய்க்கோ வணம்புனை கொள்கையைச்
சொல்ல வேண்டு மேடியென் றியம்பிட

1859 — " திருச்சாழல் " என்னும் பதிகத்தின் வரலாற்று நிகழ்ச்சியை கூறுவேன் என முனிவர் கூறுகின்றார். நீரும் சடை – கங்கை தங்கிய சடாமுடி.

1860 பொங்கரவம் – பாம்பு. அன்பர் – மாணிக்கவாசகர். அறைந்தனள் – ஊமைப்பெண் விடையாகக் கூறினள்.

மன்னு சேர்கலை துன்னிய நற்பொருள்
மறைக ளேதிரு வான்சர டாயிடத்
தன்னை யேதிருக் கோவண மாகவே
சாற்றினன் சாழலோ வென்றனள் தையலாள் 28

1862 கோயில் நற்சுடு காடதாய்க் கானகக்
கொல்பு லித்தோ லுடுத்திடு மாடையாய்த்
தாயு மற்றொரு தந்தையு மற்றுளன்
தனிய னேவிறை யென்றன்பர் சாற்றலும்
ஏயு நட்புறு தாயொடு தந்தையும்
இன்றி யேதனி யாகி யிருப்பினும்
காயின் கற்பொடி யாகுங்காண் சாழலோ
கணத்தி லிவ்வுல கென்றனள் கன்னியே 29

1862 அயனைக் கூற்றை யனங்கனை யிந்துவை
யன்று மாயா வடுச்செய்த சேதியை
வயன மாகவே ஏடிநீ செப்பென
வாத வூர்த்திரு மாதவர் கேட்டலும்
நயனம் மூன்றுடை நாயகன் ருனேமுன்
நாடி நின்றுதண் டித்திடப் பெற்றது
சயமன் ரூவந்த வானவர்க் கென்றுரை
சாற்றி னள்சாழ லோவெனத் தாழ்குழல் 30

1864 தக்க னைத்திரு மேவிய எச்சனைத்
தகிலய றுத்துநற் றேவர்க ணத்தொடும்
தொக்க வந்தவர் தம்மைத் தொலைத்தது
சொல்க ஏடியென் றேயன்பர் கேட்டலும்
மிக்க தேவர்க ளைத்தொலை வித்துநன்
மேன்மை யான வருள்கொடுத் தெச்சனுக்
கக்க ணேர்பகைச் சென்னியை யீந்தனன்
அன்பி னற்சாழ லோவென் றறைந்தனள் 31

1861 துன்னம்பெய் – கிழிந்திருக்கும் துணிகளைத் தைத்த. சரடு – அரை நாண். சாற்றினன் – சாத்தினன் (அணிந்தான்)

1862 ஏயும் – பொருந்தும். காயின் – வெகுளின்.

1868 மாயாவடு – அழியாத அடையாளம்.

1864 எச்சன் – யாகத் தலைவன். பகைச்சென்னி – மாமுலைப்பிள்ளை.

1865 அலரின் மேலுறை வானும்நன் மாயனும்
அறிவு ருதழ லாருரு வாய்நெடு
நிலமு தற்கீ ழுண்டம்முற நின்றது
நிகழ்த்த வேண்டு மேடியென் றுரைத்திட
இலகு நல்லரு ணைசலச் சோதியாய்
ஈசன் நின்றில னேலன்றி ருவரும்
சலமு கத்தினிற் கொண்டவாங் காரமுட்
டவிரார் காண்சாழ லோவென்று சாற்றினள் 32

1866 மலைம கட்கொரு பாகம ளித்தது
மன்றி யேமற் ரொருத்தி யோராயிரம்
சலமுகத் தோட வன்சடை பாய்ந்திடும்
தகைமை யேடிநீ சாற்றுக வென்றலும்
பலன ருட்பெரி யான்சடை மீதவள்
பாய்ந்தி லாளெனின் பார்முழு துங்கன
பிலமு கத்தினிற் பாய்ந்தருங் கேடதாம்
பெருக வேசாழ லோவென்று பேசினள் 33

1867 கோல மால்வரை போற்றிரை மோதுதண்
குரைக டற்கண் எழுந்துமுன் ரொன்றிய
ஆல நீல விடமுண்ட வன்சதுர்
அறியு மாறெனக் கேடி யியம்பென
ஏலவவ் விடம் தன்னீயுண் ணுமலே
இருந்திட் டானெனில் மாலய னுள்ளிட்ட
மேலுறும்பல தேவர்கள் யாவரும்
வீய்வர் சாழலோ வென்றுரை விண்டனள் 34

1865 அருணசலம் – திருவண்ணாமலை. சலமுகம் – பகைமுகம் (போர்). ஆங்காரம் – செருக்கு.

1866 சலமுகம் – நீர்வடிவம் (கங்கை). பிலம் – பாதாளம்.

1867 குரைகடல் – ஒலிக்குங்கடல். சதுர் – திறப்பாடு. ஏல – பொருந்த. வீய்வர் – அழிவர்.

1868 தெக்க ணத்திசை தோக்கிநின் ருடுநற்
றில்லை மேவிய சிற்றம் பலவனூர்
பக்கம் பெண்ணுகந் தார்பித்த ரேடிநீ
பரிவிற் கூறென் றன்பர் பகர்ந்திட
ஒக்க முப்புரம் மாய்த்தவர் தாம்பெண்பால்
உகந்தி டாரேல் இருநிலத் தோரெலாம்
மிக்க யோகெய்தி யிந்நிலத் தின்பற
வீடு வார்நிசஞ் சாழலோ வென்றனள் 35

1869 தானந் தம்இலான் றனையே சார்ந்தனன்
றன்னை யாவருஞ் சாற்றற் கரியநல்
ஆனந் தப்பெரு வெள்ளத் தழுந்தினன்
அன்பி னேடியென் றண்ண லுரைத்திடத்
தேனுந் தும்பர மானந்த வெள்ளத்துள்
சேரும் வண்ணம் அழுந்துந் திருவடி
வானுந் தும்மிமை யோர்க்கொரு வான்பொருள்
மதிக்குங் காற்சாழ லோவென்று சாற்றினள் 36

1870 நங்கை நீசொலி தென்ன தவஞ்சிவன்
நரம்பி னேடெலும் பாகத் தணிந்துறும்
பங்க முற்றகங் காளகற் றேண்மிசை
பரித்தன னேடியென் றன்பர் பகர்ந்திட
அங்க மேதுமி லாதகங் காளமும்
ஆமா கேள்செலுங் காலத் திருவர்கள்
தங்கள் காலஞ் செலத்திருத் தோளினிற்
றரித்தனன் சாழலோ வென்று சாற்றினள் 37

1868 தெக்கணத்திசை – தென்றிசை. பக்கம் – தன்னுடம்பிற் பாதி. இந்நிலத்தின்பு – இல்வாழ்வாகிய இன்பம்.

1869 அந்தமில்லான் – முடிவற்றவன். வானுந்தும் – விண்ணகத்து உயர்ந்து விளங்கும்.

1870 ஆகம் – உடம்பு. கங்காளம் – எலும்புக் கூடு. பரித்தனன் – அணிந்துள்ளான். ஆமா – ஆமாறு. இருவர் – அயன், மால். காலம் – முடிவுகாலம்.

1871 காயும் வெம்புலித் தோலுடை வெண்டலை
கபால முண்கலன் காடே பதியிருப்
பாயி னுலவர்க் காட்படு வாரெவர்
அறியு மாறுசொல் லேடிநீ யென்றலும்
தேயு விண்ணெளி சேர்கம லத்தன்மால்
தேசு சேர்முச் சுடர்திசைத் தேவர்கள்
ஆயுள் மிக்கவிண் ணோர்பதி யும்வழி
அடிமை யாகுங்காண் சாழலோ வென்றனள் 38

1872 மலையரை யன்பொற் பாவையெ னுஞ்சிலை
வாணு தற்பெண் டிருவை விதியினுல்
உலக ரறியவேட் டானது வென்கொலோ
உரைசெய் ஏடிஎன் றன்பர் உரைத்திட
நிலவுல கத்துள் ளோர்முன் விதிவழி
நீடு மன்றல்செய் யாவிடிற் பாரினில்
கலைஞ வின்றபொ ருள்களெல் லாமிகக்
கலங்குங்காண் சாழலோ வென்றனள் காரிகை 39

1873 தேன்பு குந்தண் பணைசூழ்ந் திலங்குநற்
றில்லை மேவிய சிற்றம்பல வனுர்
தான் பெருந்திரு நட்டம் பயிலுவ
தானதென் கொலோ ஏடிநீ சாற்றெனக்
கூன்பு கும்பிறைச் செஞ்சடை யார்நடங்
கொண்டி லரேற் குவலயம் யாவையும்
ஊன்பு குங்கதிர்க் காளிக் குண்டிடும்
ஊட்டதாஞ் சாழலோ வென்றன ளுத்தமி 40

1871 காயும் – சினக்கும். ஆட்படுவார் – தொண்டராவார். தேயு – தெருப்பு. திசைத்தேவர் – திக்குத் தெய்வங்கள். விண்ணோர்பதி – இந்திரன்.

1872 சிலை – வில். விதி – நூல் முறைமை. கலை – சாத்திரங்கள்.

1873 தண்பணை – வயல். கதிர் – ஒளிமிக்க வேற்படை. ஊட்டதாம் – உண்ணும் உணவாகி அழிந்திடும்.

1874 கடக ரிப்பரி மாவிர தங்கள்முக்
கண்ண ரேறுத லின்றிமெய்க் காதலோ
டிடப மீதுகந் தேறிய வாறறிந்
திடவெ னக்கியம் பேடியென் றேசொலத்
தடமி கும்புர மூன்றும் பொடிபடத்
தழலெ ரித்தவந் நாள்சகம் போற்றநின்
றிடப வாகன மாய்ப்பொறுத் தான்திரு
மால்முன் சாழலோ என்றனள் ஏந்திழை 41

1875 நன்றி யேமிகும் சிட்டர்கள் நால்வர்க்கு
நான்கு வேதத்தின் உட்பொருள் தோன்றிட
அன்ரெ ராலினி ருந்தறங் கூறினன்
அண்ணல் ஏடியென் றன்பர் உரைத்திட
நின்ற நல்லற மாலின் இருந்துமுன்
நிகழ்த்தி னைவர்க் காயினும் துட்டரைக்
கொன்ற னன்புரம் மூன்றையும் கூட்டொடு
கோதி லான்சாழ லோவென்று கூறினள் 42

1876 அம்ப லத்திடை யாடி யகந்தொறும்
அமுது செய்யப் பலிதிரி யும்திரு
நம்ப னேயுநற் றேவரென் றியாவரும்
நண்ணு மாறென்கெல் ஏடி நவிற்றெனச்
சம்பு வின்குண மாமாகேள் நான்மறை
தாஅ மறியத் தகாமுத லாகுமென்
றெம்பெரு மானிறை யவனென் றேத்திய
இயல்பு காண்சாழ லோவென் றியம்பினள் 43

1877 சலமு டையச லந்தர னுகத்தைத்
தடிந்த ஆழியைச் சந்திர சேகரன்
நலமு லாவரு நாரணற் கீந்திடும்
நன்மை யேடி நவிற்றுக வென்றலும்

1874 முக்கண்ணர் – சிவபிரான். சகம் – உலகம். பொறுத்தான் – தாங்கினன்.
1875 சிட்டர்-மாணாக்கர். துட்டர்-தீயவர். கூட்டொடு-தொகுதியோடு.
1876 பலிதிரியும் – பிச்சையேற்றுத் திரியும். நண்ணுமாறு – விரும்பும்விதம். சம்பு – சிவன். முதல் – மூலம். இறையவன் – ஈசன்.

இலகு தாமரை யாயிரத் தொன்றிலா
திருத்த லாற்றிரு மாலொரு கண்ணிடந்
தலர தாகப் பதத்தி லருச்சிக்க
ஆழி யீந்தனன் சாழலோ வென்றனள் 44

1878 அம்ப ரம்புள்ளித் தோலென வேயுடுத்
தாழி யாலந் திருவமு தாக்கவே
[எம்பெ ருந்தகை யுண்ட சதுரெமக்
ஏடி நன்னர் இயம்புக வென்றலும்]
....
....
தம்பெ ருமையைத் தான்கண் டறிந்திடாத்
தன்மை யான்சாழ லோவென்று சாற்றினள் 45

1879 அருந்த வர்க்கறம் நான்குங்கல் லாவின்கீழ்
அகம லர்ந்தவ ருள்ளந் தெருண்டிட
இருந்து கூறிய வாறெனக் கேடியின்
றியம்ப வேண்டுமென் றன்ப ருரைத்திட
அருந்த வர்க்கறம் நான்குமன் றுவின்கீழ்
அருளு கின்றில னேற்சஞ் சலமறத்
திருந்த வர்க்குல கத்தியல் தோன்றிடாச்
செய்கை பூண்டிடுஞ் சாழலோ வென்றனள் 46

[மன்னன் மகிழ்தலும் புத்தர்கள் மனந்திருந்தித் தம்மை ஆட்கொள்ள வேண்டலும் மாணிக்கவாசகர் அவ்வாறே அருள்செய்தலும்]

1880 இன்னவாறு வினவும் விடையுமா
ஏடி பேசுவித் தியல்பு கண்டனன்
மன்ன னுய்ப்புத்த ரும்வாத வூரண்ணல்
தாள்ம லர்மிசை வீழ்ந்தன் பொடுந்தொழு

1877 சலம் – போர்ச்சினம். ஆகம் – உடம்பு. தடிந்த – வெட்டியறுத்த. இடந்து – அகழ்ந்து. அலரதாக – ஒருமலராக. ஆழி – சக்கரப் படை.

1878 அம்பரம் – ஆடை. ஆழியாலம் – கடல்நஞ்சு. இப்பாடலின் இடைப் பகுதி சிதைந்துள்ளது.

1879 தெருண்டிட – தெளிய. சஞ்சலம் – மயக்கம்.

துன்னு கின்ற பிழைபொறுத் தெங்களீ
உரிமை யாகுநற் ரெண்டுகொண் டாள்கென
மன்னு மன்பொடு சொற்றிரந் தேத்தினர்
மனம கிழ்ந்தருள் நோக்கம் வழங்கியே 47

[திருமறு அளித்து அவர்களுக்குப் பஞ்சாக்கரம் உபதேசித்தல்]

1881 அஞ்செ முத்தும்வெண் ணீறுங் கொடுத்தரற்
கடிமை யாக்கவன் னேர்மிகு மன்புபெற்
றுஞ்ச மென்றுப ணிந்தனுப் பப்பெறு
முரிமை பெற்றவர் நாட்டிடத் துற்றனர்
செஞ்சொல் மாணிக்க வாசகச் செல்வரும்
திருந்து மாசிர மத்தினிற் சேர்ந்தனர்
எஞ்ச லில்லருட் டில்லை மூவாயிரர்
இறைவர் தாள்தொழு தில்லையை மேவினர் 48

[இறைவன் மாணிக்கவாசகர் வாசகங்களீ எழுதிக்கொடுத்த வரலாற்றைக் கூறுவேன் என முனிவர் கூறல்]

1882 இன்ன தன்மைய தாகுந்தென் வாதவூர்
இறைவர் புத்தரை வாதினில் வென்றதும்
அன்ன மென்னடை ஏடியைப் பேசுவித்
தருள்செய் கின்றதும் என்றுரை செய்தபின்
மன்னு பேரொளி யாமரு வின்மய
மன்று ளார்திரு மாணிக்க வாசகர்
சொன்ன பாழுழு தும்மெழு திக்கதிச்
சுகம ளித்தது சொல்லுவன் கேண்மினே 49

[புத்தரை வாதின்வென்ற சருக்கம் முற்றும்]

1880 மன்னன் – ஈழத்தரசன். உன்னுகின்ற – கருதுகின்ற. மன்னும் – நிலைபெறும்.

1881 உஞ்சம் – உயர்ந்தோம். நாடு – ஈழநாடு.

மாணிக்கவாசக சுவாமி ஐக்கிய சருக்கம்

[எண்சீர் விருத்தம்]

[புத்தரை வாதில் வென்றபின் வாசகர் தில்லையாசிரமத்தில் விளங்கியிருத்தல்]

1883 சைவசம யத்திறமே யின்ப முத்தி
தருவதுமற் றுள்ளபுறச் சமய மெல்லாம்

செய்வகையாற் புனல்போலத் தோன்றிப் பின்பு
தேர்ந்திடிற்பேய்த் தேராகிச் சிந்தையுந் தன்மை

உய்வகையாற் புத்தர்குலத் துதித்த மூங்கை
உரைத்த சொலே சான்றுக உறுதிகாட்டி

மெய்வளரும் தில்லையா சிரமந் தன்னில்
மிளிர்திருவா சகமுனிவ ரிருக்குங் காலை 1

[சிற்றம்பலக் கூத்தன் கிழ உருவோடு மாணிக்கவாசகரிடம் வருதல் வருணனை]

1884 அம்பலத்திற் றிருநடனம் புரியு மின்ப
அழகியசிற் றம்பலவர் அருள்சேர் ஞானம்

பம்பியநற் றிருவாத வூரர் மேவும்
பரிவுறுமா சிரமமதிற் பகற்போ தின்கண்

செம்பதுமப் பதம்புவிமேற் றோய நெற்றித்
திருவெண்ணீ றணிதுலங்கத் திகழ்நூன் மார்பிற்

கம்பிதிகழ் பொன்பொறி ருத்திராக்க மாலை
கலந்தொளிரப் பொருவில்குடைக் கரத்தி லேந்தி 2

1888 பேய்த்தேர் – கானல்நீர். புத்தர்குலம் – புத்தசமயம். மூங்கை – ஊமைப்பெண்.

1884 பம்பிய – விரிந்த. தோய – பொருந்த. பொருவில் – ஒப்பில்லாத.

1885 உத்தரிகந் திருத்தோள்மேல் உலவச் சோம
னுடைதுலங்கக் குழைச்செவிப்பூ ணெளிர ஓர்க்கைப்
புத்தகத்தோ டெழுத்தாணிப் பொலிவுங் காட்டிப்
பொருந்துரைக் கிழவருப்பூ சுரர்போல் வந்து
வித்தகமா ணிக்கவா சகர்முற் றேன்ற
விரைந்தெழுந்து தொழுதுவந்த விமலர் தம்மைப்
பத்தியொடு முகமனுரை மிகுத்துப் பேசிப்
பரிவினெடு விழிகுளிரப் பார்த்தன் புற்று 3

[முதுமுனிவரை மாணிக்கவாசகர் வணங்கி வரவேற்று வினவுதல்]

1886 ஆதரித்தங் கொருமணியா சனத்தி லேற்றி
அருக்கியபாத் திரமுதவி யருகிற் ருமும்
காதலுட னிருந்துமது காட்சி யெற்குக்
கனகசபா பதிநடனம் கண்டாற் போலும்
மாதவப்பூ சுரச்சுருதி முனிவ ரேநீர்
வருவதற்கிங் கென்னதவ மாகு மீதென்
ருேதுதற்கற் புதமாகும் எல்று வாத
வூரரவர் முனிவரைப்பார்த் துவந்து கேட்பார் 4

1887 நேரில்லாச் சிவபதங்கண் டுயர்ந்த தூயோர்
நீணிலத்தி லுமைப்போலக் காணேம் நீர்தாம்
யாருரைமின் நீரிருக்கும் பதியா திங்கே
யாருமொரு துணையின்றித் தனியா யிங்கே
ஏருறுமூப் பொடுபதம்நொந் திடாத டந்திங்
கேன்வந்தீர் வந்தகா ரியந்தா னென்கொல்
சீரியபே ரறிவுடையீர் செப்பு மென்னத்
திருமறையோ ரவர்க்கினிதாய்ச் செப்ப லுற்ருர் 5

1885 உத்தரிகம் – மேலாடை. குழை – காதணி.
1886 எற்கு – எனக்கு. சுருதி – வேதம்.
1887 உரைமின் – கூறுங்கள். பதி – வாழும் ஊர்.

[இறைமுதியோர் தாம் வந்த காரணத்தைக் கூறல்]

1888 ஆதிசைவப் பூசுரர்நாம் ஆகு மென்றும்
அமர்ந்திருக்கும் பதிமதுரைத் தலமே யாகும்
நீதிதரும் சுந்தரச்சொக் கேசர் நும்மால்
நெடியவைகைக் கரையினில்மண் சுமந்து தென்னன்
மோதுபிரம் படியுமுற நீர்செய் யன்பின்
முதிர்ச்சியுணர்ந் துமைக்காண வேண்டு மென்னுங்
காதலினு லிங்குவந்தேம் இன்னு மொன்று
கருதியதுண் டதனையுய்யாம் கழறக் கேண்மின் 6

[மாணிக்கவாசகரின் திருவாசகப் பாக்களை எழுதிப்
பயின்றின்புற வேண்டிவந்தேன் என இறைவன் கூறல்]

1889 ஈசர்திருப் பெருந்துறைப்பூங் குருந்தின் ஞான
எழிற்குருவா யிருந்துபதே சித்த பேற்றை
நேசமுடன் நீர்திருவா சகப்பா வாக
நிகழ்த்திய தெல்லாமெழுதி நிதமும் ஓர்ந்து
காசறுபே ரன்பைமிக வளர்க்க வேண்டுங்
கருத்துமறி வினிற்பொருந்துங் காத லாலே
பேசரிய சிவபோகம் பொசிக்க வேண்டும்
பெருகியது விழையும்வகை பெறுதற் காக 7

[திருச்சிற்றம்பலக் கோவையையும் செப்ப வேண்டுதல்]

1890 திருச்சிற்றம் பலக்கோவை யால்நீர் பெற்ற
சிவபோக முதிர்ச்சியெலாம் செப்ப வேண்டும்
விருப்பொடுமிவ் விரவினுள்யாம் எழுதிப் போக
வேண்டுமிவை விரைவினெடும் புகல்வீ ரென்ன
அருப்பமெனி னும்பசுபா சத்தின் போதம்
அணுகாமா ணிக்கவா சகர்பே ரின்பப்
பெருக்கமெலாம் திருக்கோவைத் துறைநா னூற்றிற்
பேசினர் அரனெழுதும் பெருமை மேவ 8

1888 தென்னன் – பாண்டியன். கழற – கூற.

1889 ஓர்ந்து – பயின்று ஆராய்ந்து. காசறு – குற்றமற்ற. பொசிக்க – வாய்க்க.

1890 போதம் – அறிவு. பேசினர் – திருவாய்மலர்ந்தார்.

[திருவாசகத்தையும் திருக்கோவையையும் எழுதி இறைவன் இவை அழகிய சிற்றம்பலவரெழுத்து எனக் கைச்சாத்திட்டு மறைதல்]

1891 திருக்கோவை யுந்திருவா சகமு மண்ணல்
திருகரத்தாற் புத்தகத்திற் செறித்த வற்றில்
அருட்பெறு மாணிக்கவா சகர்சொன் முற்றும்
அழகியசிற் றம்பலவ ரெழுத்தென் றிட்டுக்
கருப்பவநோய் தொழுமடியார்க் கதலு மாறு
கருணையொடுந் திருநடனம் புரியு ஞானப்
பொருட்பெருகு கனகசபை யிடத்தின் முன்போற்
புத்தகமாத் திரந்தெரியப் புகுந்து நின்றார் 9

[கலி விருத்தம்]

[மாணிக்கவாசகர் இறைவன் செயலுணர்ந்து உளமுருகி ஆனந்தமுறல்]

1892 மதுரைத்திரு நகர்மேவிய மறையோர் எனவந்தார்
பொதுவிற்கரந் திரவிற்செலும் புதுமைச் செயலுணரா
இதுபொற்சபை நடமுற்றவர் எமையேவல்கொள் திறமென்
றுதகத்திரு விழியோடுமுள் உருகிக்குறை வற்றார் 10

[தில்லை வாழ் அந்தணர்கள் சிற்சபையில் புத்தகக்கட்டு இருத்தலைக்கண்டு சிந்தித்தல்]

1893 இவ்வாறிவ ரிருப்பக்கதிர் எழுமுன்புல ரியிற்சென்று
ஐவாயர வக்கங்கணர் ஆடுற்சபைக் காப்பைச்
செவ்வாய்த்தினம் பணிசெய்பவர் திருந்தர்ச்சனைச் குறும்போ
துய்வார்பொருட் டால்வைத்தபுத் தகத்துண்மைகண் டுடனே 11

1891 செறித்து - எழுதி. சொல் - சொல்லிய திருவாசகமும், திருக்கோவையும். எழுத்து - கைச்சார்த்து. கருப்பவம் - பிறவித் துன்பம்.

1892 பொது - பொன்னம்பலம். உதகம் - (கண்) நீர்.

1893 புலரி - வைகறை. உய்வார் - அடியவர். புத்தகம் - இறைவன் எழுதிக் கைச்சார்த்திட்ட திருமுறை.

1894 ஏவாலெயில் எய்தாரொடும் எண்ணப்படுந் தில்லை
மூவாயிரம் முனிவோரொடும் முதிரம்பல நடுவுகட்
பாவாரருள் மொழிப்புத்தகம் இருக்கும்பரி சுரைப்பக்
கோவாடுசிற் சபைமுன்பவர் கூடிப்பணிந் தேத்தி 12

[அந்தணர்கள் அப்புத்தகத்தை ஏந்தி மாணிக்கவாசகரிடம் பொருள் கேட்டுய்ய எண்ணி வருதல்]

1895 திருப்புத்தகந் தனைச்சென்றெடுத் ததன்வாசகந் தெரிவுற்
றருட்கொற்றவர் எழுதுமெழுத் தெனுமற்புத மறிந்தே
பொருட்பொற்பறி வதற்கியாமிவை புகல்வாதவூர் முனிபால்
இருட்பற்றறக் கேட்போமென எல்லாருமங் கெய்தி 13

[அந்தணர்கள் அவ்வாசகப் பொருளுணர்த வாதவூரரிடம் வேண்டுதல்]

1896 கண்டற்புத மொடுபோற்றியிக் கவிதீர்சொல அவையெம்
அண்டர்க்கிறை எழுதுஞ்செயல் அறிந்துற்றன மதனால்
விண்டப்பொருள் தனைபொற்சபை முன்பாகவி ளம்பித்
தொண்டர்க்குணர் வாகும்படி சொலவேண்டுமென் றிசைத்தார் 14

[மாணிக்கவாசகர் இறையுளமறிந்து யாத்திரைப் பத்துப்பாடி உருகுதல்]

1897 மெய்வித்தகர் அவர்சொன்மொழி விழைவின்பயன் உணரப்
பொய்விட்டுடை யான்சேவடி புகுங்காலம்வந் ததுவென்
றெய்வுற்றிடு செயல்பெற்றதன் இயல்போடரு ளுருவாய்
உய்வித்திடும் படியாத்திரைப் பத்தோதியன் புடனே 15

1894 ஏ – அம்பு. பாவார் – பண்ணமைந்த பாடல் அருளிய மாணிக்க வாசகர். கோ – சிவபெருமான்.

1895 அருட்கொற்றவர் – இறைவன். இருட்பற்று – ஆணவ முதலாய பாசங்கள்.

1896 விண்டு – விளக்கி. தொண்டர்க்கு – அடியார்கட்கு.

1897 காலம் – இறைவனோடு ஐக்கியமாகுங் காலம்

[சிற்றம்பலத்தை வணங்கிச் சிவோக நிலையுறுதல்]

1898 சென்றரணம் புகழ்ந்திருச் சிற்றம்பலந் தனைச்சூழ்ந்
தன்றுண்டவர் வீசுங்கரத் தால்வாவென வழைத்து
நின்றருடுதல் கண்டார்திரி புடியற்றநன் நிலையுற்
றொன்றுயர் விபுவாய்ச்சிவ யோகுற்றசை யாமல் 16

[திருவாசகத்தின் பொருள் ஆனந்தக் கூத்தனே எனத்
மாணிக்கவாசகர் சுட்டியுணர்த்தி ஆனிமக நாளில்
இறைவனோடு ஐக்கியமாதல்]

1899 அழல்சேர்ந்திடு மாக்கொத்துநல் லானித்திரு மகத்திற்
கழற்சேவடி நிழற்கீழயங் காந்தத்துறு செயல்போல்
எழிற்பேரருள் இன்பச்சுழி யீர்ப்பச்சபை யினிற்போய்
பொழிப்பார்ந்தநற் றிருக்கூத்தையுட் பொருளாமிதென்
றெழிந்தார் 17

[தில்லைமூவாயிரவரும் அதிசயத்துத் துதித்தல்]

1900 குஞ்சித்தசெஞ் சரண்கும்பிடு நிலைபெற்றகொள்
கையராய்
இன்சொல்பெரி யோர்முத்தியில் இயையும்படி கண்டே
மஞ்சுற்றதண் பொழிற்றில்லையந் தணர்மாதவர் எவரும்
அஞ்சொற்றுதி சொற்றேயர கரவென்றுரைத்
தார்த்தார் 18

[மாணிக்கவாசகர் ஒளியுருவாய்த் திருப்பெருந்துறை வந்து தம்மோடியைந்த
தன்மையை இறைவன் உணர்த்த முனிவர்கள் பூசித்து வழிபடல்]

1901 பரிபூரணத் தினில்வாதவூர்ப் பரனுற்றவந் நாளிற்
றிருவார்பெருந் துறையிற்றிரு வருட்டேசொடு மெய்திக்
குருபாதர்வந் திருக்குங்குறி குருந்தீசரங் குணர்ந்த
அருள்மேவுமத் தவமாதவர் அறிந்ததற்புத மெய்தி 19

1898 ஆரணம் – வேதம். சிவயோகு – சிவனோடைக்கியம்.
1899 மகத்தில் – மகவிண்மீனகியநாளில். அயம் – இரும்பு.
1900 குஞ்சித்தசெஞ்சரண் – தூக்கியதிருவடி. மஞ்சு – மேகம்.
1901 பரிபூரணம் – ஆனந்தமுத்தி.

[திருவாதவூரர் இவ்வாறு சிவைக்கிய மாஞர் எனல்]

1902 பூசாரவபி டேகம்உப சாரத்தொடு பூரித்
தாசாரமொ டெந்நாளுமர்ச் சனைசெய்தனம் முனிவீர்
தேசார்தரு திருவாதவூர்ச் செல்வர்சிவ மயமாய்ப்
பேசாதநல் வடிவாயுயர் பேறுற்றன ரன்றே 20

[இனி திருவாசகச் சிறப்பினைக் கூறுவேல் எனச் சூதர் மொழிதல்]

1903 திருவாதவூர்ப் பெரியோர்செயல் உரைத்தோமினிச் சிறந்த
வருள்சேர்தரு திருவாசகச் சிறப்பின்அரு மையினைப்
பரிவார்திரு முனிவீர்பகரு வன்கேண்மினி ரென்னப்
பொருளாளர்தருஞ் சூதர்புக லுதல்மேயின ரன்றே 21

[மாணிக்கவாசக சுவாமி ஐக்கிய சருக்கம் முற்றும்]



திருவாசகச் சிறப்பு

[கலி விருத்தம்]

[சிவபுராணச் சிறப்பும் கருத்தும் இவை எனல்]

1904 தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்திற்
பேசுதிருச் சிவபுராணத் தகவற்பெரு மைசொல்
ஈசர்தமக் கியல்பான திரு நாமமுத லெவையும்
ஆசறவாழ் கெனவாழ்த்து கின்றவருட் குறிப்பாம் 1

[கீர்த்தித் திருவகல், திருவண்டப் பகுதியின் கருத்திவை யெனல்]

1905 புகழ்பெருகும் செய்கையெலாம் புகலகவல், ஒன்றுகுந்
திகழ்திருவண் டப்பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவா
யகலமுறத் தெரிந்திடவே யருளியநற் பொருளாகும் 2

[போற்றித் திருவகவலின் பொருளிது வெனலும் திருச்சதகம்
ஏத்தல் விண்ணப்பத்தின் கருத்து இவை எனலும்]

1906 முத்திபெறு நெறியறியும் மொழிபோற்றித் திருவகவல்
சத்தியஞா னந்தருநெறி தாமோதுஞ் சதகமதாம்
மித்தையுல கியல்பகற்றி விடாமலெமை யாண்டருளென்
றத்தரறிந் திடவேத்தல் விண்ணப்ப மறைந்ததுவாம் 3

[திருவெம்பாவை, திருவம்மானையின் உட்பொருளிவை எனல்]

1907 மருவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகரருட்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை
நலமுறுமந் தணர்வடிவாய் நாரணன்காண் பரியபதம்
நிலமதில்வந் தாள்கருணை நிறைந்தா டலம்மானை 4

1904 திருநாமம் – இறைவன்பெயர். ஆசற – குறைவில்லாமல்.
1905 சிருட்டி – படைத்தல். திதி – காத்தல் திரோதம் – மறைத்தல்.
1906 சதகம் – திருச்சதகம். அத்தர் – இறைவன்.
1907 அருட்செலம் – கருணைவெள்ளம். அம்மானை – திருவம்மானை.

[திருச்சுண்ணம், திருக்கோத்தும்பியின் விளக்கம் இவை எனல்]

1908 சத்திகாளற் றனுகரண புவனபோ கங்கடனை
அத்தனுக்குச் சுண்ணமவை யாயிடிக்கக் கூதலே
ஒத்ததிருச் சுண்ணமுயர் போதமொரு வண்டாகச்
சித்தவிகா ரத்தூது செப்பிவிடல் கோத்தும்பி 5

[திருத்தெள்ளேணம், திருச்சாழலின் உள்ளுறை இவையெனல்]

1909 பொன்னார் மெய்யன் றரும் போதவின்ப மேமிகுந்து
தென்ன தெனவெனவே தெள்ளேணங் கொட்டியதாம்
முன்னோர் கலியுமுண ராமூகை யாமேடி
தன்னற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல் 6

[திருப்பூவல்லி, திருவுந்தியின் செம்பொருள் இவையெனல்]

1910 தேவரறி யாதசிவன் தேடியே ஆண்டகலம்
ஆவலொடுஞ் சொல்லியடி யாரோடுந் தாங்கூடிப்
பூவியந்து கொய்தல்திருப் பூவல்லி யாமரன்சீர்
பாவமுறு தீமையறப் பாடல்திரு வுந்தியதே 7

[திருத்தோணோக்கம், திருப்பொன்னூசலின் கருத்து இவையெனல்]

1911 சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமாய்
அத்தன் செயுங்கருணைக் காராமை யுண்மிகுந்து
பொத்திய கைகொட்டிப் புகழ்தல்தோ ணோக்கமருட்
சத்தி யிருந்தாடத்தா லாட்டுதலே பொன்னூசல் 8

1908 தனு – உடம்பு. உயர்போதம் – பரஞானம். கோத்தும்பி – திருக்கோத்தும்பி.

1909 மெய் – உடம்பு. தெள்ளேணம் – திருத்தெள்ளேணம். முதன்மை – தலைமைத்தன்மை.

1910 அரன்சீர் பாடல் திருவுந்தியர் எனக் கூட்டுக.

1911 ஆராமை – நிறையாமை. தோணோக்கம் – திருத்தோன்நோக்கம்.

[அன்னைப்பத்து, குயிற்பத்தின் குறிக்கோள் இவையெனல்]

1912 நேயம் மிகுந்துள்ளம் நிலைகுலையக் கூடுதலே
ஆயவருட் டாய்க்கங் கறைதலன்னைப் பத்தாகும்
தூய வருட்குயிலே சோதியெனைக் கூடுதற்குன்
வாயிலுற் கூவெனமுன் வாழ்த்தல்குயிற் பத்தாமே 9

[திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சியின் திறம் இவையெனல்]

1913 பேர்நாடு ராறுமலே பேணுமெழில் ஊர்திபடை
சீர்முரசு தாரரற்குச் செப்பல்தசாங் கம்மாகும்
ஏர்மருவும் பள்ளி எழுச்சி பணிவிடைகேட்
டார்வமுட னுண்டவரற் கன்பு செயுமியல்பே 10

[ஆறுசீர் விருத்தம்]

[கோயில் மூத்ததிருப்பதிகம், கோயிற்பதிகம், செந்திலாப்பத்து, அடைக்கலப்பத்து இவற்றின் கருத்திவை யெனல்]

1914 கோயில்மூத்த திருப்பதிகம் சிதம்பரத்தில்
அருளடையுங் குறிப்ப தாகும்
ஏயுங்கோ யிற்பதிகம் பெருந்துறைத்தே
சிகர்மோகம் இயம்ப லாகும்
மாயபசு போதமறக் கெடவேண்ட
லேசெந்தி லாப்பத் தாகும்
ஓயதுவல் வாதனைவந் தணுகாமல்
அடைக்கலப்பத் துரைத்த தாமே 11

[ஆசைப்பத்து, அதிசயப்பத்தின் நோக்கம் இவையெனல்]

1915 கருவியுறு மூனுடற்கண் வாராமற்
றிருவருளிற் கலப்ப தற்கே
அரனடியைப் புகழ்ந்துபெரு கார்வமொடு
பாடுதலே யாசைப் பத்தாம்

1912 அருட்டாய் - சிவசக்தி. சோதி - சிவன்.

1913 அரற்கு - சிவபெருமானுக்கு. ஏர் - எழுச்சி. இயல்பு - தன்மையது.

1914 தேசிகர்மோகம் - குருபக்தி. பசுபோதம் - உயிரறிவு.

ஒருவிமலத் திகினச்சிவத்தோ டொன்றுகும்
அரனடியார் குழாத் துடனே
பரமரருட் பெருமைமிகு தியைப்புகழ்ந்து
பாடலதி சயப்பத் தாமே 12

[புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்தின் பொருளிவை எனல்]

1916 ஆண்டகுரு வைப்பிரியா தணைந்துபணி
புரிந்துமிகு மன்போ டின்பம்
பூண்டுகிடக் கப்பெறுவ தென்றுகொலோ
வெனும்விருப்பம் புணர்ச்சிப் பத்தாம்
நீண்டவுல கத்தினிற்பற் றொன்றில்லே
னிவ்வுடற்கண் நின்று வாழேன்
மாண்டகுநின் பதநிழற்கீழ் வருகவருள்
புரியெனுஞ்சொல் வாழாப் பத்தே 13

[அருட்பத்து, திருக்கழுக்குன்றப்பத்தின் செம்பொருள் இவையெனல்]

1917 சோதியருட் சுடர்விளக்கே துயர்ப்பிறவிக்
கடல்விடுத்துன் றுணைத்தாள் சேர்தற்
காதரித்துங் குணையழைத்தா லதெந்துவெனக்
கேளெனுஞ்சொல் லருட்பத் தாகும்
நீதிமறை பரவுதிருப் பெருந்துறையிற்
குருவடிவாய் நிகழ்ந்த கோலம்
காதலொடுங் காட்டினையென் னுங்களிப்புப்
பகர்தல் திருக்கழுக்குன் றம்மே 14

1915 உடற்கண்வராமல் – பிறவிவிடுக்காமல். ஒருவி – நீங்கி

1916 மாண்டகு – மாட்சிபொருந்திய. பதம் – திருவடி. அதெந்து – அது என்ன (எனக் கேட்குஞ் சொல்). அஞ்சாதே என்னும் பொருள் கூறுப

1917 இந்திரியம் – பொறிகள். கந்தம் – நறுமணம்

[கண்டபத்து, பிரார்த்தனைப்பத்தின் கருத்து இவையெனல்]

1918 இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத்
தானைக்கும் எழிலா னந்தங்
கந்தமலி தில்லையினுட் கண்டேனென்
றுவந்துரைத்தல் கண்ட பத்தாம்
அந்தமிலா வானந்தத் தகலாமல்
எனையழுத்தி யாள்வா யென்று
சிந்தைகரைந் துரைத்ததுவே பிரார்த்தனைப்பத்
தாய்ப்புகலுஞ் செய்கை யாமே 15

[பிழைத்தபத்து, உயிருண்ணிப்பத்தின் உட்பொருள் இவையெனல்]

1919 இழைத்தேனிவ் வாக்கைபொறுத் தினிக்கணமும்
பொறுக்கல்லேன் ஏழை யென்னைக்
குழைத்தேனே பிழைபொறுத்தா ளெனவிரங்கிக்
கூறுதலே பிழைத்த பத்தாம்
தழைத்துவளர் பேரின்பம் தானுகி
யுயிர்தோன்றுத் தன்மை யாய்த்துன்
பொழித்துநிறை வைப்பெறுதல் உயிருண்ணிப்
பத்தாயிங் குரைத்த தாமே 16

[அச்சப்பத்து, திருப்பாண்டி விருத்தத்தின் அரும்பொருள் இவையெனல்]

1920 தரையில்வளர் வினைமுழுதும் வரினுமஞ்சேன்
சிவசமயத் தவஞ்சா ராதார்
அருகினவர்க் காண்கின்மனம் அஞ்சுமென
விகழ்ந்துரைத்தல் அச்சப் பத்தாம்
புரவியின்மேற் பாண்டியன்முன் வரும்பதத்தை
யான்பெறுமற் புதம்போல் யாரும்
விரவுமின்கள் என்றடியார்க் குறுதிசொலல்
திருப்பாண்டி விருத்த மாமே 17

1919 ஆக்கை - உடம்பு. குழைத்ததேன் என்க.

1920 அருகினவர் - குறைந்தவர். புரவி - குதிரை. விரவுமின் - கலந்து கொள்வீர்.

[பிடித்தபத்து, திருவேசறவுள் பிறங்கு பொருள் இவையெனல்]

1921 மிக்கபிற வித்துயரெ லாமொழித்து
விபுத்துவமிங் களித்த லாலே
பிக்கறச்சிக் கெனப்பிடித்தே னுன்னீயென்று
துணிவுசெப்பல் பிடித்த பத்தாம்
தக்கபரி யாய்நரியை யாக்குதல்போ
லெனைப்பெரிய தாக்கித் தாட்கீழ்
எக்கணும்வைத் தனையேயென் றிரங்கல்திரு
வேசறவென் றியம்ப லாமே 18

[திருப்புலம்பல், குலாப்பத்தின் கொள்கை இவையெனல்]

1922 கரைந்துருகும் பொன்..... .....யினைக்
கற்றுவின் மனம்போ லென்றும்
திருந்துவகை யெனக்கருள்க வெனக்கேட்டல்
திருப்புலம்பல் ஆகும் உள்ளம்
விரும்புசிவா னந்தவெள்ளம் விளைத்ததில்லை
நாயகனை மிகக்கொண் டாடி
நிரம்புமனக் களிமிகுந்த விறுமாப்பே
குலாப்பத்தா னிகழ்த்த லாமே 19

[அற்புதப்பத்து, சென்னிப்பத்தின் அருங்கருத்து இவையெனல்]

1923 மாயவுருக் கொண்டுளத்தை மயக்குமினர்
கண்வகையுள் மயங்கு வேற்கிங்
காயுமறி வளித்தாண்டல் அதிசயமென்
றுரைத்திடலற் புதப்பத் தாகும்
தூயவருட் குருபதத்தைச் சூட்டுதற்குப்
பெற்றவுயிர்ச் சுகத்தை நோக்கிச்
சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும்
மலிந்துரைத்தல் சென்னிப் பத்தே 20

1921 விபுத்துவம் – தெய்வத்தன்மை. பிக்கு – அழுக்கு.
1923 சேயமலர்ப்பதம் – செம்மையாள திருவடி.

[எண்ணப்பத்தின் உண்மையியதுவெனல்]

1924 அறம்பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட
செயன்முதலா யரன்சீ ராட்டின்
றிறமறிவா ரெட்பிரான் ஆவரென வுரைத்தா
லென்றலெண்ணப் பத்தெனவும் பேசலாமே 21

[இப்பாடல் சிதைவுடன் இவ்வளவே உளது]

[யாத்திரைப்பத்து, படையெழுச்சி இவற்றின் நுட்பம் இவையெனல்]

1925 பொல்லாத பவத்தைவிட்டுச் சிவன்கழற்கீழ்
புகுங்காலம் புணர்ந்த தென்றிங்
கெல்லாரும் வாருமெனக் கிருபையினு
லழைத்திடல்யாத் திரைப்பத் தாகும்
அல்லாத துற்குணமா யப்படைகள்
விலையாம லருள்வா ளேந்தி
நல்லோர்கள் யாருமெம்மோ டெய்துமெனப்
படையெழுச்சி நவிற்ற லாகும் 22

[திருவெண்பா, பண்டாய நான்மறையின் பயனிதுவெனல்]

1926 தொந்தமல வேரறுத்துச் சுகம்பெருக்கிப்
பெருந்துறைவாழ் சோதி யென்றன்
சிந்தனையே ஊராகக் கொண்டிருந்தா
ரென்றுரைத்தல் திருவெண் பாவாம்
எந்தைதிருப் பெருந்துறையை ஏத்துநம
ரேவாழ்வுற் றிடர்சேர் பாச
பந்தமறுத் திடுவரெனப் பண்டாய
நான்மறையும் பகர்ந்த தாமே 23

[படையாட்சி, அச்சோப்பதிகத்தின் அரும் பொருளிவையெனல்]

1927 வாகுதிருப் பெருந்துறையார் எழுந்தருளப்
பெறினெல்லா வளங்கள் முற்றும்
ஆகுமெமக் கல்லாத தாகுகவென்
றியம்பல்படை யாட்சி யாகும்

1926 தொந்தம் - தொடர்பு.

மோகமிகு மடியரொடுங் கூடவிரும்
பியதுமின்னேர் மொழியா மீசர்
போகசுக மெமக்களித்தார் யார்பெறுவார்
எனுமருமை புகலச் சோவே 24

[திருக்கோவையாரின் சிறப்புச் செப்ப அரிதெனல்]

1928 திருவாச கப்பொருளின் பெருமைகுறிப்
பாற்சிறிது செப்பி னேமால்
அருண்மேவு திருச்சிற்றம் பலக்கோவை
பொருளுரைத்தற் கடங்கா தேனும்
ஒருவாத பேரின்பம் உறுவோர்க்கவ்
வாறுணர்ந்தா லுண்டா மின்பப்
பொருள்போல வுரைத்திடினும் தொகைமொழியா
யாமுமக்குப் புகலக் கேண்மின் 25

[திருக்கோவையாரின் செம்பொருள் இது எனல்]

1929 காமுகர்சிற் றின்பமுற உறைத்திடினும்
பேரின்பக் கதிய தாகும்
தோமறுநல் லுயிராண்பெண் சொரூபமலா
விடினுமிகு துறைகட் கேற்ப
நாமமதற் காக்கியின்ப நல்கசிவைத்
தையதுபோல் நாடி மிக்க
சேமமுறுந் திருக்கோவைப் பொருளுணர்ந்தால்
பேரின்பம் சேர்தல் திண்ணம் 26

[இவ்வாறு சூத முனிவர் விளக்கக் கேட்ட முனிவர்கள் ஆனந்தமுறல்]

1930 இவ்விதமாய் வாதவூர் இறைமொழிப்பா
மாலையின்சீர் இயம்பிப் பின்னர்
உய்வகைவந் தருளாத்ம நாதர்பெருங்
கிருபையெலா முரைத்தார் சூதர்

1928 போகம் – இறைவனுடன் கலப்பு புகல் – சொல்லுவது.

1928 ஒருவாத – நீங்காத. தொகைமொழியா – சுருக்கமாக. துறை – அகப்பொருட்டுறைகள்.

செவ்வியமா தவரெவரும் வாதவூர்
அடிகளருட் செய்கை யாவும்
அவ்வியமி லாதுடன்கேட் டானந்த
பரவசராய் அன்பு செய்தார் 27

[இந்நூல் பயில்வோர் கேட்போர் எய்தும் பலன் கூறத் தொடங்குதல்]

1931 சூதர்முனி வரரொடும்பின் சொல்கின்ருர்
வாதவூர்த் தோன்ற லார்தம்
ஏதுவினுற் குருந்திறைவ ரியற்றியவா
டற்சருக்கம் எவையு மன்பின்
ஓதுமவர் கேட்பவர்கள் உயிர்க்குறுதி
பெற்றருள்சேர்ந் துலவா வின்ப
நீதியராய் வாழ்வரென மொழிந்துபல
சுருதியியல் நிகழ்த்த லுற்ருர் 28

[திருவாசகச் சிறப்புரைத்த சருக்கம் முற்றும்]



1930 இறைமொழி - தெய்வமொழி. அவ்வியம் - குறை.

1931 ஆடற்சருக்கம் – திருவிளையாடலைக் கூறும் இந்நூற் சருக்கங்கள்.
பலசுருதியியல் – இந்நூலைக் கேட்டல் முதலியவற்றால் எய்தும்பயன்.

பல சுருதிச் சருக்கம்

[ஆறுசீர் விருத்தம்]

[திருப்பெருந்துறை சென்று போற்றுவோர் எய்தும் பலன்]

1932 பூத விருளோ யகற்றிமிதும்
புசிப்புத் தொழிலும் புகிக்குதவும்
ஆத வினைப்போ லிருள்மலத்தை
அகற்றும் ஞான சுடராகி
ஏத மருவாப் பெருந்துறையிங்
கென்று மிருத்த லாலதனைக்
காத லொடும்போற் றிடுமவரே
காண்பார் முத்திக் கதிவளமே 1

[திருப்பெருந்துறையிற் சென்று வழிபடுவோர், புகழ்பேசுவோர் எய்தும் பலன்]

1933 ஆவ லொடுநற் பெருந்துறையே
அகத்தின் நினைக்க, வதன்புகழை
நாவிற் றுதிக்க மெலநடந்து
நவைதீர் பிரதக் கணஞ்சூழச்
சேவை யடுத்துத் தொழுக்கிடையார்
திசையை நோக்கிக் கைகுவிப்பப்
பூவிற் பெறுவார் எனிலவர்பொன்
னுலகர் போற்றப் புகுவாரே 2

[மார்கழித் திருவாதிரையிலும் — ஆனி உத்திரத்திலும் சென்று தெரிசிப்போர் பெறும் பலன்]

1934 திருமா லயனிந் திரன்முதலோர்
தேடற்கரிய செழுஞ் சுடரைக்
குருவாய் அடியர் தமையாளக்
குருந்தின் வடிவாங் குணக்கடலை

1932 ஏதம் – குற்றம்.
1933 பிரதக்கணம் சூழல் – வலம்வருதல், சே – எருது (இடபவாகனம்)

அரனுர் தினமா திரைதனுவில்
ஆனி மதிஉத் திரமிதனில்
பரிவாய்த் தெரிசித் திடுமவர்க்குப்
பரமசுகப் பேறவர் வசமே 3

[மாசித்திங்கள் சிவராத்திரியில் சென்று வழிபடுவோர் பெறும் பலன்]

1935 மாசித் திங்கள் சிவதிசியில்
வருநான் கியாமத் தினும்பெருக
நேச மொடுநல் லபிடேகம்
நைவே தனங்கள் மலர்விளக்குப்
பூசுங் கமழ்சந் தனக்கலவை
புகலும் விதியின் படியாகத்
தேசு திகழா வுடையார்க்குச்
செய்வார்க் குரித்நாம் சிவலோகம் 4

[திங்கட்கிழமை சனிக்கிழமை கார்த்திகை நாளில் சென்று
தெரிசிப்போர் உறும் பலன்]

1936 சோம வாரம் சங்கிரமம்
துதிகொள் புகர்நாள் கார்த்திகையில்
சேம நிதியாத் துமநாயகர்
சீர்த்தி திகழ்யோ காம்பிகைதன்
பூமெல் லடித்தா மரைகாணப்
புகும்பே றுடையோர் பொன்னிதழித்
தாம மார்பர் வாழ்கயிலைத்
தலைவ ராகப் புகுவாரே 5

[அந்தி சந்திப் பொழுது வழிபடுவோர் நெய் விளக்கிடுவோர்
வில்வார்ச்சனை புரிவோர் எய்தும் பலன்]

1937 பிரதோ டத்திற் றெசிப்போர்
பெரும்பா வங்கள் மிகச்செயினும்
புறமாம் ஆத்ம நாதரருள்
புரிந்து காப்பா ரவர்மாலை

1934 தனு – தனுர்ராசியாகிய மார்கழியில்
1935 சிவதிசி – சிவராத்திரி. ஆவுடையார் – ஆத்மநாதர்.
1936 புகர்நாள் – சனிக்கிழமை. இதழி – கொன்றை.

நறுநெய் விளக்குச் சிறந்தவில்வார்ச்
சனையந் நாளில் நயந்தளித்துள்

உறுநன்நேயத் தொடும் பணிவோர்
உமைகோன் கணத்தோ டுறைகுவரே 6

[திருப்பணி செய்வோர் – மடப்புறம் பேணுவோர் எய்தும்பலன்]

1938 திருக்கற் பணிசெங் கற்பணியாற்
றிகழ்மண் டபங்கள் மடம் மறையோர்

இருக்கும் மனைகள் அ(ன்)னசாலை
இயங்கும் படியத் தலத்தியற்றின்

மருக்கற் பகத்தண் மலர்குலவும்
மார்பை யுடைய வானவராய்

உருக்கத் துடன்மூ வேழ்குலத்தோ
டுறுவர் சுவர்க்க உலகினிலே 7

[நந்தவனம் – வாவி குளம், வாகனம் செய்வோர்
திருத்தொண்டு புரிவோர் உறும்பலன்]

1939 நந்த வனங்கள் வாவிகுளம்
நறுபொற் பணிவா கனம்நிலமூர்

தந்தம் முயற்சிக் கேற்றபணி
விடைகள் உள்ளத் தயவினெடும்

சிந்தை மகிழ்ந்து பெருந்துறையில்
செய்வோர்க் கந்த சிவதருமம்

அந்த முறுமற் சுகவாழ்வட்
சயபாத் திரம்போல் அளித்திடுமே 8

1987 பிரதோடம் – சந்தியாகாலம். உமைகோன் – சிவபெருமான்.

1988 கற்பணி – கற்களால் ஆலயம் முதலிய எடுத்தல். மரு – மணம்.

1989 அந்தமுறுமல் – முடிவுறுமல். அட்சயபாத்திரம் – எடுக்கஎடுக்கக் குறையாமல் வளரும் பாத்திரம்.

[எவ்வகையாலும் பெருந்துறைத் தேசிகர்க்குத் துரோகம் செய்தல் கூடாதெனல்]

1940 பெருத்த பசுத்து ரோகஞ்சிவத்
துரோகந் தமக்கும் பிராச்சித்தம்
வருத்த முறுமற் காசிமுதல்
தலங்கள் தீர்க்கும் வகையுளதாம்
குருத்து ரோகந் தனக்கிலையென்
றருநூன் மறைகள் கூறுதலாற்
றிருத்துங் கருணைப் பெருந்துறைத்தே
சிகர்க்குத் துரோகஞ் செயலாகா 9

[அறியாதுசெய்யின் அபராதம் முதலிய பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டுமெனல்]

1941 மறதி யாற்செய் திடிற்குருந்த
வனத்தே சிகருக் கபராதம்
உறுமா றளித்துத் தீரஉப
சரிக்க வேண்டும் மமதையினாற்
பிரிய மறச்செய் திகழ்ந்தனரேல்
பெருகுஞ் சுற்றத் தொடுநரகில்
திரிவெங் கால படர்வருத்தத்
தீராத் துன்புற் றயர்குவரே 10

[இத்தல புராணச் சிறப்பினை விளக்குதல்]

1942 தலவி சேடந் தரும்பலமிங்
கினிதே சிறிது சாற்றினமிங்
குலவும் இனிய தலபுரா
ணத்தின் பெருமை கூறுவம்மேல்
நிலவுந் திருவா சகத்துண்மைப்
பொருளொற் றுமையால் நிறைதலினால்
அலகில் புகழ்சேர் பெருந்துறையார்க்
கருளா கமமா மிச்சரிதை 11

1940 பிராச்சித்தம் – கழுவாய்.
1941 வெங்காலபடர் – கொடிய எமதூதர்கள்.

[இத்தல புராணத்தை ஓதும் முறை கூறுதல்]

1943 அன்புற் றிடுமெய்ச் சிவசமயத்
தவருக் குயர்ஞா னமும்வாழ்வும்
இன்புற் றிடுநன் முத்தியுமற்
றதுமிங் கெளிதா யீகுதலால்
பொன்பெற் றிடுவோர் போற்றுதல்போல்
போற்றித் திருப்புத் தகத்தழுந்தி
மன்பொற் பதம்போற் றினமுமருச்
சித்து வாசித் திடவேண்டும் 12

[இத்தல புராணத்தைச் சொல்லும் முறைமையும்
சொல்லத்தக்க இடமும் பற்றிக் கூறுதல்]

1944 சைவா சாரம் உடையவராய்ச்
சமய தீக்கை முதலான
மெய்வாய் மைகள் பெற்றரன்ரூள்
விருப்ப முடையா ரிக்கதையை
தெய்வா லயநன் மறையோர்கள்
சேருந் தவநந் தவனமற்
றுய்வா கியதல் லிடத்திலிருந்
தோதி யுரைசெய் திடவேண்டும் 13

[இத்தல புராணத்தை கேட்கும் முறை கூறுதலும்
கேட்போர் எய்தும் பயன் கூறலும்]

1945 மருப்பெற் றிடுர்பூம் பந்தரின்கீழ்
மகிழ்ந்து தூப தீபமொடும்
திருப்புத் தகத்தைப் பீடிகைமேற்
றிருந்த விருத்திப் பூசித்தே
அருத்தி யொடும்வா சித்தெவர்க்கும்
அறிவு கொடுத்து நெறியளிக்கும்
விருப்ப மமையும் புராணிகர்க்கு
வேண்டும் பொருள்கள் மிகக்கொடுத்து 14

1943 மன்பொற்பதம் – நிலைபேறுடைய இறைவன் திருவடி.
1945 புத்தகத்தை வைத்துப் படிக்கும் மேடை. அருத்தி – ஆசை.

1946 மறையோர் முதலாகிய நான்கு
வருணத் தவரு முயிர்கடொறும்
உறுநல் லாத்ம கதையுண்மை
உருக்கத் தோடும் நனிகேட்கிற்
பெறுதற் கரிய பேறெவையும்
இம்மை தனிற்பெற் றம்மையிலும்
நிறைவுற் றெளிரும் சிவபதந்தண்
நிழலுற் றிருத்தல் நிச்சயமே 15

1947 பாவமகலும் அறம்பெருகும்
பழவல் வினையின் பற்றுமறும்
பூவின் மருவுந் திருவகலாள்
புகழுந் திறமும் புதல்வர்களும்
மேவும் அகச்சுற் புறுமனையும்
மிகவுண் டாகு மேதினியில்
யாவ ரெனினும் இக்கதைகேட்
டவரே ஈசர்க் கினியவரே 16

[வேறு]

[வாழ்த்து]

1948 அலகிலருட் குருந்திறையோ டெண்ணலுறு
முந்நூற்றந் தணர்கள் வாழ்க!
உலகமெலாம் வாழ்கபொன்னித் திருநாடாள்
அரசுசெங்கோ லோங்கி வாழ்க!
நலமுதவும் பெருந்துறையீ சர்க்குரிய
தொழிலிறைமை நாளுந் தாங்கி
மலிவுறவப் பணிகள்செய் அருணசலமா
முனியருளின் வாழ்க மாதோ! 17

[பலசுருதிச் சருக்கம் முற்றும்]

[திருப்பெருந்துறைப் புராணம் முற்றும்]

1947 பூவின்மருவுந்திரு - பொன்மகள், நாமகள்
1948 பொன்னித்திருநாடு - சோழவளநாடு. மலிவுற - மிகுதியாக.

திருப்பெருந்துறைப் புராணச் செய்யுள்

முதற் குறிப்பு அகரவரிசை

அ

அக்கணந்தனில் 369
அக்கணந்தனில் 541
அக்கணிபுயனே 558
அக்கதையதனின் 241
அக்கமலமூல 310
அக்கரவழியாய் 75
அக்கலீமான் 289
அக்கானமதனிற் 420
அக்கினிதீர்த்த 288
அகடுறுகருப்பந் 519
அகரமாகியவக் 446
அகலிகைகாமச் 261
அகலிடப்பாதலம் 544
அகலும் நோய்களெ 284
அகலும் வெண்பட்டு 479
அகளமயமாய் 557
அகிலகாரண 480
அங்கணீங்திடு 467
அங்கமெங்கணும் 370
அங்கயற்கண் 99
அங்கரனான் 314
அங்கவர்மனத்துட் 566
அங்கிரிசுமுத 342
அங்குவைகி 262
அங்கணெரு 233
அங்கியினிற்ரேன்று 329
அசுரர்கோவாகும் 182
அசுரராயினோர் 216
அசுவமேதமகஞ் 417
அஞ்சலஞ்சலெம் 868
அஞ்செழுத்தும் 579
அட்டகயங்கள் 548
அட்டாங்கபஞ்சாங் 881
அட்டிடும் பிட்டொ 548
அடர்செய்தீர்த்து 589
அடிகணீருமக் 444
அடிகள் தந்திருவாய் 477
அடிகள் நீர்வில் 119
அடிகளேவகூல 502
அடிமுதல்முடி 256
அடியவர்கள்தொழு 404
அடியனுமெனதி 400
அடியனேன்புரிந்த 271
அடியனேனீயும் 285
அடியாயிரங்கை 422
அடுத்தவர்அந்தண 239
அடுபுலிசெந்நாய் 588
அடைக்கலப்பத்து 566
அடைப்பையெடுத்த 159
அண்டகோடி 205
அண்டத்தின் இயல் 310
அண்டமாங்கட 65
அண்டர்பிரான் 14
அண்டர்போற்றெளி 509
அண்டிடாதகலா 498
அண்ணல்அமர்ந்த 555
அண்ணல்குருந்தேசர் 482
அண்ணல்முன்புபோல் 500
அண்ணல்விடைமேற் 159
அண்ணலவ்வருள் 492
அண்ணலவ்விறை 49
அண்ணலாம்ஆத்ம 80

அண்ணலுடன்அணைந்த 168
அண்ணலெழுந்தமை 247
அண்ணலேகருங் 268
அண்ணலேயெமக் 444
அண்ணலும்சூர 180
அத்தகைமையென 97
அத்தகைவெள்ளி 41
அத்தடத்தின்மேவி 175
அத்தடந்தன்னில் 237
அத்தடமதனில் 86
அத்தலஞ்சென்றுன் 400
அத்தலப்பெருமை 467
அத்தலத்திலமர்ந் 562
அத்தலத்திற்பிதிர் 101
அத்தலத்தின்மேன் 29
அத்தலத்தின்மேவிய 405
அத்தலமகத்து 140
அத்தலமதனில் 44
அத்தலமதிற்றன் 378
அத்தலமேன்மை 393
அத்தனமோடு 579
அத்திசைமாமுக 436
அத்திருநகரில் 267
அத்திருநகரியின் 397
அத்திருவதனுக் 258
அதற்குமிதற்கும் 321
அதன்மிசைவெளி 65
அதனற்பலநல 424
அதனியல்பே 310
அதனிலோர்சரித 378
அதனேஐவரு 136
அதிகநம்கயிலை 48
அதிதியெதிர்பந் 317
அதுகாலந்தேவர் 172
அதுபோன்றுன்ருள் 543
அதுவருமாறருள் 247
அதுவரையும்நீவிர் 139
அதுவேயோகாம்பிகை 321
அந்தகன்றமர் 121
அந்தணர்பல்லோ 484
அந்தணராகுதி 471
அந்தணனுகும் 67
அந்தணாளர்கள் 442
அந்தரலந்தரு 250
அந்தரிற்குணம் 42
அந்தரீர்பருகின் 106
அந்தப்பதியின் 195
அந்தமாபாவியும் 429
அந்தமாவிதன 209
அந்தவரிஏட்டிலி 248
அந்தவாசகங் 501
அந்தவேலியிலழ 218
அந்தரவேதியில 407
அந்தரிடைமூழ்கி 198
அப்படியாகுக 116
அப்பதிக்குத்திரு 435
அப்பதிதன்னில் 238
அப்பதியின்வருணம் 452
அப்புனல்படிந்து 91
அப்புனல்மேன்மை 231
அப்புனலிற்புரும் 174
அப்பொருளிர்ச்சி 140
அப்பொருட்டியா 46
அப்பொழுதிந்த 55
அப்பொழுதுருத்ர 329
அப்பொழுதுமல்லர் 544
அப்பொழுதுவானவர் 414
அபுத்தியிலேலுப் 163
அபரப்புள்ளி 578
அபலத்துமன்னர் 571
அபலந்திடை 577
அம்பலத்திற்றிரு 580
அம்புயமேலோற்கும் 402
அம்புலியோடரவம் 251
அம்மதியிலாதிரை 349
அம்மனப்புலியன் 124
அம்மாதவனம் 419
அம்முறைமையால் 415

அம்முனிசெய்த 294
அம்முனிதவத் 49
அமைச்சன்மகன் 489
அமைத்தெண்டிக்கி 508
அய்ய உன்னருளே 801
அய்யகோ வெனை 540
அய்யநின்றன 28
அய்யநின்னடிக் 448
அய்யநின்னுணை 416
அய்யநீ மொழிந்த 687
அய்ய நீ விரித்தறை 399
அய்யமேற்றுண்ப 118
அய்யயானுமீமார் 213
அய்யர்காள்தருந் 406
அய்யர்காள்நும்பதி 430
அய்யர்காள்யானு 407
அய்யருட்சாயண 340
அய்யவெமக்குன 248
அய்யவேண்டுவ 388
அயற்புலத்து மன்னர் 462
அயற்புறமதிலிற் 256
அயன்விழிநீர் 518
அயன்றனக்குக் 330
அயனரிருத்திரர் 470
அயனைக்கூற்றை 573
அயிக்கியமாக்கிக் 378
அரகரசங்கர 251
அரசகேட்டிபரம 88
அரசர்களேமேற 437
அரசன் மொழிதலே 459
அரசனது முழுவதுந் 437
அரசனும் ஆற்ற 59
அரசனும் பின்வரி 461
அரசனுமெய்த்த 400
அரசியற்கொலு 260
அரசிளங்குமரனுக் 427
அரண்தை தருவல் 139
அரம்பை திலோத்த 89
அர்வமாமுனி 297
அரவொடுசிறு 248
அரன்பதம்பணி 18
அரன்றிருநடஞ் 568
அரனருளுஞ்சிவா 561
அரனிதம் வசிக்கும் 77
அராகஞ் செயலறி 428
அரிபிரமர் முதலெ 408
அரிமுதல் விண் 174
அரியணை மேலிடுஞ் 434
அரியதன்கிளை 211
அரியதாமதற்கு 85
அரியதாயதொன் 214
அரியதாயபஞ் 84
அரியதிருக்கயிலை 158
அரியதிருமகன் 280
அரியதிரேதாயுக 346
அரியதென்பால் 69
அரியதொர் 24
அரியநின்மலப் 82
அரிய பிரமஞான 84
அரியமாதவத் 29
அரியயன் முதலாந் 176
அரியயன் முதற் 198
அரியயன் முதற் 493
அரியயன்றனை 192
அரியவேதியரனை 444
அரிவையர் வாழ்த் 15
அருக்கியங்கெவ்விய 381
அருகிருபாலும் 160
அருகுளர்சிலர்கள் 511
அருங்கானகம்நடு 196
அருச்சனை செய் 317
அருச்சனை செய்தி 322
அருஞ்சிவத்து 135
அருட்குருந்துக் 403
அருட்டிரு வடிவாம் 478
அருணன் மொழி 417
அருந்தவம் நீயாற்றி 228
அருந்தவர்க்கறம் 578

அருந்தவர்தங் 21
அருந்தவன் சாபம் 268
அருந்தவனுகிய 274
அருந்தவனுமிந்த 889
அருந்திறல்சேர் 407
அருந்திறற்சுவேத 396
அரும்பதஞ்சலிபுலி 807
அரும்பாவியோரும் 164
அரும்பிறவித்துயர் 458
அரும்புமென்முலை 211
அரும்பெறற்குழவி 78
அரும்பொருள் 473
அரும்பொருளாம் 96
அருமருந்தன்ன 74
அருமையோடு 128
அருமறையந்தணர் 441
அருமறையாலெ 477
அருமறையுள் 842
அருமறையொடும் 458
அருவமாயுருவ 103
அருவாயுருவமுமா 421
அருவாயுருவா 868
அருள்சுமந்தகண் 9
அருள்தருகுர் 880
அருள்பெறுமார்க் 888
அருள்பெருமெய் 818
அருள்முனி பகர் 51
அருள்விடை பெற்று 409
அருளாகரராஞ் 854
அருளிருந்தவா 503
அருளினுலுரை 266
அருளுருவாம் 116
அலகுகலும்பல 274
அலங்குலேப்பரி 516
அலகிலருட்குருந் 601
அலரவன்ருட்சாய 840
அலரின்மேலுறை 574
அல்வசனம் முதிய 481
அல்வருள்பெறும் 272
அவ்வழற்புனலின் 94
அவ்விடைமேற்ருள் 159
அவ்வியமிலாது 515
அவ்விறையிச்சை 312
அவ்வுரை கேட்டருள் 319
அவ்வூரினெல்லையினி 489
அவமிருத்துவும் 485
அவர்கடரும்பணி 339
அவர்கள் தரும் பொய் 292
அவர்களின்பாட 306
அவர்செய்புனல் 424
அவர்தமையாம் இனி 543
அவர்தரும்பலி 121
அவர்புரிகடுந்தொழிற் 428
அவர்பேதமிரு 314
அவரவர் எண்ணம் 88
அவரவரக்கதை 248
அவராத்மநாத 311
அவள்பெயர் கமலி 92
அவளுடையவிம்ப 319
அவளுயிரின் 322
அவன் கொடுமை 481
அவனிதனில்ஆதி 282
அவனிமுற்றுமோர் 215
அவிரும்வாள்பலகை 68
அழல்சேர்ந்திடு 585
அழுக்குடைமனத்த 269
அழுகுரலோடு 880
அழுதுவிம்மியிவை 866
அழுந்திமிகும் 2
அழைக்கும் அன்பர் 491
அளவிடப்படாத 46
அளவில்வல்லபம் 105
அளவிலாக்கற்ப 128
அளவிலாச்சிவகதி 7
அளவிலாதநற் 500
அளவிலாதபரிவெழ 299
அளவிலாதமன 808
அளவிலாதவர்கள் 295

அளவிலாமகிழ்ச்சி 82
அளவிலாவண்ட 41
அற்புதமார்பூங்கா 401
அற்புதமுற்றோர் 440
அற்பொலியுநீல 418
அறக்குழவுரு 480
அறங்கள்பெருக்குதல் 20
அறத்திலுயர்ந்த 356
அறத்தின்மெய் 376
அறநிலைதேர்ந்து 438
அறப்புறம்யாவை 426
அறம்பருத்திக் 18
அறம்பெருகும் 598
அறமாதிபலம் 80
அறவுருவாமறை 428
அறனிறைநிலை 225
அறிந்துபுகல்வார் 457
அறியும் வகை குணம் 815
அறிவற்றவன் 194
அறுபத்துநான்கு 17
அறுமுகேசன் 188
அறுவருமோருரு 175
அன்பராமவர்க் 500
அன்பினுலுளம் 448
அன்புருவமாகுதிரு 450
அன்புருவாய்நின்றி 818
அன்புற்றிடுமெய் 600
அன்பொடடியார்கள் 474
அன்பொடுபற்பல 298
அன்பொடுமினிய 482
அன்றியும் விசாலாட்சி 372
அன்றிரவவர்கள் 570
அன்னகாலநள்ளிரு 588
அன்னகாலையில் 211
அன்னகாலையில் 868
அன்னதாகவென்ற 214
அன்னதாகவென்று 32
அன்னதாகவென 206
அன்னதாகுஞ்சில 861
அன்னதாகுமறலீன் 807
அன்னது செய்வல் 50
அன்னதே செய்து 428
அன்னதேயாகவென 167
அன்னநடைமின் 418
அன்னநீராட்டி 76
அன்னபொழுதத் 888
அன்னமாதலத்தில் 45
அன்னமுண்என்பதா 58
அன்னர்தங்களி 216
அன்னவனின்கொடுஞ் 487
அன்னவாறவர் 807
அன்னேயாத்ம 859
அன்னைகேளது 91
அன்னைகேளறல் 106
அன்னைபோலெணை 490
அனங்கனுகித் 171
அனுக்கைபெற்றனி 288
அனுமனித்திடும்ஓசை 509
அனுமனித்துமிகு 465
அனையதன்மை 445
அனையதாகவென் 145
அனையராகுமச் 446
அனைவரும்ஈழத் 569
அனைவரும்நின் 169
அனைவரும்வெற்ப 172

ஆ

ஆக்கஞன்முனி 229
ஆக்கினைசெய்த 551
ஆக்கியவர்க்கியர் 899
ஆக்கினை வேகியமென் 889
ஆக்கினை வேகியமெனு 842
ஆகமவேதபுராண 250
ஆசகல் முனிவெளி 226
ஆசிபலபெற்றுடன் 485
ஆசிரியர்க்குவிரோதம் 852
ஆசிலாதகுரவன் 88

ஆசின் றெருளிர் திரு 194
ஆசைசற்றிலனெய் 120
ஆசையிலாமற்கூறும் 258
ஆடல்பாடலோ 10
ஆடல்வாம்பரி 501
ஆடினர்பதறி 306
ஆடுதல்கூடிற் 404
ஆடுவன்பாடுவன் 551
ஆண்டகுருவைப் 590
ஆண்பரிக்காற்றுல் 518
ஆண்பெண்அலி 552
ஆண்மையினற்றிற 291
ஆணவமலவடிவு 484
ஆத்மநாதர்தம் 360
ஆத்மநாதர்வெளி 303
ஆதரவாங்குற்றம் 555
ஆதரவினுலியன்ற 321
ஆதரித்தங்கொரு 581
ஆதலால்அவரூறுப்பு 255
ஆதலால்வட 151
ஆதலாலிவளுன் 392
ஆதலாற்சொலுமி 296
ஆதலாற்சொலு 220
ஆதலின்நீபெறு 227
ஆதலினுல்மார்கழி 349
ஆதலினுலத்துவிதி 546
ஆதலினுலும்பரமா 324
ஆதலினுற்சத்திய 323
ஆதலினுற்சுருக்கி 19
ஆதவனுங்கிரண 335
ஆதவனுதியம் நோ 532
ஆதனமுரணி 280
ஆதிகற்பத்துக்கு 317
ஆதிசைவப்பூசுரர் 582
ஆதிநாயகன் 9
ஆதியும் அந்தமும் 222
ஆதியும் ஈறுமில்லா 271
ஆதியும் நடுவும் 78
ஆயிடைக்காய 81
ஆயிரங்கதிரோன் 282
ஆயிரத்தெட்டாம் 180
ஆயினுஞ் சிவபுரத் 216
ஆயுளுங் கதியும் 518
ஆரணங்கே நீ புகல் 161
ஆரணஞ்சொலும் 88
ஆரணம் நாலும 388
ஆரவாரத்தோடே 178
ஆரியனுக வந்த 517
ஆலவாயதனுள் 558
ஆலவாயரன்றுனிந்த 518
ஆலின்கீழ்மறைகள் 285
ஆவணித்திருமூல 505
ஆவதுன்றன 191
ஆவலொடு நற்பெருந் 596
ஆறடைக்கின்றவுன் 550
ஆருதாரத்தினிய 318
ஆறுநாள்மட்ட 185
ஆறைந்நூறுதவ 304
ஆனமூவகைத்தருப் 401
ஆனனத்திருசா 528
ஆனன நீளமெண் 529

இ

இக்கணமுமை 499
இக்காலந்தனில 380
இகத்திலின்பமறு 308
இங்கெனீதரு 550
இச்சிறார்களுக் 446
இட்டமிருந்த கூடற் 547
இட்டமுடனேதிய 440
இடபமதிவானி 347
இடமீராறுக்கும் 312
இடிக்கிணங்கதிர் 367
இணையகல்விகீர 427
இத்தகைய குழுக்கள் 169
இத்தகைய மேன்மை 325
இத்தலத்தினில்மேவி 150

இத்தலமுதலாய் 560
இத்துதி.....இறை 558
இதமருள் குருத்துறை 6
இதற்குமேற் பலன் 131
இதனுக்கிணையில் 198
இதனே முன்னம்நீ 445
இது சொலத்தகா 128
இந்தமாரசாயன 80
இந்தவனநாமம் 99
இந்தவாழுழத் 12
இந்திரன் முதலா 258
இந்திரியங்கள் தோற்ற 57
இந்திரிய வயமயங்கா 591
இந்நிலத்தில் இப் 463
இப்பரிசிதுவீதாக 259
இப்பிழைக்கிலியென் 372
இம்மகிமையுடைய 316
இம்மாநலமுறுகாதை 201
இம்மாற்றமருளிய 340
இம்முறை சவுன 59
இம்முறை பலநாள் 120
இம்முறைமையினால் 278
இம்முறையதன்சீர் 87
இம்முறையிற்கேட்ட 327
இம்முறையிற்றுழ்ந் 403
இம்முனிவரனடி 227
இமயமால்வரை 387
இமவான் மகள் 419
இமைய மன்னவன் 142
இமையோர்கள் 114
இயக்கர் தம்வழி 375
இயங்கிய பிண்ட 311
இயங்குபல் பெருமை 398
இயம்பிய மனுடர் 57
இயம்பியவிவ் 70
இயற்சதுர்யுக 55
இரங்கிசையாழின் 90
இரங்குவெண்டிரை 398
இருக்கை ஈந்து 502
இருதுடைபுநவ 525
இருந்தளவிலாத 57
இருந்திடுகுருந்தம் 89
இருப்பவரவரே 52
இருமூனித்தவர்கள் 299
இல்லெனுஞ்சொல் 16
இலக்குமியோடை 288
இலகுசாமரை 466
இலகுநவமணி 40
இலங்குவேணி 204
இவ்வகையதாகி 141
இவ்வகையளவி 59
இவ்வகையாங் 100
இவ்வகையாலிவர் 348
இவ்வணம் எவரும் 289
இவ்வணந்திரு 540
இவ்வரமொன்று 286
இவ்வாறிவரிருப்பக் 583
இவ்வாறு துதித் 422
இவ்விடை வரற்கேது 418
இவ்விதமாய்நல் 475
இவ்விதமாய் வாதவூர் 594
இவ்விதி வருமோ 265
இவ்வியல்பரிகட் 582
இவ்வியற்கை 458
இவ்வூரர் கொடார் 196
இவர்கள் மாதவ 202
இவர்கள் முனங் 348
இவர்கள் வாய்மொழி 210
இவரிருவோரு 246
இவன்மனக்கவற்சி 260
இவன்றனிது 152
இவைமுதலாம் பல 176
இவையெலாமெம் 48
இழிவுதங்கிட 272
இழைத்தேதெளிவ் 591
இற்றைநாள்வரை 371
இற்றைநான்வரையெம் 448
இறந்திடாவரமும் 206

இறுகிடப்பிணித்தல் 520
இறைவர்க்கரசே 193
இறைவனருளிய மொழி 45.
இறைவனுமெழுந்து 391
இன்பசாகரத்திரு 486
இன்பமாரடியார் 476
இன்பமாராத்ம 72
இன்பமாரும் ஈச 184
இன்றருட்டீக்கை 477
இன்றுகாறுடனீ 394
இன்றுவாபர 54
இன்னதன்மையதா 579
இன்னதாங்கதிர் 287
இன்னதாஞ்சிவ 128
இன்னநற்றுதி 85
இன்னநன்மாற்றம் 395
இன்னபரிசாலோ 847
இன்னபல்கொடுமை 426
இன்னபலதுன்பு 362
இன்னபலவாற்றினுல் 488
இன்னபற்பல மகிமை 875
இன்னபற்பலரார்த் 867
இன்னபேரெழிலாள் 255
இன்னமன்னியாள்தன் 355
இன்னமாக் கதை 220
இன்னமா நல 108
இன்னலமுள்ளோர் 848
இன்னவகையவனி 244
இன்னவகையாற் 160
இன்னவகையாற் 886
இன்னவகையிறை 408
இன்னவாயனவற்ற 251
இன்னவாறருமறை 449
இன்னவாறவர் 208
இன்னவாருகவவ் 280
இன்னவாறிமை 154
இன்னவாறுசூ 186
இன்னவாறு நல 86
இன்னவாறு நின் 494
இன்னவாறு ப 489
இன்னவாறுயர் 447
இன்னவாறு வினு 578
இன்னவேதுவி 217
இன்னவை பற்பல 248
இன்னுமொருமுறை 824
இனிமைசேருளத்த 81

ஈ

ஈசர்பெருந்துறைப் 582
ஈசுரப்பிரசாத 84
ஈட்டினன் பொருள் 288
ஈடில் குருந்தூர் 865
ஈருளி ஞமலி மீனே 584
ஈறிலாத பெரிய 181
ஈனரஞ்சிதம் 219

உ

உடம்பெலாம் புழுத்து 124
உடல் வெண்மை 526
உடன்சிலை உருவ்மானுள் 268
உடனுதித்தவன் 219
உண்டி பற்பல 146
உண்டியாதிய 298
உண்டுடைத்துயிர் 539
உண்ணெகிழ் மனக் 227
உத்தரிகந்திருத் 581
உத்திரத் திசை 508
உந்துசீர்க்கயமுனுள் 5
உம்மிலொரு குடியாக 480
உமது பெருந்தகை 460
உய்பானஞ்சயித் 69
உயிரிறும்படி நாடி 540
உயிரின் தன்மையை 488
உரகபடப்பணி 250
உரிமைகொள் நால் 118
உரிய ஆவணி 541

உருகிய உளத்தோ	475
உழுநிறங்கபிலை	528
உருவெடுத்துழலும்	476
உருவென்றலுரு	334
உரைக்கிலம்முன்	71
உரைக்குமிவ்வரு	58
உரைத்தவிச்சுழி	528
உரைத்தியென்றி	41
உலகமாதாசத்தி	320
உலகமெல்லாம்	117
உலகில் நீர் பெறும்	495
உலகுதவுசீற்று	412
உலகெலாம்சிருட்டி	48
உலகெலாமீன்ற	451
உலகெவர்தமை	221
உலகேயுருவமதாய்	422
உலவைபுரிதரு	284
உலவையில் வகை	520
உவகைகூறவுன்	499
உவமையுற்றநம	302
உள்ளசெய்கை	508
உள்ளதோதிய	215
உள்ளம் நல்லறத்	214
உறைப் பொடுஞ்சிலர்	11
உன்றனக்குபய	392
உன்றனக்கென்ன	286
உன்றனேயன்றி	548
உன்னருந்தவத்தி	223
உன்னலுரைசெய்	141
உன்னலியிதின்வே	383
உனக்கிவன்சகியாய்	391
உனக்கெவைவிருப்பு	223
உனைப்பிரிந்தாற்றேன்	559

ஊ

ஊணற்றுடலோட்ட	197
ஊரவர்கள்பெரும்	544

எ

எக்குரையுந்தீர்ந்	161
எங்கணுக்கியமான	373
எங்குளநீரினும்	249
எட்டித்தொடுகொம்பு	200
எடுத்தகணத்துத்	174
எடுத்தியம்பித்	319
எண்டிசைக்குநென்	11
எண்ணலாதுபெரு	305
எண்ணுமுன்மறை	507
என்பதோடிரண்டா	529
எத்திசையுந்தொழு	429
எதிர்க்க அஞ்சி	207
எதிர்முகமாக	660
எந்தயாநலஞ்செய்	135
எந்தாயொன்று	402
எப்பொருளுமபெற்றி	248
எம்மிலோர்குடி முதல்	447
எம்மையாளுடை	447
எமக்கு நீரொரு	445
எமது மரபினர் பெயர்	438
எரி நிகர்த்த	135
எவ்வகையாலிவரை	290
எழுது சித்திரம்போல	571
எழுந்து நியமங்கள்	471
என்செய்வேனினி	495
என்செய்வோம்மத	154
என்செயுவம் இனி	188
என்சொலத் தகுமென	227
என்றருள்செய்	405
என்றருள்செய்முனி	353
என்றருள்புரிந்த	224
என்றருள்புரிந்து	287
என்றருள்புரிந்து	391
என்றருளிபுரியும்	242
என்றருளும் முனி	345
என்றலும் முனிவன்	190

என்ற வேதாவுக் 77
என்றறிகமன்னே 241
என்றனர் வேந்த 489
என்றனரன்னெரெ 481
என்றனள்வெற்பரை 162
என்றனன் நாரத 116
என்றனெலிது 151
என்றனேகதுதி 205
என்றனேகருற்று 149
என்றிரந்துவேண் 173
என்றிறைவனெதி 411
என்றின்னனபல 422
என்றுகூறலும் 491
என்று கூறினர் 495
என்று கூறுதல் 442
என்று சங்கிலெடு 305
என்று சொற்றிரங்கி 241
என்று சொற்றிரந்து 209
என்றுதனதுற்பவம் 419
என்று திருவாதவூர் 554
என்று நற்றுகிகள் 101
என்று நாதனைப் 494
என்றுநைமிசத்தின் 95
என்றுபலபுன 141
என்றுபலவாந் 115
என்றுபலவாற்றுதி 385
என்றுபலவாற்றுதி 490
என்றுபலவும்புகன் 80
என்றுபலவுமந்த 86
என்றுபற்பலநல் 287
என்றுபற்பல நன்னய 448
என்றுபற்பல மொழி 445
என்று புகன்றவர் 469
என்று புகன்றனன் 409
என்று பெயரிட்டு 388
என்று பொய்மொழி 427
என்று மாதவம் 105
என்றுமிவ்வணமருட் 419
என்றுமெய்ப்பரிவினே 298
என்றுரைத்துநிதி 464
என்றுளத்தெண்ணி 229
என்றுளம்நினைந் 189
என்னலுமம்மாது 279
என்னவிறையோடி 141
என்னவேதுவினை 326
என்னிடத்தினில் 489
என்னினிச் செய்வன் 241
என்னென்றிவ் 457
என்னேமதிமைந்த 415
என்னேயாண்டருள் 572
என்னேயீங்கொழித் 492
என்னேயும் பொருளா 388
எனக்கேட்டவிருடி 165

ஏ

ஏகம்பந்தன்னின் 564
ஏகுதும் மகிழ்வின் 302
ஏத்தரிய பவுத்திர 436
ஏதமறவீன்ற குழவி 418
ஏதமில் கிரேதயுகம் 410
ஏதமில் பரிகட்கிவ் 585
ஏது செய்திடினும் 188
ஏர் குடியிருந்த 254
ஏலாரும் புகழ்ந் 216
ஏலாலெயில் எய் 584
ஏற்றமாம் ஆத்ம 51

ஐ

ஐந்தறுபதாமகீனியும் 408
ஐந்தின்மேல் வயதோ 521

ஒ

ஒசிய நுண்ணிடை 12
ஒருகோட்டுமதக் 386
ஒருதரம் அரா 180

ஒருபங்குளது 14
ஒருபொருளுணர்வு 82
ஒருமோதிமுனென் 194
ஒருமைசேர்மனத் 127
ஒருவருக்குமதிற்ரு 166
ஒருவரோடொருவ 446
ஒளிவிடுவெண் 814
ஒளிவிமானமீது 219
ஒன்று பூணில் அவதி 130

ஓ

ஓடுங்கலவந்தியுமே 556
ஓதருஞ் சிற்றெறும்பு 7
ஓதியநரகத்தப் 68
ஓதிய முகூர்த்தம் 53
ஓதுமிச்சதுரமெ 54
ஓதுமெய்ப்பொரு 47
ஓதுவன் அவர்மன 227
ஓமகுண்டத்தங் 406
ஓரிருகோடிகள் 55

க

கஞ்சன்மால்விழி 873
கஞ்சன்முன்வந்து 77
கஞ்சன்வாய்மொழி 259
கஞ்சனவ்விருடி 188
கட்டழகுடைத்தாய் 531
கட்டுகரைக்கணி 551
கடகரிப்பரிமா 577
கடகரியரியொரு 22
கடம்பமருரிலெய்த 565
கடவுளர்தம் யோரேற் 168
கண்கள் பொழிய 358
கண்குளிர நோக்கி 473
கண்களாற் காண்போ 264
கண்கவர் காட்சி 534
கண்கவரும் பேரழகு 451
கண்டகமகிழ்ந்து 478
கண்டதிசைமுகன் 337
கண்டவரறுபது 228
கண்டவேள்மணம் 158
கண்டற்புதமொடு 584
கண்டனன் ஆசிகள் 226
கண்டனன் கண்ணுர 234
கண்டனன் கருணை 212
கண்டனன் வறியன் 78
கண்டிகை சென்னியும் 24
கண்டிறைஞ்சி 119
கண்டுகண்மாரிசிந்த 565
கண்டுதெரிசிப்பார் 864
கண்டுதொழுந்தொறும் 457
கண்டுவந்தெதிர் 208
கண்டுவந்தெழுந்து 35
கண்டுவீழ்ந்து 144
கண்டுவீழ்ந்து 155
கண்டெழுந்தரி 103
கண்ணுரக்கண்ட 401
கண்ணினீர்துடைத் 74
கண்ணிருட்டோடு 488
கண்ணிமையளவீ 52
கண்ணுதல் நாயகன் 552
கணநாதர் தொண்டர் 113
கணவன்றவமேற்கொள் 357
கதிரெழுமணுமூவேழு 61
கந்தநாயகபோற்றி 186
கந்தம் வால்முகம் 528
கந்திருவத்தவர் 247
கந்திருவர்க்கிறை 249
கயற்கண்ணியென் 163
கயிலாசநாதருக்கும் 405
கயிலாய ஈசர் 116
கயிலை முன்னுளதா 43
கயிலை வடவால் 140
கயிறுமாறிக் கொடுக் 536
கரசரணதியங் 240
கருணைமேருவென்ன 37

கருணையங்கடலே 270
கருணைவழிந்தொழுகு 284
கருமசீலனுதல் 85
கருமநாதனுமாயு 284
கருமயிரெவையு 526
கருமாவெனமிகு 195
கருவமாமறியின் 520
கருவிகரணங்கள் 325
கருவியுறு மூணு 589
கருவின் வேதகீனயை 86
கரைந்தது பிடியேற் 529
கரைந்துருகும் பொன் 592
கல்லகீணத் திரளும் 507
கல்லுருவாயவள் 292
கலிக்கடல் யாவையும் 224
கவரிக்கழிதகீல 201
கவின்மருவுறுதலினி 458
கவினுர் பொற்சிலம்பு 3
கள்ளிகீனச்சில 12
களங்கமிலாத 60
கற்பகப் பூமழை 89
கற்பகமின்னர்கள் 16
கற்பகாதியதரு 97
கற்றுணர்ந்தொழு 91
கற்றையங்கதிரோ 515
கறுத்தனன்றிரு 215
கறுப்பிடை வெண்மை 526
கறுப்பொடு வெளுப்பு 531
கறுவுகொண்ட 367
கன்னடந்துளுவர் 510
கன்னியுருவாகுமினன் 412
கன்னியைக் கொண்டு 258
கனகசபைதனில் 162
கனகமணிமன்றி 293
கனமருவுமலர் 96
கனிதருநற்றருவை 437

கா

காகம் நாய் பன்றி 534
காசிப முனியை 179
காசிபர் நாரதர் 26
காஞ்முன்னர்க் 188
காதலொடுஞ்சிவ 552
காதிலணிந்திசை 549
காதிற் கொள்பவர் 186
காதிறேடு முதுகு 81
காமசரத்தாலடியுண்டு 361
காமமுடன் சினம் 25
காமமே முதலிய 222
காமுகர் சிற்றின்ப 594
காயும் வெம்புலித் 576
கார் மிகுந்தரக்கு 527
கால்கனற்றவர் தோள் 369
காலதூதர்தமை 374

கி

கிட்டொணதபேரின் 498
கிரந்தமோர் நூறு 189
கிரேதயுகந்தனிற் 345

கு

குசைப்புலவன்மிக் 411
குஞ்சித்த செஞ்சரண் 585
குஞ்சுகளினங்கள் 225
குட்டியோர்புறமும் 128
குணப்பாலாதிய 68
குந்தமூலத்தினுக்கு 165
குந்தமேவடிவா 286
குந்தவாணருக் 94
குந்தாரணிய நாதரை 358
கும்பமுனிதகீனயழை 169
குரவகீத்தனதா 190
குருந்தடியிலிருந்து 318
குருந்தமேவடிவா 374
குருந்தவாணரே 494
குருந்திறைவர் 469
குருந்திறைவன் 344

குருந்து விட்டருள் 222
குருந்தெனும்பெரு 221
குருநாண் மதியம் 360
குருமணியை யபகரித் 334
குருமுதலாயிருந் 278
குலவரை பாதி 67
குளப்படி நீரும் கங்கை 377
குறுமுனிகையா 17
குறைபெரிதுமுடை 484

கூ

கூடலரசே முறையோ 433
கூடைதலைக் கணை 550
கூர்கொள்வாள் பலகை 465
கூவிய புள்ளொலி 98
கூற்றுவன் செவி 370
கூறிலங்கு மங்கை 553
கூறுகிடப்பது கண்டு 547
கூன்குயத்திலில் 13
கூனுறமுதுகொரு 429

கெ

கெழுமுகிக்கிரக 373
கெழுமுமற்றப்பதி 325

கே

கேட்டகூடற் கோமான் 545
கேட்டது நற்சங் 309
கேட்ட மன்னலுட் 499
கேட்ட மாமனும் 505
கேட்ட விந்திரன் 265
கேட்டியெவற்றினும் 350
கேடிலாப் புவன 45
கேத்திரமகிமைதன்னை 377

கை

கைப்பொருள் யாவும் 240
கைம்மலியீருரி 249
கையுங்காலும் 365

கொ

கொக்கிறகனி 188
கொடுபோகியகலித்தே 200
கொண்டாடெருதி 421
கொத்தருமலர்க் 501
கொந்தலர் கொன்றை 250
கொந்தளகக் குழல் 11
கொல்லியிற் புற்கறி 7
கொன்றைவார் சடில 801

கோ

கோகிலமிடைக் 472
கோட்டு மலர்த்தருக் 18
கோதனங்கள் தந்திடு 333
கோதிலாக் கோயில் 566
கோதிலா நல்ல முதமே 144
கோயில் நற்சுடு 573
கோயில் மூத்ததிருப் 589
கோரபத்திரை 4
கோரமாம் விகற்பரூப 279
கோலமால் வரை 574
கோலவாள் விதிர்த் 541

ச

சகமுதன்மை 84
சகல நலங்களும் 281
சகலமும் நாரணன் 323
சகலமுமுற்றுணர் 274

சங்கமிருந்த 27
சங்கமிருந்த தமிழ் 554
சங்கரர்க்குத்தமர் 545
சங்காரகாலமரி 109
சங்கு சக்கரமுராரி 208
சங்கொலிமுழங் 479
சண்முகப்பிரான் 182
சத்திகருப்பமதா 320
சத்திகளாற்றனுகரண 588
சத்தியடையாளமதா 328
சத்தியவுலக 87
சத்திவிம்பமாம் 320
சத்துருபவரூப 82
சதுமறையுமவணீ 99
சதுர்யுகம் எழுபதாக 54
சதுர்வேதபுரம் 112
சந்தனமாலை 28
சந்திரன்றவம் 285
சம்புராமம் நாவில் 130
சம்புவின்னிலைவா 506
சம்மதித்ததென்னர் 555
சம்மதித்தயில்வேல் 177
சமியின்காய்பறி 219
சமயமுறு நெமிச 26
சரணமலர் தன்னில் 474
சரணைனத்துதித் 491
சரிக்குமாத்ம 284
சரியையாற்றுவர் 447
சலமுடையசலந் 577
சலனமிலாது 382
சவுபரி முனிக்கு 229
சனகராசனெண்ண 31

சா

சாகரமேகை 66
சாத்தனிதிகழ் 223
சாத்துடையரையினிற் 429
சாதிகுலமாண்பென் 474
சாதுவஞ்சகை 288
சார்ந்தமுனி 275
சாலோகமுற்ற 40
சாற்றிடுமவைமுப் 64
சாற்றுகின்றயாலை 132
சாற்றுபுனலெவ 117
சாற்றுமெய்கண்ட 6

சி

சித்தஞ்சிவமாக்கி 588
சித்தமார்கரணச் 481
சிதம்பரந்தன்னிற் 565
சிந்துபூந்துறை 10
சிந்தைமகிழ்சேகை 409
சிந்தைமகிழ்ந்து 249
சிந்தையின் மகிழ்ச்சி 511
சிரத்திற்றுங்கிய 448
சிரவலி குட்டம் 90
சிரித்த நன்முகமும் 270
சிரித்த வான்மதி 448
சிரிப்பவருமுட் 475
சிருட்டி காலம் 282
சிருட்டி கிருத்தி 315
சிருட்டியின்பொருட் 72
சிலமெய்ஞ்ஞான 31
சிவகணத்தவ 868
சிவகளையெவை 44
சிவசம்பந்தமாகிய 485
சிவசிதம்பரமென் 568
சிவபத்தரென்றால் 195
சிவபிரான் வட 149
சிவபிரானருளி 75
சிவபிரானுதவ 206
சிவபுரந்தனிற் 216
சிவபுர மகிமை கூறும் 241
சிவபுரமதனில் 52
சிவபுரமதிற்றிகழ் 187
சிவபுர மற்ற தலங்கள் 826

சிவபுர மாநகரிலதிற் 848
சிவபுரமான்மிய முதவு 899
சிவபுரமுற்றும் 440
சிவபுராணசிர 184
சிவபுராணந்தகவி 562
சிவமயற்பித்து மிஞ்சி 560
சிவமுதன்மையெ 546
சிவயோகநாயகிதன் 402
சிவரூபமெவற்றி 162
சிவனபிடேகம் 124
சிவாவென்றோர் 129
சிற்சபைவாசா 248
சிற்ப நூற்படி 496
சிறந்தவுன்றன்னு 881
சிறப்புமிக்க சன்மார் 487
சிறிதுபருவமகன் 356
சிறிதுவைகலொத் 218
சிறியவோர்மறை 214
சிறுத்தொண்டர் மகீயின் 888
சினமறுநற்சிறு 455

ஸ்ரீ

ஸ்ரீடராகுமனிவ 82
ஸ்ரீர்பூத்தபரங்கருணீ 2
ஸ்ரீர்வளருஞ்சவுன 817
ஸ்ரீருலாவுமனி 202
ஸ்ரீருமூர்திருவாசக 572
ஸ்ரீலம்பல கற்பித் 866
ஸ்ரீலமருவுமம்மறை 355
ஸ்ரீலமொடு மேவல 547

சு

சுக்கிலமதிகமாயிற் 519
சுத்தமென்னும் 485
சுந்தரநாயகர் 545
சுருட்டுவெண்டிரை 476
சுருதிகள் இடைவீ 45
சுருதிபலமுகமாக 480
சுருதியுமங்கமும் 24
சுற்றமாகுமித்தொடர் 508
சுற்றுமணிமாமதிளு 88

சூ

சூதர்முனிவரரொடு 595
சூதரிருந்தபெரும் 19
சூரன் சொல்லுமுன் 184
சூரனுல் நெடு 150
சூரியன் சந்திரன் 282
சூழ்கரைமருங்கோர் 397
சூழ்ந்துநின்றிவை 148

செ

செக்கர்வானிறம் 588
செங்கண்மாயன் 102
செங்கண்மாலயன் 490
செஞ்சடாடவிம 152
செஞ்சடாடவியின் 108
செஞ்சடாமகுட 110
செஞ்சடிலமேற் 474
செடியனேன்புரி 223
செந்துகிலாடை 27
செப்பரிய மெய்ப் 328
செப்பியவிச்சரிதர் 252
செப்பிற்கானிதம்போல் 484
செம்பொன்மாமலே 148
செம்பொனுற்செய்த 454
செம்மைதரும் அறமே 100
செம்மைதரு சவுராட் 118
செய்யகுண்டலிப் 84
செய்யனேதிரு 283
செல்வமலியங்நகர 407
செல்வமிக்கநற் 445
செல்வமிகமலிதரு 242
செவ்விதாயுலக 56

செவ்வியகங்கை 881
செவியடிகந்தம் 523
செழியர்குலபதி 487
செழியர்திருக்குல 433
சென்றதின்மூழ்க 188
சென்னுரணம் 585
சென்றிடுதலாலு 411
சென்றுசூரன் 183
சென்றுபெருந்துறை 556
சென்னியிற்றண் 3
சென்னியின்விரல் 533
செனிப்பதுபகலதாகி 519

சே

சேயவென்றருளி 78
சேர்ந்தருகற்றரு 346
சேர்ந்தகண்ணுதல் 538
சேர்ந்தவனுலவும் 92
சேர்ந்தனன்சிவ 285
சோந்திருந்தளவ 296

சை

சைவசமயத்திறமே 580
சைவாசாரம் உடைய 600

சொ

சொல்லரியகைமிச 410
சொலத்தொடங்கு 29
சொற்பெருஞ் சொற்றுணை 5
சொன்னமுப்பரிக்கும் 580
சொன்னவப்புவன 63

சோ

சோடசமாயுரை 101
சோதிநாயக 304
சோதியருட் கடர் 590
சோதியாய்ப்பிரம 52
சோதியுற்ற தீரை 313
சோதிரூபவகளங்க 300
சோமவாரம் சங்கிர 597
சோமவாரமுங்கூடிற் 348
சோர்ந்திடாவெழில் 88
சோர்விலாவபிட்டி 67
சோற்றினில்விட 92

ஞ் - ஞா

ஞ்சற்றுண்டாய் 571
ஞாலமுய்ந்திட 561
ஞானகுருவடிவா 115
ஞானசற்குருவாற் 486
ஞானசனகருக்கு 30
ஞானதேசிகவுரு 104
ஞானமயமாத்ம 404
ஞானவம்பர 45
ஞானவாரமுதுமை 4

த

தக்கன் மகளாய 322
தக்கன் வேள்வி 300
தக்கனைத் திருமேவிய 573
தகனுதிகளில்லாத 198
தங்கடம் விருத்தி 425
தங்கள் தம்பதி 186
தங்கள் வரலாறும் 470
தங்களுக்கொருபதி 427
தங்கிலோக்கிட 208
தட்டமிட்டகரமலர் 299
தடுத்துமறித்தடா 244
தந்தனிந்தமுதம் 394
தந்திடுதுவாத 44
தந்திடுவம்யாமதன் 432
தந்திரமுறைநெறி 426

தந்தைகாசிபரும் 210
தந்தை சொற்றேரும் 388
தந்தை மகிழ்ந்து 455
தந்தையாய்ப்பிரம 380
தந்தையொடன்னே 549
தம்பியாய்வந்த 181
தம்மனத்தின் செயல் 464
தம்மைநேராகுமோர் 425
தமைத்தடிகூல் 188
தரளவெண்மணி 465
தரித்திடுமலடு 90
தருகவென்றனன் 157
திருகவென்றனள் 155
தருகின்றேன்புவி 214
தருணமங்கலே 147
தருத்திரு நாடு 266
தரையில் வளர்விசை 591
தலவிசேடம் தரும் 599
தலைமைபெறு 119
தலையொருபத்து 409
தவஞ்செய் காசிபன் 179
தவத்திற்புகுந்த 857
தவம்புரியும் பரை 118
தவமகிமையிற்சவு 280
தவமணிந்தேத்தும் 385
தவமுனிவரர் குழு 22
தவயோக பீடத் 164
தவவருளுருவாங் 61
தவவேந்தே தவுமி 167
தவறில் சூதவிருடி 186
தழல்முனர்ப் பஞ்சின் 187
தற்பணமதனின் 563
தன்காலமுள்ளளவும் 199
தன்குடைநிழற்கீழ் 385
தன்றன்வசமன்றின்ப 161
தன்னகத்திடை 218
தன்னற்புரிபொய்கை 424
தன்னுலகமெய்தினன் 341
தன்னையொப்பலா 215
தன்னெளியலது 78
தனக்கு நேரிலா 218
தனிநிகர்த்தரன 84
தனையையாய் மலே 156

தா

தாணுவே சிவனே 559
தாதமார்க்கமாகிய 486
தாதவிழ் கடுக்கை 187
தாதவிழ் மாலே 229
தாமரைத் தலேவன் 257
தாமரை நாளந் 264
தாமரை நீர்போலு 456
தாருகன்றுயர் 156
தாருகன்றுயரம் 181
தாருகன்னுடலே 188
தாரையூரியெக்காள 510
தாவில் யோகாம்பிகை 851
தாவிலாதபேரேரி 10
தாவிலாவிவையெலாம் 382
தாவிலாவுயிர்கட்கு 370
தாவிலாவெமது 569
தாழ்ந்திறைஞ்சி 402
தாழியறு கோண 474
தானசாசன முதல் 482
தானந்தம் இலான் 575
தானபூருவமாக 408
தானவக்கனேயை 190
தானை சூழ்ந்திடச் 502

தி

திக்கெலாம் புகழ் 466
திகழுங்குருந்த 364
திங்கட்கொழுந்தணி 556
திங்கள் கூற்றுத்திரு 286
திசைமுகனுர்க்கு 408
திசையெலாங்காலா 894

திண்ணியமேரு 62
திரள்மாதவர்தம் 421
திரியுங்காலேயக் 219
திருக்கரஞ்சிரத்தில் 480
திருக்கற்பணிசெங் 598
திருக்குருந்ததற்கு 88
திருக்குருந்திறை 85
திருக்குருந்தை 404
திருக்கோவையுந் 583
திருச்சிற்றம்பல 582
திருஞானசம்பந்தர் 17
திருந்தாதிகயிலாச 408
திருந்தியநற்றவர் 249
திருந்தியநற்றவ 809
திருந்தருவினேர் 129
திருந்தியமாதவப் 450
திருந்தியவாதவூரர் 515
திருந்துங்கருணை 557
திருந்துநலந்தரும் 282
திருந்துமறிவுடையோய் 341
திருந்துமறையவர் 439
திருநயனமுக 112
திருப்புத்தகந்தனை 584
திருப்பெருந்துறைச் 7
திருப்பெருந்துறைத 375
திருப்பெருந்துறையில் 566
திருமலியுங்குருந்த 109
திருமாலயனிந்திரன் 596
திருமாலுமலரயனு 331
திருமுகத்தழகு 79
திருமூலட்டானம் 566
திருவலஞ்சுழி 119
திருவளர் கூடலின் 545
திருவளர்சிற்பர 1
திருவளராத்ம 71
திருவளர்தருவே 248
திருவளருங்குருந் 468
திருவளரும்பெருந் 6
திருவாசகப்பொரு 594
திருவாதவூர்ப்பெரி 586
திருவாதவூரர்மதி 460
திருவாதவூரருக்கு 850
திருவாதவூரருமத் 469
திருவுளமிரங்கி 176
திருவெழுத்தைந்துமே 225
தில்லைவாழந்தணர் 5
திலதம்பலித்திருக் 196
திறிகுணமேயிலையாக 401
தின்றுன்வயிறடைய 197
தினச்சொலில்பணித் 128

தீ

தீட்டுமரத்தினிற்கூர் 542
தீதகல்மானவ 224
தீதிலாமறை 187
தீமைபற்பலவா 154
தீமையர்லவன் 219
தீயமனத்தினனாகி 406
தீயனல்லவையும் 395
தீர்த்தங்கள்தம்மில் 48

து

துக்கசாகரம்மூழ்கி 151
துகிர்நம் வேணிக் 286
துங்கமாமிறை 449
துங்கமேவுமச் 185
துந்துபிகாளம் 111
துய்யமதிவாய்மொழி 414
துரகதவுருவிற் 522
துருத்தியிலருத்தி 565
துளியுலாங்கண்ண 285
தூயொடுவெளுத் 521
தூன்மதிசேர்கவு 441
தூன்னுபனிக்காலம் 15

தெ

தெக்கணத்திசை 107
தெக்கணத்திசை 575
தெங்கிஞெண்பழம் 478
தெண்ணிலாமதி 872
தெய்வமறையவர் 8
தெரிசிக்கும்மெய் 815
தெருக்கள் தெற்றி 539
தென்றலந்தனி 152
தென்றிசைக்கிறை 871
தென்றிசைதன்னை 177
தென்றிசை வரும் 895
தென்னவன்பரி கொள 497
தென்னவன் பிரம 464
தென்னவன்றன் 468
தென்னன் மந்திரி 504

தே

தேக்குரீர்ச்சடில 272
தேகமும் பசுக்கர 489
தேசிக வடிவாய் 565
தேசுடைச் சிவஞா 284
தேசுறு மாணிக்க 587
தேவகீதமும் நாட் 211
தேவரின் மாணம் போல 408
தேவர்கள் முதலோர் 177
தேவர் தாயதிதி 209
தேவரறியாத சிவன் 588
தேவரீர்க்கு மொரு 485
தேவாரத் திருப்பதிகம் 19
தேவுறையாயிரத் 405
தேவூர்த்தென் 564
தேற்றமிலசுரர் 187
தேற்றமின்னண 155
தேறுமருள் பெற்ற 553
தேன்கனற் சாறு 482
தேன்புகுந்தண் பணை 576
தேனமர் சோலைசூழ் 564
தேனருமின்றமிழ் 420

தொ

தொடர்பெமதுமரபின் 488
தொடுத்தபல்சரா 215
தொந்தமல 593
தொல்லுலகம் 884
தொழுது வலம் 475
தொழுவார் தங்கள் 114

தோ

தோல்சிறு சிவப்பு 527
தோற்றுபல் நூற்பா 588

ந

நகங்கணிற் சிறிய 524
நகமயிரெலும்பு 397
நகர மொன்றதனை 240
நகருளாரிரைக் 540
நங்கை நீ சொலி 575
நச்சு மரமே யெனினும் 543
நடந்து வெள்ளாற் 881
நடனமிவ்விட 302
நடுநிலை தேர்ந்துணர் 488
நடுவிலை யோவிந் 433
நண்ணு மாதவர்கள் 297
நண்ணுவித்தரிய 76
நதியிதுவுஞ்சுவேத 883
நதியிலாமையிலிந் 887
நந்தம்பாடியினில் 563
நந்தவனங்கள்வாவி 598
நந்தவன மலரெ 16
நந்தியே முதலாம் 514
நம்மையே நாமு 42
நமது துன்பினைநீக் 448

கரியாகி மதுரை	542
கரைதிரை மூப்பு	188
கலத்திற் சிறந்தவிவள்	366
கலமருவும் பெரியோ	452
கலமருவுமதற்கு	68
கலமலிசம்பு	65
கலமலி சுவேத	392
கலமுள தென்னவன்	460
கலமே பெருகுவிர்	428
கவமணி யொளி	126
கற்றிரங்களிலொன்றே	369
கறுமலரோடுறு	8
கறைகொளிதழி	361
கன்றிய மிகும	577
கன்னய மோதி	407
கனியிசைபெருகும்	396

நா

காணுவர் சற்றுளே	228
காதகீதவிசை	102
காதனேயிமைய	285
காமகள் கணவன்	49
காமகள் தனக்கு	287
காமே னியாகும்	115
காயக நந்தியை	252
காரணன் முதலா	87
காரணுகுமவ்வ	478
காரதரீ விரித்துரை	109
காரதன் உரைத்த	141
காரிழந்தவன் மன	447
கால்வகைத் தாகும்	58
காவார் செல்வி	246
காவாற் சுவையுண	554
காவினே யறுத்தும்	122
கான்கு வேதங்கள்	446
கான்றம்பதத்	481

நி

நிகரகல் மானவ	281
நித்தியமும நித்தியமு	456
நிதிதிரை செய்தெழு	551
நிதிகளீந்தனன்	212
நிரஞ்சனமாயெங்	554
நிருதர்கோனிவன்	218
நிருதர்வெந்துயர்	204
நிருபரீவருந்தலென்	389
நிருபன் மாதவன்	217
நிலவும் புனலும்	355
நிறைதலிலுற்பாற்	98
நிறைபரம்பொருளா	267
நிறைபிராணி	98
நின்பால் மனம்வைத்த	420
நின்றெரிசனம்	246
நினக்குமுன்னடி	506
நினைத்தலைவரங்கள்	192

நீ

நீதமலிசிவகே	351
நீதிசேர்திருப்	29
நீதிசேர்வழுதி	514
நீதிதருமாதவன்	279
நீர்த்தடமொன்று	247
நீலமணிகண்ட	115
நீலமைக்களங்	508
நீவிர்சொற்ற	29
நீவிர்புரிபரிப்பெயர்	417
நீவிர்முற்செய்வது	207
நீவிர் விரும்பிய	247

நு - நூ

நுதலுரந் தாள்கள்	524
நுவலும் யோசனை	62
நூலகத்தாட் டாமரை	282

நெ

நெடிது காலவன் 208
நெடுங்கழுத்தும் 110
நெற்றியம்பகம் 153
நெற்றியிற்றிரு 482

நே

நேத்திரத்தானஞ் 483
நேயமிகுந்துள்ளம் 589
நேயமொடுசனக 85
நேரில்லாச்சிவ 581

ப

பகர்ந்திடுமதன் 64
பகருமவ்வருடம் 58
பங்கயஞ்செங்கழு 15
பசுமை பொன்வெண்மை 526
பஞ்சப்பள்ளியினி 563
பட்டமங்கையினி 564
படிக்கும கமம் 84
படிறர் சொல்லதனை 512
படைவீடு செய்து 178
பண்புமிகுந்தபரா 26
பண்பொடுஞ்சக 487
பணிந்தெழுந்துநின் 490
பத்ததீர்த்தநலம் 295
பதமறிந்துழுவோர் 13
பதிவாயனந்தம் 114
பந்திபந்தியாய் 185
பயில வேண்டுவன 456
பரப்பிரம்மத்தினி 827
பரமகாரணி 148
பரமகுருவாகு 813
பரமசிட்டைமேவி 841
பரமபூரணமதா 296
பாமன்றிருவரு 428
பரமனன்பர்பொருள் 184
பரமா கணங்கள் 118
பரவியசந்துமார்பு 530
பரவுபுகழ்ப்பா 67
பரவைசூழ்உலகத் 569
பராசரன் பன்னுட் 276
பரிகள் யாவையும் 539
பரிசாரகப் பொருட் 406
பரிந்தழுதந்தோ 880
பரிபூரணத்தினில் 585
பரியிலக்கணங்கள் 517
பரியிலக்கணமுன் 535
பரியுருவாய்வரு 542
பரிவரும் ஆர்ப்பு 510
பரிவினேழ் தரிக்கின் 181
பரிவுபெருகப் போற்றி 289
பரிவும் பயனுந்தோன்ற 868
பருத்த.....கா 64
பருப்பதவில்லாய் 271
பருமைகொள்புறத்து 66
பல்லுடனண்டம் 588
பல்வளம் பெருக்கி 390
பல்கலைஞர்பொரு 115
பலகோடி மகம்புரிந் 404
பலபலவஞ்சின 290
பவளமொத்திலகு 295
புவுத்தவாசிரியர் 570
பவுத்திரமாணிக்கநாத 851
பவுத்திரமாணிக்கம் 100
பழம்பதிநாயகர் 18
பழுதில்ல நல்லறமி 420
பற்பலவுற்பவ 164
பற்றுவேறெமக்கெ 448
பன்மலர் தொடுப்ப 475
பன்னியின் வருத்தம் 268
பன்னிருகையுனதாக 21
பன்னெடுநாள் நீ 398
பன்னெடுநாளர் 291
பனசஞ்சூதம் 15

பா

பாகசாதனன்வர் 254
பாகமேவிய 9
பாடுவர் இசைகளே 228
பாடுவர் யாரையும் 550
பாண்டவரும் 290
பாதசரோருகம் 27
பாதபங்கயம் 184
பாந்தள் வேந்தனும் 212
பாயொளி சேர்மாமணி 171
பாயொளி விமானம் 94
பார்க்குமவ்வுழி 381
பார்மிசையுந்திய 25
பாலுந் தண்ணீரும் 16
பாவமகலும் அறம் 601
பாவமென்னும் வெம் 401
பாற்கடலிற்பிறந்த 288
பானுவிந்தனேக 81
பானுவின்றவம் 283

பி

பிட்டமுதுண்ண 549
பிதிர்சிரார்த்தம் 218
பிரதோடத்திற் 597
பிரமநிட்டையுடைய 30
பிரமமந்திரம் 76
பிரமனரிமுதலமரர் 4
பிரிவில்கேவல 42
பிரிவிலாதமும்மல 30
பிறவிகொள்மாத 521
பின்னமற்றதம்நில 444

பு

புக்கவன் மனம் 259
புகலதற்கப்பா 66
புகழ்பெருகும் செய்கை 587
புகுமகாபிரள 72
புடவியின் பொது 222
புத்திரர் களத்திரர் 225
புதல்வரப் புதல்வர் 280
புதல்வியரிருப்புழி 228
புதுவிருந்தளித்து 38
புரஞ்சிவபுரமாம் 47
புரந்தரன் வெட்கி 266
புரந்தரனரிய 269
புருவவில்லினில் 12
புலரியில்லாச்செங் 483
புலியர் சேரிதனில் 107
புவனமோர் மூன்றும் 262
புவனலெல்லாஞ்சுரகதி 436
புனிதநற்றீர்த்தத் 390
புனிற்றிளங்கன்று 559

பூ

பூகமடல்கீறி 472
பூசாரவபிடேகம் 586
பூசித்துவந்தமை 436
பூசிப்போருந்தெரி 98
பூசிமுடித்துண்டுடுத் 171
பூசுகின்றதும்வெண் 572
பூசுரர்த்தவமுனி 448
பூதவிருஷயகற்றி 596
பூதாதி தோன்ற 56
பூமியலாற்றரிப் 178
பூரணமயமா 78
பூரணகருணகரா 144
பூருவபலத்தால் 93
பூவணமதனிற் 563

பெ

பெருகவுரைத்தாவ 482
பெருகு ஞான்மறை 444
பெருத்த பசுத்துரோகம் 599

பெருவிருப்போடு 372
பெற்றனன் முனிபல 224
பெறும்பேற்றினை 864

பே

பேசுதுரியாதீத 814
பேதமிலாப்பொரு 826
பேதையேனுயிரொடு 498
பேர்நாடுராறுமகி 589
பேரெழிலாளர்கள் 246

பொ

பொங்கியவன்பு 548
பொங்கும்யுகந் 859
பொடிமூடுமழல் 462
பொதுநீக்கியறம் 485
பொருந்துபுத்திர 487
பொருந்துமழற்றீர்த்த 470
பொருந்துமாறு 183
பொருமி விம்மலோ 500
பொருவிலாவெழிற் 497
பொல்லாத பவத்தை 598
பொலிவகன்றிருத் 889
பொழிந்த கண்களும் 495
பொன்மகியனையமேனி 888
பொன்வரைமேற் 1
பொன்றிரள்விலை 427
பொன்னுர்மெய்யன் 588
பொன்னிநாட்டெய்தி 429
பொன்னிறக்கடவுள் 189
பொன்னின்மால் 88

போ

போகியாதலும் யோகி 153
போதமறியாச் சிறய 277
போதுமித் தொழில் 871
போயினன் கயிலை 181
போற்றினனருள் 283

ம

மக்களோடுதம் 218
மகபதி நமது பெண் 257
மகர குண்டலமும் 479
மகிமை பற்பல நிறை 143
மகிழடியிற்றவம் 113
மங்கலப் பெருக் 33
மட்டகலுங் கூர்விழி 279
மண்டதின் தூம 62
மண்டபங்களும் 496
மண்ணண்டுபாழ் 400
மண்ணெடுத்துச் 558
மணலெலாஞ் சிவ 874
மணவினை முற்றிய 280
மணிபலவரன்றி 898
மணிவாயிற் புறத்தரிய 434
மத்தகங்களிற் 589
மத்தகஞ்சிரந்தோள் 522
மத்திமமூலமத 812
மதிக்குல முதல்வ 428
மதிமகன் கைகூப்பி 416
மதிமுடிச் செஞ்சடை 168
மதியளித்திடரகற்றி 446
மதுகரங்களோசை 98
மதுரவின்னிசை 142
மதுரைத் திருநகர் 588
மதுரை மன்னவன் 537
மதுரை மன்னவை 443
மதுரையிற் சென்று 498
மதுரையிற்றென்னர் 879
மந்தமுறு தென்றல் 472
மந்தர மத்தாய் 832
மந்திரத் தலிவர் 886
மந்திரத் தலிமை 536
மந்திரி மகன் கவு 426

மந்திரிமார் அரு 542
மந்திரிமார் படைத் 459
மந்திர்யார் தய சீத 514
மரததிற்றுவும் நீள் 540
மரித்த காலியம 107
மரித்திடுமுயிர்கள் 377
மருப்பெற்றிரும 600
மருவிருஞறறு 587
மருவுலாவருந 448
மல்கிய செல்விருந் 14
மல்லர் சிலர் தமை 548
மல்லிகை நன்முல்லை 15
மலமறைப் பெலாங் 484
மலரடியுந்துவி 886
மலரயற்கு முன்பு 828
மலரயன உலகில் 255
மலரவன் பகலி 71
மலிந்துவரும் புனற் 547
மலைமகட் கொருபாகம் 574
மலையடியினபுற 88
மலையரையன் திருமக 385
மலையரையன் பொற 576
மழலை தகுவாயிலுரை 140
மறறப்பதியின் 865
மற்றுண்டாகிய 10
மற்றுளகாவண 28
மறறையதலங்கள் 46
மறத்யாற் செய்திடிற் 599
மறுகுதோறுமுயி 188
மறுலகல் லுமிச 425
மறுவகலீ லீலையட் 852
மறுவன்பவமவனு 199
மறுவிலாநற்றிரு 557
மறைகளாலும் 449
மறைமுதலருளால் 191
மறைமுதலாகுங் 887
மறைமொழி தப்பா 546
மறையவர்தம் தவம் 440
மறையளவாமெனும் 829
மறையோர் முதலா 601
மறறல் வளர்குருந் 175
மன்னவன் முனைவ 488
மன்னவன் முனிவர 228
மன்னனிமவான் 137
மன்னனுமமைச்ச 516
மன்னுதத்துவாதீத 496
மன்னுமா மயேந்திர 562
மனந்திகைப்பதனி 79
மனமொடுவாக்கு 258
மனவிருப்பினெடு 468
மனுநெறியிற்புவி 458
மனைகளெல்லாம் 354
மனையும் வாழ்க்கையும் 448
மனோவதிக்கு மேற் 68

மா

மாகமுற்றுயர் 88
மாசறும் தமது 480
மாசித் திங்கள் சிவ 597
மாட்சித்திருங்குருந் 852
மாடகூடச்சிகர 471
மாடநிலையும் 854
மாடுறுவதன்முன் 511
மாத்தியர்தங்குல 452
மாதர்மாரேழிற் 522
மாதவக்குழாங் 80
மாதவத்தோர் மொழி 450
மாதவர் சிறுவர்கள் 28
மாதவர் சீற்றச் 267
மாதவருக்கரசாகி 850
மாதவனுகுங் கௌத 298
மாதவனும் பூங் 276
மாதிரந் தோன்று 512
மாதுநின்மன 156
மாமயேந்திர 182
மாமறைப் பொரு 85
மாமேருவில்லா 882

மாயவுருக் கொண்டு 592
மாயையென்றொரு 178
மால்முதல்விண் 172
மாலயற்கறிவரிய 442
மாலயன்மகவா 184
மாலயன்றனுடல் 300
மாலயனிந்திரன் 39
மாலும்நான்முகனு 286
மாலே சந்தனதி 545
மாலொடு நான்முக 276
மாவலித்தறுகண் 210
மாறன் முன்பே 442
மாறனும் இறைவன் 516
மாறுதபுன் கண் 198
மாறிலாக் கருணை 513
மாறுபட்டும் நரி 546
மாறுபடாவிருவர் 8
மானவ தீர்த்தநன் 221
மானிலங்காக்கும் 390

மி

மிக்கபவுத்திர 250
மிக்கபிறவித் 592
மிக்கவதிபக்குவ 399
மிகும்புனற்சமுத் 10

மீ

மீட்டுநெற்கனி 18
மீனவர்தங்குல 486

மு

முக்கடன்களு மதில் 224
முக்கவர் மூவர் 80
முகஞ்சிரஞ் சேப்பாய் 530
முடிவிலாத மல 301
முடிவிலெழும் பிரள 544
முண்டகங்கழுநீர் 125
முண்டகங்கழுநீர் 582
முத்திநன் முதற்பொ 5
முத்திபெறுநெறி 587
முதியபுண்டரீக 824
முதியவானவரை 257
முதிர்ஞானத்தேனை 454
முப்புரந்தீயூட்டும் 277
முப்புவனத்தினும் 431
முருக்கிலாநிறம் 528
முறையறியாத 289
முன்புபோற்றினம் 508
முன்னம்யான்புரி 213
முன்னவன்றன் 158
முன்னவன்றனக் 218
முன்னோர்பஞ் 117
முன்னிருந்த அமை 461
முன்னொருகாலத் 96
முனமிவன்ஞமலி 125
முனிசவுபரி 228
முனிவர்தம்பெருங் 40
முனிவர்மறைவல் 360
முனிவரர்வாழ் 28
முனிவரர்விண்ணவர் 349
முனிவரன்கூறிய 278
முனிவரன்பன்னி 262
முனிவரன்மனத்து 226

மூ

மூப்புமிகுந்து 548
மூர்த்திமேன்மை 86
மூலமீறிலாமுத 447
மூலமேதோன்று 402
மூலாதாரமுதல் 311
மூவருக்குமுதற் 288
மூவிருதீயின் 173
மூளெரிதன்னில் 180
மூன்றுபேருண்டு 47

மெ

மெய்திகழம்மொழி 558
மெய்ப்பரிவாற்பணி 119
மெய்ப்போதநான் 554
மெய்யடியார்கள் 20
மெய்வித்தகர் 584
மென்பரலுருதவடி 472

மே

மேருவின்புறத்தி 264
மேருவிணைப்புடைசூழ் 69
மேவுதேவர்சிறை 185
மேன்மைசேர்வகை 186
மேனியுடன்மகிழ் 170

மை

மைந்தகேண்மிகு 483
மைந்தராமிவர் 218
மைந்தரிற்சிலர் 184

மொ

மொய்த்தமலர்வாவி 478
மொழிதருதுவாத 315
மொழிதருமவரி 56
மொழியுமங்குல 61

மோ

மோதிவரும்முக்குறும்பு 275
மோன மா யெதிர் 498

யா – யோ

யாங்கள்புரிதீ 189
யாதுகாமித்து 896
யாவரெமக்குன்போல 277
யாவரேனும மல 31
யானவள்வயிற்றிடை 414
யானுமுமது பின் 555
யோகமார்க்கத்தால் 481

வ

வச்சிரபாணி 254
வசித்திவ்வுலகில் 555
வட்டமாய் நாபி 528
வடதிசைத்தேச 463
வண்கமலத்தயன் 552
வண்மைசேர் ஒளி 88
வணங்கி நின்றே 126
வணங்கிய நந்தியை 252
வணங்கியுள் புகுந் 242
வணங்கி யெழுந்து 359
வணங்கி யெழுமலர் 165
வந்தகுருந்தீசன் 283
வந்ததிருமுனிவ 292
வந்ததூதுவர் 570
வந்தபானுவசு 282
வந்தமாதவர்கள் 303
வந்தமாமுனிவன் 261
வந்தரசன்திருக் 482
வந்தருளும்அண் 139
வந்தவயன்குருந் 337
வந்தவர்சடி 433
வந்தவவரத்தல 291
வந்தவான்மீகி 189
வந்தவிந்திரன் 256
வந்தவீரரும் 146
வந்தவெம்பெருமா 143
வந்தழல் மடுவி 221
வந்தனன்புகுந்த 268
வந்தனதிகளி 102
வந்திடும் பரிமா 512
வந்தித்துயர்குந் 421

வந்திருந்த செழி 458
வந்திவிளங்கொளி 552
வந்துகண்டுவணங் 185
வந்துகோவென 869
வந்துசன்னவன 208
வந்துசிவபுரத் 440
வந்துதித்தமைந்த 280
வந்துதிருக்குருந் 278
வந்துபுகுந்தடி 403
வந்துமகிழ்வுடன் 111
வந்துமுன்தம்மை 559
வந்துவந்துதொழு 207
வந்துவனசேர்த்திர 858
வந்துவீற்றிருந் 212
வந்தெழுதான 478
வந்தெனையெடுத்து 74
வரந்தரக்குருந் 228
வரந்திகழயனை 85
வரவழைத்துத்திரு 547
வரிசையாயொளிர் 508
வருகவென்மைந்த 882
வருடந்தோறும் 863
வருந்தியுறைகின்ற 140
வருந்துருவாச 126
வருநெறியிற்சில 170
வரும்வரிசையுமவ் 513
வரையிடத்தினும் 9
வலங்கொளிலவம் 97
வழிவந்தவிளைப்பா 197
வழிவரும்புவி 84
வளமருவுந்தவு 828
வளமலிசிவபுர 48
வளர்சிவகேத் 884
வளர்சுழிமுதுகி 524
வளர்வேணிமுடி 431
வளருந் தெளிவு 423
வளவர்தங்குலத் 885
வளிதீர்த்த மேன்மை 245
வன்கணனுங் 428
வன்கணாளராம் 541
வன்றிறல் கொள் 140
வன்றொண்டர்க் 18
வன்னமொன்றுகி 527
வனமத்தியினதி 199
வனமிருக வேட்டை 410

வா

வாகுதிருப்பெருந் 598
வாங்கியம்மணி 502
வாசநற்றருநீழல் 258
வாசவன்றனக்கிச் 262
வாசிகளிவைக்கு 585
வாத்தியங்கட 212
வாதமே அன்பா 286
வாசராயணன்றந் 280
வாதராயணன்றன் 425
வாதவூர்முனிவர் 561
வாதுசெய்திடுவோ 567
வாம்புனல்திரியு 225
வாமமேவுசிவ 806
வாய்களொருநான் 160
வார்த்தையொன்றுக்கு 506
வாரிவளர்தரு 462
வாலுடல்கந்தம் 525
வாலுறுமுடித்திரள் 280
வாழ்ந்துபிழையுளந் 272
வாழ்பவன் கொடிய 106
வானமீதடிவைத்து 509
வானவர்க்கிறைவ 260
வானவர்க்குத்தை 848
வானவர்களுருமறை 846
வானவரைவரை 22
வானும்மாருதமும் 801
வானுலகுசன்வச 418
வானுலகை மண்ணுலகில் 548
வானுறுங்குண 488

வி

விசாரமில்பொன் 525
விசையமாமுரச 466
விடைபெற்றும் 186
விண்ணவர்க்கிறை 265
விதியொடுமூன்று 226
விதுமவுலிமறைத்து 489
விமலநாயகி 146
விமலவிப்பிரர் 217
விரககாரணன் 149
விரகார் தருதவ 419
விரவியல்லும் பகலும் 862
விரவிய வேணி 20
விரித்தசெஞ்சடை 305
விருச்சிகமாசம் 347
விருத்தர்கேட்டெம 445
விருத்தனுகையால் 121
விருத்திகள்முதலா 886
வீருப்பம் யாதென 212
விரைவின்வந்தருள் 149
விழிகண்டவர்வெரு 200
விழைவுதக்கவர் 217
விளங்கருட்குருத்த 125
விளங்குதிங்களின் 284
விளங்குபத்தர் 132
விளங்குவியத்தங் 313
விளம்புநின்னுள 205
விறலுண்டாம் நலம் 217
வினவியன்பொடு 497
விஜைக்குரியமைச்சரை 229

வீ

வீரவாருவிளம் 184
வீழ்ந்தவனெழுந் 270
வீழ்ந்தானடிதாழ்ந் 422
வீழ்ந்தெழுந்து 285
வெங்கயமாவேந் 406
வெங்குரு முனம் 122
வெண்கயிலைபுக்கு 188
வெண்ணைநல்லூர் 6

வெ

வெய்யவன்கட 285
வெய்யனுமிவன் 492
வெயிற்பொறை 581
வெருவருஞ்சொல் 426
வெருவிலாதுபோர் 538
வெள்ளியம்பொருப் 86
வெறிநறுவுணும் 12

வே

வேட்டுவனுற்பட்ட 546
வேடுவனுகியாங் 564
வேண்டுதல்கொண் 111
வேண்டுதல் செய்த 275
வேண்டும் நின்னடி 286
வேண்டும் பலவர 421
வேதகீதவிசை 298
வேதநூற்பாலியா 36
வேதமங்கலமுக் 304
வேதமந்திரசொரூப 297
வேதாகமங் 37
வேதாவிழித்த 517
வேதமே முதலிய 449
வேதவொலிமிகும் 14
வேதனாலிமிழற்று 112
வேதன்மால் முதல் 50
வேந்தனுதவிய 435
வேய்மணிகளீச் 472
வேர்வையிலனேக 179
வேலைகொள்வாருள 549
வேலைசெய்தெய் 551
வேலைவாய்ளமூந்த 268
வேறுபடப்பெருங் 552
வேறேர்புகலின் 430

வை

வைகல்தொறும் 461
வைகையிலென்பங் 519
வைகையாயிற் 261
வைத்திடுமண்வெட்டி 558

திருப்பெருந்துறைப் புராண

சருக்க அகரவரிசை

அகத்தியச் சருக்கம்	419
அசுர தீர்த்தச் சருக்கம்	202
அக்கினி தீர்த்தச் சருங்கம்	90
அண்ட கோசச் சருக்கம்	61
அவையடக்கம்	7
இந்திர தீர்த்தச் சருக்கம்	253
இரகசியச் சருக்கம்	317
இருடிகள் தீர்த்தச் சருக்கம்	193
இளன் சருக்கம்	410
உபதேசச் சருக்கம்	468
உருத்திரருக்கு உபதேசித்த சருக்கம்	109
ஒதுவித்த சருக்கம்	442
கடவுள் வாழ்த்து	1
கந்தருவ தீர்த்தச் சருக்கம்	246
கலியாணம் – குமாரவதார, சூரசங்காரச் சருக்கம்	167
காமதகனச் சருக்கம்	148
குதிரையிட்ட சருக்கம்	505
குருந்த மூலச் சருக்கம்	80
கேத்திர மகிமைச் சருக்கம்	377
கைலாசச் சிறப்பு	38
சரசுவதி இலக்குமி தீர்த்தச் சருக்கம்	288
சிவ தீர்த்தச் சருக்கம்	117
சிவத் தூரோகச் சருக்கம்	128
சூரிய, சந்திர தீர்த்தச் சருக்கம்	282
தலவிசேடச் சருக்கம்	309
தவசுக்குத் தேவி சிவபுரத்துக் கெழுந்தருளிய சருக்கம்	142
திருநாட்டுச் சிறப்பு	9
திருவாசகச் சிறப்புரைத்த சருக்கம்	587
தேவ தீர்த்தச் சருக்கம்	187
தேவிக்கு சுவாமி சிவபுர மகிமையுரைத்த சருக்கம்	41

தேவிக்கு சுவாமி காட்சி கொடுத்த சருக்கம் 158
தேவிக்கு நாரதர் தவசிலை கூறி மீண்ட சருக்கம் 137
தேவிக்கு நாரதர் வனபுர கேத்திர மகிமையுரைத்த சருக்கம் 96
நாராயண தீர்த்தச் சருக்கம் 10
நைமி சாரணியச் சிறப்பு 19
பத்ம தீர்த்தச் சருக்கம் 295
பத்தர் மகிமைச் சருக்கம் 328
பராச தீர்த்தச் சருக்கம் 274
பரி நரியான சருக்கம் 538
பலசுருதிச் சருக்கம் 596
பாண்டவ கௌதம தீர்த்தச் சருக்கம் 290
பிட்டுக்கு மண் சுமந்த சருக்கம் 542
பிரம்மாவுக்கு உபதேசித்த சருக்கம் 71
புத்தரை வாதுவென்ற சருக்கம் 568
புராண வரலாறு 24
புரூரவச் சருக்கம் 399
புரூரவாவுக்குத் தவுமியர் ஆத்மநாதர் மகிமையுரைத்த சருக்கம் 51
மஞ்சரிச் சருக்கம் 354
மாணிக்கவாசக சுவாமி ஐக்கியச் சருக்கம் 580
மாணிக்கவாசக சுவாமிக்குத் தலங்கள்தோறும் காட்சி கொடுத்த சருக்கம் 557
மாணிக்கவாசக சுவாமி திருவவதாரச் சருக்கம் 450
மானவ தீர்த்தச் சருக்கம் 221
யுக நான்கினும் பூசிப்போர் நாமத்திரய மகிமையுரைத்த சருக்கம் 345
யோகபீடச் சருக்கம் 321
வழக்குரைத்தச் சருக்கம் 425
வாயு தீர்த்தச் சருக்கம் 232
விஷ்ணுவுக்கு உபதேசித்தச் சருக்கம் 102
வெள்ளாற்றுச் சருக்கம் 385

அச்சுப்பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை		திருத்தம்
17	1	சிவதிருத்தலங்கள்	—	சில திருத்தலங்கள்
29	16	கூறுகேள்	—	கூறுகேன்
53	19	தெண்ணுருகுங்	—	தெண்ணூருகுங்
56	10	ாகி	—	சத்தமாதி
60	10	ஆத்மநாத மகிமை	—	ஆத்மநாதர் மகிமை
65	1	வெளிலேர்கோடி	—	வெளிலோர்கோடி
85	15	நீர்த்தத்தட	—	தீர்த்தத்தட
91	17	நகரதன்றன்	—	நகரதன்றென்
98	17	புள்ளொளிகள்	—	புள்ளொலிகள்
99	27	நீலகத்தரனர்	—	நீலகண்தரனர்
109	1	கொச்சகக்கலிக்கப்பா	—	கொச்சகக்கலிப்பா
110	11	வேள்மமுவாள்	—	வேல்மமுவாள்
110	18	பெருந்தொதொந்தி	—	பெருந்தொந்தி
114	3	ருதையோடுகின்ற	—	ருதையோடுகின்ற
114	7	குருந்தவளநாத	—	குருந்தவனநாத
118	26	ஏயவது	—	ஏயுவது
124	29	எடுத்தூனயில்	—	எடுத்தூனயில
126	28	முடிவின்தண்	—	முடிவின்கண்
127	1	இயம்பெற்கரிதெனல்	—	இயம்பற்கரிதெனல்
128	7	சொன்ன விக்சரித்திர	—	சொன்னவிச் சரித்திர
138	8	திரியுவெனவ்	—	திரியுவனவ்
140	10	வாழ்விலமை	—	வாழ்விலெமை
162	22	கனசபை	—	கனகசபை
168	18	அணைந்த	—	அணைந்த
183	4	பருவதங்கணை	—	பருவதங்கனை
188	22	கருத்தொன்கொல்	—	கருத்தென்கொல்
195	24	தனகேவல்	—	தனக்கேவல்
197	11	பகலாலும்	—	பகலாலும்
205	3	கருணைகர	—	கருணைகரா
218	11	அளித்தத்தினிருத்தி	—	அளித்ததினிருத்தி
220	9	வதிர்வானுலகே	—	வதிவர்வானுலகே
227	2	தொன்றினனிவளின்	—	தொன்றினனிவண்
229	3	மதிக்கப் பாலரென்	—	மதிக்கற்பாலரென்

பக்கம்	வரி	பிழை		திருத்தம்
239	9	விகிரா அங்கை	—	விதிராஅர் அங்கை
252	12	தண்ணில்	—	தன்னில்
261	4	மாள்கி	—	மாழ்கி
261	27	பரந்தன முகீல	—	பந்தன முகீல
263	30	எண்சாபம்	—	என்சாபம்
297	28	யாக்கிரச்சரண	—	வியாக்கிரச்சரண
309	தலைப்பு	தலவிசேடக் சருக்கம்	—	தலவிசேடச் சருக்கம்
313	3	மருவிவயச் சத்தி	—	மருவியவச் சத்தி
320	36	வித்தகம்	—	வித்தகர்
348	28	பாயோகம்	—	பரயோகம்
378	28	வீயக்தோர்	—	வீய்க்தோர்
483	25	தன்னூறிற்புக்கான்	—	தன்னூரிற்புக்கான்
401	4	தன்னையிறைத்	—	தன்னையிரைத்
409	6	ஆவலாய்	—	ஆலவாய்
409	20	மவின்றுமுக	—	நவின்றுமுக
428	17	மபிரனர்	—	மரபினர்
429	25	முன்னவிநாற்	—	முன்னவிநாற்றி
442	19	சிந்துமுழ்கிய	—	சிந்திமுழ்கிய
444	7	வேதவில்புரி	—	வேதவிப்புரி
444	12	பேருவயையராய்	—	பே நவகையராய்
446	2	இக்சிரூர்	—	இச்சிரூர்
463	1	சிலர்வந்த	—	சிலர்வந்து
480	6	மயிர்ச்சிசிகை	—	மயிர்ச்சிகை
491	11	துதித் திரைஞ்சி	—	துதித் திறைஞ்சி
495	20	நின்றரங்கி	—	நின்றிரங்கி
509	14	மாமாயிலின்றிரள்	—	மாமயிலின்றிரள்
514	9	புரவிகள் வைக்கும்	—	புரவிகளெவைக்கும்
553	5	நிணைந்தெழுதான்	—	நிணைந்தமுதான்
553	8	தேறுமறுள்	—	தேறுமருள்
556	7	பெருந்துரையிற்	—	பெருந்துறையிற்
559	18	நிள்றரற்று	—	நின்றரற்று
559	26	கண்ணுதற்கணியே	—	கண்ணுதற்கனியே
565	18	தேகிகவடிவாய்	—	தேகிகவடிவாய்
579	19	என்றுரை	—	ஏன்றுரை
580	7	சிந்தையுந்தன்மை	—	சிதையுந்தன்மை
586	10	பொருளாளர்தருஞ்	—	பொருளார்தருஞ்

67	219 ஆம் பாடல் முதல் எண்சீர் விருத்தம்
71	227 ,, ,, ,, அறுசீர் விருத்தம்
96	298 ,, ,, ,, எண்சீர் விருத்தம்